T. 3277

# திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை

உரையுடன்

T. 3277

GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY
RECEIVED
22 JAN 1966
Ac. 17183
MADRAS-5

7.5.91

கழக வெளியீடு: கஉஉஅ

# திருவொற்றிமுருகர் மும்மணிக்கோவை

உரையுடன்

GOVT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
RECEIVED
22 JAN 1966
MADRAS-5

பல்லாவரம்
பொதுநிலைக் கழக ஆசிரியர்
மறைத்திரு சுவாமி வேதாசலம்
என்னும்
மறைமலையடிகள்
இயற்றியது

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6 சென்னை-1
1965

மறைமலையடிகள் (1875 - 1950)

© 1965 The Official Trustee, Madras

Ed 1 Text only 1900 (Author)
Ed 2 with commentary 1942 (Author)
Reprint: Aug 1965(Kazhakam)

O31,1M75,T
K5

TIRUVOTRI MURUGAR MUMMANIKKOVAI
*URAIYUDAN*

Publishers:

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Appar Achakam, Madras-1.

# பதிப்புரை

பாவளம் மிக்க மொழி தமிழ். இரண்டாயிர மாண்டுகட்கு மேலாக இடையீடின்றித் தொடர்ந்து பெருகிவரும் இலக்கிய வளத்தைப் பெற்றுள்ளதும் தமிழே. சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரையில் இலக்கிய வளர்ச்சியில் ஏற்றத் தாழ்வுகள் பல உண்டு. இந்நிலையில் இடைக்காலத்திலே எழுந்து தமக்கெனத் தனி இடத்தைப் பிடித்துக் கொண்டவை சிற்றிலக்கிய நூல்கள். அவற்றுள் ஒன்றே மும்மணிக்கோவை என்பது. நேரிசை யாசிரியப்பாவும் நேரிசை வெண்பாவும் கலித்துறையும் முறையே சேர்ந்து சேர்ந்து வர முப்பது செய்யுட்களால் அந்தாதித் தொடையில் அமைவது மும்மணிக் கோவை.

தனித் தமிழ் வித்தகர் மறைத்திரு மறைமலை யடிகள் இளமைக் காலத்தில் நோய்வாய்ப்பட்டுத் தன் புற்றிருந்த காலை ஒற்றியூர் உறையும் முருகப்பெருமானை அந் நோயைத் தீர்த்துவைக்குமாறு வேண்ட அவனருளால் நோய்தீரப்பெற்று வியந்து அப்பெருமானை வணங்கிப் போற்றி இயற்றியதே 'திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை' என்னும் இந்நூல். இலக்கிய, இலக்கண, சித்தாந்தத் துறைகளில் கற்றுத் துறை போய ஆசிரியரவர்கள் இந்நூலில் முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னே போல் போற்றி ஆங்காங்கே பழஞ்செய்யுட்களின் சுவை மிக்க தொடர்களைப் பெய்து வைத்துத் தம் நூலுக்கு ஏற்றமளித்துள்ளார். திருவொற்றி மேவும் வேலவனிடம், தன்னொடு கோலாகலஞ் செய்து கூடாமல் ஏகுகின்ற குறை இருக்கக் கண்டு தலைவி காமமிக்க கழிபடர் கிளவியான் தன் இரங்கத் தக்க நிலையை எடுத்தோதுவதே இந்நூல். சொல் வளமும் பொருளாழமும் மிக்க இந்நூலுக்கு விரிவான உரையெழுதி

யவர் அடிகளின் அருமைசால் மாணுக்கரான இளவழகனுராவர். இவ்வுரையை அடிகளாரே முழுதும் பார்வையிட்டுத் திருத்திச் செப்பனிட்டு நூலாசிரியராகிய தம் கருத்தை முற்றும் விளக்கும் உரையாகச் செய்துள்ளார்.

இத்தகையதோர் அரிய நூலை அடிகளார் முதற்கண் 1900 இலும், பின்னர் உரையுடன் 1942 இலும் பதிப்பித்துள்ளனர். இப்பொழுது முதன்முறையாகக் கழகவாயிலாக வெளிவருகின்றது. அடிகளார் எழுதிவைத்த விருப்ப ஆவணத்தின்படியே அவருடைய நூல்களனைத்தையும் வெளியிடும் பணியைக் கழகம் மேற்கொண்டு அவர்தம் நூல்கள் எப்பொழுதும் தமிழ் மக்களுக்குக் கிடைக்கச் செய்து வந்துள்ளது. இனியும் அப்பணி இடையறாது நடைபெற்றுவர இதுவரை அவர்தம் நூல்களை ஆர்வத்தோடு படித்துப் பயன்பெற்று வரும் தமிழுலகம் இந்நூலையும் பெற்றுப் பெரும்பேறெய்துவதாகுக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

T3277



மறைமலையடிகள்
1876-1950

# முகவுரை

சாலிவாகன, கஅ௨௦ ஆம் ஆண்டாகிய விளம்பி ஆனித் திங்கள், கடு ஆம் நாள் (1898 ஜூன், 27) எமக் குண்டான கொடிய நோய் தீர்த்த முருகப்பிரான் திரு வருளை வியந்து இயற்றிய எமது மும்மணிக்கோவை அவன் றிருவடிக்குச் சாத்தப்பட்ட வரலாறு, இந்நூலின் முதற் பதிப்பு முகவுரையில் வரையப்பட்டுளது.

மேற்சொன்ன நோயால் துன்புற்ற நாளில் எமக்கு ஆண்டு, உக; மிக இளைஞனாயிருந்த காலம்; அப்போது தான் யாம் சென்னைக் கிறித்துவக்கல்லூரியில் தமிழாசிரிய ராய் அமர்ந்து மாணாக்கர்க்குத் தமிழ் இலக்கண இலக்கியங் கற்பித்து வரலானதும். அந்நாளில் யாம் பழைய தமிழ் இலக்கண இலக்கிய நூற்பயிற்சியில் மட்டுப்படா விழைவு கொண்டு கருத்தூன்றியிருந்தேம். எமது பதினைந்தாம் ஆண்டில் முறைப்படி துவங்கிய தமிழ்ப் பயிற்சியானது எமது இருபத்தோராம் ஆண்டிற் பெரும்பாலும் நிரம்பிய தென்னலாம்; இருபத்தோராம் ஆண்டிற்குள் தொல் காப்பியம், திருக்குறள், திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் மூன்று நூல்களையும் முழுதும் நெட்டுருச் செய்து முடித்தேம்; கலித்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் நாலடியார், முதலிய நூல்களிற் பெரும்பகுதிகள் அங்ஙனமே நெட்டுருச்செய்து முடிக்கப்பட்டன; சிவஞான போதம், சிவஞானசித்தியார் என்னும் நூல்களிரண்டும் முழுமையும் நெட்டுருச்செய்து முடிக்கப்பட்டன; இவையே யன்றி, நன்னூல் விருத்தி, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, யாப்பருங்கலக்காரிகை, இறையனாரகப் பொரு ளுரை, தண்டியலங்காரம் முதலான நூல்களும் முன்னமே முழுமையும் நெட்டுருச் செய்து முடிக்கப்பட்டனவாகும். கல்லாடம், சீவகசிந்தாமணி, பெரியபுராணம் என்னும் நூல்களின் சொற்சுவை பொருட்சுவைகளிற் பெரிது மூழ்கியிருந்தும் அவற்றிலிருந்தெடுத்துப் பாடஞ் செய்த செய்யுட்கள் மிகுதியாயில்லை; என்றாலும், அவற்றின்

சொற்பொருணயங்கள் எமதுளத்தில் வேரூன்றி நின்றன. இங்ஙனமாக, விழுமிய தமிழ்ப் பழநூல்களில் எமது கருத்து ஈர்ப்புண்டு நின்று பயின்ற பயிற்சியினாலேயே, செய்யுளும் உரையுந் தனிச்செந்தமிழ் நடையில் எழுதுந் திறம் எமதிளமைப் பருவத்திலேயே எமக்கு வாய்ப்பதாயிற்று; எழுதுந்திறம் வாய்ப்பவே, அவைக்களங்களிற் பேசுந் திறமும் அதனை யொட்டி வாய்ப்பதாயிற்று. பழந் தமிழ்ப் பயிற்சியால் எமக்குண்டான சொற் பொருணலங்கள் அத்தனையும் இம் மும்மணிக்கோவையின்கண் விளங்கிக்கிடத்தல் எளிதில் அறியப்படும். இஞ்ஞான்றைத் தமிழ் மாணவரும் பிறரும் இந்நூலைக் கருத்தூன்றிக் கற்பாராயின், அவர் பழந்தமிழ்நூற் சொற்பொருணயங்களை எளிதில் உணர்ந் தின்புறுதற்கு இஃதொரு வழிகாட்டியா மென்னும் நம்பிக்கையுடையேம்.

இனி, எமக்குவந்த கொடுநோய்தீர்த்த முருகப்பிரான் றிருவடிக்கு ஒரு பாமாலை தொடுக்க விழைந்த எமது கருத்து, அந்நோய் தீர்ந்த ஒன்றரையாண்டுகட்குப் பிறகு தான் நிறைவேறலாயிற்று. கல்லூரியில் உயர்வகுப்பு மாணவர்க்குத் தமிழ்நூல்கற்பிக்குந் தொடர்ந்த முயற்சிக் கிடையிடையே, அவைகளிற் சொற்பொழிவுகள் நிகழ்த்தும் முயற்சியும், எமதில்லத்தே போந்து தமிழ்கற்க விழைவு மீதூர்ந்த மாணவர்க்கு அது கற்பிக்கும் முயற்சியும், அஞ்ஞான்று நடைபெற்ற தமிழ்வெளியீடு ஆங்கிலவெளியீடுகட்குத் தமிழ் ஆங்கிலக் கட்டுரைகள் எழுதிவிடுக்கும் முயற்சியும் பிறவும் நடைபெற்றுவந்தன. அவற்றிற்கிடையே எம்மனைவி இருமல் நோயால் துன்புற்றனர்; யாம் அப்போதீன்ற பெண்மகவுஞ் சிலந்திக்கட்டிகளால் நெடுநாள் துன்புற்றது; எமக்கப்போது கல்லூரியிற்கிடைத்த சம்பளமோ சிறிதாதலால் எமது வாழ்க்கையுஞ் செழுமையாக நடைபெற்றிலது. ஆகவே, இத்தனை முயற்சிகட்குந் தொல்லைகட்கும் நடுவே, இந்நூற்பாக்கள் மனவமைதி பெற்ற ஒழிவு நேரங்களில் மட்டுமே தொடுக்கப்பட்டுவந்தன. எம்முடைய பழைய நாட்குறிப்புகளைத் தேடிப் பார்த்ததில், இம் மும்மணிக்

கோவை முடிக்கப்பட்ட நாள் சார்வரியாண்டு புரட்டாசி, கரு (1900, செப்டம்பர், 28) என்பது புலனாயிற்று; இதன் கசு ஆவது அகவற்பா, 1900, பிப்பிரவரி, 4 இல் முடிக்கப்பட்டதென்னுங் குறிப்பு அகப்பட்டமையால், இந் நூல் துவக்கஞ்செய்யப்பட்ட காலம், 1899 இன் இடையில், அஃதாவது எமது இருபத்துமூன்றாம் ஆண்டின் துவக்கத் தின் கண்ணதாகல் வேண்டுமென்பதூஉம் உய்த்துணரப் படுகின்றது.

இனி, இதற்குரையெழுத முயன்ற மாணவர் பலரின் முயற்சியிற் பாலசுந்தரம் பிள்ளை யென்னுந் திரு. இளவழகனாரின் முயற்சியே நிறைவேறலாயிற்று. இவர் பன்னிரண்டாண்டுகட்கு முன் எம்மிடந் தமிழ்நூல் கற்று வந்த காலத்திலேயே, இதற்குரையெழுதக் கருதிய தமது குறிக்கோளைத் தெரிவித்து, இதனை முறையாக எம்மிடம் பாடங்கேட்டு வந்தனர். யாஞ் சொல்லி வந்த உரைகளையுங் குறிப்புகளையும் அவ்வப்போது குறித்துக்கொண்டு வந்து பின்னர் அவைகளை யெல்லாம் ஒழுங்குபடுத்தெழுதி எழுதிய கையெழுத்துப்படியினை 1932, மார்ச்சு, 28 ஆம் நாள் எம்மிடஞ் சேர்த்து, அதனை முழுதும் பார்த்துத் திருத்தி அச்சிட்டு வெளியிடும்படி எம்மை வேண்டிக் கொண்டனர். அங்ஙனமே அதனை முழுதுந்திருத்தி அச்சிட்டு முடிப்பதற்கு எட்டாண்டுகட்குமேற் சென்றன. உரையின்கட் செய்யப்பட்ட திருத்தங்கள் பல; ஆக்கியோன் கருத்துக்கு மாறாய்க் காணப்பட்டவைகளை அம்மாறுகோள் நீக்கி இயைபுபடுத்தியதும்; உரையெழுதாமல் விடப்பட்ட சில பகுதிகட்கு உரைவகுத்ததும்; சொற்பொருள்கட்குப் பிற்காலத்து நூல்களிலிருந்து எடுத்துக்காட்டிய மேற் கோள்களை நீக்கி, முற்காலத்துச் செந்தமிழ்ப் பழநூல்களி லிருந்தே மேற்கோள்கள் காட்டியதும்; மேற்கோள் காட்டப்படாதவற்றுக்கு மேற்கோள்கள் காட்டியதும்; இலக்கணக்குறிப்புகள் பல மாற்றியதும், பல புதியவாய்ச் சேர்த்ததும்; உரைநயங்கள் பல மாற்றியதும், புதியவாய்ச் சேர்த்ததும்; சொற்களையுஞ் சொற்றொடர்களையுஞ் செந்

தமிழ்ச்சுவை தாளும்ப மாற்றியதும்; இன்னும் இவை போன்ற நுண்ணிய திருத்தங்கள் பல உரைநெடுகச் செய்ததுமாகும்.

ஒரு நூலுக்கு எழுதப்படும் உரை அந்நூலாசிரியன் காலத்தே செய்யப்பட்டு அவனாலேயே முழுதாந் திருத்தப் பட்டு அமையுமானால், அத்தகைய உரையே நூலாசிரி யன்றன் கருத்தறிந்த உரையாகும். அப்பெருநலம் இம் மும்மணிக்கோவைக்கு வாய்க்குமாறு முருகப்பிரான் றிருவருள் இயைத்தமை கண்டு இது தன்னைப் பயில்வார் மிக மகிழற்பாலார். எமதிளமைக்காலத்தே இயற்றப்பட்ட இச்செய்யுள் நூல், நாற்பத்தோராண்டுகட்குப்பின் இப் போதுரையுடன் வெளிப்போந்து தமிழுலகுக்குப் பயன் படுமாறருள் புரிந்த முருகப்பிரான் றிருவடிப்போதுகட்கு எமது புல்லிய வணக்கம் உரித்தாகுக!

எட்டாண்டுகட்கு மேலாக இந்நூலின் உரையினைத் திருத்துவதிலும், இதனை அச்சிடுவதிலும் எமக்குண்டான உழைப்புச் சிறிதன்று; பொருட்செலவோ ஐயாயிர ரூபாய்க்கு மேலாயிற்று. இப்பெருஞ் செலவில் ஒரு பகுதிக்குப் பயன்படுமாறு, யாழ்ப்பாணத் தெல்லிப்பழையில் தமிழ்க்கலைவல்ல நுண்ணறிவினராய்த் திகழ்ந்த வழக் கறிஞரும் எம் நண்பருமான திருவாளர் தம்பையாபிள்ளை யவர்களின் இளையபுதல்வியாரான திருமகள் சிவநாயகி யம்மையாரும் அவர் தங்கணவரும் எம்பால் மெய்ப்பொருள் கேட்டஞான்று எமக்கு ஐந்நூறு ரூபா காணிக்கை செலுத்தினர். அவர்கள் எல்லா நலங்களுடனும் நீடினிது வாழ்க வென்று அம்பலவாணரம்மை திருவடிகளை வேண்டுதும்.

பல்லாவரம், பொதுநிலைக்கழக நிலையம்,
திருவள்ளுவர் ஆண்டு, ௧௯௭௨,
மார்கழி, ௧௮, (1942, ஜனவரி, 1.)

**மறைமலையடிகள்.**

# உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | 5 |
| முகவுரை | 7 |
| திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை | க |
| உரை | ருக |
| சொற்பொருட் குறிப்புகள் | கூ0க |

ஓம்

திருச்சிற்றம்பலம்

# திருவொற்றிமுருகர்

# மும்மணிக்கோவை

## காப்பு

நீர்வளநன் றோங்குந் திருவொற்றி நீணகரிற்
சூர்வளந்தின் வேலோற்குத் தூயநூல்—சீர்வளர
எம்மா லியற்றுவதோன் றுண்டா லதுவாகுங்
கைம்மா முகத்தன் கழல்.

## நூல்

### க. நெஞ்சொடு கிளத்தல்

நீர்வளங் கவின்ற சீர்வளர் பழனத்து
நெற்குரல் கௌவிய நற்குரற் பைங்கிளி
கானற் காவிற் றன்விரைந் தெய்திப்
பொன்வீ ஞாழற் பொலிந்தினி திருப்பவும்,
கருங்கழி வாரிய பெருமீன் குவைஇ
வன்றிறற் பரதவர் முன்றிற்றேறு முணக்குந்
துடிக்கட் டுணியல் கொடிக்குலங் கவர்ந்து
மருதங் காவிற் பெரிது வைகவும்,
குளனுறை வாழ்க்கை வளநீர்க் கோழி
மனையுறை நீங்கித் துணைகூப் பெயர்ந்து
கால்வழி யோடிக் கழியிற் சேரவும்,
புலவுமண முனைஇய நிலவுறழ் குருகு
கண்ணகன் விசும்பில் நண்ணிய முகின்மேல்
இவர்ந்தெழு திங்கள் போலப் பரந்துகெழு
துணிநீர்த் தடத்தின் மணமலர் ஆரும்

இரும்புதிரித் தன்ன அறன்மருப் பெருமை
கரும்புற மருங்கி ஞெருங்கி நிற்பவும்,
பொறிகெழு வாளை வெறிபடப் பாய்ந்து
முடைக்கழிச் சுறவோடு கறுவோடு மறியவுங்,
காலெதிர்ந் தோடுங் கழிக்கயன் மருதச்
சேலோடுங் கூடிச் சேர்ந்து துள்ளவும்,
முழுநெறி யவிழ்க்குங் கொழுங்கால் ஒடிப்
பொன்னந் தாமரைப் பொலந்துகள் வாரிக்
கோழி முட்டை போழ்படுத் தாங்கு
வெள்ளயிர்க் கானற் கொள்ளையின் வீசவும்,
வெள்ளிவெண் டோட்டுத் தாழையி னளைஇக்
கையரிக் கொண்ட கடற்கா லோடி
நீறுமெய் பூத்த நேரியோன் போலச்
செந்தா மரைகள் சிறந்தினிது விளங்க
வெண்பொடி வீசிப் பண்பொடு முலாவவுந்
தேமொழிச் செவ்வாய்த் திருமுக வுழத்தியர்
காமரு கொழுஞ்சுவை வாழையின் பழனும்
புன்செய் பயந்த பன்னிறப் பயறும்
நன்செய் பயந்த பொன்னிற மணியும்
வட்டிகைப் பெய்து கட்டிய சுமட்டின்
எடுத்துச் சென்றங் கடுத்துயர் பாக்கத்துக்
குமிழ்டை யுகளும் அமைவிழிப் பரத்தியர்
பகுத்துணர் வின்றி மிகுத்துக் கொடுத்த
தரளமும் மீனும் நிரல்பட அளந்துகொண்
டுவப்பொடு பெயர்ந்துதம் மிருக்கை சேரவும்,
மருதமும் நெய்தலும் மயங்கிய மரபின்
உலக மெல்லாம் ஒருங்குவந் துறினுந்
தொலையா வளத்தொடு நிலவுறு வைப்பின்
ஒற்றி மாநகர்க் குற்றகண் ணெனவும்,

அக்கணி னுள்வள ரருமணி யெனவும்,
அம்மணி யுள்ளுறை பாவையை யெனவும்,
பாவையி னகத்துப் பண்புபல காட்டி
மேவி யாங்கது புடைபெயர்ந் தியங்கத்
தக்க வாறு மிக்கது புரியும்
ஓரியல் பில்லா ஆருயிரெனவும்,
இருவே றுலகினும் இரண்டற விரவி
அறிவுந் தொழிலும் நெறியுற விளக்கும்
மாதொரு கூறற் கோதிய முதல்வன்,
செல்லலுற் றழுங்கிய மல்லற் றேவர்
குழாம்பெரி துய்ய வழாவே லோச்சிப்
பாடில் சூருக்கு வீடு நல்கி
வேந்தன் பயந்த கூந்தற் குமரியை
மணந்துல களித்த நிணந்திகழ் வேலன்,
ஐயன் செய்யன் பன்னிரு கையன்,
வறியே மிடும்பை பொறிபடுத் தெதிரும்
பெரியோன் பெரிய ரறிவினுக் கரியன்
றிருவுரு வொருமையி னெழுவித் தருமையொடு
வழிபா டியற்றி விழிநீ ருறைப்ப
அன்புரு வாகி யின்புற லறியாது
புன்பொருள் கவருமென் மின்புரை மனனே!
வரம்பறு மாற்றல் நிரம்பிய முருகன்
றனேழுந் தருளும் வான்குடி லாக
நின்னைத் தந்தன னாகப், பின்னை
மண்டிரி வாகக் கண்டன சிலவும்
புனறிரி வாகப் புகுவன சிலவும்
அனறிரி வாக அடைவன சிலவும்
வளியிட னாகத் தெளிவன சிலவும்
விசும்பிட னாக உசும்புன சிலவும்

ஓவா திருப்ப மேவுநை, யதனுற்
றுன்பமுங் கவலையும் நின்புற ளுக
இன்புற லறியா திடர்ப்படு குனையே, யதாஅன்
றுறுதுணை யாகச் செறியு மென்னையும்
புற்சாய்த் தோடும் புனலே போல
நின்வழிப் படீஇ யென்னுயிர்க் குயிராம்
அறுமுகத் தையனை மருவலோட் டாது
வன்மை செய்தநின் புன்மையோ பெரிதே
யினிநீ யிங்ஙன மொழியாது, பனிமலர்க்
கடம்பு சூடிய தடந்தோண் முருகன்
றிருவுருப் போதியு மொருகல ளுக
விழுமிதின் நீடு வாழ்மதி கோழுவிய
நலங்கெழு நறும்பால் பெய்த
பொலங்கலம் பொலியும் பெற்றியா லெனவே. (க)

### உ. அருளியல்புரைத்தல்

பெற்றி யரிய பெருமான் பெரியதிரு
வொற்றி நகர்வந்த வொள்வேலான்—நற்றவருங்
காணு அரிய கழலா னெனதுளத்து(ம்)
நாணு தமர்ந்தவா நன்று. (உ)

### ௩. காமமிக்க கழிபடர்கிளவி

நன்றன் றுனக்குத் திருவொற்றி வேலரை நாடியிடர்
இன்றிங்கு நீகொள்ள லென்றுரை யீரக லீர்ங்கழிகாண்!
மின்றங்கு நோய்சிறை வண்டினங் காளினி மேலெமக்கு
நின்றிங்கு நீர்செய்யு நன்மையென் னேவொன்று நேர்வதின்றே.

### ௪. தோழி விரவிக்கூறல்

நேரிறை முன்கை வாரொலிக் கூந்த
லரிகடை யொழுகிய பெருமதர் மழைக்கண்

இலவுறழ் செவ்வாய் நிலவுறழ் திருநதற்
கொடிபுரை மருங்குற் கடிதிகழ் மேனிக்
கரும்பினு மினியவென் னரும்பெறற் பாவாய்!
வழிவழிச் சிறக்குமெங் கழிபெருங் குலத்திற்
பாற்கடற் றேன்றிய சீர்த்திரு வனையாய்!
வலம்புரி யன்னவெங் குலம்புரி கோமகள்
அரிதி னீன்ற பெருமுத் தனையாய்!
மிடியறி யாவெங் குடியெனு முற்றத்
தன்புநீர் பாய்த்தி யின்புறக் கைசெய்
தாயமு மியானுஞ் சீரிதின் வளர்க்கும்
நற்பயன் கனிந்த பொற்சுடர்க் கொடியே!
நக்கும் புக்கும் மிக்கமகிழ் செய்யுஞ்
செயிரற வெழுதிய வுயிரோ வியமே!
அருமையின் மிகுந்தவெம் பெருமுதற் றந்தை
யாற்ற விருப்பொடு மேற்றிப் பார்க்கும்
விளிவற விளங்கிய வொளிமணி விளக்கே!
நின்னரு ளடித் துன்னி நின்றிங்
கடியேன் கூறு மொடியாச் சிறுமொழி
வறிதென வொழியா தறிவுகொளல் வேண்டும்,
வயலுழவர் குவளைகட்டு
வியல்வரம்பிற் றடிந்திட்ட
கயலினிடைப் படவெறிய
மருதமகள் கருவிழிபோற்
பொருவின்றித் திருவிளங்கச்,
செந்நெல் வித்திய பொன்னுறழ் வான்முளை
புரியவிழத் தலைவிரிந்து
பைத்தென்னப் பரந்திருப்பத்,
தெள்ளொளிப் பளிங்கி னுள்ளயிர் பெய்து
பாசிலையுஞ் சேதாம்பலுங்

கட்குவளையும் முட்டாமரையும்
ஒருங்குபட வெழுதி மருங்குவைத் தாங்கு
நற்பூங் கயங்கள் பொற்பொடு மிமைப்பத்
தண்ணடை மருவிய தணியா விளையுள்
ஒற்றிமா நகரின் முற்பட வமர்ந்த
உட்குடை முருகனைக் கட்கண் டாங்குப்,
பார்த்தானைப் பயில்வடிவின்
ஓர்த்தானை வுரனுணர்விற்
சொல்லானைப் பல்புகழிற்
றுடோட வீழ்ந்த கையன், றேடோடு
பொன்ஞாண் பிணித்த வில்லன் கணையன்,
மின்ஞாண் பிணித்த குஞ்சிய னிளைஞன்,
அரியன் பெரியன் றிருவளர் செல்வன்,
குடியினுங் குலத்தினும் வடுவோன் றில்லான்,
பெறுவதோன் றுடையன் போல மறுவந்து
பன்ன ளெனினுமேன் சொன்னிலை தவறான்,
குறித்தது கிளவாது செறித்தலுஞ் செறிப்பன்,
உருமும் உளியமும் அரவும் பிரியா
ஆரதர் நீந்திச் சீரிதிற் போந்து
திரிதரு நாள்களும் பலவே, யொருநாள்நம்
மலையகன் சாரற் றலைமையோடு பொலியும்
ஆரா மத்தினீ வாரா யாக,
ஒருதனிச் சென்றேன் பரிவோடு புகுந்து
பானீர் வாவியின் மேவிநிற்ப, அவனுமாண்
டெய்தியேன் ஞெடுநின் றனனே, நோய்திற்
றிரைபொரு கரையிற் புரையின் றோங்கிப்
பசுங்குழை கலித்து நசைநனை யரும்பித்
தென்றலொடு புகுந்த வண்டிசைப் பாணன்
இனிமையின் மிழற்றுந் தனியிசைக் குவந்து

போதியவிழ் மலரின் நறவுணக் கொடுத்து,
நினைதோறுஞ் சுவைக்கும் நீணிறக் கனிகள்
இலைதோறுங் குழும நலமிகப் பயக்குங்
கோழரை நாவல் கோட்டி னுகுப்பப்,
பாலிடை விழூஉம் நீலமணி கடுப்ப
ஆமிடை விழூஉ மருஞ்சுவைக் கனிகள்
அளையிடைத் துஞ்சு மரும்பெடைக் களிப்ப
வேப்பின் கொழுநனை யெய்க்கும் நெடுங்கட்
கவைக்கா லலவன் றாளிடை யிடுக்கி
யன்புடன் சென்றாங் கருத்த னோக்கி,
என்னையு நோக்கினன் அன்னதும் நோக்கினன்,
உய்குவ தறியான் போலச் செய்குவ
தோன்றுங் காணா தன்றுநின் றனனே,
நீகண் டனையேல் நெஞ்சநெக் குருகி
யின்னுயிர் வாழலை மன்னே, கொன்னுறு,
பேய்கண் டனைய பெற்றிய னாகி
நிறையும் அறிவும் முறைமுறை சாயத்
துன்றுநிலை நீங்கா மரம்போற்
கன்றிய நோக்கமொடு நின்றவ னிலையே. (௪)

### ௫. தோழிமுன்னுறவுணர்தல்

நிலையுந் திரிந்து நிறையுங் கடந்து
தலையுங் கவிழ்ந்த தகையண் - மலைநிவந்த
தென்னப் பொலியும் எயிலொற்றிச் செவ்வேண்மேன்
மன்னுங் கருத்துடைய மாது. (௫)

### ௬. பிரிவாற்றாத தலைவிக்குத் தோழிகூறல்

மாதே பெரிதும் வருந்துவ தென்னை மனந்திரிதல்
ஏதே யறியிற் கொடுமையன் றேவன்னை யீர்ம்போதும்பிற்

ஞூதேய் துணைமுலை யாகந் தழுவித் துயர்மிகுத்த
**போதேர்பொழிலொற்றிச் செவ்வேள் வரையப் புகுந்தனனே.**

### எ. இனநலனுரைத்தல்

புகலரு நூழையிற் போக்கரும் பொருள்போல்
இகலறு சைவத் திறஞ்செலா நெஞ்சினர்;
நெறிப்படு மக்கட் கறிவு பேதுறுக்குங்
கவலையிற் பிறரை மயக்குநர் உவலிடு
பதுக்கையிற் புன்பொருள் அகத்திடு கரவினர்;
புனைமாண் கோதை பொருந்தச் சூட்டியும்
வினைமாண் விளங்கிழை வீறுபடத் திருத்தியுங்
கொழுங்கயன் மழைக்கண் பிறழ்தொறு மனந்திரிந்து
செழுந்துவர்ச் செவ்வாய் முத்தங் கொண்டும்
நசைபிறக் கிடாது முலைதழீஇச் செல்லும்
நெஞ்சமர் காதலர் பின்செலு மடவார்
பஞ்சின் மெல்லடி பைதலுற் றுழப்ப
உறுத்துக் கிழிக்கும் பரல்கெழு முரம்பிற்,
புலியுத ளுடுக்கை தைஇ வலிகெழு
மூவிலை வடிவே லொருவயின் விளங்கக்
கொன்றைநனை பிணைத்த மன்றலந் தொடலை
பவளமலை யுறழும் மார்பிற் றுவள
மலைதரு மடந்தை குறங்கின்மிசை யிருந்து
வலம்படு கையாற் பெரும்புறங் கவைஇ
உலம்படு திரடோ ளொருமுலை யொற்ற
நரையே றூர்ந்த புரைசா ரேற்றம்
நினைதொறுங் குழையு முரவோர்க்கு வைகலுங்
கேடுபுரி நெஞ்சிற் பீடிலா வமணர்,
பீடுயர் செந்தமிழ்க் கூடலிற் றோன்றிப்
பொய்படு புன்பொருள் கான்றிருள் பரப்பி

மெய்தரு சைவ நன்னெறி பிழைப்ப
மாணு வழிப்படூஉங் கூன்பாண் டியன்முதல்
ஆறுசென் மாக்களைச் சூறைகொண் டெறிந்து
பெருந்துய ருறுக்குங் காலை, யருந்தவம்
நிற்பெறு பொருளிற் பற்பக லாற்றி
வேண்டிய பெரியோர்க்கு வேண்டியாங் களிப்பக்
கருக்குழிக் கிடக்குந் தன்மையை யன்மையின்
உருப்பெற வருதுணை போல வவரகத்
தொருபெரு மாயம் பெருகுறச் செய்து
புறம்பெயர்ந் தெய்தி யறந்தரு பெருமைச்
சண்பையிற் றோன்றினை மாதோ, பின்பு
கிண்கிணி யொலிப்பத் தந்தையிற் சென்று
தண்கழு நீருஞ் செந்தா மரையும்
ஒருங்குதலை மயங்கிய பெருந்தட மருங்கின் [புறம்
அரும்பெறற் றந்தையைத் தலைக்கூ டினையே, அதற்
முருந்துறழ் வெண்ணகைப் பெரும்பெய ரன்னை
கரும்புங் கனியும் பெருஞ்சுவைப் பாலுந்
திருந்திய தேனும் ஒருங்குறக் கூட்டிக்
குழைத்தெடுத் தன்ன விழைவரு மரபின்
முலைபொழி யமிழ்தம் வள்ளத் தூட்டப்
பவளவாய் மடுத்துத் திவளொளி சிறந்து
பழகுறு தந்தைக்கு மழவிடை யமர்ந்த
தந்தையைத் தாயொடுங் காட்டிப், பின்றைக்
காண்டகு திருவிளை யாடன் மாண்டகச்
செய்திறம் அறியார் உய்திறம் நோக்கிப்
பற்பக லியற்றிய பின்னர் முற்படர்ந்
தருந்தமி ழாய்ந்த பெருந்தமிழ்க் கூடற்
குலச்சிறை முனிவ னெதிர்கொளச் சென்று
பாற்கடற் பிறந்த சீர்த்திரு வாகலின்

இருமுலைக் குடத்தின் ஒருவழி யடக்கி,
மலைமக ளாதலின் முலைதரல் சுருங்க
வள்ளத் தேந்திய சில்லமு தருந்தி
ஆறா வேட்கையின் வருவோ னிவனென
முலைமுகந் திறந்த வழிவழிப் போக்கிப்
பாற்கட லூட்டிய பவளச் செவ்வாய்த்
தென்னவன் றேவிக்கும் பொன்போற் புதல்வன்
ஆயினை யென்ப தறியத் தெருட்டி,
வழுதி கொண்ட முழுநோய் தீர
அன்னை யூட்டிய வமிழ்தை யின்னுரைச்
செந்தமி ழாக்கித் தந்தது கெடுத்துப்,
பாற்படு பூதமும் மேற்படு பொருளுந்
தன்வழிப் படூஉந் தன்மைய வாகலிற்
றன்பிறி தாகல் வேண்டிற் றலைமயங்கித்
தந்தொழில் திரிந்து நந்து மென்பதும்,
இழிக்கும் பொருளுஞ் செழிக்கு மென்பதும்
நீரினும் நெருப்பினுங் காட்டினை யொருதிறம்
பனையினும் என்பினுங் காட்டினை மறுதிறம், இனியே
அறிவொளி கொளீஇப் புரைநெறிப் பொய்ச்சமண்
முறிய நூறி மெய்த்திறங் கிளக்கும்
மெய்ப்பொருட் சைவம் மெய்வகை விளக்கிப்
பரங்குன் றமர்ந்தனை மாதோ, அதுபெயர்ந்
திரங்குவா லருவி நிரம்பத் தோன்றும்
ஆவினன் குடியின் அசையினை மாதோ, அதற்புறம்
ஏரகத் தெழுந்தனை மாதோ, நேரிதின்
ஒருமொழி வைத்த வுட்பொருள் விரிப்பத்
திருவளர் தணிகையி னமர்ந்தனை, அதற்புறம்
நின்கழற் கிடந்த அருகா அன்பிற்
சைவம் வளர்க்கும் மெய்வகை மரபின்

உடல்பொரு ளாவி யுனக்கென நிறுவி
நிற்குறித் தெழூஉம் அற்கும் இன்பத்து
நின்பெய ரல்லது பிறிதொன்று நவிலா
மன்பெரும் புலவோன், றந்தையைக் காட்டுந்
தாயெனப் போந்து நாயினுங் கடைய
என்னையு மொருபொருட் படுத்து நின்னியல்
பொருதுறைப் புகுத்தி யுரைக்கு முரவோன்
சோம சுந்தர தேசிகப் பெயரின்
ஏமுற வந்தோற் கருளக் காமுற்றுப்
பொருளுட லாவி பொருள்பெற வழங்கி
வேண்டுழி யெல்லாம் விரும்பிநின் றேத்த
அவற்கெளி வந்த தவப்பெருந் தன்மையை
யொற்றியூர்ப் புகுந்து வைகினை, முற்றவும்
நின்பெருந் தன்மையை யறிந்து நின்னடி
யிரவொடு பகலும் ஒருவாது வணங்கி
நாத்தழு தழுப்ப ஏத்துரை கிளந்து
நெஞ்சநெக் குடைந்து மெய்விதிர் விதிர்ப்பப்
பெறுவதற் கெளியேன் அரியே னாயினும்
அவனொடு கெழூஉஞ் சார்பின் இவனது
சிவணவும் பெறுகுவெ னன்றே, குவடுகெழு
பெருநிறப் பொன்மலை யடைந்த
கருநிறக் காக்கைக் குறுவதா லெனவே. (எ)

### அ. வள்ளன்மை கிளத்தல்

உறுபொருள் காணா வுணர்விலார் மாட்டுப்
பெறுபொருள் வேண்டல் பிழையால்—நறுநெஞ்சே
யேந்துமலை வள்ளி கொழுநன் எழிலொற்றிப்
போந்து குடியிருக்கும் போது. (அ)

### கூ. தலைமகள் தோழிக்கு அறத்தொடு நிற்றல்

போதாய்ந்து வெண்ணிலவொக்கும் பொடிமணற் பூஞ்சிற்றிலோன்
றோதாயஞ் சூழ இழைத்தாடுங் காலை யொருவடிவேற்
சூதான காளை திருவொற்றி யீசர் துணைப்புதல்வன்
காதாருங் கண்ணி சிதைத்துநக் கோடிக் கரந்தனனே. (கூ)

### க0. ஒப்புமைகூறி அருளினை வேண்டல்

கரவறு மாந்தர்க்கு விரவுறு பழியின்
மறுவொடு விளங்கு நிறைகதிர் மதியம்
வெண்கதிர் விரிக்குந் தண்ணென் காலைப்
புலவுமணங் கமழும் பாக்கத்து நலங்கெழு
தெரிவின் மாக்கள் புரிதிமில் புகுந்து
நிரைநிரை வகுத்த வகையமை விளக்கம்
வான மீனின் வயின்வயி னிமைப்பவுஞ்,
சிறுதுடி மருங்கிற் கருங்கண் நுளைச்சியர்
எழுவரும் எண்மரும் உழியுழிக் கைபிணைந்
தொருவா மரபிற் குரவை யயரவும்,
அவர்தரு சிறாஅர் சிறுமீன் முகந்து
மணலகழ் கேணியின் முறைமுறை விடுத்தும்
பொரிகெழு புன்னைப் பூந்துணர் வீழ்ப்பப்
புரிவளை யெறியக் கோடு தாக்கிப்
பலவே றுடைந்த நலங்கிளர் நித்திலங்
கொழுவிய நனையெனக் குஞ்சிப் பெய்து
வழீஇ வீழக் கண்கலுழ்பு பெயரவுங்,
கொழுமட லவிழ்ந்த குழூஉக்கோள், கைதை
வான்சிதர் அளாய தேங்கமழ் ஆம்பல்
நீறுறு தழலே போலவும் பால்கெழு
குறுநடைப் புதல்வர் துவரிதழ் போலவும்
அறிவின் மாக்கட்கும் அறிவு பேதுறுக்கும்

புனையாப் பொற்பின் முறைமுறை சிறப்பவும்,
நெய்தல் சான்ற கைதையங் கானல்
ஒற்றியூ ரமர்ந்த வெற்றிவேற் குரிசில்!
கொன்னென்று கிளக்குவென் கேண்மதி பெரும!
நீயே, ஆருயிர்த் தொகுதிக்குப் பேறுதரல் வேண்டி
ஐந்தொழில் இயற்றுவை மாதோ, யானே
ஒருநெறி யின்றிப் பொறிவழி யோடி
ஐம்புலன் நுகர்ந்தாங் கமைகுவே னன்றே,
நீயே, மக்கண்மேற் கொண்ட பொச்சமி லன்பிற்
றுயே யனைய வளியினை, யானே
மனைவியும் மக்களும் பொருளெனக் கொண்டு
நினைவதொன் றில்லாப் பேரன் பினனே,
நீயே, யானைவெண் மருப்புந் தேனின் இறாலும்
மயிற்றழைப் பீலியும் விரைகமழ் சாந்தமும்
ஒருங்குதலை மயங்கிய இரும்பெருங் குன்றத்
தாஞ துறையும் இயல்பினை, யானே
புலமில் கல்வியும் நலமில் புகழும்
வழுவிய வொழுக்கமுங் கழுவாக் குற்றமும்
ஒருவழி யமைந்து பெருகிய செருக்கெனுங்
கொடுகெழு குன்றிற் பீடுறு குவெனே,
நீயே, அறல்நெறித் தன்ன செறிகுழற் கற்றையும்
பிறைசெறித் தன்ன நறைகமழ் நுதலுங்
கயலிணைத் தன்ன அகலிரு விழியுங்
குமிழ்கைமுகிழ்த் தன்ன அமைவரு மூக்கும்
பளிங்கின் அன்ன துளங்கொளிக் கதுப்பும்
வள்ளை யன்ன தெள்ளொளிச் செவியுங்
குலிகந் தோய்த்த இலவுறழ் இதழும்
முறுவல் பூப்ப மின்னென மிளிருங்
குறுமுத் தன்ன சிறுமுள் ளெயிறுங்

கொழுநீர்ப் பணிலத்து விழுமிய கழுத்தும்
எமக்கருண் மரபிற் றமக்கமை கையுஞ்
சிவிறிவிரித் தன்ன சிறுதிரு வடியும்
எம்முளம் நீங்காச் செம்மையிற் றேன்ற
வீறுகெழு பதுதியின் வேறிரு மடவார்
கூறுகொண் டிருபுடை விளங்கச் சீறிய
மயின்மிசை வருதுவை மன்னே, யானே
கருநெறி மறமும் அருகிய வறிவும்
விரிவுறு மயக்கமுந் திருகிய சினமுந்
தொண்டர்ப் பணியா நாணமும் எண்டோண்
முக்கட் பெருமான் பெரும்புகழ் நக்குச்
சமையக் கணக்கர் அமைவில கூறும்
புல்லுரை கொள்ளும் பொல்லாக் கிழமையும்
வெதுளியொடு படூஉந் தகையின் மாற்றமும்
அறிவோர் நகைப்ப மடவோர் திகைப்பப்
பொருளொடு பொருந்தாப் புகுந்துசொன் மொழியும்
உறுவரைப் பேணு தெழுமிறு மாப்பும்
எளிவந் தோரும் இரவன் மாக்களும்
அழுவிளிக் கம்பலை கொள்ளக் குழைவின்றிப்
பழுதுறச் சென்றுங் கெறிந்துநகு முருடும்
அறிவொடு படாஅச் சிறுதொழின் முறைமையும்
நீங்கா மரபின் ஓங்கிப் பொலிய
யானென தென்னுங் கூனற் கிழத்தியர்
பெரும்புறங் கவவி வயின்வயின் அமைத்து
மறந்தேர் வாழ்க்கை மயின்மிசைக் கொண்டு
சிறந்ததோர் திறத்திற் சிவணுவே னன்றே,
நீயே, காந்தளங் கண்ணி யேந்திய மார்பத்துச்
செஞ்சாந்து நீவிய சிறந்த கோலமொடு
குறவர் மகளிர் விழவொடு குழீஇ

வெறியயர் களத்தில் விளங்குவை, யானே
முல்லையந் தொடலை முருகெழ அணிந்து
வெண்சாந்து பூசிய கேழ்கிளர் மார்பமொடும்
இழிசின மகளிர் இயைந்த இன்ப
வெறியாடு களத்து வெளிப்படு குவெனே, எனவாங்கு
நின்னொடு மென்னிடைப் பட்டவிவ் வினைபால்
எனக்குநீ அருடரல் இயையுந், தனக்கு
நிகரா குநரோடு நகைதரு கேண்மை
செயலா குவதென மொழிகுவர், அதனால்
நுந்தையும் முனிகுவன் அல்லன் அன்னையும்
நுந்தை வழிப்படூஉந் தகையள், மைந்துகெழு
பொருப்பைப் பொழ்ந்து விருப்பொடும் எதிர்ந்த
அரிமா முகத்தனைப் பொரிபட நூறிக்
காழுறு மரக்கரை நூழி லாட்டிப்
பொரியரை மாவாய் விரிகடன் மூடிய
சூர்முதன் முதலற முருக்கிப் பேரருள்
அழிவுபடும் உள்ளத்துப் பழியொடு பிறங்கும்
உலையா வாழ்க்கைத் தேவர்க்குத்
தலைமையொடு நல்குந் தமிழ்கிழ வோயே. (௧௦)

### ௧௧. பிரிவாற்றாத தலைவி மதியொடு வருந்தல்

கிழமை நினையாத கேள்மதியே! ஒற்றிக்
குழகன் பிரிந்த குறிப்பாற்—பொழுதறிந்து
செல்லுமுயிர்ப் பேதைக்குத் தீங்கிழைப்பாய் நின்னையடும்
வல்லரவைக் கொல்லா மயில். (௧௧)

### ௧௨ தோழி பருவங்காட்டி வற்புறுத்தல்

மயின்மீ திவர்ந்து திருவொற்றி யூர்ச்சென்ற மன்னவர்தாம்
அயின்மேல் அமர்த்தகண் ணாய்பிரிந் தாரல்லர் அன்புமிக்குப்

பயினோடு சேர்த்திய கற்போற் றுணையைப் பயிர்ந்தகுரற்
குயின்மா வொடுங்கும் பொழுதும்வந் தன்றினிக் கூடுவரே.
(கஉ)

### கங. அருள்நிலை வியத்தல்

கூடிய இருளின் வாடுவ தொன்றோ
பீடுயர் நின்புகழ் நாடா தொன்றோ
பெறுவ தறியாச் சிறுமை யொன்றோ
மருவரக் கிடந்த தெரிவில் காலத்துப்
பொருவில் இன்பந் தருவது குறித்துப்
புன்முத லாகிய மெய்யிற் புகுத்தி
ஓரறி வுறுத்தினை சிலநாட், சிலநாள்
நந்துமுத லாகிய வுடம்பிற் புகுத்துத்
தந்தனை ஈருணர் வன்றே, சிலநாட்
சிதன்முத லாகிய குரம்பையிற் செலீஇ
மூவுணர் வுணர்த்தினை மன்னே, சிலநாள்
நண்டுமுத லாகிய பொன்றுடற் கடவி
நான்கறி வோங்குறச் செய்தனை, ஈங்கு
மாவும் மாக்களும் மேவிய பின்றை
ஐயுணர் வெங்கும் மெய்பெறக் கொளுவி
ஒழுங்குற உணர்த்தினை யொருசில பகலே,
ஆங்ஙனம் ஒழிந்த அளவில் காலத்து
நிறைவுறு குற்றம் முறைமுறை தேயப்
பகுத்துணர் காட்சி மிகுத்துத் தோன்ற
மக்கள் யாக்கையிற் றக்கவா நிறுவிப்
பலபிறப் புறீஇய நாள்களும் பலவே,
அவ்வா றொழிந்தன போகச், செவ்விய
இந்நாள் எனக்கு நன்னெறி காட்டச்
செவ்வந்திப் போந்த பொய்யா நாவிற்
செந்தமிழ் வரம்பு முந்துகண் டுணர்ந்து

மெய்ப்பொரு ளறிவுஞ் சொற்பொருள் வன்மையும்
பொறையுஞ் செறிவும் நிறையக் கொண்டு
தமிழ்மா ணுக்க ரமிழ்தென நுகர
விரித்துரை கிளக்குந் தெரிப்பரும் பெருமை
நாரா யணனெனுந் தொலாப் புலவோன்
நேர்படு முளத்துச் சீர்பட வமர்ந்து
கருவிநூ லுணர்த்தினை பலவே, யதற்பின்
ஒருவா யாணர் மருவுறு சென்னைத்
தவம்பெறத் தோன்றி நவையறு தமிழும்
வடநூற் பரப்பும் நிலைகண் டுணர்ந்தாங்
குள்ளுறை கருவாய்த் தெள்ளொளி விரிக்குஞ்
சைவ சித்தாந்த முடிபொரு ளெடுத்தீங்
கறங்கரை நாவிற் றிறம்பட விளக்கிப்
புறம்படு சமயப் பொய்ப்பொருள் நூறி
நலங்கிளர் தன்மையும் புலங்கொளாக் காட்சியும்
இயைந்தொருங் கீண்டிய அமையாப் பெருமைச்
**சோம சுந்தரத் தோமறு குரவன்**
உடல்பொரு ளாவி யிடமெனக் கொண்டு
பொருளார் சைவந் தெருளுறக் கொளீஇ
யதற்கமை பொருளும் நீயெனக் காட்டித்
திறப்பட வுணர்த்தினை மிகவே, யதற்பின்
தொழும்பூண் டொழுகும் அழுங்கா வுள்ளத்துத்
தொண்டரும் நரகரும் அண்டரும் பிறரும்
வழிவழி யடிமை பெருகுற வெழுதிய
ஓலை கொண்ட வொருமர பானும்
உலகிற் சிறந்துதா னென்றே யாகியும்
அலகி லாற்றல் தலைவரு மென்பது
வல்லோற் றுக்கிய குறிப்பி னானும்
ஒற்றை யியக்கும் உயிரே போல

நெற்றியங் கண்ணன் நிலவுத லானும்
இறைவன் ஐந்தொழில் நிறையுயிர் மாட்டுப்
பொருந்தச் செய்யும் அருந்திற லானும்
ஐந்தொழிற் பட்ட ஆருயிர்த் தொகைகட்
கந்தழிப் பொருத்தும் மைந்தி னானும்
ஒற்றியூ ரெனும்பெயர் முற்றத் தோன்றும்
பெருநன் மாநகர் திருவிற் பொலிந்து,
குவளை பூத்த பவளத் தாமரை
செவிரமும் பணிலமும் புடைபட இடையிற்
றோன்றி யன்ன காண்டகு திருமுகங்
கருநெறிக் கூந்தலும் பெருகிய கழுத்தும்
மேலுங் கீழுந் தோன்ற வாலிய
நறுமுத் தன்ன முறுவல் செறிதொறும்
மின்னென மிளிரும் பொன்மா மேனி
மகளிரொடு விளங்குந் தகைசால் தோற்றத்து
வடிவே லேந்திக் கடிமயி லூர்ந்தென்
உள்ளத் தாமரை விள்ளவீற் றிருந்தனை
பகலொளி விளக்கும் பல்கதிர் ஞாயிறு
மலைநிவந் தன்ன நிலையுயர் மாடத்துங்
குடிகள் தங்காப் பழியொடும் இடிந்து
வெருப்பேய் சேர எருக்கு முளைத்துப்
பாழ்படு பொல்லா வில்லினும்
போழ்கதிர் விரித்துப் பொலிவதா லெனவே. (௧௩)

### ௧௪. தலைமகள் பிரிவாற்றாது புலம்பல்

**பொலியும் மதியும் புலிபோலத் தென்றல்
நலியும் நமனானான் நல்வேள்—ஒலிதமிழ்
ஓவா திசைக்குந் திருவொற்றி யொள்வேலான்
மேவான் செயலறியேன் மேல். (௧௪)**

கரு. அருமைசெய்து அயர்ப்பத் தலைவி கூறல்

மேலான முத்தே திருவொற்றி மேவிய வேலவனே
கோலா கலஞ்செய்து கூடாம லேகல் குறைவுகண்டாய்
நூலா வுடைகட்டி யேலாத குன்றினும் நோன்மைமிகுங்
கோலா வுயர்குணக் குன்றினுஞ் சென்ற குறிப்பறிந்தே. (கரு)

கசு. அருணிலையுரைத்தல்

அறிவும் அவாவும் ஒருவழிச் சென்றாங்
கொருதிற னின்றிப் பலதிறப் படுமே:
குய்கமழ் கறியும் நெய்கமழ் துவையும்
பொன்னிறப் புழுக்கலுங் கன்னல்பெய் பாலுந்
தன்னிகர் குழம்பும் பண்ணிய வகையும்
மிக்கெழு சுவையின் முக்கனி வகையுங்
கோழரை வாழைக் குருத்தகம் விரித்துப்
பால்கெழு தன்மையிற் பலவே றமைத்து,
முரவை போகிய முழுவெள் ளரிசி
கைவன் மடையன் அடுதலின் நெய்கனிந்து
விரலென நிமிர்ந்த அவையன் மென்பதம்
முல்லை முகையென மெல்லிதிற் குவைஇப்,
புழுக்கலும் பிறவும் அளாஅய் விழுத்தக
நெய்யுடன் பெய்து மெய்ம்மறந் துண்டாங்
கானு துறைவோர் அளவில ரன்றே;
முகிலொடு குடுமியும் முழைகெழு வாயும்
அருவி யென்னும் அறுவையும் உடீஇ,
யந்திக் காலத்து ஞாயிறொடு பொருது
செவ்வா னென்னும் மெய்கால் குருதியுங்
கணைதொடு புண்ணின் முகுளித் தன்ன
பவளமுஞ் சிதர்ந்த திவளொளி கெழூஉம்
அரக்கன் அன்ன பொருப்பின் காட்சியும்,

மடமான் பிணைகள் கன்றொடு சூழீஇக்
கான்யாற் றொண்புனல் நிரைநிரை யருந்தக்
கானங் கோழி துணைகூப் பெயர்ந்து
ஞாயிறு தோன்றுங் காலை யறிவிப்ப
நிறங்கெழு தாராக் குறுங்கயம் மருங்கிற்
குறுகுறு நடந்து நீந்த வெற்படு
தளவம் அரும்பி எயிறென விளங்கக்
கொன்றை பொன்வீ யுகுப்ப மன்றல்
காவதங் கமழுங் காடுகெழு காட்சியுங்,
கொழுவளை யீன்ற செழுநீர் முத்தஞ்
செந்தா மரையின் மிளிர்வன மங்கையர்
திருமுகங் குறுவியர் பொடித்தன் மானக்
குடம்புரை செருத்தற் றடங்கண் மேதி
இல்லுறை குழக்கன் றுள்ளுதொ றொழுகுந்
தீம்பால் மாந்திப் பருவரால் உகள
மலிபூம் பொய்கை மருதக் காட்சியுந்;
தேற்றாப் புலவர் நூற்றிறங் கடுப்ப
எழுவாய் ஓங்கி முறைமுறை தேய்ந்து
கரைசார்ந் தவியுந் திரையே, கரைதொடுத்து
மறுகரை காணா தகன்றுநனி யாழ்ந்து
நல்லிசைப் புலவர் செய்யுள் போலப்
பல்பொருள் செறித்த கடலே, பொல்லா
ஒழுக்கந் தலைவந்த பழிப்புடை யாளரும்
விழுக்குண மேவுவ ரென்பது நலத்தக
முள்ளுடைக் குழையிடைக் கொள்ளைமணம் அவிழ்த்து
வாலிதின் விரிந்த கைதையங் கழியே,
மின்சிதர்ந் தன்ன பொன்சிதர் பரப்பி
எரிகிளர்ந் தன்ன விரிபூ ஞாழற்
பொழிலே, யெனுமிவை யெழில்பெறத் தோன்றும்

நெய்தற் காட்சியுங் கண்டு மெய்யென
அறிவு மாழாந்து வாழ்வோரும் பலரே;
காண்டகு சிறப்பிற் பாண்டியன் மேலால்
ஐவகை யமளியுங் கூறுபட வமைத்துக்
கால்களைந் தாய்ந்த வான்முகை முல்லை
கடிமணங் கமழத் தூஉய் மடிபடு
நுரைமுகந் தன்ன தூவெள் ளறுவை
செறிவுற விரித்து நறுங்குற டுரைத்த
கேழ்கிளர் தேய்வையிற் கோழகில் நெய்யும்
புழுகும் மான்மதமுஞ் செழுங்கருப் புரமுங்
கொழும்பனி நீரும் வழுவறக் கூட்டி
வேரியின் அமைத்த சிவிறியிற் றேய்த்து
நிரைநிரை மங்கையர் முறைமுறை யிரட்ட
உறங்கும் வாழ்க்கையிற் பிறங்குவோர் பலரே;
தந்நலம் பகரும் பொன்விலை மாதர்
திவவியாழ் எழீஇ நவைநான் ககற்றி
மிடற்றெழு மோசையும் நரம்பிமி ரொலியும்
ஒருநெறிச் சென்றுங் கொருநிலை நிகழப்
புள்ளினந் துணைமறந் தோதுங்க வள்ளிய
குழைமுகந் தோன்றி வறுமரம் உயிர்ப்ப
விழுமிதின் எழூஉம் மிடற்றின் பாடலுங்
கொன்றையங் குழலுங் குன்றமர் வேயுந்
துருவி யூதும் பொருவி லோசையுஞ்
செவிவாய் மாந்திச் சிறந்தோரும் பலரே;
பித்திகைக் கொழுநனை முத்தார் முல்லை
நறுவிரைத் தாமரை துவர்க்கால் வகுளஞ்
சண்பகங் குவளை பொன்மடற் றாழை
கொழுந்தும் மருவுஞ் செழுந்தண் வேரியுந்
தொடலை யாக்கியும் விடுபூச் சிதறியுஞ்

சேண்டும் பந்துங் கோண்டுவிளை யாடியும்
நறும்போருள் விராஅய் மெய்யிற் றிமிர்ந்தும்
வறிதின் வாழும் மக்களும் பலரே ;
ஐம்போறி வழிச்சேன் றிம்பரின் நுகரும்
ஐவகைச் சுவையும் ஒருகாற் காட்டும்
மைவிழி மடவார் போய்படு மின்பத்து
மெய்படத் துளங்கும் விழலரும் பலரே,
தாமுந் துவ்வாது பிறர்க்கும் ஈயாது
வேருவரு பேயேன உரவோர் இகழ
ஆறு தரும்போருள் இவறிக் கூட்டி
மாணு வாழ்க்கை மக்களுங் கள்வருங்
கவர்ந்து செல்ல நிமிர்ந்துவான் நோக்கிச்
சேய்வ தறியாக் கையரும் பலரே;
இவ்வா றுழிந்தனர் போகச் சேவ்விய
மெய்ப்போருள் உணர்துமேன் றேப்புடன் புகுந்து
கடவுட் டன்மையும் உயிரின் றன்மையும்
புடைபட வோற்றி வரம்பளந் துணராது
மயங்கக் கோண்டு மக்களைத் தலைவரேன்
றேக்கக் கூறி யுழிதரு வோரும்,
அறிவாய் அருளாய்ச் சேறியும் ஒருபோருள்
சிறுமையும் மடமையும் எய்தி வேறுவிதின்
உயிரும் உலகமும் ஆகும்என் போருங்,
கட்புலன் ஆகுவ கருத்தின் றேற்றமாய்
உட்புகுந் துணர்வோர்க்குப் போய்ப்போரு ளாகலிற்
கோயி லேன்னே ! மேவி யாங்குறையுந்
தூய பேரோளிப் பிழம்பேன லேன்னே !
வஞ்சமாந் தர்பிறர் நேஞ்சம் பிணிக்கக்
கல்லையும் மண்ணையும் வல்லிதிற் போருத்திச்
சூழ்ச்சியின் அமைத்த கீழ்த்திற மன்றே

என்றுரை கூறு வோரும் ஆகப்
பொன்றிய மாக்கண் மணலினும் பலரே;
ஆங்ஙனம் ஒழிந்த அளவின் மாந்தருள்
யானும் ஒருவ னாக நோனாது
வேறுபிரித் தெடுத்துக் கூறுபடு மதியின்
மறைபுகழ் சைவம் நிறைவுற விரித்துத்
தெளிவார் அளவையின் விளக்கி மலைவுதரும்
மாறுபொரு தோட்டி வீறுறத் திகழுஞ்
சோம சுந்தர குருவனொடு கூட்டி,
இன்பம் என்ப தைம்பொறி யானுந்
துன்பமொடு முரணித் துய்ப்பதோ வன்றே,
முகிழ்நகை மாதர் குழுவொடு கெழீஇ
இதழ்சுவைத் திருக்குந் திறத்ததோ வன்றே,
ஒன்றினும் பற்றாது தன்றிறத் தெழூஉங்
குன்றலில் பொருளோ வன்றே, தொண்டரேனும்
வண்டினங் குழுமிக் கொண்டி கொள்ளும்நின்
திருவடித் தாமரை யதுவென மொழிவித்
தென்னையும் உய்யக் கொண்டு, பின்னும்
மறைநவில் அந்தணர் வைகறை யுணர்ந்து
வாவி குடைந்தார்க்குந் தீவிய வோதையுந்
தாமரைப் பள்ளித் துயிலுணர் புள்ளினம்
பார்ப்பொடு கெழீஇச் சிலம்பும் ஓசையுஞ்,
சிறுநுதற் கருங்கட் குறுந்தொடி மகளிர்
குங்குமச் சாந்துங் கொங்குலாங் கூந்தலும்
பால்கெழு தன்மையிற் பலவே றழீஇ
நீனிற முகிலின் மறையும் மின்போல்
நீர்மூழ் காடும் பேர்விலார்ப் பொலியுந்,
திருவின் செல்வி யருமையிற் பெற்ற
குறுநடைச் சிறுவர் சிறுதே ருருட்டித்

திறல்கெழு மறவர் மற்பயில் கழகத்துக்
கைபுடைத் தார்க்கும் இசையினுஞ் சிறந்து
விட்டுவிட் டிசைக்கும் மட்டில் கம்பலேயும்
ஓவாது கறங்கும் ஒற்றி மாநகர்
தாவா இளமை தலேத்தலே சிறப்பப்
பன்னிரு விழியெனுங் கண்ணகன் சுனேயில்
அருளெனும் அருவி விரிவுறப் பெருகி
முழவுத் தோளெனுங் கோழுவிய குன்றிற்
பன்முகம் பரந்து தண்ணெனச் செல்ல,
நித்திலம் பெய்த விழுத்துவர்ச் செப்பின்
மூய்திறந் தன்ன வாய்நகை தோன்ற,
வரைவிலங்கி யோடும் மின்னே போல
அரம்பொரு வைவேல் உரங்கிடந் தோளிரத்,
திருமான் முகத்தின் இருவிழி யென்ன
மஞ்ஞையிற் கிடந்த விருதாள் மலர,
அஞ்ஞையர் இருவரும் இருமருங் கிருப்ப,
அமைத்த கையும் அருடரு கையும்
இமைப்ப தில்லாத் தேவரும் பிறருங்
கண்டுகண் டுவப்பக் கவின்றுநனி விளங்குங்
காண்டகு கோலந் தழீஇ மாண்டக, என்
கண்ணெதிர் பொலிந்தநின் இன்னருள் நினேப்பின்
வயாவுறு நோயும் பாரா தீன்ற
புதல்வோற் கண்டு களிக்குஞ்
சிதைவில் தாயின் அருளினும் பெரிதே. (கசூ)

### கஎ. நெஞ்சறிவுறுத்தல்

தேவா திருவொற்றிச் சேவார் புதல்வஎன
நாவார வாழ்த்தி நடம்புரிவாய் !—ஆவா
வியந்து பிழைசெய்யும் நன்னெஞ்சே வேலோன்
நயந்துன் எதிர்தோன்று நாள். (கஎ)

### ௪௮. தன்னுட் கையா றெய்திடு கிளவி

நாளான் மலர்ந்து மனக்கினி யான்சென்ற நாளறிந்து
வாளார் மடலின் அளியேம் உயிர்போழ் வகையுமன்றிக்
கோளான சொல்லிப் புணர்ந்தார் கரியுங் குறிப்பறியாய்
கேளான மெய்யும் முடங்குமோற் றிக்கழிக் கேதகையே ( )

### ௪௯. அருணிலை பெறுதலரிதென மொழிதல்

கேதகை பழித்த மாதொரு கூறற்கு
நுதல்கிழித் திமைக்குங் கதங்கெழு விழியிற்
பொறியெனத் தோன்றி வெறிகமழ் சுனையில்
அறுவர் ஊட்டிய நறும்பால் மாந்தி
அறுவே றுருவின் விளையாட் டயர்ந்தாங்
கம்மையும் அப்பனும் அணையச் செம்மையின்
உலகு புரந்தருளும் உமைதிரு மடியில்
அறுவேர் உருவும் ஒருவடி வாகி
விளையாட் டமர்ந்த இளையோய்! உழைப்பிரிந்து
நற்றவர் ஓங்கும் ஒற்றி மாநகர்
வெற்றி வைவேல் ஒருதிறம் பொலியப்
பளிக்கறைப் புகுந்த ஒளிப்பரு மதியின்
முறைமுறை மிளிர்ந்து நிறைகவின் பொழியுந்
திருமுகச் செல்வியர் இருபுறம் விளங்க
உலகெலாம் விழுங்கும் அலகிலா வன்றிறற்
களிக்கரு மஞ்ஞையின் நலப்பட அமர்ந்தென்
விழியெதிர் தோன்றிய அழியாப் பெரியோய்!
தீயிடை நின்றும், நீரிடை மூழ்கியும்,
மரமே லிவர்ந்து தலைகீழ்த் தொங்கியும்,
அறுவகை யிருக்கையில் நெறிபட இருந்தும்
புறம்படுத் திழுத்தாங் ககம்பட நிறைத்துத்
தெளிநிலை முகிழ்க்கும் வளிநிலை யுழன்றுங்,

தன்றேழில் தபுத்துத் தனிமுதற் பொருளின்
அருளெனும் வெள்ளம் வரம்பிற மிகுந்து
நிலையும் இடனென உலகெலாம் நோக்கியும்,
ஐம்பெரும் பூதமும் ஐம்புறம் நிறீஇ
ஐவகைத் தேவும் ஆங்காங் கமைத்துப்
பொய்ம்முறை யின்றி மெய்ம்முறை பரவியுங்,
கருவியும் புலனும் புரிவின்றி நிகழ
ஒருமுதற் பொருளொடும் அறிவினைக் கடவியும்,
இருவகை நிலையும் ஒருமுறை யிறந்து
மேனிலை நின்று வான்பொரு ளுணர்ந்தும்
ஊழி யூழியும் ஓவின்றி நோற்பப்,
பொழ்மதிச் சடையோன் பொதா னாகக்,
கொழுங்குறை தன்மெயிற் பலமுறை தடிந்தும்
உறுப்பினை யீர்ந்து நெறிப்பட வீசியும்,
பச்சிளங் குருதியை நச்சி யுகுத்தும்,
உயிர்ப்பலி வேள்வியிற் கடன்பல கழிப்பி
யரிதின் முயன்ற பின்றையும் புரிசடைப்
பெரியோன் பொந்தில னாக, எரிகிளர்
வேள்வி யாற்றும் ஆழ்குழியின்
வைந்நுனைய எழுநிறீஇ
முழுவுடம்பும் பழுதுபடப்
பொழ்ந்து படுத்துப் பொன்றத், தம்பியர்
பாய்வதற் கூக்கிய காலை, வேய்புரை
பணைத்தோட் பாவையுந் தானுமாங் கெழுந்து
வானவர் தலைவன் சீரிதின் அருளிய
வரம்பெறு பெருமையின் உரம்பெரி தெய்திநின்
சீறடித் தாமரை வேறின்றி வைகும்
அழியாப் பேற்றின் வழிவழிச் சிறந்த
சூர்முதல் போலப் பேரன் பில்லேன்;

ஆலவாய் அமர்ந்த அழனிறக் கடவுள்
செந்தமிழ் வழக்கு முந்துநின் றிசைப்பக்
கடாவிடை நிகழ்த்துந் தடாப்பெரும் பேறும்,
இறைவன் கண்ட பொருள்வரம் பறிந்து
சொன்னெறி மாட்சியும் பொருணெறி மாட்சியும்
அளவையின் விளைவுந் தெளிவுற விரித்துச்
சுவைபெற வுரைத்த நவையில் புலமையும்,
மறைப்பொருட் குறிப்பு நெறிப்பட ஆய்ந்து
சிவனையே முதலெனச் சிவணிய காட்சியுஞ்,
சீரிதின் இயைந்த கீரன் போலச்,
சொற்றேறுஞ் சுரக்கும் அற்றமில் இன்பமும்
பட்டாங்கு கிளக்கும் முட்டறு சிறப்புங்
கன்னெஞ்சு நெகிழ்த்தும் அன்புறு மொழியும்
ஒருவழிச் சிறப்ப வருமுறை கொளீஇ
யாற்றுப் படைசொலும் ஆற்றலு மில்லேன்:
ஆங்கதன் கருவாய் உள்ளுறை நுண்பொருள்
விழுமிதின் எடுத்து வழுவற அமைத்துத்
தொண்ட ராரத் தண்டாது கொடுத்து. நின்
றிருவடிக் கிடந்த பெருகிய அன்பினுந்
தமிழ்வரம் புணர்ந்த கமழுறும் அறிவினும்
உரைத்திறம் நிலையிடும் வரைப்படா விறலினுந்
தானே தனக்கு நிகரென விளங்கிய
நச்சினார்க் கினியனும் அல்லேன்; நிச்சலும்
வருக்கைச் சுளையும் பொருக்கரை மாவுங்
கொழுங்கனி வாழையுஞ் செழுஞ்சுவைக் கன்னலும்
ஒருங்குதலை மயங்கிய அரும்பெருங் கலவையின்
அருஞ்சொல் வழக்கமுந் திருந்திய நடையும்
வண்ண வேற்றுமையுந் தண்ணெனும் ஒழுக்கமும்
ஒன்று நிரம்பிய குன்றுத் திருப்புகழ்

வேறுவே றியம்பிய வீறுறு தவத்தின்
அருண கிரியெனும் பெரியனும் அல்லேன்;
நூலிடை வைத்த வாலிய பொருளினும்
உரையிடை விரிந்த புரையமை தெளிவினுங்
கேட்போர் உணரப் பாற்பட வகுத்து
நின்புகழ் அனைத்துந் தன்பெரு மதியின்
உளங்கொள விளக்கும் வளங்கெழு புலமை
நாரா யணர்எனுங் குருவனு மல்லேன்;
களவியல் தனக்குப் பலபட வியம்பிப்
பளகறு நன்பொருள் தெளியா துழன்ற
புலவோர் களிப்ப நலமுறத் தோன்றி
மெய்ப்பொருள் காட்டித் தமிழ்வழிப் படுத்தும்,
புல்லமண் மிகுந்து நல்லுணர் வழிந்து
பெரும்பெயர் வழுதியும் அருந்தமிழ்க் கூடலும்
உய்வழி காணா துழிதரு காலை
ஒய்யெனப் போந்து மெய்ந்நெறி காட்டியுந்,
தன்அருள் புரிந்த நின்னே போலச்,
செந்தமிழ் வழக்கு முந்துற விரித்து
முடிநிலைச் சைவம் விடிஞா யிறெனப்
பைங்கதிர் விரித்துக் கங்குலிற் கூம்பிய
விரையவிழ் தாமரை புரையுர வோருளம்
புரிஞெகிழ்ந் தலரத் தருமியல் சிறப்ப
உரையினுங் கருத்தினும் வரையமை நோக்கினும்
பொருந்தக் காட்டி வருந்திறன் மிகுத்து
மலைவுபடு முள்ளத் தறிவொடு கூடாச்
சிறுபுன் மாந்தர் குறுமொழி களைந்து
நின்புகழ் விரிக்கும் அன்பிற் சிறந்த
சோம சுந்தர குருவனு மல்லேன்;
பொருள்பெரி தீட்டப் பெருகுறும் அவாவினும்

ஈட்டிய ஒண்பொருள் இவறிக் கூட்டி
மக்களும் மனைவியுந் துய்க்க நல்கி
நின்கழல் வணங்கா இன்னு மடியினும்
அரிய நாட்களை வறிதே போக்கி
அறந்திறம் புளியிற் சிறந்தனேன் மன்னே ;
இனைய தீயேன்நின் நினைவருந் திருவடி
விழிநீர் உறைப்ப முழுமெயும் பனிப்ப
நிரைநிரை வாரா துரைநனி குழறப்
பொறிவழி அறிவுஞ் செறியும் உட்கருவியும்
பலவழிக் கவரா தொருவழி நிகழ
அன்புரு வாகுநின் தொண்டர் போல
நீங்கா அன்பின் நிலைநின்
றியாங்ஙனம் பெறுவெனோ பாங்குபட மொழிமோ! (கக)

## உo. தோழி கிள்ளையைத் தூதுவேண்டல்

மொழியுங் குழற முழுவுடம்பும் பைத்து
விழியுந் துயில்கூடா வெய்யோள்—பழியைத்
திருவொற்றிச் சேயோற் குரையாய் ! கிளியே
யுருவுன்னை யொப்ப துணர்ந்து. (உo)

## உக. அருணிலையுணர்த்தல்

உணர்ந்தார் அறிவினுந் தோன்று தோளிக்கும் ஒருமுருகன்
இணர்ந்தார் சுரிகுழன் மங்கைய ரோடென் இருவிழியிற்
புணர்ந்தா ரெயிலொற்றி மேவிய வாறு புனிறுசெல்லா
வணந்தாழ் குழவியைத் தாய்சென்று புல்லிய வண்மையன்றே.

## உஉ. எழினலங் கூறிநெஞ்சறிவுறுத்தல்

வண்புனல் நிலையில் தண்ணறல் போலவுந்
தாமரை மொய்த்த வண்டினம் போலவும்
பளிங்கிற் றோய்ந்த நீனிறம் போலவுந்

திருமுக மருங்கின் வருமுறை துணர்ந்தாங்
கிடையிடை சுரிந்து நீண்டு கடைசுழன்று
கண்ணொளி கதுவுங் குஞ்சியை யன்ன
இருபாற் கூறிட் டொருபாற் சூழியும், மற்
றொருபாற் பனிச்சையுந் திருவதின் அமைப்ப
நறுங்கதுப் பொளிரும் பெருஞ்சிறப் பானுஞ்,
செம்மணிப் பலகையின் அம்மணி குயிற்றி
வரம்புற விடுத்த வண்ணம் போலப்
புருவக்கோடி படர்ந்த விரிநுத லானும்,
அந்நுதல் கிளர்ந்த பொன்போற் செவ்விழி
உத்தி என்னுந் துத்திப் பையர
முடிமேன் மணியெனக் குடிகொள லானும்,
வெண்பனித் திரளைக் கண்ணுறப் பொழிந்து
துவர்நிறம் ஊட்டிச் சிவணுற அமைத்தாங்
கிருபுறங் கதுப்பு மருவுத லானுங்,
குழையொடு கெழுமுந் தழைசெவி யிரண்டும்
ஓவெனும் வடிவொடு மேவுத லானும்
நடுவிற் குழிந்து வட்டித் தமைந்த
படுபொற் கிண்ணம் முகங்கவிழ்த் தன்ன
மோவாய் நிவந்த முறைமை யானுங்,
"கிளையரி நாணற் கிழங்கு மணற்கீன்ற
முளையும்" முருந்தும் விளைநீர் முத்தமுங்
கூர்ந்து நிரைந்து வல்லென ஒளிவிரிந்
தெழுந்தொளி ரெயிற்றொடு பொருந்துத லானுங்,
கொவ்வைக் கனியுங் கொழுவிய பவழமுஞ்
செவ்விய அல்லென இலவிதழ் புரையுஞ்
செந்நீர் இதழொடு மன்னுத லானும்,
முத்தக் கோவை முறைமுறை வைத்த
நத்துவர்ச் செப்பு நன்கனந் திறந்தென

அரக்குரு வூட்டிய ஆம்பல் நறுமுகை
தளைநெகிழ்ந் தலர்ந்த தன்மைத் தென்ன
முள்ளெயி றிலங்க நகுதொறும் நகுதொறுஞ்
செவ்வாய் தோன்றும் அவ்வாற் றானும்,
எழுமிடங் குழிந்து விழுமிதின் ஒழுகித்
தளவரும் பென்ன வளங்கனிந் திலங்கி
முன்னெழு மூக்கின் றன்மை யானும்,
ஓரருட் கடலிங் கீருரு வாகிக்
கரைபுணர்ந்து கிடந்த முறைமை போலப்
புருவக்கொடி கடவாப் பெருவிழி யானும்,
விரையவிழ் தாமரை நறையுகுத் தென்னக்
கேட்டொறும் இனிக்கும் பாட்டொடு தழீஇச்
செழுவாய் மலர்ந்த மொழியி னானும்,
வலம்புரி யன்ன வானறுங் கழுத்தொடும்
ஏற்றினத் தெருத்தின் முரிப்பெடுத் தன்ன
குவவிப் புடைத்த பிடரி னானும்,
முழவெனச் சரிந்துவல் உலமெனத் திரண்டு
வரையென நிமிர்ந்துபின் எழுவெனத் திணிந்து
மலையொடு பொருத மால்களி றென்று
புலவோர் கூறும் பொருண்மொழி காட்ட
யானை யென்னும் பானகு திருமொழி
கொங்கை மருப்பின் நுங்கக் குத்தி
ஒருபாற் பெரும்போர் விளைப்ப, ஒருபால்
வள்ளி யென்னுங் கள்ளவிழ் குழலாள்
தடமுலை வேதிற் படுபுண் ஒற்ற
உளங்கொண் டெழீஇ யுறுமிடன் படாஅ
தொருபுறம் ஒற்ற வருமுறை நோக்கிக்
கொழுநனை பிணைத்த மராநறுந் தொடலை
முறுவலித் தென்ன முறுக்குடைந் தசைய

வாள்வலி நிலையுந் தோளி னானும்,
கைவல் வேகடி ஐதுறக் கடைந்து
வழுவழுப் பாக்கிய கொழுந்துகிர்ப் பலகை
புணர்ந்தொருங் கிரண்டு கிடந்தது போலக்
கண்ணகன் றோங்கிய கவின்கெழு மார்பத்
தியானைமருப் புழுத சுவடு போலவும்
வரையொடு படர்ந்த வல்லி போலவும்
வரிமூன் றொழுகிய திருவி னானும்,
மழையும் மரனுங் குழைந்தொருங் கோட
விழுமிய பொருள்பல வேண்டுநர்க் குதவுந்
தாடொடு தடக்கையிற் றுயுவந் தீத்த
வாலிதின் விளங்கும் வேலி னானும்,
பானுரை முகந்த பரிசொடு பொரூஉந்
தூவெள் ளறுவை யசைஇ மூவகை
மடியுடன் விளங்கி வடிவுடன் சரிந்து
நடத்தொறுங் குலுங்கும் வயிற்றி னானும்,
எழுமிடந் தசைந்துபின் னெழுதொறும் மெலிந்து
மழைக்கடக் களிற்றின் புழைக்கை யொத்துங்
கொழுங்கனி வாழையின் கொழரை யேய்ப்ப
ஊறும் ஒளியும் வீறுறத் திகழும்
நிறங்கெழு மரபிற் குறங்கி னானும்,
எப்பாற் பொருளுந் துப்புற வைகும்
நிலைக்கள மென்பது பெயரிற் காட்டி
முளையிள ஞாயிற்றிற் றளைஞெகிழ்ந்து விரிந்த
எரியகை தாமரை போல விரிபுகழ்த்
தொண்டர்க ளெதிரிற் கண்டிட மலர்ந்து
நிகரில் இன்ப நறைமுறை யொழுக்கிப்
பெருமையொடு வைகுந் திருவடி யானும்,
பெருமணல் எக்கர்ச் சிறுகுடி வாழ்க்கைக்

குறுமொழி மாக்கள் உறுமீன் படுத்தும்
ஆழ்திரை மூழ்கி வீழ்மணி யெடுத்துங்
கருங்கட லூர்ந்த வெள்வளை வாரியும்
நிரைநிரை கரையிற் குவையினர் செல்ல
மறிகய லுகளுந் திருமுக நுளைச்சியர்,
கொடிச்சி தந்த கடுப்புடை நறவுங்
குடத்தி கொணர்ந்த பலப்படு முதிரையும்
உழத்தி யெடுத்த விழுத்தகு பழனும்
பெறுவிலை யாகச் சிறுமீ னெடுத்தும்,
இடையிடை முத்தம் புடைபுடை யளந்துங்,
கோடு கொண்டு பீடுற மாறியும்,
ஒருசார் பேரொலி நிகழ்த்த, ஒருசார்
பனிமலை நிவந்த பண்பு போலச்
சேண்டோட வோங்கிய வுப்புக் குன்றந்
தலையழித் துமணர் பொதியுறச் சேர்த்திய
ஒழுகை யுருளை முழுமணற் புதைதலிற்
பிடர்கொடுத் தெழுப்பிக் கடும்பக டேப்புந்
தாளாண் மாக்கள் தலைப்படும் உஞற்றும்,
புலவுக்கழி முளைத்த துவரிதழ்த் தாமரை
புன்னை நுண்டாது பொறிப்பத் துன்னிய
உருவொடு விளங்குந் தோற்றம் எரியிடை
யுருகிய பசும்பொன் கவிழ்ப்ப ஓடிய
திருவொடும் பொலியுஞ் செவ்வியும் மருவிய
நெய்தலங் கானல் ஐதுறக் கிடந்த
ஒற்றிமா நகரிற் கற்றைத் தோகை
மயின்மே லிருந்து பயிலுத லானுங்,
காண்டொறும் இனிக்குங் காட்சியு முடையன்
உரைப்பத் தீராச் சிறப்பு முடையன்
தம்முயிர்க் கினிய செம்மொழிப் புதல்வரை

நோக்க நோக்க மீக்கிளர் காதல்
தந்தையர்க் கெழுதல் போலக் கண்டிடும்
விழியள வமையாக் கழிபெருங் காதல்
எய்தினர்க் குறக்குஞ் செய்தியு முடையன்,
உருகெழு தோற்றம் மருவுவ னென்று
வெருவர லொழிதியா லின்றே, முருகன்
குழவிக் கோலத்தும் விழுமிதி னமர்வன்
மடவரன் மகளிர் தடமுலை குழைக்கும் [அதனான்
இளமைக் கோலத்தும் வளமையொடு பொலிவன்,
மின்னெனத் தோன்றிக் கொன்னுற மறைந்தும்
வாதுவன் நடவாக் கலிமா போலத்
தீதுறு நெறியிற் றிறம்படச் சென்றும்
பாகடு களிற்றின் பண்பு போல
உறுதி கொள்ளாச் சிறுமையின் மிகுந்தும்
ஒருவழி நிலையா தோடிப்
பலவழிக் கவர்க்குமென் னிலைமையின் மனனே.

(௨௨)

## ௨௩. அருடர வேண்டல்

மன்னு மொருயானை யூட மறுயானை
தன்னுதவி வள்ளி தடமுலைகள்—துன்னுவிப்ப
ஒற்றி நகர்வைகும் வேலாய்! ஒருபெரிதோ
பற்றி யெனையாள் பரிசு. (௨௩)

## ௨௪. தோழி தலைவி குறிப்பறிதல்

பரிசு பிறிதோன் றறியேன் பருமுத்தப் பைம்பணைசூழ்
விரிபுக ழொற்றி வருவேலர் போலும் விடைக்களிறேன்
றரிதிற் பெயர்ந்திங்கு வந்ததுண் டோவென்ப ரங்குசெல்வர்
தெரிவிற் பெரியர் செயலோ சிறியரேஞ் சேயிழையே (௨௪)

## உ௬. கழற்றெதிர்மறை

இழைநெகிழ் பருவரல் எய்திய மகளிரின்
மழைத்தடந் தோள்க ளிளைத்துத் தோன்றப்,
பாற்கடல் போலத் தூத்தகப் பரந்த
நூற்படு கேள்வியுஞ் சீர்ப்படா தொழியச்,
சிறுநெறிச் செல்லும் அறியா மாந்தரும்
நல்வழிச் செல்லத் தெள்ளிதிற் காட்டும்
இழுக்கா நடையும் வழுக்கிப் போக.
இந்நிலை நீயுந் திரியிற் பின்னொரு
பௌவநீர் வேதும்பின் வளாவுநீ ருண்டோ?
குன்றுநிலை தவறிப் பந்துபோ லுருளிற்
சென்றுவழி யடைக்குங் குன்றியு முண்டோ?
கடுங்களிற் றெருத்தல் தொடுமடுத் துண்ணின்
முருங்கா தோம்பும் பெருங்கல முண்டோ?
என்றுபல கூறி நின்றேனை நெருங்கி
நன்மை நாடிய என்னுயிர் நண்பா!
மறியிளங் கன்று முறியுணுந் தாயொடு
குழைப்புதல் தோறுங் குழீஇ யுகள,
வரையாடு வருடை யிடைவாய் தாண்டி
யுள்ளஞ் செருக்கித் துள்ளித் திரிதர,
நிலந்தோட்டு வீழ்ந்த குலுங்குமயிர்க் கவரி
மென்மெல அசைஇ மேதகச் செல்ல,
முளவுமா தொலைச்சிய வன்கட் கானவர்
ஞெலிகோற் பொத்திய நெருப்பிற் காய்ச்ச,
ஓரி பரந்த தேனிறால் எடுமார்
கழைக்கண் குறைத்து நலத்தக இயற்றிய
மால்புவைத் திடந்தோறுங் குறவ ரேறத்,
தினைக்குறு மகளிர் சுவைப்பட மிழற்றுங்
கிள்ளை யுறங்கும் வள்ளை யொலிப்ப,

மருப்பிடைச் சுற்றிய பொருப்புயர் வேழத்துப்
புழைக்கை யேய்ப்ப விழுத்தக முதிர்ந்த
தாளொடு வளைந்த குரற்றினைப் புனத்துப்
படுகிளி யோப்பும் விடுகவண் சுழற்றிக்
கோல்வளைக் கொடிச்சி மேலிதண் அமர,
இருங்கல் வியலறை வரிப்பத் தாஅய
நலமுறு வேங்கை பொலம்வீ யுகுப்பத்,
தேக்கிலை புய்த்த புன்றலைச் சிறுஅர்
மீக்கிளர் கோட்டிற் பரிதியிற் றொடுத்த
தேத்தடை பிறைக்கோ டுழுதெனக் கீண்டு
மாயோன் மார்பிற் செஞ்சேறு கடுப்பப்
பாஅய் ழியும் படுநறவு முகந்து
பசுந்தினைப் பிண்டியொ டசும்புற அளாய்
நிரைநிரை வைத்து விரைவொடும் ஆரக்,
கண்களி கொள்ளும் பன்மலை யடுக்கத்து
மரவமுங் குரவமும் பொரிகெழு புன்கும்
எரிகிளர் செயலையும் விரியிணர் மாவும்
பராரைச் சாந்தும் பாவை ஞாழலும்
விரிதலை வாழையும் வியன்சினைப் பலவுங்
கொன்றையும் புன்னையுந் துன்றிய நறவமுங்
குழைமுகந் தோற்றிக் கொழுநனை யரும்பிப்
புரியவிழ் மலரிற் சிறுவடுக் கிளர்ந்து
தீவளி யாகித் தீங்கனி தூங்கித்
தண்ணிழல் பயந்து கண்கவர் வனப்பின் [ஒருபாற்
றுகில்கண் ணுறங்கத் தலைமையொடு பொலிமே;
சுளைநிரை யமைந்த கொழும்பழந் தூக்கிக்
குறுமல ரவிழ்ந்த நறுவிரை தெளித்து
வீசுகா லசையும் பாசிலை நரந்தமும்,
நலனுறு மகளி ரிலவிதழ் கதுவிய

முறுவ லன்ன சிறுவிதை பெய்த
பொலன்குட மெடுத்த உலவை மாதுளையுங்,
கருமணி புரையும் ஒருகனி நாவலும்,
உவர்க்கழி மணக்குந் துவர்க்கால் வகுளமும்,
பொற்றிரள் கடுப்பத் தெற்றென விளங்கும்
எழிற்கனி பழுத்த எலுமிச்சம் புதலுங்,
காவதங் கமழ மேவுவ வன்றே; ஒருபாற்
குலிகம் ஊட்டிய தலைமையிற் றிகழ்ந்து
நவ்வி நோக்கியர் செவ்வாய் போலக்
கொழுங்கனி யுடைய கொவ்வைக் கொடியுங்,
கற்புடை மகளிர் முற்படச் சூடும்
வரிசையின் மிகுந்த பரிசுடை முல்லையுங்,
தின்பது கல்லாப் புன்றலை மந்தி
கறித்துத் துள்ளுங் கறிவளர் கொடியும்,
அணிற்புறங் கடுக்கும் வரியுடைக் கொடுங்காய்
கொள்ளையிற் காய்த்த வெள்ளரிக் கொடியுஞ்,
சொல்லுயர் மரபின் மெல்லிலைக் கொடியுஞ்,
சிறுபளிக் குருண்டை செறிவுறுத் தனைய
தீங்கனிக் குலைகள் தூங்க வயின்வயின்
நந்தாது வளரும் முந்திரிக் கொடியும்
இடையிடை தாஅய் மிடையுமால்; ஒருபால்
நடுவிற், பாயொளி மதியம் பரிதி வெம்மையின்
இளகிப் புனலா யிழிந்தது கடுப்பத்
தெளிநீர் வாவியொன் றுளதால்; மற்றது
சிறுகால் தோறும் உறுநீ ரொழுக்கி
வாலுகம் பரந்த கோலிய பாத்தியிற்
பச்சிளம் புல்லை நிச்சலும் வளர்க்கும், அதாஅன்
றன்னச் சேவ லணிமயிர்ப் பெடையொடும்
பொன்னந் தாமரைப் பொலிந்துவீற் றிருப்பவும்,

நித்திலம் பயந்த நத்துவான் மடுவின்
மீனினம் வளைஇய நாண்மதி போலப்
பால்கெழு மரபிற் பரந்து செல்லவுங்,
கொழுங்கயன் மாதர் விழியென மிளிரவுங்,
கருவெரிங் உடைய பருவரா லுகளவும்,
முற்று மஞ்சட் சிறுபுறங் கடுக்கும்
இறவு கரைமருங்கிற் சுரிந்து துள்ளவுஞ்,
சிறுவளி எடுப்பச் சிறுதிரை யெழீஇ
முறைமுறை யுராஅய்க் கரையினைச் சாரவுஞ்,
செழுநீர்க் குவளையுங் கழுநீர்ப் போதும்
முழுநெறி ஆம்பலுங் கழியவுங் குழுமிக்
காண்போர்ப் பிணிக்கும் மாண்பின தன்றே; ஆங்குப்
பொதியச் சாந்தந் ததைய அசைஇ
அரும்பற விரிந்த நறும்பூ அளைஇ
விரையுந் தாதும் நிறைய முகந்து
தலைத்தலை வீசி நலத்தக உலாஅந்
தென்றலும் என்றும் ஓவாது, அதாஅன்று
குன்றிக் கண்ண குயில்கள் எங்குந்
துன்றிய மகிழ்வின் நன்றுகூ வும்மே,
ஆடுவாற் சிரல்கள் நாடோறுங் கூடி
யோடுமீ னருந்தி வீடுறு வன்றே,
துகிர்கோத் தன்ன உகிருடைச் சிறுகாற்
புறமரப் போதும்பின் இறைகூ ரும்மே,
தூங்கணங் குரீஇப் பாங்குபடத் தெற்றிய
அருந்தொழிற் குடம்பையிற் பொருந்து மன்றே,
பைஞ்சிறைக் கிள்ளை ஒருகால் தூக்கிப்
புன்சிறு கிளையிற் கண்டுயில் கொளுமே,
அறுவைமடித் தன்ன பறைகெழு நாரை
சிறுகால் தோறும் வருமீன் நோக்கித்

தோகுதி யாக மிகுதியோடு வதிமே,
வண்டுந் தேனும் வரிக்கடைப் பிரசமும்
இம்மென முரன்று நன்மலர் தோறும்,
அளிநற மாந்திக் களிகூ ரும்மே,
பூவாக் கண்ண தோகை விரித்து
முளையிள ஞாயிற் றிளவெயி லெறிப்பப்
பீடுறு மஞ்ஞை யாடுறு மன்றே,
இன்னுங் கூறல் வேண்டிற் பின்னுமேன்
சோல்லள வமையா மல்லலம் போதும்பர்ப்
பல்பெருஞ் சிறப்புங் கண்டிலை மன்னே! அன்றியாங்
கனிச்சமேற் படினுந் தனித்துயர் உழக்குந்
தழைமலர்ச் சீறடி குழைபட நடந்து
பொழிலிடம் புகுந்து பூந்தட மருங்கின்
விழைதக நின்ற பழுதில் பாவையை,
என்னுளம் என்னுந் தன்னமர் கிழியில்
வழுவின் றெழுதிய எழிலோ வியத்தை,
யமிழ்துபோதி துவர்வாய்க் கிளவிசில மிழற்றும்
மாநிறங் கோண்ட தூநிறக் கிளியைக்,
காடுறை வாழ்க்கைத் தன்னினம் பிரிந்து
நாடுறை வாழ்க்கை நன்கனம் மருவிய
குடமாண் கோங்கை மடமான் பிணையைக்,
கிளிச்சிறை யென்னும் பழிப்பறு பசும்போன்
கரைத்தீண் டெழுதிய தரைக்கிளர் வல்லியைக்,
காமக் கடும்பசி நாமுறக் களையும்,
பெறுதற் கரிய உறுதுணை மருந்தைக்,
காண்டல் செல்லா அருவப் பொருளெனப்
பூண்டோர் புகழுரை புரைபட்டு ஒழிய
மின்னென மிளிர்ந்தேன் கண்ணெதிர் போலிந்த
கரும்பினும் இனிக்குமேன் னரும்பெற லுயிரை,

என்னுளம் மன்னிய துன்னிருள் நீங்க
முற்படக் கொளுவிய பொற்சுடர்க் கொழுந்தைப்,
புலங்கொளக் காணும் பொறியும் இலையால் !
ஆவண ஒலியும் அருங்கட லொலியும்
ஒன்றுதலை மயங்கி என்றும் ஓவா
ஒற்றிமா நகரிற் றற்றகப் பொலிந்த
பசியதோர் மஞ்ஞை மிசையமர் செவ்வேள்,
தேவரும் மயங்கு மூவா மாயம்
பலமுறை இயற்றிய தலைமைதீர் சூரின்
பேருரம் வசிந்த கூர்வடி வேலன்
நோனா வுள்ளத்து நான்முகன் றெளியத்
தலையிற் குட்டிய நலனுறு குமரன்,
விண்ணவர்க் கரியன், எம்மனோர்க் கெளியன்,
பிறைமுடி புதல்வன், மறைமுடி முதல்வன்,
உமைதரு சிறுவன், எமையளி யுறுவன்,
பன்னிரு கையன், என்னுயிர்க் கையன்,
திருவடி நினையா அறிவிலர் போல
என்னெதிர் தோன்றிப் பன்முறை கழறினை !
ஈங்கிது விடுத்துமற் றுங்குச் சென்று
துடியிடை ஒருகை ஊன்றி வடிவிழி
திசைமுகம் பரப்பி நசைபடப் பார்க்கும்
இருங்கண் மான்பிணை காணின்
நெருங்கி நின்றிங் குரையலை யினியே. (உரு)

### உசு. பிரிவாற்றாத தலைவி தோழியொடு கூறல்

இனியா ரெனக்கிங் கினியா ரியைந்தார்
முனியார் முனிந்து மொழியார்—பனிமொழியாய்
புள்ளோன் றிவர்ந்து புகழொற்றித் தந்நகர்க்கு
நள்ளிருட்கட் சென்றார் நமர். (உசு)

### ௨௭. நெஞ்சறிவுறுத்தல்

நமரா யிருந்துபின் ஏதில ராவர் நயமிலருந்
தமராவ ரென்னிற் றமர்பிற ரென்று தகவுசொல்லி
அமராடி நிற்றல் வறிதுகண் டாயலை யாழியொற்றிக்
குமராவென் றேதிக் குடந்தங்கொண் டேத்தக்
குறிக்கொணெஞ்சே. (௨௭)

### ௨௮. புலவராற்றுப்படை

நெஞ்சுநெக் குடைந்து பஞ்சுகண் அடையா
உடும்புரித் தன்ன கடும்பசி மருங்குற்
பழுப்புடை தோன்றிச் செழிப்பின்றி வைக
வறுமை யுழந்த உறுமனைக் கிழத்தியொடு
நாளும் நாளும் வாளாது கலாய்த்து
நோனாப் பசியின் ஆனா தழூஉம்
புன்றலைக் குழவி தன்றிறம் நோக்கிக்
கனவுகாண் பொழுதும் நனவெனத் தோன்றும்
அருந்துய ரென்றும் பெருந்துய ருறப்ப
மிடிகெழு வாழ்க்கையிற் குடியா யிருந்து
மழுங்கிய வுள்ளத் தொடுங்கிய புலவோய்!
இயற்றமிழ் வரம்பு திறப்பட வாய்ந்து
புலங்கொள நிரம்பிய நலங்கிளர் அறிவோய்!
வழுவொன் றில்லா விழுமிய ஒழுக்கம்
உயிரினும் ஓம்புஞ் செயிரறு பெரியோய்!
கொழுந்தமிழ் போலக் குளிர்மாண் குணத்தோய்!
உழுந்துருள் அளவையிற் செழுந்தமிழ்ப் பாக்கள்
நூறுநூ றியற்றுங் கூறுபடு மதியோய்!
ஒளிச்செல வதனினும் வளிச்செல வதனினும்
நெறிப்படக் கிளக்கும் மிறைக்கவி வல்லோய்!
அளவைநூன் மரபிற் பிறழா தியாண்டுங்
கொளவுரை நிகழ்த்தும் வளமுறும் உணர்வோய்!

பொருளியல் அறிந்து மருளறப் புனைந்து
கேட்போர்ப் பிணிக்குங் காட்சிசால் உரவோய்!
பண்டைப் பிறவியிற் றண்டா தாற்றும்
பெருந்தவ முடையை மன்னே! பொருந்தியின்
றீங்கெனைத் தலைப்பட் டனையே; ஓங்கி
ஊழி செல்லினும் நீடு வாழ்மதி!
கீழ்த்திசை எழீஇ மேற்றிசைப் படருந்
தீத்தெறு ஞாயிறு வடதிசைப் புணர்ந்து
தென்றிசை நோக்கித் திசைதடு மாறினும்,
வானக் கடலின் மீனென வயங்கும்
உடுநிரை உதிர்ந்து கொடுமை யாயினும்,
உலவா வாழ்க்கையின் நிலைமதி சிறந்தே!
வறுமை களைந்து சிறுமை நீங்கி
நன்னிலை பலவும் இன்னே பெறுதி!
வரம்பறும் இன்பம் நிரம்பக் கோடி!
நின்னுயிர்க் குறுதி நாடித் துன்னிநின்று
நிரைநிரை கூறுமென் உரைபிழை யலையே!
இன்னுங் கேட்டல் வேண்டின் முன்னுமென்
சொல்லள வமைந்து நலம்பல எய்தினர்
பல்லோர் பல்லோர் பண்டும் உண்டால்;
இனியொன்று கூறுவென் கேண்மதி! பனிகெழு
முல்லையங் கொடிக்கு மல்லலஞ் செழுந்தேர்
அருள்வர ஈத்த பெரியனோ இலனே!
விழியாக் கண்ண செழுமயிர்த் தோகைக்கு
நறும்படாம் வீசிய உறுவனும் இலனே!
பவனமா உலகின் நவையறப் பெற்ற
அமிழ்துபொதி நெல்லி ஔவைக் கீத்த
சிதையாப் பேற்றின் அதிகனும் இலனே!
குறுநடைப் புறவின் றபுதிகண் டஞ்சிக்

குருதிகெழு பைந்தடி முறைமுறை தடிந்து
கன்னம்புக் கேறிய மன்னனும் இலனே!
அருந்தமிழ்ப் புலவோர் பெருந்திறம் உணர்ந்து
பொன்னும் மணியுந் தண்ணடை நிலனும்
வரையாது வழங்கிய அரசரும் இலரே!
மெய்யொடு மிடையாப் பொய்ப்பொருள் ஈட்டித்
தாமறி அளவையிற் பிறர்க்கொன் றீயாது
தாமே நுகருந் தீயரோ உளரே!
தமிழ்வழக் கறியா தமைவில கூறுங்
கற்றறி வில்லார் மற்றினிப் பலரே! அதனான்
மற்றவர் கடைதோறும் நித்தலும் படர்ந்து
வாய்வா ளாது வல்லாங்குப் பாடிக்
கொன்னே திரிதல் இன்னாது மன்னே!
கொழுநனை அரும்பிய காஞ்சியங் கோட்டிற்
புன்றலைச் சிறுவர் ஏறித் துன்றுகடற்
சுரிதிரைப் பாய்ந்து விளையாட் டயரவும்,
வெண்டோடு விரிந்த கைதையந் தாது
மெய்படத் திமிர்ந்த நொய்சிறை வண்டினம்
விலையறு முத்தமொடு தலைமயக் குற்றுக்
கண்மயக் கேறி எண்ணில கிடப்ப
நுளைச்சிறு மகளிர் வளைக்கையின் வாரிக்
குடம்புரை பணிலம் நிரம்பப் பெய்து
ஆமை யடுப்பில் ஆம்பல் நெருப்பிற்
றுமறி திறத்தால் அடுவுழி மயக்கற்றுத்
துண்ணெனப் பறந்து விண்ணிடைச் செல்ல
வியப்பிடை எழுந்த மயக்கொடு நிற்கவும்,
வேறுசில சிறுமியர் சாறுகெழு கரும்பின்
மீன்சினை அன்ன வெண்மணல் குவைஇத்
தேம்பொதி மழலையொடு சிறுபாட் டிசைத்து

வயின்வயின் நின்று மகிழ்வோடு குறுவவும்
அழகுசால் நெய்தல் நலமுற மருவிய
ஒற்றிமா நகரிற் பொற்றேருழிற் பொலிந்து
விண்டோட நிவந்த இஞ்சி வளைஇய
உருகெழு திருநகர் காண்டோறும் பரசி
மலைகுயின் றன்ன நிலையுயர் தலைக்கடை
அஞ்சுவரு நோக்கமோடு நின்றனென் ஆகச்,
சுருளிருங் குஞ்சி பொன்ஞாண் பிணித்து
நிலன்றேட வீழ்ந்த பொலந்துகில் அசைஇச்
சாந்துபுலர் மார்பிற் பூந்தொடை புரள
ஏறுசெல் செலவின் வீறுபடப் போந்து
யாரையோ புலவோய்! அறுமுகத் தையன்
புகுத்துக நின்னையென்று அருளினன், போதி! யென்று
இன்னுரை ஒருவன் பகர, அதனெதிர்
சொல்லுவது அறியேன் மெல்லெனப் புக்குப்
பொன்புனை விளக்கந் தங்கையில் ஏந்தி
மின்புனை மகளிர் நிரல்பட நிற்பக்,
கைவல் பாடினி கறையறப் பெற்ற
பயனுடை எழாஅல் நலனுற மரீஇ
விரல்நுதி தெறித்த நரப்பிசை நோக்கி
மிடற்றெலி பொருத்தி நெறிப்பட மிழற்ற,
உருமதிர்ந் தன்ன மண்கனை முழவமும்
வரைவேய் துருவிய உரைகெழு குழலும்
பேணுறு மரபிற் பாணியும் வல்லோர்
பால்கெழு மரபிற் சீரிதின் இயக்கச்,
செங்நெருப் பார்ந்த பொன்னுரைத் தடவில்
அகினெய் பெய்து பலர்நின்று புகைப்ப,
வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத்
தென்மலைப் பிறந்த நறுங்குற டுரைத்து

விழுமிய திரட்டிய செழுநறுங் குழம்பில்
ஐவகை விரையும் விராஅய் ஒய்யெனத்
துருத்திப் பெய்து செறிப்பப் பலர்நின்று
தலைப்பெயன் மாரியின் மலைச்சாந் துறைப்ப,
வாழையுங் கமுகும் வயின்வயின் நாட்டி
ஓவிய நுட்பமும் ஒண்பணி நுட்பமும்
மேவிய படாஅம் மேலுறக் கட்டிக்
கழங்குபுரை நித்திலம் இலங்கத் தூக்கிக்
கேழ்கிளர் பன்மணி காழ்பட நாற்றிப்
'பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை'
பால்வேறு மரபிற் பலபட இயற்றி
எலிமயிர்க் கம்பலம் நிலனுற விரித்து
விரியிடை எழுப்பிய அரியணை மீது,
வெங்கதிர் ஞாயிறு மணிநெடுங் கோட்டில்
தங்கி இருந்த தகைமை போலவும்
வான்கதிர் மதியம் மீன்குழாஞ் சூழத்
தான்பொலிந் தெழுந்த தலைமை போலவும்
அறுமுகத் தொருவன் குறுநகை இலங்க
நசைகெழு விழிகள் திசைமுகம் பரப்பிக்
குன்றாத் திருவொடும் விளங்கக், கண்டுநனி
மெய்ந்நிலைத் தொண்டர் தந்நிலை யறியார்
விழிநீர் சிந்த மொழியிடை குழற
உச்சிக் கூப்பிய கையினர் பழிச்சி
அருட்குறிப் புணர்ந்தாங் கமைவொடு நிற்ப,
வெருவரு நோக்கமொடு மரம்போ லாகி
அருணிலை உணரேன் றெருளின்றி யோடிக்
குடந்தங் கொண்டெதிர் நின்றனெ னாக,
மடந்தபு சின்மொழி மகிழக் கூறி
அன்புறு புலவோய்! அஞ்சல் ஓம்புமதி!

காலங் கடந்த கோல வைப்பில்
நிகரா இன்பம் மிகைபட நுகர்ந்து
கடைவழி இல்லா நிலையொடு பொலிகுவை!
என்றுபல நல்லுரை பின்றையுங் கூறித்,
தன்மருங் கிருந்தோற் குறிப்ப, அவனுமென்
அங்கை பற்றிச் சென்று கோங்குகமழ்
நீராடு துறையில் நிறுவிய அளவை,
கார்மின் அனைய ஏர்கெழு மகளிர்
குறுநகை மிளிரஎன் அருகிற் போந்து,
மாசு பொதிந்து பாசி ஆகி
ஈரும் பேனுங் தீரா துறையுமென்
புன்றலைக் குஞ்சி புணர்ப்பற உளரிப்
புழுகுநெய் உரைத்துப் பனிநீ ராட்டி
ஈரம் புலர இன்புகை யூட்டித்
தாமெனை விடுத்துப் போக, ஏனோன்
பிறிதோர் நல்லிடம் புகுத்த ஆண்டைக்
கவின்கெழு சிலதர் விரையினர் புகுந்து
விண்ணோர் வேந்தன் கண்ணெனப் பொலிந்தஎன்
றுன்னற் சிதாஅர் நீக்கி முன்னிய
அரவுரி அன்ன ஆடை உடீஇக்,
கலவைச் சாந்தம் புலர அட்டி,
முகைநெகிழ்ந்து விரிந்த தகைசால் நன்மலர்
பிணைய லாக்கி மணமுற மிலைச்சித்,
துளங்கொளிக் கலன்கள் விளங்க அணிந்து,
மணித்தவி சிட்டதன் மிசையெனை இரீஇக்,
குமரி வாழையின் குருத்தகம் விரீஇ
அறுசுவைக் கறியும் அடிசிலுங் துவையும்
வெறிகமழ் கனியும் நறுநெயும் பாலுங்
தீஞ்சுவைத் தயிருங் தேங்கனி பழனுங்

கன்னலும் பிறவுந் துன்ன இயற்றிக்,
கடும்பசி தீரயான் மிசைதோறும் மிசைதோறும்
இடும்பை இன்றி இடையிடை இடுபு
பாழ்வயி றென்றும் நிரம்பப் பெய்தலிற்
பெரும்பொருள் எய்திய வறிஞனின் அல்லாந்
திருந்தபின் என்னைப் பொருந்தக் கூஉய்
ஏனையோர் இடத்திற் றுனேனைச் செலுவ, ஆங்குப்
பொழிநீ ரிட்டு விழிமணி தாங்கிக்
காந்தள் போலச் சேந்தோளிர் அங்கையிற்
சிவஞான போதம் நவையறச் சிவணிப்
பழுதறு மாணவர் குழுவொடு சூழ,
வான்கதிர் மண்டிலம் ஈங்குவந் ததுபோல்
திருவொடு விளங்கும் உருகுபொற் றவிசிற்
கன்மனம் உருக்குங் காண்டகு கோலமொடும்
என்மனம் உருக்கி எழுந்தினி தருளிய
சோம சுந்தர குருவனைக் காணுஉச்,
செய்குவ தறியேன் மெய்தடு மாறி
நிலம்பட வீழ்ந்து கலங்கி நிற்ப,
யாரையோ? எங்கள் அறுமுகத் தையன்
தந்ததோர் அருளின் வந்தனை போலும்!
நல்லை! நல்லை! எல்லையில் காலம்
அழியாப் பேற்றின் நிலையினை! விழுமியை!
செவ்வியை! பெரியை! ஔவியம் இலையேன்
றினியன பலவும் பனிவரக் கிளந்துதன்
மலர்க்கையேன் புன்றலைச் சேர்த்திப் புலப்பட
நீயே, உடம்பும் பொறியுங் கடம்படு கருவியும்
அறிவும் வளியும் அல்லை; அறிவாய்ச்
செறியும் பெற்றியை; மற்றவை அறியாப்
பண்பின; அனையை ஆயினும், முன்பே

படலம் மூடிய கண்ணின் மிடைபடு
மாசு போதிந்த நீர்மையை; வீசிய
ஒளிப்பிழம் பாகி வெளிப்படும் முருகன்
ஆறுது சுரந்த அருளினன் ஆகலின்,
நின்னை மறைத்த துன்னிரு ளோந்து
தன்னருட் பொலிவான் நின்னறிவு கொளீஇ
அருகா இன்பந் தருதற் பொருட்டு
மெய்ந்நிலை இருத்தி மாசு போக்கித்
தன்னிலை நினக்குத் தந்தனன் கொடியேன்
றுறுதி கூறி விடுப்பத், தேறிப்
பன்னிரு கையன் முன்னர் எய்தி
இமயம் பூத்த பனிகெழு சுனையில்
அமையா தாடிய உமைதரு புதல்வோய்!
எரிவிழித் திமைக்குந் திருநுதற் றந்தைக்
கொருமொழி விரித்த தெருளுறும் உணர்வோய்!
வானோர் உறுகண் தீர்ப்ப மேலோர்
ஐவடி வேலைக் கையினில் எடுத்தோய்!
வேந்தன் தந்த எந்தெழிற் செல்விக்கு
வரைபுரை மார்பம் வரையாது அளித்தோய்!
குன்றவர் வளர்த்த பொன்றிகழ் வள்ளிக்குக்
கொழுகொம் பாகிய விழுமிய தோளோய்!
அருந்தமிழ்க் கீரனைப் பொருந்திக் காத்தோய்!
எம்மனோர்க் கெளிவந்த செம்மை யாளா!
ஒருவ! சிறுவ! கருமயின் முருக!
மறைமுடி தன்னில் நிறைதிரு வுருவினை!
கண்ணும் உணர்வுங் கதுவாப் பெற்றியை!
ஐம்பெரும் பூதமும் ஆகி நின்றனை!
உலகுநின் னுருவே, ஒளிகணின் விழியே,
அலகிலாச் சமயத் தவ்வவர் தமக்குப்

பலவே றுருவின் நிலவுநை நீயே!
ஆறுநின் முகமே, ஐந்துநின் வடிவே,
நான்குநின் மொழியே, மூன்றுநின் கண்ணே,
இரண்டுநின் றுணையே, ஒன்றுநின் வேலே,
மருண்ட உணர்வோடு மாட்சிமை எய்தா
முருட னேற்குந் திருவருள் தருநையென்
றியானறி யளவையின் ஏத்தத் தான்உவந்து
குறிப்பருமின்பத்துப் பிறக்கினன் எனையே, அதுமுதல்
இன்பம் ஆர்ந்தங் கிருத்தல் அல்லது
துன்ப மேன்ப தறியேன், அன்போடு
நீயும் அவன்வயிற் செலினே பாயருள்
ஒருவந்தந் தருகுவன் மன்ற; மருவந்து
தலைப்பெயன் மாரியின் மலைப்படு நீத்தம்
பைந்நிறப் பீலியுஞ் செந்நிறத் துகிரும்
வேழ மருப்புங் காழகிற் றுணியும்
ஒருங்கு வரன்றி மருங்கு விரைஇக்
குண்டுகட் படுகரின் மண்டி நிறைந்தாங்கு,
அவலக் கவலையும் உவலைச் சுவையும்
முரணுறு அறிவுந் திருகிய செருக்கும்
முதலறப் பெயர்த்துச் சிதையா தோடி
அன்பின் நிறைந்த இன்ப வெள்ளத்துப்
பழியாக் கடும்போடும் விழுமிதிற் றுவன்றி
ஏழுல கழியினும் அழியாது
ஊழி யூழியும் வாழ்மதி சிறந்தே! (உ௪)

உக. காப்புக்கைம்மிக்குக் காமம்பெருகியுரைத்தல்

சிறந்த பொருளோற்றிச் செவ்வேள் இவரை
மறந்திங் குயிர்வாழ மாட்டோம்—பறந்தோடித்
திண்டோள் தழுவுவம் இன்றேற் செழுவரையைக்
கண்டேறிக் கீழ்விழுவங் காண். (உ௫)

ரு0. அடியுறையிடுதல்

காணப் பெறாததோர் காட்சியை யேனுங் கசிந்தஅன்பாற்
பேணப் பெறுமுக் கருவியிற் காண்பர் பிறங்குமொற்றி
வாணப் பெருந்தகை யென்பது கொண்டு வழங்குமன்பாற்
பூணப் பெறுமிந்த மும்மணிக் கோவையுன் பூங்கழற்கே.
(ரு0

திருவொற்றிமுருகர்
மும்மணிக்கோவை
முற்றும்.

ஓம் சிவம்

# திருவொற்றிமுருகர்

# மும்மணிக்கோவை உரை

## காப்புச் செய்யுள்

நீர் வளம் நன்று ஓங்கும் திருவொற்றி நீள் நகரில்—நீர்வளம் பெரிதும் ஓங்குகின்ற திருவொற்றி யூரென்னும் புகழால் நீண்ட பட்டினத்தில் திருக்கோயில் கொண்ட, சூர்வளம் தின் வேலோற்கு—சூர்மாவினது செழுமையைத் தின்ற வேற்படையையுடைய முருகக் கடவுளுக்கு, தூய நூல்—'மும்மணிக் கோவை' யென்னும் இக்குற்றமற்ற நூலை, சீர் வளர—சிறப்போங்கும்படி, எம்மால் இயற்றுவது ஒன்று உண்டு—எம்மைக்கொண்டு செய்வது ஒன்று உள்ளது, அது கைம்மா முகத்தன் கழல் ஆகும்—அங்ஙனஞ் செய்யுங் கருவி யானைமுகக் கடவுளின் திருவடியாகு மென்க.

'நன்று' பெருமைப் பொருளது; "நன்று பெரிதாகும்" என்னுந் தொல்காப்பியத்திற் காண்க.

'சூர்வளந்தின் வேலோன்' என்பது, சூரனுடைய வலிமை செல்வம் முதலியவைகளை அழித்த வேலோனென்னும் பொருட்டு; உடையோன் றொழில் உடைமைமே லேற்றப்பட்டது.

'தூய நூல்' தூயனாகிய முருகக்கடவுளைப் பாடுதல் பற்றி இந்நூல் தூய என அடைகொடுக்கப்பட்டது.

இந்நூலைப்பாடும் ஆக்கியோற்கும் இதனை ஓதுவார்க்குஞ் சிறப்புண்டாக என்னும்பொருட்டுச் 'சீர் வளர' வென்றார்.

'எம்மால்' ஆல் கருவிப்பொருளில் வந்தது.

ஆசிரியர் இந்நூலைத் தம் முனைப்பின்றி இறைவன் வழியாய் நின்று அவனியற்ற இயற்றுகின்றமையின், இயற்றுவது எனத் தன் வினையாற் கூறினார்; ஆல், அசை.

'கைம்மா' கையையுடைய விலங்கு; அஃது யானை.

'அது கழல் ஆகும்' என்று வினை முடிக்க.

எடுத்துக்கொண்ட நூல் இனிது முடியுமாறு முதலிற் காப்புச் செய்யுள் கூறுதல் நூலாசிரியர்க்கு மரபாதலின், அடிகளும் இச்செய்யுளாற் காப்புக் கூறினர். பிற்கால வழக்கு யானைமுகக் கடவுள் மேல் நிற்றலின் இச்செய்யுளும் அவரையே பரவிற்று.

இப்பாட்டு நேரிசை வெண்பா. இது 'நீர்' என்பது முதற் 'கழல்' என்பது இறுவாயாக முப்பது சொற்களாற் கூறப்படுதலால், இந்நூலும் முப்பது பாட்டுக்களா லாக்கப் பட்டதென்பது குறிப்பு. இதன்கண் இல் கு ஆல் என்னும் வேற்றுமை யுருபுகளும் ஏனைச் சொற்களோடு சேர்த் தெண்ணப்பட்டன. என்னை? அவ்வுருபுகள் தாமுஞ் சொற்களோ டொப்பப் பொருளுணர்த்துத லுடைமையினென்பது. அற்றாயின், அன் அ முதலிய பெயர் வினை விகுதிகளும் பொருளுணர்த்துத லுடைமையின், அவை தாமும் அவ்வுருபு களைப் போலச் சொற்களொடு சேர்த்தெண்ணப்படல் வேண்டுமா லெனின், அற்றன்று, ஒரு சொற்றொடரி னிடையே இல் கு ஆல் முதலிய வேற்றுமையுருபுகள் சொற் களினுள் நின்றும் பொருளுணர்த்துதற்கட் பிரிந்திசைத்தல் போல், அன் அ முதலிய பெயர் வினை விகுதிகள் அங்ஙனம் பிரிந்திசையாமையின், அவ் விகுதிகள் சொற்களொடு சேர்த் தெண்ணப்படுதற்கு உரியவல்லவென் றுணர்ந்துகொள்க.

இனி, இக்காப்புச்செய்யுள் 'நீர்' என்னுஞ் சொல்லை முதலாகவும், 'கழல்' என்னுஞ் சொல்லை இறுதியாகவுங் கொண்டு விளங்கலால், நூலும் அவ்வாறே 'நீர்' என்பதை முதலிலுங் 'கழல்' என்பதை இறுதியிலுங் கொண்டு விளங்கு மென்பதூஉங் குறிப்பா னுணரப்படும்.

இன்னும், இப்பாட்டின் முதலடியில் திருவொற்றிநகர்ச் சிறப்பும், இரண்டாமடியிற் சூரனழிவும், மூன்றாமடியில் தாமும் பிறரும் பயன் பெறுமாறும், நான்காமடியில் அவரைப் பயன் பெறுவிக்கும் இறைவன் திருவடிநிலையுங் கூறப்படு

கின்றமையின், அவை தாம் முறையே பொருளறிவின் விரிவையும், அறியாமையின் தேய்வையும், அவ்விரண்டையும் பெற்று விளங்குதற்குரிய உயிரின் தகுதியையும், அத்தகுதிக்கேற்ப அது பெறும் பேரின்பப் பேற்றையுங் குறித்து, அவ்வாற்ருல் இத்திருவொற்றி முருகர் மும்மணிக்கோவையென்னும் நூலுந் திருவொற்றி நகரைச் சிறப்பிக்கு முகத்தால் உயிரின் றிவைப் புறப்பொருள்களிற் செலுத்தி அகன்று விரியுமாறு செய்து, பின்னர் அம்முகத்தால் அறியாமை தேய்த்து அதன் உணர்வினை நுட்பமாக்கி, இறைவனது பேரின்பத்தினை நுகர்ந்து கிடக்கச் செய்யுமென்னும் முறை தெளிவித்தவாறு.

மேலும், இச்செய்யுள் 'ஆகும்' என்னும் வினையையே முடிவிற் பெறுதற் குரித்தாயிருப்பவும், ஆசிரியர் அதனைச் 'சீர்வளர' என்பதற்குங் 'கழல்' என்பதற்கும் இடையே யிட்டு முடித்திருத்தலால், இந்நூலுந் தன்னைப் பயில்வார்க்கு இம்மைப் பயன்களை முற்றுந் தந்து இறுதியில் இறைவன் திருவடிப்பேற்றைப் பயக்குமெனப் பயன் கூறியவாருயிற்று.

இவ்வாறெல்லாங் காப்புச் செய்யுளென்பது நூலின்கட் காணப்படும் நூலமைதிகளையும் பொருட் கூறுபாடுகளையும் பயன் முதலிய பிறவற்றையு மெல்லாங் குறிப்பாற் றன்கட் கொண்டு விளங்குதல் அது தனக்கு இலக்கணமா மென்க. ஆசிரியர் சிவஞானமுனிவருந் தமது சிவஞான போதமா பாடியத்து மங்கல வாழ்த்துச் செய்யுளின் உரையிறுதியிலும் ''இங்ஙனம் நூனுதல் பொருளெல்லாங் குறிப்பாற் றன்னகத் தடக்கி நிற்றல் மங்கல வாழ்த்துக்கு இலக்கணமென்றுணர்க'' என்று உரை கூறினர். கடவுள் வணக்கமென்பதும் மங்கல வாழ்த்தென்பதும் ஒருபுடையொப்புமையுடைய.

## க. நெஞ்சொடு கிளத்தல்

''நெஞ்சொடு கிளத்தல்'' என்பது தன் தலைவன் பெருமையும் அவன்றன் அருளுருவை நினைதலால் தனக்கு விளையும் நன்மையுந் தலைவி தன் நெஞ்சிற்கு எடுத்துக்கூறல். இம்முறையினை 'நெஞ்சறிவுறூஉ' வெனவும் வழங்குப.

இது முதல் நாற்பத்தோரடிகாறும் மருதநிலத்திற்கும் நெய்தனிலத்திற்குந் திணைமயக்கங் கூறுகின்றார்.

(௧ முதல் ௪ அடி) நீர் வளம் கவின்ற சீர் வளர் பழனத்து—நீர் வளத்தால் அழகுபெற்ற சிறப்போங்கிய கழனியில், நெல் குரல் கவ்விய நல்குரல் பைம் கிளி—நெற் பயிரின் கதிரைக் கௌவிய அழகிய குரல் ஒலியினையுடைய பச்சைக்கிளி, கானல் காவில் தான் விரைந்து எய்தி—கடற் கரைச் சோலையில் விரைவாய்ப் பறந்து சென்று, பொன் வீ ஞாழல் பொலிந்து இனிது இருப்பவும்—பொன்நிறமான மலர்களையுடைய நாக மரத்தின்மேல் மன எழுச்சியோடு அழகாய் உட்கார்ந்திருக்கவும்,

'வளங் கவின்ற' மூன்றும் வேற்றுமைத் தொகை. சீர்—விளைவின் பெருமை. குரல்—நெற்கதிர்; இது "நெற்கதிரும்... குரலென மொழிப" என்னும் பிங்கலந்தையா லறியப்படும்.

இது, மருத நிலத்துக் கிளி நெய்தல் நிலத்து நாகமரத் திற் சென்றிருத்தல் கூறிற்று.

(௫—௮) கரும் கழி வாரிய பெரு மீன் குவைஇ—கரிய நிறத்தினையுடைய கழியிலிருந்து வாரியெடுத்த பெரிய மீன் களைக் குவித்து, வல்திறல் பரதவர் முன்றில்தொறும் உணக் கும்—வலிய உடலுரம் வாய்ந்த செம்படவர் தம்முடைய வீட்டு முற்றங்கடோறும் உலர்த்துகின்ற, துடிக்கண் துணி யல் கொடிக்குலம் கவர்ந்து—உடுக்கையின் கண்களைப் போல் வட்டத்துண்டுகளாயிருக்குங் கருவாடுகளைக் காக் கைக் கூட்டங்கள் திருடியெடுத்துக்கொண்டு, மருதங் காவில் பெரிது வைகவும்—மருத நிலத்து இளமரச்சோலையில் ஏகிப் பெருமிதத்துடன் அமர்ந்திருக்கவும்,

திறல்—உடம்பின் உரம்.

உலர்த்துதற்காக வகுந்து வெயிலில் விரித்துவைக்கப் பட்டுக் காயும் மீன் காண்பார்க்கு உடுக்கையின் கண்களைப் போல் இரண்டு வட்டத் துண்டுகளாய்த் தோன்றுதலால், அது 'துடிக்கட்டுணிய' லெனப்பட்டது. இஃதிவ்வாறு தோன்றுதல் "கொழுமீன் குறைஇய துடிக்கட்டுணியல்"

இது முதல் நாற்பத்தோரடிகாறும் மருதநிலத்திற்கும் நெய்தனிலத்திற்குந் திணைமயக்கங் கூறுகின்றார்.

(௪ முதல் ௭ அடி) நீர் வளம் கவின்ற சீர் வளர் பழனத்து—நீர் வளத்தால் அழகுபெற்ற சிறப்போங்கிய கழனியில், நெல் குரல் கவ்விய நல்குரல் பைம் கிளி—நெற் பயிரின் கதிரைக் கௌவிய அழகிய குரல் ஒலியினையுடைய பச்சைக்கிளி, கானல் காவில் தான் விரைந்து எய்தி—கடற் கரைச் சோலையில் விரைவாய்ப் பறந்து சென்று, பொன் வீநாழல் பொலிந்து இனிது இருப்பவும்—பொன்நிறமான மலர்களையுடைய நாக மரத்தின்மேல் மன எழுச்சியோடு அழகாய் உட்கார்ந்திருக்கவும்,

'வளங் கவின்ற' மூன்றும் வேற்றுமைத் தொகை. சீர்—விளைவின் பெருமை. குரல்—நெற்கதிர்; இது "நெற்கதிரும்... குரலெனமொழிப" என்னும் பிங்கலந்தையா லறியப்படும்.

இது, மருத நிலத்துக்கிளி நெய்தல் நிலத்து நாகமரத்திற் சென்றிருத்தல் கூறிற்று.

(௮—௧௨) கரும் கழி வாரிய பெரு மீன் குவைஇ—கரிய நிறத்தினையுடைய கழியிலிருந்து வாரியெடுத்த பெரிய மீன்களைக் குவித்து, வல் திறல் பரதவர் முன்றில்தோறும் உணக்கும்—வலிய உடலுரம் வாய்ந்த செம்படவர் தம்முடைய வீட்டு முற்றங்கடோறும் உலர்த்துகின்ற, துடிக்கண் துணியல் கொடிக்குலம் கவர்ந்து—உடுக்கையின் கண்களைப் போல் வட்டத்துண்டுகளாயிருக்குங் கருவாடுகளைக் காக்கைக் கூட்டங்கள் திருடியெடுத்துக்கொண்டு, மருதங் காவில் பெரிது வைகவும்—மருத நிலத்து இளமரச்சோலையில் ஏகிப் பெருமிதத்துடன் அமர்ந்திருக்கவும்,

திறல்—உடம்பின் உரம்.

உலர்த்துதற்காக வகுந்து வெயிலில் விரித்துவைக்கப் பட்டுக் காயும் மீன் காண்பார்க்கு உடுக்கையின் கண்களைப் போல் இரண்டு வட்டத் துண்டுகளாய்த் தோன்றுதலால், அது 'துடிக்கட்டுணிய' லெனப்பட்டது. இஃதிவ்வாறு தோன்றுதல் "கொழுமீன் குறைஇய துடிக்கட்டுணியல்"

என்னும் மதுரைக்காஞ்சியாலும் (கூஉ0) ஆசிரியர் நச்சினார்க்கினியர் "துடியின் கண்போலுருண்ட துணிகள்" என்று அதற்குக் கூறிய உரையாலுந் தெளியப்படும்.

இது, நெய்தல் நிலத்துக் காக்கையும் மீனும் மருத நிலத்துச் சென்றமை கூறிற்று.

(கூ—கக) குளன் உறை வாழ்க்கை வள நீர்க்கோழி— மருத நிலத்துக் குளத்தின்கண் வாழும் வாழ்க்கையினையுடைய உடற் செழுமை வாய்ந்த நீர்க்கோழி, மனையுறை நீங்கித் துணை கூப் பெயர்ந்து—அவ்விடத்து உறைதலைத் தவிர்ந்து தனது பெடைப்பறவையைக் கூவியழைத்துக் கொண்டு, கால்வழி ஓடிக் கழியிற் சேரவும்—வாய்க்கால் வழியாக நீந்திச்சென்று நெய்தனிலத்துக் கழிநீரிற் சேரவும்,

'வளம்' என்பதை நீர்க்குக் கூறுதலுமாம். 'உறை' இரண்டனுள் முன்னது வினைத்தொகை, பின்னது முதனிலைத் தொழிற்பெயர். 'துணை' இச்சொல் இருபாற்கும் உரித்தேயாயினும், பெரும்பாலும் பெண்பால் மேற்றாகவே வழங்கப்படும்.

'கூப்பெயர்தல்' ஒரு சொல்; அழைத்தலென்னும் பொருட்டாம்.

இது, மருதநிலத்து நீர்க்கோழி நெய்தனிலத்துக்கழியிற் சேர்ந்தமை கூறிற்று.

(கஉ—கஎ) புலவு மணம் முனைஇய நிலவுஉறழ் குருகு —நெய்தனிலத்துக் கழியில் மிக இருந்தமையாற் புலால் நாற்றத்தை வெறுத்துவிட்ட நிலவையொத்த வெள்ளிய நாரைகள், கண் அகல் விசும்பில் நண்ணிய முகில்மேல் இவர்ந்து எழுதிங்கள் போல— இடமகன்ற வானிற் பொருந்திய கரிய முகிலின்மேல் ஏறித்தோன்றுந் திங்களைப்போல, பரந்து கெழு துணிநீர்த் தடத்தின் மணம் மலர் ஆரும்—இடம் அகன்று உள்ள தெளிந்த நீரினையுடைய மருதநிலத்துக் குளத்திலுள்ள மணங்கமழும் பூக்களை மேய்ந்துகொண்டிருக்கும், இரும்பு திரித்து அன்னஅறல் மருப்பு எருமை

கரும்புறம் மருங்கில்—இரும்பை முறுக்கினாற்போல் அறுப்பு அமைந்த மருப்பையுடைய எருமைகளின் கரிய முதுகாகிய இடத்தில், ஒருங்கிநிற்பவும்—கூம்பி நிற்கவும்,

'முனை இய' வெறுத்த; இஃதிப்பொருட்டாதல் "சேற்று நிலை முனைஇய செங்கட் காரான்" என்னும் அகநானூற்றிற் (௪) காண்க. 'நிலவு' நிறத்திற் குவமை. 'நண்ணிய' பொருந்திய. 'இவர்ந்தெழு' ஒருசொல் நீர.

'துணிநீர்' என்பதற்குத் 'தெளிந்தநீ' ரென்றே ஆசிரியர் நச்சினார்க்கினியரும் "துணிநீர் மெல்லவல்" (மதுரைக்காஞ்சி, உ௮௬) என்புழி உரை கூறினர்.

'இரும்பு திரித்தன்ன' வென்பது, மருப்பின் வலிமை யுணர்த்திற்று. இவ்வுவமையை "இரும்புதிரித்தன்ன மாயிரு மருப்பு" என்று குறுங்குடிமருதனாரும் அகநானூற்றில் (௪௬) எடுத்தாண்டார்.

அறல், தொழிலடியாகப் பிறந்த பெயர்.

'புறமருங்கு' புறமாகிய இடத்தில்; இங்கு மருங்கு என்பது இடப்பொருளுணர்த்தி நின்றது; 'மருங்கின்கண்' என நிற்கற்பாலது உருபு கெடச் சாரியையுடன் நின்றது; "மெல்லெழுத்து மிகுவழி" என்னுஞ் சூத்திரத்தில் "மெய் பெற" என்றமையால் இன்னோரன்ன முடிக்கப்படுமென்பர் உரைகாரர் நச்சினார்க்கினியர் (தொல்காப்பியம், எழுத்து, ௧௫௯)

விசும்பு நீர்க்குளத்திற்கும், முகில் எருமைக்கும், திங்கள் குருகுக்கும் உவமை; எருமைக்குக் கரும்புறங் கூறினமையால், அதன் உவமையாகிய முகிலுக்குங் கருமையுரைக்கப்பட்டது

இது நெய்தல் நிலத்து நாரை மருதநிலத்து வயலெருமை மேற்சென்று நின்றமை கூறிற்று.

(௧௮—௧௯) பொறிகெழுவாளை—மருதநிலத்து நீர் நிலைகளிலுள்ள விளக்கம் அமைந்த வாளைமீன், வெறிபடப் பாய்ந்து முடைக் கழிச்சுறவொடு கறுவொடு மறியவும்—

மதர்ப்பினாற் சரேலெனப் பாய்ந்து முடை நாற்றத்தையுடைய கழிக்கணுள்ள சுறுமீனொடு சினத்துடன் புரளவும்,

'பொறி கெழு வாளை' 'ஒளி பொருந்திய வாளை' யெனப் பொருடருதல் "பொறி வரி வரால்" என்புழி (சீவக சிந்தாமணி, சச) நச்சினார்க்கினியருரைத்த உரையாலறியப்படும்.

வெறி—மதர்ப்பு.

'காலெதிர்ந் தோடுங் கழிக்கய' லென்று பின்வருதலின், இவ்வாளை மீனுங் கால்வழிச்சென்று பாயுமெனக் கொள்க. 'கால்வழியோடிக் கழியிற்சேரவு' மென்று மேலே வந்தமையும் நினைவு கூரற்பாற்று.

'ஒடு' உருபுகள் இரண்டனுள்ளும் முன்னது கலப்புறு பொருளிலும், பின்னது அடைமொழிப் பொருளிலும் வந்தன.

'முடைக்கழி' புலால்நாற்ற முடைய கழி; ஏனையெல்லா நீர் நிலைகளினும் உப்பளத்துக்கழியே முடை மிகுதியும் இயல்பிலுடைமையால், இலக்கியங்களெல்லாம் அம் முடை நாற்றத்தைக் கழிக்கே ஏற்றிக் கூறுதல் மரபு, "புலவு நாறிருங் கழி" யென்று அகப்பாட்டிலும் (கஅ0) வந்தது. "புலவுக்கழி" யென்று அடிகளே மேலும் (உஉ—க0க) உரைப்பர்.

இது மருதநிலத்து வாளை நெய்தல் நிலத்துச் சுறவொடு போர் புரிதல் கூறிற்று.

(உ0—உக) கால் எதிர்ந்து ஓடும் கழிக்கயல்—நீர்க்கால்களில் எதிர்முகமாய் ஓடும் நெய்தற்கழியின் கயல் மீன்கள், மருதச்சேலொடு கூடிச் சேர்ந்து துள்ளவும்—மருதநிலத்துச் சேல்மீன்களொடு கலந்து ஒன்றாய்க் குதிக்கவும்,

மருதநிலத்து வாய்க்கால்கள் கடற்பக்கம் நோக்கிச் செல்லுமாதலின், அக் கடற்பக்கத்திலிருந்து மருதநிலத்தை நோக்கி ஏகு கயல் மீன்கள் அக்கால்வாய்களை எதிர்ந்து ஓடினவென்றார். எதிர்ந்து, எதிர்த்து; இவ்வன்மை மென்மைகளிற் பொருள் வேறுபாடு உண்டு; முன்னையது எதிர்முகமாய்ச் செல்லுதலையும், பின்னையது போர்க்கு

முனைதலையும் உணர்த்தும். கயலொடு சேலுந் துள்ளிற் றென்பார், 'சேர்ந்து துள்ளவும்' என்றார்,

இது நெய்தற்கழியின் கயல் மீன்கள் மருதநிலத்துச் சேற்கெண்டைகளொடு சேர்ந்து துள்ளுதல் கூறிற்று.

(உஉ—உரு) முழுநெறி அவிழ்க்குங் கொழுங்கால் ஓடி - மருத நிலத்து அரும்புகளை இதழவிழ்க்கும் அவ்விடத்துக் கொழுவிய காற்று ஓடிச்சென்று, பொன் அம் தாமரைப் பொலம் துகள் வாரி—பொன்னிறமான அழகிய செந்தாமரைப்பூக்களின் பொன்னிறமான பொடியை அள்ளி, கோழி முட்டை போழ்படுத்தாங்கு—கோழிமுட்டையை உடைத்தாற் போல, வெள் அயிர்க் கானல் கொள்ளையின் வீசவும் - வெள்ளிய நுண்மணலையுடைய கடற்கரைச்சோலையில் மிகுதியாய்த் தூவவும்,

'முழுநெறி' முறுக்குவிடாமுழுக்கட்டுடைய பூமொட்டு.

நீர்வள நிலவள முடைய மருதக்காற்றாகலின் 'கொழுங்கால் எனப்பட்டது.

துகள், இங்கு மகரந்தப்பொடி ; அது பொன்னிறமாயிருத்தலின், 'பொலந்துக'ளென அடை கொடுக்கப்பட்டது.

கோழிமுட்டையை உடைத்தக்கால், மஞ்சட்கரு விரவிய வெண் குழம்பே நிலத்தின்கட் பரவுதலின், அது தாமரைப் பூவின் மஞ்சட் பொடியினை வெண்மணலிற் சிதறுதற்கு உவமையாயிற்று.

'ஆங்கு' உவமச்சொல் லென்றார் பரிமேலழகர் (திருக்குறளுரை, உ : ரு.)

'அயிர்' நுண்மணலுக்குப் பெயராதலை "இடிக்கலப்பன்ன ஈர் அயிர்" (சிலப், சு : கசசு) என்று ஆசிரியர் இளங்கோவடிகள் ஒருவமையின் வைத்து உரைத்தார்.

இது மருதநிலத்துக் காற்று அந்நிலத்துத் தாமரை மலரின் பூந்தாதுகளை அள்ளிக்கொண்டு நெய்தல் நிலத்துக் கடற்கரைச் சோலையிற்சென்று தூவுதல் கூறிற்று.

(உகூ—ஙு) வெள்ளி வெண் தோட்டுத் தாழையின் அலரி—வெள்ளித்தகட்டையொத்த வெள்ளிய மடல்களை யுடைய தாழம்பூ வைத்துழவி, கையரிக்கொண்ட கடல் கால் ஓடி—அதன் மகரந்தப் பொடியை வாரிக்கொண்ட கடற் காற்று மருத நிலத்துக்கு ஓடி, நீறு மெய்பூத்த நிமலன் போல—திருநீறு உடம்பெங்கும் பொலிவுபெறத் தோன்றிய மலத்தின் நீங்கின சிவபெருமானைப்போல, செம்தாமரைகள் சிறந்து இனிது விளங்க—சிவந்த தாமரைப் பூக்கள் நிறஞ் சிறந்து அழகாய்த் தோன்றுமாறு, வெண்பொடி வீசிப் பண் பொடும் உலாவவும்—அவ் வெண்பொடியைச் சிதறி இனி தாய் வீசவும்,

'தாழையின்' இன் சாரியை, கண் உருபு தொக்கது.

'கையரிக்கொள்ளல்' கைநிரம்ப அரித்துக்கொள்ளல்; இங்கு வாளா வாரிக்கொள்ளல் என்னும் பொருளில் வந்தது; இவை ஒரு சொன்னீர்மைய. வடமொழி 'உபசர்க்கங்' களைப் போலத் தமிழ்மொழியிலுங் 'கை' யென்பது, உரிய பெயர் வினைச்சொற்களோடு இயைந்துவரும் இடைச்சொல்லாய் நிற்கும். ''களித்தறியே னென்பது கைவிடுக'' வென்பதிற் போல, (திருக்குறள் கூரு, அ.)

'பூத்தல்' பொலிவுபெற்றுத்தோன்றல் ; ''மீன்பூத்தன்ன தோன்றலர்'' (திருமுருகாற்றுப்படை, கஉகூ)

கடற்காற்று குளிர்ச்சியு மினிமையு முடைமையால், அவ் வினிமை யதன் 'பண்பொடு'மெனச் சுட்டப்பட்டது.

'நிமலன்' மலமில்லாதவன் ; அவன் சிவபெருமான் ; இச் சொல்லின் முதலில் இன்மைப்பொருளை யுணர்த்தும் 'நிர்' என்னும் வடமொழியிடைச்சொல் (உபசர்க்கம்) ஈறு கெட்டுப் புணர்ந்தது.

அடிகள் சிவபிரான் மாட்டு இடையறா அன்புசெலுத்துஞ் சைவப் பெரியாராகலின், தமது அன்பிற்குரிய பொருளைக் கைதையந்தாது படிந்த செந்தாமரை மலருக்கு உவமை கூறினர் ; ஈது அன்புமிக்கார்க்கு இயல்பேயாம். தொண்டர் சீர் பரவுவாரான ஆசிரியர் சேக்கிழார் கைதையந்தாது படிந்த

கமலவண்டிற்கு நீறுபுனைந்த தொண்டரை உவமை காட்டிக் "கமல வண்டலர் கைதைத், துன்று நீறுபுனை மேனிய வாகித் தூய நீறுபுனை தொண்டர்க ளென்னச், சென்று சென்றுமுரல் கின்றன" வென் றருளிச்செய்யும் அருண்மொழியிலும் இவ் வியல்பினைக் காண்க.

(கூக-சு0) தேம் மொழிச் செவ்வாய்த் திருமுக உழத்தியர் - இனிய மொழிகள் நிரம்பிய சிவந்த வாயினையுடைய அழகிய முகம் வாய்ந்த உழவர் மகளிர், காமரு கொழும் சுவை வாழையின் பழனும்—விருப்பம் மிகுத்தற்குரிய மிக்க சுவையினையுடைய வாழையின் பழங்களும், புன்செய் பயந்த பல் நிறப் பயறும்—கொல்லையில் விளைந்த பலநிறங்கள் வாய்ந்த பலவகைப் பயறுகளும், நன்செய் பயந்த பொன் நிற மணியும்—வயலில் விளைந்த பொன்னிறம் வாய்ந்த நென்மணிகளும், வட்டிகைப் பெய்து—கூடையிற் கொட்டி, கட்டிய சுமட்டின் எடுத்துச்சென்று—வளைத்துக் கட்டிய சும்மாட்டின்மேல் எடுத்துக்கொண்டுபோய், அங்கு அடுத்து உயர் பாக்கத்து—அவ்விடத்தை யடுத்து மணன்மேடாய் உயர்ந்துள்ள செம்படவர் சேரியில், குமிழ் இடை உகளும் அமைவிழிப் பரத்தியர்—குமிழம் பூவை யொத்த மூக்கின் அடியிற் புரளும் அமைந்த விழிகளையுடைய நெய்தல் மகளிர், பகுத்து உணர்வு இன்றி மிகுத்துக் கொடுத்த—இவ்வள வுக்கு இவ்வளவு என்று பிரித்து உணரும் உணர்ச்சியில் லாமல் மிகுதியாய்க் கொடுத்துவிட்ட, தாளமும் மீனும் நிரல் பட அளந்து கொண்டு—முத்துக்களையும் மீன்களையும் தாம் விற்ற பண்டங்களுக்கு ஒழுங்காக அளந்தெடுத்துக் கொண்டு, உவப்பொடு பெயர்ந்து தம் இருக்கை சேரவும்—தாம் மிகுதியாய்ப்பெற்ற மகிழ்ச்சியொடு திரும்பித் தம் இருப் பிடம் அடையவும்,

மொழி செவ்வாய் முகம் என்பவற்றிற்கு உம்மை விரித் தலுமாம். 'தேம் மொழி' என்பதற்குத் 'தேனனைய மொழி' யென்றும் பொருளுரைப்பர்.

'காமரு' என்பதைக் காமம் மரு எனப் பிரித்து விருப்பம் பொருந்திய அல்லது விருப்பம் மிகுத்தற்குரிய எனப் பொரு

ளுரைக்க; இனிக் "காமரு குவளை" யென்பதற்குக் 'காமம் வருமென்பது விகாரத்தாற் காமருவெனநின்று விருப்பம் வருமென்பதாயிற்று" என்று ஆசிரியர் அடியார்க்கு நல்லார் உரைத்தார் (சிலப்பதிகாரம், அந்தி. சூ0).

கொழுமை, சுவைமிகுதிமேற்று. பழன்: ஈற்றுப் போலி.

செய், விளைநிலம்; இது பொதுப்பெயர்; புன்மை சிறுமையாதலின், விளைச்சலிற் சிறுமையுடைய புலம் 'புன்செ' யாயிற்று; விளைச்சலிற் பெருமையுடையது 'நன்செய்', இதன் கண் நன்மை பெருமைப் பொருளது. 'பல்' லென்னும் அடைமொழியைப் பயற்றுக்குங் கூட்டுக. பச்சைப்பயறு, கருமையுழுந்து, பழுப்புக்கடலை, சிவப்புக்கொள்ளு, வெளுப்புமொச்சை முதலிய பலநிறப்பயறுகள் உளவாதல் காண்க.

'வட்டிகை' கூடைக்குப் பெயராதலை, "வட்டிகை கூடை" யென்னும் பிங்கலந்தையாலறிக.

வயல்மேல் வினைசெய்வார் வைக்கோற் றுளைச் சுருட்டி வளைத்துப் பனைநாராற் கட்டிச் சும்மாடெடுப்பராதலின்' "கட்டிய சுமட்டி" னென்றார். இதன்கண் இன் என்னும் சாரியை நிற்க ஏழன் உருபு தொக்கது.

பாக்கமென்பது நெய்தல் நிலத்தூர்; பாக்கத்துப் பரத்தியரென்க. குமிழ்: உவமையாகுபெயர். இடை: ஏழனுருபு.

கொடுத்த பண்டங்கட்கு மாற்றாக மிகுத்துக்கொடுத்தமையிற் "பகுத்துணர்வின்றி" என்றார்.

(சுக—சுச) மருதமும் நெய்தலும் மயங்கிய மரபின்—இவ்வாறு மருதநிலப் பொருள்களும் நெய்தனிலப்பொருள்களும் ஒருங்கு கலக்கு மியல்பினால், உலகம் எல்லாம் ஒருங்கு வந்து உறினும்—உலகத்தாரெல்லாரும் ஒன்றாய் வந்து சேர்ந்தாலும், தொலையா வளத்தொடு—அவர்கள் நுகர்வனவெல்லாம் வழங்கியும் அழியாத வளத்தொடு, நிலவுறும் வைப்பின் ஒற்றி மாநகர்க்கு—விளங்குகின்ற ஊரினையுடைய திருவொற்றியூரென்னும் பெரிய பட்டினத்திற்கு,

மருதமும் நெய்தலும் ஆகுபெயராய் அவற்றின் கருப் பொருள்களை உணர்த்தி நின்றன. கருப்பொருள் இவை யென்பது,

*"தெய்வம் உணாவே மாமரம் புள் பறை*
*செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ*
*அவ்வகை பிறவும் கருஎன மொழிப"*

(தொல். அகத். ௧௮)

என்னும் சூத்திரத்தாற் றெளியப்படும். இச்சூத்திரத்தான் நுவலப்படாவாயினும், இங்கு அடிக ளெடுத்தாண்ட நீர் வாழ்வனவும் வளி நிலையும் பூவும் நிலமக்களும், 'அவ்வகை பிறவு' மென்பதனால் அடக்கிக் கொள்ளப்படும். என்னை? "பிறவு மென்றதனால் நிலமக்களும் நீர் நிலையும் வார்கொடி யும் பூவுங் கொள்ளப்படு" மென்று அடியார்க்கு நல்லார் சிலப்பதி காரப்பதிக உரையிற் கூறினாராதலின்.

'மயங்கிய மர' பென்றது, திணைமயக்கம், உலகு, மக்க ளுலகு; அன்றி ஆகுபெயரென்றலும் பொருந்தும்.

'தொலைதல்' "முன்பு உண்டாய்ப் பின்பு இல்லை யாதலாம்" என்பர் நச்சினார்க்கினியர் (பாலைக்கலி, ௧). வைப்பு —ஊர். "வில்லுடை வைப்பின்" என்னும் பெரும்பாணாற்றுப் படையிற் காண்க (௮௨).

இருப்பவும் வைகவும் சேரவும் நிற்பவும் மறியவும் துள்ளவும் வீசவும் உலாவவும் சேரவும் மயங்கிய மரபின் நிலவுறு வைப்பின் நகரென்று முடிக்க; இருப்பவும் முதலா யின உம்மையேற்ற வினையெச்சங்கள்.

இதுகாறும் மருதத்துக்கும் நெய்தலுக்குந் திணை மயக்கங் கூறுமுகத்தால், திருவொற்றியூரின் சிறப்புக் கூறப் பட்டது.

எனவே, திருவொற்றியூ ரென்பது வயல்வளம் வாய்ந்து கடற்கரை யோரத்தில் அமைந்திருக்கு முண்மை இதனாற் பெறப்படும்.

(சச—சரு) உற்ற கண் எனவும்—பொருந்திய கண்ணெனவும், அக்கணின் உள் வளர் அரு மணி எனவும்—அக்கண்ணின் உள்ளே ஒளிவளரும் அரிய கருமணியெனவும், அம்மணி உள் உறை பாவையை எனவும்-அக்கருவிழியினுள்ளே உறையும் பாவை யெனவும்,

பாவையை, ஐ: சாரியை; "இறவரையும்பர்" என்னுந்திருக் கோவையாரிற் போந்த 'குறவரை யார்க்கும்' என்பதற்குப் பேராசிரியர் கூறிய வுரையைக் காண்க.

இறைவனை முதன்மையும் அருமையும் நோக்கி இங்ஙனங் கண்ணெனவும் மணியெனவுங் கூறினர். இங்ஙனமே "கண்ணே கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய்" (திருவாவடுதுறை) என்று அப்பர்பெருமானும் அருளிச்செய்தனர். 'அருமணி' யென்றது கருமணியேயா மென்பதும் இதன்கட் பெறப்படுதல் காண்க.

ஒற்றிமா நகர்க்குக் கண்ணெனவு மென்று தொடர்க.

(சஎ—௫௦) பாவையின் அகத்துப் பண்பு பலகாட்டி மேவி—அப்பாவையினுள்ளே இயல்புகள் பல விளங்கக் காட்டி யுறைந்து, ஆங்கு அது புடை பெயர்ந்து இயங்க—அக் கருவிழியினுள் அது பக்கம் பெயர்ந்து அசைய, தக்கவாறு மிக்கது புரியும்—நேரத்திற்குத் தகுந்தபடி சிறந்தது செய்யும், ஓர் இயல்பு இல்லா ஆர் உயிர் எனவும்-ஓரியல் பின்றிப் பலவேறு இயல்புகள் உடைய அரிய உயிரெனவும், என்றுரைத்து மேல் 'விளங்கும்' என்பதனொடு கூட்டுக.

பண்பு, உயிர்ப்பண்பைக் காட்டும் நுண்ணிய செயல்கள். மேவி, உயிரின்வினை; அது, பாவை. 'பாவையி னகத்து மேவி அது இயங்க மிக்கது புரியும் ஆருயி ரென்க.

'தக்கவாறு மிக்கது புரியும்' என்றது நேரத்திற்கு இசைந்தவாறு செய்யும் உயிரின் திறத்தை; எனவே 'பண்பு' உயிரின் பல்வேறியற்கையினை யுணர்த்திற்று. 'மிக்கது' அறிவின் சிறப்பைக் காட்டிற்று. 'மிக்கது' ஒருதொகுதிப்பட்ட சிறந்த செயல்களை யுணர்த்துதலின் ஒருமைப் பன்மை மயக்கம்.

உயிர், விழைவு அறிவு செயல்கள் (இச்சாஞானக்கிரியை) பல உடையவாதல்பற்றி "ஓரியல்பில்லா ஆருயிர்" என்றார்.

(௩௪—௩௫) இருவேறு உலகினும் - உயிர்ப்பொருள் உலகம் உயிரில் பொருள் உலகம் என்னும் இரண்டு வேறுபட்ட உலகங்களிலும், இரண்டு அற விரவி—அவை வேறு தான் வேறு என இரண்டாய்ப் பிரிந்து நிற்றல் இல்லையாம் படி அவற்றோடு ஒருங்கு கலந்து, அறிவும் தொழிலும் நெறி உற விளக்கும் மாது ஒரு கூறற்கு—உயிர்களின் அறிவையும் உயிரில்லனவற்றின் செயலையும் முறைபொருந்த விளங்க வைக்கும் உமையம்மையை யொருபாகமா வுடைய சிவபிரானுக்கு, ஓதிய முதல்வன்-ஓமெனும் ஒருமொழி மறைப் பொருளை ஓதியருளிய முதற்கடவுள்,

இருவேறுலகு: அறிவுள்ள உயிர்த்தொகையும் அஃதில்லா மண் நீர் தீ முதலான உயிரில் பொருட்டொகையும்.

'இரண்டற விரவி' யென்றார், கலப்புத் தன்மையால் ஒன்றாயும் பொருட்டன்மையால் இரண்டாயும் விரவி ஒன்றென்றும் இரண்டென்றுங் கூற முடியாமைக் கலந்து நிற்றலின்; இவ்விரவுதலையே 'இரண்டன்மை' (அத்துவிதம்) என்று சைவசித்தாந்த நூல் கூறும்.

இறைவன் அம்மையின் வாயிலாகப் பிரிப்பின்றி நின்று இவற்றை விளக்குதலின், அவனை 'மாதொரு கூற'னென்று விதந்தார். இங்கு அம்மையென்றது அருள்.

"விளக்குங் கூற"னென்று கொள்க.

இவ்வடிகள்,

> "அவையே தானே யாய்இரு வினையிற்
> போக்கு வரவு புரிய ஆணையின்
> நீக்கம் இன்றி நிற்கு மன்றே"

என்னுஞ் சிவஞானபோத நூற்பாவைப் பெரிதொத்துத் தெளிந்த தமிழில் விளங்கிநிற்றல் பெரிதும் வியந்து மகிழற்பாலது.

'பாவையினகத்து......ஆருயிரெனவும்' என்று மேல் வந்த ஆருயிர்ச்செயலை இரட்டுறமொழிந்து 'இருவேறுலகி னும்...மாதொரு கூற'னென்னும் இவ் இறைவன் செய லுக்கு உவமித்தலுஞ் செயற்பாலது. உடம்பை யியக்கும் உயிரை உலகுயிர்களை யியக்கும் இறைவனுக்கு உவமை காட்டும் முறை,

> "கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ள
> மிட்டதொரு பேரமைக்க வென்னென்றுங்-கொட்டி
> யவனுளமா கில்லா னுளமவனு மாட்டா
> தவனுளமா யல்லனுமா மங்கு"

என்று ஆசிரியர் மெய்கண்டதேவ நாயனாரருளிச்செய்த சிவஞான போத வெண்பாவிற் காணப்படும்.

இனிக் 'கண்'ணெனவும் 'மணி' யெனவும் 'பாவை' யெனவும் என்பவற்றையும் இங்ஙனமே உவமித்துரைக்கலா மோவெனின், திருவொற்றிமாநகர் மாதொரு கூறனைத் தொடர்ந்து, 'முதல்வன்' என்ற முருகவேளைத் தொடரா தொழியுமாகலின், அவ்வாறுரைத்தலாகாது

இனி 'விளக்கு' மென்பதை முதல்வனுக்குக் கூட்டி முடித்து மாலோவெனின், உலகுயிர்களுக்கெல்லாம் அறிவுந் தொழிலும் விளக்கும் மாதொரு கூறனுக்கே ஓமெனு மொரு மொழி ஓதினன் முதல்வனென்னும் பெருஞ்சிறப்பு ஆண்டுப் பெறப்படாமையின், அதுவும் உரையன்றென்க. மேலும், 'முதல்வன்' என்பதன் சொற்பொருளாற்றல் அதன்கட் சிறவாமையும், அதனால் அதனைப் பெய்து நிறுத்திய அடி களின் கருத்து ஆண்டு நிரம்பாமையுங் கண்டுகொள்க.

(௫௪—௫௮) செல்லல் உற்று அழுங்கிய மல்லல் தேவர் குழாம் பெரிது உய்ய—துன்பமடைந்து இரங்கி முறையிட்ட விண்வளம் பொருந்திய தேவர் கூட்டம் நீண்டு உயிர்வாழ, வழா வேல் ஓச்சிப் பாடு இல் சூருக்கு வீடு நல்கி—குறிதவறுத வேற்படையை யெறிந்து அழிதலில்லாத சூரபதுமனுக்கு வீடுபேறளித்து, வேந்தன் பயந்த கூந்தற்குமரியை மணந்து உலகு அளித்த—தேவர்க்கு அரையன் ஆன இந்திரன் பெற்

றெடுத்த தெய்வயானையைத் திருமணம் பொருந்தி உலக வர்க்கு அருள் புரிந்த, நிணம் திகழ் வேலன்—கொழுப்புக் கறைவிளங்கும் வேலையுடையவன்.

செல்லல், துன்பம்; அழுங்கல், இரங்கல்; இவற்றைச், "செல்லலுற் றிரங்கி" யென்னும் மணிமேகலையிற் காண்க (உ, சு).

'மல்லற் றேவ' ரென்றது, 'செல்வப்பேற்றில் வைகுந் தேவ' ரென்னும் பொருட்டு; தாம் தேடாமலே எல்லா நுகர் பொருளும் பெற்ற தேவரென்க; மல்லல்—வளம், செல்வம்; "மல்லல் வளனே" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார் (உரி. எ)

'பெரிது' காலப் பெருமை யுணர்த்திற்று; 'பெரிது வைகவும்' என்பதிற்போல (இவ்வகவலின் அ-ஆம் அடி).

'பாடில்சூர்' என்றார், சூரன் தனது தவ வலிமையால் அழியாத நிலையைப் பெற்றிருந்தானாதலின்; இவன்றன் றவவலிமையை அடிகள்மேற் பத்தொன்பதாம் பாட்டிற் பதி னெட்டாம் அடிமுதல் ஐம்பத்தோராம் அடிவரையில் மிகவும் விரித்துரைப்பர்; ஆங்கு அவன் தவச்சிறப்பின் வகைமைகளை விளங்க உரைப்பாம். பாடு, முதல் நீண்ட முதனிலைத் தொழிற்பெயர். சூர், ஈறுகெட்டது,

'வீடுநல்கி' யென்றமையின், சூரனது ஊனுடம்பை வேலோச்சிக் கொன்றனரென்பது தெளியப்படும் 'ஓச்சி' யென்னும் வினையெச்சத்துக்குக் 'கொன்' றென்பது அவாய் நிலை.

சூரன் பகைவனாய் எதிர்த்துப் பொருதானாயினும், அவனுயிர் வினையி னீங்கி இறைவன் றிருவடிநிலையை யுறுதற்கேற்ற முற்றிய தவப்பேறும் நல்வினையும் உடைமை யின், இறைவன் அவனைத் தன் றிருவடிக்கட் சேர்த்தமை குறித்து 'வீடு நல்கி' யென்றார்.

'வேந்தன்' மருதநிலக் கிழவன், அஃது ஈண்டு வானோர் தலைவனை யுணர்த்திற்று. பயத்தல் - ஈன்றெடுத்தல்.

'கூந்தற்குமரி' கூந்தலையுடைய குமரியாகிய தெய்வ யானை.

'உலகளித்த' வென்பதைச் சூரனைக் கொன்றமையால் தேவரையும், அம்முறையே மக்களையும் பாதுகாத்த வெனக் கொள்க.

இறைவன் அருளொடு புணர்ந்து உலகத்தை யளிக்கும் உண்மைபற்றிக், 'கூந்தற் குமரியை மணந்து உலகளித்த வேல'னென்று ஓதினர்; இனி அது வரலாற்றுண்மையுமாம்.

(ருக—சுரு) ஐயன்—எவ்வுயிர்க்குந் தந்தை, செய்யன்—செந்நிற முடையவன், பன்னிரு கையன்-பன்னிரண்டு கைகளையுடையவன், வறியேம் இடும்பை பொறிபடுத்து எதிரும் பெரியோன்—ஏழையேமாகிய எம் துன்பத்தைத் துகளாக்கி எதிர்தோன்றும் பேராற்றலுடையோன், பெரியர் அறிவினுக்கு அரியன்—தவத்தாற் பெரியராயினோரறிவுக்கும் எட்டாதவன் (ஆகிய முருகப்பெருமானது), திரு உரு ஒருமையின் எழுவித்து—திருவுருவத்தை நெஞ்சொருமையுடன் எழுந்தருளச்செய்து, அருமையொடு வழிபாடு இயற்றி—சிறப்புடன் வணக்க வழிபாடு செய்து, விழி நீர் உறைப்ப அன்பு உருவாகி இன்பு உறல் அறியாது—கண்ணீர் துளிப்ப அன்பு வடிவாகி இன்பம் அடைதல் அறியாமல், புன்பொருள் கவரும் என் மின்புரை மனனே—சிறுமையுடைய பொருள்களைப் பிறரறியாமற் கொள்ளும் வேட்கை வாய்ந்த என் மின்னலை யொத்த நெஞ்சே,

சிவபிரான் பிள்ளையார் முருகப்பிரான் என்பாரெல்லாம் உண்மையான் நோக்குங்கால் ஒரே முழுமுதற் கடவுளாய் முடிதலிற் சிவபிரானைச் ''செம்மேனி யெம்மான்'' என்றாற் போல முருகக்கடவுளையும் ஈண்டுச் 'செய்யன்' என்றார்.

'பன்னிரு கையன்' என்றது, அவனது ஆற்றலுணர்த்திய படி யென்க.

'வறியே'மென்பது இங்கு இன்பத்தின் ஏழைமையைக் குறித்தது; திருஞானசம்பந்தப் பெருமான் முதலியோர் அடியார்

பெருமக்களை "ஏழையடியார்கள்" (திருவைகாவூர்த்தேவாரம் க) என்று அருளிச்செய்ததும் அது. வறியேமென்னுந் தன்மைப்பன்மை, தன்னினமான ஏனையோரையுந் தழுவி நின்றது. இதுபோல்வனவற்றை "உளப்பாட்டுத்தன்மை" (தொல்காப்பியம், வினையியல் ௫) யென்பர் சேனாவரையர்; "தனக்கு ஒருமையல்ல தின்மையிற்றன்மைப் பன்மையாவது தன்னொடு பிறரை உளப்படுத்ததேயாம்" என்று அவரதற்கு ஏது உரைத்தலும் ஆண்டுக் காண்க.

எதிர்தல், எதிர்வரல்; ஆவது எதிர்தோன்றல்.

'தவத்தான் முற்றிய பெரியர்க்கும் அரியனாய முருகன் வறியே மிடும்பையைப் பொறிபடுத்தெதிரும் பெரியனாயிருத்தலின், அவனை வழிபாடியற்றி இன்புறலறியாது புன்பொருள் கவர்கின்றனையே நெஞ்சே' யென்று இரங்கிக் கூறினாரென்று கொள்க.

'உறைப்ப' துளிப்ப; 'உறைப்பவென்றதனைத் துளிப்ப' வென்று ஆசிரியர் நச்சினார்க்கினியரும் பெரும்பாணாற்றுப்படை (௩எக) யுரையில் உரைப்பர்.

'புன்பொருள்' சிறுமையையுடைய சிற்றின்பப் பொருள்கள். அவை 'மண்டிரிவாகக் கண்டன சிலவு' மென்பது முதலாக மேலே கூறப்படும் பொருள்களென்க.

'கவரு' மென்றார், பிறரறியாமற் கொள்ளுதலின்; இனி 'விரும்பு' மென் றுரைத்தலுமாம்.

எந்நேரமும் எதனையேனும் நெஞ்சம் சடுதியிற் சடுதியில் மாறி மாறி நினைத்துக்கொண்டிருத்தலின், மனனை 'மின்புரை மனன்' என்றார். ஈது தொழிலுவமம். மனன், ஈற்றுப்போலி; ஏ, விளியுருபு.

'ஒற்றிமாநகர் முதல்வன் திருவுரு எழுவித்து வழிபாடியற்றி யின்புற லறியாது புன்பொருள் கவரு மனனே' யென்க.

(௬௬-எ௬) வரம்பு அறும் ஆற்றல் நிரம்பிய முருகன்-அளவு இல்லாத அறிவாற்றல் நிரம்பப் பொருந்திய முருகப்

பெருமான், தான் எழுந்தருளும் வான்குடில் ஆக நின்னைத் தந்தனன் ஆக - தான் வீற்றிருந்தருளுந் தூய சிறு வீடாக நின்னை எனக்குக் கொடுத்தானாக, பின்னை-அதன் பின்பு, மண்திரிவு ஆகக் கண்டன சிலவும்-மண்ணின் திரிபுகளாகக் காணப்படும் உடம்பு முதலாகிய சில பொருள்களும், புனல் திரிவாகப் புகுவன சிலவும்-நீரின் திரிபுகளாக மாறித்தோன்றும் பால் முதலாகிய சில உணவுகளும், அனல்திரிவாக அடைவன சிலவும்-தீயின் திரிபுகளாகப் பொருந்தும் மணியின் ஒளி முதலாகிய சிலவும், வளி இடனாகத் தெளிவன சிலவும் - காற்றே தோற்றுவாயாகத் தெளியப்படும் மணம் முதலாகிய சிலவும், விசும்பு இடனாக உசும்புன சிலவும்-வானம் பிறப்பிடமாக இயங்கும் இசை முதலாகிய சிலவும், ஓவாது இருப்ப மேவுநை-ஒழிவில்லாமல் வந்திருக்க விரும்புகின்றனை, அதனால் துன்பமும் கவலையும் நின்புறன் ஆக-அக்காரணத்தினாலே துன்பமுங் கவலையும் நின்பக்கத்தனவாக, இன்பு உறல் அறியாது இடர்ப்படுகுநையே-இன்பம் நுகர்தலறியாமல் நீ இடர்ப்படுகின்றனையே, அது அன்று-அதுவல்லாமல்,

'குடில்' சிறுவீடு; அஃதாவது குடிசை; இறைவனது எல்லையற்ற பெருமைக்கு உள்ளம் ஒரு குடிலாவதேயாயினும் அவன் எழுந்தருளுதற்கேற்ற அன்புரிமை அதற்குண்மையின், அது 'வான்குடி' லாயிற்று.

நெஞ்சம் மெய் முதலான ஐம்பொறிகளின் வாயிலாய் மண் முதலான ஐம்பொருள்களிலும் பொருந்தி ஊறு முதலான ஐம்புலன்களையும் நுகருமென்று இங்குக் கூறியவாறும்; இவ்வுண்மையை,

> " ஓசைநற் பரிச ரூப விரதகந் தங்க ளென்று
> பேசுமாத் திரைக ளைந்தும் பிறக்கும்பூ தாதிகத்தி
> னேசவிந் திரியங் கட்கு மிகமுறி விதனாற் காண்டு
> மாசைசேர் மனதி தன்மாத் திரைபுரி யட்ட கந்தான் "

(சிவஞானசித்தி. 2-ஆஞ் சூத்திரம், கூச) என்னும் அருணந்தி சிவனார் திருமொழியிலுங் காண்க.

'உசும்புதல்' இயங்குதல்; ஓசையணுக்கள் ஒன்றை யொன்று உந்தி இயங்கிச் செவிப்புலனுமென்று இயற்கைப் பொருணூலார் கூறுவர்.

'கண்டன' முதலிய ஐந்தும் வினைப்பெயர்களாய்ச் 'சிலவும்' என்பதனோடு பண்புத் தொகையாய் நின்றன.

'மேவுநை' யென்பதில் ஐகாரம் முன்னிலை வினைமுற்று விகுதியெனவும், நகரமெய் அஃதூர்ந்து வருதற்கேற்ற எழுத்துப் பேறெனவுங் கொள்க. 'இடர்ப்படுகுநை' யென்பதில் இவற்றோடு கு சாரியையென்றறிக. ஏகாரம், இரக்கப் பொருளது.

'நீ' யென்னுஞ் சொல் மேல் 'இனி நீ யிங்ஙன மொழி யாது' என்ற விடத்துள்ளது. புறம், பக்கம்.

'அதாஅன்று,' அது அன்று; வருமொழி முதல் நீண்டு அளபெடுத்துப் புணர்ந்தது;

(எஎ-அ0) உறுதுணை ஆகச் செறியும் என்னையும்- உனக்கு உற்ற துணையாகப் பொருந்தும் என்னையும், புல் சாய்த்து ஓடும் புனல்போல-தான் துணையாதற்குரிய புல்லைத் தன்வழிச் சாய்த்தோடும் வெள்ளம் போல, நின் வழிப்படீஇ-நின் வழிப்படுத்தி, என் உயிர்க்கு உயிராம் அறுமுகத்து ஐயனை மருவலொட்டாது-என் உயிர்க்கு உயிராகும் ஆறு திருமுகங்களையுடைய தலைவனை அணைய வொட்டாமல், வன்மை செய்த நின் புன்மையோ பெரிது- கொடுமை செய்த நின் சிறுமையோ மிகப்பெரிது;

புன்மை, இங்கு வஞ்சித்தொழுகுஞ் சிறுமை யுணர்த் திற்று. ஏகாரமிரண்டும் அசை.

'மனனே! முருகன் நின்னைப் படைத்த அருட்குறிப்பினை யறியாமல் இடர்ப்படுகுநையே; அதாஅன்று, என்னையும் நின்வழிப்படீஇ ஐயனை மருவலொட்டாது வன்மை செய்த நின் புன்மையோ பெரிது' என்று இணைத்துக்கொள்க.

(அஉ-அஎ) இனி நீ இங்ஙனம் ஒழியாது - இனி நீ இவ்வாறு அருட்குறிப்பினின்றும் நீங்காமல், பனிமலர்க்

கடம்பு சூடிய தடம் தோள் முருகன் - குளிர்ந்த மலர்களை யுடைய கடப்பமாலையைச் சூடிய பெரிய தோள்களையுடைய முருகப்பெருமானது, திரு உருப் பொதியும் ஒரு கலனுக விழுமிதின் நீடு வாழ்மதி - திருவுருவினைப் பாதுகாத்து வைக்கும் இணையற்ற கலனுகச் சீருடன் நீடு வாழ்வாயாக; கொழுவிய நலம் கெழு நறும் பால் பெய்த பொலம் கலம் பொலியும் பெற்றிஎன - இனிய சுவைபொருந்திய நல்லமணமுடைய பாலை இட்டு நிரப்பிய பொன்னுலான கலம்விளங்குந் தன்மையை யொப்பவென்க.

'கடம்பு' மாலையை யுணர்த்துதலின் ஆகுபெயர்.

'தடம்' பெருமைப் பொருட்டாதலைத் "தடவுங் கயவும் நளியும் பெருமை" என்னுந் தொல்காப்பியத்தால் (உரி-உஉ) அறிக.

"விழுமஞ் சீர்மையுஞ் சிறப்பு" மென்று தொல்காப்பியனுர் (உரி. ருகு) கூறுதலின், 'விழுமிதி' னென்பதற்குச் சீருடனென்று உரையுரைக்கப்பட்டது.

'வாழ்மதி,' மதி, முன்னிலையசை.

பொலம், பொன்; 'பொன்' னென்னுஞ்சொல் ஈறுகெட்டு லகரமும் மகரமும் முறையே பொருந்திப் 'பொலம்' எனத் திரிந்து முடிந்ததென்று ஆசிரியர் தொல்காப்பியனுர் "பொன்னென் கிளவி" (புள்ளிமயங்கியல், சுக) யென்னும் நூற்பாவிற் கட்டளையிடுவர்.

'என' உவமச்சொல்; இதனைப் பின்னுள்ளோர் உவமவுருபென்றே கொண்டனர். "என்ன விகல விழைய வெதிர" வென்பது தண்டியலங்காரம் (கூ௨, பொருளணி),

'பெற்றியென ஒருகலனுக வாழ்மதி' யென்று முடிக்க.

எனவே, 'ஒற்றிமாநகர் முதல்வன் திருவுரு எழுவித்து வழிபாடியற்றி யின்புற லறியாது புன்பொருள் கவரு மனனே' யென்று நெஞ்சை விளித்து, 'முருகன் தானெழுந் தருளும் வான்குடிலாக நின்னைத் தந்தனுகக் கண்டன சிலவும் புகுவன சிலவும் அடைவன சிலவும் தெளிவன சிலவும் உசும்புன சிலவும் மேவுநையதனுல் துன்பமுங் கவலை

யும் நின்புறனாக இன்புறல் அறியாது இடர்ப்படுகுனையே, அதாஅன்று என்னையும் நின்வழிப்படீஇ ஐயனை மருவலொட்டாது வன்மைசெய்த நின் புன்மையோ பெரிது' என்று அதன் பிழைபாட்டுச் செயலை யெடுத்துக்கூறி, 'இனி நீ இங்ஙனம் ஒழியாது நறும்பால் பெய்த பொலங்கலம் என முருகன் திருவுருப்பொதியும் ஒரு கலனாக நீடு வாழ்மதி, யென்று அறிவுரை கிளந்தாராதலின், இது நெஞ்சொடு கிளத்தலானமை காண்க.

## உ. அருளியலுரைத்தல்

'பெற்றி அரிய பெருமான்' என்பதை அரியபெற்றிப் பெருமான் என மாறி, உயர்ந்த இயல்புகளையுடைய என் தலைவன் என்றுரை கூறுக; பெரிய திருவொற்றி நகர் வந்த ஒள்வேலான் - பெரிய திருவொற்றி நகரத்தில் எழுந்தருளிய ஒளிமிக்க வேற்படையையுடயவன்; நல் தவரும் காணா அரிய கழலான் - மிக்க தவமுடை யாருங் காணமாட்டாத அரிய திருவடியை யுடையவன் ஆகிய முருகன், எனது உளத்து நாணாது அமர்ந்தவா நன்று - ஏழையேனுள்ளத்திற் கூசாது எழுந்தருளியவாறு மிக நன்று! 'அரிய பெற்றிப்பெருமா' னென்க. அரியபெற்றி யாவன, 'தன்னுரிமையனாதல்' முதலிய எட்டியல்புகளுமாம். தன்னுரிமையனாதல், தூய வுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே வினைகளினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை எனவிவை.

'அரிய இயல்புகள் வாய்ந்த திருவொற்றியங்கடவுள் தவமுடையாரானுங் காண்டற்கரிய கழலுடையனாயிருந்தும், ஏழையேனுள்ளத்தும் எழுந்தருளியவாறு ஆ, மிகநன்று' என்று வியந்துரைத்தபடியாம்; எனவே அவன் அருளியல் புரைத்தா ராயிற்று.

'காணா,' 'அமர்ந்தவா,' என்பவற்றில் ஈறு குறைந்தன.

'எனதுளத்து' மென்று இழிவுசிறப்பும்மை விரித்துரைத்தலுமொன்று; 'நற்றவரும்' என்பதன் உம்மை உயர்வு சிறப்பு.

'நாணுது,' 'நன்று' என்னுஞ் சொற்கள் உயிரின் தாழ்வையும் இறைவன் உயர்வையும் விளக்கா நின்றன.

'பெருமான் வேலான் கழலான்' என்றவும், 'முதல்வன் வேலன் செய்யன் கையன் பெரியோன் அரியன்' என்று முன் வந்தனவும், "ஒரு பொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி" (தொல்காப்பியம், கிளவியாக்கம், சஉ).

## ங. காமமிக்க கழிபடர் கிளவி

அகல் ஈர்ம் கழிகாள் - அகன்ற குளிர்ந்த கழிகளே, மின் தங்கு நொய் சிறைவண்டு இனங்காள் - மின்ஒளி பொருந்திய மெல்லிய சிறகுகளையுடைய வண்டுக் கூட்டங் டங்களே, நன்று அன்று உனக்குத் திருவொற்றி வேலரை நாடி இடர் இன்று இங்கு நீ கொள்ளல் என்று உரையிர் - 'திருவொற்றி நகரிலுள்ள வேலுடை முருகரை விரும்பி இங்கிப்பொழுது நீ துன்பங்கொள்ளுதல் உனக்கு நல்ல தன்று' என்று சொல்கின்றிலிர்!, இனிமேல் எமக்கு நின்று இங்கு நீர் செய்யும் நன்மை என்னே - இனிமேல் எனக்கு நீங்கள் அருகிருந்து செய்யும் நன்மை என்னவோ. ஒன்றும் நேர்வது இன்று - ஏதும் உங்களால் ஆவது இல்லை.

'நன்று,' பெயர். 'நீ எமக்கு,' ஒருமைப்பன்மை மயக்கம். நொய்மை, மென்மை.

ஓ : ஒழியிசை ; ஏ : ஈற்றசை.

'கழிகாள் வண்டினங்காள் உரையி'ரென்றது "ஞாயிறு திங்கள் அறிவே நாணே" யென்பதனுற் கொள்ளப்படும் (தொல்காப்பியம், செய்யுள், உ0உ). காமமிக்க உறுதுயர்ச் சொல்லாதலிற், கழிகளையும் வண்டுகளையும் விளித்து இவ்வாறு கூறினர்.

## ச. தோழி விரவிக் கூறல்

'தோழி விரவிக்கூறல்' என்றது, தலைவனது குறையிரப் புக்கு மதியுடம்பட்ட தோழி, தன் தலைவியையும் அதற்கு இசைவித்தல் கருதி, மென்மையும் வன்மையும் விரவிக்கூற

லென்பது. முதலில் மென்மையாற் கூறிய தோழி, தலைமகள் தனது நாணத்தாற் குறை நேராமை கண்டு, இங்ஙனம் விரவிக் கூறுகின்றாளென்க. திருச்சிற்றம்பலக் கோவையாருள் (அச) 'விரவிக்கூற' லென்று வருந்துறைக்கு ஆசிரியர் பேராசிரியர் "மென்மொழியொடு சிறிது வன்மொழிபடக் கூறு நிற்றல்" என்று இங்ஙனமே விளக்கமுரைத்தார்.

(க முதல் ஙி அடி) நேர் இறை முன்கை - ஒத்த வரிகளையுடைய முன்கைகளையும், வார் ஒலிக் கூந்தல் - நீண்டு தழைத்த கூந்தலையும், அரிகடை ஒழுகிய பெருமதர் மழைக் கண் - செவ்வரிகள் முனைவரையில் ஓடிய பெரிய களிப்புப் பொருந்திய குளிர்ந்த கண்களையும், இலவு உறழ்செவ்வாய் - இலவின் இதழையொத்த சிவந்த வாயிதழ்களையும், நிலவு உறழ் திருநுதல் - எட்டாம்பிறைத் திங்களைப்போன்ற அழகிய நெற்றியையும், கொடிபுரை மருங்குல் - வஞ்சிக் கொடியை நிகர்க்கும் இடையினையும், கடிதிகழ்மேனி - ஒளி விளங்கும் நிறமமைந்த உடம்பினையும் உடைய, கரும்பினும் இனிய - கருப்பஞ்சாற்றினும் இனிய இயல்பினையான, என் அரும்பெறல் பாவாய் - என்பெறலரிய பாவையையனையாய் ! என்றது, தோழி தலைவியையென்க.

'நேர்இறை முன்கை' என்றது ஒத்த வரிகளை (இரேகைகளை) யுடைய முன்கையை; இறை என்பது வரியெனப் பொருடருதல் "பிறங்குவரி பொறிவரை இறையாகும்" என்னும் பிங்கலந்தையிற் காண்க (ஆடவர்வகை). 'ஒலிகூந்த' லென்றது, கூந்தலின் அடர்த்தி கூறியவாறு. "ஒலிமென் கூந்தல்" என்னுங் குறிஞ்சிப்பாட்டுத் (உ) தொடர்க்கு ஆசிரியர் நச்சினார்க்கினியருரைக்கும் உரையில் இவ்வுண்மை காண்க. ஒலித்தல், தழைத்தலென்னும் பொருட்டு. விளங்கும் நுதல் ஓர் அரைவட்டம்போற் றோன்றலால், 'நில'வென்றற்கு ஈண்டு எட்டாம்பிறைத் திங்களென்று உரைக்கப்பட்டது.

"மாக்கடல் நடுவண் எண்ணாட் பக்கத்துப்
பசுவெண் டிங்க டோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்"

என்று குறுந்தொகைப் பாட்டிலும் (௧௨௧) இவ்வியல்பு ஆசிரியர் கோப்பெருஞ்சோழரால் விளக்கமாய் எடுத்துக்காட்டப்பட்டிருத்தல் அறியற்பாலது.

மாதரிடைக்கு வஞ்சிக்கொடி யுவமையாதல், "வஞ்சிம் மருங்குல்," "வஞ்சியஞ்சும் இடை" என்னுந் திருக்கோவையாரிற் (௨௨, ௬௨) காண்க.

மேனியை நிறமெனவும் உடம்பெனவும் இரட்டுற மொழிந்து கொள்க. என்னை? நிறமமையாது உடம்பின்கண் விளக்கந் திகழாதாகலினென்பது.

'கையுங் கூந்தலுங் கண்ணும் வாயும் நுதலும் மருங்குலும் மேனியும் உடைய பாவா'யென எண்ணும்மை விரித்துத் தொடரியைத்துக் கொள்க.

பாவாய், உருவகம்; "அவற்றுள் இ ஈயாகும் ஐ ஆய் ஆகும்" (தொல்காப்பியம், சொல், ௪) என்னுந் தொல்காப்பியத்தான் இதன்கண் ஐயிறு ஆயெனத் திரிந்து விளியேற்றது.

(௬ - எ) வழிவழிச் சிறக்கும் எம் கழிபெரும் குலத்தின், தலைமுறை தலைமுறையாகப் பெருமையிற் சிறந்துவரும் எமது மிக உயர்ந்த குலத்திற்பிறந்த, பால்கடல் தோன்றிய சீர்த்திரு அனையாய் - திருப்பாற்கடலினின்றும் எழுந்த அழகிய திருமகளை யொத்தவளே ;

வழி, கால்வழி; அடுக்குப் பன்மைப்பொருளது.

எம், தன்மைப்பன்மை; உளப்பாட்டுத் தன்மைப்பன்மையன்று.

'அனையை' யென்னும் முன்னிலைமுற்றுச்சொல் ஈறு திரிந்து விளியேற்றது.

(அ - க) வலம்புரி அன்ன - வலம்புரிச் சங்கினையொத்த- எம் குலம்புரி கோமகள் - எங்கள் குலத்தோர் விரும்புகின்ற கோப்பெருந்தாய், அரிதின் ஈன்ற பெருமுத்து அனையாய் - அருமையாய்ப் பெற்றெடுத்த முத்தையொப்பவளே ;

வலம்புரி, வலமாகச் சுழிந்தமைந்த சங்கு; இதனையே சங்கினங்களில் மிகவும் உயர்ந்ததென்ப.

"இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்"

என்னும் பெரும்பாணாற்றுப்படை யடிகளிலும், (௩௪ - ௩௫) "விளங்குகின்ற நீரையுடைய கடலிடத்துப் பிறந்த சங்கில், மேலாக உலகங் கூறும் வலம்புரிச் சங்கையொத்த குற்றநீங்குந் தலைமை யினையும்" என்று அவ்வடிகட்கு ஆசிரியர் நச்சினார்க்கினிய ருரைக்கும் உரையிலும் இஃது அறியற்பாலது. இங்கும் 'வலம்புரி யன்ன கோமக' ளென்பதற்கு இத்தலைமைப் பொருளே பொருளாம். எனவே இது பண்புவமையென்க.

குலத்துக்கேற்ற ஒழுக்கமுடைமையிற், கோமகளைக் 'குலம்புரி கோமக' ளென்றார். குலம், ஆகுபெயர்.

கோமகளென்றது நற்றாயை. நற்றாயை வலம்புரியென் றமையின், அவள் அரிதின் ஈன்றமகள் பெருமுத்தெனப் பட்டாள். இவ்வாறு சிறப்பித்துக் கூறுதல் இலக்கியமரபு; இது,

"தீம்பால் சுமந்து முலைவீங்கித் திருமுத்தீன்ற வலம்புரிபோற்
காம்பேர் தோளார் களிறீன்றார்"

என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளானும் (முத்தியிலம்பகம், ௧௦௪) அறியப்படும்.

முத்துக்களுள்ளும் பருமுத்தங்களே சிறந்தனவாதல் "பரூஉக்காழ் ஆரம்" (சிலப்பதிகாரம், ௪, ௪௧) என்னும் இளங்கோவடிகள் திருமொழியிலும், "கிம்புரிப்பகுவாய்க் கிளர் முத்து" (சிலப். ௫. ௧௫௦) என்னுமிடத்துக் 'கிளர்முத்' தென்ப தற்குப் 'பருமுத்து' என உரைக்கும் அடியார்க்கு நல்லார் உரை யிலும் அறியப்படும்.

(௧௭ - ௧௩) மிடி அறியா எம் குடி எனும் முற்றத்து - வறுமை யென்பதறியாத எமது குடும்பமென்னும் முன்றிலில், அன்புநீர் பாய்த்தி - அன்பு என்னும் நீரை நாடோறும் பாய்ச்சி, இன்புஉறக் கைசெய்து-நீயும் நின்னைக் கண்டாரும்

மகிழ்ச்சி பொருந்தும்படி ஒப்பனைசெய்து, ஆயமும் யானும் சிரிதின் வளர்க்கும்-தோழியர் கூட்டமும் யானுஞ் செல்வமாய் வளர்த்துவரும், நல்பயன்கனிந்த பொன் சுடர்க்கொடியே - நல்லவாகிய பயன்கள் முதிர்ந்த பொன்னிறமான ஒளிமிக்க பூங்கொடியனையாய்;

முற்றம், வீட்டுக்கு முன்னிடம்; இதனை 'முன்றி'லெனவும் உரைப்ப.

நெகிழ்ச்சி, இடங்கண்டவழி விரைந்தோடல், அடைத்தும் அடைபடாமை, உயிர்களை வளர்த்தல், ஈரமுடைமை முதலிய ஒத்த வியல்புகளான், அன்பை நீரெனவே எல்லாத் தமிழிலக்கியங்களும் ஒத்து உருவகப்படுத்துரைப்பவாயின. உரையாசிரியர் பரிமேலழகர் மூன்றும் பரிபாடலுரையில் (சுகு) அன்பினை மென்மையென்றுரைத்தமையும் இங்கு நினைவு கூரற்பாற்று.

கொடிகளுக்குக் கைசெய்தலாவன: கொழு கொம்புகளை அருகணைத்து அவற்றின்மேல் அவைகளை எடுத்து விடல், முட்களால் நெருக்குண்டு மடிந்துகிடக்கும் இலைகளையும் மலர்களையுங் கொழுந்து வருங் கொடிகளையும் நிமிர்த்தி விடல் முதலாயினவென்க.

'ஆயமும் யானும்' என்று தன்னை ஆயத்தினின்றும் பிரித்துக் கூறினாள், முதன்மை கருதி.

மங்கைப்பருவத்திற் பெண்டிர்க்கு நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு முதலான இனிய பெண்மையியல்புகள் விளைதலின், அவைதாமே ஈண்டுத் தலைவிக்கு 'நற்பயன்' எனப்பட்டன வென்பது.

முற்றம், நீர், பயன், கொடிமுதலானவெல்லாம் உருவகச் சொற்கள்.

(கச-கரு) நக்கும்-சிரித்தும், புக்கும்-எம் ஆயத்திடைப் புகுந்தும், மிக்க மகிழ்செய்யும்-எமக்கு மிக்க மகிழ்ச்சியை விளைக்கின்ற, செயிர் அற எழுதிய உயிர் ஓவியமே-குற்றம் இல்லையாக எழுதிய உயிருடைய ஓவியமனையாய்.

காட்சிக்கு இனிதாகிய ஓர் ஓவியம் நகுதலும் அசைதலு மான உயிர்ச்செயலும் உடையதாயின், அது கண்டார்க்கு மிக்க மகிழ்ச்சியை விளைத்திடுமாகலின், இங்ஙனங் கூறப் பட்டது. மகிழ், முதனிலைத் தொழிற்பெயர்.

(கசு-கஅ) அருமையின் மிகுந்த எம்பெருமுதல் தந்தை-அருமையினுற் சிறந்த எங்கள் பெருமைமிக்க முதல்வனுன கோமகன், ஆற்ருவிருப்பொடும் ஏற்றிப்பார்க்கும்-தாழாத விருப்பத்தோடும் ஏற்றிப் பார்க்கின்ற, விளிவுஅற விளங்கிய ஒளிமணிவிளக்கே-அவிதலின்றி என்றும் ஒரு பெற்றித்தாய் விளங்குஞ் செம்மணியின் ஒளிவாய்ந்த விளக்கனையாளே;

கல்வி, கேள்வி, செல்வம், செல்வாக்கு, நல்லொழுக்கம், ஈகை, தலைமை முதலியவற்ருற் பிறரெல்லாரினும் அரிய ஞய்ச் சிறந்தவனென்றற்கு 'அருமையின் மிகுந்த' வெனப் பட்டது.

விளக்கிலெரியுந் தீப்பிழம்பு செம்மணியின் வடிவத்தை ஒத்திருத்தலின், மணிவிளக்கென்று உவமிக்கப்பட்டது. அன்றி அழகிய விளக்கெனலும் ஆம்.

விளக்கேற்றிப் பார்த்தலைத் தலைவிக்கு உரைக்கும் போது, 'தந்தை அவளை ஈன்றெடுத்துக்காண்ட' லென்று கருத்துக்கொள்க. ஒவ்வொரு குடியிலும் நன்மக்களைப் பெற்றெடுத்தலென்பது அக்குடிக்கு விளக்கேற்றி வைத்தல் போலாம் எனக் கொள்வது தமிழ்நாட்டார் வழக்கு. இவ்வுண்மை,

"வருநாளென் றும்பிழையாத் தெய்வப் பொன்னி
வளம்பெருக்க வளவர்குலம் பெருக்குந் தங்க
டிருநாடு போற்செழியர் தென்ஞடு விளக்குஞ்
சீர்விளக்கின் செய்யசீ றடிகள் போற்றி"

என்று சேக்கிழார் பெருமான் மங்கையர்க்கரசியாரைச் 'சீர் விளக்கு' எனக்கூறி மகிழும் அருளுரையினும் நன்கு பெறப் படும்.

(ககூ-உக) நின் அருள் நாடி - நினது அருளிச் செய்கையை எதிர் விரும்பி, இங்குத் துன்னி நின்று-நின்னை

அணுகி நின்று, அடியேன் கூறும் ஓடியாச் சிறுமொழி—அடியேன் சொல்கின்ற கேடில்லாச் சிறுமொழியை, வறிது என ஒழியாது அறிவுகொளல் வேண்டும்-சிறிய தென்று நீக்காமல் திருவுளம்பற்றல் வேண்டும்;

இங்கு 'அருள்' என்றது, குற்றங்கண்டவழிப் பொறுக்கும் அருளை. 'துன்னி நின்றிங்' கென்பது, உள்ளத்தின் அணுக்கத்தை உணர்த்துதற்கெழுந்தது; உடலணுக்கமும் அதன்வழித் தாகலின்.

'ஓடியாச்சிறுமொழி' பயன் விளைத்தலிற் கெடாத சிறு சொல்; என்றது பொருளுரையாகுமென்றற்கு; ஓடியா இப் பொருட்டாதல் "ஓடியாவுள்ளம்" என்பதனுரையிற் காண்க. (பரிபாடல், உ, கூ). "வறிது சிறிதாகும்" (தொல். உரியியல், ௪0). பணிவுகாட்டல் கருதிச் சிறுமொழியென்றாள். 'அறிவுகொளல் வேண்டு' மென்றது, ஆராய்தல் வேண்டுமென்றற்கு; சிறுமொழியை ஏற்றொழுகல் வேண்டுமென்பது குறிப்பு.

*" அடிகண் முன்னர் யானடி வீழ்ந்தேன்*
*வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும் "*

என்னுஞ் சிலப்பதிகாரவடிகள் (கூ) இவ்வடிகளோடு ஒத்து நோக்கி யுணரற்பாலன.

'பாவாய், திருவனையாய், முத்தனையாய், சுடர்க்கொடியே, உயிரோவியமே, மணிவிளக்கே, அடியேன் கூறும் ஓடியாச் சிறுமொழி அறிவுகொளல் வேண்டு' மெனத் தொடர்பு படுத்துக.

இனி, மேல் 'வயலுழவர்' முதல் 'வினையுள்' ஈறுகப் பதினான்கடிகாறும் ஓற்றிமாநகரைச் சிறப்பிக்கு முகத்தால், மருதநிலவளன் கூறுகின்றார்.

(உஉ-உகூ) வயல் உழவர் குவளைகட்டு-கழனியிலுள்ள உழவர்கள் குவளைப்பூடு களைந்து, வியல்வரம்பில்-அகன்ற வரம்பின்மேல், தடிந்திட்ட கயலின் இடைப்பட எறிய-கொன்றுபோகட்ட கயல்மீன்களின் நடுவில் விழும்படி எறிய,

மருதமகள் கருவிழிபோல் பொருவு இன்றித் திருவிளங்க- அக்குவளையின் மலர்கள் மருதநில மகளின் கருவிழியைப் போல் ஒப்பின்றி அழகு விளங்கவும்,

'வெள்ளை வெளே'லென்று மின்னிக்கிடக்குங் கயல்மீன்கள் மருதமகளின் வெள்விழியாக, அவற்றிடையிற் பொருந்திய குவளை மலர்கள் அவட்குக் கருவிழியாய் விளங்கினவென்க.

வயலுழவர், வயற்கண் உழவர்.

கட்டல், களைதல்; என்றது 'களைகட்ட' லென்க; கள் என்னும் முதனிலை இடைநிலையும் வினையெச்ச விகுதியுமான தகரவுகரஞ் சேர்ந்து, "ணளவென் புள்ளிமுன் டணவெனத் தோன்றும்" (தொல். எழுத்து, கடு௦) என்னும் புணர்ச்சி விதிப்படி ளகர தகரங்கள் டகரமாய் இடைதிரிந்து 'கட்டு' என முடிந்தமை காண்க.

வியல், உரிச்சொல்; "வியலென் கிளவி யகலப் பொருட்டே" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார் (உரி. கூஅ).

மருதநிலம். வயலும் வயல்சார்ந்த இடமுமாம். இந் நிலம் இங்கு 'மகள்' என்று உருவகப்படுத்தப்பட்டது.

(உஎ-உகூ) செந்நெல் வித்திய பொன் உறழ் வான் முளை-சின்னாட்குமுன் வித்திய செந்நெல் விதையின் பொன்னைக்குந் தூய முளைகள், புரி அவிழத் தலை விரிந்து - முறுக்குடையத் தாள் விரிந்து, பைத்து என்னப் பரந்து இருப்ப- பச்சைப்பசேலெனப் பரந்து திகழவும்;

'வித்திய செந்நென்முளை' யென மாறுக.

'செந்நெல்,' நெற்களுள் உயர்ந்தது; இதனால் இதற்கு 'நன்னெல்' எனவும் ஒரு பெயருண்டு; இது, செந்நெ னன்னெல் செஞ்சாலிப் பெயர்" என்னும் பிங்கலந்தை (மரப்பெயர்) யிற் காண்க.

'பொன்' பசும்பொன்; இங்கு நிறத்திற்கு உவமை.

'பைத்து', பசுமையென்னும் பண்புப்பெயரின் றிரிபு; ஈறு கெட்டு முன்னின்ற மெய்திரிந்து தன்ளெற்றிரட்டி முடிந்ததெனக் கொள்க; இது பசுமை நிறத்தை யுணர்த்து தல் திவாகரத்திற் (அ) காண்க.

(௯௦-௯௪) தெள்ளொளிப் பளிங்கினுள்-தெளிந்த ஒளியை யுடைய ஒரு பளிங்குப்பேழையுள், அயிர்பெய்து - நுண் மணலையிட்டு, பாசிலையும் சேதாம்பலும் கள் குவளையும் முள் தாமரையும்-பசிய இலைகளையுஞ் சிவந்த ஆம்பல் மலர்களையுந் தேன்பொருந்திய குவளைப்பூக்களையும் முள்ளுள்ள தாமரை மலர்களையும், ஒருங்குபட எழுதி மருங்கு வைத்தாங்கு- ஒன்றாய் எழுதிப் பக்கலில் வைத்தாற்போல, நல்பூம் கயங் கள் பொற்பொடும் இமைப்ப-அழகிய பூக்கள் நிறைந்த நீர்க்குளங்கள் ஆங்காங்கு அழகாய் விளங்கவும்.

பளிங்கு குளத்தின் தெளிநீருக்கு உவமை. 'அயிர்' நுண் மணற்பொருட்டாதல் 'வெள்ளயிர்க்கானல்' (இந்நூல், க, உ௫) என்புழிக் காட்டப்பட்டது.

பசுமை இலை 'பாசிலை'யெனவுஞ், செம்மை ஆம்பல் 'சேதாம்ப' லெனவுந் திரிந்து புணர்ந்தன. இதனை 'ஈறு போதல்' (நன்னூல், பத. ௬) என்பதனல் முடிக்க.

குளத்தின் நீரைப் பளிங்கெனக்கொண்டு, அதன் அடியி லுள்ள மணற்றரை 'அயிர்பெய்து' என்னுந் தொடராற் கண்ணுக்குக் காணப்படுவதாக உரைக்கு முகத்தாற் குளத் தின் அடிமுதல் மேல்வரையில் எடுத்துக்காட்டுதலே ஈண்டு ஆசிரியர் கருத்து. ஆம்பல், குவளை, தாமரை, முதலாகு பெயர்.

'ஆங்கு' உவமவுருபு; ''கடற்கண்டாங்கு'' (திருமுரு காற்றுப் படை, உ) என்புழிப்போல.

ஆசிரியர் ஈண்டுச் சேதாம்பலுங் கட்குவளையும் முதலா யின வெடுத்துக்காட்டிப் பொய்கையினியல்பை விளக்குதல் போலவே,

"முட்டாள சுடர்த்தாமரை
கட்கமழு நறுநெய்தல்
வள்ளித ழவிழ்நீல
மெல்லிலை யரியாம்பலொடு
வண்டிறை கொண்ட கமழ்பூம் பொய்கை"

என்று ஆசிரியர் மாங்குடி மருதனாரும் மதுரைக்காஞ்சியில் (உசக-உருரு) உரைத்தல் கண்டுகொள்க.

(கரு) தண்ணடைமருவிய தணியாவிளையுள்-மருதநிலங்கள் பொருந்திய குறையாத விளைவினையுடைய, திருவொற்றியூரென்று மேலடியோடு ஒட்டுக.

தண்ணடை, மருதநிலம்; இஃதிப்பொருட்டாதல், "தலையளித்தான் தண்ணடையுந் தந்து" என்னும் புறப்பொருள் வெண்பாமாலையிற் (உ, கஉ) காண்க.

'விளையுள்' உள் விகுதிபெற்ற தொழிலடியாகப் பிறந்த பெயர்; "பெயலும் விளையுளும்" என்பது திருக்குறள் (ருசரு)

விளங்கவும் (உரு), பரந்திருப்பவும் (உக), இமைப்பவும் (ருச) தண்ணடை மருவிய விளையுள் 'ஒற்றிமாநகர்' என்று வினையெச்சங்கட்கு உம்மை விரித்துக் கூட்டிக் கொள்க.

(ருசு-சச) ஒற்றிமாநகரின்-திருவொற்றிமாக் கோயிலின் கண், முற்பட அமர்ந்த சிவபிரானெழுந்தருளிய கருவறைக்கு நேரே முன்னிடத்திற் குடிகொண்டெழுந்தருளிய, உட்கு உடை முருகன் - தெய்வத்தன்மையாற் கண்டார் அஞ்சுதற்கு உரிய முருகப்பிரானை, கண்கண்டாங்கு-கண்ணெதிரே கண்டாலென்ன, பார்த்து ஆனுப் பயில்வடிவின்-கண்ணாற்கண்டு அமையாத அகக்கண்ணெதிரே பலகாலுந் தோன்றும் வடிவினையும், ஓர்த்து ஆனு உரன் உணர்வின்-ஆராய்ந்தமையாத சிறந்த அறிவினையும் உணர்ச்சியினையும், சொல் ஆனுப் பல் புகழின் - சொல்லியமையாத மிக்க புகழினையும் உடைய, தாள்தொட வீழ்ந்த கையன்-முழந்தாளிற் பொருந்தும்படி வளர்ந்த கையினனும்; தோள்தொடு பொன்ஞாண் பிணித்த வில்லன்-தோளிற் பொருந்தும் பொற்கயிறுகட்டிய வில்லினனும்; கணையன்-அவ்வில்லிற் றொடுக்கும் அம்பு

களையுடையவனும்; மின்ஞாண் பிணித்த குஞ்சியன் - மின்னு கின்ற பொன்ஞாணல் வளைத்துக்கட்டிய மயிர்முடியினனும்; இளைஞன்-கட்டிளம் பருவத்தினனும்; அரியன்-யாவராலும் அணைதற்கரியவனும்; பெரியன் - அதற்கேற்பப் பெருந்தகை மையுடையவனும்; திருவளர் செல்வன் - செல்வங்கள் ஓங்கு கின்ற நிறைவுடையவனும் ஆன அவன்,

வடிவின் உணர்விற்புகழிற்கையன்; வில்லன்; கணையன்; குஞ்சியன்; அரியன்; பெரியன் செல்வன் என இயைக்க.

இந்நூல் கொண்ட முருகப்பெருமான் திருவொற்றியூர்ச் சிவபிரான் திருக்கோயின் முகப்பில் எழுந்தருளியிருப்பவ னென்பார், "முற்படவமர்ந்த'வென்று கிளந்தார்.

ஆறு: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; அமையாத வென்பது பொருள்; அமைதிப்படாத வென்று கொள்க; "கொலையாறுக் கூற்றம்" என்பது புறப்பொருள் வெண்பா மாலை (காஞ்சி. கரு).

பயிலல், பலகாலுந் தோன்றல்; "பயிற்றி" என்பதற்குப் "பலகாலுங்கூறி" என்று புறநானூற்றுரைகாரர் (கூச) பொரு ளுரைத்தமையால் அச்சொற் பலகால் நிகழும் நிகழ்ச்சியினை யுணர்த்துதல் அறியப்படும்.

வடிவு, உணர்வு, புகழ் என்பவற்றிற்கு இரண்டாவது விரிக்க. இன், சாரியை.

'தாடொட வீழ்ந்தகை' என்பது "தாடோய் தடக்கை" (புறநானூறு, கo) என்று இலக்கியங்களிற் பயின்றுவர லறிக.

கையன், வில்லன் முதலாயின குறிப்புவினைப் பெயர்கள். 'செல்வம்' நிறைவு; "செல்வமென்பது சிந்தையின் நிறைவே" யென்னும் மணிமேகலையடி இங்கு நினைவுகூரற்பாலது.

(சரு) இன்னுங், குடியினுலுங் குலத்தினுலுங் குற்ற மொன்று மில்லாதவன்.

குடியென்பது குடும்பம், அஃதாவது ஒருவனைச் சூழ்ந்த அகச்சுற்றம்; குலமென்பது புறச்சுற்றம். குடியின் கண்ணுங் குலத்தின் கண்ணுமென ஏழனுருபு விரித்தலுமாம்.

(சசு-சஎ) பெறுவது ஒன்று உடையன் போல-என் மாட்டுப் பெறுவதொரு பொருளுடையான்போல, மறுவந்து-சுழன்று, பல்நாள் எனினும் என்சொல் நிலைதவருன் - அதனைப் பெறுதற்குப் பலநாட்கள் கழிந்தனவேனும் யான் எனது சொல்லால் நிறுத்திய நிலையினின்றுந் தவருன்.

மறுவந்து, மறுவா பகுதி: சுழன்று, இஃதிப்பொருட்டாதல் "மறுவந்து மயங்கி" என்னும் பெருங்கதையிலும் (கூகூ, கஉஎ), "மறுவரற்பொழுதில்" என்னும் அகநானூற்றினுங்(உஉ) காண்க.

(சஅ) குறித்தது-தான் சொல்லுதற்கு உள்ளத்திற் குறித்ததை, கிளவாது செறித்தலும் செறிப்பன்-வெளிப்படச் சொல்லாமல் தன்னுள்ளத்தே அடக்குதலுஞ் செய்வன்.

குறித்தது: செயப்பாட்டுவினைப் பொருளின் வந்த வினைப்பெயர். கிளத்தல்-வாய்விட்டுச் சொல்லல்; செறித்தல் - உள்ளடக்குதல்; இப்பொருட்டாதல் "செறிவறிந்து சீர்மை பயக்கும்" என்னுந் திருக்குறளிற் (கஉகூ) காண்க. "செறித்தலுஞ் செறிப்பன்" என்றதிற் பின்னின்றது செய்வன் எனக் "காரியவாசகமாய்" நிற்றல் நச்சினுர்க்கினியருரையிற் (தொல்காப்பியம், ககஉ) காண்க.

(சகூ-ருக) உருமும் உளியும் அரவும் பிரியா - இடியோசையும் கரடிகளும் பாம்புகளும் விட்டுநீங்காத, ஆர்அதர் நீந்திச் சீரிதின் போந்து-கொடிய காட்டுவழியைக் கடந்து நலமாய் வந்து, திரிதரும் நாள்களும் பல—நாம் இருக்கும் புனங்களிற் றிரிகின்ற நாள்களும் பலவாகும்; உளியம்-கரடி; கோள்வல் உளியம்என்பது சிலப்பதிகாரம் (கூ,ரு); அதர்-வழி, "ஆனினங் கலித்த அதர்" என்பது புறநானூறு (ககூஅ); ஆர் கொடுமை மேற்று; அன்றிக் கடத்தற்கரிய வழியெனலுமாம். நீந்தி, கடந்தென்றற்கு; ஆவது கடந்துவருதலின் அருமையைக் குறித்தது. உம்மை: முற்று.

(ருக-ருசு) ஒருநாள்-ஒருநாளன்று, நம்மலை அகன்சாரல், நமது அகன்ற மலைப்பக்கத்தில், தலைமையொடு பொலியும் ஆராமத்தின் - முதன்மையுடன் விளங்குஞ் சோலைக்கண், நீ

வாராயாக ஒரு தனிச்சென்றேன்-நீ வரவில்லையாகத் தனியே சென்ற யான், பரிவொடு புகுந்து-வருத்தத்தோடு உள் நுழைந்து, பால்நீர்வாவியின் மேவிநிற்ப-பாலைப்போலுந் தெளிநீரையுடைய குளத்தின்கரையிற் சென்று நிற்க அவனும் ஆண்டு எய்தி என்னொடு நின்றனன்-அத்தலைமகனும் அவ்விடத்தில் வந்து என்னொடு நின்றான்;

'ஆராமம்,' மலைச்சோலை; இப்பொருட்டாதல் பிங்கலந்தையிற் காண்க. 'வாராயாக'வென்பதன் ஆக, செயவென் வினையெச்சவீறு

சென்றேன்: வினைப்பெயர்-

பரிவு-வருத்தம்; பரிபாடல், அ

மண்வளமும் இனிமையும் மிக்க நீர் பால்போல் வெண்ணிற முடையதாய்க் காணப்படுமாகலின், 'பானீர்' எனப் பட்டது.

உம்மை: எச்சம்.

(ருகூ-கூச) நொய்தின் திரைபொரு கரையில் புரை இன்று ஓங்கி-இலேசாக அலைகள் மோதுகின்ற அக்குளக் கரையிற் குற்றமில்லாமல் வளர்ந்து, பசும்குழைகலித்து-பசியதளிர்கள் தழைத்து, நசை நனைஅரும்பி-விருப்பம் உண்டாக்கும் பூ மொட்டுகள் அரும்பெடுத்து, தென்றலொடு புகுந்த வண்டு இசைப்பாணன் இனிமையின் மிழற்றும் தனி இசைக்கு உவந்து-தென்றற்காற்றோடு நுழைந்த வண்டென்னும் இசைமிக்க பாட்டுவல்லான் இனிதாக இசைக்கும் ஒப்பற்ற இசைக்கு மகிழ்ந்து, பொதி அவிழ் மலரின் நறவு உணக் கொடுத்து-அதற்குப் பரிசிலாக இதழ்க்கட்டு அவிழ்ந்த தன் மலர்களின்தேனை அவை உண்ணும்படி ஈந்து, நினைதொறும் சுவைக்கும் நீல்நிறக் கனிகள் இலைதொறும் குழும நலம் மிகப் பயக்கும் கோழரைநாவல்-நினைக்குந்தொறும் நாவூறுகின்ற நீலநிறப் பழங்கள் இலைகள் தோறுந் தொகுதி தொகுதியாய்ப் பழுத்திருத்தலால் தன்னை அணுகினார்க்கு நன்மையை மிகவும் விளைக்கின்ற வழுவழுப்பான அடியினை

யுடைய நாவன்மரம், கோட்டின் உகுப்ப—இசை கேட்ட மகிழ்ச்சியினாற் கிளைகள் அசைந்து அப்பழங்களைச் சொரிய;

நொய்மை, இலேசு; கலித்தல், தழைத்தல்; இதற்கு இப் பொருளுண்மை "தூவறக்கலித்த தேம்பாய் புன்னை" என்னும் புறநானூற் (உச) றுரையிற் காண்க.

'வண்டிசைப் பாணன்' இடையே பண்பொட்டு விரித்துக்கொள்க. நீல், கடைகுறைந்தது; "நீனிறவிசும்பு" (பட்டினப்பாலை, கூஎ) என்பதிற்போல. நாவற்பழங்கள் தொகுதி தொகுதியாய்க் காய்த்துப் பழுத்திருத்தலாற் 'குழும' வென்றார். குழூமல் தொகுதிப் பொருட்டாதல் திவாகரத்திற் (அ) காண்க.

மரத்தின் அரைகள் கோழரை, பொகுட்டரை, முள்ளரை, பொரியரையென நான்கு வகைப்படும்; நாவல் கோழரையினது.

'ஓங்கி கலித்து அரும்பி உவந்து கொடுத்து நாவல் உகுப்ப'வென்க.

(கூ௫-எ௩) பால் இடை விழூஉம் நீலமணி கடுப்ப-பாலினுள் விழுகின்ற நீலநிறமான மணியை ஒப்ப, ஆம் இடை விழூஉம் அரும்சுவைக்கனிகள்-குளத்து நீரினுள் விழுகின்ற மிக்க சுவையினையுடைய அப்பழங்களை, அளை இடைத்துஞ்சும் அரும்பெடைக்கு அளிப்ப - வளையினுள் துயில்கொண்டிருக்கும் அருமையுடைய தன் பெட்டை நண்டுக்குக் கொடுக்கும் பொருட்டு, வேப்பின் கொழுநனை ஏய்க்கும் நெடும்கண் கவைக்கால் அலவன் தாள் இடை இடுக்கி - வேம்பின் செழுமையான அரும்பையொத்த நீண்ட கண்களையும் இருபிளவான கால்களையும்உடைய ஆண்ஞெண்டு தன் கால்களினிடையில் இடுக்கியபடியாய், அன்புடன் சென்று ஆங்கு அருத்தல்நோக்கி - அன்பொடு போய் அவ் வளையின்கண் உள்ள தன் பெடைநண்டுக்கு ஊட்டுதலைப் பார்த்து, என்னையும் நோக்கினன் அன்னதும் நோக்கினன் - அதன் காதலை வியந்து என்னையும் பார்த்தான், அதனையும் பார்த்தான், உய்குவது அறியான்போலச் செய்குவது

ஒன்றும்காணுது அன்று நின்றனனே - உயிர்பிழைப்பதற்கு வழியொன்றும் அறியாதவன்போலச் செய்வதொன்றும் அறியமாட்டாதவனுய் அன்று அலமந்து நின்ருன்.

பானீர்வாவியின் நீனிறக்கனிகள் விழுதலிற், 'பாலிடை விழூஉம் நீலமணி கடுப்ப' வென்று உவமை கூறினர்.

'ஆம்,' நீர்; இஃதிப்பொருட்டாதல் "அருநீர்ப்பைஞ் சுனை ஆம் அறப்புலர்தலின்" என்னும் அகநானூற்றடியிற் (௧, ௧௨) காண்க.

அருமை, ஈண்டு மிகுதிமேற்று. கனிகள், செயப்படு பொருளுருபு விரித்துக்கொள்க.

துஞ்சுமென்று இன்றுயில் குறிக்கப்பட்டது, இங்குக் காட்டப்படுங் காமவின்பத்துக்கேற்ப; 'வேப்பு', இடை வலித்தது. வேம்பின் நனை அலவன் கண்களுக்கு உவமையாதல் பழைய இலக்கியங்களிற் பெருவரவிற்று; "வேப்பு நனை யன்ன நெடுங்கட் கள்வன்" என்பது ஐங்குறுநூறு (கள்வன் பத்து, ௧௦).

ஞெண்டுக்குப் பிளவுபட்ட கால்களுண்மையிற் 'கவைக் கா லலவன்' என்ருர்; இவ்வியற்கை யுண்மை,

> "மிதியுலைக் கொல்லன் முறிகொடிற் றன்ன
> கவைத்தா ளலவ னளற்றளை சிதைய"
> (பெரும்பாணுற்றுப்படை, ௨௦௮)

என ஆசிரியர் உருத்திரங்கண்ணனுர் ஓரரிய உவமையுடன் எடுத்துக் கூறி விளக்குதலின்வைத் தறிந்துகொள்ளப்படும். ஞெண்டுவின் வளைக்கு 'அளை' யென்னும் பெயர் வழக்காதலும், இவ்வடிகளில் 'அளைசிதைய' வென வருமாற்ருற் கண்டுகொள்க.

அருத்தல், அருந்தும்படி செய்தல்; பிறவினை.

'ஆண்ஞெண்டு தன் பெடைக்குக் காதல் அன்புடன் அருத்தி மகிழ்தல் கண்டு, அம்முகத்தால் முருகனுந் தன் தலைவியின் நினைவெழப் பெற்றுக் காதலன்பில் உருகி ஆற்ருனுய்த் தனதெண்ணத்தை முடித்துவைக்குமாறு

என்னை நோக்கினன்; மீண்டும் வேட்கைமிகுதியால் அஞ்ஞெண்டையும் நோக்கினன்; அங்ஙனம் நோக்கினமை எனக்கதனைக் குறிப்பித்தமைபோ லாயிற்று' என்பது "ஒருகாற் கண்டு தரிக்குந் தன்மைத்தன்றும் வேட்கை" என்னும் இறையனாரகப் பொருளுரை (௩௦ ஆம் நூற்பாஉரை) இங்கு நினைவுகூரற்பாலது.

'உய்குவதறியா' னென்றது, வேட்கைமிகுதி கருதி; அவ்வேட்கையின் மயக்கத்தாற் செய்குவதொன்றுங் காணாது நின்றனன். செய்குவது, கு : சாரியை : நின்றனனே, ஏ ; இரக்கப்பொருளது.

(எஉ - எ௩) கொன் உறு பேய்கண்ட அனைய பெற்றியன் ஆகி - அஞ்சுதல் பொருந்திய பேயினைப் பார்த்தாற்போல்வதொரு தன்மையனாய், நிறையும் அறிவும் முறை முறை சாய - உளத்தை ஒருவழி நிறுத்துதலும் அறிவும் ஒன்றன்பி னொன்றாய்க் கெட, குன்று நிலை நீங்கா மரம் போல் - பொருந்தும் நிலையினின்றும் நீங்காத மரத்தைப் போல், கன்றிய நோக்கமொடு நின்றவன் நிலை - நைந்த நோக்கத்தொடு நின்றவனது நிலையை, நீ கண்டனையேல் - நீ பார்த்தனையானால், நெஞ்சம் நெக்குஉருகி - உள்ளம் உடைந்து உருகி, இன் உயிர் வாழலை - நினது இனிய உயிரோடு வாழ்தல் செய்யாய். அவன் எங்ஙனம் வாழ்தல் செய்வான் என ஒழிந்தபொருளை யுணர்த்தலின், மன், ஒழியிசைப் பொருளது; ஏகாரங்களிரண்டும் அசைகள். 'வாழலை' எதிர்மறைக்கண் வந்த முன்னிலை முற்று.

கொன் அச்சப்பொருட்டாய்ப் பேயினை அடுத்துவந்தது. இஃதிப்பொருட்டாதல் திவாகரத்திற் காண்க.

"பேய்கண் டன்னதுடைத்து" என்னுந் திருக்குறளுக்குப் (௧௧௯௩) பரிமேலழகியார் கூறியவுரையையுங் காண்க.

நிறை, தொழிலடியாகப் பிறந்த பெயர்; கருதிய வழியெல்லாம் உள்ளத்தைச் செல்லவிடாமல் நிறுத்துதலென்பது; "கண்டுழி யெல்லாம் உள்ளத்தைச் செலீஇ உள்ளத்தின்வழி ஓடுமாகலான் நிறையிலனும்" எனவருங்

களவியலுரையிலும் (௬௫) இவ்வுண்மை காண்க. 'துன்று நிலை', பொருந்திய நிலை; ஆவது நின்றநிலை யென்க.

'நின்றவன் நிலை நீ கண்டனையேல் உயிர்வாழலை மன்னே' யென்க. ௬௫ ஆம் அடிமுதல் இவ் ஈற்றடிகாறும் உரைக்கப்பட்ட இப்பொருள்,

''நீகண் டனையெனின் வாழலை நேரிழை யம்பலத்தான்
சேய்கண் டனையன்சென் றாங்கோ ரலவன்றன் சீர்ப்பெடையின்
வாய்வண் டனையதோர் நாவற் கனிநனி நல்கக்கண்டு
பேய்கண் டனையதொன் றாகின் றனப் பெருந்தகையே''

என்று திருச்சிற்றம்பலக் கோவையாருள் (அச) 'தோழி விரவிக் கூறல்' என்னும் இத்துறைமேலதாகவே சொல்லும் பொருளும் ஒப்ப உணர்த்தப்பட்டிருத்தல் அறியற்பால தாகும்.

இச்செய்யுளை, 'அரும்பெறற்பாவாய்! (௫) திருவனையாய் (எ) முத்தனையாய் (௯) சுடர்க்கொடியே (க௩) உயிரோவியமே (க௫) மணிவிளக்கே (க௮) அடியேன் கூறுஞ்சிறுமொழி அறிவுகொளல் வேண்டும் (௧௮-௨௧), குவளை கருவிழிபோல் (௨௫) திருவிளங்க (௨௬), வான்முளை (௨எ), பைத்தென்னப் பரந்திருப்ப (௨௯), நற்பூங்கயங்கள் பொற்பொடும் இமைப்பத் (௩௪) தண்ணடை மருவிய தணியாவிளையுள் (௩௫) ஒற்றிமாநகரின் (௩௬) முருகனைக் கண்டாங்கு (௩எ); கையன் (௪௧), வில்லன், கணையன் (௪௨), குஞ்சியன், இளைஞன் (௪௩), அரியன், பெரியன், திருவளர்செல்வன் (௪௪), வடுவொன்றில்லான்; பெறுவதொன்றுடையன் போல மறுவந்து (௪௬) என் சொன்னிலை தவறுன் (௪எ); குறித்தது கிளவாது செறித்தலுஞ் செறிப்பன் (௪௮); சீரிதிற் போந்து (௫0) திரிதருநாள்களும் பல; ஒருநாள் நம் (௫௧) மலையகன் சாரல் (௫௨) ஆராமத்தில் நீ வாராயாகத் (௫௩) தனிச் சென்றேன் புகுந்து (௫௪) வாவியின் மேவிநிற்ப, அவனும் ஆண்டு (௫௫) எய்தி என்னொடு நின்றனன் (௫௬); அங்குக் கரையின் ஓங்கி (௫எ) நலமிகப் பயக்கும் (௬௩) நாவல் உகுப்ப (௬௪); ஆமிடைவிழூஉம் அருஞ்சுவைக் கனிகளைப்

(௬௯) பெடைக்களிப்ப (௬௭) அலவன் இடுக்கிச் (௬௧) சென்று அருத்தல் நோக்கி (௭0), என்னையும் நோக்கினன் அன்னதும் நோக்கினன் (௭௧), செய்குவதொன்றுங் காணது நின்றனன் (௭௨); நின்றவன் நிலை (௭௩) நீ கண்டனையேல் (௭௪), இன்னுயிர்வாழலை (௭௫) ; யென்று வினைமுடிவு செய்துகொள்க.

## ௫. தோழி முன்னுறவுணர்தல்

என்றது, தோழி, தலைவிக்கு முன் இயற்கைப்புணர்ச்சி யுண்மையைக் குறிப்பாலுணர்தல் : என்னை ?

> "முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்
> இருவரு முள்வழி யவன்வர வுணர்தலென்
> றம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி"

என்பது களவிய (௭) லாதலின். 'முன்னுற வுணர்தல்' என்பதனை 'முன்' 'உறவு' 'உணர்தல்' என மூன்று சொல்லாகப் பிரித்து, 'முன்னே தலைவிக்குந் தலைவற்கும் உண்டான உறவாகிய இயற்கைப் புணர்ச்சியினை யுணர்தல்' என்று பொருளுரைத்துக்கொள்க ; "முன்னுற்றதனை யுணர்தலானே இதற்கு முன்னுறவுணர்தலென்று பெயராயிற்று" என்றார் பேராசிரியரும், (திருக்கோவையார், ௬௨).

மலைநிவந்தது என்னப் பொலியும் - மலை உயர்ந்த தன்மைத்து என்னும்படி விளங்குகின்ற, எயில் ஒற்றிச் செவ்வேள்மேல்-மதில்களையுடைய திருவொற்றியூரில் திருக்கோயில் கொண்டருளிய முருகப்பெருமான்மேல், மன்னும் கருத்து உடைய மாது-நிலைபெற்ற உள்ளம் உடைய தலைவி, நிலையும் திரிந்து - பெண்மை நிலையும்மாறி, நிறையும் கடந்து - மனத்துள்ள மறைபொருளையுந் தன்வய மின்றியே வெளிவிட்டுச் சொல்லி, தலையும் கவிழ்ந்த தகையள் - பின் அது சொல்லினமை நினைந்து நாணத்தால் தலையுங் குனிந்த தன்மையளாவள்,

செவ்வேண்மேன் மன்னுங் கருத்துடைய மாது தலையுங் கவிழ்ந்த தகையளென்க.

நிலைதிரிதலாவது, பெண்மையெனப்படும் நாணம் மடம் அச்சம் பயிர்ப்புகள் தன்வய மின்றியே மாறுதல்,

நிறை, உள்ளத்துள்ள மறைவினைப் புலப்படாது நிறுத்துதலென்பது.

தலைவி, மறைவிலொழுகிய களவொழுக்கத்தால் நிலையும் நிறையுங்கடந்து நாண்மிக்குத் தலையுங் கவிழ்ந்ததகையளாயினளென்க.

உம்மைகள், எச்சம்.

மலை : உவமை ; நிவந்த, உயர்ந்த ; "ஓங்கிய வொரு குடை யுருகெழு மதியி னிவந்து" என்பர் ஆசிரியர் கோவூர் கிழாரும் (புறநானூறு, ௩௧).

மேல் : ஏழாம்வேற்றுமை இடப்பொருளது.

'மன்னும்' நிலைபேறுணர்த்தும் மன்னென்னும் இடைச் சொல்லடியாகப் பிறந்த செய்யு மென்னும் வாய்பாட்டுப் பெயரெச்சவினை (௬).

## ௯. பிரிவாற்றாத தலைவிக்குத் தோழி கூறல்

மாதே - என் அருமைத் தலைமகளே, பெரிதும் வருந்துவது என்னை - நீ மிகவுந் துன்புறுவது ஏன், மனம் திரிதல் ஏது அன்னை அறியின் கொடுமையன்றே-நினது நெஞ்சந் திரிதற்கான ஏதுவைத் தாய் அறியுமானால் தீங்கு நேருமன்றே, ஈர்ம் பொதும்பில்-குளிர்ந்த பொழிலில், சூது ஏய் துணைமுலை ஆகம் தழுவித் துயர்மிகுத்த-சூதுக்காய்களை மாறுபடுக்குங் கொங்கைகள் நெருங்கிய நின்மார்பை அணைந்து இத்துன்பத்தை விளைத்த, போது ஏர்பொழில் ஒற்றிச்செவ்வேள் - மலர்களின் அழகு விளங்குகின்ற சோலைகள் சூழ்ந்த திருவொற்றிப் பெருமான், வரையப் புகுந்தனன்-வரைதற்கு வந்துவிட்டனன்; எனவே நீ வருந்தற்க வென்பது.

மனந் திரிதலேது, ஏதுப் பொருளின் வரும் நான்கனுருபும் பயனும் விரித்துக்கொள்க.

ஓகாரம், வினு; ஈது அறிபொருள் வினுவின்க ணடங்கும். இளம்பூரணர் இன்னோரன்னவற்றை 'அறிவொப்புக்காண்டல் வினு' என்பர். இவ்வியல்புகளெல்லாம் "செப்பும் வினுவும் வழாஅ லோம்பல்" என்னுந் தொல்காப்பியர் சொல்லதிகார நூற்பா (கங)வுக்குப் போந்த இளம்பூரணர் சேனாவரையருரைகளிற் கண்டுகொள்ளப்படும்.

அன்னை, ஈண்டு நற்ருய்; அன்றிச் செவிலித்தாய் எனினும் அவரிருவரெனினும் அமையும்.

பொதும்பெனப்பட்டது, மரச்செறிவு மிக்க சோலையாதலின்; ஈண்டுக் கூறப்படும் ஆகந்தழுவிய செய்தி குறியிடத்து நிகழ்ச்சியை யுணர்த்துகின்றமையான், அந்நிகழ்ச்சிக் கேற்பப் பொதும்பு கூறப்பட்டது. இப் பொதும்பினியல்பை நல்லிசைப்புலமை வாய்ந்த ஆசிரியர் நக்கீரனார்,

"சந்தனமுஞ் சண்பகமுந் தேமாவுந் தீம்பலவும் ஆசினியும் அசோகுங் கோங்கும் வேங்கையுங் குரவமும் விரிந்து, நாகமுந் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும் பைங் கொன்றையொடு பிணியவிழ்ந்து பொரிப்புன்கும் புன்னுகமும் முருக்கொடு முகைசிறந்து, வண்டறைந்து, தேனூர்ந்து, வரிக்குயில்க ளிசைபாடத், தண்டென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவுசெய்யும் பொழில்" என்றும்,

"வண்டுந் தும்பியும் வரிக்கடைப் பிரசமுங் கொண்டு புணர் நரம்பென்று முரன்று, ஐந்து வாயிலானுங் கொள்ளப்படுந் துப்புரவினைத் தன்னகத்துடைத்தாய்ப் பலவகைப் பட்ட மரங்களானும் பொலிவுடைத்தாய்ப், புறத்தார் அகத்தாரைக் காண்பதரிதாய், அகத்தார் புறத்தாரைக் காண்ப தெளிதாய் விழைவு விடுத்த விழுமியோரையும் விழைவு தோற்றுவிக்கும் பண்பிற்று" (இறையனரகப் பொருள், உ,சஅ). என்றும் மிக அழகாக உரைத்து விளக்குகின்றமை இங்குப் பெரிதும் நினைவுகூர்ந்து மகிழற் பாலதாகும்.

ஏய், உவமவுருபு; "கஞ்சுகமேய்க்குங் கனங்குழையே" (திருக்கோவையார், சகு) என்பதிற்போல.

'போது' காலவாகுபெயராய் மலரை யுணர்த்திற்று.

'புகுந்தன' னென்றது, இனிப் புகுவானை; இங்ஙனங் கூறினள், புகுதலின் விரைவு உணர்த்தித் தலைமகளைத் தேற்றுதற்பொருட்டு; விரைவின் குறிப்புத் தோன்ற இறந்த காலத்தின் வைத்து இவ்வாறு கிளத்தலெல்லாம் "வாராக் காலத்து" (தொல்காப்பியம், வினையியல், சகூ) மென்பதனான் முடிக்கப்படும்.

ஏகாரங்கள் மூன்றனுள் முன்னது விளியெனவும் ஏனைய அசைகளெனவுங் கொள்க.

## எ. இளநலனுரைத்தல்

அடிகள், தமக்குச் சமயநூலுண்மைகள் அறிவுறுத்த சமயாசிரியரையே 'இனநலன்' எனக்கொண்டு, அவரது சார்பால் தமக்குத் திருவருளுணெறிசாரும் வாயில் வாய்த்தமை இதன்கண் உரைத்தருளுகின்றார்.

(க-உ) புகல் அரு நூழையில் - புகுதல் அருமையான சிறிய நுழைவாயிலில், போக்கு அரும் பொருள்போல் - நுழைத்தல் அருமையான பெரிய பொருளைப்போல், இகல் அறு சைவத்திறம் செலா நெஞ்சினர் - மாறுபாடற்ற சைவக் கோட்பாடுகள் ஏறுத நெஞ்சினை யுடையவரும்;

'புகலும், போக்கும்' தொழிற்பெயர்கள்; இகல்: தொழிலாகு பெயர்; நுழையும் வாயில் 'நூழை' யெனப்பட்டது; இப்பொருட்டாதல் பிங்கலந்தை (ச)யிற் காண்க.

சைவசமயம் ஏனைச் சமயங்களொடு மாறுபடாமல், அவையனைத்தையுந் தனக்கு உறுப்புக்களாகக் கொண்டு அவற்றொடு பொருந்தியமைதலின், 'இகலறு சைவம்' எனப்பட்டது; இவ்வரிய உண்மை,

"ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னி
னிதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி

நீதியினு னிவையெல்லா மோரிடத்தே காண
நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூ
லாதலினு லிவையெல்லா மருமறையா கமத்தே
யடங்கியிடு மவையிரண்டு மரனடிக்கீ ழடங்கும் ''

எனச் சிவஞானசித்தியா (அ, கங) ரென்னுஞ் சைவசமய நூலில் தெளிவாய் எடுத்தோதப்படுதல் காண்க. ஈதுணரமாட்டாப் பிறசமயத்தார் சைவசமயந் தத்தஞ் சமயங்கட்கு மாறுவ தென்று பிழைபடக்கருதி, அதனை ஏலாதொழிவராகலின், அவர் கருதுமாறுபோற் சைவசமயம் அத்தன்மைய தன் றென்று இங்குத் தெளிவாய் உணர்த்தியவாறு.

'திற'மென்னுஞ் சொல் ஈண்டுச் சைவசமயத்தின் பொருட் கூறுபாடு குறித்து நின்றது; திறம் - கூறுபாடு; ''நிற்றிறஞ்சிறக்க'' என்றார் புறத்தினும் (கூ).

'செலா நெஞ்சின' ரென்றது, நுண்பொருள் செல்லுந் தகுதியற்ற பருப்பொருணினைவினை யுடையா ரென்றற்கு.

(கூ-ச) நெறிப்படு மக்கட்கு - வழிச்செல்லும் மக்கட்கு, அறிவு பேதுறுக்கும்-அவரறிவை மயங்கச் செய்கின்ற, கவலை யின்-கவர்த்த வழியைப்போல், பிறரை மயக்குநர் - பிறரை மயங்கச் செய்கின்றவரும்,

'நெறிப்படுமக்கள்' என்னுங் குறிப்புச் சைவநெறியி லொழுகா நிற்குஞ் சைவநன்மக்களைக் குறித்தது; பிறரை என்றதும் அவரையே; ஈது அதிகாரத்தாற் பெறப்படும். 'கவலை' யென்றது ஈண்டுச் சமண சமயத்திற்குவமை. மேல் வருவனவும் அன்ன.

'பேதுறுத்தல்' அறிவை மயங்கச் செய்தல்.

'மயக்குநர்' என்பதில் நகரவொற்றுப் பெயரிடை நிலை.

(ச-கு) உவல் இடு பதுக்கையின் - தழைகள் பெய்து மூடப்பட்ட கற்குவியல்போல், புன்பொருள் அகத்து இடு கரவினர்-இழிந்த கருத்துக்களை நெஞ்சினுள் இட்டுவைத்த கள்ளமுள்ளவருமான,

'உவல்' தழையென்னும் பொருட்டாதல் புறநானூற்றிற் காண்க. (உசுஉ).

'பதுக்கை,' மறைப்பிடம்; பதுக்கிவைத்தலின் வந்த தொழிலாகு பெயர்; வழிப்பறிகாரர் தம்மாற் கொல்லப்பட்டார்மேற் கற்களைக் குவித்து அக்குவியல்மேல் தழை பெய்து மூடிவைக்கும் உண்மை,

"செந்தொடை பிழையா வன்கண் ஆடவர்
அம்புபட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கை"

என்னும் புறநானூற் (ங)றினலும் பெறப்படும்; பதுக்கை அகத்துக்கு உவமை.

பொருளென்றது, கருத்து; "நிற்பெறு பொருளில்" என்று மேல் (ஙக) வருதலுங்காண்க.

(சு-கங) புனைமாண்கோதை பொருந்தச் சூட்டியும்-புனைதல் மாட்சிமைப்பட்ட பூமாலையைக் கூந்தலுக்குப் பொருந்துமாறு சூட்டியும், வினைமாண் விளங்கு இழை வீறுபடத் திருத்தியும்-தொழில் நலஞ் சிறந்த ஒளி விளங்கும் மணிகளிழைத்த அணிகளைத் தனிச்சிறப்புண்டாகத் திருத்தமாய் அணிந்தும் கொழுங்கயல் மழைக்கண் பிறழ்தொறும் மனம்திரிந்து-கொழுவிய கயல்மீன்களையொத்த குளிர்ந்த கண்கள் புரளுந்தோறும் அறிவுமயங்கி, செழும் துவர்ச்செவ்வாய் முத்தம் கொண்டு-செழுவிய பவளம்போன்ற சிவந்த வாயின் முத்தம் பெற்று, நசை பிறக்கிடாது - வேட்கை பிற்படாமல், முலைதழீஇச் செல்லும் நெஞ்சு அமர் காதலர் பின் செலும் மடவார்-முலையணைத்துப் பிரிந்து பிறகு முன்னே செல்லும் நெஞ்சு விரும்பிய தம் காதலரின் பின்னே உடன் செல்லும் மகளிருடைய, பஞ்சின்மெல் அடி-பஞ்சைப் போன்ற மெல்லிய அடிகள், பைதல் உற்று உழப்ப-துன்பம் அடைந்து வருந்தும்படி, உறுத்துக் கிழிக்கும் பரல் கெழு முரம்பின்-குத்திக் கீறும் பருக்கைக் கற்கள் நிரம்பிய மேட்டு நிலத்தைப் போல்;

புனை: முதனிலைத் தொழிற்பெயர்.

நசை, இங்கு வேட்கை; "நந்நசை வாய்ப்ப" என்னும் அகநானூற் (உஉ) றுரையில் இஃதிப் பொருட்டாதல் காண்க.

'நெஞ்சமர் காதலர்' என்பது உள்ளம் விரும்பிய காதலரை; "முகத்தான் அமர்ந்தினிது நோக்கி" என்னுந் திருக்குறளிற் (கூஉ) போல.

'பஞ்சின், முரம்பின்' என்னும் ஐந்தனுருபுகள் ஒப்புப் பொருளன.

பைதல், துன்பம்; "பதிமருண்டு பைதலுழக்கும்" என்பது (திருக்குறள்) (கஉஉக),

தலைவன் தன்தலைவியைப் பிரியுங்கால், அவன்அவட்குக் கோதைசூட்டி, இழைதிருத்தி, முலைதழீஇச் செல்லும் இவ் வியல்புகளெல்லாம், "வலிமுன்பின் வல்லென்ற" வென்னும் பாலைக்கலியில் நன்கெடுத்துரைக்கப்படுதல் காண்க.

பரல்கெழு முரம்பு மடவாரடிகளை வருத்து மியல்பின தாதல்,

> "ஒளிச்செஞ் சீறடி யுருக்கரக் கேய்ப்ப
> உளித்தலை வெம்பர லூன்றுபு நலிய"

வெனவரும் பெருங்கதை (ருஉ: கசுஉ-ச) யடிகளால் நன் குணரப்படும்.

(கச-உக) புலி அதள் உடுக்கை தைஇ-புலியின் தோலாகிய உடையினை உடுத்து, வலிகெழு மூஇலை வடிவேல் ஒருவயின் விளங்க - வலிமை பொருந்திய மூன்று இலைகளைப் போன்ற வடிவமைந்த கூர்வேல் ஒருபக்கத்தே தோன்ற, கொன்றை நனை பிணைத்த மன்றல் அம்தொடலை-கொன்றை முகைகளைத் தொடுத்துக்கட்டிய மணம்பொருந்திய அழகிய மாலை, பவளமலை உறழும் மார்பில்துவள-பவளங்களாலான மலையை ஒக்கும் சிவந்த மார்பிற் புரண்டசைய, மலைதரு மடந்தை குறங்கின்மிசை இருந்து-மலையரசன் ஈன்றெடுத்த உமைப்பிராட்டியார் தமது தொடையின்மேல் அமர்ந்து, வலம்படுகையால் பெரும்புறம் கவைஇ-வலிமை பொருந்திய வலக்கையால் அகன்ற முதுகைத் தழுவி, உலம்படு திரள்

தோள் ஒருமுலை ஒற்ற-உருண்ட கல்லுக்கு நிகரான திரண்ட தோளை ஒருபக்கத்துக் கொங்கையால் நெருங்க, நரை ஏறு ஊர்ந்த புரைசால் தோற்றம் நினைதொறும்-வெண்ணிறமான விடையின்மேல் ஏறிய உயர்வுமிக்க சிவபிரானது தோற்றத்தை எண்ணுதொறும், குழையும் உரவோர்க்கு - நெஞ்சுருகும் அறிஞரான சைவர்க்கு, வைகலும் கேடுபுரி நெஞ்சின் பீடுஇலா அமணர்-நாளுந் தீமைசெய்யும்நெஞ்சையுடைய பெருமையில்லாத சமணர்கள்;

அதள் - தோல்; உடுக்கை : தொழிலாகு பெயர்.

தைஇ, அளபெடை இசைநிறைத்தற் பொருட்டாய் வந்தது; "ஈகைக்கண்ணி யிலங்கத் தைஇ" என்புழிப் (புறநானூறு, ௩.இ௩) போல.

'வலம்படு கையாற் பெரும்புறங் கவைஇ' யென்னுங் குறிப்பால் உமையம்மையார் சிவபிரானது இடப்பக்கத்துத் தொடைமிசை அமர்ந்திருத்தல் உணரப்படும்.

'உலம்படு திரடோள்' என்னும் வழக்கு "உலந்தரு தோளினுய்" எனச் சீவகசிந்தாமணியிலும் (நாமக, கஎ௫) வருதல் காண்க.

'புரை' ஈண்டு உயர்வின்மேலது; "அரசு வீற்றிருந்து புரையோர்ப் பேணி" (உ௫:அக) என்பது மணிமேகலை.

'நெஞ்சினர், மயக்குநர், கரவினர், சமணர்' எனத் தொடர்ந்து கொள்க.

'பரல்கெழு முரம்பின்' (க௩) கேடுபுரிநெஞ்சிற் பீடிலா வமணர்' என ஈண்டுக் கூட்டியுரைத்துக் கொள்க.

(உச-உக) பீடு உயர் செந்தமிழ்க்கூடலில் தோன்றி - பெருமை மிக்க செந்தமிழ்மொழிப்பயிற்சி விளங்கிய மதுரை மாநகரிற் புதிது வந்து, பொய்படு புன்பொருள் கான்று இருள் பரப்பி-பொய்ம்மை நிரம்பிய தம் புல்லிய சமண்கோட்பாடுகளைக் கக்கி எங்கும் இருளைப் பரப்பி, மெய்தரு சைவ நல்நெறி பிழைப்ப-மெய்ம்மை பொருந்திய சைவம் எனப்படும் நல்வழி தவறி, மாணுவழிப்படூஉம் கூன்பாண்டியன் முதல்—

சிறவாத தீயவழியில் அகப்படுங் கூன்பாண்டியன் முதலான, ஆறுசெல்மாக்களைச் சூறைகொண்டு எறிந்து - வழிச்செல்லும் மாந்தரை வழிபறித்து ஊறுசெய்து, பெரும்துயர் உறுக்குங் காலை மிக்க துன்பத்தை விளைக்கும் பொழுது;

கூடலில் தமிழ்ச்சங்கங்கள் நிறீஇப் புலவர் பெருமக்கள் தமிழாராய்ந்து வந்தனராகலிற் 'பீடுயர் செந்தமிழ்க் கூடல்' என்று மதுரை சிறப்பிக்கப்பட்டது. மதுரைக்கு உரிய ஏனைச் சிறப்புகளினுந் தமிழாராய்ந்த சிறப்பே அதற்குப் பெருஞ்சிறப்பாகும். கூடன்மாநகரில் தமிழாராய்ந்த பெருமையை மாணிக்கவாசகப்பெருமானும் "உயர்மதிற் கூடலினாய்ந்த ஒண்டீந்தமிழ்" (திருக்கோவையார், ௨0) என்றருளிச் செய்தல் காண்க.

சமண்கோட்பாடுகள் 'பொய்படு புன்பொரு' ளெனப் பட்டன. அவை கடவுட்கோட்பாட்டின் வழிப்படாமையின்; அங்ஙனமே சைவசமயமும் 'மெய்தருசைவ' மெனப்பட்டது; என்னை? அது கடவுட்கோட்பாட்டையே தனக்கு உயிரெனக் கொண்டு நிற்றலினென்பது.

சமணரை முன் 'முரம்பு' என்றுரைத்தமையிற், சைவ சமயங்கள் 'ஆறுசென்மாக்க' ளெனவும், அவர்கள் சைவ மொழுகுதலைத் தடைசெய்து நெறியல்லா நெறிபுகுத்தி ஊறு செய்தல் 'இருள்பரப்பி நெறிபிழைப்பச் சூறைகொண் டெறித' லெனவும் ஏற்றபெற்றி இங்கு உருவகஞ் செய்யப் பட்டன.

இனி 'முரம்பின் (௧௲) துயருறுக்குங்காலை (௨௧)'யென வினைமுடிவு செய்தல் ஒக்குமெனின், அஃதமையாது; ஏனென்றால், 'பின்செலு மடவார் (௧௧) குழையுமுரவோர்க்கு (௨௨)' உவமையாதலினென்பது.

(௨௧-௩௧) அருந்தவம் நின்பெறுபொருளின் பல்பகல் ஆற்றி-நின்னைத் தமக்கு மகவாகப் பெற்றெடுக்கும் நோக்கத்தால் அரியதவத்தைச் சிவபாதவிருதயர் பலநாளும்-இயற்றி வேண்டிய பெரியோர்க்கு வேண்டியாங்கு அளிப்ப-விரும்பிய சான்றோர்க்கு அவர் விரும்பியவாறே வேண்டுவன ஈய,

கருக்குழிக் கிடக்கும் தன்மையை அன்மையின் - கருப்பை என்னுங் குழியிற் கிடந்து வருந்தும் இயல்புடையை அல்லையாகலின், உருப்பெற வருகுநை போல - உருவுண் டாக இம்மண்ணுலகில் எழுந்தருளுவோய் போல, அவர் அகத்து ஒரு பெருமாயம் பெருகுறச்செய்து - அவர் மாட்டுக் கருவிலமர்ந்தாற் போல் ஒருபெரிய மாயச்செய்கையை மிகவுஞ் செய்து காட்டி, புறம்பெயர்ந்து எய்தி-அவர் மடி யகத்தினின்றும் வெளிப்போந்துவந்து, அறம் தருபெரு மைச் சண்பையில் தோன்றினை - அறத்தைப் பிறர்க்கு அருளும் பெருமையினையுடைய சண்பையென்னுந் திருப் பதியில் தோன்றியருளினை;

பகல் நாள்; ஆற்றலோடு இயற்றுதலின், 'ஆற்றி' யெனப்பட்டது. 'அவ' ரென்றது, இங்குச் 'சிவபாதவிருதய' ரும் அவர்தங்கற்பிற் சிறந்த காதன் மனைவியார் பகவதியாரு மென்க.

வினையினீங்கிய முழு முதலிறைவனை முருகப்பெருமான் பிறவியுட்படும் இயல்பினன் அல்லனாகலிற், பகவதியார் மணிவயிற்றிற் கருத்தங்கி உருப்பெற்றது ஈண்டு ஒரு மாயமாகக் கிளந்துரைக்கப்பட்டது. எல்லாம் வல்ல முருகப் பெருமானே திருஞானசம்பந்தராய்ப் பிறந்தருளினரென்பது புராணவழக்கு.

"பூதல மதனிற் காழிமா நகரிற்
புண்டரீ கன்றடத் தொருசார்
மாதவம் புரிவோன் முன்னிளங் கதிர்போன்
மதலையாய் வந்தனன் கந்தன்"

என்று சீகாழித் தலபுராணம் 'திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருவவதார வத்தியாயத்தில்' (கூ) இங்ஙனங் கூறுதல் காண்க.

'புறம்பெயர்ந்'தென்பது, ஈண்டுப் பிறத்தல்.

'சண்பை' யென்றது 'சீகாழி'யை; சீகாழிக்குரிய பன் னிரண்டு திருப்பெயர்களிற் 'சண்பை' யென்பதும் ஒன்றுதல்

"சண்பைநகர் வளர்காழி" (திருஞானசம்பந்தர் புராணம், ௧௪) திருத்தொண்டர் புராணத்தா லறியப்படும்.

'மாது, ஓ' அசைகள்.

(௩௬-௪0) பின்பு-அங்ஙனந் தோன்றிய பின்னர் மூன்று மாண்டிலொருநாள், கிண்கிணி ஒலிப்பத் தந்தை பின் சென்று-சதங்கை ஒலி செய்யத் தம் தந்தையின் பின்னே போய், தண் கழுநீரும் செம் தாமரையும் ஒருங்கு தலை மயங்கிய பெரும் தடமருங்கின் - குளிர்ந்த கழுநீர் மலரும் சிவந்த தாமரை மலரும் ஒன்றாய்க் கலந்து விளங்கிய அகன்ற திருக்குளத்தின் கரைப்பக்கத்தில், அரும்பெறல் தந்தையைக் தலைக்கூடினை-பெறலரிய தந்தையினை எதிர்ப்பட்டுக் கூடி யருளினை.

'கிண்கிணி' ஈரடுக்கொலிக்குறிப்பினால் வந்த காரணப் பெயர்.

'ஒருங்கு தலைமயங்குத' லாவது, ஒன்றோடொன்று பிரிவு தோன்றாமற் கலத்தல்.

தடமருங்கு, கரை; மருங்கின்கண் என நிற்கற்பாலது மருங்கினெனச் சாரியை நிற்க உருபுகெட்டது.

தந்தையென்றது, ஈண்டு இறைவனை; திருஞானசம் பந்தரை முருகப்பிரானென் றுரைத்தலின், அவர்க்குச் சிவ பிரான் தந்தையெனப்பட்டார்; மேலும் இங்ஙனமே கொள்க.

'தலைக்கூடுதல்' என்பது ஓரிடத்து ஒருங்கு கூடுதல்.

(௪0-௪௮) அதற்புறம்-அதன்பிறகு, முருந்துஉறழ் வெள் நகைப் பெரும்பெயர் அன்னை-மயில் இறகினடி முள்ளைப் போலும் வெள்ளிய பற்களையுடைய பெரிய புகழ்மிக்க திருவருட்டாயான உமைப்பிராட்டியார். கரும்பும் கனியும் பெரும் சுவைப்பாலும் திருந்திய தேனும் ஒருங்குறக்கூட்டி-கருப்பஞ்சாறும் பழச்சாறும் மிக்க சுவைபொருந்திய ஆவின் பாலுந் தெளிந்ததேனும் ஒன்றாய் விரவச்சேர்த்து, குழைத்து எடுத்து அன்ன - இளகுபதமாய்க் காய்ச்சியெடுத்தாற் போல, விழைவு அருமரபின் முலைபொழி அமிழ்தம்

வள்ளத்து ஊட்ட - வேட்கை தீராத சுவைத்தன்மையினை யுடைய தமது திருமுலையிற் சுரந்தொழுகிய பாலைப் பிராட்டி யார் பொற்கிண்ணத்தினால் ஊட்ட, பவளவாய் மடுத்துத் திவள் ஒளி சிறந்து - தமது பவளம்போன்ற செவ்வாயினால் உட்கொண்டு அசையும் ஒளியால் மிகுந்து, பழகுறு தந்தைக்கு மழவிடை அமர்ந்த தந்தையைத் தாயொடும் காட்டி-பழகுதல் பொருந்திய தந்தையாரான சிவபாதவிரு தயருக்கு இளைய ஏற்றின்மேல் எழுந்தருளிவந்த உரிய தந்தையாரான சிவபெருமானை அம்மையொடுஞ் சுட்டிக் காட்டியருளி;

முருந்து, பற்களின் வெண்மைக்குங் கூர்மைக்குஞ் சிறு மைக்கும் உவமை; இஃதிவ்வாறு உவமிக்கப்பட்டு வருதல், "முருந்தேரிளநகை" (துயிலெழுப், அஅ) என்னும் மணி மேகலையானும், "முருந்தேய்க்கு முட்போ லெயிற்றினாய்" என் னும் கலித் (அ) யானும் அறியப்படும்.

'பெயர்,' இங்குப் புகழ்; "பெரும்பெயர்த் தலைத்தாண் மன்பெருஞ்சிறப்பின் மாநிதிக்கிழவன்" என்னுஞ் சிலப்பதி காரத்திற் (கசு:அச) போலவென்பது.

குழைத்தெடுத்தலாவது, குழையக் காய்ச்சி யெடுத்த லென்க.

'வாய்மடுத்தல்,' உண்ணுதல்; "மதியுணர மகளென வாம்பல் வாய்மடுப்ப" வென்னும் பரிபாட லடியினும் (ம:எஅ) இப்பொருண்மை தெளியப்படும்.

'திவளொளி,' அசையும் ஒளி; "நிலந்திவள" என்னுஞ் சிந்தாமணி (கூ௨௨) யாற் பெறப்படும்.

சிவபாதவிருதயர் பழகுறு தந்தையெனப்பட்டார், அவர் சிறிது காலம் மட்டுமே தந்தையென உறவு பயிறலின்; அடிகள் சிவபெருமானை வாளாத் தந்தையெனக் குறித்தல் கொண்டு, அவரே திருஞான சம்பந்தர்க்கு உரிமைத் தந்தையாராவரென்பது இனிதுணரப்படும்.

(சஅ-இக) பின்றை-பின்பு, காண்தகு திருவிளையாடல்- காண்டற்குத்தக்க செயற்கருஞ் செயல்களை, மாண்தக -

மாட்சிமையுண்டாக, செய்திறம் அறியார் உய்திறம் நோக்கி-தவஞ்செய்தற்குரிய வகைகளைத் தெரியாதவர்கள் உய்யும் வகை கருதி, பல்பகல் இயற்றிய பின்னர்-பற்பல நாட்கள் செய்தருளியபின் ;

காண் : முதனிலைத் தொழிற்பெயர்; திருஞானசம்பந்தர் செய்தருளிய திருவிளையாடல்கள் ஒவ்வொன்றும் அறிவால் அளந்து காண்டற்குரிய அருமைபெருமை வாய்ந்தனவா மென்றற்குக் 'காண்டகு' வென அடைகொடுத்தோதப் பட்டது. "காண்டகு சிறப்பிற் கண்ணகி" யென்னுஞ் சிலப்பதிகாரத்துக்கு (உ, கூ) உரைகாரர் அடியார்க்கு நல்லார் 'காட்சி தகுஞ் சிறப்பினையுடைய கண்ணகி' யென்றுரைத்ததூஉம் இங்கு உற்றுநோக்கற்பாலதாகும்.

பிள்ளையார் செய்த திருவருட்செயல்கள் பிறர்க்கெல் லாஞ் செயற்கருஞ் செயல்களேயாயினும், அவர்க்கவை எளியவாதல் பற்றி, அடிகள் அவற்றைத் 'திருவிளையாட' லெனச் சுட்டி மகிழ்ந்தார். அவையாவன: 'பொற்றாளம் பெற்றமை, முத்துச்சிவிகையும் முத்துக்குடையும் முத்துச் சின்னங்களும் பெற்றமை, கொல்லிமழவன் புதல்விக்கு முயலகநோய் தீர்த்தமை, குளிர் காய்ச்சல் நீக்கியருளினமை, முத்துப்பந்தர் நிழற்றப்பெற்றமை, ஆயிரம்பொன் அடைந் தமை, வணிகனுக்குப் பாம்பின் நஞ்சு தீர்த்தமை, வாசிதீரக் காசு பெற்றமை, திருமறைக்கதவு அடைத்தருளினமை முதலி யன. இவற்றையெல்லாந் திருஞானசம்பந்தர் வரலாறு கூறுந் திருத்தொண்டர் புராணத்துட் கண்டுகொள்க.

'உய்திறம்' என்றவிடத்துத் திறம் வகை என்னும் பொருட்டு.

(கூச-கூரு) முன்படர்ந்து-முன்விரைந்து சென்று, அரும் தமிழ் ஆய்ந்த பெரும் தமிழ்க்கூடல்- அரிய செந்தமிழ்ச் சங்க மிருந்து ஆராய்ந்த பெரிய தமிழ்வளம்வாய்ந்த மதுரையின் கண்ணிருந்த, குலச்சிறை முனிவன் எதிர்கொளச்சென்று-குலச்சிறை யென்னுந் தவமுடையோன் தம்மை எதிர்கொண் டழைக்க அங்கு எழுந்தருளி;

முற்படர்ந்து, முற்சென்று; என்றது, நாளுங்கோளும் நல்ல வல்லவென அப்பர்பெருமான் தடுத்துந், திருஞான சம்பந்தர், திருவருட்டுணை இருப்பின் அடியார்க்கு எல்லாம் நல்லனவேயாமெனக் கூறிப் பாண்டிநாடு சென்றமை குறித்த தென்க.

கூடன்மாநகர்க்குச் செந்தமிழடை கொடுத்துச் சிறப்பிக்குமுண்மை 'பீடுயர் செந்தமிழ்க்கூட' லென்புழி (உச) யுரைக்கப்பட்டது.

'தமிழ்க்கூட' லென்று மீண்டுந் தமிழடை கொடுத்தது, தமிழ் வளர்ச்சிக்குக் கூடன்மாநகரே உரித்தாயிருந்தமை வலியுறுத்தற்கு. அன்றியுந், தமிழ்நாட்டு நகர்களுள் எல்லாச் சிறப்புகளாலுந் தலைமை பெற்று விளங்கினமையானும் சான்றோர்களானியன்ற செந்தமிழ்ப் பாட்டுகள் நிரம்ப உடைமையானுந், திருஞானசம்பந்தர் தேவாரம் முதலிய தமிழ்வேதங்கள் தன்மாட்டே அருள்நிகழ்ச்சிகள் வாயிலாய் மெய்ப்பிக்கப்பட்டமையானும் 'பெருந்தமிழ்க் கூடல்' எனச் சிறப்பிக்கப்பட்டது.

குலச்சிறை முனிவன், பாண்டிமன்னர்க்கு அமைச்சர்.

(கு௪-கூ௨) பால்கடல் பிறந்த சீர்த்திரு ஆகலின்-திருப்பாற்கடலில் தோன்றிய புகழ் பொருந்திய திருமகளாதலின், இருமுலைக்குடத்தின் ஒருவழி அடக்கி-அப் பாற்கடலிலிருந்த பால் முழுமையும் தன் இரண்டு கொங்கைகளென்னுங் குடங்களில் ஒருமிக்க அடக்கி வைத்து, மலைமகள் ஆதலின் முலைதரல் சுருங்க வள்ளத்து ஏந்திய சில்அமுது அருந்தி ஆறுவேட்கையின் வருவோன் இவன்என முலைமுகம் திறந்தவழி - சீகாழியின்கண் திருமுலைப்பாலூட்டிய உமையம்மையார் மலையரசன் புதல்வியாகலின் அவர்தம் திருமுலைகளிற் பாற்சுரப்புக்குறைய அவ்வாற்றால் அவற்றின்கண் இருந்தவரையில் ஒரு பொற்கிண்ணத்திற் கறந்தெடுத்த சிறிதான பாலைப் பருகி அதனால் அடங்காத பெருவேட்கையுடன் வருகின்றவன் இவனென்று தன்முலைகளின் காம்பு நுனிகள் வாய்திறந்த விடத்து, வழிப்போக்கிய பால்

கடல் ஊட்டிய பவளச் செவ்வாய்த் தென்னவன் தேவிக்கும் அத்திறந்த வழியே யொழுகச் செய்து தான் அடக்கிவைத் திருந்த பாற்கடல் முழுமையும் ஊட்டிய பவளத்தை யொத்த சிவந்த வாயிதழ்களையுடைய பாண்டியன் மனைக்கிழத்தியா ரான மங்கையர்க் கரசியாருக்கும், பொன்போல் புதல்வன் ஆயினை என்பது அறியத் தெருட்டி - பொன்னைப்போன்ற அரிய புதல்வனாயினை யென்பதை எல்லாரும் அறியும்படி தெளிவித்தருளி.

திருமாலின் கூறுன அரசன் றேவியாகலின், மங்கையர்க் கரசியார் 'திரு'வென உருவகப்படுத்தப்பட்டார்.

பாற்கடலிற் பிறந்தமையின் அரசியார்க்குப் பால் மிகுந் திருந்த தெனவும், மலையகத்துப் பிறந்தமையான் உமை அம்மையார்க்கு அது குறைந்திருந்த தெனவும், அங்ஙனங் குறைந்திருந்தமையால் அம்மையார் தம்மகத்திருந்த அச்சிறி தளவு பாலினையே வள்ளத்தேந்தி யூட்டினாரெனவும், அவ் வாற்றால் திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாலுண்ணும் வேட்கை தணியாராய் அவாமிக்குப் போந்தாரெனவும், அதுகண்டு திருமுலைப்பால் நிறைந்த பாண்டிமாதேவியார் முலைமுகந் திறந்து தானே பெருக்கெடுத்து வழிந்த பாலை அவர்க்கு வேண்டுமளவும் ஊட்டி வேட்கை தணிவித்தா ரெனவும், அதனாற் பிள்ளையார் அவ்வரசியார்க்கும் பொன் போலும் புதல்வராயினாரெனவும் ஆசிரியர் திறம்படக் கற்பித்துக் கூறினமை நுண்மாணுழைபுல மிக்க புலவரனை வரானும் பெரிதும் பாராட்டி மகிழற்பாலதாகும். மங்கையர்க் கரசியார்க்குத் திருமுலைசுரந்த உண்மை,

> "சுரந்த திருமுலைக்கே துய்யசிவ ஞானஞ்
> சுரந்துண்டார்; பிள்ளையெனச் சொல்லச்-சுரந்த
> தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
> மனமுடையாள் அன்பிருந்த வாறு"

என்னும் திருக்களிற்றுப் படியாராலும் (௯௪) இனிது தெளியப் படும்.

'சில்லமுது' சிறிதளவான அமுதென்க; "தேனெனப் பாலெனச் சில்லமிர் தூற்றென" என்னுஞ் சீவகசிந்தாமணி

யினும் (நாமக, ௪௯௬) இஃதிப்பொருட்டாய் வருதல் அறியற்பாற்று.

'வேட்கையின்' என்றவிடத்து, இன் ஒடுப்பொருளது;

'பொன்போற் புதல்வன்' என்றது, பொன்னைப்போற் போற்றப்படும் புதல்வனென்றற்கு.

'சென்று, தெருட்டி' யெனத் தொடுத்துக் கொள்க.

(௬௨-௬௫) வழுதிகொண்ட முழுநோய் தீர பாண்டியன் நெடுமாறன் அடைந்த நோய் முழுமையுந் தீரும்பொருட்டு, அன்னை ஊட்டிய அமிழ்தை-உமையம்மையார் சீகாழியில் உண்பித்த திருவருட்பாலை, இன் உரைச்செந்தமிழ் ஆக்கித் தந்து-இனிய சொற்களால் தொடுக்கப்பட்ட செந்தமிழ்ப் பாட்டுகளாக இயற்றிக்கொடுத்து, அது கெடுத்து - அந் நோய் முழுமையும் நீக்கியருளி,

'நோய்' என்றது ஈண்டு 'வெப்புநோய்' முதலியவற்றை யென்க. சமணகுருமார் தீர்த்தற்கென்று பகுத்துவிடப்பட்ட உடம்பின் இடப்பாகத்து நோயையும் அவர் தீர்க்கமாட்டாமையிற் பிள்ளையார் தாமே தீர்த்தருளினமையொடு பாண்டியற்குப் பிறவிதொட்டே இருந்த கூனையும் நிமிர்த்திட்டமை தோன்ற, 'முழுநோய் தீர' வென்றார்.

அருட் கருத்துக்களைத் தமிழா லிசைத்தாரென்றற்கு, 'அமிழ்தைத் தமிழாக்கித் தந்து' என்றார். அது, நோய்.

(௬௬-௬௧) பால் படு பூதமும் மேல்படு பொருளும்-ஐந்து கூற்றிற்பட்ட முதற்பொருள்களும் அவற்றிற்கு மேற்பட்ட நுண்பொருள்களும், தன் வழிப்படுஉம் தன்மைய ஆகலின்-தன் நினைவின்வழியே நடைபெறும் இயல்புடையன வாகையால், தான் பிறிது ஆகல் வேண்டின்-ஒருகால் ஒருபொருள் பிறிதொரு பொருளாக மாறுதலைத் தான் திருவுளத்தெண்ணினால், தலைமயங்கி-அவை முன்னிலைமை மாறி, தம்தொழில் திரிந்து நந்தும் என்பதும்-தமக்கு இயல்பாக உள்ள தொழில்களும் மாறுபட்டுக் கெடும் என்பதும்;

'பாற்படு பூத' மென்றது மண் புனல் அனல் கால் வான் என்னும் முதற்பொருள்கள் ஐந்தும் ஐந்து வகையாகப் பிரிந்து நிற்றலை யுணர்த்திற்று.

'மேற்படு பொரு' ளென்று வேறு கூறினமையின், ஈண்டுப் பூதமெனப் பட்டவை தூவா மாயையிற் றேன்றி மண் முதலாக எண்ணப்பட்ட இப் பருப்பொருள்கள் ஐந்துமே யாம் என்பதும், இனிமேற் படுபொருள்க ளெனப்படுவன இவ்வைம்பெரும் பொருள்களுக்கும் வேருகத் தூய மாயைக் கட்டோன்றும் விந்துவும் நாதமும் முதலான நுண்பொருள் களாமென்பதுந் துணியப்படும். தான், இறைவன்.

(எம) இழித்துக் கொடுக்கப்படும் பொருள்களுஞ் செழித்துத் தோன்றுமென்பதும்;

இழிக்குமென்பது செயப்பாட்டு வினை.

(எக) முறையே நீரிலும் நெருப்பிலும் வைத்து ஒருபால் விளக்கிக் காட்டினை;

நீர், பாண்டிநாட்டின் வைகையாற்று நீர்.

நெருப்பு, திருஞானசம்பந்தப் பிள்ளையார் கட்டளைப்படி பாண்டியன் அரசவைக்குமுன் ஒரு தீக்குழியில் வளர்க்கப் பட்ட தீயாகும்.

நிகழ்ந்த முறையே இவற்றை நெருப்பினு நீரினுமென மாற்றிப் பொருளுரைப்பினுமாம்.

திறம், ஈண்டுப் பால்: பக்கம்.

நீரினும் நெருப்பினு மென்புழிச் சாரியைநிற்க உருபு தொக்கது. மேல் வருவனவற்றிற்கும் இஃதொக்கும்.

(எஉ) காயாத பனைமரத்திலும் எலும்பிலும்வைத்து மற் றொருபால் விளக்கிக்காட்டினை;

'பனை' யென்பது திருவோத்தூரிற் சிவனடியாரொருவர் வளர்த்த பனைகள்; அவை காயாத ஆண்பனைகளாய் நின் றன.

'என்பினு' மெனப்படுவது பூம்பாவையினெலும்பு.

நீரினுநெருப்பினுங் காட்டினை யொருதிறமென்பது, 'தந்தொழி றிரிந்து நந்துதலை' யெனவும், பனையினுமென்பினுங் காட்டினை மறுதிறமென்றது, 'இழிக்கும்பொருள் செழித்தலை' யெனவும் நிரனிறையாக வைத்துப் பொருளுரைத்துக்கொள்க.

பாண்டிமாநாட்டு மதுரைமாநகர்க்குச் சென்ற பிள்ளையார், தமக்கு மாறாய்நின்ற சமணகுருமார் விரும்பியபடி சொற்போரிலன்றி நிகழ்ச்சிப்போரிலும் வெல்வான் கருதி ஒரு தேவாரப்பாட்டெழுதிய திருவேட்டை எரியிலிட, அது வெந்தழியாமற் பச்சென்றிருந்தது. அங்ஙனமே பின்னும் அவர், மிகவும் விரைவாய் ஓடுகின்ற வையையாற்று நீரில் மற்றொரு தேவாரச் செந்தமிழெழுதிய ஏடுஇட, அது நீரோடும் வழியே செல்லாமல் எதிரேறி நீரைக் கிழித்துக்கொண்டு சென்றது. 'நெருப்பினு நீரினுங் காட்டிய ஒருதிறம்' இவையாம்; இவற்றால் நீருந் தீயுமென்னும் முதற்பொருள்கள் தலைமயங்கித் தந்தொழில்திரிந்து நந்தினமை காண்க.

இனிப், பாண்டிநாட்டை விட்டு நீங்கிப் பிற திருப்பதிகளையும் வணங்கிக்கொண்டுவந்த திருஞானசம்பந்தப் பிள்ளையார், தொண்டைநாடு போந்து திருவோத்தூரின்கண் எழுந்தருளியிருந்த ஞான்று, ஆண்டிருந்த சிவனடியாரொருவர் சிவபெருமானுக்காக வளர்த்துவந்த பனைமரங்களெல்லாம் ஆண்பனைகளாய் வளர்ந்து காயாவாய் நிற்ப. அதுகண்டு அவ்வடியாரொடு மாறுபட்ட அவ்வூர்ச் சமண் மாந்தரனைவரும் அவரை அதுவே ஏதுவாகக்கொண்டு இழித்துரைத்தார்; பிள்ளையார் அஃதறிந்து உடனே ஒரு தீந்தமிழ்த்திருப்பதிகம் ஓதி அவ்வாண்பனைகளெல்லாங் குரும்பைக் குலைகளுடன் பெண்பனைகளாக மாறித் தோன்றுமாறு செய்தார். பின்பு திருமயிலாப்பூரின்கண்ணுஞ் சிவநேசரென்னும் மெய்யன்பரொருவர் பாம்புகடித்தமையால் உயிர் நீங்கிய தன் அருமைப்புதல்வியின் உடம்பெலும்புகளை எடுத்து வைத்துக்கொண்டு திருஞானசம்பந்தரின் நல்வரவு

நோக்கியிருப்ப, அவரும் அங்கெழுந்தருளியக்கால் அந் நிகழ்ச்சியறிந்து அவ்வெலும்புகளைத் திருக்கோயிலின் முன்னர்க் கொணர்வித்து, அரியதொரு திருப்பதிகம் பாடிப் 'பூம்பாவாய்' என அழைத்து அத்திருமகளை எழுப்பியருளினார். 'பனையினும் என்பினுங் காட்டிய மறுதிறம்' இவையாம். இவற்றால், இழிக்கப்பட்டு நின்ற பனைமரங்களும் எலும்புகளும் பிள்ளையாரது திருவருளுக்கத்தாற் பெண்பனைகளாகவும் பூம்பாவையாகவுஞ் செழித்தமை தெளியப்படும்.

(எஉ-எகூ) இனியே-அதன்மேல், அறிவு ஓளி கொளீஇ-அறிவு விளக்கத்தை எல்லாருங் கொள்ளவைத்து, புரைநெறிப்பொய்ச்சமண் முறிய நூறி-குற்றம்பொருந்திய முறைமையினையுடைய பொய்யான சமண்மதத்தை இடையற்று விழத் துகளாக்கி, மெய்த்திறம் கிளக்கும் மெய்ப்பொருள் சைவம் மெய்வகைவிளக்கி-மெய்ப்பொருள் வகைகளைக் கிளந்துகூறும் மெய்ம்மையையே பொருளாக்கொண்ட சைவ சமயத்தின் கோட்பாடுகளை மெய்ம்முறைகளால் விளக்கிக் காட்டி, பரங்குன்று அமர்ந்தனை - திருப்பரங்குன்றென்னுந் திருப்பதியின்கண் எழுந்தருளியிருந்தனை;

கொளீஇ, கொள்ளச்செய்து; ஆவது விளங்கச்செய்தல்;

'புரை' யென்பது, பருப்பொருளறிவினர்க்கு உண்மைபோல் மேல்தோன்றிச், சிறிது நுண்ணறிவுடையராய் உள் நோக்குவார்க்கும் அங்ஙனம் ஏதோருண்மையும் உடையதன்றாய்ப் புரைபடுதலாகும். எனவே, அது 'பொய்ச்சமண்' எனப்பட்டதென்க.

'நூறுதல்' பொடிபடுத்தல், இடித்தல்; தேவாரத்திலும் "எழுதெழின் மாடத் திடனெலா நூறி" யென்னும் புறப்பொருள் வெண்பாமாலை (உழிஞை, உகூ)யிலும் இதற்கு இப்பொருள்கள் உண்மை காண்க.

திருப்பரங்குன்று; திருமுருகனது ஆறு படைவீடுகளுளொன்று; ஏனைய திருவாவினன்குடி (பழனி), திருவேரகம் (சுவாமிமலை), திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), குன்றுதோறாடல், பழமுதிர்சோலை யென்பனவாம்.

இந்நான்கு அருந்திறல் நிகழ்ச்சிகளுந் திருவருட் கோட்பாட்டால் இயற்கைக்கு வேருகவும் நிகழ்ந்தமையால், அத்திருவருட்கோட்பாடு வாயாத சமண்மதம் இவ்வாற்ருல் தானே அழிந்தொழியாநின்றதென் றறிந்துகொள்ளப்படும்.

உயிருடைப்பொருள்கள் அல்லாத நீரினுநெருப்பினுங் காட்டிய திறத்தை 'ஒருதிற' மென்று முன்ஞேதி உயிருடைப் பொருள்களிற் காட்டிய ஏனையிரண்டனையும் மறுதிறமெனப் பின்னேதினர் ஆசிரியர்.

(எகூ-அச) அது பெயர்ந்து - பின்னர்த் திருப்பரங்குன்றி னின்று நீங்கி, இரங்குவால் அருவி நிரம்பத்தோன்றும் ஆவி னன் குடியின் அசையினை-ஒலிக்கின்ற வெள்ளிய அருவி களின் வீழ்ச்சி குன்றெங்குந் காணப்படுந் திருவாவினன் குடியென்னுந் திருப்பதிக்கண் இருந்தனை; அதற்புறம் ஏரகத்து எழுந்தனை-அதன்பிறகு திருவேரகமென்னுந் திருப் பதியின்கண் எழுந்தருளினை; நேரிதின்-நுட்பமாக, ஒரு மொழிவைத்த உட்பொருள் விரிப்பத் திருவளர் தணிகை யின் அமர்ந்தனை-ஓமென்னும் ஒருமொழி தன்கட்பொதிந்து வைத்த உட்பொருள்களை விரித்து விளக்கும்பொருட்டுச் சிறப்புஓங்குகின்ற திருத்தணிகைமலையி லமர்ந்தனை.

'இரங்குதல்,' ஒலித்தல்; 'இரங்குவாலருவி' யென இதன் கண் வருமாறுபோல, "இலங்குவெள்ளருவி" (மதுரைக் காஞ்சி, உகக) யெனவும், "வால்வெள்ளருவி" (அகநானூறு கூ0அ) யெனவும் பழைய இலக்கியங்களில் வருதல் காண்க.

'அசைதல்' இருத்தலென்னும்பொருட்டு; 'ஆவினன் குடி யசைதலு முரியன்" (திருமுருகாற்றுப்படை, சஎசு) என்புழி நச்சினர்க்கினியருரைக்கும் உரையானும் ஈதறியப்படும்.

'நேரிதின் விரிப்ப' வெனக் கூட்டுக.

முருகக்கடவுள் தம் தந்தையாரான சிவபெருமானுக்கு 'ஓம்' என்னும் ஒரு மொழியை ஆசிரியர் முறையிலிருந்து செவியறிவுறுத்துதற் பொருட்டுத் திருத்தணிகை மேவினு ரென்பது.

(அக-கூசு) அதற்புறம் - அதன்பின், நின்கழல் கிடந்த அருகா அன்பின் - நினது திருவடிக்கட்பதிந்துகிடந்த கெடாத அன்பிறைல், சைவம் வளர்க்கும் மெய்வகை மரபின் - சைவ சமயத்தை நாடெங்கும் பரப்புகின்ற மெய்க்கூற்றின் கட்பட்ட முறைமையினுலே, உடல் பொருள் ஆவி உனக்கு என நிறுவி - தம் உடலும் பொருளும் உயிரும் உனக்கே உரிய வென நிறுத்தி, நின்குறித்து எழூஉம் அற்கும் இன்பத்து - அவ்வாற்ருல் நின்னைக் குறிக்கொண்டு எழுகின்ற நிலை யான இன்பத்திஞல், நின்பெயர் அல்லது பிறிதுஒன்று நவிலா - நினது புகழையல்லாமற் பிறரொருவர் புகழை நாவாற் கூருத, மன்பெரும் புலவோன் - மிகப் பெரிய புலமை யினையுடையவனும், தந்தையைக் காட்டும் தாய் எனப் போந்து நாயினுங்கடைய என்னையும் ஒருபொருள்படுத்து நின் இயல்பு ஒருதுறைப்புகுத்தி உரைக்கும் உரவோன் - ஏதும் அறியாத ஒருமகவுக்குத் தந்தையைக் காட்டி யுணர்த்துந் தாயைப்போல் எழுந்தருளிவந்து நாயினுங் கீழ்ப்பட்ட ஏழையேனையும் ஒரு பொருளாகத் திருவுளத் தடைத்து நின் எண்பெருங்குணங்களையும் யாம் அறியத் தக்கதொரு துறையிலே யமைத்து அறிவுறுத்தும் பேரறி வினையுடையவனும், சோமசுந்தர தேசிகப் பெயரின் ஏமுறவந் தோர்க்கு அருள - 'சோமசுந்தர' வாசிரியனென்னுந் திருப் பெயரோடு எல்லாரும் பேரின்பநெறியை அடையுமாறு தோன்றினவனுமான என் அருமை ஆசிரியனுக்கு அருள் செய்ய, காமுற்று - விரும்பி, பொருள் உடல் ஆவி பொருள் பெற வழங்கி - நின்பொருளும் உடலும் உயிரும் உண்மை நிலையிற் பொருந்தக் கொடுத்தருளி, வேண்டுழி எல்லாம் விரும்பி நின்று ஏத்த அவற்கு எளிவந்த தவப்பெருந் தன்மையை விரும்பியபோதெல்லாம் அவன் அன்பு கொண் டெழுந்து வழுத்த அவனுக்கு எளிதாய் வெளிப்போந்த மிகப்பெரிய அருளியல்பினையுடையையாய், ஒற்றியூர்ப் புகுந்து வைகினை - திருவொற்றியூரிற் போந்து அமர்ந் தருளினை;

'அருகா' கெடாத, இப்பொருட்டாதல், "பருகுவன்ன அருகா நோக்கமோடு" என்னும் பொருநராற்றுப்படை (எஎ) யுரையிற் காண்க.

மரபு-முறைமை; புறப்பொருள் வெண்பாமாலை (க, க) "தொல் குடிமரபின்" என்பதன் உரையைக் காண்க.

'அற்கல்,' நிலைபெறல்; "அற்கா இயல்பிற்றுச் செல்வம்" என்னுந் திருக்குறளைக் காண்க.

'என,' உவம உருபு.

திருவருணெறியின் கண்ணும் வீடுபேறு நண்ணும் உயிர்க்கு அம்மையே அப்பனைக் காட்டியருளு முண்மை,

"மாயநட் போரையும் மாயா
மலமெனு மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே
புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்றுபின் தாதையைக்
கூடிப்பின் தாயைமறந்து
ஏயும தேநிட்டை யென்றான்
எழிற்கச்சி யேகம்பனே"

என்னும் பட்டினத்தடிகள் (திருவேகம்பமாலை, ௩௦) திருமொழி யினுற் றெளியப்படும்.

'சோமசுந்தரவாசிரியன் தன்னுடைய உடல்பொருளுயிர் களை நினக்கே உரியவென வழங்கி அன்பு செய்தமையின், நீயும் அவனன்புக்கு உவந்து நின்னுடைய உடல் பொருளுயிர்களை அவனுக்கு வழங்கி அருள்காட்டினை' யென்னும் இவ்வன்புமுறை, "என், உடலுயிரா தியவெல்லாம் நீ யெடுத்துக் கொண்டுஉன் உடலுயிரா தியவெல்லாம் உவந் தெனக்கே அளிப்பாய்." என்னும் இராமலிங்க அடிகளின் (சு, பிரியேனென்றல், ரு) திருவருட்பாவினும் எடுத்துக் காட்டப் படுதல் இங்கு நினைவுகூரற்பாலது.

'சோமசுந்தரகுரவ' னென்றது, தமக்குச் சமய நுண் பொருள் செவியறிவுறுத்திய ஆசிரியரை.

தன்மையை: முற்றெச்சம்.

(௬௬-௭௦) முற்றவும் நின்பெருந்தன்மையை அறிந்து-முழுதும் நினது மேலான அருட்டகைமையைத் தெரிந்து, நின் அடி இரவொடு பகலும் ஒருவாது வணங்கி - நினது திருவடியை இரவொடு பகலுமாய் ஒழியாமல் வணக்கஞ் செய்து, நா தழுதழுப்ப ஏத்து உரை கிளந்து - நாக்குத் தழு தழுப்படையுமாறு வணக்கவுரைகள் சொல்லி, நெஞ்சம் நெக்குடைந்து-உள்ளம் உருகி, மெய்விதிர்விதிர்ப்ப பெறுவதற்கு - உடம்பு நடுநடுங்க அருள்பெறுதற்கு, எளியேன்-ஏழையேன், அரியென் ஆயினும்-அருமையுடையேனாலும், குவடுகெழு பெருநிறப் பொன்மலை அடைந்த கருநிறக் காக்கைக்கு உறுவதுஎன-குடுமி பொருந்திய மிக்க ஒளி வாய்ந்த பொன்நிறமான மலையை நண்ணிய கருநிறமமைந்த காக்கைக்கு அப்பொன்னிறமே பொருந்தல்போல, அவனொடு கெழூஉம் சார்பின் இவண் அது சிவணவும் பெருகுவென்-அச்சோமசுந்தர குரவனொடு சார்கின்ற சார்பினால் இங்கு அவ்வருணிலையை யடையவும் பெறுவேனென்பது.

நாத்தழுதழுத்தல், நாக்குழறல். நெக்குடைந்து, உருகி. விதிர் விதிர்த்தல், நடுநடுங்கல். சிவணல், பொருந்தல்.

'காக்கைக் குறுவதாலெனச் சிவணவும் பெறுகுவ'னென்று தொடரை மாற்றியியைத்துப் பொருளுரைத்துக் கொள்க.

'மெய்விதிர் விதிர்ப்பப் பெறுவதற்கு' என்பதன் இடையில் அவாய் நிலையால் அருள் என்னும் ஒரு சொல் வருவித்துரைக்க.

பெறுகுவென் என்பதிற் கு சாரியை. அன்று, ஆல், ஏ: அசைகள்.

மலையின் பொன்மை இறைவனருளுக்கும், காக்கையின் கருமை உயிரின் மலத்துக்கும் உவமையாம்; 'பொன்மலை யடைந்த கருநிறக் காக்கைக்குப் பொன்னிற முறுதல்போ'லென்றுரைக்க.

## அ. வள்ளன்மை கிளத்தல்

உறுபொருள் காணு வுணர்விலார் மாட்டுப்
பெறுபொருள் வேண்டல் பிழையா—னறுநெஞ்சே
யேந்துமுலை வள்ளி கொழுந னெழிலொற்றிப்
போந்து குடியிருக்கும் போது.

(இ - ள்.) நறு நெஞ்சே - நல்ல நெஞ்சமே! ஏந்துமுலை வள்ளி கொழுநன் - உயர்ந்து நிற்குங் கொங்கைகளையுடைய வள்ளியின் கணவனை ஆறுமுகன், எழில் ஒற்றிப்போந்து குடியிருக்கும்போது - அழகிய திருவொற்றித் திருப்பதியின் கண் எழுந்தருளிவந்து குடியாய் அமர்ந்திருக்கும்போது, உறுபொருள்காணு உணர்வு இலார்மாட்டு - தம்முயிரொடு வருவன நல்வினை தீவினையே யல்லாமல் வேறு அல்ல வென்று அறியமாட்டாத பகுத்துணர்வு கூடாதவர்களிடத்தில், பெறுபொருள் வேண்டல் பிழை - நீ அடைதற்குரிய பொருளை விரும்பிக்கேட்டல் குற்றமாகும்.

ஆகவே, எல்லாம் வல்ல ஆறுமுகப்பெருமானே நமக்கு வேண்டுவனவெல்லாம் உவந்தளிப்பானென்பது கருத்து; எனவே அவனது சிறந்த வள்ளன்மை கிளந்தவாறு மென்க;

"பொய்ம்மையாளரைப் பாடாதேயெந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
இம்மையேதருஞ் சோறுங்கூறையு
மேத்தலாமிடர் கெடலுமாம்
அம்மையேசிவ லோகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே"

என்னுஞ் சுந்தரமூர்த்தி நாயனரது தேவாரத் திருமொழியும் இங்கு நினைவுகூரற் பாலது.

'உறுபொருள்,' ஈண்டு நல்வினை தீவினை.

'பெறுபொரு' ளென்பதற்குச் சிறிது முயற்சியெடுத்தால் எவரானும் எளிதிலடைதற்குரிய செல்வப்பொருளென் றுரைப்பினுமாம்.

'நறுநெஞ்சே' யெனப்பட்டது, அறிவுறுப்பதை ஏற்குந் தகுதியுடைய நெஞ்சமென்றற்கு.

'ஏந்துத' லாவது, தாழாது உயர்ந்து அல்லது நிமிர்ந்து நிற்றல்.

இல்வாழ்வாரே எவர் எதை விரும்பினுலும் இல்லை யென்னுமல் அளிக்கு நிலையராகலான், இங்கு முருகப்பெருமானது வள்ளன்மை கிளந்தோதும் அடிகள் அவனை இல்வாழ்வானுகக் குறிப்பான் கருதிக் 'குடியிருக்கும்போது' எனக் கூறி மகிழ்வாராயினர். ஆல் : அசை.

## ௬. நலைமகள் தோழிக் கறத்தொடு நிற்றல்

போதாய்ந்து வெண்ணில வொக்கும்
    பொடி மணற் பூஞ்சிற்றிலொன்
றோதாயஞ் சூழ விழைத்தாடுங்
    காலை யொருவடிவேற்
சூதான காளை திருவொற்றி
    யீசர் துணைப்புதல்வன்
காதாருங் கண்ணி சிதைத்துநக்
    கோடிக் கரந்தனனே.

(இ - ள்.) காது ஆரும் கண்ணி - காதுகள் வரையில் நீண்டு நிறையுங் கண்களையுடைய தோழி!. போது ஆய்ந்து-மலர்களை ஆய்ந்து தெரிந்து, வெள் நிலவு ஒக்கும் பொடி மணல் பூம் சிறு இல் ஒன்று-வெள்ளிய நிலவினை யொத்த பொடிமணலால் அழகிய சிறு வீடொன்று, ஓது ஆயம் சூழ-மழலைமொழிகள் ஓதுகின்ற தோழியர் கூட்டங்கள் உடன் சூழ, இழைத்து-அமைத்து, ஆடுங்காலை-நான் விளையாடும் பொழுது, ஒரு வடிவேல் சூதான காளை-ஒரு கூரிய வேலை யுடைய வஞ்சகமான காளைப்பருவ முடையோனும், திருவொற்றி ஈசர் துணைப்புதல்வன்-திருவொற்றி நகரில் எழுந்தருளியிருக்குஞ் சிவபெருமான்றன் இரண்டாம் புதல்வனுமான ஆறுமுகன், சிதைத்து நக்கு ஓடிக் கரந்தனன்-அதனை அழித்து நகைத்து ஓடி ஒளித்தனன்.

போது ஆய்ந்தும் சிற்றில் இழைத்தும் விளையாடுதல் மகளிர் செயலாம்; போது ஆய்ந்த பின்னர் ஈண்டுத் தலைவி சிற்றில் இழைத்தாளென்று கொள்க.

பொடிமணல் வெளேலென்றிருத்தலின், அதனை நில வோடொப்பிட்டுக் கூறுதல் மரபு; "நிலவுமணல் வியன் கானல்" (புறநானூறு, கஎ) எனவும், "நிலாமணல்" (மணி மேகலை, அ, கக) எனவும் பழைய இலக்கியங்களில் வருதல் காண்க.

கண்ணி: இயல்பாய் நின்ற விளி.

சிறு பருவத்தில் தான் இழைத்தாடிய மணற்சிற்றிலைத் தன் காதலன் அழித்துக் குறும்பு செய்த இயல்பினைத் தலைவி தன் தோழிக்கு எடுத்துக்கூறி அறத்தொடு நிற்றல்,

> " சுடர்த்தொடீஇ கேளாய், தெருவினு மாடு
> மணற்சிற்றிற் காலிற் சிதையா வடைச்சிய
> கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
> நோதக்க செய்யுஞ் சிறுபட்டி "

என்னுங் கலித்தொகைக் கண்ணும் (குறிஞ்சிக்கலி, கடு) கூறப் படுதல் இங்கு நினைவு கூரற்பாலது.

"அறத்தொடு நிற்றலாவது: அறம் என்பது தக்கது; தக்கதனைச் சொல்லிநிற்றல் * * * அல்லதூஉம், பெண் டிர்க்கு அறமென்பது கற்பு, கற்பின்றலை நிற்றலென்ப தூஉமாம். இனித் 'தோழிக்கும் உரித்து' என்ற உம்மையால் தலைமகட்கும் அறத்தொடுநிலை உரித்தென்பது. அஃதா மாறு: இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தானும் பாங்கற்கூட்டங் கூடியானுந் தெருண்டுவரைந் தெய்தலுற்றுத் தமரைவிடும்; விட்டவிடத்து அவர் மறுப்ப; அஃது இலக்கணமாகலான். அங்ஙனம் மறுத்தவிடத்துத் தலைமகள் வேறுபடும்; எம்பெரு மான் மறுக்கப்பட்டமையான் மற்றொருவாருங் கொல்லோ வெனக் கலங்கி. வேறுபாடு எய்தின பொழுதே தோழிக்குப் புலனும்; புலனாயினவிடத்து எம்பெருமாட்டி, நினக்கு இவ் வேறுபாடு எற்றினான் ஆயிற்று? என்னும். என்றவிடத்து இஃதெனக்குப்பட்டது: இன்னவிடத்து நீயும் ஆயங்களுந்

தழையுங் கண்ணியுங் கோடற்கு என்னிற் சிறிது நீங்கினுய்; யான் நின்று ஒரு மணிச்சுனை கண்டேன்; கண்ட அம் மணிச்சுனைதான் ஆம்பலே குவளையே நெய்தலே தாமரையே என்றிப் பூக்களால் மேதக்கது கண்டு வேட்கையான் ஆடுவான் இழிந்தேன்; இழுக்கிக் குட்டம் புக்கேன்; புக்குத் தோழியோவென, நீ அங்ஙனங்கேளாயாயினுயாக, ஒரு தோன்றல் தோன்றிவந்து எனது துயர் நீக்குதற்காகத் தன் கை நீட்டினுன்; நீட்டினவிடத்து மலக்கத்தான் நின்கை யெனப் பற்றினேன்; பற்ற வாங்கிக் கரைமேல் நிறீஇ நீங் கினுன்; நீ அன்று கவலுதியெனச் சொல்லேனுயினேன்; நீ எவ்வெல்லேக்கண்ணுங் கைவிடாதாய் அஞ்ஞான்று கைவிடலினை ஆக்கிற்று விதியாகாதே? இனிப். பிறி தொன்ருங்கொல்லோ வெனக் கலங்கி வேறுபட்டே னென்று தோழிக்குத் தலைமகள் அறத்தொடுநிற்கும்'' என்று ஆசிரியர் நக்கீரனுர் உரைத்த உரையால் (இறையனுரகப் பொருள், உக ஆஞ்சூத்திரம்) அறத்தொடு நிற்றல் இன்ன தென்றுணர்ந்து கொள்க.

## கo. ஒப்புமை கூறி அருணிலே வேண்டல்

இதன்கண் அடிகள் தமக்கும் இறைவனுக்குஞ் சில கற்பனை ஏதுக்கள் கொண்டு ஒப்புமைகூறி, அவ்வொப்புமை யுண்மையின் அவன் தம்பாற் கேண்மைபொருந்தி அருள் தரல் இயையுமென வழக்காடி அருணிலே வேண்டல் கூறப் படுகின்றது.

(க-௩) கரவு அறு மாந்தர்க்கு விரவுறுபழியின்-கள்ளம் நீங்கிய சான்ருேர்பாற் கலந்து தோன்றும் பழியைப்போல், மறுவொடு விளங்கும் நிறைகதிர் மதியம்-களங்கத்தொடு விளங்கும் நிறைந்த கதிர்களையுடைய முழுநிலா, வெண் கதிர் விரிக்கும் தண்என்காலே-வெள்ளிய ஒளியை எங்கும் விரிக்கின்ற குளிரும் முன்னிராப் பொழுதில்;

கரவென்றது, இங்குக் கள்ளத்தனமான தீய எண்ணங்களை; மாந்தர்க்கு: வேற்றுமையுருபு மயக்கம்.

சான்ஞேர்மாட்டுக் காணப்படுங் குற்றமே யார்க்கும் விளங்கித் தோன்றுதல்பற்றிக் கரவறுமாந்தர் தம்பழி உவமை கூறப்பட்டது. இங்கு உவமையும் பொருளுமாக வந்த மாந்தரும் மதியமும் முறையே பொருளும் உவமையுமாகவே வரல் வழக்காம்; ஏனெனிற், கரவறு மாந்தரினும் மறுவொடு விளங்கு மதியமே எவர்க்கும் விளக்கமாய்த் தெரிந்த தொன் ருதலினென்பது; மற்று அவை இங்குப் பொருள் உவமமாகவும் உவமம் பொருளாகவும் வழக்கிற்கு மாருக வழங்கப்பட்டுள்ளன; இங்ஙனம் மாறி வழங்குதலெல்லாம் இலக்கியச்சுவை மிகுத்தற்காம்; இன்ஞேரன்னவற்றைப் பிற்காலத்தார் 'விபரீதவுவமை' (தண்டியலங்காரம், பொருளணியியல், உ, ௧௪) யெனக் கூரு நின்றனர். விரவுறல், ஒருசொல்.

(௪-௭) புலவுமணம் கமழும் பாக்கத்து - புலால் நாற்றம் நாறுஞ் செம்படவர் சேரியில், நலம் கெழு தெரிவு இல் மாக்கள் புரிதிமில் புகுந்து - நன்மைமிக்க பகுத்தறிவு இல்லாத செம்படவர் கட்டுகள் அமைந்த தோணியில் ஏறி, நிரை நிரைவகுத்த வகை அமை விளக்கம்-வரிசைவரிசையாகப் பகுத்துவைத்த முறையமைந்த விளக்குகள், வானமீனின் வயின் வயின் இமைப்பவும் - விண்மீன்களைப் போல் இடந்தோறும் ஒளிவிடவும்;

கடலினின்றும் கொணரப்படும் மீன்களாற் செம்படவர் சேரியில் எஞ்ஞான்றும் புலானுற்றம் நாறுதலின், அச்சேரி 'புலவு மணங்கமழும் பாக்கம்' எனப்பட்டது; கமழ்தல் - நாறுதல், "கமழ்கடாஅத்து" (புறம், ௩) என்புழிப் போல. திமில் புகுந்து மீன் பிடிக்குஞ் செம்படவர் தாஞ்செய்யுந் தொழில் தீதெனத் தெளிந்து கொள்ளாமையின் அவர் 'தெரிவின் மாக்கள்' எனப்பட்டாரென்க.

விளக்கம், ஈண்டுச் சுடர்; இதுதொழிலாகு பெயர்.

நீல நிறமான வானத்தில் மின்நிறமான விண்மீன்கள் ஒளிவிடுதல் போலவே, நீனிறமான கடனடுவில் மின்னிறமான விளக்கொளிகள் ஒளிவிட்டுப் பொலிதலின், கடற்படகுகளின் விளக்குகளுக்கு வான்மீன்கள் உவமையாயின.

(அ-க0) சிறுதுடி மருங்குல் கரும் கண் நுளைச்சியர்- உடுக்கையைப் போன்ற நுண்ணிய இடுப்பினையும் கரிய கண்களையும் உடைய நெய்தல் நிலமகளிர், எழுவரும் எண்மரும் உழிஉழிக் கைபிணைந்து - எழுவரும் எண்மருமாய் இடந்தோறுங் கைகோத்து, ஒருவா மரபின் குரவை அயரவும் - ஒருவரைவிட்டொருவர் நீங்காத தன்மையொடு குரவைக்கூத்து ஆடாநிற்பவும்;

குரவையென்பது "காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள்பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனுங் கைபிணைந்தாடுவது" என்று அடியார்க்கு நல்லார் கூறியவுரையானும் (சிலப்பதிகாரம், அரங்கேற்று காதை, கஉ), அவரெடுத்துக் காட்டிய,

"குரவை யென்ப தெழுவர் மங்கையர்
செந்நிலை மண்டலக் கடகக் கைகோத்
தந்நிலைக் கொட்பநின் றாட லாகும்"

என்னும் மிகப்பழைய தமிழ்ப்பாட்டானும் (சிலப்பதிகாரம், பதிகம், எஎ) இனிதுணரப்படும்.

அயர்தல்-ஆடுதலைச் செய்தல்.

(கக-கஎ) அவர்தரு சிறுஅர் சிறுமீன் முகந்து மணல் அகழ்கேணியில் முறைமுறை விடுத்தும்-அந்நெய்தல்நில மகளிர் பெற்றெடுத்த சிறுவர் கழிகளிற் கிடக்குஞ் சிறுமீன்களைக் குடுவையிற்பற்றி முகந்துகொண்டுவந்து அருகே மணல்நிலத்தில் அவர்களாற் றோண்டி யெடுக்கப்பட்ட ஊற்றுக்கிணற்றிலே ஒருவர்பின் ஒருவராய்விட்டு, (அதன் பின்) பொரிகெழு புன்னைப் பூந்துணர் விழ்ப்பப் புரிவளை எறிய-நெற்பொரிபோலும் பூக்களையுடைய புன்னைமரத்தின் பூங்கொத்துக்களை வீழ்த்தும்பொருட்டு முறுக்குண்ட சங்கினை மேல் வீச, கோடு தாக்கிப் பலவேறு உடைந்த நலம் கிளர் நித்திலம்-அவ்வாற்றல் அம்மரத்தின் கிளைகள் முட்டுதலாலே பலவாய் வேறு வேறாய் உடைந்து சிதறிய நன்மை மிக்க அச்சங்கின் முத்துக்களை, கொழுவிய நனை எனக் குஞ்சிப் பெய்து-செழுமையான அப்புன்னை மரத்தின் மொட்டெனக்

கருதித் தமது தலைமயிரிற்செருகி, வழீஇ வீழக் கண்கலுழ்பு பெயரவும்-அவை மழமழவென்றிருத்தலால் வழுவிவிழ அத னாற் கண்கலங்கி யழுது அங்குநின்று நீங்கவும்;

முகந்தென்றமையின், குடுவையில் முகந்தென்று கொள்க.

கேணி-நெய்தல் நிலத்துச் சிறுகிணறு.

புன்கமரத்தின் பூ நெற்பொரியை யொத்திருக்கு மென்பது, "பொரிப்பூம்புன்கின்" என்னும் ஐங்குறுநூற்றுச் செய்யுளிலும் (௩௬௮) காண்க.

சங்கின்வடிவு, முறுக்குண்டாற்போலிருத்தலிற் 'புரிவளை' யெனப்பட்டது. சங்கு உடைந்தால் அவை முத்துக்களாய்க் காணப் படுதலின் 'நித்திலம்' எனப்பட்டன. வலம்புரி யினின்றும் முத்துப் பிறக்குமுண்மை முன் (௪: ௮-௯) காட்டப் பட்டது. வீழ்ப்பவென்பது பிறவினை; குஞ்சி, ஆண்பான் மயிர்.

கலுழ்பு: செய்புவென் வாய்பாட்டு வினையெச்சம். 'சிறுஅர்' இசை நிறை அளபெடை. 'வழீஇ' சொல்லிசை யளபெடை.

புன்னைப் பூங்கொத்தினை வீழ்த்தும்பொருட்டு அதன்மே லெறிந்த சங்குகள் குறிதப்பிக் கிளைகளிற்றாக்குண்டமையின், உடைந்து சிதறின; அவற்றை அந்நெய்தலஞ் சிறார் புன்னை நனைகளே உதிர்ந்தனவென மயங்கித் தந்தலைமயிரிற் செருகி னாராக, அவை மழமழ வென்றிருத்தலால் அம்மயிரிற்பொருந் தாமல் வழுவிவிழ்ந்தன; அவற்றை அவர் மீண்டுமீண்டுஞ் செருகுதலும் அவைதாமும் மீண்டு மீண்டு நழுவிவீழலின், அதுகண்டு அச்சிறார் அழுது கண்கலங்கி அங்குநின்றும் பெயர்ந்தாரென்பது.

(௧௮-௨௩) கொழுமடல் அவிழ்ந்த குழூஉக்கொள் கைதை வான்சிதர் அளாய தேம்கமழ் ஆம்பல்-செழுமையான இதழ் விரிந்த கூட்டங்கொண்ட தாழையினுடைய வெள்ளிய பூந் தாதுகள் கலந்த தேன்மணக்குஞ் செவ்வாம்பன்மலர்கள், நீறு உறு தழலே போலவும்-நீறு பூத்த நெருப்பைப்போல

வும், பால்கெழு குறுநடைப்புதல்வர் துவர் இதழ் போலவும்- பால் ஒழுகுங் குறுகுறுவென்னுஞ் சிறுநடையினையுடைய புதல்வர்களின் சிவந்த வாயிதழ்களைப்போலவும், அறிவு இல் மாக்கட்கும் அறிவுபெதுறுக்கும் புனையாப் பொற்பின்-மெய் யறிவுபெறாத மக்கட்கும் அவரது உலகுணர்வினை மயக்குங் கையாற் புனைதல்செய்யாத இயற்கையழகினால், முறைமுறை சிறப்பவும்-ஒன்றின்மேலொன்றாய்ச் சிறந்து விளங்கவும்;

தாழம்பூவின் இதழ்கள் ஏனைமலர்களின் இதழ்களைவிடப் பெரியவாயுஞ் செழியவாயுமிருத்தலின், 'மட' லெனவுங் 'கொழு' வெனவும் ஆசிரியர் அடைகொடுத்தோதினர். தாழஞ்செடிகள் புதர்புதராயிருத்தலாற், 'குழூஉக்கொள் கைதை' யெனப்பட்டது.

'வால்' வான் எனத் திரிந்தது; "வான்கதிர்த்திருமணி" (புறம், கநு0) என்புழிப்போல.

'தேங்கமழ்' என்புழித் 'தேன்' என்னுஞ்சொல் ஈறுகெட்டு வருமொழி வன்மைக்கேற்ப மென்மை மிக்கது. இது,

"தேனென் கிளவி வல்லெழுத் தியையின்"

"மெல்லெழுத்து மிகினு மான மில்லை."

(தொல்காப்பியம், புள்ளிமயங்கியல், சரு, சசு)

என்பவற்றாற் கொள்ளப்படும்.

'நீறுறு தழல் என்பதில், நீறு கைதையின் பூந்தாது என வும், தழல் ஆம்பலெனவுங் கொள்க; இங்ஙனமே பால் கைதைத்தாதெனவும், துவரிதழ் ஆம்பலெனவும், அதற் கடுத்த உவமையிலும் உணரற்பாற்று.

'பால்கெழு துவரிதழ்' என்று கூட்டுக.

குழந்தைகள் குறுநடையின ரென்பதைப் பாண்டியன் அறிவுடை நம்பியுங் "குறுகுறு நடந்து சிறுகை நீட்டி" எனப் புறத்திற் (சஅஅ) கூறினர். துவர், சிவப்பு.

'மாக்கள்' என்பார் மக்களுட் பகுத்தறிவு இல்லாதவர்; மரபியலுரைகாரர் "மாவு மாக்களும் ஐயறி வினவே." (தொல்

காப்பியம், மரபியல், ௯௨) என்னும் நூற்பாவுக்கு உரை கூறுகின்றுழி "மாக்களெனப்படுவார் மனவுணர்ச்சியில்லா தார்" என்று உரைப்பர். இனி 'அறிவுபேதுறுக்கு' மென்பது அத்தகைய மாக்களுக்கு உலகியற்பொருள்களை யுணரும் பொறியுணர்வே உளதாகலின், அவர்க்கு அவ்வுலகியலுணர் வினையும் மயக்குமென்பதாம். எவ்வாறெனின், கைதையந் தாது படிந்த செவ்வாம்பன் மலர் சிவபிரானது நீறுபூத்த தழலுருவத்தை அவர்க்கு நினைப்பூட்டாமையின் 'மாக்கட்கும்' என்பதன் உம்மை இழிவு சிறப்பு.

இயற்கைத் தோற்றத்திற் காணப்படும் அழகு மக்கள் கையாற் புனையப்படாத தாகலிற் "புனையாப் பொற்பு" என்றார்; மேற் கூறிய நெய்தல் நில அழகுகள் புனையாப் பொற்பின என்றபடி.

(௨௬-௨௯) நெய்தல் சான்ற கைதை அம் கானல் ஒற்றியூர் அமர்ந்த வெற்றிவேல் குரிசில்-இவ்வாருக நெய்தனிலத்தின் அழகு நிறைந்த தாழைகள் வாய்ந்த கடற்கரையினை யுடைய திருவொற்றியூரென்னுந் திருப்பதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய வெற்றிமிக்க வேற்படையினைத் தாங்கிய செம்மலே!, கொன் ஒன்று கிளக்குவென் கேண்மதி பெரும!-பெருமையானதோர் ஒப்புமைச் செய்தி சொல்லு வேன் கேட்டருள்க, பெருமானே;

'கைதையங் கானல்,' அம்:சாரியை; குரிசில், ஆண்டகை; இஃது இயல்புவிளி; கொன், பெரியது; இஃதிப்பொருட்டா தல் 'கொன்னொன்று கிளக்குவல்' என்னும் மதுரைக்காஞ்சி யடிக்கு (௨0௭) அதன் உரைகாரர் கூறும் உரையாற் பெறப் படும்;

'கேண்மதி' இதன்கண் மதி முன்னிலையசைச்சொல்; "உறைமதி பெரும" (மதுரைக்காஞ்சி, ௭௮௧) என்புழிப் போல.

(௨௭-௩0) நீயே ஆர் உயிர்த் தொகுதிக்குப் பேறுதரல் வேண்டி ஐந்தொழில் இயற்றுவை-தேவரீர் அரிய உயிர்க் கூட்டங்கட்கு நுமது திருவடிப் பேற்றை அளித்தல் கருதிப்

படைத்தல் முதலான ஐந்தொழில்களைச் செய்வீர், யானே ஒருநெறி இன்றிப் பொறிவழி ஓடி ஐம்புலன் நுகர்ந்தாங்கு அமைகுவென்-ஏழையேன் ஓர் அருள் நெறியில் நிற்றலில்லாமல் மெய்வாய் முதலான ஐந்து பொறிகளின் வழியே பாய்ந்து அவற்றின் ஊறு சுவை முதலான ஐந்து புலன்களை நுகர்ந்தபடியே அமைந்திருப்பேன்;

'ஐந்தொழில்' என்பன, படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளலாகும். 'படைத்தல்' என்பது, அறியாமையால் மூடுண்டு கிடந்த உயிர்களுக்கு உடம்பைக் கொடுத்து, அவ்வாற்றால் அவற்றிற்கு அறிவைத்தோற்றுவித்தல்; 'காத்த' லென்பது, உடம்பெடுத்த உயிர்களுக்கு வரவர அறியாமை தேய்ந்து கழிய, அவற்றின் அறிவை வளரச்செய்தல்; 'அழித்தல்' என்பது உயிர்கள் தம்முடைய இருவினைப் பயன்களைத் தொடர்ந்து நுகருதலால் அவற்றின் உடம்பு வலி குறைய அவைதாமும் இளைப்புறுதலால், அவற்றின் பழவுடம்பு கழித்து, மீண்டும் அவ்வுயிர்களைப் புத்துடம்பிற் பிறப்பிக்கு முன் சிலகாலம் இளைப்பாறச் செய்தல். 'மறைத்தல்' என்பது ஒவ்வொரு பிறவியிலும் உயிர்கள் மேலும்மேலும் இருவினைப் பயன்களை அவாவுடன் நுகரும் பொருட்டு அவைதமக்கு முற்பிறப்புக்களில் நிகழ்ந்த இருவினை நுகர்ச்சிகளை மறைத்து மறக்கும்படி செய்தல். 'அருளல்' என்பது இம்முறைகளால் அறியாமை முற்றுந்தேய்ந்து பேரறிவு கிளரப்பெற்ற உயிர்களுக்கு வீட்டின்பத்தை வழங்குதலாகும். எல்லாம் வல்ல இறைவன் ஆருயிர்த்தொகுதிகள் பொருட்டுச் செய்யும் இவ்வைந்தொழி லியல்புகள்,

"அழிப்பிளைப் பாற்ற லாக்க மவ்வவர் கன்ம மெல்லாங்
கழித்திட நுகரச் செய்தல் காப்பது கன்ம வொப்பிற்
றழித்திடன் மலங்க ளெல்லா மறைப்பருள் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடி னருளே யெல்லாம்"

எனச் சிவஞானசித்தியாரில் (க: ௩எ) விளக்கமாய்க் கூறப்பட்டிருத்தல் காண்க.

'பொறிகள்' எனப் பொதுவாகக் கூறினமையால் ஐம்பொறிகளுமென உரைக்கப்பட்டது; அவையாவன, மெய்

வாய் கண் மூக்குச் செவி; ஐம்புல னென்பன அவ் வைம் பொறிகளின் உணர்வுகள்; அவை ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசை யென்பன; பொறிவழியோடி அவ்வுணர்வுகளை நுகர்த லென்க. ஆண்டவன் படைத்தல் முதலான ஐந்தொழில் களையும் என்றும் இயற்றுதல் போல், ஆசிரியர் தாமும் உறு தல் முதலான ஐந்தொழில்களையும் ஓயாது இயற்றுவதாகக் கூறி ஒப்புமை காட்டினர்.

'ஓடி' யெனப்பட்டது, பொறிவழிச் செல்லுதலில் உள் ளத்துக்கு உள்ள விரைந்த விருப்பத்தை வெளிப்படுத்து தற்கு.

(௩௧-௩௪) நீயே மக்கள் மேல் கொண்ட பொச்சம் இல் அன்பில்தாயே அனைய அளியினை-தேவரீர் தம் மக்கள்பால் வைக்கும் பொய்மையில்லாத அன்பில் தாயையே ஒத்த அன் பினை யுடையீர்; யானே மனைவியும் மக்களும் பொருள் எனக் கொண்டு-ஏழையேன் மனைவியையும் மக்களையுமே உறுதிப் பொருள்களெனக் கருதி, நினைவது ஒன்று இல்லாப் பேர் அன்பினனே - ஏனையொரு பெரும்பொருளிருப்பதாகவும் நினைதல் சிறிது மில்லாத பேரன்பினை உடையேன்;

'பொச்சம்', பொய்; பொக்கம் என்பதன் திரிபு (பிங்க லந்தை); ''பொச்சமிலன்பு மன்னர்'' (திருநாட்டுப்படலம், ௩௧) என்பது திருவிளையாடற் புராணம்.

'தாயே' என்பதன் ஏகாரம், பிரிநிலையொடு தேற்றம்.

'அளியினை', குறிப்பு வினைமுற்று; 'அன்பினென்' என் பதும் அது;

'ஒன்று' ஈண்டுச் சிறிதென்னும் பொருளில் வந்தது; இஃதிங்ஙனம் வருமாறு, ''மாயைக் குணர்வொன்று மில்லை யென்றே வைத்திடு மதனால்'' (சிவஞானசித்தியார், ௧, ௧௭) என்பதிற் காணப்படும்.

மக்களு மென்பதன் ஈற்றிலும் பிரிநிலைத் தேற்றேகாரம் விரித்துரைத்துக் கொள்க.

இதன்கண், நீ நின்மக்கள்மேல் அன்புடையையாதல் போல், யானும் என் மனைவிமக்கள்மேல் அன்புடையே னென்று ஒற்றுமை காட்டியவாரும்; இறைவனுக்கு மக்களா வன உயிர்களென்க.

(கூ௫-சஉ) நீயே-தேவரீர், யானைவெண் மருப்பும் தேனின் இருலும் மயில் தழைப்பீலியும் விரைகமழ் சாந்தமும் ஒருங்கு தலைமயங்கிய இரும்பெருங்குன்றத்து-யானையின் வெள்ளிய கொம்புகளும் தேனின் கூடுகளும் மயிலின் தழை தலையுடைய தோகைகளும் மணங்கமழுஞ் சந்தனக்கட்டை களும் ஒருங்கு கலந்துகிடக்கும் மிகப் பெரிய மலையில், ஆனது உறையும் இயல்பினை-விருப்பம் நீங்காது எழுந்தரு ளியிருக்கும் இயல்பினையுடையிர்!, யானே-ஏழையேன், புலம் இல் கல்வியும் நலம்இல் புகழும் வழுவிய ஒழுக்கமும் கழு வாக் குற்றமும் ஒருவழி அமைந்து பெருகிய செருக்கு எனும் கோடுகெழு குன்றில்-பகுத்தறிவில்லாத படிப்பும் நன்மையில் லாத புகழும் தவறிய ஒழுக்கமுங் கழுவி யகற்ருத குற்றமும் ஒன்ருய்ப் பொருந்திப் பெரிதான ஆணவம் என்னும் உச்சி கெழுமிய மலைமேல், பீடு உறுகுவென்-அமர்ந்து பெருமை பெறுவேன்;

இருல், 'தேன்கூடு'; ''இருறேன்கூடே'' என்பது திவா கரம் (விலங்கின் பெயர்த்தொகுதி). 'தழைப்பீலி,' இரண்டாம் வேற்றுமைத்தொகை; 'தழை' முதனிலைத்தொழிற்பெயர், 'தலைமயங்குதல்' ஒன்ருேடொன்று கலந்துகிடத்தல்; ''வகை தெரி வறியா வளந்தலை மயங்கிய'' (சிலப்பதிகாரம்,கச,களஅ) வென்புழிப்போல.

'ஆனது,' ஈண்டு நீங்காது என்னும்பொருட்டு; ''கொள்ளைமாந்தரி னனது'' என்னும் அகநானூற்றின் கண் ணும் (கூ) இச்சொல் இப்பொருட்டாதல் காண்க. 'புலம்', அறிவு; இங்குப் பகுத்தறிவினை யுணர்த்தும்.

'பெருகிய குன்று'எனத் தொடுத்துக்கொள்க. தீய இயல் புகளெல்லாம் ஈண்டு மலையாக உருவகப்படுத்தப்பட்டன: திருக்குறளில் (௯ : கூ) நல்லியல்புகளெல்லாங் ''குணமென்

னுங் குன்று" என உருவகப்படுத்தப் பட்டாற் போலவென்பது.

இதன்கண், முருகப்பெருமான் குன்றுகண்மேல் எழுந்தருளியிருத்தல்போல, ஆக்கியோர்தாமுந் தீமையென்னுங் குன்றுகண்மேல் ஏறியுறைவதாக ஓற்றுமை தேற்றியவாறு காண்க; முருகப்பெருமான் குன்றுகண்மேல் அமர்ந்தருளும் உண்மை, அவனெழுந் தருளுதற்குரிய ஆறுபடை வீடுகளுட் 'குன்றுதொருடல்' என்பதும் ஒன்றுதல் கொண்டும், "குன்றுதொ ருடலு நின்றதன் பண்பே' என்னுந் திருமுருகாற்றுப் படையின் (உகஎ) திருமொழி கொண்டும் நன்கு துணியப்படும். பீடு - பெருமை.

(சங-ஙஅ) நீயே - தேவரீர், அறல் நெறித்தன்ன-செறி குழல் கற்றையும் - கருமணல் முடங்கினாற்போல் நெளிதல் உள்ள மயிர்த்தொகுதியும், பிறை செறித்தன்ன நறைகமழ் நுதலும்-எட்டாம் பிறைத்திங்களைப் பொருத்தினாற் போன்ற மணம் வீசும் நெற்றியும், கயல் இணைத்தன்ன அகல் இரு விழியும்-இரண்டு கெண்டை மீன்களை முகஞ்சேர்த்து வைத்தாற்போல் அகன்ற இரண்டு கண்களும், குமிகை முகிழ்த்தன்ன அமைவரு நாசியும்-இளைய எள்ளின் மொட்டு அரும்பினாற்போல் அமைந்த மூக்கும், பளிங்கின் அன்ன துளங்கு ஒளிக்கதுப்பும்-பளிங்கிற்போல அசைந்து நிழலாடும் விளக்கத்தினையுடைய கன்னங்களும், வள்ளை அன்ன தெள் ஒளிச் செவியும்-வள்ளைத்தண்டை ஒத்த தெளிந்த ஒளியையுடைய செவிகளும், குலிகம் தோய்த்த இலவு உறழ் இதழும்-இங்குலிகத்திற் றோய்த்தெடுத்த இலவம் பூவை ஒக்கும் சிவந்த வாயிதழும், முறுவல் பூப்ப மின் என மிளிரும் குறுமுத்து அன்ன சிறுமுள் எயிறும்-புன்னகை மலருங்கால் மின்போல் ஒளிவிடுகின்ற குறிய முத்துப்போன்ற சிறிய முள் ஒக்கும் பற்களும், கொழுநீர்ப் பணிலத்து விழுமிய கழுத்தும்-செழுமையான நீர்வாழ் சங்கை ஒக்குஞ் சிறந்த கழுத்தும், எமக்கு அருள் மரபின் தமக்கு அமை கையும்-ஏழையேங்கட்கு அருள் செய்யும் இயல்பினால் தமதருட்டன்மைக்கு இசைந்த அருட்கையும், சிவிறி விரித்து அன்ன சிறு

திருவடியும்-சிவிறியை விரித்து வைத்தாற் போன்ற சிறிய திருவடிகளும், எம் உளம் நீங்காச் செம்மையின் தோன்ற வீறு கெழு பகுதியின் வேறு இருமடவார் கூறுகொண்டு இரு புடை விளங்க - எளியேங்கள் உள்ளத்தினின்றும் நீங்காத செவ்வியில் இடையறாது தோன்றுமாறு மேன்மை கெழுமிய இடவலப் பக்கங்களில் வேறுவேறாக மங்கையர் இருவர் பங்குகொண்டு இருபக்கங்களிலும் விளங்க, சீறிய மயில் மிசை வருகுவை - சீற்றங் கொண்டுவந்த மயிலின் மேல் எழுந்தருளி வருவீர்!

நெறித்தல், முடங்குதல் நெளிதல், ''நெறிகொள் வரிக் குடர்'' (புறம், சசுO) என்பதன் உரையைக் காண்க. மக்கள் உடம்புபோல் வாலாமையும் அதனால் தீய முடைநாற்றமும் இல்லாமல், எல்லாம் வல்ல இறைவியின் அருளுடம்பு நறு மணங் கமழ்தலே உடைமையின் நுதல், 'நறைகமழ் நுதல்' எனப்பட்டது; சாந்தும் நீறும் அணிதலுடைமையின் அங் ஙனங் கூறப்பட்ட தென்றலுமொன்று.

மகளிர் நெற்றிக்குப் பிறை உவமையாதலின் வகை முன் னரே விளக்கப்பட்டது.

குமிழை-இளையெள், (பிங்கலந்தை).

கன்னங்களின் துளங்கொளி அவற்றின் பக்கத்தே யமைந்த செவியின் மேலும்பட்டு ஒளிசெய்தலின், அச்செவி யுந் தெள்ளொளி யுடைய என்றார். மற்று விளக்கம் மிக்க மணிகளால் இழைக்கப்பட்டதோடு அணிந்த செவிகளாக லின், அங்ஙனந் தெள்ளொளியுடையவாயின வென்றலும் ஒன்று. அன்றி, இவ்விருவகை யொளிகளாலும் அவை விளங்கின வெனலுமாம்.

இயற்கையே செந்நிற முடையதாகிய இலவமலர் இங்கு லிகத்திற் றோய்த்தெடுத்தவழி மேலுஞ் சிவந்த நிறத்தின தாய் விளங்கலின் அஃது அம்மையாரின் வாய் இதழுக்கு உவமையாயிற்று.

அத்துணைச் சிவந்த இதழ்கள் திறந்தவழித் தோன்றும் பற்கள் முத்துப்போல் வெண்ணிறத்தின வாயினும், அச்

சிவந்த இதழ் ஒளியுடனும் விரவுதலின், அவை மின்னொளி யொடு மிளிரும் என்றூர். முத்து வெண்மைக்கும் ஒளிக்கும் வன்மைக்கும் உவமை.

பணிலம், மழமழப்புக்கு உவமை; நீரின்கண் இருந்து உண்டாதலின், 'நீர்ப்பணிலம்' எனப்பட்டது; 'நல்ல நீர்மை யுள்ள பணில' மெனலுமாம்.

'சிவிறி விரித்தன்ன' வென்னுங் குறிப்புத் திருவடி விரல்கள் தனித்தனி நெருங்கி நிற்றலைக் குறித்தவாறும்.

வீறு—''வேறொன்றற் கில்லா அழகு'' என்பர் நச்சினூர்க்கினியர் (சீவக சிந்தாமணி. ௨அக)

மடவார், இங்கு வள்ளி தெய்வயானையம்மையார்.

சீறியமயில்-சீற்றத்துடன் வந்த சூரனாகிய மயில்; கடைப்படியாக முருகப்பிரானது வேலால் இரு கூறுகப் போழப்பட்ட சூரனது உடல் சேவலும் மயிலுமாகிப் பிராணெடு பொருதற்குப் பெருஞ் சீற்றத்துடன்வர, இறைவன் சேவலைக் கொடியாக நிறுத்தி, மயிலை ஊர்தியாகக் கொண்டானெனக் கந்தபுராணங் கூறும். அது,

''தாவடி நெடுவேன் மீளத் தற்பரன் வரத்தால் வீடா
மேவலன் எழுந்து மீட்டு மெய்பகி ரிரண்டு கூறுஞ்
சேவலு மயிலு மாகிச் சினங்கொடு தேவர் சேனை
காவலன் றன்னை நாடி யமர்த்தொழில் கருதி வந்தான்''

என்னுஞ் சூரபன்மன் வதைப்படலச் செய்யுளால் (௪௬௨) அறியப்படும். மன், ஓ: அசைநிலை.

(௱௬-௭௭) யானே-ஏழையேன், கருநெறி மறமும் - கருகிய நெறியினையுடைய பாவமும், அருகிய அறிவும்-குறுகிய அறிவும், விரிவுறு மயக்கமும்-விரிந்த மயக்கமும், திருகிய சினமும் - முறுகிய சினமும், தொண்டர்ப்பணியா நாணமும் - அடியார்களை வணங்காத நாணமும், எண்தோள் முக்கண் பெருமான் பெரும்புகழ் நக்குச் சமயக் கணக்கர் அமைவு இலகூறும் புல் உரை கொள்ளும் பொல்லாக் கிழமையும் -

எட்டுத்தோள்களும் மூன்று கண்களும் உடைய சிவபெருமானது பெரும்புகழை ஏளனஞ் செய்து அயல் மதத்தார்கள் ஆராய்ந்து அமைதல் இலவாகக் கூறுஞ் சிறிய கூற்றுக்களை மேற்கொள்ளுந் தீய இயல்பும், வெகுளியொடு படுஉம் தகை இல் மாற்றமும்- சினத்தோடு கூடிய தகுதி யில்லாத பேச்சும், அறிவோர் நகைப்ப மடவோர் திகைப்பப் பொருளொடு பொருந்தாப் புகுந்துசொன் மொழியும்-அறிஞர் நகைப்பவும் அறிவிலார் திகைப்பவும் மெய்ம்மையோடு இசையாத முன் விரைந்து மொழியுஞ் சொல்லும், உறுவரைப் பேணுது எழும் இறுமாப்பும்-பெரியாரைப் போற்ருது எழுகின்ற செருக்கும், எளிவந்தோரும் இரவன் மாக்களும் அழுவிளிக் கம்பலை கொள்ளக் குழைவின்றிப் பழுதுறச் சென்ருங்கு எறிந்து நகும் முருடும் - வறியவரும் இரத்தற்ருெழிலைச் செய்வாரும் அழுது பிறரை அழைக்கும் ஓலம் இட நெஞ்சிளக்கமில்லாமற் பொல்லாங் குண்டாகச் சென்று அங்கே அவர்களை அடித்து அவ்வாற்ருல் உவக்கும் முருட்டுத் தன்மையும், அறிவொடு படாஅச் சிறுதொழில் முறைமையும் - அறிவொடு கூடாத புல்லிய செயல்வகையும், நீங்கா மரபின் ஓங்கிப்பொலிய - பிரியாத வியல்பினுல் மிக்கு விளங்க, யான் எனது என்னும் கூனல்கிழத்தியர் பெரும்புறம் கவவி வயின் வயின் அமைத்து- யான் எனது என்னுங் கூன் கெழுமிய மனையாட்டிமாரின் பருத்த முதுகைத் தழுவி இடப்பக்கத்தும் வலப்பக்கத்தும் அமைத்துக்கொண்டு, மறம் தேர் வாழ்க்கை மயில்மிசைக் கொண்டு - தீவினையே தேடும் வாழ்க்கை யென்னும் மயிலின் மேல் அமர்ந்து, சிறந்ததோர் திறத்தில் சிவனுவென் அன்றே - இவ்வகைப்பட்ட பெருமையானதொரு வகையில் நினக்கு நிகராகுவே னல்லனே!;

கருநெறி, கருகிய நெறி; ஆவது பொருண்மறைந்த நெறி. கருகல், பொருண்மறைதல்; எனவே இங்குப் புண்ணியப் பொருண் மறைந்த நெறியென்க.

'திருகிய சினம்' முறுகிய சினம்; ஆவது மிகுந்த சினமென்க; "உரவுச்சினந் திருகிய" என்ருர் புறநானூற்றிலும் (உ௫).

தொண்டர்ப் பணியா நாணம், திருத்தொண்டரைப் பணிய வொட்டாதபடி தடைசெய்யும் நாணமென்பது.

சிவபெருமான் உலகமெங்கணும் நிறைந்த முழுமுதலாகலின் உலகத்தின் எட்டுத் திசைகளையும் அவனுக்கு 'எண்டோள்க' ளெனவும், ஞாயிறுந் திங்களுந் தீயும் அவனுக்கு 'முக்கண்க' ளெனவும் அறிந்தோர் உரைப்ப.

'சமயக் கணக்கர்,' சமயநூல் வல்லுநர்; "சமயக் கணக்கர்தம் மதிவழி கூறுது" (கல்லாடம், கு) என்பது காண்க. அமைவில: குறிப்பு முற்றெச்சம்.

'கிழமை,' இங்கு இயல்பு; இஃது இப்பொருட்டாதல் "வாரமுங் குணமும் காணியுங் கிழமை" யென்னும் பிங்கலந்தையால் (கூகஎ௰) அறியப்படும்.

பிறர் விரும்பாத நிலையில் தானே முன்விரைந்து பதறி மொழியுஞ் சொல் 'புகுந்து சொன் மொழி' யெனப்பட்டது. 'பொருளொடு பொருந்தா' என்பதிற் பொருள் மெய்ம்மையினை யுணர்த்திற்று; "பொய்யுரையே யன்று பொருளுரையே" என்பதிற் போல (சிலப்பதிகாரம் கூ, கஅ).

உறுவர், மேலோர்; "உறுவர்ப் பேணல்" என்னுஞ் சீவகசிந்தாமணித் தொடர்க்கு (உஅககூ) 'மிக்கோரை விரும்புதல்' என்று உரைகாரர் நச்சினார்க்கினியர் கூறுதல் இங்கு உற்றுநோக்கற்பாலது.

'இரப்போர்' மாக்கள் எனப்பட்டார், இரத்தலின் இழிவு கருதி;

அழுவிளிக் கம்பலை' அழுது எதிர்ப்பட்டாரை விளித்து இடும் ஓலஒலி; 'கம்பலை'யென்பது ஒலி; இது,

"கம்பலை சும்மை கலியே யழுங்க
லென்றிவை நான்கு மரவப் பொருள"

என்னுந் தொல்காப்பிய உரியியல் (௫௩) நூற்பாவால் உணரப்படும். அழு என்னும் முதனிலை வினையெச்சப் பொருளில் வந்தது; "வரிப்புனை பந்து" என்பதிற்போல (திருமுருகாற்றுப்படை, சுஅ).

'எறிதல்' ஆவது 'அடித்து வருத்துதல்' முதலியன வென்க. 'முருடு' விறகு (திவாகரம்); விறகையொப்ப ஈர மில்லாக் கொடுநெஞ்சப் பான்மையினை யுணர்த்திற்று; "வன் பராய் முருடொக்கு மென் சிந்தை" என்றார் திருவாத வூரடி களும் (திருவாசகம், செத்திலாப் பத்து, ௪).

கூனற்கிழத்தியரின் முதுகு குவிந்து தோன்றுமாகலிற் 'பெரும்புறம்' என்றார்.

'கவவல்' அகத்தே அடங்கும்படி தழுவல்' "கவவுக்கை ஞெகிழாமல்" என்பதன் உரையை உற்றுநோக்குக (சிலப் பதிகாரம், க, ௬௪).

(எஅ-அ௫) நீயே-தேவரீர், காந்தள் அம்கண்ணி ஏந் திய மார்பத்து-காந்தட் பூக்களாற் றொடுக்கப்பட்ட மாலை யைத் தாங்கிய மார்பில், செம்சாந்து நீவிய சிறந்த கோல மொடு-சிவந்த சந்தனக் குழம்பைத் தடவிய சிறந்த திருக் கோலத்துடன், குறவர் மகளிர் விழவொடு குழீஇ-குறவர் பெண்கள் எடுக்கும் விழாவொடு கலந்து, வெறி அயர் களத்தில் விளங்குவை - வெறியாடு மிடத்தில் முனைந்து தோன்றுவீர்! யானே - அடியேன், முல்லை அம் தொடலை முருகு எழ அணிந்து-முல்லையரும்புகளாற் பிணைக்கப்பட்ட மாலையை மணங்கமழும்படி அணிந்து, வெண்சாந்து பூசிய கேழ்கிளர் மார்பமொடு - வெண்சந்தனம் பூசிய விளக்கம் மிக்க மார்புடன், இழிசின மகளிர் இயைந்த இன்ப வெறி யாடு களத்து வெளிப்படுகுவென் - இழிந்த மகளிரொடு பொருந்திய சிற்றின்ப மென்னும் வெறியாடு களத்தில் வெளிப்பட்டுத் தோன்றுவேன். ஏ: அசைநிலை.

'காந்தளங் கண்ணி' 'முல்லையந்தொடலை' என்பவற்றில் அம்: சாரியை. 'கண்ணி'யுந் 'தொடலை'யும் இங்குப் பொதுப்பெயராய் நின்று மாலையை யுணர்த்தின.

'செஞ்சாந்' தென்பது குங்குமப் பூ முதலான சிவந்த மணப்பண்டங்களாற் கூட்டப்படுங் கூட்டு; நீவிய-தடவிய; இப்பொருட்டாதல் 'திவாகர'த்திற் காண்க.

'வெண்சாந்து' பச்சைக் கருப்பூரமும் பனிநீரும் முதலான நறுமணப் பொருள்களாலான கலவை. வெண்சாந்து பூசிய மார்பின்கண் செஞ்சாந்து பூசிய மார்பைவிட நிறம் விளங்குதல் இல்லாமையின், 'கேழ்' என்பதற்கு 'விளக்க' மென உரைத்தலே வாய்வதாம்; 'கேழ்'-ஒளி, (பிங்கலந்தை).

குறவர்கள் தாம் வழிபடும் முருகக்கடவுட்கு விழா வெடுக்குங்காற் பெரும்பான்மையும் அவர் மகளிரே ஆங்குக் குழூமி ஆடுதலும் பாடுதலுஞ் செய்து வெறி அயர்வர். என்னை? மகளிர்க்கே அவ் வாடுதலும் பாடுதலுஞ் சிறத்தலின் என்பது. குறவருந் தங்குறத்தியரொடு கூடிக் குரவை அயர்வரென அகநானூற்றிற் (௨௩௨) பெறப்படு மாயினும், ஆண்டு அஃது அக்குரவை யயர்வைக் குறத்தியர்க்கே பெரும்பான்மையும் எடுத்தோதுதலாலும், அஃதொப்பவே சிலப்பதிகாரத்தில் வரும் 'குன்றக்குரவை' யென்னுங் காதையும் மகளிர் கூற்றாகவே பெரிதுங்கூறப்பட்டிருத்தலாலும், மேலும் வள்ளியின் கோலம்பூண்டு குறவர்மகளிர் 'வள்ளிக்கூத்து' என ஒன்று ஆடுதலுடையராய் முருகனுக்கு விழவயர்வரென்னுங் குறிப்புத் தொல்காப்பியம் (புறத்திணையியல், ௫), பெரும்பாணாற்றுப் படை (௩௭௦) முதலான பண்டைத் தண்டமிழ் நூல்களிற் கூறப்படுதலாலும், பண்டைச் செந்தமிழிலக்கண இலக்கியங்கள் பெரும்பாலனவற்றிற்கு உரை கண்ட ஆசிரியர் நச்சினார்க்கினியரும் இக்கூத்து மகளிர்க்கே உரித்தெனத் துணிபுரைத்தலாலும், இற்றை ஞான்றும் 'வேடர்பலி' முதலாக விழவெடுக்கு மிடங்களில் மகளிரே வள்ளிக் கோலம் பூண்டு முருகனொடு விழவயர்தல் உலக வழக்கினுள்ளும் எங்குங் காணப்படுதலாலும், குறவர் தம்மிலும் அவர் மகளிர் மாட்டே முருகக்கடவுள் முனைத்து விளங்குவானென்பது சிறிதும் ஐயுறவின்றி நன்கு தெளியப்படும். அதுபற்றியே ஈண்டுக் குறவர்மகளிர் விழவொடு குழீஇ வெறியயர்களத்தில் விளங்குவை யெனப்பட்டதென்க. வெறி - தெய்வமயக்கம்; அயர்தல் - ஆடல்; களம் - இடம்; எனவே 'வெறியயர் களம்' என்பது 'தெய்வமேறி யாடுமிட' மெனக் கொள்ளப்படும்.

'இழிசினமகளிர்,' இழிந்தமகளிர்; இழிசின இப்பொருட்டாதல் "இழிசினர்க்கே யானும் பசித்தார்க ணீதல்" என்னுஞ் 'சிறுபஞ்ச மூலத்'திற் (௭௭) காண்க.

சான்றோர்கள் நூல்செய்யப் புகும்வழி உலகவர்பாற் காணப்படுங் குற்றங்களையெல்லாந் தம்மேலேற்றி அவர் திருந்தும்பொருட்டுத் தந்நூற்கண் உரையாநிற்பர். இது, தேவாரம் திருவாசக முதலான திருமறைத் தமிழ்நூல்களால் நன்கு பெறப்படும்; இங்கு அடிகளும் அம்மரபேபற்றி இப்பாட்டின்கண் மிகப்பல குற்றங்களை யெல்லாந் தம்மேலன வாக ஏற்றிக் கூறியருளுவா ராயினரென்பது. பிறண்டு வரு மிடங்களிலும் இக்கருத்தே கொள்க.

மகளிரை யடுத்து 'ஓடு'வுருபு விரித்துக்கொள்க.

'இன்பவெறி,' சிற்றின்ப மயக்கம்; இம்மயக்கத்திற் றிளைத்தாடுமிடம் 'பரத்தையர் சேரி' யென்க.

(௬௯-௭௭) எனவாங்கு - என்றங்ஙனமாக, நின்னொடும் என்னிடைப்பட்ட இவ் வியைபால் - நினக்கும் எனக்கும் இடையே உண்டான இத் தொடர்பினால், எனக்கு அருள் தரல் இயையும் - எளியேற்குத் தேவரீர் தமது அருளை வழங்குதல் பொருந்தும்;

நின்னொடு மென்பது நினக்கும் என உருபுமயக்க மாயிற்று.

(௭௭-௬௧) தனக்கு நிகராகுநரொடு நகைதருகேண்மை செயலாகுவதென மொழிகுவர் அதனால் - தனக்கு ஒப்பாவாரோடு ஒருவன் மகிழ்ச்சிதரும் நட்புச்செய்தலே ஆக்கந் தருவது எனச்சான்றோர் ஆணை தருவா ராகலின், நுந்தையும் முனிகுவன் அல்லன்-நும் தந்தையாகிய சிவபெருமானும் நும்மை அதற்காக வெறுப்பான் அல்லன்; அன்னையும் நுந்தை வழிப்படூஉம் தகையள்-நும் தாயாகிய உமையம்மையும் நும் தந்தையின் வழிநிற்குங் கற்புடையள்;

நட்பு ஒத்தார்கண்ண தென்பது "உணர்ச்சிதான் நட்பாங்கிழமை தரும்" என்னும் அருமைத் திருமொழியால் (திருக்குறள், ௭௮௫) இனிது பெறப்படும்.

'நுந்தை' முன்னிலை முறைப்பெயர், தை முறைப்பெயர் ஈறு; 'நும் தந்தை' என்பது திரிந்ததன்று; "குற்றியலுகர முறைப்பெயர் மருங்கின்" என்னுஞ் சூத்திரத்தை நோக்குக (தொல்காப்பியம், எழுத்து, ௩௪).

'நுந்தையு முனிகுவ னல்லன், அன்னையும் நுந்தை வழிப்படுந் தகைய' ளாதலால், எனக்கு நீ அருடரற்கு ஏதும் இடுக்கில்லையெனக் கூறியவாறும்; இஃது அவாய் நிலையாற் கொள்ளப்படும்.

(௬௪-௬௯) மைந்து கெழு பொருப்பைப் போழ்ந்து - வலிமை பொருந்திய 'கிரவுஞ்ச' மலையைப் பிளந்து, விருப் பொடும் எதிர்ந்த அரிமா முகத்தனைப் பொரிபட நூறி-போர் விருப்பத்தோடும் எதிர்ந்துவந்த 'சிங்கமுகாசுரன்' என்ப வனைப் பொரிந்துபோகப் பொடிபடுத்தி, காழ் உறும் அரக்கரை நூழில் ஆட்டி - மனவைரங்கொண்ட அரக்கர் களைக் கொன்றுகுவித்து, பொரியரை மாவாய் விரிகடல் மூடியசூர் முதல் முதலற முருக்கி - பொரிந்த அடியினையுடைய மாமரமாகி அகன்ற கடலினை மூடிய சூரர்தலைவனை முதலறும் படி முறித்துவீழ்த்தி, பேர் அருள் அழிவுபடும் உள்ளத்துப் பழியொடு பிறங்கும் உலையா வாழ்க்கைத் தேவர்க்கு-தேவரீ ரது பேரருளை அழிவுபட்ட உள்ளத்தோடும் 'சூரர்க்கு ஆற்றாதார்' என்னும் பழியினால் மிகுந்தும் கெடாத உயிர் வாழ்க்கையினையுடைய தேவர்களுக்கு, தலைமையொடு நல்கும் அரசுசெலுத்துந் தலைமையுடன் கொடுத்தருளுகின்ற, தமிழ் கிழவோயே - தமிழ்மொழிக்கு உரிமையான முருகக்கடவுளே;

'பொரிபட நூறி,' பொரிந்துபோகப் பொடிபடுத்தி; 'நூறு' பொடி, (திவாகரம்). 'நூழிலாட்' டென்பது, கொன்றுகுவித்தல் (தொல்காப்பியம், புறத்திணையியல், ௧௭).

பொரியரை, மரங்களின் நால்வகையரைகளுள் ஒன்று: அது பொரிந்த அடிமரம்.

முதலற, அடியோடு; முருக்கி, முறித்து; இதற்கு இப் பொருள் உண்மை "காப்புடைய வெழு முருக்கி" (௧௪) என்னும் புறநானூற்றுரையிற் காண்க; ஆவது இங்குக் கொன் றென்னும் பொருட்டு, பிறங்குதல் - மிகுதல் (புறம்-௪௯).

'உலேயா வாழ்க்கை'யைத் தேவர்களுக்கு ஆளுகை செய்யும் உரிமையுடன் வழங்கினுன் என்றற்குத் 'தலைமை யொடு நல்கும்' எனப் பட்டது; உலேயா - கெடாத (புறப் பொருள் வெண்பாமாலை, க0, க0). மானம் அழிந்தும் உயிர் நீக்கமாட்டாச் சாவா வாழ்க்கையுடைய தேவர்க்கு மீண்டும் அரசுரிமை நல்கி அவரது மானத்தை நிலைநிறுத்தினமை கூறியபடி.

இன்னுசை நலங்கருதித் தமிழ் கிழவோயே எனமிகாது இயல்பாய் வந்தது, ''பழமுதிர்சோலை மலைகிழவோனே'' (திருமுருகாற்றுப்படை, ௩கஎ) என்புழிப்போல.

'தமிழ்கிழவோயே, தனக்கு நிகராகுநரொடு கேண்மை செயலாகுவதென மொழிகுவ ரதனுல் நுந்தையு முளரி குவ னல்லன் அன்னையும் நுந்தை வழிப்படுஉந் தகையள், ஆகவே நின்னுெடும் என்னிடைப் பட்ட இவ்வியைபால் எனக்கு நீ யருடரலியையும் என வினைமுடித்துக் கொள்க.

(க0)

## கக. பிரிவாற்ருத தலைவி மதியொடு வருந்தல்

(இ-ள்) கிழமை நினையாத கேழ்மதியே-உரிமை கருதாத நிறங் கிளர்ந்து விளங்கும் நிலவே, ஒற்றிக்குழகன் பிரிந்த குறிப்பால் - திருவொற்றிமுருகன் என்னைப்பிரிந்த குறிப் பினுல், பொழுது அறிந்து-நேரந்தெரிந்து, செல்லும் உயிர்ப் பேதைக்குத் தீங்கு இழைப்பாய்-பிரிவாற்ருமையால் உடம்பி னின்றும் பிரிந்து செல்லுகின்ற உயிரையுடைய பேதை யாகிய எனக்குத் தீமை புரிகின்றனை; நின்னை அடும் வல் அரவை மயில் கொல்லா - இவ்வாறே நீ செய்வையாயின் நின்னை விழுங்கும் வல்லமை வாய்ந்த 'இராகு' என்னும் பாம்பை என் தலைவன் ஊர்ந்துவரும் மயில் கொல்லாது என்க.

திங்களும் ஞாயிற்றுக்கு மனைவியா யமைந்த பெண் பாலாகலான் தன்னுெடொத்த பெண்பால் இவளன்றே என்னும் உரிமை கருதாமல் அது வருத்துதலிற் 'கிழமை

நினையாத' என்றும், அங்ஙனங் கிழமை நினையாது வருத்து கின்றுழி ஒளிகிளர்ந்து நிற்றல் பெண்மைக்கு இழுக்காமாக லிற் 'கேழ்மதியே' என்றுங் கூறினுள்.

'குழகன்,' இங்குக் கட்டிளமையுடையன்; அவன் முருகன்; 'முருகன்' என்னுஞ் சொற்கும் அதுவே பொரு ளாகலான், 'குழகன்' என்பதற்கு முருகன் எனவே உரை கூறப்பட்டது. 'குழவு' இளமைப் பொருட்டாதல், "மழவுங் குழவு மிளமைப் பொருள" (தொல்காப்பியம், சொல், கூகஉ) வென்பதனு லறியப்படும்.

'குறிப்பாற் பொழுதறிந்து' எனப்பட்டது, பிரிந்த குறிப்பினுல் வருத்தும் நேரமறிந்து என்றற்கு.

'தலைவன் பிரிவைப் பொறுக்க லாற்ருமையால் வருந்தி உயிர் நீங்கிக்கொண்டிருக்குந் தறுவாயில், அவ்வுயிர் பின்னும் விரைந்து நீங்கிச்செல்லுமாறு மதியே, நீ தீங்கி ழைக்கின்றனை' யென்றமையால், வருந்துவாரைப் பின்னும் வருத்துங் கன்னெஞ்சமும், எளியாரை வருத்தும் பேடித் தன்மையும் ஆகா எனக் கூறினுளாயிற்று.

தலைவன் பிரிவைப் பொறுமையுடன் ஆற்றிக்கொண் டிருக்கும் அறிவாற்றல் இல்லாமையின் இங்குத் தலைவி 'பேதை'யெனக் குறிக்கப்பட்டமை அறிந்து மகிழற்பால தாகும்.

திங்கள் இழைக்குந் தீங்காவது காமநோய் மலரும் மாலைநேரத்தில் தம் தலைவரைப் பிரிந்து பிரிவாற்ருமையால் வருந்தும் மகளிர்மேல் தன் தண்கதிர்களைச் சொரிந்து அவ்வாற்ருல் அவர்க்கு அவர்தங் கேள்வரின் இனிய காதல் நினைவை மேலும் மேலும் எழுப்பி வருத்துதலாகும். அந் நேரத்தில் அம்மகளிர் நிலவினெளியால் வருத்தம் எய்து தலின், அந்நிலவு தமக்குத் தீங்கிழைப்பதாய் அவர் கருது வாராயின ரென்க. இது கருதியே நந்தமிழிலக்கியங்கள் அத்தண்ணென் கதிரை வெய்தென அனலாக உருவகப் படுத்துரைப்பதும் மரபாயிற்று.

"செப்பிளங் கொங்கைமீர் திங்கட் சுடர்பட்டுக்
கொப்புளங் கொண்ட குளிர்வானை-இப்பொழுது
மீன்பொதிந்து நின்ற விசும்பென்ப தென்கொலோ
தேன்பொதிந்த வாயால் தெரிந்து"

என்னும் நளவெண்பாப் பாட்டு (சுயம்வரகாண்டம், ௧௦௪) இங்கு நினைவுகூரற்பாலது.

'கொல்லாது' என்பது ஈறுகெட்டுக் 'கொல்லா' என நின்றது.

நீ எனக்குத் தீங்குசெய்தாய் என்பதை என் தலைவனது ஊர்தி அறியுமாயின், அது நின்மேற் பகைகொண்டு நின்னை விழுங்கும் வல்லரவைக் கொல்லாமல் விட்டு அவ்வரவு நின்னை விழுங்குதலையும் அதனால் அப்போது நீ வருந்துதலையுங் கண்குளிரப் பார்த்துக் கொண்டிருக்கும் எனத் தலைவி கருதிக் கூறினளென்பது ஈற்றடியின் கருத்து. (௧௧)

## ௧௨. தோழி பருவங்காட்டி வற்புறுத்தல்

(இ-ள்.) மயில்மீது இவர்ந்து திருவொற்றியூர் சென்ற மன்னவர்தாம்-மயில்மேல் எழுந்தருளித் திருவொற்றியூருக்குச் சென்ற நின் தலைவர், அயில்மேல் அமர்த்த கண்ணாய் - வேலொடு மாறுபட்ட கண்களையுடையாய், பிரிந்தார் அல்லர் - உண்மையில் நின்னைப் பிரிந்து சென்றனர் அல்லர்; அன்புமிக்கு - அன்புமிகுந்து, பயினோடு சேர்த்திய கல்போல் துணையை - அரக்கொடு சேர்க்கப்பட்ட கல்லை ஒக்கும் உள்ளம் பிரியாப் பெடைப் பறவையை, பயிர்ந்த குரல் குயில் மா ஒடுங்கும் பொழுதும் வந்தன்று-அழைத்த குரலையுடைய குயிற்சேவல் மாமரத்திற் சென்றொடுங்குதற்கு ஏதுவாகிய கார்காலத்து மாலைப்பொழுதும் வந்தது; இனிக் கூடுவர்-ஆதலால் நின் தலைவரும் இனி வந்து நின்னைச் சேர்வர் என்பது.

அழகியவாய்க் காண்பார்க்கு மகிழ்ச்சிமிகப் பிறழும் மாதர்கண்களின் இயற்கை, புரளுந்தோறுங் காண்பார்க்கு

அச்சத்தினை விளைக்கும் வேற்படைக்கு இன்மையின் வேலொடு மாறுபட்ட என்றூர்; வடிவத்தால் வேலொடு ஒப்பினுஞ் செயலில் அதனேடொவ்வா கண்கள் என்றவாறு. அமர்த்தல் மாறுபடல், "பெண்டகைப் பேதைக் கமர்த்தன கண்" என்னுந் திருக்குறளிற்போல (௧௦௮௪).

பயினெடு சேர்த்திய கல் பிரிவறியாத் துணைக்கு உவமையாதல், "சிறுகாரோடன் பயினெடு சேர்த்திய கற்போல்" என அஃது அகநானூற்றில் ௧, ௨௫௬ ஆஞ் செய்யுட்களில் இருகாற்போந்தமையாற் கண்டுகொள்க.

'மிக்கு' என்னும் வினையெச்சம் 'பயிர்ந்த' வென்னும் பெயரெச்ச வினைகொண்டு முடிந்தது. பயிர்தல்-அழைத்தல்; "துய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்" என்னும் புறநானூற்றின் (௩௭௮) உரையைக் காண்க. வந்தன்று, வந்தது: அன் சாரியை.

'ஒடுங்கும்பொழுது' என்றது கார்காலத்து மாலையை; குயில்கள் வேனிற்காலத்தில் மகிழ்ந்து கூவுதலும் மாரி காலத்தில் வருந்தி வாயவிதலும் இயல்பு; இவை மாமரத் திலேயே விரும்பியுறையும். வினைமேற் சென்ற தலைவன் வினைமுடிந்து மீண்டு தன் தலைவியைச் சேருநேரம் இதுவே யென்பது "பெரும்பெயல் பொழிந்த சிறு புன்மாலை" (௬) என முல்லைப்பாட்டிற் குறிக்கப்படுதல் இங்கு நினைவு கூரற் பாலது. எனவே, தலைவன் வருங் கார்காலத்து மாலைப் பொழுது வந்ததென்று தோழி தலைவிக்குப் பருவங்காட்டி அவளை ஆற்றுமை தணியுமாறு வற்புறுத்தினளாயிற்றென்க. (௧௨)

## ௧௩. அருள்நிலை வியத்தல்

எல்லாம் வல்ல இறைவன் தமக்குப் பிறவிகடோறுஞ் சிறிது சிறிதாக மெய்யறிவு தோற்றுவித்துப், பின்னர்த் தன் இன்னருளை வழங்கியருளிய அருணிலையை அடிகள் வியந் துரைத்தல் இப்பாட்டின் பொருள்.

(௧-௭) கூடிய இருளின் வாடுவது ஒன்றோ-இயற்கையே பொருந்திய மலவிருளின்கண் அழுந்தி வருந்துவது ஒன்று

மட்டுமோ, பீடு உயர் நின்புகழ் நாடாது ஒன்றே-பெருமை மிகுந்த தேவரீரது அருட்புகழை விரும்பாமை ஒன்று மட்டுமோ; பெறுவது அறியாச் சிறுமை ஒன்றே - பெறுதற் குரிய நிலையை அறிந்துகொள்ளமாட்டாத சிறுமையுடைமை ஒன்று மட்டுமோ, மருவரக்கிடந்த தெரிவு இல்காலத்து- இங்ஙனம் இந்நிலைகள் எல்லாம் பொருந்தக்கிடந்த ஏழை யேனது தெரிதல் இல்லாத காலத்தில், பொருவுஇல் இன்பம் தருவது குறித்து - ஒப்பில்லாத பேரின்பம் அளிப் பது திருவுளங்கொண்டு, புல் முதலாகிய மெய்யில் புகுத்தி ஓர் அறிவு உறுத்தினை சிலநாள் - புல் முதலான நிலையியற் பொருளுடம்புகளிற் செலுத்திப் பிறவிகளைத் தோற்றுவித்து அவ்வாற்றால் 'ஊற்றுணர்வு' என்னும் ஓர் அறிவினைச் சில காலம் அறிவுறுத்தா நின்றாய்;

'இருள்.' ஆணவ மல வல்லிருள். அஃது உயிர்களை இயற்கையே பிணித்திருத்தலாற் 'கூடிய இருள்' எனப் பட்டது. ஆணவ இருள் உயிர்களை இயற்கையே பொருந்தி நிற்கும் உண்மை,

"அருளுடைய பரமென்றே அன்று தானே
யானுளனென் றும்எனக்கே யாண வாதி
பெருகுவினைக் கட்டென்று மென்றுற் கட்டிப்
பேசியதன் றேயருணூல் பேசிற் றன்றே"

என்று தாயுமானச் செல்வர் (ஆகாரபுவனம் சிதம்பர ரகசியம், உசு) சிக்கறுத்துத் தெளித்துக் கூறியருளிய செம்மொழிப் பாட்டால் இனிது விளங்காநிற்கும்.

'ஒன்றே' வென்பது எண்ணிடைச்சொல்; இஃது "அறனென்றே ஆன்ற ஒழுக்கு" என்னுந் திருக்குறள் (சசஅ) அடிக்குப் பரிமேலழகருரைத்த வுரையானும், "மாநகர் சுடுத லொன்றே மதனனை யழித்தலொன்றே" என்னுஞ் சீவக சிந்தாமணிச் செய்யுளானும் அறியப்படும்.

நாடாதது எனற்பாலது 'நாடா' தென நின்றது தொகுத்தல்; இது தொழிற்பெயர்; 'பெறுவது' வினையால ணையும் பெயர்.

சிறுமை, இங்குச் 'சிறுமையுடைமை'யென்க; உடைமையாந் தன்மை உடைமைமேல் ஏற்றிக்கூறப்பட்டது.

'வாடுவதொன்றே, நாடாதொன்றே, சிறுமையொன்றே' என்பன முறையே உயிர்களின் மலமறைப்பையும், அம்மறைப்பினு லான அறியாமையையும், அவ்வறியாமையா லான சிறுமையையும் உணர்த்தாநின்றன.

'மருவர' என்பதன்முன், 'இங்ஙனம்' அல்லது 'இவ்வாறு' என ஒரு சொல் வருவித்துக்கொள்க. மருவரல், மருவல்'கிடந்த' வென்னுஞ்சொல் இங்குச் செயலற்றுக்கிடந்தமையினை யுணர்த்திற்று.

உயிர்கள் பிறவிக்கு வராததன்முன் ஆணவ மல வல்லிருளால் முழுதும் விழுங்கப்பட்டு, அறிவுவிளக்கந் தினைத்தனையு மின்றித், தம்மையுந் தம்மையுடைய தலைவனையுந் தம்மை விழுங்கிய மலவிருளினையும் அறியமாட்டாமல், இயற்கையே யுணர்வில்லாக் கல்லுங்கட்டையும்போற் கிடத்தலின், அக்காலம் இங்குத் 'தெரிவில் காலம்' எனப்பட்டது. உயிர்களுக்கு அஃதோர் இருள்நிலையாகும் சமயச் சான்றோர் இதனைக் 'கேவலநிலை' யென்ப.

'பொருவில் இன்பம்' வீடுபேற்றின்பம்; தருவது. தொழிற்பெயர்; குறித்து, குறிக்கொண்டு.

'புல்' என்றது இங்கு உடம்புக்கு: ஏனையவற்றிற்கும் இஃதொக்கும்.

'சில நாள்' என்பது இங்கு எத்தனையோ ஆண்டுகளைக் குறியாநின்றது. ஏனைப் பல பிறவிகளின் அளவில்லாக் காலவெல்லையை நோக்கப் புன்முதலாகிய மெய்யிற்புகுத்தி ஓரறிவுறுக்கும் அளவில் நாட்கள் சிலநாட்களாயினவென்க. மேல்வருவனவும் இங்ஙனமே கொள்ளற்பாலன.

வினையிலே கிடக்கும் உயிர்களை அவ்வினையினீங்கிய இறைவன் இவ்வாறெல்லாம் புன்முதலான மெய்யிற்புகுத்திப் பிறவியுட்படுத்துமாற்றல் அவற்றின் அறிவைக் கிளர்ந்தெழுமாறு செய்து ஆட்கொள்ளும் அருட்டிற

மெல்லாம் மெய்யருள் நிலை கைவந்த பொய்யில் திருவாதவூரர்,

"வினையிலே கிடந்தேனைப் புகுந்துநின்று
போதுநான் வினைக்கேடனென்பாய் போல
இனையனுன் என்றுன்னை யறிவித் தென்னை
யாட்கொண்டெம் பிரானானாய்"
(திருவாசகம் திருச்சதகம், உஉ)

என்று மிகத் தெளிவாக எடுத்தோதியிருத்தல் பெரிதுங் கருத்திற் பதிக்கற்பாற்று.

(எ-அ) சிலநாள்-சிலகாலம், நந்து முதலாகிய உடம்பில் புகுத்து - நத்தை முதலான உடம்புகளிற் புகுத்திவைத்து, தந்தனை ஈர் உணர்வு-இரண்டறிவுகள் கொடுத்தருளினை;

'நந்து' ஈரறிவுயிராதல், "நந்தும்முரளும் ஈரறிவினவே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்திற் காண்க (மரபியல், உஅ).

ஈருணர் வென்பன, மெய்யினால் தொட்டறியும் அறிவும், நாவினாற் சுவைத்தறியும் அறிவுமாம்.

(அ-கக) சிலநாள்-சிலகாலம், சிதல் முதலாகிய குரம்பையில் செலீஇ-கறையான் முதலான உடம்புகளிற் செலுத்தி, மூ உணர்வு உணர்த்தினை-மூன்றுவகையான உணர்வுகளை உணர்த்தியருளினை;

எறும்பு முதலானவைகளுஞ் சிதலினத்திற் சேர்க்கப் படும்; "சிதலும் எறும்பும் மூவறிவினவே" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார் (மரபியல், ௩O).

செலீஇ: பிறவினை வினையெச்சம்; இசைநிறையளபெடை. இது பிறவினைக்கண் வருதல், "மேல்கொண்டவை செலீஇ" என்னும் புறப்பொருள் வெண்பாமாலைச் செய்யுளடியிற் காண்க (கஉ, கஅ); இது சென்று எனத் தன்வினை வினையெச்சமாயும் வரும்.

மூன்றுவகை உணர்வுகளாவன, மேற்காட்டிய இருவகை யுணர்வுகளோடு மூக்கினால் முகந்துணரும் உணர்வுமாகும். மன்னும் ஓவும் அசை.

(கக-கரு) சிலநாள் - இன்னுஞ் சிலகாலம், நண்டு முத லாகிய பொன்று உடல் கடவி - நண்டு முதலாகிய அழியும் உடம்புகளிற் செலுத்தி, நான்கு அறிவு ஓங்குறச் செய்தனை - நான்கு அறிவுகள் கிளர்ந்தெழுமாறு செய்தருளினை;

நண்டோடு இனப்பட்ட நான்கறிவு உயிர்கள் தும்பி முதலாயினவாதல், "நண்டுந் தும்பியும் நான்கறி வினவே" (தொல்காப்பியம், மரபியல், ருக) என்பதனுன் அறிக.

ஏனைய உடம்புகளும் அழியும் பெற்றியவேனும், மாந் தரில் ஊன் உண்பார் கூட்டம் பெரும்பான்மையும் இந் நண்டு முதலான உடம்புகளைக் கொன்றழிக்கின்றதாகலிற், 'பொன்றுடம்பு'எனக் கிளந்தோதினர்.

'கடவல்' செலுத்தல்; இஃதிப்பொருட்டாதல் "கை யொளிர் வேலவன் கடவ" என்புழிக் காண்க (புறப்பொருள் வெண்பாமாலை கஉ, க, கொளு.)

இதன்கட் கூறப்படும் நான்காவது அறிவு கண்களாற் கண்டு அறியும் அறிவாகும். ஓங்குற, ஒருசொல்.

(கரு-கசு) ஈங்கு - இப்பால், மாவும் மாக்களும் மேவிய பின்றை - விலங்குடம்புகளும் மாக்களுடம்புகளும் பொருந் தியபின், ஐஉணர்வு எங்கும் மெய்பெறக் கொளுவி ஒழுங் குற உணர்த்தினை ஒரு சில பகல் - ஐந்து உணர்வுகள் முழுமையும் மெய்யாகவே நிலவப்பொருத்தி ஒழுங்குபெற உணர்த்தியருளினை ஒருசில நாட்கள்.

'ஈங்கு,' என்பது அங்ஙனமெல்லாம் மேற்சென்ற பிறவி களிற் பிறப்பித்து அறிவுவளரச்செய்து பிறகு இப்பால் எனப் பொருள் பயந்தது; இஃது ஐயறிவுடைய பிறவிக்கு வந்ததன் அருமையுணர நின்றது.

'மா'வென்பது விலங்கு; 'மாக்க'ளென்றது, அவ்விலங் குப் பிறப்பினும் உயர்ந்து ஏனைய மக்கட்பிறப்பிற் ருழ்ந்து அவ்விரண்டின் நடுவணதாய் அவற்றிற்கு வேருனதொரு பிறப்பாம். இப்பிறவியுட்படும் 'மாக்கள்' என்னும் உயிர்கள் விலங்கின் உருவமும் மக்களுருவமுங் கலந்ததோருருவத்தை

உடையவாயிருக்குமென்ப. இங்ஙனமொரு படைப்பு விலங்குப் பிறப்பிற்கும் மக்கட்பிறப்பிற்கும் இடையே ஆண்டவனுற் படைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென இக்காலத்து உயிர்நூல்வல்லாரும் உய்த்துணர்ந்து, அங்ஙனம் தாம் உணர்ந்தவாறே யிருப்பதொரு படைப்பினை 'ஆத்திரேலியா' (Australia) என்னும் நாட்டில் நேரிற்கண்டு, தமது துணிபினை மெய்ப்படுத்துவாராயினர். இற்றைக்கு ஏறக்குறைய ஐயாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னரே நம் முதுதமிழ்ப்பேராசிரியராய் விளங்கிய தொல்காப்பியனுர் இவ்வுண்மையை நன்கு தெளிந்து, அவ்வினத்தவாம் உயிர்கட்கு ஐந்து அறிவுகள் உண்டு என அறிவு வரையறை காட்டி "மாவும் மாக்களும் ஐயறி வினவே." (மரபியல், ௯௨) எனத் தமது அரும் பெறல் நூலில்நூற்பா யாத்துரைத்தது பெரிதும் நினைவு கூர்ந்து மகிழற்பாலதாகும்.

முற்கூறப்பட்ட நான்கு உணர்வுகளுடன் செவியாற் கேட்டு உணரும் உணர்வுங்கூட இங்கு ஐயுணர்வுகளுண்டாயின. 'எங்கு'மென்றது, முழுமையுமென்னும்பொருட்டு. செவியுணர்வு பெற்றபின்னரே உயிர்கள் சேய்மைக் கணிருந்து தமக்கு வரும் ஏதம் உணர்ந்து உயிர் பிழைக்கின்றனவாகலின், ஐயுணர்வுகளும் மெய்யாக நிலைபெற்று நிலவல் மாவும் மாக்களுமாகப் பிறவியெடுத்த பின்னரே யாதல் தேற்றுதற்கு மெய்பெறக்கொளுவி என்ருர்; கொளுவல், பொருத்தல், "கலைநலங் கொளுத்தியிட்டான்" என்புழிப்போல (சீவகசிந்தாமணி, ௬எ௧). பகல், நாள்; இங்குக் காலம் என்னும் பொருட்டு.

(கஎ-உக) ஆங்ஙனம் ஒழிந்த அளவுஇல் காலத்து அவ்வாறு கழிந்த அளவில்லாத காலத்தின் எல்லையில், நிறைவுறு குற்றம் முறைமுறை தேய - இயற்கையே நிறைந்திருந்த துகள் அடை வடைவே குறைய, பகுத்து உணர் காட்சி மிகுத்துத் தோன்ற - அவ்வாற்ருற் பகுத்து உணரும் அறிவு மிகுந்து விளங்க, மக்கள் யாக்கையில் தக்கவாநிறுவி-மக்களுடம்பில் தகுதியாக நிறுத்தி, பல பிறப்பு உறீ

இய நாள்களும் பல - பல பிறப்புக்களில் அடியேனை உறுவித்த காலங்களும் பலவாம்.

குற்றம் - மலஅழுக்கு. முறைமுறை - அடைவடைவே, (புறநானூறு, உசு)

'பகுத்துணர் காட்சி'யாவது, எவற்றையும் நல்லது இது தீயது இது எனப் பிரித்து உணரும் ஆருவது அறிவாகும். 'காட்சி,' அறிவென்னும் பொருட்டாதல் 'மருடீர்ந்த மாசறு காட்சியவர்.'' (திருக்குறள், கககக) என்பதனுல் அறியப்படும்.

'உறீஇய' : பிறவினைப் பெயரெச்சம்; (பதிற்றுப் பத்து, சச).

எனவே முதலடிமுதல் இவ்விருபத்தோராம் அடிகாறும் இயற்கையே வினையிற்கிடந்த உயிர்கள் ஆண்டவன் திருவருளாற் புன்முதலான பல பிறவிகளிற் பிறந்து பிறந்து ஓரறிவுமுதலாக ஆறறிவுகள் விளங்கப்பெறுமாற்றை ஆசிரியர் தம்மேல் வைத்துரைத்தமை காண்க. வினையிலே கிடந்த உயிர்கள் இவ்வாறெல்லாம் பற்பல காலமாகப் பல்வகைப் பிறவியுட்பட்டு உழலுமாற்ருல் முறைமுறையே அறிவுபெறுவதான உண்மை பண்டைத்தமிழ்ப் பேராசிரியரான தொல்காப்பியனர் மேலெடுத்துக்காட்டிய மரபியற் சூத்திரங்களில் ஓதியவாற்ருனும், சமயப் பேராசிரியரான மாணிக்கவாசகப் பெருமான்,

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்''
(திருவாசகம், சிவபுராணம்)

என அருளிச்செய்தவாற்ருனும் நன்கறியப்படும்.

(உஉ-கஉ) அவ்வாறு ஒழிந்தனபோகச் செவ்விய இந்நாள் எனக்கு நல் நெறி காட்ட - அங்ஙனம் முடிந்த காலங்கள் கழிய இஞ்ஞான்று எளியேற்கு நல்வழி காட்டும் பொருட்டு, செவ்வந்திப்போந்த - திருச்சிராப்பள்ளியில் தோன்றியருளிய, பொய்யாநாவின் செந்தமிழ் வரம்பு முந்துகண்டுணர்ந்து - பொய்த்தல் அறியாத நாவினுற் செந்தமிழெல்லையை முற்படத் தான் ஓதி உணர்ந்து, மெய்ப் பொருள் அறிவும் சொற்பொருள் வன்மையும் பொறையும் செறிவும் நிறையக்கொண்டு - மெய்ப்பொருள் உணர்வும் சொற்பொருள் ஆராய்ச்சியும் பொறுமையும் அடக்கமும் நிரம்பப்பெற்று, தமிழ்மாணுக்கர் அமிழ்துஎன நுகர விரித்துரை கிளக்கும் தெரிப்பரும் பெருமை - தமிழ்கற்கும் மாணுக்கர்கள் 'இஃது அமிழ்தாகும்' எனச் சுவைத்துணரும் படி விரித்து உரை கூறுந் தெரிதல் அரிய பெருமையை யுடைய, நாராயணன் எனும் தோலாப்புலவோன் நேர்படும் உளத்துச் சீர்பட அமர்ந்து - நாராயணசாமிப் பிள்ளை என்னுந் தோலாத புலவனது செவ்விய திருவுள்ளத்திற் சிறப்புற வீற்றிருந்து, கருவி நூல் உணர்த்தினை பல - கருவி நூல்களாகிய இயற்றமிழ் நூல்கள் பல உணர்த்தியருளினை;

கீழ்ப்பிறவிகளின் துன்பநிலையும் இழிவுங் கருதி அப் பிறவிகளைக் கொண்ட காலங்கள் 'ஒழிந்தன'வென வெறுத்துக் கூறப்பட்டன. அங்ஙனமே பகுத்தறிவு மேம் பாட்டால் மக்கட்பிறவிக்கு உரிய பெருமை கருதிச் 'செவ்விய 'இந்நாள்' 'என அப்பிறவியைக் கொண்ட காலங்கள் சிறப்பிக்கப்பட்டன.

'செவ்வந்தி,' திருச்சிராப்பள்ளி; "செவ்வந்திப் புராணம்" என்னும் வழக்கால் ஈதுணரப்படும். இது 'திரிசிரபுரம்' எனவும் வழங்கும். 'கண்டு,' ஓதி யென்னும் பொருட்டு. மொழியறிவு கொண்டு மக்கள் அறிந்து கொள்ளுதற்குரிய கருத்துக்கள் இங்கு 'மெய்ப்பொருள்' எனப்பட்டன. சொற்பொருள்வன்மை யெனப்படுவது, சொல்லும் அச்சொல்லுக்கு உரிய பொருளுமான இலக்கண இலக்கிய மொழியாராய்ச்சி.

'செறிவு - அடக்கம்; இஃது இப்பொருட்டாதல் "செறிவறிந்து சீர்மை பயக்கும்" என்னுந் திருக்குறளுரையிற் காண்க. "மெய் மொழி மனங்கள் தீநெறிக்கட் செல்லாது அடங்குதல்" அடக்கமெனவும், "காரணம்பற்றியாதல் மடமையா னுதல் ஒருவன் தமக்கு மிகை செய்தவழித் தாமும் அதனை அவன்கட் செய்யாது பொறுத்தல்" பொறையெனவும் திருக்குறள் (அடக்கமுடைமை, பொறையுடைமை) உரைகாரர் பரிமேலழகர் கூறுகின்றமை இங்கு நினைவு கூர்ந்து பொறையும் செறிவும் வேறுவேருதல் உணர்ந்து கொள்க.

'விரித்துரை கிளத்தல்' என்றது, ஈண்டுப் புலமை தோன்ற உரையாடலை, ஆவது 'சொல்வன்மை'யென்க. 'தெரிப்பு' தொழிற்பெயர்.

'நாராயணன்' என்பது அடிகளுக்குத் தமிழிலக்கண இலக்கியங்கள் செவியறிவுறுத்திய இயற்றமிழாசிரியரின் பெயர்; 'தோலாப்புலவோன்' தோல்வியடையாத புலவன். 'தோலாமொழித் தேவர்' எனப் பிறரும் இப்பொருட்டாய்ச் சிறப்பிக்கப்படுதல் காண்க. 'புலவன்,' ஈறுதிரிந்து 'புலவோன்' என்ருயிற்று.

மெய்ப்பொருட்கருத்துக்கள் அறியவேண்டும் ஒருவன் அவற்றை ஒருமொழியின் வாயிலாகவே அறிதல் வேண்டுமாகலின், ஈண்டுத் தமிழ்மொழியின் இலக்கண இலக்கிய நூல்கள் 'கருவி நூல்' எனப்பட்டன. அவையாவன, தொல்காப்பியமும் பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண்கீழ்க் கணக்கு ஐம்பெருங்காப்பியம் முதலாயினவுமாம்.

அடிகள் இப்பகுதியில் தமக்குத் தமிழ்செவியறிவுறுத்திய தம் இயற்றமிழாசிரியரின் அருமைபெருமைகளை இனிதெடுத்துக் கூறி மகிழ்ந்தமை கருத்திற் பதிக்கற்பாலது.

(கூஉ-சசு) அதன்பின்-அதன்பின்பு, ஒருவா யாணர் மருவுறு சென்னைத் தவம்பெறத் தோன்றி - நீங்காப் புது வருவாய் மருவுதலுடைய சென்னை மாநகரின்கண் தவ

முண்டாகத் தோன்றியருளி, நவை அறு தமிழும் வடநூல் பரப்பும் நிலைகண்டு உணர்ந்து - குற்றம் அற்ற தமிழ் நூல் களும் வடநூற்பாவையும் ஆழம்வரையிற் சென்று தெரிந்து, ஆங்கு உள் உறை கருவாய்த் தெள்ஒளி விரிக்கும் சைவ சித்தாந்த முடிபொருள் எடுத்து - அவற்றின்கண் உட் கிடக்கும் முதற் பொருளாய்த் தெளிந்த அறிவொளி விரிக்குஞ் சைவசித்தாந்தம் என்னும் முடிந்த பொருளை யெடுத்து, ஈங்கு அறம் கரை நாவின் திறம்பட விளக்கிப் புறம்படு சமயப் பொய்ப்பொருள் நூறி - இத்தமிழகத்தில் தமது அறத்தையே நவிலும் நாவின் திறம் உண்டாக விளக்கி அவ்வாற்றாற் புறமாய் ஒழியும் புறச்சமயங்களின் பொய்ம்மைப் பொருள்களை அழித்து, நலம் கிளர் தன்மையும் புலம்கொளாக் காட்சியும் இயைந்து ஒருங்கு ஈண்டிய அமையாப்பெருமைச் சோமசுந்தரத் தோம் அறு தேசிகன் - நன்மைமிக்க இயல்பும் எளிதில் அறிதலியலாத அறிவுஞ் சேர்ந்து ஒன்றாய்த்திரண்ட அடங்காப் பெருமையையுடைய சோமசுந்தரன் என்னுங் குற்றமற்ற ஆசிரியனுடைய, உடல் பொருள் ஆவி இடம் எனக்கொண்டு-உடலும் பொருளும் ஆவியுந் தேவரீர் அமருந் திருக்கோயிலெனக் கருதி எழுந்தருளி, பொருள் ஆர் சைவம் தெருளுறக் கொளீஇ- உண்மை நிரம்பிய சைவசமயப்பொருளை அறிவிற் பொருந் தும்படி அறுவுறுத்தருளி, அதற்கு அமை பொருளும் நீ யெனக் காட்டித் திறம்பட உணர்த்தினை மிகவே-அச்சைவ சமயத்துக்கு உரிய முழுமுதற்பொருளுந் தேவரீரே எனத் தெளிவித்துத் திறமுண்டாகப் பெரிதும் உணர்த்தியருளினை; அதன்பின்-அதன்பின்பு;

ஒருகால் வந்த வருவாய் ஒழியுமுன்னரே மீண்டும் மீண்டும் புதுப்புது வருவாய்ப்பொருள்கள் கலத்தானுங் காலானும் மேலுமேலும் வந்து சேர்தலுடைமையின், ஈண்டுச் சென்னபட்டினம் "ஒருவாயாணர் மருவுறு சென்னை" யெனப் பட்டது; 'யாணர்' என்னுஞ்சொல் 'புது வருவாய்' எனப் பொருடரல், "புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி" (தொல்காப்பியம், உரியியல், அக) என்பதனுலறியப்படும்.

"பிரசம் தூங்கும் அறாஅ யாணர்
வரையணி படப்பை நல்நாட்டு"

என்னும் புறநானூற்றின் (கூஎகி) கண்ணும் இச்சொல் இப் பொருட்டாய் வருதலும், அடிகள் இங்கு 'ஒருவா யாணர் என்றாற்போலவே 'அறாஅ யாணர்' என அடையடுத்து வருதலும் நினைவுகூரற்பாலன.

தமிழ்மொழியின்கண் உள்ள நூல்கள் சிலவேயாயினும் அவை பொய்ம்மை நவிலுங் குற்றம் அற்றுப் பட்டாங்கு கிளப்பனவாயிருத்தலின் 'நவையறு தமிழ்' எனவும், வட மொழியின்கண் அவ்வாறின்றி நூல்கள்மட்டும் நிரம்பக் காணப்படுதலின் வாளா 'வடநூற்பரப்பு' எனவும் அவ்விரு பெரு மொழிகளின் வேற்றுமை தேற்றி அடிகள் இங்கெடுத் துக்காட்டிய திட்பநுட்பம் பெரிதும் அறிந்து மகிழற் பாலனவாம்.

'கரு' முதற்பொருள்;

'சைவசித்தாந்தம்' என்னும் மெய்ப்பொருள், முடிந்த அறிவு ஆராய்ச்சிகள் வாய்ந்து அவற்றின் வடிவாய் அமைந் திருத்தலின், அஃது 'ஒளிவிரிக்குஞ் சைவசித்தாந்தம்' எனவும், 'முடிபொருள்' எனவுங் கிளந்தோதப்பட்டது. 'ஒளி'யென்பது ஈண்டு 'அறிவு ஒளி' யென்க. ஏனைச் சமயப்பொருள்கள் அத்தனையும் அங்ஙனம் முடிந்த அறிவாராய்ச்சிகளான் இயலாது அறியாமையிருளும் உடன் விராய் மங்குதலின் இச்சைவசித்தாந்தம் மட்டும் அவற்றின் உள்ளுறை கருவாய்க்கிடந்து தெள்ளொளி விரிக்கும் முடி பொருளாயிற்றென் றுணர்ந்து கொள்க. தமிழ் நான் மறை களிலும் வடநூன் மறைகளிலும் சைவசித்தாந்தம் இங்ஙனம் முடிந்த நிலையில் வைத்து அறிவுறுக்கப்பட்டிருக்கும் அரிய உண்மை,

"வேத மென்னும் பாதவம் வளர்த்தனை
பாதவ மதனிற் படுபயன் பலவே
அவற்றுள்,
இலைகொண்டு உவந்தனர் பலரே இலையொரீஇத்

தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிரொரீஇ
அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
அவ்வா றுறுப்பு மிவ்வாறு பயப்ப
ஓரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா வின்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமுது அருந்தினர் சிலரே''

எனக் குமரகுருபர அடிகள் திருவாய் மலர்ந்தருளிய பண்டார மும்மணிக்கோவை (கO) யடிகளாலும் இனிது விளங்குகின்றமை காண்க.

'அறம் கரை நா,' நன்றுவனவே எடுத்துப் பேசும் நா; அறம் நல்லது. தக்கது; ''அறமென்பது தக்கது'' என்பர் இறையனாரகப் பொருளுரையாசிரியர் (உக).

'புறம்படுசமயங்கள்' என்பன: உலகாயதம், நால்வகைப் பௌத்தம், ஆருகதம் என அறுவகைப்படும் புறப்புறச் சமயங்களும்; தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங் கியம், யோகம், பாஞ்சராத்திரம் என ஆறுவகைப்படும் புறச்சமயங்களுமாம்; இனிப், பாசுபதம், மாவிரதம், காபா லம், வாமம், வைரவம், ஐக்கியவாதசைவம் என அறுவகைப் படும் அகப்புறச் சமயங்களும்; பாடாணவாதசைவம், பேத வாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுவர வவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் என ஆறுவகைப்படும் அகச்சமயங்களும் ஆகும். இவை குறைபாடுகள் பல உடையவாகலின், அவையும் சித்தாந்த சைவத்திற்குப் 'புறம்படுசமயப் பொய்ப்பொருள்'க ளாயின வென்பது.

புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்னும் புறச் சமயங்களின் கோட்பாடுகள் எல்லாம் சிவஞானபோதமாபாடியத் தில் (சிவஞான போதம், அவையடக்கம்) ஆசிரியர் சிவஞான முனிவராற் சமய இலக்கண அளவை நூனெறிகள் வழாமல் நன்கெடுத்து விளக்கப்பட்டிருக்கின்றன. இங்கு

விரிப்பிற் பெருகும். நூறி-அழித்து; "அருஞ்சமந் ததைய நூறி" (புறம். கரு).

இனி இவ்வெல்லாச் சமயங்கட்கும் முடிந்தநிலையில் அமர்ந்து தெள்ளொளி விரிக்குஞ் சித்தாந்த சைவத்தின் சிறந்த கோட்பாடுகளை விளக்கும் வாயில் பின்னே "புலவ ராற்றுப்படையில்" (ககரு-உ0௫) வருதலின், அவைதம்மை அங்கே கண்டுகொள்க.

ஏனையோ ரறிவுக்கு எட்டாத அகன்ற அறிவு இங்குப் 'புலங்கொளாக் காட்சி' யெனப்பட்டது. ஈண்டிய-திரண்ட, (புறம், கஎ) 'அமையா' வென்றது, எண்ணுதற்குஞ் சொல்லு தற்கும் அடங்காத வெனக்கொள்க. தோம்-குற்றம்; "தோமறு கடிகை" (சிலப்பதிகாரம், க0,கூஅ).

'சோமசுந்தரதேசிகன்' என்பார் அடிகளுக்குச் சைவ சித்தாந்த மெய்ப்பொருள் அறிவுறுத்தருளிய சமயாசிரிய ராவர்.

'பொருள் ஆர் சைவம்,' மெய்ம்மை நிறைந்த சைவ சமயம்; மெய்ம்மையாவன ஆண்டவனுக்குப் பிறப்பிறப்புக் கூறுமையும், மாயையும் உயிரும் இறைவனேயெனக் கிளவா மையும் போல்வன. தெருள்-அறிவு (பிங்கலந்தை).

முருகப்பெருமான் பிறப்பிறப்பில்லா முழுமுதற் செம் பொருளாகிய சிவத்தின் இளமைக்கோலமே யாகலின், அவன் சைவசமயத்துக்கு உரியபொருளானனென்பது.

இனித் 'தொழும்பு பூண்'டென்பது தொட்டு 'ஒற்றி யூரெனும் பெயர் முற்றத்தோன்று' மென்பது வரையில் ஐவகை ஏதுக்கள் காட்டித் திருவொற்றியூரென்னும் பெய ரமைப்பு எடுத்தோதப்படுகின்றது.

(சஎ-௫0) தொழும்பு பூண்டு ஒழுகும் அழுங்கா உள் ளத்து-தொண்டு செய்தலை மேற்கொண்டு நடக்கும் அழியாத திருவுள்ளத்தையுடைய, தொண்டரும் நரகரும் அண்டரும் பிறரும்-அடியாரும் நாகரும் தேவரும் ஏனை யோரும், வழிவழி அடிமை பெருகுற எழுதிய ஓலை

கொண்ட ஒரு மரபானும்-தாம் வழிவழி அடிமையாயிருத்தலே மேலும் மேலும் பெருகும்படி ஒற்றிவைத்தெழுதிய ஒற்றி ஓலையினைக் கைக்கொண்டருளிய ஒரு தன்மையானும்.

தொண்டு பூண்டொழுகுதலிற் சிறிதுந் தளர்வடையாமல் மிக்க உறைப்பொடு நிற்கும் உள்ளமே இங்கு 'அழுங்கா உள்ளம்' எனப்பட்டது; அழுங்கல்-அழிதல், "பிணன் அழுங்க" புறம், கூஅ. தொழும்பு-அடிமை; "ஆளுந்தொழும்பும் அடிமையாகும்" திவாகரம்.

'நரகர்' கீழுலகத்தவராவர்; அவர் 'நாகர்.' 'அண்டர்' மேலுலகத்தவர்; அவர் தேவராவார்; சூடாமணி நிகண்டு. 'பிற'ரென்பது இவரல்லாத ஏனை மேன்மேலுலகங்களிருப்பவர். அவர் 'விஞ்ஞானகலர்' முதலியோராவர். இவரெல்லாரும் ஆண்டவனுக்குத் தலைமுறை தலைமுறையாக அடிமைப்பட்டிருத்தலின், இனிமேல் வருந் தலைமுறைகளிலும் அங்ஙனமே அடிமைப்பணி புரிவதாகத் தமது அடிமையை அவன்றிருவடிக்கு ஒற்றிவைத்து எழுதிக் கொடுத்த ஓலையென்பது விளங்க 'வழிவழி யடிமை பெருகுற எழுதிய ஓலை' எனப்பட்டது. 'ஒற்றிஓலை' கொண்டமையின் ஒற்றியூராயிற்றென்பது.

மரபு-தன்மை; "தெறலருமரபு" புறம், கஉசு. 'ஆன்' என்னும் மூன்றனுருபு ஏதுப்பொருளது.

(ருக-ருரு) உலகில் சிறந்து தான் ஒன்றே ஆகியும்-உலகம் எங்கணும் உள்ள ஏனைத்திருப்பதிகளினும் பார்க்கத் தெய்வத்தன்மையாற் சிறந்து அங்ஙனஞ் சிறக்குந் தனிமையால் தான் ஒன்றேயாயிருந்தும், அலகு இல் ஆற்றல் தலைவரும் என்பது-அளவில்லாத தெய்வவலிமை தலைமையாக் கூடுமென்பது விளங்க, வல்ஒற்று ஆக்கிய குறிப்பினும்-மெல்லினமெய் வல்லினமெய் ஆக்கின குறிப்பானும்;

இணையில்லாமையின் தனிமையாயிற்று, அஃதாவது ஒன்றாயிற்றென்பது; அங்ஙனந் தனிமையாய் ஒன்றேயாயினும், பேராற்றலுடையதாகுமென்பது தோன்ற இடைநின்ற னகர ஒற்று வலித்து வல்லொற்றாய் ஒற்றெனப்பட்டுப்,

பின்னர்ப் பெயர்விகுதியாகிய இகரம் மருவி 'ஒற்றி'யாயிற் றென்பது. அலகு-அளவு; ஆற்றல்-வலிமை; பிங்கலந்தை. தலை-தலைமை, (இரேவணசித்தர் சூத்திரம்).

(கச-கரு) ஒற்றை இயக்கும் உயிரே போல-ஒற் றெழுத்தை இயங்கச்செய்யும் உயிரெழுத்தேபோல், நெற்றி அம் கண்ணன் நிலவுதலானும் - நெற்றிக்கண் உடையவ னான சிவபெருமான் இத்திருப்பதியை இயக்கிக்கொண்டு ஆங்கு விளங்குதலானும்;

ஒற்றெழுத்தோடொத்தலின் தானும் 'ஒற்றி'யென்னும் பெயர்த்தாயிற்றென்பது. முன்போற் பெயர்விகுதி புணர்த் துக்கொள்க. மேல்வருவனவற்றிற்கும் இஃதொக்கும். ஏகாரம் இசைநிறை; அம் சாரியை.

(கசு-கஎ) இறைவன் ஐந்தொழில்-படைத்தல் காத்தல் அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் இறைவனுடைய ஐந்தொழில்களையும், நிறைஉயிர்மாட்டுப் பொருந்தச் செய் யும் அரும் திறலானும்-உடம்புகளில் நிறைந்து நிற்கும் உயிர்களின்பாற் பொருந்தும்படி செய்யும் அரியவல்லமை யானும்;

இறைவனைந்தொழில்களின் இயல்புகள் 'நீயே, ஆரு யிர்த் தொகுதிக்குப் பேறுதரல்வேண்டி யைந்தொழி லியற்றுவை மாதோ' (க0. உஎ-அ) என்றவிடத்து விளக்கப் பட்டுள்ளன.

'நிறையுயிர்' உடம்புகளில் நிறைந்து காணப்படும் உயிர்கள்; அன்றிக் கணக்கில்லாத உயிர்கள் எனலுமாம்.

உயிர்கள் திருவொற்றியூரின்கண் வாழ்தலான் ஆண்ட வன் றிருவருளைப் பெறுதற்குரிய தகுதியை யடைந்து அவன்றன் ஐந்தொழில்கள் பொருத்தப் படுகின்றன. அங்ஙனம் அவ்வுயிர்கட்கு அவ்வைந் தொழில்களையும் ஒன்றச்செய்யும் ஆற்றல் உடைமையின் இவ்வூர் ஒற்றியூ ரெனப்படுவதாயிற்றென்பது.

ஒன்றியூர் என்பது ஒற்றியூரென வலித்தது.

(இஅ-இகூ) ஐந்தொழிற்பட்ட ஆருயிர்த் தொகைகள்-மேற் கூறிய அவ்வவ்வகைத் தொழில்களிற் பொருத்தப்பட்ட நிறைந்த உயிர்க்கூட்டங்களை, கந்தழிப் பொருத்தும் மைந்தினும்-'கந்தழி' யென்னுந் தீப்பிழம்பாகிய சிவத்தின் திருவருளில் தலைக்கூட்டும் வலிமையினானும்;

'கந்தழி'யென்பது தீப்பிழம்பு; எல்லாம் வல்ல முழுமுதற் சிவபிரானுடைய தெய்வவியல்புகள் பெரும்பான்மையும் மண்முதலான ஐம்முதற்பொருள்களுள் தீயின்கண் மட்டுமே நன்கு விளங்குதல்பற்றிக் 'கந்தழி'யென்பது இங்குச் சிவபெருமானை உணர்த்துவதாயிற்று.

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்னும்
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே."
(தொல்காப்பியம், புறத்திணையியல், ௩௩)

என்னுஞ் சூத்திரத்தின்கண்ணுங் 'கந்தழி' யென்னும் இச்சொல் தீப்பிழம்பை உணர்த்துமுகத்தால் முழுமுதற் சிவத்தின் வழிபாட்டுக்கு ஓர் ஒப்பற்ற வாயிலாய் நிற்றல் அறியற்பாலது. அடிகட்கு இக்கருத்துண்மை, அடிகளே தாம் பெரிதாராய்ந்து இயற்றியருளிய மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் என்னும் மிகப்பெரிய அரியநூலில் (பக்கம், ௪அ௭-௪௯உ) இத்தொல்காப்பிய நூற்பாவையே யெடுத்து மிக நுணக்கமான விளக்கவுரை விரித்துரைத்தல்கொண்டு நன்கு தெளியப்படும்.

'மைந்து' வலிமை; "மைந்துடைக் கழைதின் யானை" (புறம், ௭௩) என்பதனுரையிற் காண்க.

கந்தழியில் உயிர்த்தொகைகளை ஒற்றும் ஊராகலின், ஒற்றியூரெனப்பட்டது.

(௩௦-௩க) ஒற்றியூர் எனும் பெயர் முற்றத்தோன்றும்-என இவ்வாற்றால் திருவொற்றியூர் என்னும் பெயர் முடிய விளங்கும், பெருநன் மாநகர் திருவின்பொலிந்து-பெரிய நல்ல அழகிய நகரத்தில் சிறப்புடன் விளங்கி;

'முற்ற' என்பது "முற்றத்துறத்தல்", "முற்றக்கடிதல்" எனுஞ் சொற்றொடர்களிற்போல முழுதும் என்னும் பொருட்டு; அஃதாவது எஞ்சாமை; 'ஒற்றியூர்' எனும் பெயர்க்குரிய பொருள்களெல்லாம் எஞ்சாமைப் பெறுதல்.

(சுஉ - சுகூ) குவளைப்பூத்த பவளத்தாமரை - இரண்டு சிறிய குவளைப் பூக்கள் தன்கண் பூக்கப்பெற்ற பவள நிறம் வாய்ந்த ஒரு பெரிய செந்தாமரை மலர், செவிரமும் பணிலமும் புடைபட-பாசியுஞ் சங்குந்தன் மேல்கீழ்ப் பக்கங்களிற் பொருந்த, இடையில் தோன்றியன்ன-அவற்றினிடையே தோன்றினாற்போல, கருநெறிக் கூந்தலும் பெருகிய கழுத்தும் மேலுங்கீழுந் தோன்ற-நெறியினையுடைய கரியகூந்தல் மேலும் பெருத்த கழுத்துக் கீழுமாய் விளங்க, காண்டகு திருமுகம்-அவற்றினிடையிற் காணப்படும் அழகிய திருமுகத்தின்கண், வாலிய நறுமுத்து அன்ன முறுவல் செறிதொறும் மின் என மிளிரும்-வெள்ளிய நல்ல முத்தையொத்த இளநகை தோன்றி மறையும் போதெல்லாம் மின்னலைப்போல் ஒளிவீசும், பொன்மாமேனி மகளிரொடு விளங்கும் தகைசால் தோற்றத்து - பொலிவுகொண்ட அழகிய திருமேனியையுடைய வள்ளி தெய்வயானை என்னும் மகளிரோடு இணைந்து விளங்குகின்ற அழகு நிரம்பிய காட்சியுடன்;

குவளை கண்களுக்கும், பவளத்தாமரை சிவந்த முகத்துக்கும், செவிரம் கூந்தலுக்கும், பணிலம் கழுத்துக்கும் உவமையாகும்.

'திருமுக' மென்பதற்கும், 'தோற்றத்து' என்பதற்கும் முறையே ஏழனுருபும் மூன்றனுருபும் விரித்துக்கொள்க.

அலையொழுங்குபோல் நெளிநெளியாய்க் காணப்படுதலின், 'நெறிக்கூந்தல்' எனப்பட்டது.

'வால்' வெண்மைப் பொருட்டாதல் "வால் வளைமேனி வாலியோன்" (கு: கஎக) என்னுஞ் சிலப்பதிகாரத்தா லுணரப்படும். செறிதொறும்-தோன்றி மறையுந்தோறும், 'தோன்றி' அவாய் நிலையான் வந்தது; 'செறிதல்' இப்பொருட்டாதல், "நளிமலர்ச் செறியவும்" (சிலப்பதிகாரம், உ, குசு) என்பத

தனள். தென்றல், நமன் என்பவற்றில் உம்மை விரித்துக் கொள்க.

தென்றல் தன்னைநோக்கி வீசிவருதல், புலியே சீறி வருதல்போல் அப்போது அவட்குத் தோன்றினமையாற் 'புலிபோலத் தென்றல் நலியு' மென்றாள். 'நலிதல்' இங்குப் பிறவினைப் பொருளது; "நடுங்கஞர் நலிய" என்றார் புறப்பொருள் வெண்பாமாலையிலும் (கஉ, கரு).

காதலன் தனக்கருகில் இருக்குங்கால் இன்பம் விளைத் தல்பற்றி 'நல்வேள்' எனவும், பின் பிரிந்தக்கால் உயிரை வருத்துதல்பற்றி 'நமனானன்' எனவுங் காமவேள் கூறப் பட்டான்.

இயற்கையான மெல்லோசை தமிழ்க்கு உளதாதல் பற்றி 'ஒலி தமிழ்' என விதந்தோதப்பட்டது. 'தமிழென்றது இசைக்குமென்னுங் குறிப்பால் ஈண்டு நான்மறைகளை உணர்த்தின. நான்மறைகளாவன: மூவர் தேவாரமும் மாணிக்கவாசகர் திருவாசகமுமாம்.

தலைமகள் தன் காதலனைப் பிரிந்து பிரிவாற்றாமற் புலம்பும் பொருள் இதன்கண் வெளிப்படுதல் காண்க. (கசு)

## கரு. அருமைசெய் தயர்ப்பத் தலைவி கூறல்

மேலான முத்தே - சிறந்த முத்துப் போன்றவனே - திரு வொற்றி மேவிய வேலவனே-திருவொற்றி நகரைப் பொருந் திய வேன்முருகனே, கோலாகலம் செய்து கூடாமல் ஏகல் குறைவு கண்டாய்-காமவேட்கை மிகுதற்கு உரியன வெல் லாஞ் செய்து பின் அவ்வேட்கை தணிதற்கான கூட்டத்தை நல்காமற் செல்லுதல் நினது அருட்டன்மைக்கு ஓர் இழுக் காகுங்காண், நூலா உடைகட்டி-மக்கள் கையால் நூற்கப் படாத ஆடையினை யுடுத்து, ஏலாத குன்றினும்-தனது வன் றன்மையால் நின் மென்றன்மைக்கு இசையாத கன்மலை மேலும், நோன்மைமிகும்-பொறுக்கும் ஆற்றல் மிக்க, கோலா உயர் குணக்குன்றினும்-அமைக்கப்படாத உயர்ந்த குணமாகிய மலைமேலும், சென்ற குறிப்பு அறிந்து-போய்

அமர்ந்த அருட்குறிப்பை அறிந்து வைத்தும் என்க; ஏ: அசை.

இச்செய்யுள், தலைமகன் தன்னைக் காதலித்த தலைவிக்கு எளியனாய் வந்தான்போற் கலவிக்குமுன் செய்வனவெல்லாஞ் செய்து பின் கலத்தலைச் செய்யாது அதற்கு அரியனாகித் தனக்கு மனக்கவற்சியினை விளைவித்த வன்கண்மையினைத் தலைமகள் தன் றலைமகற்கு எடுத்துரைக்கும் நிலையில் வைத்துப் பாடப்பட்டது.

திருவொற்றி நகர் கடலையடுத்துள்ளதாதல் உட்கொண்டு கடலுள் மறைந்துகிடந்த முத்து மக்கட்குப் பயன் படுத்தற்பொருட்டுக் கரைமேல் வந்தாலென்ன, உலகெங்கும் மறைந்து நிறைந்து நிற்கும் இறைவன், தன்னை வேண்டும் அடியாற்கு அருள்புரிதற் பொருட்டு இந்நகரின்கண்ணே திருவுருக் கொண்டு விளங்கினான் என்பது குறிப்பிப்பார் 'மேலான முத்தே' என்றார்.

கோலாகலம் - முறை பிறழ்ந்த நிலை; இச்சொல் 'கோலாலம்' எனத் திருவாசகத்தில் வந்தது; ''கோலாலமாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த, ஆலால முண்டான்'' (திருச்சாழல், அ). இஃது ஒலிக் குறிப்பு, வடசொல் அன்று.

'நூலா உடை' என்பது ஒருவர் கையான் நூற்கப்படாமல் அடியார் பொருட்டுத் தோற்ற மாத்திரையாய்த் தோன்றும் ஆடை; இறைவன் கொண்ட உருவும் அவ்வுருவின்மேற் காணப்படும் ஆடை அணிகலம் முதலியனவுமெல்லாம் அவனருளிற் றோற்ற மாத்திரையேயாய்க் காணப்படும் இயல்பு,

"உருவருள் குணங்க ளோடும் உணர்வருள் உருவிற் றோன்றுங்
கருமமும் அருள்அ ரன்றன் கரசர ணாதி சாங்கந்
தருமருள் உபாங்க மெல்லாந் தானருள் தனக்கொன் றின்றி
அருளுரு வுயிருக் கென்றே ஆக்கினன் அசிந்த னன்றே''

என்னுஞ் சிவஞான சித்தியார் சுபக்கச் செய்யுளால் (க, சஎ) உணர்த்தப்படுதல் காண்க. "நூலா உடை" இப்பொருட்

டாதல் பதிற்றுப்பத்தில் ''நூலாக்கலிங்கம் வாலரைக் கொளீஇ'' (கஉ, உக) என்பதனுரையிலுங் காணப்படும்.

கோலல்-வளைத்துச் செய்தல். இஃதிப்பொருட்டாதல், ''நெடுங்காழ்க் கண்டங் கோலி'' என்னும் முல்லைப்பாட்டடியிலுங் (சச) காண்க; கையால் வளைத்து அமைக்கப்படுஞ் செய்குன்றின் வேறு பிரித்தற்குக் ''கோலா உயர் குணக் குன்று'' என்றார்; ''குணமென்னுங் குன்றேறி நின்றார்'' என்பது திருக்குறள்.

மாயையில் உருவு கொள்ளாமல் அருளில் உருவு கொண்ட இறைவன் மெய்யன்பர் பொருட்டு, மாயையில் உருக்கொண்ட கன்மலை மேலும் எழுந்தருளினனென அவனது அருளிரக்கங் கூறினர். அத்துணை அருளிரக்கமுடைய இறைவன் எளியேன்மேல் இரக்கமிலனாய தென்னையென்பதாம். (கரு)

## கசு. அருணிலை யுரைத்தல்

நிலையில்லா இன்பங்களை நிலையினவாக எண்ணி அவற்றின்கட் படிந்து மாந்தர் வீணே கழிகின்றாராகவுந், தமக்கு மட்டும் நிலையான இன்பம் ஈதெனத் தெரிவித்துத் தனது திருக்கோலக் காட்சியினையும் நன்கு புலனாக்கியருளிய எல்லாம் வல்ல ஆண்டவனது பேரருணிலையினை அடிகள் வியந்து கனிந்தேத்தும் பொருளியல் இதன்கண் நுவலப்படுகின்றது.

(க-உ) அறிவும் அவாவும் ஒருவழிச் சென்றாங்கு-அறிவும் அதன்வழி அவாவும் ஒருநெறியிற் சென்றாற்போற் றோன்றி, ஒரு திறம், இன்றிப் பலதிறம் படும்-ஒருவகையின்றிப் பலவகைப் படுமென்பது.

'தோன்றி'யென ஒரு சொல் வருவித்துரைக்க.

(ங-கரு) குய் கமழ் கறியும்-தாளிப்பு மணக்குங் கறிகளும், நெய் கமழ் துவையும்-நெய் மணக்குந் துவையலும், பொன் நிறப் புழுக்கலும் - பொன்னிறமான பருப்பும், கன்னல் பெய்

பாலும்-சர்க்கரை பெய்த ஆவின் பாலும், தன் நிகர் குழம்பும்-தனக்குத் தானே ஒப்பான குழம்பும், பண்ணிய வகையும்-வடை இன்னுண்டை இன்னடை முதலான தின்பண்ட வகைகளும், மிக்கெழு சுவையின் முக்கனி வகையும்-மிக்குத் தோன்றுகின்ற சுவையினையுடைய மா வாழை பலா என்னும் மூன்று பழவகைகளும், கோழ் அரை வாழைக் குருத்து அகம் விரித்து-வழுவழுப்பான அரையினையுடைய வாழையின் குருத்தை உள்விரித்து, பால்கெழு தன்மையின் பலவேறு அமைத்து-பரிமாறவேண்டும் முறையிற் பலவேறு வகையாக வைத்து, முரவை போகிய முழு வெள் அரிசி கைவல் மடையன் அடுதலின்-கீற்றுகள் அற்ற முரியாத வெள்ளிய அரிசியைக் கை தேர்ந்த சமையற்காரன் சமைத்தலால், நெய் கனிந்து விரல் என நிமிர்ந்த அவையல் மென்பதம்-நெய்கசிந்து விரல்போல் நெடுகிய குற்றலரிசியின் மெல்லிய சோற்றை, முல்லை முகை என மெல்லிதின் குவைஇ - முல்லை யரும்புகள் என்னும்படி மென்மையாய்க் குவித்து, புழுக்கலும் பிறவும் அளாஅய் - முன்னர் இலையிலிட்ட பருப்புங் கறிகள் குழம்பு கள் முதலானவுங் கலந்து, விழுத்தக நெய் உடன் பெய்து-மணமுஞ் சுவையுஞ் சிறக்க ஆவின் நெய்யும் உடன் கூட்டி, மெய் மறந்து உண்டாங்கு-தன்னை மறந்து உண்டபடியே, ஆனது உறைவோர் அளவிலர்-பின்னும் மனமமையாமல் வாழ்வோர் அளவில்லாதவராவர்;

'பொன்னிறம்' என்பது ஈண்டு மஞ்சள் நிறம்; ஆதலாற் 'பொன்னிறப் புழுக்க'லென்பது பொன்னிறமான துவரம் பருப்பின் புழுக்கல்; புழுங்க வெந்த பருப்புப் புழுக்கல் எனப் பட்டது; "அவரை வான் புழுக்கு" என்றார் பெரும்பாணாற்றுப் படையிலும் (கசுசு). பாலை இலையில் தனியே பெய்தல் ஆகாமையிற் கிண்ணத்திற் பெய்து வைத்து என்க.

தின்பண்டங்கள் வட்டம், உருண்டை, தட்டை முதலிய பல வேறு வடிவங்களில் விரல்களை யியக்கிப் பண்ணப்படு தலின், அவை 'பண்ணிய' மெனப்பட்டன.

அரை, அடிமரம்; கோழரை, பொரியரை, பொகுட்டரை, முள்ளரையென்னும் நால்வகை மரவகைகளுட் கோழரையும் ஒன்றென்க. கோழரை, வழுவழுப்பான அரை.

'பால்கெழு தன்மையிற் பலவேறு அமைத்து' என்றது, பருப்பு பச்சடி அவியல் பொரியல் வறல் கூட்டு முதலியவை களை இலையில் வைக்கவேண்டும் முறையிற் பரிமாறுதலை உணர்த்திற்று.

'முரவை', அரிசியிற் காணப்படும் வரி; மிக்க வேக் காட்டினாலும் காய்ச்சலாலும் அரிசியின்கட் கட்டுவிட்டுக் காட்டும் வரிகளும் 'முரவை' யெனப்படுமென்பாருமுளர்.

'அவையல்' குற்றலரிசி; "ஆய்தினை யரிசி யவைய லன்ன" (பொருநராற், கசு) என்புழி உரைகாரர் நச்சினார்க் கினியர் 'அவையல்' என்பதற்கு இப்பொருளே உரைத்தமை காண்க. பதம், சோறு.

விரலென நிமிர்ந்த சிறுவெண் சோறு முல்லை முகை களையே முழுதொத்திருத்தலின், ஏனை இலக்கியங்களும் அம் முல்லை முகைகளையே சிறப்பாயெடுத்து அதற்கு உவமை காட்டுவவாயின. "முல்லை முகைசொரிந்தாற் போன்றினிய பாலடிசில்" (உசுஉ௯), "முல்லைமோட் டிளமுகையின்...வெண் சோறு" (உகூஉ) எனச் சீவகசிந்தாமணியின்கண் வருதலும் இங்கு நினைவுகூரற்பாலது.

'விழுத்தக' இன்னும் மேம்பட நெய்யும் உடன்பெய்து என்றவாறு. 'முரவை போகிய முழு வெள்ளரிசி கைவன் மடைய னடுதலின் விரலென நிமிர்ந்த வவையன் மென்பதம் முல்லை முகையென மெல்லிதிற் குவைஇ' என்னும் பகுதி,

> "முரவை போகிய முரியா வரிசி
> விரலென நிமிர்ந்த நிரலமை புழுக்கல்"

என்னும் பொருநராற்றுப்படையடிகளொடு (கசுக௩-ச) பெரும் பான்மையும் ஒத்துநிற்றல் காண்க.

இவ்வகையாக வயிறுபுடைப்ப இனிய உண்டு அம் மகிழ்வினால் மயங்கிக் கிடப்பதே அறிவின் பயனாமென அது செய்து கிடப்பாரும் உலகத்திற் பலரென்க.

இனி, கசு-ஆம் அடிமுதல் ௩௩-ஆம் அடிகாறும் உலகக் காட்சிகளைக் கண்டு அறிவு மாழ்குவார் நிலையை எடுத்

துரைக்கு முகத்தால் நானிலக் காட்சிகள் நன்கு விரித்தோ தப்படுகின்றன.

(கசு-உஉ) முகில் தொடுகுடுமியும்-தீண்டுகின்ற முகிலாகிய குடுமியும், முழை கெழு வாயும்-பொருந்துகின்ற குகையாகிய வாயும் உடைத்தாய், அருவி என்னும் அறுவையும் உடீஇ-அருவிகள் என்னும் உடையும் உடுத்து, அந்திக் காலத்து ஞாயிறொடு பொருது-சாய்ங்காலத்திற் கதிரவனொடு போர்செய்து அவ்வாற்றாற் காணப்பட்ட, செவ்வான் என்னும் மெய்கால் குருதியும் - செவ்வானம் என்னும் மெய்பொழியுஞ் செந்நீரும், கணை தொடு புண்ணின் முகுளித்தன்ன பவளமும்-அம்புகள் பட்ட புண்ணினின்றுங் கொப்புளித்தாற் போன்ற பவளங்களும், சிதர்ந்த - சிந்திய, திவள் ஒளி கெழூஉம் அரக்கன் அன்ன பொருப்பின் காட்சியும்-விளங்கிய ஒளிகள் பொருந்திய அரக்கனை ஒக்கும் மலையின் தோற்றமும்;

இது குறிஞ்சி நிலத்தின் காட்சியை எடுத்து விரித்தோதுகின்றது. இதன்கட் குறிஞ்சிநிலத்து மலை ஓர் அரக்கனுக்கு ஒப்பாக வைத்து அழகாகப் புனைந்துரைக்கப் பட்டிருக்கின்றது. மலையுச்சியில் வந்து தவழுங் கருமுகில் அம்மலையென்னும் அரக்கனுக்குக் குஞ்சியாகவும், குகைகளின் சந்து வாயாகவும், அருவி உடையாகவும், செவ்வான் செந்நீராகவும், செந்நீர்க் குமிழி பவளமாகவும் எடுத்துக் காட்டிய அழகு பெரிதும் உணர்ந்து மகிழற்பாலதாகும். பெரிய தோற்றமுங் கரிய நிறமுமுடையதாய் முட்செடிகளுங் கற்பாறைகளும் மலிந்து தோன்றுதலின், மலை அரக்கனுக்கு நிகராயிற்று. மலை அரக்கனோடு ஒப்பவைத் துரைக்கப்பட்டமையின் அதற்கேற்பப் போர் நிகழ்ச்சியும் பொருத்தமாய் எடுத்துக்காட்டிய நுட்பங் குறித்துணர்க.

இடையே சிலசொற்கள் வருவித்துக் கொள்க. செவ்வான் என்னுங் குருதி யென்பது. குருதியும் பவளமுஞ் 'சிதர்ந்த' வென்பதன் வினை முதல்கள். ஒளிகெழூஉம் பொருப்பின் காட்சி யெனக் கூட்டுக. 'அறுவை,' உடை;

"காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇ" என்பது சிறுபாணாற் றுப்படை (உகசு). காலல், பொழிதல்.

(உகூ-கூக) மடமான் பிணைகள் கன்றொடு குழீஇக் கான் யாற்று ஒண்புனல் நிரைநிரை அருந்த-மென்றன்மை வாய்ந்த பெண்மான்கள் தத்தங் கன்றுகளுடன் கூடிக் கொண்டு காட்டாற்றின்கண் உள்ள விளக்கம் மிக்க தண்ணீரை வரிசை வரிசையாய் நின்று பருகவும், கானம் கோழி துணைகூப்பெயர்ந்து ஞாயிறு தோன்றும் காலை அறி விப்ப - காட்டுக்கோழிகள் வைகறையில் எழுந்து தத்தம் பெடையினங்களைக் கூவி அழைக்குமுகத்தால் ஞாயிறு தோன்றும் விடியற்காலத்தினை மக்கட்குத் தெரியப்படுத்த வும், நிறம் கெழு தாரா குறும்கயம் மருங்கில் குறுகுறு நடந்து நீந்த - நிறம் பொருந்திய தாரா என்னும் நீர்ப் பறவை சிறிய குட்டையின் அருகிற் குறுகுறுவென நடந்து நீரிற் பாய்ந்து நீந்தவும், வெறிபடு தளவம் அரும்பி எயிறு என விளங்க-மணம் வீசும் முல்லை மொட்டுகள் அரும்பி வெண்பல் என விளங்குதலானும், கொன்றை பொன்வீ உகுப்ப-கொன்றை மரங்கள் பொன்னிறமான மலர்களை உதிர்த்தலானும், மன்றல் காவதம் கமழும் காடுகெழு காட்சியும் - காவதத்தொலைவு நறுமணங் கமழுங் காட்டின் கட் பொருந்திய தோற்றமும்;

இப் பகுதியின்கண் முல்லை நிலத்தின் காட்சி விரித் துரைக்கப் படுதலின் அந் நிலத்திற்கு உரிய மான்பேடுங் கான்யாறுங் கானங் கோழியுந் தாராவுந் தளவமுங் கொன் றையு முதலான கருப்பொருள்கள் இனிதெடுத்துக் காட்டப் பட்டன.

மடம்-மென்றன்மை; "தெறிநடை மடப்பிணை" (புறம், உ௲) என்பதன் உரையிற் காண்க. கவரிமா, மான் முதலிய கான்விலங்குகளின் பெண்ணினங்கள் 'பிணை' எனப்படும். இப்பொருண் மரபின் உண்மை,

"புல்வாய் நவ்வி யுழையே கவரி
சொல்வாய் நாடிற் பிணையெனப் படுமே"

என்னுந் தொல்காப்பிய மரபியல் நூற்பாவால் (குஎ) இனி துணரப்படும்.

தெளிந்த நீர் இங்கு 'ஒண்புனல்' எனப்பட்டது.

'துணைகூப்பெயர்ந்து' என்பது முதற்பாட்டினும் (கo) வந்தமை காண்க.

'குறுங் கயம்' சிறிய குளம்; ஆவது குட்டையென்க.

அருந்த, அறிவிப்ப, நீந்த என்னும் வினையெச்சங்கள் கொண்டு முடியுந் 'தோன்றும்' என்னும் ஒரு சொல் வருவிக்க.

'விளங்க', 'உகுப்ப' வென்னும் வினையெச்சங்கள் காரணப் பொருளன.

'காவதம்' என்பது எண்ணுயிர முழத்தொலைவு; ஆவது இரண்டேகாற் கல்லும் எண்பது முழங்களுமென்க. இச் சொல் இவ் வளவினையே குறிக்குமென்பது, அடிகளே தாம் அரிதின் ஆராய்ந்து எழுதிய மாணிக்கவாசகர் வரலாறுங்காலமும் என்னும் உரை நடை நூலில் (பக்கம், கஎo) மிக விரிவாக ஆராய்ந்து விளக்கப்பட்டிருத்தல் காண்க.

(ருஉ-ருஅ) கொழுவளை ஈன்ற செழுநீர் முத்தம் செந் தாமரையின் மிளிர்வன-கொழுவிய வலம்புரிச் சங்குகள் ஈன்ற செழுநீர்மை வாய்ந்த முத்துக்கள் செந்தாமரை மலர் களின்மேல் விளங்குவனவான தோற்றம், மங்கையர் திரு முகம் குறுவியர் பொடித்தல் மான-மங்கைப் பருவத்துப் பெண்களின் அழகிய முகங்கள் சிறுசிறு வியர்வைத் துளிகள் அரும்புதலை ஒப்பவும், குடம்புரை செருத்தல் தடங் கண்மேதி-நீரின்கட் படிந்துள்ள குடம் ஒக்கும் மடியையும் அகன்ற கண்களையும் உடைய எருமைகள், இல் உறை குழக்கன்று உள்ளுதொறும் ஒழுகும் தீம் பால்-வீட்டில் உறையுந் தம் இளங் கன்றுகளை நினைக்குந் தோறும் அவற் றின் மடிகளிலிருந்து சுரந்தொழுகுந் தித்திப்பான பாலை, மாந்தி - பருகி, பருவரால் உகள-பரிய வரால் மீன்கள் புரள வும், மலிபூம் பொய்கை மருதக்காட்சியும் - இவ்வகையான

அழகுகள் மலிந்த மலர்ப் பொய்கைகள் ஆங்காங்கு விளங்கும் மருதநிலத் தோற்றமும்;

நீர், நீர்மை, இயல்பென்னும் பொருட்டு; 'மிளிர்வன' வானதோற்றம் என ஒரு சொல் வருவித்துரைக்க; மிளிர்வன: வினையாலணையும் பெயர்; பொடித்தல், அரும்புதல்.

'செருத்தல்', எருமை, ஆன் என்பவற்றின் மடியை உணர்த்திவரும். "குடம்புரை செருத்தற் குவளைமேய் கயவாய்க் குவிமுலைப் படர் மருப் பெருமை" என்றார் சீவக சிந்தாமணியிலும் (உக0உ).

இங்குக் கூறப்படும் மருதநிலக் காட்சி மிக அழகிது.

(கூ௬-கூஉ) தேற்றாப் புலவர்நூல் திறம்கடுப்ப - தெளிவடையாத புலவரது நூலி னியல்பை ஒப்ப, எழுவாய் ஓங்கி முறைமுறை தேய்ந்து கரைசார்ந்து அவியும் திரையே - எழுமிடத்திற் பெரிதாய்ப் பின் வரவரக் குறைந்து சிறிதாகிக் கரைசேர்ந்து அழியும் அலையும், கரை தொடுத்து மறுகரை காணாது அகன்று நனி ஆழ்ந்து-ஒருகரை தொடங்கி மறுகரை காணவொட்டாமல் அத்துணைப் பரந்து மிகவும் ஆழமுடைத்தாய், நல்லிசைப் புலவர் செய்யுள்போல - மறுவற்ற நல்ல புகழையுடைய புலவரது செய்யுளைப்போல், பல்பொருள் செறித்த கடலே-முத்து சங்கு முதலான பல அரிய பண்டங்கள் நிரம்பிய கடலும், பொல்லா ஒழுக்கம் தலைவந்த பழிப்புடையாளரும்-தீய வொழுக்கத்தில் முன்வந்து பழிப்பினையுடைய தீயோரும், விழுக்குணம் மேவுவரென்பது நலத்தக - சிறந்த நல்லியல்பினை உடையராவர் என்னும் உண்மை நன்கு பொருந்தும்படி, முள் உடைக் குழையிடைக் கொள்ளை மணம் அவிழ்த்து வாலிதின் விரிந்த கைதை அம் கழியே-நுனியிலும் ஓரங்களிலும் முட்கள் உடைய பசிய மடல்களினிடையில் மிக்க மணம் பரப்பி வெள்ளிதாய் அலர்ந்த தாழம்பூவினையுடைய கழியும், மின் சிதர்ந்து அன்ன பொன் சிதர் பரப்பி - மின்னொளி சிதறினாற்போலப் பொன்னிறமான பூந்தாதுகளை எங்குஞ் சிந்தி, எரி கிளர்ந்தன்ன விரிபூஞாழல் பொழிலே-தீப் பிழம்பு ஒளிர்ந்தாற்

போல இதழ்விரிந்த பூக்களையுடைய ஞாழன் மரங்கள் நிரம்பிய சோலைகளும், எனும் இவை எழில்பெறத் தோன்றும் நெய்தல் காட்சியும்;

நெய்தல் நிலமென்பது கடலுங் கடல் சார்ந்த இடமுமாகும்; அந் நிலத்துக் காட்சி இப் பகுதியின்கண் இனிதெடுத்துக் காட்டப்படுகின்றது.

அரைகுறையாகக் கற்றுத் தெளிவெய்தாத புலவர் ஈண்டுத் 'தேற்ருப் புலவர்' எனப்பட்டார், அவரியற்றும் நூல்களெல்லாந் தொடக்கத்தில் மட்டும் ஆங்கு வேண்டும் பொருட்பரப்பெல்லாந் தேடிக் கொணர்ந்து உரிய சொற்களுடன் இனிதடக்கி அமைத்து எழூச்சியாய் இயற்றப்பட்டுப், பின் வரவர அவ்வெழுச்சியும் அவ்வெழுச்சியின் வழிக் கிளர்ந்துவருஞ் சொற்பொருட் பரப்புமெல்லாம் முறைமுறையே சுருங்கி அவை முடியவேண்டும் வரம்புக்கு வருமுன்னரே இற்றுப்போம். புலவன் நூலின்கட் செய்யுங் குற்றங்கள் பத்தனுள் இதுவும் ஒன்று; இது 'சென்று தேய்ந்திறுதல்' என்னுங் குற்றமாம்; இங்ஙனமே கடலின்கண் உண்டாகும் அலைகள் முதலில் மிக உயரமாய்க் கிளம்பி வரவரத் தேய்ந்து அவிந்துபோதல் காண்க.

'எழுவாய்,' எழுகின்ற இடம்; ஆவது தொடக்கமென்க.

நல்லிசைப் புலவர்கள் இயற்றுஞ் செய்யுட்களெல்லாம் நூல் நுட்பங்களால் மிக ஆன்றும் மிக ஆழ்ந்தும் அரும் பெருங் கருத்துக்கள் நிரம்பிக் கிடக்குமாகலின், அங்ஙனமே கரைகாணது அகன்று நனி ஆழ்ந்து பல்பொருள் செறித்த கடலுக்கு அவை ஒப்பாயின.

'செறித்த கடல்' அடக்கிய கடல் என்க.

> "செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
> வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்"

என்னும் புறநானூற்றின் (கஉ) கண் இச் சொல் இப் பொருட்டாதல் காண்க.

ஒழுக்கம் என்பதற்கு ஏழாவது விரித்துரைக்க; 'தக'' தகும்படி; நலத்தக, நன்கு பொருந்தும்படி; ஒரு சொல்.

குழை, இங்குப் பசிய இலை; கொள்ளை மணம் - கூட்டுமணம்; அதாவது 'மிக்கமணம்' என்பது; 'வால்', வெண்மை; ''வாலிணார் மடற்றாழை'' (கக அ) என்பது பட்டினப்பாலை.

'ஞாழல்', மிகுந்த மஞ்சட் பூம்பொடிகளும் சிவந்த இதழ்களும் உடைய வட்டமான பூக்கள் நிரம்பிய ஒருவகை யான பரியமரம்: இது புன்னைமரத்துக்கு இனமான நெய்தல் நிலத்து மரம்; ''பொன் இணர் ஞாழல் முனையிற் பொதிய விழ் புன்னையம் பூஞ்சினை சேக்குந் துறைவன்'' என்னும் ஐங்குறு நூற்றுச் செய்யுளால் அஃதுணர்க (கசுக).

திரையே கடலே கழியே பொழிலே என்னும் ஏகாரங்க ளெல்லாம் எண்ணுப்பொருளன.

(௩உ-௩௩) கண்டு-ஆன இந் நானிலக் காட்சிகளையும் பார்த்து, மெய் என அறிவுமாழாந்து - அவையே தங்கட் புலனுற் காண்டற்குரிய மெய்க்காட்சியாம் போலுமென அறிவு மயங்கி, வாழ்வோரும் பலர் - கவலையின்றி வாழ்கின்ற வர்களும் உலகத்திற் பலராவர்.

மாழாத்தல், மயங்குதல்;

பொருப்பின் காட்சியும் (உஉ), காடுகெழு காட்சியும் (௩க) மருதக்காட்சியும் (௩அ) நெய்தற்காட்சியும் கண்டு (௩உ) வாழ்வோரும் பல (௩௩) ரென்க.

(௩ச-௩௫) காண்தகு சிறப்பின் பாண்டின்மேல்-காண்டற் குரிய சிறப்பினையுடைய அழகிய கட்டிலின்மேல், ஐவகை அமளியும் கூறுபட அமைத்து-ஐந்துவகையான படுக்கை களையும் வகைபட விரித்து, கால்களைந்து ஆய்ந்த வான் முகை முல்லை கடிமணம் கமழத் தூஉய்-காம்புகள் கிள்ளி ஆராய்ந்து எடுத்த சிறந்த முல்லைப்போதுகளை அவற்றின் மேல் மிக்க மணம் வீசத் தூவி, மடிபடு நுரை முகந்தன்ன தூவெள் அறுவை செறிவுற விரித்து - மடிக்கப்பட்டுப் பால் நுரையினை ஏந்தினலொத்த அழுக்கற்ற வெள்ளிய உடையினை அதன் மேல் நெருங்கிப் பொருந்தும்படி விரித்து, நறும்குறடு உரைத்த கேழ் கிளர் தேய்வையில் கோழ்அகில்

நெய்யும் புழுகு மான்மதமும் செழும் கருப்புரமும் கொழும் பனிநீரும் வழுவறக்கூட்டி - நல்ல சந்தனக்கட்டையினல் தேய்த் தெடுத்த நிறம்விளங்குங் குழம்பில் வழுவழுப்பான அகிற்கட்டையின் நெய்யும் புழுகுங் கத்தூரியும் செழுமை யான பச்சைக் கருப்புரமுங் கொழுமையான பனிநீரும் அளவு பிழையாதபடி கலந்து, வேரியின் அமைந்த சிவிறியில் தோய்த்து-வெட்டி வேரினல் அமைக்கப்பட்ட சிவிறிகளில் தோய்த்து, நிரைநிரை மங்கையர் முறைமுறை இரட்ட- வரிசைவரிசையாக மங்கைப் பருவத்து இளம் பெண்கள் கட்டிலருகில் நின்று முறைமுறையே விசிற, உறங்கும் வாழ்க்கையில் பிறங்குவோர் பலர் - அதன்மேல் மெல்லெனப் படுத்து உறங்கும் வாழ்க்கையில் மேம்படுவோர் பலராவர்;

'காண்டகு சிறப்'பென்பது, அழகு; அஃதாவது கட்டிலிற் பொருத்திய யானைமருப்பிற் செதுக்கப்பட்டிருக்கும் ஓவிய அழகும், துணிகளானும் மணிகள் முதலியவற்ருனும் புனைவு செய்யப்பட்டிருக்கும் ஒப்பனையழகு மென்க.

'பாண்டில்' கட்டில்; மேலால் என்பதில் ஆல்: அசை.

ஐவகை அமளியாவன: சிறுபூளைப் பஞ்சினலான மெத்தையும், செம்பஞ்சினலான மெத்தையும், வெண்பஞ்சின லான மெத்தையும், மகளிர் மென்கூந்தலாலான மெத்தையும், அன்னச்சேவலின் மென்மயிரினலான மெத்தையுமென்ப; இது "சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேண, முறுதூவி சேக்கையோ ரைந்து" (நச்சினர்க்கினியருரை மேற்கோள், நெடுநல், கஙக.) என்பதனுனும் அறியப்படும். இவ்வை வகையமளியும்,

> "மயிர்ச்சேணம் பஞ்சுமெத்தை வண்படாந் தூவி
> பயிற்றுந்தன் வீப்பாய் பஞ்சசயனம்"

எனப் பிங்கலந்தையில் (கூஅகூ) வேறுவகையாகக் கூறப்படுகின் றன. எனினும் செய்யுளில் மலர்ப்பாயலும் வண்படாமும் ஐவகை யமளியின் வேருய் வைத்துரைக்கப்பட்டிருத்தலின், அடிகள் கருதிய ஐவகையமளி முன்னதேயாதல் வேண்டு

மென்பது. வீப்பாய் - மலர்ப்பாய்; வண்படாம்-துணிமடி; கட்டிற்கு உரிய காண்டகு சிறப்பு,

"பொருதொழி நாக மொழியெயி றருகெறிந்து
சீருஞ் செம்மையு மொப்ப வல்லோன்
கூருளிக் குயின்ற வீரிலை யிடையிடுபு
தூங்கியன் மகளிர் வீங்குமுலை கடுப்பப்
புடைதிரண் டிருந்த குடத்த விடைதிரண்
டுள்ளி நோன்முதல் பொருத்தி யடியமைத்துப்
பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்
மடைமா ணுண்ணிழை பொலியத் தொடைமாண்டு
முத்துடைச் சாலேக நாற்றிக் குத்துறுத்துப்
புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்
தகடுகண் புதையக் கொளீஇத் துகள்தீர்ந்து"

என்னும் பகுதியானும், அக்கட்டிலின்மேல் விரிக்கப்படும் அமளிகளினியல்பு,

"ஊட்டுறு பன்மயிர் விரைஇ வயமான்
வேட்டம் பொறித்து வியன்கட் கானத்து
முல்லைப் பல்போ துறழப் பூநிரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத்
துணைபுண ரன்னத் தூநிறத் தூவி
யிணையணை மேம்படப் பாயணை யிட்டுக்
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடமை தூமடி விரித்த சேக்கை"

என்னும் பகுதியானும் நெடுநல்வாடையின்கண் (கஉஎ-கஅரு) விளக்கப்பட்டிருத்தல் இங்கு நினைவுகூரற்பாலது.

'கால் களைதல்' காம்பு கிள்ளுதல்; இஃதிப்பொருட்டாதல் "அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள்" (திருக்குறள், ககக௫.) என்பதனுல் அறியப்படும்.

வெண்மைக்குந் தூய்மைக்கும் மென்மைக்கும் அறுவைக்கு நுரை உவமையாம். "நுரையென விரிந்த நுண்பூங் கலிங்கம்" (சிலப்பதி, உஉ:உக;) "தீம்பா னுரை போற் றிகழ்வெண் பட்டுடுத்து" (சிந்தாமணி, ௬0சசு.)

எனச் சான்றோ ரிலக்கியங்களிலும் இவ்வுவமை வரும். செறிவுற, இணைவுற.

'நறுங்குற டுரைத்த கேழ்கிளர் தேய்வை' என்பதற்கு ஈங்குரைத்த பொருள் "நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை" யென்னுந் திருமுருகாற்றுப்படையடி (கூகூ) யுரையிலுங் காண்க.

'கோழ்' வழுவழுப்புப் பொருட்டாதல், 'கோழரை' என்பதனுல் அறிக.

கருப்புரத்துக்குச் செழுமையும், பனிநீருக்குக் கொழுமையுமாவது மணச்செழுமையாம்; செழுமை கொழுமை யென்பன ஒரு பொருட் கிளவிகள்.

சிவிறியைத் தோய்த்தெனற்பாலது சிவிறியிற் றோய்த்தென வந்தது உருபு மயக்கம்.

இரட்டல், விசிறல். 'பிறங்குத' லென்பது ஈண்டு மேன்மேலும் உயர்தலென்னும் பொருட்டு.

(சுசு-எரு) தம் நலம் 'பகரும் பொன் விலை மாதர்-பொருடருவா ரியாவராயினும் அவர்க்குத் தமது இன்பத்தை விலைகூறும் அழகிய பொருட்பெண்டிர், திவவு யாழ் எழீஇ-நரம்பினது வார்க்கட்டினையுடைய யாழோசையை எழுவித்து, நவை நான்கு அகற்றி-குற்றங்கள் நான்கையும் நீக்கி, மிடற்று எழும் ஓசையும் நரம்பு இமிர் ஒலியும் ஒரு நெறிச் சென்று ஆங்கு ஒரு நிலை நிகழ-தொண்டையிலிருந்து தோன்றுகின்ற குரலோசையும் நரம்பிலிருந்து ஒலிக்கின்ற யாழோசையும் ஒருவழியே சென்று இரண்டற்ற அவ்விடத்தில் ஒரு தன்மைப் பட்டு நிகழ, புள் இனம் துணைமறந்து ஒதுங்க-அவ்வினிய இசையைக்கேட்டுப்பறவைக்கூட்டங்கள் தத்தம் பெடையினங்களை மறந்து ஒரு பக்கத்தே ஒதுங்கி உருகி நிற்பவும், வள்ளிய குழைமுகம் தோன்றி வறுமரம் உயிர்ப்ப-வளவிய தளிர்முனைகள் தோன்றி வற்றல்மரங்களெல்லாந் தளிர்ப்பவும், விழுமிதின் எழூஉம் மிடற்றின் பாடலும்-இனிமையாய் எழுகின்ற குரற்பாட்டும், கொன்றை அம் குழலும்-கொன்றைக் காயினுல் ஆன ஊது குழலும்

குன்று அமர்வேயும்-குன்றத்தின்கண் இருக்கின்ற மூங்கி லால் ஆன வேய்ங்குழலும், துருவி ஊதும் பொருவில் ஓசையும்-துளைத் தூதுகின்ற ஒப்பில்லா இன்னிசை யொலி யும், செவ்வாய் மாந்திச் சிறந்தோரும் பலர்-செவியே வாயாய்ப் பருகி மகிழ் சிறந்தோரும் பலராவர்;

நலம், இன்பம்; 'திவவு' என்பது "நரம்புகளை வலிபெறக் கட்டும் வார்க்கட்டு" (சிறுபாணாற்றுப்படையுரை, உஉஉ). 'திவவுயாழ்' என்பன "முற்றுமற் றொரோவழி" (நன்னூல், ௪கூ௯.) என்பதனால் 'திவவியாழ்' எனப் புணர்ந்தது. "திவவியாழ் மிழற்றி" யெனச் சான்றோரிலக்கியங்களில் வருதலுங் காண்க.

நவை நான்காவன: "வெயிலுங் காற்றும் நீரும் நிழலும் மிகுதல்" என்பர் நச்சினார்க்கினியர் (சீவகசிந்தாமணி, எஉ0) இவை யாழுக்கு ஆகா.

குரலோசையும் யாழோசையும் வேறுவேறு நெறிப் பட்டுப் பிரிந்து செல்லாமல் ஒரு நெறிப்பட்டு ஓரோசைபோல் நிகழ்தலின், 'மிடற்றெழு மோசையும் நரம்பிமி ரொலியும் ஒருநெறிச் சென்றுங்கு ஒரு நிலை நிகழ' வெனப்பட்டது. துணையோசைக ளெல்லாங் குரலோசையோடு இணைந்து இணங்கி நிற்றலே இசையினிமைக்குச் சிறப்பாம். இவ் வியல்பினை ஆசிரியர் இளங்கோவடிகளும்,

"குழல்வழி நின்ற தியாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடிநின் றிசைத்த தாமந் திரிகை
யாமந் திரிகையோ டந்தர மின்றி" (சிலப், ௩.: கஙகூ-கசங.)

என்று மிகவும் அழகாய் எடுத்துக்காட்டினர்.

அரிய இன்னிசையைக் கேட்டலாற் புள்ளினங்கள் உணர்வொழிதல் முதலான உண்மைகள்,

"ஊடுசெவி யிசைநிறைந்த வுள்ளமொடு புள்ளினமு
மாடுபடிந் துணர்வொழிய"

என்பது முதலான பெரிய புராணப் பாட்டுகளானும் (ஆளுடை, நடக) உணரப்படும்.

'அமர்தல்', ஈண்டு இருத்தலென்னும் பொருட்டு.

'துருவி ஊதுதல்' ஓசை உள்விராய்ப் பாய்ந்தெழுமாறு துளைத்தூதுதலென்க.

(எசு-அந) பித்திகைக் கொழுநனை-பிச்சிச்செடியின் கொழுவிய மொட்டுகளும், முத்து ஆர் முல்லை-முத்துக்களைப் போல் நிறைந்த முல்லையரும்புகளும், நறுவிரைத் தாமரை-இனிய மணங் கமழுஞ் செந்தாமரை முகைகளும், துவர்க் கால் வகுளம்-சிவந்த காம்புகளையுடைய மகிழம்பூக்களும்; சண்பகம் குவளை பொன்மடல் தாழை-சண்பக மலர்களுங் குவளைப் போதுகளுஞ் செம்பொன்போலுஞ் சிவந்த மடல் களையுடைய செந்தாழம் பூக்களும், கொழுந்தும் மருவும்-மருக் கொழுந்தும் மருவும், செழும் தண்வேரியும் - செழுமை யான குளிர்ந்த வெட்டிவேரும், தொடலை ஆக்கியும் - என இவற்றை மாலையாகத் தொடுத்து அணிந்தும், விடுபூச் சிதறியும்-விடுபூக்களாகத் தூவியும், செண்டும் பந்தும் கொண்டு விளையாடியும்-மலர்ச்செண்டுகளாகவும் பந்து களாகவுங் கட்டிக் கைக்கொண்டு விளையாட்டயர்ந்தும், நறும் பொருள் விராஅய் மெய்யில் திமிர்ந்தும்-மணப் பண்டங்களை ஒருங்கு குழைத்து உடம்பிற் பூசியும் மகிழ்ந்து, வறிதின் வாழும் மக்களும் பலர்-வீணாய் வாழ்நாள் கழிக்கும் மக்களும் பலராவர்;

'பித்திகை' யென்பது பிச்சி அல்லது சாதிமல்லிகை. வகுளம், மகிழ்; பொன் என்னுங் குறிப்பால் தாழை செந்தாழை எனப்பட்டது. மேலும் வெண்டாழையினுஞ் செந்தாழையே மணமிக்கதாதலுங் காண்க. மருக்கொழுந் தும் மருவும் வேறு வேருதல் விளங்கக் 'கொழுந்தும் மருவும்' என்ருர்; கொழுந்து மருக்கொழுந்தின் தலைக் குறை.

'தொடலை' தொழிலடியாகப் பிறந்த பெயர்; தொடுக்கப் பட்டது தொடலை; ஐ: செயப்படுபொருள் விகுதி. இச்சொல்

மாலையென்னும் பொருட்டாதல் "தொடலைக்குற்ற சிலபூ வினரே" (நெய்தற் பத்து, எ) என்னும் ஐங்குறுநூற்றடியானுந் தெளியப்படும்.

'வறிதின்' என்றமையின், வாழும் என்பது வாழ்நாள் கழித்தலையே உணர்த்து மென்பது.

(அச-அஎ) ஐம்பொறி வழிச்சென்று இம்பரில் நுகரும்-மெய்வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐந்து பொறிகளின் வழியாகவும் உள்ளம் பாய்ந்து இவ்வுலகத்தின்கண் நுகருகின்ற, ஐவகைச் சுவையும்-ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசையென்னும் ஐந்து சுவைகளையும், ஒருகால் காட்டும் மைவிழி மடவார் பொய்படும் இன்பத்து - ஒரே நேரத்தில் தம்பாற் புலனுகக் காட்டும் மையணிந்த விழிகளையுடைய பெண்மக்களது நிலையுதல் இல்லாத சிற்றின்பத்தின்கட் படிந்து, மெய்படத் துளங்கும் விழலரும் பலர் - அதனை நிலையுதலுடையதாகக் கருதி உடலும்உயிரும் நிலைகலங்கும் வீணரும் பலராவர்;

ஐவகைச் சுவையும் மடவார்மாட்டு ஒருகாற் றோன்றுமென்னும் உண்மை,

> "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
> மொண்டொடி கண்ணே யுள"

என்னுந் திருவள்ளுவர் பொன்மொழிக்கு (புணர்ச்சி மகிழ்தல், க) உரைகாரர் பரிமேலழகர், "வேறு வேறு காலங்களில் வேறு வேறு பொருள்களான் அனுபவிக்கப்படுவன ஒரு காலத்து இவள்கண்ணே அனுபவிக்கப் பட்டதாம்" என்று மிகத் தெளிவாய்ப் பொருளுரைத்தமை கொண்டு தெளியப் படும்.

'பொய்படு மின்பத்து' என்புழிப் 'பொய்' யென்பது 'நிலையுதலின்மை' என்னும் பொருட்டாம்; மற்றிதற்கு ஒரு சாரார் 'பாழ்' எனப் பொருளுரைப்பர்; உலக வியற்கைகளில் முதலற இல்லாமலொழிதலாகிய பாழாந் தன்மை யாண்டும் இன்மையின், அப்பொருள் சிறிதும் பொருந்தாது என்க.

'துளங்குதல்' இங்கு நிலைகலங்குதல் என்னும் பொருட்டு; 'கடிமரந் துளங்கிய காவும்'' (புறநானூறு, உரு: க). என்புழியும் அதன் உரைகாரர் இங்ஙனமே பொருளு ரைத்தார்; சிற்றின்பத்தின்கண் மிகப் படிந்தார்க்கு உடல் வலிகுன்ற, அதன் வழியே உயிர்வலியுங் குன்றுதலின் 'துளங்க' என்றார்.

விழற்பூடு எத்துணைதான் மிகச்செழுமையாய் உயர்ந் தோங்கி அடர்ந்து வளர்ந்தாலும், இறுதியில் அஃது ஏதுங் கதிர்சாய்த்து மக்கட்குப் பயன்படுத வில்லாமையால் அதன் செழுமை வீணாவதேயாகும். ஆதலால் மக்களிலும் அங்ஙனம் ஏதும் பயன்படுதலில்லாதார்க்கு ஆன்றோர் அதனை உவமை உருவகங்களாகக் கொண்டுரைப்பது மரபு,

(அஅ.சுரு) தாமும் துவ்வாது பிறர்க்கும் ஈயாது-தாமும் நுகராமற் பிறர்க்குங் கொடாமல், வெருவரு பேய்என உரவோர் இகழ-அஞ்சுதற்குரிய பேய் உருவமேயென அறிஞர்கள் இகழ்தலைச்செய்ய, ஆனது அரும்பொருள் இவறிக் கூட்டி-மேன்மேலும் மனமமையாமற் கிடைத்தற் கருமையான செல்வப்பொருளை எவர்க்குங் கொடாமல் மேன்மேற் சேர்த்து, மாணு வாழ்க்கை மக்களும் கள்வரும் கவர்ந்து செல்ல-மாட்சிமைப்படாத தீயவாழ்க்கையினை யுடைய தம் புதல்வர்களுந் திருடர்களும் அப்பெரும் பொருளை உரிமையாகவுங் கொள்ளை கொண்டுஞ் செல்ல, நிமிர்ந்து வான்நோக்கிச் செய்வது அறியாக் கையரும் பலர்-அம்முகத்தாற் பொருளிழந்து போனமையின் அண் ணாந்து வானத்தைப் பார்த்து இனி இன்னதுதான் செய்வது என்பது அறியமாட்டாத பயனில் செயலுடையாரும் பலராவர்.

'துவ்வல்', நுகர்தல்; இச்சொற்கு இப்பொருளுண்மை ''துறந்தார்க்கும்'' என்னுந் திருக்குறளிற் (சுஉ) காண்க.

மிகவும் அரும்பாடுபட்டு ஈட்டிய பொருளை மேன்மேலும் பெருகச் செய்தல் வேண்டு மென்னும் பேராவலினாற் றாஞ் செவ்வையாய் நுகராமையினாலும், துறந்தார், கற்றார்,

வறியார்க்கு அவருளம் உவப்ப ஈயாமையினலும், வீணே பொருள் தொகுத்தாரது நிலை, உடம்பிளைத்து என்பு தோன்றிச் சதையுலர்ந்து கன்னம் வற்றி உதடு வெளுத்து நாச்செத்துக் கண்குழிந்த பேய் தான் கைக்கொண்ட புதையலைத் தானும் பயன்படுத்தாமற் பிறர்க்குங் கொடாமற் காத்து நிற்கும் நிலையோடு ஒப்பதாக வைத்து, 'வெருவரு பேய்' என அறிஞர் இகழ்தலைச் செய்வரென்க. அவர் அறிஞரின் இகழ்ச்சிக்குரியராவரென்றற்கு உரவோர்மேல் வைத்து 'உரவோர் இகழ' வெனப்பட்டது; அறிவிலார் ஈயாச்செல்வரையும் ஏத்திப் புகழ்வராயினும், அறிவுடையார் பிசினரைப் புகழாது இகழ்தலே செய்வர்; அறிஞராற் பாராட்டப்படாத அவர் நடைப்பிணமே யாவரென்பது குறிப்பித்தாராயிற்று.

நல்லார் கைப்படின் இன்பமும் அறமும் அவற்ருல் மறுமை நலமும் அளித்தற்குரியதாகலிற் செல்வம் அரும் பொருள் எனப்பட்டது. இவறல் - "வேண்டும் வழிப் பொருள் கொடாமை" என்ருர் பரிமேலழகியார் (திருக்குறள், சகூஉ).

மாணு வாழ்க்கை யென்பது நல்லியல்பிஞல் மாட்சிமைப் படாத தீய வியல்பினையுடைய வாழ்க்கையென்க: இதனை மக்களுக்குங் கள்வருக்குங் கொள்க.

நினைவு மயக்கமுடையா ரெல்லாரும் நிமிர்ந்து வான் நோக்குதல் இயல்பாகலின், இங்குப் பொருளிழந்த வருத்தம் ஒரு பக்கமும், இனிச் செய்வதொன்றுந் தோன்ருத நினைவுக் குழப்ப மொரு பக்கமுமிகுந்து தலைமயங்குதலின் இவரும் நிமிர்ந்து வான் நோக்குவாராயினர்.

கையர்-கீழ்மக்கள் (திவாகரம்).

> "பொருளாணு மெல்லாமென் றீயா திவறு
> மருளாணு மாணுப் பிறப்பு"

என்னுந் திருக்குறட் பொன்மொழியும், அதற்குப் பரிமேலழகர் "பிறர்க்கீயாது பற்றுள்ளஞ் செய்யும் மயக்கத்தாலே

ஒருவனுக்கு நிறைதலில்லாத பேய்ப்பிறப் புண்டாம்'' என்னும் நுண்ணுரை மணி மொழியும்,

> "உண்ணா னொளிநிறா னோங்குபுகழ் செய்யான்
> றுன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
> வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
> இழந்தானென் றெண்ணப் படும்"

என்னும் நாலடியார் (க: க) திருமொழியு மெல்லாம் இப்பகுதி யின்கண் வருஞ் சொற்பொருட் கருத்துகளோடு பெரிதும் ஒத்துநிற்றல் நினைவுகூரற் பாலது.

(கூசு-ககக) இவ்வாறு ஒழிந்தனர் போக- என்றிவ்வா றெல்லாம் இம்மையின்பம் நுகரப்புக்குத் தம் வாழ்நாட் களைக் கீழ்நெறியிற் கழித்து மாண்டோர் போக, செவ்விய மெய்ப்பொருள் உணர்தும் என்று ஒப்புடன் புகுந்து-நேர் முகமாய் விளங்கும் மெய்யான பொருளை அறிவேமென மனவொருமையுடன் ஆராயத் துவங்கி, கடவுள் தன்மையும் உயிரின் தன்மையும் புடைபட ஒற்றி வரம்பு அளந்து உண ராது மயங்கக்கொண்டு மக்களைத் தலைவர் என்று ஒக்கக் கூறி உழிதருவோரும்-இறைவனியல்பையும் உயிரினியல் பையும் பக்கத்தே பக்கத்தே வைத்துப் பொருத்தி அதனதன் எல்லையினை அறிவான் அளந்துபார்த் துணராமல் அவ் விரண்டனையும் ஒன்றிறென்றாய் மயங்க உணர்ந்து அம் மயக்க உணர்ச்சியினால் மக்களெல்லாரையும் அவர் தமக்கு முதல்வனான இறைவனேயாவரெனக் கீழோர்க்கு மனம் இசையக் கூறித் திரிகின்றவரும், அறிவாய் அருளாய்ச் செறியும் ஒருபொருள் சிறுமையும் மடமையும் எய்தி வெறுவி தின் உயிரும் உலகமும் ஆகும் என்போரும்-அறிவுருவாயும் அருளுருவாயும் யாண்டும் நிறைந்துள்ள ஒரு முழுமுதற் பொருள் தானே தன் பெருமையிழந்து சிறுமையும் அறியா மையும் அடைந்து ஓர் ஏதுவும் இன்றி வாளாப் புன் முதலான சிற்றறிவுயிர்களும் மண்முதலான ஐம்முதற் பொருள்களுமாய்த் திரிபெய்து மென்று கூறுகின்றவரும், கண் புலன் ஆகுவ கருத்தின் தோற்றமாய் உள்புகுந்து

உணர்வோர்க்குப் பொய்ப்பொருளாகலின் கோயில் என்னே மேவி ஆங்கு உறையும் தூயபேரொளிப் பிழம்பெனல் என்னே வஞ்சமாந்தர் பிறர் நெஞ்சம் பிணிக்கக் கல்லையும் மண்ணையும் வல்லிதின் பொருத்திச் சூழ்ச்சியின் அமைத்த கீழ்த்திறம் அன்றோ என்று உரை கூறுவோரும் ஆக. புறத்தே கண்ணுக்குப் புலனாவனவெல்லாம் அவற்றை எண்ணுகின்ற எண்ணத்தின் றோற்றமாய்த் தமது அகத்தே புகுந்து ஆராய்வார்க்கு வெறும் பொய்ப்பொருள்களாய்ப் போய் முடிதலின் 'வெளியே கட்புலனாகும் பொருள்களான திருக்கோயில் என்பன எத்தன்மைய! அத்திருக்கோயிலின்கட் பொருந்தியிருக்கும் மாசற்ற பெரிய ஒளிப்பிழம்பென்பது தான் எத்தன்மையது! தந்நயம் விரும்புங் கரவுடைய மக்கள் சிலர் பிறரது உள்ளத்தைத் தம்வயப்படுத்தும் பொருட்டுக் கல்லையும் மண்ணையும் வேண்டுமென்றே இங்ஙனம் இருத்திச் சூழ்ச்சியினால் ஏற்படுத்திய தாழ்ந்த செயல்களல்லவோ இவை!' என்று தமக்கேற்ற சொற்களையே பேசுகின்றவருமாக, பொன்றிய மாக்கள் மணலினும் பலர்-உலகத்தில் இறந்துபட்ட அறிவிலா மக்கள் ஆற்று மணலினும் பலராவர்!

'செவ்விய' மெய்ப்பொருளென்பது அவரவர் கருதிய வாறெல்லாம் வேறு வேறாய்த் தோன்றாது மெய்யுணர் வினார்க்கெல்லாந் தன்னிலையினை நேரே ஒரு படித்தாய்க் காட்டும் உண்மைப்பொருள்; "தேம்பா வெழுத்தோலை செவ்வனே நோக்கினாள்" (சீவகசிந்தாமணி, க0சு0) என் புழியுஞ் செவ்வன் என்பது நேர்மைப் பொருட்டாதல் காண்க.

மலத்தாற் பற்றப்படாமல் யாண்டுந் தூயனாய் விளங்கும் எல்லாம்வல்ல தனித்தலைமைக் கடவுளின் பேரியல்பும், அங்ஙனமின்றி மலத்தாற் பற்றப்பட்டு அத்தலைவற்கு யாண்டும் அடிமையாய்க் கிடந்து வாழ்தற்குரிய புன்முதல் மக்கள் தேவர் ஈறான சிற்றுயிர்களின் சிற்றியல்பும் வேறு வேறாய் நனிவிளங்கவும், அவ்வேறுபாட்டினை உள்ளவாறே உணரும் மெய்யறிவு வாயாமல் இறைவனும் உயிர்களும்

ஆன அவ்விருபொருள்களும் எங்கும் ஒன்றுபோற் கலந்து ஒன்ருய்க் காணப்படுதலே பற்றி அவையிரண்டும் ஓரியல் புடைய ஒருபொருளேயாமென்று மயங்க உணர்ந்து, அம் மயக்க உணர்ச்சியினுல் மக்கள் ஈருன உயிர்களெல்லாம் உண்மையான் நோக்குங்கால் தமக்குத் தலைவனுய் விளங்கும் இறைவனேயாகும் எனப் படுபொய்யுரை கூறுவார் சிலரை முதலிற் கூறினுர். உழிதரல், திரிதல்; பாஞ்சராத்திரர் உடை யன் அல்லாதானை உடையனெனக் கோடலின் அவரும் இவருள் அடங்குவர்.

அருளாயும் அறிவாயும் விளங்கி யாண்டும் நிறைந்து நிற்கும் இறைவன், அவ்வருள் வண்ணங் கெட்டு மருள் வண்ணமாகுஞ் சிறுமையும், அவ்வறிவியல்பு கெட்டு அறிவில்லாததாகும் மடமையும் எய்தி, ஒரு காரணமுமின்றி முறையே உயிரும் உலகமுமாய்த் திரிந்தனன் எனக் கரைவார் சிலரை அதன்பிற் கூறினுர்.

அருளாய் அறிவாய் என மாற்றி அருளும் அறிவும், சிறுமையும் மடமையும், உயிரும் உலகமும் என நிரை நிரை யாகக் கொண்டுரைத்துக் கொள்க. உலகமென்பது ஈண்டு மண், நீர், தீ, காற்று, வான் என்று கூறப்படும் அறிவற்ற ஐம்பெரு முதற்பொருள்களென்க. வெறுவிது - பயன் இலாதது.

புறத்தே கண்ணுக்குப் புலனுவன வெல்லாங், கருத்தள வாய் ஆராய்ந்துணரப் புகுவார்க்குக் கனவின் ருேற்றம் போல் வெறும் பொய்யாகவே முடியுமாகலின், புறத்தே ஓர் உருவாய்க் காணப்படுங் கோயிலென்பதும், அக்கோயிலி னுட் காணப்படுஞ் சிவலிங்க மென்பதும் உண்மையில் உள்ளனவல்ல என்பார் பின்னுஞ் சிலரை அதன் பிற் கூறினுர். என இங்ஙனங் கூறுவார்: பாஞ்சராத்திரரும், ஏகான்மவாதம் பரிணுமவாதம் மித்தியாவாதம் புகலும் மாயாவாதக் குழுவினரும் ஆவர். பாஞ்சராத்திரர் நம் போல் மக்களாய்ப் பிறந்திறந்தாரைக் கடவுளாய்க் கொள் வர். இவற்றின் விரிவெல்லாஞ் சிவஞானசித்தியார் பரபக்கத்தும்,

மாதவச் சிவஞான முனிவர் இயற்றிய சிவஞானபோத மாபாடி யத்துங் காண்க.

'என்னே' என்பதன் ஏகாரம் இரண்டிடங்களிலும் இகழ்ச்சிக் குறிப்பின்மேல் வந்தன; தூயவென்றது, மல மாசற்ற வென்னும் பொருட்டு; சைவத்திருக்கோயில்களி லெல்லாங் கருவறையுள் நிறுத்தப்பட் டிருக்குஞ் சிவலிங்கக் குறி தழற்பிழம்பின் அடையாளமே யாகும்; தழற் பிழம்பு நீண்டுகுவிந்திருத்தல்போற் சிவலிங்கத் திருவுருவமும் நீள மாய் நுனிகுவிய அமைக்கப்பட்டிருத்தல் காண்க.

'ஆகுவ' என்பதில் 'கு' விரித்தல் விகாரம்;

'நெஞ்சம் பிணிக்க,' தம்வயப்படுத்த; என்றது வஞ்ச முள்ள மாந்தர் சிலர் தமது வயிற்றை நிரப்பிக்கொள்ளும் பொருட்டுப் பொருள் வருவாய் ஒன்றே கருதிப் பிறரைத் தம்வயப் படுத்துவர் என்றற்கு.

'சூழ்ச்சி' யென்பது ஈண்டுச் சூது; கீழ்த்திறம், கீழறுக் குந்திறம்; புறத்தே நன்மைதோன்ற ஒழுகி அகத்தே தீமை செய்யுங் கரவொழுக்கம்;

அளவில் எண்ணிக்கைக்கு மணலினை உவமித்தல் பழைய நூல் வழக்கு; இவ்வழக்குண்மையை "நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" யென்னும் புறநானூற்றடியிலுங் காண்க (௯).

'அளவிலரன்றே (௧௫), வாழ்வோரும் பலரே (௨௯), பிறங்குவோர் பலரே (௬௫), சிறந்தோரும் பலரே (எ௫), மக்களும் பலரே (அ௯)' விழலரும் பலரே (அஎ), கையரும் பலரே (௯௯), மணலினும் பலரே (௧௧௧) என்று தொடர்பு படுத்துக்கொள்க.

(௧௧௨-௧௧அ) ஆங்ஙனம் ஒழிந்த அளவில் மாந்தருள் யானும் ஒருவனாக நோனாது - என அவ்வாறெல்லாஞ் சிற்றின்ப நுகர்ந்தும் பொய்ப்பொருளுணர்ந்தும் மாய்ந் தொழிந்த எண்ணிறந்த மக்களுள் அடியேனும் ஒருவனாய் ஒழியத்தேவரீர் திருவுளம் பொறுது, வேறு பிரித்து எடுத்து-

என்னை அவர்களினின்றும் வேருய்ப் பிரித்தெடுத்து, கூறு படு மதியின் மறைபுகழ் சைவம் நிறைவுற விரித்துத் தெளிவு ஆர் அளவையின் விளக்கி மலைவுதரும் மாறுபொருது ஓட்டி வீறு உறத் திகழுஞ்சோமசுந்தர குரவனெடு கூட்டி-பொருள் களைப் பகுத்தாராயுந் தமது இயற்கையறிவினல் நால் வேதங்களாலும் புகழ்ந்து கூறப்படுகின்ற சித்தாந்த சைவ சமயத்தை ஒருவகையினுங் குறைபாடின்றி எல்லாவகை யினும் பொருந்த விரித்துத் தெளிவு பொருந்திய அளவை யிலக்கணங்களால் நன்கு விளக்கி யாண்டுஞ் சொன்மாரி பொழிந்து உண்மைக்கு மாருய்ப் பேசின பகைவர்களை எதிர்த்து ஓடச்செய்து அம்முகத்தாற் பிறர்க்கில்லாத கல்விச்சிறப்புத் தமக்கு அமைய விளங்குஞ் சோமசுந்தர வாசிரியனெடு சேர்த்து;

நோனமை-மனம் பொருமை. 'கூறுபடு மதி' யென்பது, பகுத்தறியுங் கூர்த்தமதி. மாறு, ஆகுபெயரால் உண்மைக்கு மாருயினுரை உணர்த்திற்று. 'மாறு' எனப் பகைமைப் பொருடரு சொல் முதல் நிறுத்தினமையின், மற்று அதற் கேற்பப் 'பொருது ஓட்டுந்' தொழில் பின் நிறுத்தப்பட்டன. வீறு-'வேருென்றற்கில்லா அழகு' என்று பொருளுரைப்பர் நச்சினர்க்கினியர் (சீவகசிந்தாமணி, சஅகூ).

மறைத்திரு. சோமசுந்தர நாயகரென்பவர் அடிகட்குச் சைவ சித்தாந்த முணர்த்திய குரவராவர்; 'குரவனெடு' என்பதை ஏழன் மயக்கமாகக் கொண்டு 'குரவன்பால் மாணுக்கனுய்ச் சேர்த்து' என்றுரைப்பினும் அமையும்.

(கககூ-கஉஎ) இன்பம் என்பது ஐம்பொறியானும் துன்ப மொடு முரணித் துய்ப்பதோ அன்று-இன்பம் எனப்படுவது மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐந்து பொறிகளா லுந் துன்பத்தொடு மாருக நுகரப்படுவதோவெனின் அன்று, முகிழ்நகை மாதர் குழுவொடு கெழீஇ இதழ்சுவைத் திருக்குந் திறத்ததோ அன்று-அரும்பனைய சிறு பற்களை யுடைய மாதர் கூட்டத்தொடு கூடி அவரது வாயிதழைச் சுவைக்குந் தன்மையதோவெனின் அதுவுமன்று, ஒன்றினும் பற்றுது தன்திறத்து எழூஉம் குன்றல் இல் பொருளோ

அன்று - புறத்துப் பொருள்களுள் ஏதொன்றனோடும் பொருந்தாமல் தன்னியல்பிலேயே எழுகின்ற குறைதலில்லாததோ ரியல்போவெனின் அதுவும் அன்று, தொண்டர் எனும் வண்டினம் குழுமிக் கொண்டிகொள்ளும் நின் திருவடித்தாமரையது - மற்றுத் தொண்டர்கள் என்னும் வண்டுக் கூட்டங்கள் ஒருங்குகூடிக் கொள்ளைகொள்ளுந் தேவரீரது திருவடியாகிய தாமரை மலரின்கண் உள்ளதே அவ்வின்பமாம், என மொழிவித்து என்னையும் உய்யக் கொண்டு - என்று திருவாய் மலர்ந்து அறிவுறுக்கும்படி செய்து ஒன்றுக்கும் பற்றாத ஏழையேனையும் உய்ய ஆட் கொண்டு, பின்னும் - மேலும்,

'முரணி' யென்பதை 'முரண' வெனத் திரித்துக் கொள்க. 'துய்ப்பதோ' வென்னும் ஓகாரம் ஐயப்பொருட்டு; ஏனையவும் அன்ன.

நிலையாப் பருப்பொருள்களாயுங் கருவிகளாயும் உள்ள மெய் முதலிய ஐம்பொறிகள் அங்ஙனமே நிலையாப் பருப் பொருள்களாயுங் கருவிகளாயும் உள்ள மண்முதலான ஐம்பெரு முதற்பொருள்களையே பற்றி நுகருமியல்பின வாகலின், அங்ஙன மவற்றால் நுகரப்படும் இன்பமும் அவ்வாறே நிலையாததாயும் மற்றோரின்பத்துக்குக் கருவி யாயு மிருக்கும் பெற்றியதே யல்லாமல் என்றும் அழியாத தாயும் முடிந்த நிலையினதாயும் இருக்கும் நிலையிற்றன்று. ஆதலால் இவ்வைம்பொறிகளானுந் துன்பத்துக்கு முரணாக நுகரப்படும் இன்பம் முடிந்த இன்பமாகாதென்பது தெளியப் படும். இது பருப்பொருள்களை நுகர்வதால் விளையும் இன்பவியல்பு கூறியபடியாம்.

இனி, மடவாரது இதழ் சுவைத்து நுகருமின்பம் அறிவுப் பொருளொடு கூடி நுகருமின்பமாம். என்னை? இதழென்னும் அறியாமைப் பொருளைச் சுவைப்பதனாலேயே அவ்வின்பம் எழுவதுபோற் றோன்றுமாயினும், மடவாரது உயிர் என்னும் அறிவுப் பொருள் இல்லாக்கால் அவ்விதழ்ச் சுவையினால் ஆண்டு ஏதோரின்பமும் பிறவாதாகலானும், உண்மையில் அவ்வறிவுப் பொருளின் அன்பு காரண

மாகவே ஆண்டு அவ்வின்பம் நுகரப் படுதலானுமென் பது. இது சிற்றறிவு உயிர்களொடு கூடி நுகருஞ் சிற் றின்பவியல்பு புலப்படுத்தியவாறும்.

இனி, புறப்பொருட் டொடர்புகள் ஏதுமின்றித் தன்னி யல்பினானே எழுவதுதான் இன்பமோவெனின் அதுவுமன் றென்பதும், ஆனால் எல்லாம் வல்ல பேரறிவுப் பொருளா கிய இறைவன்றன் இணையடியின்பமே இன்பமென்பதும் மேலடிகளால் உணர்த்தப்படுகின்றன.

வண்டுக்கூட்டங்கள் தாமரை மலரை வேட்கையுடன் மொய்த்து அதன்கண் இருந்து பெருக்கெடுத்து வழியும் இனிய நறுந்தேனை ஆர்வமுடன் உண்டு பெரிது மகிழ்தல் போல, அடியவர் கூட்டமுந் தடுக்கொணா அன்புடன் இறை வன் றிருவடி மலர்களைச் சூழ்ந்துகொண்டு ஆண்டுப் பெருகும் பேரின்ப ஆரமுதை ஆரஉண்டு, அவ்வின்ப வெள்ளத்திற் றிளைக்குமாகலின், தொண்டரினம் இங்கு வண்டினமாக உருவகப்படுத்தப்பட்ட தென்க. இங்ஙனமே தொண்டரினங்களை வண்டினங்களாகவும், இறைவன் நல்கும் பேரின்பப் பேற்றை அவ் வண்டினங்கள் நுகருந் தேனாகவும் வைத்துச் சேக்கிழார் பெருமான்,

"மன்று ளாடுமது வின்னசை யாலே மறைச்சு ரும்பறை புறத்தின் மருங்கே, குன்று போலுமணி மாமதில் சூழுங் குண்ட கழ்க்கமல வண்டலர் கைதை, துன்று நீறுபுனை மேனிய வாகித் தூய நீறுபுனை தொண்டர்க ளென்னச், சென்று சென்றுமுரல் கின்றன கண்டு சிந்தை யன்பொடு திளைத்தெதிர் சென்றார்" (திருத் தொண்டர் புராணம், தடுத்தாட், கசு)

என்று மிக அழகாக விளக்கிக் கூறுதல் பெரிதும் நினைவு கூர்ந்து மகிழற்பாலது.

கொண்டி, கொள்ளை; "தொல்கொண்டித் துவன் றிருக்கை" யென்னும் பட்டினப்பாலையில் (உகஉ) இச்சொல் இப் பொருட்டாதல் காண்க.

(கஉ௮ - கசுஉ) மறை நவில் அந்தணர் வைகறை உணர்ந்து வாவிகுடைந்து ஆர்க்கும் தீவிய ஓதையும் - தேவார திருவாசக மென்னுந் தமிழ் நால்வேதங்கள் ஓதுஞ் சிவ அந்தணர் விடியல் நேரத்தில் துயிலுணர்ந்து திருக் குளத்தில் நீராடி ஒலிக்கும் இனிய ஓசையும், தாமரைப் பள்ளித் துயில் உணர் புள்இனம் பார்ப்பொடு கெழீஇச் சிலம்பும் ஓசையும் - தாமரை மலராகிய அணையினின்றுந் துயிலெழுந்த பறவைக் கூட்டங்கள் தத்தங் குஞ்சுகளுடன் கூடி ஆர்க்கும் ஒலியும், சிறுநுதல் கரும்கண் குறுந்தொடி மகளிர் குங்குமச் சாந்தும் கொங்கு உலாம் கூந்தலும் பால் கெழு தன்மையின் பலவேறு அழீஇ நீல்நிற முகிலில் மறையும் மின்போல் நீர் மூழ்கு ஆடும் பேர்வுஇல் ஆர்ப்பு ஒலியும் - சிறிய நெற்றியுங் கரியகண்ணுங் குறிய வளையலும் உடைய இளமகளிர் தமது இளமுலை முன்றிலில் முந்தின இரவு தங் காதற் கணவராற் கழும அப்பித் தொய்யிலு மெழுதப்பட்ட குங்குமப்பூக் கலந்த செஞ் சந்தனச் சேற்றை யும் நறுமணம் வீசும் கூந்தல் முடிப்புகளையும் அவை பல பகுப்புகள் பொருந்திய வியல்பினுல் அவற்றைப் பலவேறு முறையாக அழித்துக் கழீஇக் கருநீல நிறம்வாய்ந்த புயலி னிடையில் மறைந்து ஒளியும் மின்னற்கொடிகளை ஒப்ப நீரில் மூழ்குதல் செய்யும் நீங்குதல் இல்லாத ஆரவாரிப் பொலியும், திருவின் செல்வி அருமையின் பெற்ற குறு நடைச் சிறுவர் சிறுதேர் உருட்டித் திறல்கெழு மறவர் மல் பயில் கழகத்துக் கைபுடைத்து ஆர்க்கும் இசையினும் சிறந்து விட்டுவிட்டு இசைக்கும் மட்டில் கம்பலையும் - திரு வுக்குச் செல்வியாகிய திருமகளை யொத்த மகளிர் அருமை யாற்பெற்ற சிறிய நடையினையுடைய சிறுர்கள் சிறியதேரைத் தெருவில் உருட்டுதலால் வலிமை பொருந்திய மறவர்கள் மற்போர் பழகுகின்ற கழகத்தில் தம்முடைய தோள்களிற் கைதட்டி ஒலிசெய்யும் ஓசையினும் மிகுந்து இடை விட்டு விட்டு ஒலிக்கும் அளவில்லாத ஓசையும், ஓவாது கறங்கும் ஒற்றிமா நகர் - ஓயாமல் ஒலிக்குந் திருவொற்றிமா நகரின் கண்;

'வைகறை உணர்த'லாவது வைகறையில் துயிலுணர்தல்; 'குடைதல்' இங்கு நீராடுதலென்னும் பொருட்டு; "உரையினி மாதராய்... புனல்குடைந்து" (சிலப். குன்றக் குரவை) என்பதிற்போல. ஓதையும் ஓசையும் ஒன்று.

'நீல்' கடைக்குறை; 'மின்' மகளிர்க்கும், 'முகில்' கூந்தற்கும் உவமமாகக் கொள்க. எனவே 'நீலவான்' நீருக்கு உவமையாதல் கூறுமலே பெறப்படும். 'மூழ்காடு' ஒரு சொல் நீர்மையுமாம்.

செல்வக் குடியிற் பிறந்த சிறுரென்றற்குத் 'திருவின் செல்வி அருமையிற் பெற்ற சிறுவர்' என்றார்; செல்வி, சிறுர் என்பன ஒருமையிற் பன்மை மயக்கம்; "ஏவலிளையர் தாய் வயிறு கரிப்ப" என்று சேனாவரையர் காட்டியதூஉங் காண்க; (தொல்காப்பியம், எச்சவியல், சுகு).

'சிறுதே ருருட்டி விட்டுவிட் டிசைக்கும் மட்டில் கம்பலை' யெனக்கொள்க. உருட்டுதலால் இசைக்குங் கம்பலையெனப் பொருள் தோன்ற நிற்றலின், 'உருட்டி' யென்னும் வினையெச்சம் இங்குக் காரணப் பொருளதாம்.

'கழகம்' என்பது கலைபயிலிடம்.

பெரியோர் பெருந்தேர் உருட்டுங்கால் வருத்தந் தெரியாமைக் காகக் கைகொட்டியும் வாய்ப்பாட்டு இசைத்தும் பறைமுழக்கியும் ஒலிசெய்வர்; சிறிது தொலைவு தேர் உருண்டு சென்றுவழியில் முட்டுண்டு நின்றக்கால் மீண்டும் அங்ஙனமே அவர் ஒலிசெய்யாநிற்பர்; அவரை ஒப்பவே சிறுரும் விளையாட்டாய்ச் சிறுதேர் உருட்டும்போது விட்டு விட்டு ஒலிசெய்து மகிழ்வாராகலின், ஈண்டுச் சிறுதேர் உருட்டி விட்டுவிட் டிசைக்கும் 'மட்டில் கம்பலை' யென்றார்.

மட்டென்பது அளவு; "மதுவும் அளவும் மட்டெனலாகும்" என்பது பிங்கலந்தை.

'நகர்' என்புழி 'நகரின்கண்' என ஏழனுருபொன்று விரித்துக்கொள்க,

(கசங-கருஅ) தாவா இளமை தலைத்தலை சிறப்ப-கெடாத கட்டிளமை மேலுக்குமேல் மிகுதிப்பட, பன்னிரு விழி எனும் கண்ணகன் சுனையில் அருள் எனும் அருவி விரிவுறப்பெருகி முழவுத்தோள் எனும் கொழுவிய குன்றில் பல்முகம் பரந்து தண்ணெனச் செல்ல-பன்னிரண்டு விழிகள் என்னும் இடம் அகன்ற நீர்ச்சுனையில் அருள் என்னும் நீர் அருவி மிகவும் பெருக்கெடுத்து முழவினை ஒத்ததோள் என்னுஞ் செழுமையான மலையின்மேற் பல முகமாகப் பரவிக் குளிர்ச்சிமேவி யொழுக, நித்திலம் பெய்த விழுத்துவர்ச் செப்பின் மூய் திறந்தன்ன வாய்நகை தோன்ற-முத்துக்கள் வரிசையாய்ப் பெய்து வைக்கப்பட்ட மேலான பவளத்தினாற் சமைக்கப்பட்ட சிமிழின் மூடி திறந்தாற்போன்ற வாயின் கண்ணே பற்கள் தோன்றுநிற்ப, வரைவிலங்கி ஓடும் மின்னேபோல அரம்பொரு வைவேல் உரம் கிடந்து ஒளிர-ஒரு மலையினைக் குறுக்கிட்டு ஓடும் மின்னற்கொடியை ஒப்ப அரத்தால் அராவப்பட்ட கூரிய வேற்படை மார்பின் குறுக்கே கிடந்து ஒளிசெய்ய, திருமால் முகத்தின் இருவிழியென்ன மஞ்ஞையில் கிடந்த இருதாள் மலர-நீலமேனியையுடைய திருமாலின் முகத்திற் செந்நிறமான இரண்டு கண் மலர்கள் அமைந்து விளங்கினாற்போல் நீலநிறத்தினையுடைய மயிலின் உடம்பின்மேற் றங்கிய இரண்டு திருவடிகளும் மலர்ந்து தோன்ற, அஞ்ஞையர் இருவரும் இரு மருங்கு இருப்ப-வள்ளியுந் தெய்வயானையும் என்னும் அம்மையர் இருவரும் வலத்திலும் இடத்திலுமாக இரண்டு பக்கங்களிலும் விளங்க, அமைத்த கையும் அருள் தருகையும்-மலமாயைகளிற் கிடந்து நிரம்பவுந் துன்புற்றுக் களைகண் இன்றித் துடிக்கும் எண்ணில் உயிர்கட்கும் 'அஞ்சேல்' என அமைத்துக் காட்டுந் திருக்கையும் பின்னர் அங்ஙனமே அச்சந் தீர்த்துத் தன்பால் அணுகுவிக்கும் ஆருயிர்கட்கு அருள் தருகின்ற திருக்கையுங் கொண்டு, இமைப்பது இல்லாத் தேவரும் பிறரும் கண்டுகண்டு உவப்பக் கவின்று நனிவிளங்கும் காண்டகு கோலம் தழீஇ-விழிகள் இமைத்தல் இல்லாத விண்ணவரும் அவர் அல்லாத மற்றை

மண்ணவரும் விடாமற் பார்த்துப் பார்த்து மன மகிழும்படி அழகுற்று இங்ஙனம் மிகவிளங்குங் காண்டற்கு ஏற்ற திருக் கோலம் பொருந்தி;

'தலைத்தலை' யென்றது, மேலுக்குமேல் மிகுதிப்பட என்னும் பொருட்டு; "தாழ்விலுள்ளந் தலைத்தலை சிறப்ப" என்றார் அகநானூற்றிலும் (உக)

குன்றுக்குக் கொழுமையாவது: "தக்கோலந் தீம்பூத் தகைசால் இலவங்கங், கற்பூரஞ் சாதியோடைந்து" (சிலப் பதிகாரம், ரு, உகூ) என அடியார்க்குநல்லார் காட்டிய ஐம் பொருள்வளன் உடைமை.

அருளருவி பன்னிருதோட் குன்றிற் பன்முகம் பரந்து செல்லலாவது; தன்னைச் சுற்றியுள்ள எல்லா உயிர்கட்கும் எம்முகத்தும் அருள் செய்தல்.

'மூய்', மூடி; 'மூடியிருந்து வேவதோர் கொள்கலம் மூய் திறந்தவிடத்து" (கஅ-ஆம் நூற்பாவுரை) என்பது இறையனு ரகப்பொருளுரை.

'அரம் பொரு வைவேல்' எனப் பிள்ளையார் கைவேலுக்கு அடை கொடுத்தல் ஆகாதேனும் வேல் என்னும் பொதுமைநோக்கி அது கொடுத்தார்.

'முகத்தின் இருவிழி' யென்பதை ஆறன்றொகையாகக் கொள்ளலுமாம். ஆயினும் உவமிக்கப்படும் பொருட் டொடர் மஞ்ஞையிற் கிடந்தவென ஏழாவதாய் வருதலின், இவ்வுவமப் பொருட்டொடரும் அவ்வேழன் றொகையாய் வரப் பொருளுரைத்தலே சிறக்குமென்பது. 'மலர' வென்றது, மலர்ந்தாற்போற் றோன்ற வென்றற்கு.

அஞ்ஞையர் அம்மையர் என்னும் பொருளுடையது; "மென்றோள் அஞ்ஞை சென்ற வாறே" (அகநானூறு, கரு) என்பதன் பழைய வுரையைக் காண்க.

'அருடருகையும்' என்பதன்பின் 'கொண்டு' என ஒரு சொல் வருவித்துக் கொள்க.

'தழீஇ' யென்னும் வினையெச்சம் மேலடியில் வரும் பொலிந்த வென்னும் பெயரெச்சங் கொண்டு முடிந்தது.

(கஇஅ - கசுஉ) மாண்தக என் கண்ணெதிர் பொலிந்த நின் இன் அருள் நினைப்பின் - மாட்சிமைப்பட ஏழையே னுடைய ஊனக் கண்களின் எதிரில் விளங்கிக் காட்சி கொடுத்தருளிய தேவரீரது இனிய திருவருளை எண்ணினால், வயா உறு நோயும் பாராது ஈன்ற புதல்வோன் கண்டு களிக்கும் சிதைவு இல் தாயின் அருளினும் பெரிது - கருவுயிர்க்கும் நோயினால் உண்டாக்கும் துன்பத்தையும் எண்ணாமல் தான் ஈன்றெடுத்த புதல்வனைப் பார்த்து மனம் மகிழ்கின்ற கெடுதலில்லாத தாயினது அருளினும் மிகப் பெரியதாகுமென்பது.

மாண்தக, மாட்சிமை ஏற்க என்றது மாட்சிமைப்பட.

'வயா' கருவுயிர்க்குங்கால் உண்டாகும் வயிற்றுளைவு (பிங்கலந்தை, க0:கூகூக) 'வயாவுறு நோய்' என்றது, இங்கு அவ்வயிற்றுளைவினால் உண்டாகுந் துன்பம். பாராது, எண்ணாமல்.

தாய்மை மாறுதவள் என்றற்கு அவள் "சிதைவில் தாய்" எனப்பட்டாள். உம்மை உயர்வின் மேற்று.

குழந்தைகள் எத்துணைதாம் தீங்குகள் உடையவாயினும் அவற்றைச் சிறிதும் பாராட்டாமற் பரிவுகூர்தலானும், அப்பரிவு கூர்தருனுங் கைம்மாறு கருதாமல் நிகழ்தலானும், அங்ஙனம் நிகழ்ந்த வழியும் அஃது இயற்கையா யெழுதலானுந் தாயின் அருள் எல்லாம்வல்ல இறைவனது இன்னருளை ஒருவாற்றால் ஒக்குமென்பது.

அறிவும் அவாவும் (க) பலதிறப்படும் (உ); உண்டாங்கு ஆனது உறைவோர் அளவிலர் (கசு - கூ); கண்டு மெய் யென அறிவு மாழாந்து வாழ்வோரும் பலர் (கூஉ - ௬); உறங்கும் வாழ்க்கையிற் பிறங்குவோர் பலர் (௬௫); ஓசையுஞ் செவிவாய் மாந்திச் சிறந்தோரும் பலர் (எ௫); வறிதின் வாழும் மக்களும் பலர் (அ௬); பொய்படு மின்பத்து மெய் படத் துளங்கும் விழலரும் பலர் (அசு-எ); செய்வதறியாக்

கையரும் பலர் (கூகூ); இவ்வாறெழுந்தனர் போகச் செவ்விய மெய்ப்பொருளுணர்துமென் றெப்புடன் புகுந்து (கூசு-கூகூ) பொன்றிய மாக்கள் மணலினும் பலர் (ககக); ஆங்ஙனம் ஒழிந்த அளவில் மாந்தருள் யானும் ஒருவனுக நோனுது (ககஉ-கூ) வேறு பிரித்தெடுத்துச் (ககசு), சோமசுந்தரகுரவனெடு கூட்டி (ககஅ), இன்பமென்பது (ககக) நின் திருவடித் தாமரையது என மொழிவித்து என்னையும் உய்யக்கொண்டு பின்னும் (கஉகூ-எ) ஒற்றிமா நகரின்கண் (கசஉ) காண்டகு கோலந் தழீஇ என் கண்ணெதிர் பொலிந்த நின் இன்னருள் நினைப்பின் (கருஅ-கூ) தாயின் அருளினும் பெரிதே (கசூஉ) என இச் செய்யுள் கொண்டு முடிதலின், இறைவனது அருணிலையினை அடிகள் இதன்கண் இனிது விளக்கியவாறு கண்டுகொள்க. (கசூ)

## கள. நெஞ்சறிவுறுத்தல்

ஆ ஆ வியந்து பிழைசெய்யும் நல்நெஞ்சே - ஆ ஆ! வியக்கத்தக்க நலம் இல்லாத நீ அந்நலம் உடையைபோல் நின்னை நீயே பாராட்டி அதனுற் பிழையாவன செய்யும் நல்ல நெஞ்சமே, வேலோன் நயந்து உன் எதிர்தோன்றும் நாள் - வேல் தாங்கிய முருகப்பெருமான் விரும்பி உனக்கு எதிரில் தோன்றுகின்ற நாளில், தேவா - ஒளிவடிவாகிய பெருமானே, திருவொற்றிச் சேவார் புதல்வ - திருவொற்றியூரின்கண் எழுந்தருளி யிராநின்ற விடையுடைய பெருமானுக்குப் புதல்வ! என நா ஆர வாழ்த்தி நடம்புரிவாய் - என்று நாத்தழுதழுப்ப வழுத்திக் களிப்பாற் கூத்தாடுவாயாக வென்பது.

நெஞ்சிற்கு நலம் இன்மையாவது: அழுக்காறு அவா வெகுளியுடையதாதல்; தன்னை வியத்தலாவது; நெஞ்சு தனக்கில்லாத நலனை இருப்பதாகக் கருதித் தன்னை நன்கு மதித்தல்; அது பிழை செய்தலாவது: தன் உண்மை நிலை உணராமையிற் பிறருடைமை கண்டு அழுக்கறுத்தலும், அதனைக் கவர்ந்துகொள்ள அவாவுதலும், அதற்கிடையூறு செய்வார்மேல் வெகுளுதலும் ஆகும். இத்துணைத் தீய

இயல்புள்ள நினக்கும் இரங்கி இறைவன் நின்முன்னே அருள் செய வருங்கால், அத் தீய இயல்புகளை அறவே மறந்து, அவனை வாழ்த்தி வணங்குதலிலேயே நின் எண்ணத்தைச் செலுத்தக் கடவாய் என்றவாறு.

சே - காளைமாடு; அதன்மேல் இவருஞ் சிவபிரான் 'சேவார்' எனப்பட்டார்.

சொல்வது கேட்டுத் திருந்துதல் வேண்டி 'நல்நெஞ்சு' என நயம்பட உரைக்கலாயிற்று. ஆஆ 'ஆவா' ஆயின; வியப்புக்குறி. (௧௭)

## ௧௮. தன்னுட்கையாறெய்திடு கிளவி

தலைவி தன்னை வரையாது களவின்கண் வந்து ஒழுகுந் தன் தலைவனால் தனக்கு நேர்ந்த துன்பத்தை ஒரு தாழை மேலிட்டு வருந்திக் கூறுவது.

நாளால் மலர்ந்து - விடியற்காலையே மலர்ந்து, மனக்கு இனியான் சென்ற நாள் அறிந்து - எமது உள்ளத்துக்கு இன்பம் அளிப்பவனை எம் தலைவன் எம்மை விட்டுப் பிரிந்து சென்ற நேரந் தெரிந்து, வாள் ஆர் மடலின் அளியேம் உயிர்போழ் வகையும் அன்றி - வாளை ஒக்குங் கூரிய நினது மலரின் ஏட்டினால் அருள்செயத்தக்க எமது உயிரினைப் பிளந்து வருத்தும் வகையும் அல்லாமல், கோளான சொல்லிப் புணர்ந்தார் கரியும் குறிப்பு அறியாய் - தம் மனத்தின்கண் உள்ளது ஒன்றாகப் பிறிதொன்று சொல்லி மகிழ்வித்து எம்மைப் புணர்ந்தவர்க்குச் சான்றாக நீ நின்ற குறிப்புத் தானும் அறிந்திலை, கேள் ஆன மெய்யும் முடங்கும் ஒற்றிக் கழிக் கேதகையே - அதனால் நினக்கு உறவான உடம்பும் கூனாகி வளையப்பெற்ற திருவொற்றிமா நகர்க் கடற்கரையடுத்த கழிக்கானலில் நிற்குந் தாழஞ்செடியே என்றவாறு.

நாள் - விடியற்காலை; "நாள் ஆ தந்து" என்புழி (பெரும்பாணாற்றுப்படை, ௧௫௬) இச்சொல் இப் பொருட்டா

தல் காண்க; 'நாளால்' நாளில் என ஏழன் பொருளில் மயங்கியது. 'மனக்கு' என்பது அத்துச்சாரியையின்றி வந்தது; "நலக்குரியார் யாரெனில்" (திருக்குறள், கசசுக) என்புழிப்போல.

தாழம்பூவின் ஏடு, வாள்போற் கூர்ம்பற்கள் வாய்ந்திருத்தலின், "வாளார்மடல்" எனப்பட்டது.

காதலனைப் பிரிந்து ஆற்றுதே வருந்தும் யாம் நின்னால் இரங்கி அருளற்பாலேம் என்பது குறிப்பிப்பாள் 'அளியேம்' என்றாள்.

உடம்பை மட்டுமே பிளக்கவல்ல நினது மடலைக் கொண்டு எமதுயிரையும் நீ போழ வல்லையாயது அறக் கொடிதென்பாள் "உயிர் போழ்வகை" என்றாள்.

காதலன் சொன்ன கோளாவது: "நின்னிற்பிரியேன், பிரியின் ஆற்றேன்" என்பது. கரி - சான்று. நெய்தல் நிலத்துக் கானற்சோலையின் கண்ணதான ஒரு புன்னைமர நீழலிலே எம்மை எங்காதலர் புணர்ந்தபோது அதனைச் சான்றாகக் கண்டு நின்ற நீ, திரும்ப எங்காதலர் இங்கு வந்து நின்றபோது, அவர்க்கு எமது பிரிவாற்றாமையினைச் சொல்லாது விட்ட வன்கண்மை, எமதுயிரைப்போழும் வன்கண்மையினுங் கொடிதென்பாள் 'கோளான சொல்லிப் புணர்ந்தார் கரியுங் குறிப்பரியாய்' எனக் கடிந்துரைத்தாள். சொன்ன சொல்லை நம்பி ஏமாந்த எம் பக்கல் நின்று நீ சான்று பகரவேண்டுவதாயிருக்க, அது செய்யாது பொய்கூறிய அவர் பக்கலாக நின்று வாய்வாளாதிருந்த நின் வன்கண்மையினை அறக்கடவுள் கண்டு நின்னை ஒறுத்ததனாலேயே நின்னுடல் வளையப்பெற்றனை யென்றாள்; இது தற்குறிப்பேற்றம், என்னை? இயற்கையாய் அமைந்த தாழையின் வடிவுக்குத் தலைமகள் தான் கருதிய குறிப்பினை ஏற்றிக் கூறினமையின்; தமிழ்த்தண்டியாரும்,

"பெயர்பொருள் அல்பொரு ளௌஇரு பொருளினும்
இயல்பின் விளைதிறன் அன்றிஅய லொன்று
தான்குறித் தேற்றுதல் தற்குறிப் பேற்றம்"

என்றார் (தண்டியலங்காரம், பொருளணியியல், உअ). "தன்னுட் கையா றெய்திடு கிளவி" யாகிய இதனைத் திருவாதவூரடிகள்,

"விண்டலை யாவர்க்கும் வேந்தர்வண் டில்லைமெல் லங்கழிசூழ்
கண்டலை யேகரி யாக்கன்னிப் புன்னைக் கலந்தகள்வர்க்
கண்டிலை யேவரக் கங்குலெல் லாம்மங்குல் வாய்விளக்கும்
மண்டில மேபணி யாய்தமி யேற்கொரு வாசகமே"

எனத் திங்கள்மேல் வைத்தருளிச் செய்தமை காண்க (திருக்கோவையார், கஎஎ).

இவ்வுலக வாழ்க்கையினூடு நின்று இறைவன் றிருவருளின்பத்தை ஒரோவொருகால் நுகரும் ஒரு புலவன் அதனை யிடையறாது பெற்று நுகரும் வேட்கையால் இங்ஙனங் கூறியதாக இதற்குப் பேரின்பப்பொருள் உரைத்துக்கொள்க. புலவன் தலைவி, இறைவன் தலைமகன், புன்னையங்கானல் வீட்டுலகம், தாழை விந்துமாயை; பிறவும் இங்ஙனமே ஒட்டிக் கொள்க; விரிப்பிற் பெருகும். (கअ)

## கசுக. அருணிலைபெறுதலரிதென மொழிதல்

(க-சு) கேதகை பழித்த மாது ஒரு கூறற்கு-தாழம்பூவை வெறுத்த உமையொருபாகராகிய சிவபெருமானுக்கு, நுதல் கிழித்து இமைக்கும் கதம் கெழு விழியில்-நெற்றியைப் பிளந்து ஒளிவிடுகின்ற சினம் பொருந்திய விழியில், பொறி எனத் தோன்றி-தீப்பொறிபோற் றோன்றி, வெறிகமழ் சுனையில் அறுவர் ஊட்டிய நறும்பால் மாந்தி அறுவேறு உருவின் விளையாட்டு அயர்ந்து-மலரால் மணங் கமழ்கின்ற இமயச்சுனையிற் கார்த்திகைப் பெண்கள் அறுவரும் ஊட்டிய இனிய முலைப்பாலை உண்டு ஆறுவேறு திருவுருவங்களொடு விளையாடல் செய்து, ஆங்கு-பின்னர் அச்சுனைக்கரையில், அம்மையும் அப்பனும் அணைய-உமைப்பிராட்டியுஞ் சிவபெருமானும் எழுந்தருள, செம்மையின் உலகு புரந்தருளும் உமை திரு மடியின்-இனிதாக இவ்வெண்ணிறந்த உலகங்களையும் பாதுகாத்தருளுகின்ற உமைப் பிராட்டியின்

திருமடியின்கண், அறுவேறு உருவும் ஒருவடிவாகி விளையாட்டு அமர்ந்த இளையோய்-அவ் வாறுவேறு திருவுருவங்களும் ஓர் உருவாகி விளையாடல் மேவிய இளைய பெருமானே;

முருகப் பெருமானது பிறப்பு வரலாறு கந்த புராணத்துட் கூறப்பட்டவாறே இங்குக் கூறப்படுவதாயிற்று.

அயர்ந்து-செய்து; இப்பொருட்டாதல், "களிறுமணன் அயர்பு" (பரிபாடல், உ, கூ) என்புழிக் காண்க.

கதம், சினம்; (புறம், கூ). 'அமர்தல்' இங்குப் 'பொருந்துதல்' என்னும் பொருட்டு, "வள்ளியொடு நகையமர்ந்தன்றே" (திருமுருகாற்றுப்படை, க0உ) என் புழிப் போல.

(கூ-கஎ) உழைப் பிரிந்து-பின்பு ஆங்கு நின்றும் பிரிந்து, நற்றவர் ஓங்கும் ஒற்றிமா நகர் - நல்ல தவமுடைய மேன் மக்கள் சிறந்தோங்குகின்ற திருவொற்றி மாநகரின்கண், வெற்றி வைவேல் ஒரு திறம் பொலிய - வெற்றிதருங் கூரிய வேல் ஒருபால் விளங்க, பளிக்கறை புகுந்த ஒளிப்பரு மதியின் முறைமுறை மிளிர்ந்து நிறைகவின் பொழியும் திருமுகச்செல்வியர் இருபுறம் விளங்க - பளிங்குச் சுவரா னமைந்த ஓர் அறையின் உட் புகுந்த ஒளித்தல் அரிய மதியம் போல் முறை முறையே ஒளிவிளங்கி நிறைந்த அழகினைச் சொரிகின்ற அழகிய முகத்தினையுடைய வள்ளி தெய்வயானை யர் இருபக்கங்களிலும் விளங்க, உலகு எலாம் விழுங்கும் அலகிலா வன்திறல் களிக்கரு மஞ்ஞையில் நலப்பட அமர்ந்து - உலகங்களெல்லாவற்றையும் ஒருங்கே விழுங்க வல்ல அளவில்லாத வலிய ஆற்றலமைந்த களிப்பினையுடைய கரிய மயிலின்மேல் அழகாக எழுந்தருளி, என்விழி எதிர் தோன்றிய அழியாப் பெரியோய்-எனது கண்முன்னே தோன்றியருளிய அழிதலில்லாத பெரிய பெருமானே என்பது.

முருகப் பெருமானை முன்னர் 'இளையோய்' என்றதும், ஈண்டுப் 'பெரியோய்' என்றதும் முறையே இளமையும் பெருமையுங் கருதியவாற்றானென்க.

திறம்-பக்கம்; "பெண்ணுரு வொருதிறன் ஆகின்று" என்றார் புறநானூறும் (ச). ஈண்டு, வலப்பக்கம்; வேல் கைக் கொண்டது அப்பக்கத்தேயாகலின்,

வள்ளி தெய்வயானையர் தம்முள் ஒருவரை யொருவர் பொருமையால் நோக்குதலாலுந், தங் காதலனாகிய முருகப் பிரானை அடுத்தடுத்துக் காதலொடு நோக்குதலாலுந் திரும்பித் திரும்பி விளங்கும் பளபளப்பான அவர் தம் முகங்களின் காட்சி, பளிக்கறையு ளிருந்து காணப்படும் இருமதியங்களின் காட்சியை ஒத்திருந்ததென்றார். பளிங்கு முகத்தின் பளபளப்புக்கும், மதி முகத்திற்கும் உவமை; முறைமுறை மிளிர்தலாவது: வள்ளி இறைவனை நோக்குங் கால் தெய்வயானை அவளை நோக்குதலும், தெய்வயானை இறைவனை நோக்குங்கால் வள்ளி அவளை நோக்குதலும்.

இதுகாறும் முருகப் பெருமானைச் சிறப்பித்து விளித்த படியாம்; இனி அவன்பால் அன்பராயினார் பெருமைகளை விரிக்கப் புகுந்து, முதலிற் சூரனைக் கூறு முகத்தால் அவன் ஆற்றிய தவவொழுக்க வியல்பு கூறுகின்றார்.

(கஅ - நுச) தீயிடை நின்றும் நீரிடை மூழ்கியும் மரம் மேல் இவர்ந்து தலைகீழ்த் தொங்கியும் அறுவகை இருக்கை யின் நெறிபட அமர்ந்தும் - தீயின் நடுவே நின்றும் நீரினுள் மூழ்கியும் மரத்தின்மேல் ஏறி அம்மரத்தின் கிளையிலிருந்து தலைகீழாகத் தொங்கியும் ஆறு வகையான தவ விருக்கை களில் ஒழுங்கு தவறாமல் வீற்றிருந்தும், புறம்படுத்து இழுத் தாங்கு அகம்பட நிறைத்துத் தெளிநிலை முகிழ்க்கும் வளிநிலை உழன்றும் - உள்ளே உலவுங் காற்றை முதலில் வெளி விட்டுப் பின்பு வெளிக்காற்றை உள்ளிழுத்துக் கொப் பூழின்கீழ் உள்ளே பொருந்த நிறைத்து அவ்வாற்றால் மனம் ஒருவழி நிற்றலின் அறிவு தெளிவெய்தும் நிலை தோன்றப்பெறுகின்ற மூச்சை நிறுத்தும் நிலையில் வருந்திப் பழகியும், தன் தொழில் தபுத்துத் தனி முதற்பொருளின் அருள் எனும் வெள்ளம் வரம்பு இற மிகுந்து நிலையும் இடன் என உலகெலாம் நோக்கியும் - தன் செயல் கெடுத்துத்

தனக்கு ஒப்பும் உயர்வும் இல்லாமையிற் றனித்த முழுமுதற் பொருளாகிய ஆண்டவனது அருள் என்னும் வெள்ளம் அளவு கடப்ப மிகுந்து நிலையுறும் இடங்களென்று உலகம் முழுமையும் அருளாகவே கண்டும், ஐம்பெரும் பூதமும் ஐம்புறம் நிறீஇ ஐவகைத்தேவும் ஆங்கு ஆங்கு அமைத்துப் பொய் முறை இன்றி மெய்முறை பரவியும் - நிலம் நீர் முதலான ஐந்து முதற்பொருள்களையும் அடி முதல் முடி காறுமாக ஐந்திடங்களில் அமைத்து அவ்வவற்றிற்குரிய ஐவகையினரான தேவரையும் அங்கங்கும் எழுந்தருளுவித்துப் பொய் வழிகளில்லாமல் மெய்யான வழிகளில் அக வழிபா டாற்றியும், கருவியும் புலனும் புரிவின்றி நிகழ ஒரு முதற்பொருளொடும் அறிவினைக் கடவியும் - மெய் முதலிய புறக்கருவிகளும் மனம் முதலிய அகக்கருவிகளுந் தத்தம் உணர்வுகளினின்றும் அவாவின்றி ஒரு முகமாய் நடைபெற ஒருமுதற் கடவுளாகிய ஆண்டவனது திருவுருவத்தோடு ஒருமித்து நிற்குமாறு தனது அறிவினைச் செலுத்தியும், இருவகை நிலையும் ஒரு முறை இறந்து மேல் நிலை நின்று வான் பொருள் உணர்ந்தும் - தான் அவன் எனப் பிரித்துக் காணும் வேற்றுமை நிலையினை அவனே தானெனக் காணும் ஒற்றுமை நிலையாற் கடந்து, பிறை மண்டிலத்தில் உணர்வு நிலைபெற்றுத் தூய சிவத்தோடு ஒன்றியுணர்ந்தும், ஊழி ஊழியும் ஓ இன்றி நோற்ப - ஊழி ஊழி காலமாக ஒழிதல் இல்லாமல் தவம் முயன்றும், போழ் மதிச்சடையோன் போதாருக - பிளவுபட்ட மூன்றாம் பிறையை யணிந்த சடை முடியையுடைய சிவபிரான் தோன்றிலனாக:

தவஞ் செய்வார்க்குத் தீயிடை நிற்றல் நீரிடை மூழ்கல் முதலியன உரியவாதல், "தவஞ் செய்வார்க்கு உரியன ஊண் நசையின்மை நீர் நசையின்மை வெப்பம் பொறுத்தல் தட்பம் பொறுத்தல் இடம் வரையறுத்தல் ஆசனம் வரை யறுத்தல் இடையிட்டுமொழிதல் வாய்வாளாமை என எட்டும்; இவற்றிற்கு உணவினும் நீரினுஞ் சென்ற மனத்தைத் தடுத்தலும், ஐந்தீநாப்பணும் நீர் நிலையினும் நிற்றலுங், கடலுங் காடும் மலையும் முதலியவற்றில் நிற்றலுந்,

தாமரையும் ஆம்பலும் யாமையும் முதலிய ஆசனத்திருத் தலும், உண்டற்காலை உரையாடாமையுந், துறந்த காற்றெட்டு வாய்வாளாமையும் பொருளொன்றுணர்க" என்று உரையாசிரியர் நச்சினார்க்கினியர் விளக்கியவாற்றால் அறியப்படும் (தொல்காப்பியம், புறத்திணையியல், உ0).

"இனி, யோகஞ் செய்வார்க்குரியன: இயமம் நியமம் ஆசனம் வளிநிலை தொகைநிலை பொறைநிலை நினைதல் சமாதி என எட்டும்" என அவ்வாசிரியர் ஆண்டுக் கூறிய வற்றுள் ஆசனம் முதலான ஆறுறுப்பும் முறையே கூறினர். "ஆசனம் என்பதற்குத் தமிழ் இருக்கை: இவை ஆறு என்பர் பிங்கலந்தை ஆசிரியர்; அவை: பத்திரங் கோமுகம் பங்கயங் கேசரி, சுவத்திகஞ் சுகாதனம் என்ப வாதனம்" என அவர் கூறுமாற்றால் அறியப்படும்; அவற்றுட், "பத்திராசனமாவது: விதையின் கீழேயுள்ள நரம்பின் இரு பக்கங்களிலுங் காற் பரடுகளைச்சேர்த்தல்;" "கோமுகமாவது: இடது பொம்மை யின் கீழ் வலதுகாற் பரட்டையும் வலது பொம்மையின் கீழ் இடது காற் பரட்டையும் செவ்வனே சேர்த்தல்;" "பங்கய மாவது: செவ்வனே கால்களை மடித்திருந்து, பின்புறமாக இரண்டு கைகளையுஞ் செலுத்தி, இரண்டுகாற் பெருவிரல் களையும் பிடித்துக்கொண்டு, நெஞ்சினுக்கு அருகே நால் விரல் இடைவெளி யிருக்குமாறு மோவாயை வைத்து மூக் கின் நுனியைப் பார்த்திருத்தல்;" "கேசரியாவது; விதை யின்கீழ் நரம்பின் இரு பக்கங்களிலும் வலத்தே இடது பரட்டையும் இடத்தே வலது பரட்டையுஞ் சேர்த்தி, முழந் தாளிரண்டின்மேல் இரண்டு முழங்கைகளையும் வைத்துக், கைவிரல்களை விரித்து, நாவை நீட்டி, ஒரு முகப்பட்ட நினைவுடன் மூக்கின் நுனியைப் பார்த்தல்;" "சுவத்திகமா வது: தொடைக்கும் முழந்தாளுக்கும் நடுவே இரண்டு அடி களையும் ஏற்றி உடல் நிமிர்ந்து செவ்வனே யிருப்பது;" "சுகாதனமாவது: எங்ஙனமிருந்தால் மன வொருமையும் இன்பமும் உண்டாகுமோ அங்ஙனமிருத்தல்."

இனி, ஆசிரியர் திருமூலர் எழுவகையிருக்கைகள் கூறி, அவற்றின் மேலும் எட்டும் பத்தும் அறுபத்துநாலும் நூறு மாக இருக்கைகள் பற்பல உள என்பர்; அது,

"பத்திரங் கோமுகம் பங்கயங் கேசரி
சொத்திரம் வீரஞ் சுகாதனம் ஓர் ஏழும்
உத்தம மாம்முது வாசனம் எட்டெட்டுப்
பத்தொடு நூறுபல வாசன மாமே" (திருமந்திரம், ௫௬௩)

என அவர் அருளிச் செய்திருத்தலால் அறியப்படும். மேலே பிங்கல முனிவர் கூறிய இருக்கைமுறை பெரும்பாலும் ஆசிரியர் திருமூலர் முறையைத் தழுவி நிற்றலும் நோக்கற்பாலது.

அதன்பின், வளிநிலையாகிய 'பிராணாயாமம்' புகன்றார். உடம்பின் உள் நின்ற காற்றைக்'கழித்தல் 'ரேசகம்' என்றும், அங்ஙனங் கழித்தபின் வெளிநின்ற காற்றை உள்ளிழுத்தல் 'பூரகம்' என்றும், உள் நிறைந்த காற்றைக் கொப்பூழின் கீழுறுப்பில் நிறுத்தல் 'கும்பகம்' என்றும் யோகநூலார் கூறுவர். அஃது ஆசிரியர் திருமூலர்,

"வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே
ஏமுற்ற முப்பத் திரண்டும் இரேசித்துக்
காமுற்ற பிங்கலைக் கண்ணாக இவ்விரண்
டோமத்தால் எட்டெட்டுக் கும்பிக்க உண்மையே"
(திருமந்திரம், ௫௭௩)

என அருளிச் செய்திருக்குமாற்றால் அறியப்படும். இதனை நச்சினார்க்கினியர்,

"உந்தியொடு புணர்ந்த இருவகை வளியுந்
தந்தம் இயக்கந் தடுப்பது வளிநிலை"

என்னுந் தமது உரைச் சூத்திரத்தால் விளக்குவர்.

அன்பின், தொகைநிலையாகிய 'பிரத்தியாகாரங்' கூறினார். இதனியல்பு,

"ஒருக்கால் உபாதியை யொண்சோதி தன்னைப்
பிரித்துணர் வந்த உபாதிப் பிரிவைக்
கரைத்துணர் வுன்னல் கரைத்தல்உண் ணோக்கல்
பிரத்தியா காரப் பெருமைய தாமே"

என்னுந் திருமந்திரத்தானும் (௫௮௫),

"பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமல்
ஒருவழிப் படுப்பது தொகைநிலைப் புறனே"

என்னும் நச்சினார்க்கினிய ருரைச் சூத்திரத்தானும் விளங்கா நிற்கும்.

அதன்பிற், பொறைநிலை என்னுந் 'தாரணை' கூறினர். ஐம்பூதங்களால் ஆக்கப்பட்ட இவ்வுடம்பில் அடிமுதல் முழங்கால் வரையிலுள்ள பகுதி நிலப்பகுதியின்பாற் படும்; முழந்தாள் முதல் எருவாயில் வரையிலுள்ள இடம் நீரின் பகுதியாகும்; எருவாயில் முதல் நெஞ்சம் வரையிலுள்ள இடந் தீயின் பகுதியாகும்; நெஞ்சம் முதற் புருவநடுவு வரையிலுள்ள பகுதி காற்றின்பாற் படும்; புருவநடு முதல் தலையின் உச்சிவரையிலான இடம் வான்பகுதியிற் சேர்ந்த தாகும். இவ்வாறு ஐம்பூதப் பகுப்பில் அடக்கப்பட்ட இவ் வுடம்பினுள் நிலத்தின் பகுதியில் நான்முகக் கடவுளையும், நீரின் பகுதியில் திருமாலையும், நெருப்பின் பகுதியில் உருத் திரப் பெருமானையுங், காற்றின் பகுதியில் மகேசுவரனையும், வானின்பகுதியில் சதாசிவக் கடவுளையும் வைத்து நினைவளவில் வழிபாடு ஆற்றுதலே 'தாரணை' என்னும் பொறைநிலை யாகுமென்று யோகநந்துவோபநிடதங் கூறுநிற்கும். ஆசிரியர் திருமூலர்,

அரித்த வுடலையைம் பூதத்தில் வைத்துப்
பொருத்தவைம் பூதஞ்சித் தாதியிற் போந்து
தெரித்த மனாதிசத் தாதியிற் செல்லத்
தரித்தது தாரணை தற்பரத் தோடே"

எனத் தாரணையின் இயல்பைத் திருமந்திரத்தில் (௬கூ௭) எடுத்தோதினர். நச்சினார்க்கினியர், தாரணை யென்னும் பொறைநிலைக்கு "மனத்தினையொரு வழி நிறுப்பது பொறையே" எனவும், அதன்பிற் போந்த தியானம் என்னும் நினைவுநிலைக்கு,

"நிறுத்திய அம்மனம் நிலைதிரி யாமற்
குறித்த பொருளொடு கொளுத்தல் நினைவே"

எனவும், அதன் பிற்போந்த சமாதி என்னும் இரண்டற்ற நிலைக்கு,

"ஆங்ஙனங் குறித்த அம்முதற் பொருளொடு
தான்பிறன் ஆகாத் தகையது சமாதி"

எனவும் உரைச் சூத்திரங்கள் வகுத்தமை காண்க. இவற்றின் விரிவுகள் 'யோக தத்துவோப நிடதத்'துந், 'திருமந்திரத்'துங் கண்டுகொள்க, விந்து வென்னும் மின்னொளி மண்டிலம் எருவாய்க்குங் குறிக்கும் நடுவேயுள்ள மூலத்துக்குமேல் நிலவுவதெனவும், நாதம் என்னும் பிறை மண்டிலந் தலையுச்சிக்கண் நிற்பதெனவும், இவையிரண்டற்கும் இடையே தொடர்ந்து நிற்குஞ் சுழுமுனை யென்னும் அனல் நாடியின் ஊடே விந்துவினொளி மேலெழுந்து சென்று உச்சிக் கண்ணதான பிறை மண்டிலத்தை அளாவ அவ்வளாவுதலில் உணர்வு தோய்ந்து ஒன்றியுருகித் தன்னை விழுங்கிக் கிளரும் சிவவொளியாய் உயிர் நிற்கப் பெறுதலே சமாதியாமெனவும் ஆசிரியர் திருமூலர்,

"விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடிற்
சந்தியி லான சமாதியிற் கூடிடும்
அந்தம் இலாத அறிவின் அரும்பொருள்
சுந்தரச் சோதியுந் தோன்றிடுந் தானே"

என்று திருமந்திரத்தில் (சுகசு) அருளிச்செய்திருத்தல் நினைவிற் பதிக்கற்பாற்று.

தபுத்தல்-கெடுத்தல், "உள்ளம் அழிய ஊக்குநர் மிடல் தபுத்து" என்னும் பதிற்றுப்பத்தில் (கங, கஅ) இச்சொல் இப்பொருளில் வருதல் காண்க.

'பொய்ம்முறை இன்றி மெய்ம்முறை பரவு'தலாவது: நான்முகனை அவற்குரிய நிலையிலன்றி அவற்கு மேற்பட்ட திருமால் நிலையில் வைத்து வணங்காமையுந், திருமாலை அவற்குரிய நிலையிலன்றி அவற்கு மேற்பட்ட உருத்திரன் நிலையில் உயர்த்துவைத்து வணங்காமையும், உருத்திரனை அவற்கு மேற்பட்ட மகேசுரன் நிலையிலும் மகேசுரனை அவற்குமேற்பட்ட சதாசிவன் நிலையிலுஞ் சதாசிவனை அவற்கு மேற்பட்ட முழுமுதற் சிவத்தின் நிலையிலும் வைத்து வணங்காமையும், அவ்வவரை அவ்வவர்க்குரிய நிலையின் மட்டுமே வைத்து வணங்குதலும் ஆகும்.

'கருவியும் புலனும் புரிவின்றி நிகழ' என்பதிற் கருவி யென்றது மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் புறக் கருவிகள் ஐந்தினையும், புலனென்றது மனம், நினைவு (சித்தம்), அறிவு (புத்தி), முனைப்பு (அகங்காரம்) என்னும் அகவுணர்வுகள் நான்கனையும்; புரிவு - அவா, விருப்பம்; "புரிமாண் புரவியர்," என்புழி (பரிபாடல், ௧௧, ௧௨) இப் பொருள் காண்க. கருவியும் புலனும் புரிவின்றி நிகழ்த லாவது: கண் முதலிய பொறிகளால் உணர்ந்த பொருள் களை ஒருவர் தமக்கும் பிறர்க்குந் தீங்கு பயவாமுறையில் நுகர்தல்; பிறர்க்குரியதொரு பொருள் காட்சிக்கு இனிதா தல்பற்றி அதனைப் பெரிதும் அவாவி அதனைத் தாம் பற்றிக் கொள்ள முனைதல் ஒருவர்க்கு ஏதமாம்; மற்று, அங்ஙனம் பிறர்க்கு உரித்தாகாத தொன்றனைக் கொள்ளு முறையாற் கொண்டு நுகர்தல் ஏத முடைத்தன்றாம். இனி, மாயாவாத நூலாரும் அவரோடொத்தார் பிறருங், கொள்ளு முறையிற் கொண்டு பொருள்களை நுகர்தலுங் குற்றம்; ஆதலாற், பொறிவழி உணர்வு செல்லாமல் முழுதும் அடக்குதலே வாய்மையாமெனக் கரையா நிற்பர். பொறிவழிச் செல் லும் உணர்வு அவ்வப் பொறிகளால் நுகர்தற்குரிய பண் டங்களை நுகருமுறையில் வைத்து நுகராக்கால், உயிர்கள் அறிவும் இன்பமும் எய்தாவாய் உணர்வில்லாக் கற்போல் ஆய்விடுமாகலின் அவர் கூற்றுப் பொருந்தாது; அல்ல தூஉம், அங்ஙனங் கரையும் அவர்தாமுந் தாங் கரையுமாறே நடவாது, தாம் வேண்டுவன வெல்லாந் தாம் வேண்டு மட்டும் நுகர்ந்து செல்லக் காண்டலால், அவரது கோள் அவர்க்கே பயன்றராதாதலுந் தெரிந்துகொள்க. இவ் வுண்மை தேற்றுதற்கன்றே ஆசிரியர் திருமூலர்,

> "அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்
> அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை;
> அஞ்சும் அடக்கில் அசேதனமா மென்றிட்
> டஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே"
>
> (திருமந்திரம், ௨0௩௩)

என்றருளிச் செய்ததூஉம் என்க.

முழுமதியை இருகூருகப் பிளந்து வைத்தாற்போற் காணப்படுதல் பற்றிப் பிறைமதி 'போழ்மதி' எனப்பட்டது.

(ரு௯ - ௬0) கொழுங்குறை தன்மெயில் பலமுறை தடிந்தும் - கொழுவிய தசையினைத் தன் உடம்பிலிருந்து அறுத்து இட்டும், உறுப்பினை ஈர்ந்து நெறிப்பட வீசியும் - உடம்பின் உறுப்புகளை அறுத்து முறையாய் எறிந்தும், பச்சிளம் 'குருதியை நச்சி உகுத்தும் - தனது உடம்பின் புதிய செவ்விய செந்நீரை விரும்பிச் சொரிந்தும், உயிர்ப் பலி வேள்வியில் கடன்பல கழிப்பி - உயிர்க்கிடமான உடம்பையே பலியாக இடும் வேள்வியிற் கிரியைகள் பலவும் முடித்து, அரிதின் முயன்ற பின்றையும் - கடுமையாகத் தவம் முயன்ற பின்னும், புரிசடைப் பெரியோன் போந்திலனுக - புரிந்த சடைமுடியை யுடைய பெரியோனை சிவ பெருமான் முன் தோன்றிலனுக,

'கொழுங்குறை,' தசை, "காழிற் சுட்ட கோழூன் கொழுங் குறை" என்பது பொருநராற்றுப்படை (௧0௫). தடிந்து - அறுத்து, இப் பொருட்டாதல் பரிபாடலிற் (௫, ௬) காண்க. அரியுந்தோறும் இறைவனருளால் வளர்தலிற் 'கொழுங் குறை' என்ருர்.

செவ்விய நலன் வாய்ந்தமைந்த குருதியென்றற்குப் 'பச்சிளங் குருதி' யெனப்பட்டது.

உயிர் நிற்றற்கிடனுகிய உடல் ஈண்டு உயிர் எனப் பட்டது ; இது "தத்தம் பொருள்வயிற் றம்மொடு சிவணும்' ஆகுபெயர் (தொல்காப்பியம், சொல்: ௧௧௬).

உடல் முதலிய எதனையும் ஒரு பொருளாகக் கருதாது வெறுக்குந் தனது துறவு நிலையைப் புலப்படுத்தும் பொருட்டும், மிகப் பெருந் துன்பங்களை யெல்லாந் தான் ஏற்று வருந்துதலைக் காட்டு முகத்தால் இறைவனுக்கு ஒரு பேரிரக்கம் வருவித்தற்பொருட்டுஞ் சூரன் இத்தகைய கடுந் தவங்கள் புரிந்தானென்க. துன்பம் பொறுத்தலே தவத்திற் கடையாளம் என்னும் உண்மை,

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

என்னுந் தெய்வத் திருக்குறளால் (உகூக) நன்கு தெளியப்படும்.

உலகினர் பொருட்டாக எல்லாம்வல்ல கடவுள் தன் அடியவர் தன்பாற் காட்டும் அன்பின் திறங்களெல்லாம் முற்றவும் புலனும் வரையிற் காத்திருந்து, பின்னரே அவர் முன் எழுந்தருளி அவர்க்கு வேண்டும் பேறுகள் அருளுவ ருகலின் இங்ஙனம் விரைவிற் போந்திலனென்ருர். புரிசடை - முறுக்குண்ட சடை (புறம், கூடு).

(சo - கூக.) எரிகிளர் - தீ மிகுகின்ற, வேள்வி ஆற்றும் ஆழ்குழியின் - வேள்வி செய்யும் ஆழ்ந்த வேள்விக் குழியில், வைநுனைய எழு நிறிஇ - கூரிய நுனியினையுடைய இருப்புத் தூணை நிறுத்தி, முழு உடம்பும் பழுதுபடப் போழ்ந்து படுத்துப் பொன்ற - சூரன் தனது முழுஉடம்பும் பழுதாகும் படி அதன்கட் பாய்தலாற் பிளந்தழித்து இறக்க, தம்பியர் பாய்வதற்கு ஊக்கிய காலை - தம்பிமாரும் அங்ஙனமே பாய்ந்தழிவதற்கு முயன்றெழுந்தபொழுது, வேய் புரை பணைத்தோள் பாவையும் தானும் ஆங்கு எழுந்து - மூங்கிற் றண்டினை ஒக்கும் பருத்த தோள்களையுடைய உமைப் பிராட்டியுந் தானுமாக ஆங்கு விரைந்து தோன்றி, வானவர் தலைவன் சீரிதின் அருளிய - தேவர்கட்குத் தலைவ ஞன சிவபெருமான் சிறப்பாக ஈந்தருளிய, வரம்பெறு பெருமையின் உரம் பெரிது எய்தி, அரிய வரங்களைப் பெற்ற பெருமையினுல் வலிமை மிகஅடைந்து, நின் சிறு அடித் தாமரை வேறு இன்றி வைகும் அழியாப்பேற்றின் வழிவழிச் சிறந்த சூர் முதல்போலப் பேரன்பு இல்லேன்-தேவரீருடைய சின்னஞ் சிறிய திருவடித் தாமரை மலர்களிற் பிரிவில்லாமற் பொருந்திவாழும் அழியாத திருவடிப்பேற்றின்கண் முறை முறையே பெருமையடைந்து வரும் சூரர் தலைவனுன சூரபதுமனைப்போல் ஏழையேன் பேரன்புடையேனல்லேன் என்பது.

வை, நுண்மை; நுனைய: குறிப்புப் பெயரெச்சம்; எழு-தூண் ; சூரபதுமனுக்குத் தம்பியர் சிங்கமுகன் முதலியோர்

சிவபிரான்பாற் சூரன் இங்ஙனமெல்லாந் தவங்கிடந்து பல பெறலரும் வரங்கள் பெற்ற வரலாறுகளெல்லாங் கந்தபுராணத்து அசுரர்யாகப் படலத்திலும் வரம்பெறுபடலத்திலுங் காண்க.

'வானவர் தலைவன் தானும் பாவையும் ஆங்கெழுந்து' எனக் கூட்டுக.

உரம், இங்குப் பெருமிதத்தின் வன்மையென்க.

'சிறுமைஅடி' யென்பது 'சீறடி' யெனப் புணர்ந்ததாகலின், அது 'சிறிய திருவடி' யெனப் பொருள்படும். இறைவன் இளைஞனாகலின் அதற்கேற்ப அவன்றிருவடி சீறடி யெனப்பட்டது. 'சூர்' அச்சம், அதனை விளைக்கும் அசுரனுக்கு ஆனது ஆகுபெயர்; 'சூர்' அச்சப்பொருட்டாதல் திவாகரத்திற் காண்க.

(கூஉ - சுசு) ஆலவாய் அமர்ந்த அழல்நிறக் கடவுள் - திருவாலவாயின் கண் திருக்கோயில்கொண் டெழுந்தருளியுள்ள தீமேனியுடைய சிவபிரானே, செந்தமிழ்வழக்கு முந்து நின்று இசைப்ப - தொன்று தொட்டுவருஞ் செவ்விய தமிழ் வழக்கி னியல்பினைத் தன் எதிரே வந்து நின்று சொல்லவும், கடாவிடை நிகழ்த்தும் தடாப்பெரும் பேறும் - இறைவன் வினவியவற்றிற்கு விடையாக அதனை மறுத்து உரை நிகழ்த்துந் தடுத்தற்கரிய பெரிய திறமைப்பேறும், இறைவன் கண்ட பொருள் வரம்பு அறிந்து - கடவுள் அருளிச்செய்த களவியற் பொருளளவு தெரிந்து, சொல் நெறி மாட்சியும் - சொல் லொழுங்கின் பெருமையும், பொருள்நெறி மாட்சியும் - பொரு ளொழுங்கின் சிறப்பும், அளவையின் விளைவும் - அவற்றை ஆராயும் அளவை முறைகளின் முடிபும், தெளிவுஉற விரித்து-தெளிவு உண்டாகும்படி விரித்து விளக்கி, சுவைபெற உரைத்த நவை இல் புலமையும் - சொற்சுவை பொருட்சுவை கெழும உரைகூறிய பழுதில்லாத புலமைப்பாடும், மறைப்பொருள் குறிப்பு நெறிப்பட ஆய்ந்து - நான்மறைகளின் உட்பொருட் குறிப்புகளை முறையாக ஆராய்ந்து, சிவனையே முதல் எனச்

சிவனிய காட்சியும் - சிவபிரானையே முழுமுதற் கடவு ளெனத் தெளிந்த அளாவிய அறிவும், சீரிதின் இயைந்த கீரன்போல - செம்மையாகப் பொருந்திய நக்கீரதேவரை ஒப்ப, சொல்தோறும் சுரக்கும் அற்றம் இல் இன்பமும் - சொல் ஒவ்வொன்றிலும் ஊற்றெடுக்குஞ் சோர்தலில்லாத இன்பமும், பட்டாங்கு கிளக்கும் முட்டுஅறு மாட்சியும் - உள்ளதை உள்ளவாறே கிளந்துகூறுங் குறைவு நீங்கிய சிறப்பும், கல்நெஞ்சும் நெகிழ்த்தும் அன்புஉறு மொழியும்- கல்லொக்கும் உள்ளங்களையும் உருக்குகின்ற அன்பு நிறைந்த சொற்களும், ஒருவழிச் சிறப்ப வருமுறை கொளீஇ - ஒருங்கே மேம்பட வருகின்ற வகையினைப் பொருத்தி, ஆற்றுப்படை சொலும் ஆற்றலும் இல்லேன் - தேவரீருக்குத் 'திருமுருகாற்றுப்படை' போல்வதோர் ஆற்றுப்படை நவிலுந் திறமையும் இல்லேன்.

தருமிக்குப் பொற்கிழி யளித்தற்பொருட்டு ஆலவாய் அமர்ந்த அழல்நிறக் கடவுள் அமைத்துக்கொடுத்த அருந் தமிழ்ப் பாட்டிற்குத் தாங்கூறிய குற்றங் களைதற்கு அக் கடவுள் எதிர்தோன்றிய காலத்தும், நக்கீரர் விளைவிடை களால் அஞ்சாது குற்றங் கூறியதான வரலாறு இங்குக் 'கடாவிடை நிகழ்த்தும்' என்னுந் தொடரினுற் குறிக்கப்பட் டிருக்கின்றது. இவ்வுண்மை திருவிளையாடற் புராணத்துள் தருமிக்குப் பொற்கிழி யளித்த படலத்தானுங், குறுந்தொகை யின் முதற்செய்யுளானுந் தெளியப்படும்.

செந்தமிழ் வழக்காவது பலவாற்றானும் உயர்ந்த இயல் புகள் வாய்ந்த நங்கையர் கூந்தல் மலரின் சேர்க்கை யின்றியே நறுமணங் கமழ்த லுண்டென்னும் நல்லிசைப் புலவர் வழக்கு.

இறைவன் கண்ட பொருள் 'இறையனுரகப் பொருள்,' தமிழ் மொழியின்கண் இப்போது காணப்படும் உரைக ளெல்லாவற்றுள்ளும் இறையனுரகப் பொருளுக்கு ஆசிரியர் நக்கீரனுர் விரித்துரைத்த தெள்ளுதமிழுரையே எல்லா நலங்களும் ஒருங்குகெழுமிச் சாலச்சிறந்து முதன்மைபெற்று விளங்குவதாதல் தமிழ்ச்சுவை யறிந்தா ரெல்லார்க்கும் ஒப்ப

முடிந்ததொன்றும். இவ்வுண்மையினை அடிகளே தாம் இயற்றிய உவராஅமிழ்தன்ன அரிய உரைநடை நூல்களில் ஆசிரியர் நக்கீரனுரையே பலபடப் பாராட்டிக் கூறியிருத்தலே சான்றாகும். அவற்றுட் சில பகுதிகள் வருமாறு.

> "சூத்திரங்களின் சொற்பொருளை விடாமல் அவற்றைக் கௌவிக்கொண்டே சென்று பேருரை விரிப்பார் ஆசிரியர் நக்கீரனாரைத் தவிர வேறொருவரைக் காண்டல் இயலாது."

> "நக்கீரனாரது உரை நெகிழவேண்டும் பதத்து நெகிழ்ந்தும், இறுகவேண்டும் பதத்து இறுகியும் நல்லிசைப் புலமை மலிந்த செய்யுட்போல்......எண்வகை மெய்ப் பாடு தோற்றுவிக்கும் எண்வகைச்சுவை வாய்ந்தது.

> "அவைக்களத்தே கேட்டார்ப் பிணிக்குந் தகைத்தான பேருரை நிகழ்த்தும் பேராற்றல் வாய்ந்தோர் தாங் கூறும் பொருளை வினாவும் விடையுமாய் வைத்துத் தருக்கநூன்முறை வழாது தொடர்புபடுத்து விளக்கிச் செல்லுமாறுபோலவும்......ஆசிரியர் நக்கீரனாரது உரை யினமைப்பும் பொலிந்து திகழ்கின்றது. இத்தகைய தொரு விழுமிய அமைப்பு ஏனையுரையாசிரியர் எவரி டத்தும் முற்றக் காணப்படுகின்றிலது.

> "ஆசிரியர் நக்கீரனார் விரித்த இவ்வுரைப் பகுதி தருக்க இயைபுஞ் சொற்பொருளடுக்கு முடைத்தாய்ப் பாச்சுவை விராய உரை நடைத்தாய்ப் பண்டைக்காலச் செந்தமிழ் வளந்துறுமி அகன்று ஆழ்ந்து தெளிந்து நிற்றல் காண்க.

> "பளபளப்பான பலநிறச் சலவைக்கற்கள் அழுத்திப், பொன் மினுக்குப் பூசிப், பலபல அடுக்குமாடங்கள் உடைத்தாய் வான் முகடு அளாய்க், காண்பார் கண்ணுங் கருத்துங் கவரும் நீர்மைத்தாய் உயர்ந் தோங்கி நிற்கும் எழுநிலை மாடம்போல் ஆசிரியர் நக்கீரனாரதுரை நிவந்து நிற்றலும், அம்மாடத்தின் அருகே புல்வேய்ந்த குடிலும் ஓடு மூடியதொரு

சிற்றிலும் ஏழமைத் தோற்ற முடையவாய்த் தாழ்ந்து நிற்றல்போல் ஏனையுரையாசிரிய ருரைகள் பீடு குறைந்து நிற்றலும் பிரிந்தினிது விளங்காநிற்கும்.

''நக்கீரனார் சொற்றொடர்களை அமைக்கும் முறையோ,...... ஏனை உரைகாரர் அவற்றை அமைக்கும் முறைக்கு முற்றும் வேறானதொரு தன்மைத்தாய் இருக்கின்றது. ஒருபொருண்மேல் வரும் பல சொற்றொடர்களை அவர் ஒரு வரிசைப்படத் தொடுக்குந் திறமும் அழகும் பெரிது பாராட்டற் பாலவான தனிச்சிறப்பு வாய்ந்து மிளிர்கின்றன.'

''சான்றோர் தம் முதுமொழிகளை இடையிடையே மடுத்து உரையெழுதுதலில் ஆசிரியர் நக்கீரனார் வேட்கை மிகுதியும் உடையராதல்போல் ஏனைஉரைகாரர் இருப்பக் காணாமையின், அவ்விரு பாலார்க்குமுள்ள இயற்கை வேறுபாடுகளைப் பகுத்துணர்ந்து கடைப்பிடித்துக் கொள்க.'' (மாணிக்கவாசகர் காலம், சரு௨ - சரு௩) என்பன காண்க.

செந்தமிழ் வழக்கு முந்துநின் றிசைத்த வரலாறு; பாண்டிய னொருவன் மனைவி தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாப் பேரழகு வாய்ந்தவள். அவளுடன் ஒருநாள் அவ்வரசன் தனது இளமரப் பூங்காவில் உலவுகையில் அவளது கூந்தல் அவிழ்ந்து காற்றில் அலைய அதன்கணிருந்து ஒருவகையான நறுமணங் கமகமவென்று கமழ்ந்தது. அதனை யுணர்ந்த அரசன் அக்கூந்தலின் மணம் பூவின் சேர்க்கையாலன்றி, அதன் கணின்றும் இயற்கையாய் எழுதல் கண்டு 'மகளிர் கூந்தற்குப் பூவின் சேர்க்கையின்றி இயற்கையிலேயும் மணம் உண்டுகொல்!'' என்று ஐயுற்றவனாய்த், தன் அவைக்களத்துள்ள புலவரை விளித்து, 'மகளிர் கூந்தற்குள்ள சிறப்பு என்னை?' என்று வினவ, எவரும் அதற்கு விடை கூறமாட்டாராயினர். அதன்மேல் அவ்வரசன் பொன்பொதிந்த கிழியொன்றனைத் தனது அவையிலே தூக்கி, 'மகளிர் கூந்தற்குள்ள இயற்கைச் சிறப்பினை நுவன்றுஎவர் ஒரு

தமிழ்ச்செய்யுள் பாடித்தருவரோ அவர் இப் பொற்கிழியினைப் பெறுதற்குரியர்' என அறிவித்தனன். வறியனான தருமி என்னும் ஓர் இளைஞன் அப் பொற்கிழியினைவேண்டி இறைவனைக் குறையிரப்ப, அவன் கையில் ஒரு தமிழ்ச் செய்யுள் வரைந்த நறுக்கொன்று வந்து வீழ்ந்தது. அதனை அவன் பாண்டியன்பாற் சென்றுகாட்ட, அதன்கண் உள்ள செய்யுட்பொருள் தான் வினயதற்கு விடையாய் அமைந்திருத்தல் கண்டு பாண்டியன் அக்கிழியினை அவன் அறுத்தெடுத்துக் கொள்ளுமாறு ஏவ, அப்போது நக்கீரர் என்னும் புலவர் பெருந்தகை அச் செய்யுளிற் பொருட் குற்றம் உளதென்று கூவிமறுப்பத், தருமி கிழி பெறுனய்ப் பெரிதும் உளம் நைந்து இறைவனை நினைந்துஅழ, உடனே அந்நேரத்தில் அவ்வவைக் களத்தில் ஒரு புலவன் வந்து தோன்றி, 'எமது பாட்டிற்குக் குற்றஞ் சொன்னார் யாவர்?' என, உடனே நக்கீரர் 'மகளிர் கூந்தற்குப் பூவும் பூவின் நெய்யுஞ் சேர்ந்தாலன்றி இயற்கையே அது மணம் உடைத்தாகாது. அங்ஙனம் இருக்கக், "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் நுமது செய்யுளிற்,

> "செறிஎயிற் றரிவை கூந்தலின்
> நறியவும் உளவோநீ அறியும் பூவே"

என மகளிர் கூந்தல் மலரினும் மிக்க இயற்கை மணம் உடைத்தென நீர் கூறியது குற்றமாம் என்றேம் யாம்' என்றனர். அதுகேட்ட அப்புலவர் 'மகளிரிற் சிறந்த நங்கைமார் கூந்தற்கு இயற்கை மணம் உளதன்றோ?' என வினவ, நக்கீரர் 'நங்கையர் கூந்தலும் பூ முதலியவற்றின் சேர்க்கையினலேயே மணம் உடைத்தாம்' என விடை கூறினர். அதன்பின் அப்புலவர் 'அரம்பை மாதரார் கூந்தல் இயற்கை மணம் உடைத்தன்றோ?' என வினவ, நக்கீரர் 'அவரது கூந்தலும் இயற்கைமணம் உடைத்தன்று' என விடை யிறுப்பப், பின்னும் அப்புலவர் 'நீர் வழிபடும் உமைப்பிராட்டியார் கூந்தலுஞ் செயற்கை மணந்தான் உடையதோ?' என, நக்கீரர் 'அதுவும் அந் நீர்மையதே' என்று விடை நுவன்றனர். வந்த அப்புலவர் இறைவனே

யாதலால் நக்கீரரின் செருக்கை அடக்குவான் கருதித் தமது நெற்றிக் கண்ணைத் திறக்க, அப்போதும் நக்கீரர் தமது பிழையுணராராய் 'நெற்றிக் கண்ணைக் காட்டினுங் குற்றங் குற்றமே' எனக் கரைந்தனர். இறைவன் உடனே மறைய, நக்கீரர் நெற்றிக்கண் வெப்பந் தாங்காமையால் ஒரு குளத்தில் இறங்கித், தாஞ்செய் பிழையினைப் பொறுக்கும்படி வேண்டி இறைவன்மேற் செந்தமிழ்ப்பாடல் பாடி யுருகப், பின்னர் இறைவன் அவர்க்கு அவ் வெப்பத்தினை நீக்கித், தன் படைப்பின் வியத்தகு அமைப்பின் திறங்களையும், மக்களிற் சிறந்த நங்கைமார் கூந்தலும், அரம்பையர் கூந்தலும், உலகன்னையின் கூந்தலும் இயற்கைமணங் கமழும் வகைகளையும் நக்கீரர் நன்குணருமாறு தெருட்டினன் என நம்பியார் திருவிளையாடல் கூறுதல் காண்க.

இறைவன் கண்டபொருள் என்பது இறையனாரகப் பொருள் என்னும் அகப்பொருளிலக்கண நூல்; அதற்குப் பேருரை வகுத்தவர்-நக்கீரர்.

சிவணல் - அளவளாவல், பொருந்தல் (பிங்கலந்தை).

'கீரன்' என்பது பெயர்; அது செந்தமிழ் வழக்கிற் சிறப்பு நோக்கி வரும் நகரமாகிய இடைச்சொல்லொடு சேர்ந்து 'நப்பூதன்' என்றற் றொடக்கத்தனபோல் 'நக்கீரன்' என வழங்குவது; கீர் - சொல் (திவாகரம்); நக்கீரன்-நல்ல சொல்லன் அல்லது சொல்வன்மையுடையன்.

'அற்றம்' மெலிவு, சோர்வு (திருக்குறள் பரிமேலழகருரை, கசஅக.)

'பட்டாங்கு', பட்டபடி, நிகழ்ந்தபடி, அதாவது உண்மை.

'ஆற்றுப்படை' ஈண்டுத் திருமுருகாற்றுப்படை.

(கூஎ-எச) ஆங்கு அதன் கருவாய் உள் உறை நுண் பொருள் - அத் திருமுருகாற்றுப் படையின்கண் அதன் கருப்பொருளாய் அகத்தே கிடக்கும் நுட்பக் கருத்துகளை, விழுமிதின் எடுத்து வழுவு அற அமைத்து - சிறப்பாகத்

துருவி யெடுத்துக் குற்றம் இன்றாக அமைத்து, தொண்டர், ஆரத் தண்டாது கொடுத்து - செந்தமிழ்த் தெய்வத் தொண்டர்கள் நுகர்ந்து நிறையத் தணியாமற் கொடுத்து, நின் திருவடிக் கிடந்த பெருகிய அன்பினும் - நினது திருவடியின்கட் கிடந்த மிகுந்த அன்பினாலும், தமிழ் வரம்பு உணர்ந்த கமழுறும் அறிவினும் - செந்தமிழ் எல்லை தெளிந்த மணம் விளங்கிய அறிவினாலும், உரைத்திறம் நிலையிடும் வரைப்படா விறலினும் - உரைவன்மை நிலைகாணும் அளவு படாத ஆற்றலினாலும், தானே தனக்கு நிகர் என விளங்கிய நச்சினார்க்கினியனும் அல்லேன் - தானே தனக்கு நிகர் என்னும்படி புகழ் விளங்கிய நச்சினார்க்கினியன் என்னும் உரையாசிரியனும் அல்லேன் ;

'கரு', கருக்கொண்ட பொருள் : "என்னுளக் கருவை யான் கண்டிலேன்" (திருவாசகம், திருச்சதகம், சக) என்னும் அருண்மொழியைக் காண்க.

தண்டாது - தணியாது ; "தண்டா ஈகைத் தகைமாண் குடுமி" புறம், கூ.

'ஆர்தல்' நுகர்தல், உண்ணுதல் : இச்சொல் இப் பொருட்டாகவே "மணமலர் ஆரும் இரும்பு திரித்தன்ன அறல் மருப்பு எருமை" என முன்னும் (க, கரு-கூ) வந்தமை நினைவுகூர்க.

உரைத்திறம் நிலையிடலாவது, தொல்லாசிரியர் பாட்டுகட்கு இதுவோ அதுவோவென ஏதும் நிலைப்படாமல் மயங்கக் கிடக்கும் பல்வேறு வகையான உரைப் பொருள்களில் வன்மையுள்ளது இதுவே யெனத் துணிந்து நூலாசிரியர் கருத்தை நிலையிடுதல் என்க. ஆசிரியர் நக்கீரனாரியற்றிய திருமுருகாற்றுப்படைக்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர் எழுதிய உரையே இஞ்ஞான்றுஞ் சிறந்து விளங்குதல்கொண்டும் இது தெளியப்படும்.

(எச - அஉ) நிச்சலும் - நாடோறும், வருக்கைச்சுளையும் பொருக்கரை மாவும் கொழுங்கனி வாழையுஞ் செழுஞ் சுவைக் கன்னலும் ஒருங்கு தலைமயங்கிய அரும்பெரும்

கலவையின் - பலாச்சுளையும் பொருக்கரை மாம்பழமுங் கொழுமையான வாழைக்கனியும் வளமான இனிய சுவையுள்ள சருக்கரையும் ஒன்றுசேர்ந்து கலந்த அருமை பெருமையுடைய இன்சுவைக் கூட்டை ஒப்ப, அருஞ்சொல் வழக்கமும்-அரிய செஞ்சொற் கோப்பும், திருந்திய நடையும்-திருத்தமான செய்யுள் நடையும், வண்ணவேற்றுமையும்-பலப்பல வண்ணப்பாட்டுகளின் வகைகளும், தண் எனும் ஒழுக்கமும் - அவற்றின் குளிர்ந்த ஓசைநடையும், ஒன்று நிரம்பிய குன்றுத் திருப்புகழ் வேறுவேறு இயம்பிய வீறு உறு தவத்தின் அருணகிரி எனும் பெரியனும் அல்லேன் - ஒருங்கு நிறைந்த நலங் குறையாத திருப்புகழ் என்னுந் தேவரிரது புகழ்மாலையைப் பலவேறு வகைப்படத் திருவாய் மலர்ந்தருளிய மேன்மைமிக்க தவப்பெருமையினையுடைய அருணகிரிநாதர் என்னுஞ் சான்றோனும் அல்லேன்;

'நிச்சலும் இயம்பிய' வென்க; 'நிச்ச' எனுஞ்சொல் நாடோறும் என்னும் பொருட்டாதல் "நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப" என்னுந் தொல்காப்பியக்களவியற் சூத்திரத்திற் காண்க (அ); 'நிச்ச' நிச்சல் எனத் திரிந்தது; "நிச்சல் ஏத்து நெல்வாயிலார்" எனத் தேவாரத்தும் போந்தது; இச்சொல் வடமொழியிற் சென்று 'நித்ய' என வழங்கும்.

பொருக்கு - தகட்டுவடிவாய் வெடிக்கும் வண்டல், மாமரத்தின் அடி அதுபோல் வெடித்திருத்தலிற் "பொருக்கரைமா" என்றார்; இதனைப் பொரியரை யென்றுங் கூறுப.

பலாச்சுளைபோல் ஒவ்வொரு சொல்லும் அடைவே பதிந்து நிற்றலும், மாங்கனிபோல் எல்லாச்சொல்லுந் திரண்டு ஒரு பொருண் மேலவாய் இனிமை பயந்து நிற்றலும், வாழையங்கனி சீப்புச்சீப்பாய்ப் பிரிந்து காணப் படுதல்போற் செய்யுடோறும் வண்ணங்கள் வேறு வேறாய்ப் பிரிந்து இனிது திகழ்தலுங், கரும்பின் பாகுபோல் அவ் வண்ணங்கள் குளிர்ந்த ஓசையினவாய் ஒழுகுதலும் நால்வேறுவமைகளாற் குறித்தார்.

வீறு-சிறப்பு (திருக்குறள், ௬௬௫); வீறு உறுதவம்-மேன்மேற் சிறக்குந் தவம்.

(அ௫-அஅ) நூல் இடை வைத்த வாலிய பொருளினும்- நூல்களினிடையில் நூலாசிரியராற் பெய்து வைக்கப்பட்ட தூய பொருள்களையும், உரையிடை விரிந்த புரை அமை தெளிவினும்-அந் நூல்கட்கு உரையாசிரியர்களால் எழுதப் பட்ட உரைகளினுள் விரிந்துள்ள உயர்வு பொருந்திய தெளிவுணர்வினையும், கேட்போர் உணரப் பாற்பட வகுத்து - பாடங்கேட்கும் மாணவர்கள் தெளிவாய் உண ரும்படி அவற்றைப் பல பகுதிகளாக வகுத்துக்கொண்டு, நின்புகழ் அனைத்தும் தன்பெரு மதியின் - தேவரீருடைய புகழ்தக்க இயல்புகளையெல்லாந் தமது அகன்ற அறிவினால், உளம் கொள விளக்கும் வளம் கெழு புலமை நாராயணன் எனும் குருவனும் அல்லேன்-அம் மாணவரின் உள்ளங் கொள்ளும் முறையில் விளக்கவல்ல வளமை சான்ற புலமை யினையுடைய நாராயணசாமிப் பிள்ளை யென்னுந் தமிழாசிரி யனும் அல்லேன் ;

'வாலிய', இங்குத் தூயவென்னும் பொருட்டு; (பிங் கலந்தை, ௪0௫அ).

பொருளினும் தெளிவினும் என்பன இரண்டன் றொகை;

'புரை' உயர்வின் மேலது. "புரை யுயர்வாகும்[1]" (தொல் காப்பியம், சொல், ௬0௨).

புலமைக்கு வளமையாவது, ஐயமின்றித் தெளிதலுந் தெளிவுண்டாக விளக்குதலுமாகும்.

'நாராயணசாமிப் பிள்ளை' யென்பார் அடிகட்குச் செந் தமிழ் அறிவுறுத்திய தமிழாசிரியராவர். குருவன்-ஆசிரியன்; "வானோர் குருவனே போற்றி" எனத் திருவாசகத்தில் (௪, ௬அ) இச்சொல் இப்பொருட்டாய் வந்தது.

'குருசில்' என்னுஞ் சொல்லுங் குருவென்னும் முதனிலை யிற்றோன்றியதாகும். குரு-ஒளி, அறிவொளியை யுடையவன், அதனைத் தருபவன் குருவெனப் பட்டான். வடமொழிக்கட் சென்ற பல தமிழ்ச் சொற்களுள் இதுவும் ஒன்று,

(அ௯-௯௭) களவியல் தனக்குப் பலபட இயம்பி-'களவியல்' என வழங்கும் இறையனரகப் பொருளுக்குப் பல வகையாகப்

பொருள்கூறி, பளகுஅறு நன்பொருள் தெளியாது உழன்ற புலவோர் களிப்ப நலமுறத் தோன்றி - அவற்றுட் குற்றம் நீங்கிய நல்லுரை ஈதெனத் தெளியமாட்டாமல் உள்ளம் அலைவுற்ற கடைச்சங்கப் புலவர்கள் தமது வருத்தம் நீங்கிக் களிக்குமாறு அவர்முன் நன்மையுண்டாகஎழுந்தருளிவந்து, மெய்ப்பொருள் காட்டித் தமிழ் வழிப்படுத்தும் - உண்மை யுரை இதுவேயென ஆசிரியர் நக்கீரதேவர் எழுதிய உரையைக் காட்டுவித்து அகத்தமிழ்ப் பொருளை ஒரு வழிப் படுத்தியும், புல் அமண் மிகுந்து நல்உணர்வு அழிந்து- முழுமுதற் கடவுளிருப்பை உணராமையின் இழிபுற்ற சமண் சமயம் பரவி இறைமுதற் பொருளறிவு வாய்ந்த சைவசமய நல்லுணர்வு கெட்டு, பெரும்பெயர் வழுதியும் அருந்தமிழ்க் கூடலும் உய்வழி காணாது உழிதருகாலை - பெரிய புகழ் வாய்ந்த பாண்டிமன்னனும் அரிய செந்தமிழ்ப்பயிற்சி மிக்க மதுரையம்பதியும் நன்னெறிப்பட்டு உய்யும் வகைகள் காணமல் அலைவுற்றுக் கிடந்தபொழுது, ஓய் எனப்போந்து மெய் நெறி காட்டியும் - திருஞானசம்பந்தப் பெருமானாக விரைந்து வந்து தோன்றிச் சைவமெனப்படும் மெய்வழி தேற்றி விளக்கியருளியும், தன் அருள் புரிந்த நின்னே போல - இனிய திருவருள் செய்த தேவரீரேபோல ;

இறைவ னருளாற் பெற்ற இறையனுரைகப்பொருள் என்னும் அகத்தமி ழிலக்கணத்திற்கு அஞ்ஞான்றைப் புலவர் பலருங் கண்ட உரைகளுள் நக்கீரனுருரையே சிறந்த தெனப் புலப்படுத்திய உருத்திரசன்மர் முருகப்பிரான் பிறவியே யென்னும் அக்களவியல் உரைப்பாயிரம்.

தன்: சாரியை; பளகு, குற்றம்; "பளகறுத்துடையான் கழல் பணிந்திலை" (திருவாசகம், திருச்சதகம் ௬௫) என் பதிற்போல.

'ஓய்', விரைவுப்பொருளது; இஃதிப்பொருட்டாதல் "நுங்கையது கேளா வளவை யொய் யென" என்னும் பொருநராற்றுப்படை (கஇ௨) யடியிற் காணப்படும்.

'நின்னே', ஏகாரம் தேற்றம்; இங்குக் கூறப்படும் பாண்டிய மன்னன் நெடுமாறன் என்னுங் கூன்பாண்டிய னவன்.

முருகப்பெருமானே திருஞானசம்பந்தப் பெருமானாக எழுந்தருளிவந்து பாண்டிநாட்டுக்குச் சென்று அமண் அழித்துச் செந்தமிழ்த் தேவாரத்தாற் சைவம் விளக்கி யருளினாரென்று நம்பியாண்டார் நம்பிகள், "மயிலேந்தியவள்ளல் தன்னை யளிப்ப மதிபுணர்ந்த எயிலேந் தியசண்பை நாதன்" என்றற் றொடக்கத்துச் செய்யுட்களில் நுவலுதல் காண்க (திருஞான சம்பந்தர் திருவந்தாதி, கஎ).

(கஅ - க0அ) செந்தமிழ் வழக்கு முந்துற விரித்து-செந் தமிழ் மொழியின் இலக்கண இலக்கிய வழக்குமுறைகளை முதலில் விரித்து விளங்கச்செய்து, விடி ஞாயிறு என - விடியற்காலத்தில் எழுகின்ற பகலவனைப்போல, முடிநிலைச் சைவம் - ஏனை எல்லாச்சமயங்கட்கும் முடிந்த நிலையில் வீற்றிருப்பதான உயர்ந்த சைவசமயத்தின், பைங் கதிர் விரித்து - புதியவான அறிவொளிகளை எங்கும் விரித்து, கங்குலில் கூம்பிய விரை அவிழ்தாமரை புரை உரவோர் உளம் புரிநெகிழ்ந்து அலரத் தரும் இயல் சிறப்ப-இரவின் கட் குவிந்த மணம் பரப்புந் தகையவான தாமரை மொட்டு களை ஒக்கும் அறிஞர் உள்ளங்கள் கட்டவிழ்ந்து மலரும்படி செய்யும் ஆற்றல் சிறந்துதோன்ற, உரையினும் கருத்தினும் வரை அமை நோக்கினும் பொருந்தக் காட்டி வருந்திறன் மிகுத்து - சொல்லாலும் அச்சொல்லின் கருத்தாலும் அள வமைந்த நோக்காலும் பொருத்தமாக விளக்கிவரும் வலிமையினை மிகுத்துக்கொண்டு, மலைவுபடும் உள்ளத்து அறிவொடு கூடாச் சிறுபுன் மாந்தர் குறுமொழி களைந்து - முன்பின் அறிவு மாறுபடும் உள்ளங்களை யுடைமையின் மெய்யறிவொடு பொருந்தாத சிறியரான இழிந்த மக்களின் சிறு சொற்களை நீக்கி, நின் புகழ் விரிக்கும் அன்பில் சிறந்த சோமசுந்தர குருவனும் அல்லேன் - தேவரீருடைய அருட் புகழ்களையே விரித்துரைக்கும் பேரன்பிற் சிறந்த சோம சுந்தர ஆசிரியனும் அல்லேன் ;

செந்தமிழ் நூல் அறிவின்றி அந்நூலின்கட் செறித்துணர்த்தப் பட்டிருக்கும் முடிநிலைச் சைவவுண்மைகளை விளக்குதல் ஏலாதாகலின், 'செந்தமிழ் வழக்கு முந்துற விரிப்'பா ராயினரென்பது.

தகுதி வாய்ந்த மக்கட்கன்றி ஏனையோர்க்குச் சமயவறிவுநூற்பொருள் அறிவுறுக்கப் படாவாகலின், அங்ஙனந் தகுதி வாய்ந்து கேட்பாரை ஏனைத் தகுதியில்லா மக்களினின்றும் வேறு பிரித்துச் சிறப்பித்தல் வேண்டுமாகலின் அவர் 'உரவோர்' என்றும், அவரது நல்லுள்ளம் 'விரையவிழ் தாமரை' யென்றுஞ் சிறப்பிக்கப்பட்டன. ஆயினும் அவ ரச்சமயவறிவுநூற் பொருள்களை ஆராய்ச்சி முறையிற் கேட்டு அருள்மணம் விரியப்பெறுமையின், அவருடைய தகுதிவாய்ந்த விழுமிய உள்ளங்கள் மலருந் தகுதியிலுள்ள முகைகளை ஒப்பவே உள்ளனவென்றற்குக் "கங்குலிற் கூம்பிய விரையவிழ் தாமரை புரை உரவோர் உளம்" எனப் பட்டது. இவ்வரிய உவமைகளின் நுட்ப அழகு இங்குப் பெரிதும் உள்ளுணர்ந்து மகிழற் பாலதாகுமென்க.

உரையினும் கருத்தினும் நோக்கினு மென்பவற்றிற்கு மூன்றனுருபு விரித்துக்கொள்க: உரை - சொல்; கருத்து - சொற்பொருள்; நோக்கு-பொருளை நுனித்துக் காண்டல்.

'சிறுபுன் மாந்தர்' ஏனைச் சமயத்தவர்; குறுமொழி, அவரது பொருள் நிரம்பாச் சிறுமையுடைய சொல், முடிந்த மெய்ச்சமயமாகிய சைவத்தின் மேன்மையை யுணரும் பேரறிவின்றி வேறு சமயப் பொய்ப் பொருள்களை யெல்லாம் வீண் பற்றுள்ளத்தால் வறிதே விரித்து வழக்கிட்டுத் திரிதலின் அவரெல்லாஞ் 'சிறுபுன்மாந்த' ரெனவும், அவரது பொருளில் மொழி 'குறுமொழி' யெனவும் இங்குக் கூறப்பட்டன.

இப் பகுதியிற் சோமசுந்தர குரவர் திருஞான சம்பந்தரோடு உவமிக்கப்படுதல் கண்டுகொள்ளப்படும். சோமசுந்தர குரவர் திருஞான சம்பந்தரேபோல், இத்தென்னாடெங்கும் மாயாவாத வேதாந்தம், பாஞ்சராத்திரம் முதலான அயல் மதங்கள் தலையெடுக்க வொட்டாமல் அவற்றின்

சிறுமையை எடுத்துக்காட்டிச் சிறந்த சித்தாந்த சைவத்தின் பெருமையை நன்கு விளக்கி அஃது இனிது தழைத்தோங்கு மாறு செய்த பெரியாராவர். இவரது சமயத் தொண்டின் விழுப்பம் அடிகள் இயற்றிய சோமசுந்தரக் காஞ்சிச் செய்யுட் களால் நன்கறியப்படும்.

(௧0௬-௧௧௪) பொருள் பெரிது ஈட்டப் பெருகுறும் அவா வினும் - செல்வத்தை நிரம்பவுஞ் சேர்ப்பதற்கு மிகுகின்ற அவாவின் கண்ணும், ஈட்டிய ஒள் பொருள் இவறிக் கூட்டி மக்களும் மனைவியும் துய்க்க நல்கி நின்கழல் வணங்கா இன்னா மடியினும் - அங்ஙனந் தொகுத்த மேன்மையான பொருளை மேலும் அவா மிகுந்து பெருக்கித் தம் புதல்வர் களும் மனைவியும் நுகரக்கொடுத்துத் தேவரீருடைய திரு வடிகளை வணங்காத தீய சோம்பலின் கண்ணும், அரிய நாட்களை வறிதே போக்கி - ஏழையேனுடைய அரிய வாழ் நாட்களை வீணாய்க் கழித்து, அறம் திறம்புளியில் சிறந்த னென் மன் - அறநிலை பிறழும் இடத்து மிகுதியுஞ் சிறந்து விளங்கினேன்;

இம்மை மறுமைப் பயன்களைப் பயத்தலிற், பொருள் 'ஒண் பொருள்' எனப்பட்டது; "ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு" என்னுந் திருக்குறளுக்குப் பரிமேலழகியார் கூறிய உரையைக் காண்க (எ௬0).

'இவறல்', அவா மிகல்; "ஈட்ட மிவறி இசைவேண்டா ஆடவர்" (௧00௩) என்பது திருக்குறள்.

'மக்களும் மனைவியுந் துய்க்க நல்கி' யென்னுங் குறிப்பு அப் பொருளைக் கடவுள் வணக்கம் முதலிய நல்வழிகளிற் செலவழியாமையைக் குறித்தது.

'திறம்பு உளி' திறம்பும் இடத்து; உளி இடத்து என ஏழனுருபின் பொருளில் வந்தது; "இயல்புளிக் கோலோச் சும்" என்னுந் திருக்குறளிற்போல (௫௪௫.) "உளி மூன்றுருப தன் பொருள் படுவதோர் இடைச்சொல்" என்ற பரிமேலழகி யாருரையை மறுத்து நச்சினார்க்கினியர் "மந்திர விதியின் மரபுளி வழா' என்புழி முறைமையின் வழுவாத அந்தண

ரென ஐந்தாவது விரிதலானும், 'இயல்புளிக் கோலோச்சும் மன்னவன்' என்புழி முறைமையிலே செங்கோல் நடாத்தும் என ஏழனுருபு விரிதலானும் உளி யென்பது மூன்றனுருபின் பொருள்பட வந்ததன்று." எனக் கூறுமுரை நினைவிற் பதிக்கற்பாற்று.

'சிறந்தனென்' என்பதில் என் தன்மை யொருமை வினை முற்று விகுதி (தொல்காப்பியம், வினையியல், ௬).

அறந்திறம்பா நெறியிற் சிறந்து நிற்கவேண்டுவதா யிருக்க அது செய்திலேன் என ஒழிந்த பொருளை யுணர்த்துதலின் 'மன்' ஒழியிசைக்கண் வந்தது.

(௧௧௫-௧உஉ) இனைய தீயென் நின் நினைவரும் திருவடி-இத்தகைய தீமையுடையேன் தேவரீருடைய நினைத்தற் கெட்டாத் திருவடிகளை, விழிநீர் உறைப்ப - கண்ணீர் துளிப்ப, முழுமெயும் பனிப்ப - முழு உடம்பும் நடுங்க, நிரை நிரை வாராது உரை நனி குழற - முறை முறையே வராமற் பேச்சுகள் மிகவுந் தலைதடுமாறி வர, பொறிவழி அறிவும் செறியும் உட்கருவியும் பல வழிக் கவராது ஒருவழி நிகழ - மெய்வாய் முதலிய ஐம் பொறிகளின் வழியே அறிவும் அவ் வைம் பொறிகளொடு நெருக்கமுறும் மனம் முதலிய அகக் கருவிகளும் பலவழியாகப் பிரிந்து போகாமல் ஒரே வழியாய் நிகழ, அன்பு உருவாகும் நின் தொண்டர் போல - அன்பின் உருவமாய் அமையுந் தேவரின் திருத் தொண்டர்களை ஒப்ப, நீங்கா அன்பில் நிலைநின்று - அருத பேரன்பில் உறுதியாய் நிலைத்து, யாங்ஙனம் பெறுவெனோ பாங்குபட மொழிமோ - எங்ஙனம் அடைவேனோ உரிமை யுண்டாகக் கூறுவீராகவென்பது.

இச்செய்யுள் ஆண்டவனையே விளித்துத் தமது தாழ் நிலை கூறு முகத்தால், அவரது அருள்நிலை பெறுதல் அரி தெனக் கூறியவாறும். 'மொழிமோ' வென்பதில் 'மோ' முன்னிலை யசைச்சொல் (தொல்காப்பியம், இடைச்சொல் லியல், உ௬); "காமஞ் செப்பாது கண்டது மொழிமோ" என்னுங் குறுந்தொகைச் செய்யுளிற் போல (உ).

நின் நினைவருந் திருவடி (ககரு) அன்புருவாகு நின் தொண்டர்போல அன்பில் நிலைநின்று (கஉ0-க) யாங்ஙனம் பெறுவெனோ (கஉஉ) எனக் கூட்டுக.

'உறைத்தல்', துளித்தல்; இச்சொல் இப்பொருட்டாதல் ''தெண்பனி யுறைக்குங் கால்'' என்னுங் கலித்தொகையால் (கரு) தெளியப்படும்.

'பனித்தல்' நடுங்குதல்; ''நரைமுக வூகம் பார்ப்பொடு பனிப்ப'' எனக் குறுந்தொகைச் செய்யுளில் (உசக) இச்சொல் இப்பொருட்டாய் வருதல் காண்க.

'கவர்தல்', பலவேறாகப் பிரிவுபடல்; ''அந்தண் காவிரி வந்துகவர்பு ஊட்ட'' (புறநானூறு, ௩ரு) என்புழிப் போல.

விழிநீருறைத்தலும் மெய் பனித்தலும் உரை குழறலும் அறிவும் ஏனை உட்கருவிகளும் ஒருவழி நிகழ்தலுமெல்லாம் அன்புருவாகுந் தொண்டர்கட்கு அடையாளமாகுமென்பது,

''மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங்
கைதா னெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே''

என்னும் மணிவாசகப் பெருமானது திருவாசகந் தேனுரையின் கண் (திருச்சதகம், க) இனிது விளங்குதல் காண்க. பாங்கு - உரிமை (திவாகரம்); நின்றிருவடிகளைப் பெறுதற் குரிமை யில்லாத எளியனேன் அதனைப் பெறுதற் குரிமை யுடையனுமாறு கூறுவீராக என்றவாறு. (கக)

எனவே, 'இளையோய் (க) பெரியோய்' (கஎ) என எல்லாம் வல்ல இறைவனை விளித்துச் 'சூர்' முதல்போலப் பேரன்பில்லேன் (ருக) கீரன்போல (சுக) ஆற்றுப்படை சொலும் ஆற்றலு மில்லேன் (சுசு) தானே தனக்கு நிகரென விளங்கிய நச்சினார்க்கினியனு மல்லேன் (எ௩-ச) அருணகிரி யெனும் பெரியனு மல்லேன் (அஉ) நாராயணனெனுங் குருவனு மல்லேன் (அஅ) சோமசுந்தர குருவனு மல்லேன் (க0அ) அறந் திறம் புளியிற் சிறந்தனென் மன் (ககச) இனைய

தீயென் நின்நினைவருந் திருவடி (கசகு) யாங்ஙனம் பெறு வெனோ (கஉஉ) என்று அவனது அருள்நிலை பெறுதல் அரி தெனக் கூறியவாறு.

## உ০. தோழி கிள்ளையைத் தூதுவேண்டல்

மொழியும் குழற - சொல்லும் தடுமாற, முழு உடம்பும் பைத்து - முழு உடம்பும் பசந்து, விழியும் துயில் கூடா வெய்யோள் - தன்னை விரும்பிய என் அருமைத் தலைவியின் கண்களுந் தூக்கம் பொருந்தா; பழியை - ஊரவர் அலருக்கு ஏதுவான அடக்குதற்கரிய இத்துயர நிலைகளை, திருவொற் றிச் சேயோற்கு உரையாய் - திரு வொற்றி முருகற்கு எடுத் துச் சொல்வாயாக, கிளியே உரு உன்னை ஒப்பது உணர்ந்து - அருமைக் கிளியே! தெளிவின்றிச் சொல்லாட லாலும் முழு வுடம்பும் பசந்து நிற்றலாலுங் கண்ணிமைகள் துயில் கூடாமையாலும் என் தலைவியின் உருவும் உன்னையே ஒத்து உனக்கு இனமாதல் உணர்ந்து என்பது;

'உணர்ந்து உரையாய்' எனக் கொள்க.

'பைத்து' பசுமை என்பதனடியாகப் பிறந்த வினை யெச்சம்; 'பை' என்பதே பச்சைநிறத்தை யுணர்த்தும் என்னும் பிங்கலந்தை.

முருகப்பிரானை விரும்பி நின்றுளாகலின், தலைவி வெய்யோ ளெனப்பட்டாள்: வெம்மை, விருப்பம்; அன்றிக் காதல் வெப்பம் உடையாள் எனினும் பொருந்தும்; அங்ஙன மாயின் அச் சொல்லுக்கு 'வெப்ப'மெனப் பொருள் கூறிக் கொள்க.

இனி இவ்விரண்டு பொருள்களுமே இங்குப் பொருந்து மாகலின் அதனை இரட்டுற மொழிந்து கொள்ளலுமாம்.

கிள்ளை தூதுபோதற்கு இயையுமெனக் காரணங் கற் பித்த திறம் இதன்கண் மிக அழகிதாதல் கண்டு மகிழ்தல் வேண்டும். (உ০)

## உக. அருணிலை யுரைத்தல்

உணர்ந்தார் அறிவினும் தோன்றாது ஒளிக்கும் ஒரு முருகன்-தான் முழுமுதற் கடவுளாந் தன்மையை உணர்ந்தவ ரறிவினுக்கும் வெளிப்படாமல் ஒளிக்கும் ஒப்பற்ற முருகப் பிரான், இணர்ந்துஆர் சுரிகுழல் மங்கையரோடு என் இரு விழியில் புணர்ந்து-நெருங்கி நிறைந்த சுருண்ட கூந்தல் களையுடைய வள்ளி தெய்வயானை யென்னும் அம்மையர் பாகராய் எழுந்தருளிவந்து என் இரண்டு கண்களிலுங் கலந்தவராய், எயில் ஒற்றி மேவியவாறு-மதில்கள் உயர்ந்த திருவொற்றிநகரைச் சேர்ந்தவகை, புனிறு செல்லா வணம் தாழ் குழவியைத் தாய்சென்று புல்லிய வண்மையன்றே - ஈன்றணிமை கழியாத பச்சிளந்தன்மை பொருந்திய குழந்தையைத்தாயே விரும்பிச் சென்று தழுவிய அருட்டன்மையே யாமன்றோ ; என்பது.

கடவுளின் உண்மையுணர்ந்தாலும் அவனை மெய்யன் பாற் கரைந்துருகி வழிபடாதார்க்கு அவன் நேரே தோன்றா தொளிந்திருந்தே அருள்புரிவனுகலின், "உணர்ந்தா ரறி வினுந் தோன்றாதொளிக்குமொரு முருகன்" என்றார் ; "உணர்ந்தார்க் குணர்வரியோன் தில்லைச் சிற்றம்பலத் தொருத்தன்" என்னுந் திருக்கோவையாருரையும் இக்கருத்தே பற்றி வந்தது.

இணர்ந்து-நெருங்கி; "இணரிய ஞாட்பினுள்" என்றார் களவழியிலும் (௩௪).

உணர்ந்தாரறிவினுந்தோன்றாதொளிக்கும் ஒருமுருகன் ஏது மறியா ஏழையேன் இருவிழியிற் புணர்ந்தாரென்று தம்மைத் தாழ்த்துரைத்தல் கருதிப், 'புனிறுசெல்லா வணம் தாழ் குழவி' யென்று குழவியை ஏதுமறியாப் புனிற்றணிமைப் பருவத்தில் வைத்து விதந்தருளினர். குழந்தையைத் தாய் சென்று புல்லிய வண்மையை இங்கு உவமையாகக் கொள்க. வண்மையை ஒப்பதன்றே யென்று உரைத்துக்கொள்க,

## உஉ. எழில் நலங்கூறி நெஞ்சறிவுறுத்தல்

(க-கூ) வண்புனல் நிலையில் தண்அறல் போலவும் - வளமான நீர் நிலைகளின் அடியிற் காணப்படுங் குளிர்ந்த கருமணலை ஒப்பவும், தாமரை மொய்த்த வண்டினம் போலவும் - தாமரை மலர்களை மூசிய கரிய வண்டுக் கூட்டங்களை ஒப்பவும், பளிங்கில் தோய்ந்த நீல்நிறம் போலவும் - ஒரு பளிக்குக் கண்ணாடியின்கண் ஊடுருவித் தோன்றுங் கருநீலநிறத்தை ஒப்பவும், திருமுக மருங்கின் வருமுறை துணர்ந்து-திருமுகத்தின் பக்கத்தே ஒழுகிவரும் வகையில் அடர வளர்ந்து, ஆங்கு இடை இடை சுழன்று நீண்டு கடை குழன்று-அங்ஙனமே இடையிடையே சுழிந்து நீளமாய் வளர்ந்து நுனிசுருண்டு, கண் ஒளி கதுவும் குஞ்சியை-கண்ணொளியைக் கவருந் தலைமயிரினை; அன்னை இருபால் கூறிட்டு ஒருபால் சூழியும் மற்றொருபால் பனிச்சையும் திருவதின் அமைப்ப-உமைப்பிராட்டியாரான தாயார் இருபிரிவாக வகுத்து ஒருபிரிவில் உச்சிக்கொண்டையும் மற்றொருபிரிவிற் பின்னல் முடிப்புஞ் செவ்விதின் அமைப்ப, நறும்கதுப்பு ஒளிரும் பெரும் சிறப்பானும்-அவ்வாற்றால் இனிய அத் தலைமயிர் மேன்மேலும் விளங்குகின்ற பெரிய மேன்மையினாலும்;

புனல் நிலை, நீர்நிலைகள்; அவை 'வண்புனல்நிலை' யெனப்பட்டமையின், என்றும் அறாத வளமான நீரொழுக்கும் நீர்ப்பெருக்கும் உடைய ஆறுகளின் மடுக்கள் வாவிகள் முதலான நீர்நிலைகளே ஈண்டுக் கொள்ளப்படும்; அவற்றின்கீழ் இடையிடையே கருமணற் பரப்புகள் காணப் படுதலும் இங்கு நினைவுகூரற்பாற்று.

புனலும் பளிங்கும் முகத்தின் தெளிவுக்குந், தாமரை முகத்தின் செவ்விய வடிவுக்கும், அறலும் வண்டினமும் நீனிறமும் அத் திருமுகத்தின் பக்கலிற் சரிந்துகிடக்குந் தலைமயிருக்கும் உவமைகளாய் நின்றன.

'குஞ்சி', ஆண்பால் மயிர்; மேற் கதுப்பென வருதலும் அது.

இடையிடை சுரிந்து நீண்டு கடை குழலலும், கண்ணொளியைக் கவருமாறு கருமையிற் பளபளப்புடைமையும் அழகிய தலைமயிரின் இயல்பாகும்.

'துணர்ந்தாங்கு' என்பதில், ஆங்கு, அங்ஙனமே என்னும் பொருட்டு; துணர்ந்து - கொத்தாக நெருங்கி வளர்ந்து; "தூமருளிருள் துணர்ந்தனைய குஞ்சியன்" என்றார் சூளாமணியினும் (குமாரகாலச் சருக்கம், கூ).

கதுவல் - கவர்தல்; "பழனவாளை கதூஉம் ஊரன்" என்றார் குறுந்தொகையிலும் (அ).

'சூழி' யென்பது உச்சிக்கொண்டை (பிங்கலந்தை); 'பனிச்சை' யென்பது பின்னி வளைத்து முடித்தலாம்; இஃது ஐவகை முடிப்புகளுள் ஒன்றென்க (திவாகரம்).

திருவது, செவ்விது, என்றாற்போல் ஈறுபெற்றுவந்தது; "திருவத்தவர்" (நாலடியார், ௫எ) எனப் பிறவாறும் வருதல் காண்க.

இப்பகுதி முருகக் கடவுளின் அழகிய தலைமயிர்ச் சிறப்பினைக் கூறி மகிழ்ந்தவாரும்.

(௧0-௬உ) செம்மணிப் பலகையின்-சிவந்த மாணிக்கக் கல்லாலாகிய ஒரு பலகையின்கண், அம்மணி குயிற்றி-அழகிய நீலமணிகளை அழுத்தி, வரம்பு உற விடுத்த வண்ணம் போல - அப்பலகையின் ஓரத்திற் பொருந்த அமைத்த வகை போல, புருவக்கொடி படர்ந்த-கருநிறமான புருவமென்னுங் கொடியானது ஓடிய, விரிநுதலானும் - அகன்ற நெற்றியினாலும்;

செம்மணி, மாணிக்கமணி, அது சிவந்திருத்தலின். அம்மணி - அழகிய நீலமணி; 'மணி' என்னுஞ் சொல் தன்னியல்பில் நீலமணியினையே யுணர்த்தல் "மணி நீலமணியே" என்னுந் திவாகரத்திற்காண்க. அம் - அழகு (பிங்கலந்தை).

குயிற்றி-அழுத்தி; இஃதிப்பொருட்டாதல் "மரகதமணியொடு வயிரங் குயிற்றிய" என்புழிக் காண்க (சிலப்பதிகாரம், ௫, ௬௬எ, அடியார்க்கு நல்லாருரை).

செம்மணிப் பலகைக்குக் கருநிற வரம்பு அமையும் காட்சி அழகிதாதல் நினைவுகூர்க. வண்ணம், வகை.

(கூ-ககி) அந்நுதல் கிளர்ந்த பொன்போல் செவ்விழி- அந்நெற்றியின்கண் எரியும் பொன் ஒத்த சிவந்த நெற்றிக் கண்ணனது, உத்தி என்னும் துத்திப் பை அரவு முடிமேல் மணி என-பிள்ளையாரது நெற்றிமேல் உமைப் பிராட்டியார் தொங்கவிட்ட உத்தி யென்னும் அணிகலமானது பொறிகள் வாய்ந்த படத்தினையுடைய ஒரு சிறு நாகம்போற் றோன்று நிற்க அந்நாகத்தின் தலைமேற் காணப்படுஞ் சிவந்த மாணிக்க மணியினை யொப்பத் தங்கி யிருத்தலானும்,

பிள்ளையாரது நெற்றிக்கண், அவரது நெற்றிமேற் றொங்கவிடப்பட்ட உத்தியென்னும் அணிகலத்தின்முனையிற் பதித்த மாணிக்க மணிபோற் சிவப்பாய் ஒளிர்ந்ததென்றும், அவ்வுத்தியாகிய அணிகலம் ஒரு சிறு நாகப்பாம்பினையும் அவ்வணிகலத்தின் முனையிற் பதித்த செம்மணி அந் நாகத்தின் உச்சிக்கண்ணதான மாணிக்கத்தினையும் ஒத்திருந்தனவென்றுங் கூறியபடி.

உத்தி - அணிகல (ஆபரண)த் தொங்கல் (திவாகரம்). துத்தி-பொறி (திவாகரம்). பை-படம் (பிங்கலந்தை).

(கக-கஅ) வெள் பனித் திரளை - வெண்ணிறமான பனிக் கட்டியை, கண்ணுறப்போழ்ந்து - இடம் இடைப்படப் பிளந்து, துவர் நிறம் ஊட்டி-அதன்கட் சிவந்த நிறத்தையும் ஏற்றி, சிவணுற அமைத்தாங்கு-பொருத்தமுற அமைத்தாற் போல, இருபுறம் கதுப்பு மருவுதலானும்-முகத்தின் இரண்டு பக்கங்களிலுங் கன்னங்கள் அணைந்து தோன்றுதலாலும் ;

'போழ்ந்'தென்றது வெட்டுவாயிற் றோன்றும் பளபளப்பினை உவமித்தற்கென்று கொள்க. துவர் நிறம், செந்நிறம் ; இதன்கண் எச்சவும்மை தொக்கது. 'துவர்' சிவப்பு நிறத்தை யுணர்த்துதல் "துவரிதழ்ச் செவ்வாய்த் துடியிடையோயே" (சிலப்பதிகாரம், சு, உகூ) என்பதிற் காண்க.

'கதுப்'பென்றது கன்னங்களை (திவாகரம்).

(கசு-உ0) குழையொடு கெழுமும் தழை செவி இரண்டும்-குண்டலங்களொடு பொருந்தும் வளர்ந்த காதுகள் இரண்டும், ஓ எனும் வடிவொடு மேவுதலானும்-ஓ வென்னும் ஓங்கார வடிவத்துடன் அமைந்து விளங்குதலாலும் ;

குழை - குண்டலம்; ''மின்னுக்குழையும் பொற்றோடும் மிளிர'' என்றார் சீவகசிந்தாமணியிலும் (கசுரு௮). ஒடுவுருபு "அதனோடியைந்த ஒப்பலொப்புரை'' (தொல்காப்பியம், சொல், எரு).

(உக-உஉ) நடுவில் குழிந்து வட்டித்து அமைந்த-புறத்தே நடுவிற் குழியாகி வட்டமா யமைந்த, படுபொன் கிண்ணம்-செம்பொன்னாலான கிண்ணமானது, முகம் கவிழ்த்து அன்ன-முன்பக்கம் கவிழ்த்து வைத்தாற்போல, மோவாய் நிவந்த முறைமையானும்-வாயின் மோவாய் நடுவிற் சிறிது குழியாகிச் சுற்றி உயர்ந்துவிளங்கும் வகைமையாலும்,

வட்டித்தல், வட்டமாதல் ''மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்து'' (புறம், சஉ). 'படுபொன் கிண்ண'மென்பதைப் 'பொன்படுகிண்ண'மெனக் கொண்டு, 'பொன்னாற் செய்யப் பட்ட கிண்ணம்' எனப் பொருளுரைத்துக் கொள்க; 'நிவத்தல்' உயர்தல்; ஆவது இங்கு எடுத்துத்தோன்றுதல்.

(உ௩-உஎ) கிளை அரி நாணல் கிழங்கு-கப்புகள் அரியப் பட்ட நாணற்புல்லின் கிழங்கானது, மணற்கு ஈன்ற முளையும்-மணலின்கண் விட்ட வெள்ளிய முளையும், முருந்தும் - மயிலிறகினடியும், விளைநீர் முத்தமும் - கடல்நீரில் விளையும் வெண்முத்துக்களும், கூர்ந்து நிரைந்து வல்லென ஒளி விரிந்து எழுந்து ஒளிர் எயிற்றொடு பொருந்துதலானும் - கூர்மையாயும் வரிசையாயும் வலிமையாயும் அமைந்து வெளேலென்று ஒளிவிட்டு நின்று விளங்கும் பற்களோடு ஒன்றியமைதலானும்,

மேற் கப்புகளை யரிந்து நட்ட நாணற் கிழங்கு விரைவில் முளைவிடுதலாலும், அம்முளை கூர்மையாய் வெண்ணிறத்தவா யிருத்தலாலுங் ''கிளையரி நாணற் கிழங்கு மணற்கீன்ற முளை'' உவமையாக எடுக்கப்பட்டது; இவ்வடி

அகநானூற்றில் "தாவில் நன்பொன்" (உசஉ) என்னுஞ் செய்யுளிலிருந்தெடுத்த மேற்கோள்.

'மணற்கு' இதிற் குவ்வுருபு ஏழன் பொருளில் வந்த வேற்றுமை மயக்கம்; நாணற் கிழங்கின் முளையும் முருந்தும் முத்தமும் முறையே வெண்மையிற் கூர்மைக்கும், வெண்மையில் வரிசைக்கும், வெண்மையில் வன்மைக்கும் உவமைகளென்க. ஈண்டு வரும் 'ஒடு' வுருபு ஒப்புமைப் பொருளதாகும்; இது சேனாவரைய ருரையிற் காண்க (தொல்காப்பியம், சொல், சகூ).

(உஅ - கூ0) கொவ்வைக் கனியும் கொழுவிய பவழமும் - சிவந்த கொவ்வைப் பழமும் செழுமையான செந்நிறம் அமைந்த பவழமும், செவ்விய அல்லென - தமக்கு நிகரான சிறந்த செந்நிறமுடைய வல்ல வென்று, இலவு இதழ் புரையும் செந்நீர் இதழொடு மன்னுதலானும் - இலவமர மலரினிதழ்களை ஒக்குஞ் சிவந்த தன்மையையுடைய உதடுகளொடு பொருந்துதலானும்,

கொவ்வைப் பழத்தைக் கிள்ளை கோதுதலானும், பவழக்கல்லைக் கடைந்து துளையிட்டு மகளிரணிதலானும் அவை பிள்ளையாரிதழ்களுக்கு ஒப்பாகத் தகா; மற்று இலவ மலரின் இதழோ அங்ஙனம் ஊறுபடுதலின்மையின் அதுவே அவரிதழுக்கு ஒப்பாகத் தக்கதென்றவாறு; "இலவிதழ்ச் செவ்வாய் இளமுத் தரும்ப" என்றார் சிலப்பதிகாரத்திலும் (கச, கருகூ). நீர்மை இயல்பாகிய குணம், "நின்னுடை நீர்மையும்" என்னுந் திருக்கோவையாரில் இச்சொல் இப்பொருட்டாதல் காண்க.

(கூக - கூகூ) முத்தக் கோவை முறைமுறை வைத்த நத்துவர்ச் செப்பு நன்கனம் திறந்தென - முத்து மாலைகள் வரிசைவரிசையாய் வைக்கப்பட்ட நிறஞ் சிறந்த பவழச் சிமிழின் பொருத்துவா யானது அழகிதாகத் திறந்தாற் போலவும், அரக்கு உரு ஊட்டிய ஆம்பல் நறுமுகை தளை நெகிழ்ந்து அலர்ந்த தன்மைத்து என்ன - செந்நிறத்தைத் தோய்வித்த அல்லியின் நல்ல பூ மொட்டானது கட்டு

அவிழ்ந்து மலர்ந்த வியல்பினது போலவும், முள் எயிறு இலங்க - கூரிய பற்கள் ஒளிகாட்டி விளங்க, நகுதொறும் நகுதொறும் செவ்வாய் தோன்றும் அவ்வாற்ருனும் - நகைக்கும்போது நகைக்கும்போ தெல்லாம் அப் பெருமானது சிவந்த வாயானது விளங்கித் தெரியும் அவ்வகையினுலும்;

நகுதொறும் நகுதொறும் முள்ளெயிறு இலங்கச் செவ்வாய் தோன்றுமெனத் தொடரிசைத்துக் கொள்க. உவமைகளில் முன்னையது பற்களுக்கும் பின்னைய வாய்க்குமெனத் தெளியற்பாலன. 'நத்துவர்' என்பதில் "ந - சிறப்புப்பொருளுணர்த்துவதோரிடைச் சொல்; நச்செள்ளை, நப்பாலத்தன், நக்கீரன் என்ருற்போல" என்ருர் நச்சினுர்க்கினியர் (சீவக சிந்தாமணி, ௪௮௨).

நன்கனம் - நன்ருக, அழகிதாக; "நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த" என்புழி (மணிமேகலை, உ, ௬0) இப் பொருட்டாதல் காண்க.

என, உவமப் பொருளில் வந்தது.

'அரக்கு', சிவப்பு; உரு, நிறம்; "அரக்குண் பஞ்சிகள் திரட்டி" (கனகமாலை, அ) என்னுஞ் சிந்தாமணியில் இச்சொல் இப்பொருட்டாதல் காண்க.

(௬எ - ௬௯) எழும் இடம் குழிந்து - முதற்கண் எழுகின்ற இடத்திற் குழியாகி, விழுமிதின் ஒழுகி - சீரிதாக நீண்டு, தளவு அரும்பு என்ன வளம் கனிந்து இலங்கி - முல்லை அரும்பை ஒப்ப அழகு முதிர்ந்து விளங்கி, முன் எழு மூக்கின் தன்மையானும் - முகம் எழும்பிய மூக்கின் றன்மையினுலும்;

வளம், அழகு; கனிதல், இங்கு 'முதிர்தல்' என்னும் பொருட்டு; "கன்னிமை கனியாக் கைக்கிளைக் காமம்" என்னும் பரிபாடலில் (கக, கக௬) இச்சொல் இப்பொருளில் வந்தது.

(௭0 - ௭உ) ஓர் அருள் கடல் இங்கு ஈர் உருவாகிக் கரை புணர்ந்து கிடந்த முறைமைபோல - ஓர் அருட்டன்மை

யுடைய கடலானது இங்கு இரண்டு உருவங்களாய்ப் பிரிந்து கரை பொருந்திக் கிடந்த வகைமைபோல, புருவக்கொடி கடவாப் பெருவிழியானும் - புருவமாகிய ஒழுங்கினைக் கடந்து செல்லாது அமையும் பெரிய விழிகளாலும்,

'அருட்கடல்' எனப்பட்டது, கண்களின் அருட்டன்மையை எண்ணி; உவமையைக் கருத்தூன்றுக.

கொடி - படர்கொடி, ஒருங்கு என இருபொருளும் உரைத்துக் கொள்க; புருவத்தை நோக்கியவழி அவை படர்கொடியை யொத்திருந்தன; கண்ணாகிய கடலை நோக்கிய வழி அவை அக் கடலுக்கு வகுத்த கரையொழுங்கை யொத்திருந்தன வென்க.

(சஙு - சகு) விரை அவிழ் தாமரை நறை உகுத்தென்ன - மணம் விரிக்குஞ் செந்தாமரை மலர் தேன் சொரிந்தாற் போல, கேட்டொறும் இனிக்கும் பாட்டொடு தழீஇச் செழுவாய் மலர்ந்த மொழியினானும் - கேட்கும்போ தெல்லாந் தெவிட்டாது சுவைக்கின்ற இசைகளுடன் சேர்ந்து அழகிய மலர்வாயின்க ணிருந்து தோன்றுஞ் சொற்களாலும்;

பாட்டு - இசை; பிள்ளையாரது மலர்வாய்ப் பிறக்குஞ் சொற்கள் இசையினிமை வாய்ந்தன என்றபடி.

இதுகாறும் முருகப் பிரான்றன் பிள்ளைமைக் கோலத்தை நினைந்து அணிந்துரைத்ததாகும்; மேல் வருவன அவன்றன் கட்டிளமைக் கோலத்தையுந் திருமணக் கோலத்தையும் நினைந்து புனைந்துரைத்ததாகும் என்க.

(சசு - சஅ) வலம்புரி அன்ன வால் நறும் கழுத்தொடும் - வலம்புரிச் சங்கை ஒத்த வெண்மையான நல்ல கழுத்தொடும், ஏற்றினத்து எருத்தின் முரிப்பு எடுத்தன்ன குவவிப் புடைத்த பிடரினானும் - சிறந்த ஏறுகளின் இனத்தைச் சேர்ந்த எருத்துமாட்டின் இமில் உயர்ந்தாற்போற் றிரண்டு பருத்த பிடரினாலும்;

திருமேனியெங்கும் நீறு பூசப்பட்டிருத்தலின் வெண்மையான கழுத்தென்றார்; இனி, வான் நறுங் கழுத்து எனப்

பிரித்து அழகிய நல்ல கழுத்தெனலுமாம்; அழகாவது சங்கு போல் வழுவழுப்பான வடிவுடைய தாயிருத்தல்.

எடுத்தென்றது, இங்கு உயர்ந்தென்னும் பொருட்டு; காளையாந் தன்மை மிகுந்த இமிலேறு என்றற்கு 'ஏற்றினத் தெருத்தின்' எனப்பட்டது.

'பிட'ரென்பது புறங்கழுத்து. முரிப்பு - இமில் (சிலப் பதிகார உரை, கஎ).

(சக - சுஉ) முழவு எனச் சரிந்து - மத்தளம்போற் சரிவுடையதாய், வல் உலம் எனத் திரண்டு - வலியதிரள் கல்லை ஒப்பத் திரட்சியுடையதாய், வரை என நிமிர்ந்து - மலையைப்போல் உயர்ந்து, பின் எழு எனத் திணிந்து - பின்னும் இருப்புத் தூண்போல் திட்பம் வாய்ந்து, மலையொடு பொருத மால்களிறு என்று புலவோர் கூறும் பொருண்மொழி காட்ட - மலையினெடு போர்செய்த பெரிய ஆண்யானை யென்று புலவர்கள் உரைக்கும் மெய்யுரைக்கு இலக்கியமாக, யானை என்னும் பால் நகு திருமொழி கொங்கை மருப்பின் நுங்கக் குத்தி ஒருபால் பெரும்போர் விளைப்ப - தெய்வயானை யென்று சொல்லப்படும் அமிழ் தத்தையும் இகழும் இன் சொல்லினையுடைய அம்மையார் தமது கொங்கையாகிய கூர்ங் கொம்பினுல் முருகவேள் மார் பந் தன்னை விழுங்க அழுத்தி ஒரு பக்கத்தில் மிகுந்த காதற் போர் செய்ய, ஒருபால் - மற்றெரு பக்கத்தில், வள்ளி யென்னும் கள் அவிழ் குழலாள் - வள்ளியம்மையார் எனப் படுந் தேன் சிந்துங் கூந்தலையுடைய பிராட்டியார், தடமுலை வேதின் - தமது அகன்ற கொங்கையாகிய ஒற்றடத்தால், படுபுண் ஒற்ற உளம் கொண்டு எழீஇ - தெய்வயானை யம்மையார் முன்பு காதற்போர் செய்தமையால் உண்டான புண்ணை ஒற்றுதற்கு உளம் நினைந்து எழுந்து, உறும் இடன் படாஅது ஒருபுறம் ஒற்ற வரும் முறை நோக்கி - அப் புண்ணுற்ற இடத்திற் படாதபடி மற்ருேரிடத்தில் ஒற்று தற்கு வருந் தன்மையைக் கண்டு, கொழுநனை பிணைத்த மரா நறும் தொடலை - அம் முருகவேள் மார்பிற் பொருந்திக் கிடக்கின்ற கொழுமையான மொட்டுக்களால் தொடுக்கப்

பட்ட மணங்கமழுங் கடப்ப மாலையானது, முறுவலித்து என்ன முறுக்கு உடைந்து அசைய - புன்னகை புரிந்தாற் போலக் கட்டுவிட்டு மலர்ந்து புரள, வாள்வலி நிலையும் தோளினாலும் - வாட்படையின் வல்லமை நிலைத்த தோள்களாலும்;

உலம் - திரள்கல் (திவாகரம்). எழு - இருப்புத்தூண் (திவாகரம்).

"மலையொடு பொருத மால்யானை" இளம்பூரணர் உரை (தொல்காப்பியம், சொல், எக)

புலவோர் கூறும் பொருண்மொழி காட்டத் தெய்வயானை கொங்கைகள் முருகவேள் மார்பொடு பொருதன வென்க; வள்ளி மேலுள்ள சிற்றத்தால் தெய்வயானை முருகப்பிரான் மார்பொடு பொருதனளெனவுந், தன் காதலற்கு அவள் செய்த ஊறுபாட்டினைத் தீர்ப்பாள்போல் வள்ளி தன் தடமுலை வேதுகொண்டு ஒற்றினளெனவும் ஒருநயந் தோன்ற உரைத்தார்.

நுங்க - விழுங்க; மார்பின்கண் அழுந்திய குத்தினை அம்மார்பு ஏற்று விழுங்கியதை யொத்ததெனமுருகப்பிரானுக்கு அதன்கண் உள்ள வேட்கையினைக் குறிப்பிட்டார்; நுங்கல் விழுங்குதற் பொருட்டாதல் சீவகசிந்தாமணி (ச, உசச) நச்சினார்க்கினிய ருரையிற் காண்க.

இடப்புறம் அமர்ந்திருக்கும் தெய்வயானையம்மையாரால் நேர்ந்த இடதுபக்கத்துப் புண்ணை ஒற்றி ஆற்றுது, வலப்புறம் அமர்ந்திருக்கும் வள்ளியம்மையின் கொங்கை பெருமானுக்கு வலது புறத்திலேயே பொருந்துமாகலின், "உறும் இடன் படாஅது ஒருபுறம் ஒற்ற வருமுறை நோக்கி" என்றருளிச் செய்தார்.

வேது - வெம்மை ஒற்றடம்; "முலைவேதின் ஒற்றி" என்றார் கலித்தொகையிலும் (கoசு).

'கள்ளவிழ் குழலாள் எழீஇ ஒருபுறம் ஒற்ற வருமுறை நோக்கி' எனத் தொடர் கூட்டுக. 'எழுதல்', இங்கு உள்ள வெழுச்சியைக் குறித்தது.

கடப்பமாலையின் மலர் மலர்ந்திருக்குந் தோற்றத்தை நகுவதாகக் கூறியது தற்குறிப்பேற்றம்.

மரா - வெண்கடம்பு (திவாகரம்); பிள்ளையார் உவந்தது கடப்ப மாலையாதல் "உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே" என்னும் பரிபாடலாலும் (ரு, அக), "மராஅத் துருள்பூந் தண்டார் புரளும் மார்பினன்" என்னுந் திருமுருகாற்றுப்படையாலும் (கo-கக) அறியப்படும்.

இப்பகுதிகளின் உருவக உவமைக் கற்பனையழகுகள் பெரிதும் மகிழற்பாலன வாகும்.

(சுக - சுசு) கைவல் வேகடி-கைவன்மை யுடைய மணி யிழைப்போன், ஐது உறக் கடைந்து - அழகு கெழுமத் திரட்டி, வழுவழுப்பு ஆக்கிய-மழமழப்பாகச் செய்த, கொழுந்துகிர்ப் பலகை - வளமான பவளப்பலகைகள், புணர்ந்து ஒருங்கு இரண்டு கிடந்ததுபோல - இரண்டுசேர்ந்து ஒன்றுய்ப்பொருந்திக் கிடந்ததுபோல, கண்அகன்று ஓங்கிய கவின் கெழு மார்பத்து - இடம் அகன்று வளர்ந்த அழகு பொருந்திய மார்பின்கண், யானை மருப்பு உழுத சுவடு போலவும் - யானையின் கொம்பு உழுதமையால் உண்டான அடையாளம் போலவும், வரையொடு படர்ந்த வல்லி போலவும்-மலையின்மேற் படர்ந்த வள்ளிக்கொடி போலவும், வரிமூன்று ஒழுகிய திருவினுனும்-மூன்று கோடுகள் நீண்டு கிடந்த மேன்மையினுலும்:

வேகடி - மணிமாசு அகற்றுவோன்; "திருமணி குயிற்று நரை" வேகடிகள் என்பர் சிலப்பதிகார உரைகாரர் (ரு, சசு). 'வேகடி' தமிழ்ச்சொல், இது வடமொழிக்கண்ணுஞ் சென்றது. ஐது - அழகு, (சிலப்பதிகார உரை, ௩, கஉ).

பிள்ளையார்தந் திருமேனி நிறஞ் சிவப்பாகலின் அவரது திருமார்பத்திற்குப் பவளப்பலகையினை உவமை கூறினர். யானையென்னுங் குறிப்பினுலும் 'வல்லி'யென்னுங் குறிப்பினுலும் அவையிரண்டும் முறையே 'தெய்வயானை' 'வள்ளி'யென்னுங் காதற் கிழத்தியரின் கொங்கைமுகடு உரிஞ்சிய காதற்செயல்களைக் குறிப்பவாயின.

மார்பின்கண் வரிமூன் றெழுகுதல் சிறந்த ஆடவரின் நல்லிலக்கணமாகும்; "பெருமையையுடைய மார்பிற் கிடக்கின்ற உத்தம இலக்கணமாகிய சிவந்த மூன்று வரியினையும்" (திருமுருகாற்றுப் படையுரை, ௧0௬) என்று நச்சினார்க்கினியர் இவ்வுண்மையை நன்கெடுத்துக் கூறுவர். "வரையகன் மார்பிடை வரியு மூன்றுள" (கேமசரியா ரிலம்பகம், ௯௧) என்பது சிந்தாமணி.

(எ0 - எக) மழையும் மரனும் குழைந்து ஒருங்கு ஓட - நீர் சுரந்த புயலுங் கற்பகமரமுஞ் சோர்ந்து உடன்குலைய, விழுமிய பொருள் பல வேண்டுநாக்கு உதவும் - சிறந்த பொருள்கள் பலவும் வேண்டிய அடியார்க்கு அளிக்கும், தாள் தொடு தடக்கையில் - முழந்தாளைத் தொடும் அளவு நீண்ட பெரிய கையில், தாய் உவந்து ஈத்த - அன்னையாகிய உமைப்பிராட்டி மகிழ்ந்து கொடுத்த, வாலிதின் விளங்கும் வேலினும் - வெள்ளிதாக மிளிரும் வேற்படையினுலும்;

'மரம்' ஈண்டுக் கற்பகமரம்; அஃது இந்திர னுலகில் உள்ளது; மழையுங் கற்பகமும் இந்திர னுலகிற்குக் கீழ் மண்ணுலகிற் பயன்படும் பொருள்களை மட்டுமே தரவல்லன வன்றி, வானுலகிற்கு மேலுள்ள உயர்ந்த தேவர் நிலைகளையும் அவையிற்றிற்கும் மேலான பேரின்ப வீட்டுலகினையுந் தரவல்லன அல்ல. மற்றுப், பிள்ளையார் தந் திருக்கைகளோ மண்ணுலக வின்பங்களொடு, விண்ணுலக வின்பங்களும் அவற்றிற்கும் மேலான வீட்டுலக வின்பமும் அளிக்க வல்லன என்றவாறு.

ஆண்மக்களிற் சிறந்தார்தங் கைகள் முழந்தாளளவும் நீண்டிருத்தல், "தாட்டாழ் தடக்கைத் தனிமதி வெண் குடையான்" என்னும் புறப்பொருள் வெண்பாமாலைச் செய்யுளான் உணர்க. 'ஈத்த' கொடுத்த எனப்பொருள் தரல் "செம்பொன் வயிரியர்க்கு ஈத்த" (புறம், ௬) என்புழியுங் காண்க.

(எ௪ - எஎ) பால்நுரை முகந்த பரிசொடு பொரூஉம் - பாலின் நுரையை அள்ளி எடுத்த தன்மையை ஒக்கும், தூ வெள் அறுவை அசைஇ - தூய வெள்ளிய ஆடையை

உடுத்து, மூவகை மடியுடன் விளங்கி - மூன்று வகையான மடிப்புகளுடன் விளங்கி, வடிவுடன் சரிந்து - அழகிய வடிவுடன் சரிவுடையதாய், நடத்தொறும் குலுங்கும் வயிற்றினும் - நடக்குந்தோறுங் குலுங்கி யசைகின்ற வயிற்றினாலும் ;

'பால்நுரை,' தூய்மைக்கும் வெண்மைக்கும் மென்மைக்கும் உவமையாகலின், 'தூவெள்ளறுவை' யென அறுவை விதந்துரைக்கப்பட்டது. 'அறுவை', தறியில் நீள நெய்தது பின் துண்டு துண்டாய் அறுக்கப்படுதலின் வந்த பெயர்.

'அசைஇ', உடுத்து ; இஃதிப்பொருட்டாதல், "புலித்தோலை அரைக்கு அசைத்து" (மழபாடி, க) எனவருஞ் சுந்தரர் தேவாரத்தால் தெளியப்படும்.

'மடி', என்றது, இங்கு வயிற்றின் சதைமடிப்புக்கு.

(எஅ - அஉ) எழும் இடம் தசை நந்து - எழுகின்ற இடம் தசை கொண்டு, பின் - அதற்குமேல், ஒழுகுதொறும் மெலிந்து - நீளுமிடமெல்லாம் வரவர மெலிவுடையதாய், மழைக் கடக் களிற்றின் புழைக்கை ஒத்தும்-மழைக்கு நிகராய் ஒழுகும் மதத்தினையுடைய யானையின் துதிக்கைக்கு ஒப்பாகியும், கொழும் கனி வாழையின் கோழ் அரை ஏய்ப்ப ஊறும் ஒளியும் வீறுஉறத் திகழும் - கொழுவிய பழங்களையுடைய வாழை மரங்களின் வழுவழுப்பான அடிமரங்களை ஒப்ப மழமழவென்னும் ஊறும் பளபளவென்னும் ஒளியும் சிறப்புற விளங்கும், நிறம் கெழு மரபின் குறங்கினும் - செந்நிறம் பொருந்திய தன்மையினையுடைய தொடைகளாலும் ;

எழுமிடம், தோன்றும் முதலிடம் ; மழைக்கடம் : உவமத்தொகை ; புழைக்கை, தொளையுடைய கை. ஊறு, தொட்டுணர்வு. பிள்ளையார் திருமேனி செந்நிறத்ததாகலின் 'நிறங்கெழு குறங்கு' என்றார் ; நிறம் ஈண்டுச் செந்நிறம்.

(அங - அக) எப்பால் பொருளும் துப்புற வைகும் நிலைக்களம் என்பது பெயரின் காட்டி - எவ்வகையான

"தேட்கடுப் பன்ன நாட்படு தேறல்" (புறநானூறு, கூகஉ) என்பதனுல் ஈண்டுக் கூறிய நறவின் கடுப்புத் தேளின் கடுப்பை யுடையதாதல் அறிக. நறவு - கள், "நனைமுதிர் சாடி நறவின்" என்ருர் புறத்திலும் (உகஎ). நொடுத்தல் - விற்றல், "மீன் நொடுத்து நெற்குவைஇ" (புறம், கூசகூ). புடை - பக்கம், "ஒருபுடை பாம்பு கொளினும்" (நாலடியார், கசஅ.)

(க0உ - க0அ) ஒரு சார் - மற்றொரு பக்கத்தில், பனிமலை நிவந்த பண்பு போல - பனியினுல் மூடப்பட்ட மலைகள் உயர்ந்துள்ள தன்மையை ஒப்ப, சேண்தொட ஓங்கிய உப்புக் குன்றம் - வானம் தொடும்படி உயர்ந்த உப்பு மலைகளை, தலையழித்து உமணர் பொதியுறச் சேர்த்திய - உச்சியிலிருந்து அவற்றை யழித்து உப்பு வாணிகர் உப்பை மூட்டைகளாக்கிச் சேர்த்த, ஒழுகை - வண்டியின், உருளை - சக்கரங்கள், முழுமணல் புதைதலின் - சுமையினுல் அவ் விடத்து நிறைந்த மணலினுள் அழுந்துதலின், பிடர் கொடுத்து எழுப்பிக் கடும்பகடு உரப்பும் - அவற்றைத் தம் புறங்கழுத்துக் கொடுத்து மேல்தூக்கியபடியாய் அவ்வண்டி யிற் பூட்டிய வலிய எருதுகளை வாயால் அதட்டுகின்ற, தாளாண் மாக்கள் தலைப்படும் உஞற்றும் - முயற்சியிற் சிறந்த மக்களின் மேம்படும் உழப்பும்.

நிவந்த - உயர்ந்த, "மாக்கடல் நிவந்து எழுதருஞ், செஞ்ஞாயிற்றுக் கவினை" என்ருர் புறத்திலும் (ச).

'சேண்' ஆகு பெயராய் வானத்தை உணர்த்தும்; 'சேர்த்திய', 'செய்த' வென்னும் பெயரெச்சத் திரிபு. உமணர் - உப்பு விற்பார்; 'ஒழுகை', வண்டி; இச் சொற் களுக்கு இப்பொருளுண்மை "நோன் பகட்டுமண ரொழுகை யொடுவந்த" என்னுஞ் சிறுபாணற்றுப்படை (கூ) யிற் காண்க.

'கடும்பகடு' என்புழிக் கடுமை வலிமையை யுணர்த்தா நின்றது.

'நெய்தல்' நிலமாகலின், கழியிடத்து மணலில் உருளை கள் புதைதல் கூறப்பட்டது.

'தாள்' முயற்சி; 'தலைப்படும்' என்பதை இங்குச் 'செய்யு' மென்னும் எச்சமாகக் கொள்க. 'தாளாண்மாக்கள்' என்றது ஈண்டு வண்டி யோட்டுவாரை.

'உஞற்று' முயற்சி; "மாண்ட உஞற்றி லவர்க்கு" (௬௪) என்பது திருக்குறள்.

(க0௬-கக௨) புலவுக் கழி முளைத்த துவர் இதழ்த் தாமரை - புலால் நாற்றம் நாறுகின்ற கழியின்கண் வளர்ந்த சிவந்த இதழ்களையுடைய செந்தாமரை மலரில், புன்னை நுண்தாது பொறிப்ப - புன்னை மலரின் பொன்னிறமான நுண்ணிய மகரந்தப் பொடிகள் மேலிருந்து சிந்த, துன்னிய உருவொடு விளங்கும் தோற்றம் - அஃது அப்பொடிகளால் நிறைந்த பொன்னுருவுடன் விளங்குகின்ற காட்சியானது, எரியிடை - எரியும் நெருப்பின்கண், உருகிய பசும்பொன் கவிழ்ப்ப - நீராய் உருகிய பசும்பொற் குழம்பைக் கீழ் முகமாகக் கவிழ்த்திடுதலும், ஓடிய திருவொடும் பொலியும் செவ்வியும் - அஃது ஒழுகிய அழகொடு ஒப்ப விளங்கும் அழகும்;

'பொறிப்ப', இங்குச் சிந்திய வென்னும் பொருட்டு; இதற்குத் 'தெறிப்ப' வெனச் சிந்தாமணி (௬௬) உரையில் உரைகாரர் நச்சினார்க்கினியர் எழுதுவர்.

'துன்னிய' வென்பது 'நிறைந்த'வெனப் பொருடரல் "துன்னிக் குழைகொண்டு தாழ்ந்த குளிர்மரம்" என்னும் நாலடியாரிற் காண்க (க௬எ).

'எரி' செந்தாமரை மலருக்கும், 'பசும்பொன்' புன்னை நுண் தாதுக்கும் உவமையாகும்.

செவ்வி - அழகு (சூடாமணி நிகண்டு, கக).

பசும் பொன்னைப் போலவே புன்னைத்தாதும் மஞ்சள் நிறமுடையதாதல் காண்க.

திருவொடும், ஒடு ஒப்புமைக்கண் வந்தது.

(ககங-ககரு) மருவிய - பொருந்திய; நெய்தல் அம் கானல் ஐது உறக்கிடந்த ஒற்றி மாநகரில் - கடற்கரைக்கண்

உள்ள[கழியடுத்தசோலை அழகுமிகக் கிடந்த திருவொற்றிமா நகரின்கண்.

கானல் - கழிக்கரைச்சோலை (பிங்கலந்தை).

'ஐது', அழகு; "பிறவியள் ஆயினள் பெற்றியும் ஐதென" என்பது மணிமேகலை (௧0, ௨). ஒருசார் பேரொலி நிகழ்த்த, ஒருசார் (௧0௨) தாளாண்மாக்கள் தலைப்படும் உளுற்றும் (௧0௮) திருவொடும் பொலியுஞ் செவ்வியும் (௧௧௧) மருவிய நெய்தலங் கானல் கிடந்த திருவொற்றி மாநகரெனக் கொள்க. 'நிகழ்த்த, உளுற்றும் செவ்வியும் மருவிய, கானல் கிடந்த திருவொற்றி மாநகர்' என வினை முடிக்கப்படும்.

திருவொற்றியூர் நெய்தலும் மருதமும் மயங்கிய தாகலின், இங்குத் திணை மயக்கங் கூறப்பட்டது. இது முதற்செய்யுளிலும் எடுத்துக் காட்டப்பட்டமை நினைவு கூர்க.

(௧௧௫-௧௧௬) கற்றைத் தோகை மயின்மேலிருந்து பயிலுதலானும் - கற்றையா யிருக்கும் பீலியினை யுடைய மயிலின் மேல் எழுந்தருளியிருந்து பலகாலும் விளங்கு தலாலும்;

'பயிலுத' லென்பது பலகால் நிகழ்ச்சியினை யுணர்த்தல், "கரப்பிலுள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி" (புறம், ௬௪) யென்னுமிடத்துப் "பலகாற் கூறி" யெனவரும் பழைய உரைகொண்டு இச்சொற்கு இப்பொருளுண்மை தெளியப் படும்.

(௧௧௭ - ௧௧௮) காண்டொறும் இனிக்கும் காட்சியும் உடையன் - பார்க்கும்போதெல்லாம் மகிழ்வைத் தருகின்ற தோற்றமும் உள்ளவன்; உரைப்பத் தீராச் சிறப்பும் உடையன் - சொல்லி முடியாப் பெருமையும் உள்ளவன்;

உரைப்பத் தீராச் சிறப்பென்பது, எவ்வளவு சொன்னு லும் முடிதலில்லாத பெருமையென்க. 'உம்மை', எச்சம்;

(௧௧௯ - ௧௨௬) தம் உயிர்க்கு இனிய செம்மொழிப் புதல்வரை நோக்க நோக்க - தமது உயிர்க்கினிய இன்

சொற் புதல்வர்களைப் பார்க்கப் பார்க்க, மீக் கிளர் காதல் தந்தையர்க்கு எழுதல்போல - மேன் மேன் மிகுகின்ற அன்பு தந்தைமார்க்கு விளைதல் போல, கண்டிடும் விழி அளவு அமையாக் கழிபெரும் காதல் - தன்னைக் காணுங் கண்களின் அளவில் அமையாத நிறைந்த பேரன்பினை, எய்தினர்க்கு உறுக்கும் செய்தியும் உடையன் - தன்னை அணுகிக் காணும் பேறு பெற்ற அடியார்கட்கு விளைக்குஞ் செய்கையுமுள்ளவன் ;

'செம்மொழி' யென்புழிச் 'செம்மை' யென்பது இங்குத் தந்தையர்க்கு இனிதாகுந் தன்மையைக் குறியாநின்றது. 'உறுக்கும்' உண்டாக்கும்.

(௧௨௪ - ௧௨௫) உருகெழு தோற்றம் மருவுவன் என்று - அச்சம் பொருந்திய தோற்றத்தை மேற்கொள்வனே என நினைந்து, வெருவரல் ஒழிதி இன்றே - நின் அஞ்சுதலை ஒழிப்பாயாக இப்பொழுதே;

உரு - அச்சம், "உரு உட்காகும்" (தொல்காப்பியம், உரியியல், ௪); இறைவன் தன் அடியார் அஞ்சுதற்கேது வான தன் றெய்வ வடிவைக் காட்டாது அவர் கண்டு மகிழ்தற்குத்தக்க அழகிய இளவடிவினையே காட்டி அருள் செய்வனென்பது,

"அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி"

என்னுந் திருமுருகாற்றுப்படை அடிகளால் (௨௮௯-௨௯௦) அறியப் படும். வெருவரல்-அஞ்சுதல், (திருமுருகாற்றுப்படை, ௨௪௪). 'ஆல்' அசை.

(௧௨௫ - ௧௨௮) முருகன் குழவிக் கோலத்தும் விழுமிதின் அமர்வன் - முருகப்பெருமான் குழந்தை யுருவத்திலுஞ் சிறந்து திகழ்வன்; மடவரன் மகளிர் தடமுலை குழைக்கும் இளமைக் கோலத்தும் வளமையொடு பொலிவன் - மடப் பத்தினை யுடைய பெண்களின் பெரிய கொங்கைகளைக் குழையும்படி செய்யுங் காளைப் பருவத்திலுஞ் செல்வப் பொலிவுடன் விளங்குவன் ; அதனன்-அதனல் ;

'மடவரல் மகளிர்'-'மடப்பத்தினையுடைய மகளிர்' எனப் பொருளுரைப்பர் நச்சினர்க்கினியர் (நெடுநல்வாடையுரை, ஙக).

(கஉக-கஙரு) மின் எனத் தோன்றிக் கொன்னுற மறைந்தும்- மின்னல்போற் காணப்பட்டுப் பயனில்லாமற் கழிந்தும், வாதுவன் நடவாக் கலிமா போலத் தீதுஉறு நெறியில் திறம்படச் சென்றும்-குதிரைப் பாகனல் நடத்தப் படாத செருக்குமிக்க குதிரையைப்போல தீமை மிகுக்கும் வழியில் திறமையாக ஓடியும், பாகு அடு களிற்றின் பண்பு போல உறுதிகொள்ளாச் சிறுமையின் மிகுந்தும் - யானைப் பாகனைக் கொன்று நெறிப்படாது மீறும் யானையின் இயல் பைப் போல் ஒரு நன்மையை மேற்கொண்டொழுகமாட்டாக் கீழ்மையில் மிகுதிப்பட்டும், ஒருவழி நிலையாது ஓடிப் பலவழிக் கவர்க்கும் என் நிலைமை இல் மனனே-ஒரு முறை யிலும் நிலைப்பதில்லாமல் ஓடிப் பல வகையிலும் பிளவு பட்டொழுகுகின்ற எனது நிலைத்தலில்லாத நெஞ்சமே யென்பது.

மனனே என்பதன் ஏகாரம் விளி; 'மின்' திடுமெனத் தோன்றுதலுக்கு உவமை; 'கொன்' பயனின்மைப் பொருளது; "கொன்னே வழங்கான்" (நாலடியார், க, கூ) என்புழிப்போல.

வாதுவன், குதிரை ஓட்டுவோன் (திவாகரம்). 'கலி', இங்குச் செருக்கினை உணர்த்தும் (புறம், கரு).

பாகு, பாகன், (சிலப்பதிகாரம், கரு, சகூ). சிறுமையின், சிறுமையின்கண்; கவர்த்தல், பிளவு படுதல் (புறம், ஙரு). ஆவது, ஓரே நினைவாயில்லாமற் பல பல நினைவுகளுடைய தாதலைக் கூறியவாரும்.

மனனே (கஙரு) அதனுன் (கஉஅ) வெருவரலொழிதியால் (கஉரு) என முடிக்க.

எனவே, மனனே (கஙரு) எனத் தலைவி தனது நெஞ்சத்தை விளித்து, நறுங் கதுப்பொளிரும் பெருஞ்

சிறப்பானும் (௬) விரிநுதலானும் (௧௨) முடிமேன் மணி எனக் குடிகொளலானும் (௧௫) கதுப்பு மருவுதலானும் (௧அ) ஓவெனும் வடிவொடு மேவுதலானும் (உ0) மோவாய் நிவந்த முறைமையானும் (உ௬) எயிற்றொடு பொருந்துத லானும் (உஎ) இதழொடு மன்னுதலானும் (௩0) செவ்வாய் தோன்று மவ்வாற்றானும் (௩௬) மூக்கின் றன்மையானும் (௩௬)பெருவிழியானும்(௪௨)மொழியினானும் (௪௫)பிடரினானும் (௪அ) தோளினானும் (௬௨) வரிமூன்றெழுகிய திருவினானும் (௬௬) வேலினானும் (எ௩) வயிற்றினானும் (எஎ) குறங்கினானும் (அ௨) திருவடியானும் (அ௬) மயின்மேலிருந்து பயிலுதலானும் (௧௧௬) காட்சியுமுடையன் (௧௧எ) சிறப்பு முடையன் (௧௧அ) செய்தியும் உடையன் (௧௨௩) தோற்றம் மருவுவன் என்று (௧௨௪) தன் தலைவனாகிய திருவொற்றிச் செவ்வேளின் எழில் நலங்கள் கூறிக், குழவிக் கோலத்தும் அமர்வன் (௧௨௬) இளமைக் கோலத்தும் பொலிவனதனன் (௧௨அ) என்றும் அவன் குழவிக்கோலத்திலேயே இருப்பவனல்லன்; அவன் கட்டிளமைக் கோலத்தின் கண்ணும் பொலிந்து நம்பால் அணுகி நங் காதற்றுயரத்தையுங் கட்டாயந் தீர்ப்பான்காண் எனத் துணிவு விளக்கி, வெருவரல் ஒழிதியால் இன்றே (௧௨௫) என அறிவுறுத்தியவாறு தெளியற்பாலது. எனவே இச்செய்யுள் எழில் நலங்கூறி நெஞ்சறிவுறுத்தற்கண் வந்தமை காண்க வென்பது. (௨௨)

## உ௩. அருடர வேண்டல்

மன்னும் ஒரு யானை ஊட - தனக்கு ஒரு கூறாய்ப் பொருந்துந் தெய்வயானை என்னும் ஒருத்தி தன்னுடன் ஊடுதல் செய்யும்படி, மறுயானை தன் உதவி-தனக்கு முன் னோனை யானைமுகக் கடவுளினது அருளுதவியானது, வள்ளி தட முலைகள் துன்னுவிப்ப - வள்ளியம்மையாரின் பெருத்த கொங்கைகளைப் பொருந்துவிப்ப, ஒற்றி நகர் வைகும் வேலோய் - இத்தகைய காதல் விளையாட்டுகளுடன் திருவொற்றி நகரில் எழுந்தருளியிருக்கும் வேற்படையை யுடைய முருகப்பெருமானே, ஒருபெரிதோ பற்றி எனை ஆள்

பரிசு-அணுகி ஏழையேனை ஆண்டருளுந் தன்மை தேவரீருக்கு ஒரு பெரிதாகுமோ வென்பது.

யானை முகக் கடவுள் இங்கு 'யானை' யெனப்பட்டார்; அவர், தம் இளவலாகிய ஆறுமுகக் கடவுளுக்கு வள்ளியம்மையை மணங் கூட்டிவைத்த வரலாறு கந்த புராணத்து 'வள்ளியம்மை திருமணப் படலத்தில்' ௧௧௦ஆவது செய்யுளிலிருந்து ௧௪௯ ஆவது செய்யுள் வரையிற் கூறப்படுதல் காண்க.

பரிசு-பண்பு, தன்மை (திவாகரம்); "போரும் பரிசு புகன்றனரோ" என்றார் திருக்கோவையாரிலும் (௧௮௨).

## உ௯. தோழி தலைவி குறிப்பறிதல்

பரிசு பிறிது ஒன்று அறியேன் - உண்மை வகை வேறொன்றுந் தெரிந்திலேன், பருமுத்தப் பைம் பணைசூழ் விரிபுகழ் ஒற்றி வருவேலர் போலும்-பருமையான முத்தங்கள் உள்ள பசிய வயல்கள் சூழ்ந்த பரந்த புகழினையுடைய திருவொற்றி நகரின்கண் எழுந்தருளி விளங்கிவரும் வேலவர் போலும் இங்குவந்து என்னை வினவியவர், விடைக்களிறு ஒன்று-ஆண்யானை யொன்று, அரிதின் பெயர்ந்து இங்கு வந்தது உண்டோ என்பர்-எய்த என் அம்பினுக்கு அருமையாகத் தப்பியோடி இப்பக்கம் வந்ததுண்டோவென என்னை வினவுவர், அங்கு செல்வர் - யான் இல்லை யெனவே அப்பக்கம் போவர், தெரிவில் பெரியர் செயலோ சிறியர்-அவர் அறிவிற் பெரியராயிருந்தும் அடுத்தடுத்துப் போந்து அங்ஙனம் வினவுஞ் செயலிற் சிறியராயு மிருக்கின்றார்; எம் சேய் இழையே-செவ்விய நகைகளை யணிந்த எம் தலைவியே என்பது.

இங்குக் கூறப்படும் முத்தம் வயல்களில் விளையும் முத்தமென்க.

இங்ஙனமெல்லாங் கூறுங்கால் தலைவிக்கு நெஞ்சங் கடுத்தது காட்டும் வெளிக்குறிப்புகள் கொண்டு தோழி அவளது காதற்கருத்தைத் தெரிந்துகொள்வள். இங்ஙனங் கூறிக் குறிப்பறியு மியல்பு "இருங்களியா யின்றியா

ளிறுமாப்ப'' என்னுந் திருச்சிற்றம்பலக் கோவையாரினுலும் (இஉ) உணரப்படும்.

தெரிவு, அறிவு; இப்பொருட்டாதல் "தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்'' என்னுஞ் சிலப்பதிகாரத்திற் காண்க. (கூ௦, கஅ௯).

(உச)

(க-கஉ) இழை நெகிழ் பருவரல் எய்திய மகளிரின்-தாம் அணிந்த அணிகலங்களைக் கழலச் செய்தற்கு ஏதுவான தங் காதலர்ப் பிரிந்த துன்பமுறும் மகளிரைப்போல, மழைத் தடம் தோள்கள் இளைத்துத் தோன்ற-குளிர்ச்சி பொருந்திய பெரிய தோள்கள் மெலிந்து தோன்றவும், பால் கடல் போலத் தூத்தகப் பரந்த நூல்படு கேள்வியும் சீர்ப்படாது ஒழிய - பாற்கடலைப்போல் தூய்மைப்பட விரிந்த நூலா ராய்ச்சியின்கண் அடிப்படுகின்ற நினது கேள்வியறிவும் செம்மைப் படாமல் தவறியொழியவும், சிறுநெறிச்செல்லும் அறியா மாந்தரும் நல்வழிச்செல்லத் தெள்ளிதின் காட்டும் இழுக்கா நடையும் வழுக்கிப்போக - சிறுமையான தீயவழி களிலே ஒழுகும் நன்மையறியா மக்களும் நல்ல வழியிலே திருந்தி யொழுகும்படியாக அத்துணை விளங்கக் காட்டும் நினது பழுதுபடாத ஒழுக்கமும் வழுவிப்போகவும், இந் நிலை நீயும் திரியின்-இத்தகைய இழிநிலையில் நீயும் நிலை திரிவதானுல், பின் - அதற்குமேல், ஒரு பௌவநீர் வெதும்பின் வளாவுநீர் உண்டோ-ஒரு கடல்நீர் வெப்பங்கொள் வதானுல் அதனை வளாவுகின்ற அதனினுங் குளிர்ந்த பெரு நீரும் வேறு உண்டோ? இல்லையே; குன்று நிலைதவறிப் பந்துபோல் உருளில் சென்று வழி அடைக்கும் குன்றியும் உண்டோ - ஒரு மலையே தன் இருப்பினின்றும் பிறழ்ந்து பந்துபோல் உருண்டு ஓடுமானுல் அதனை அதன் எதிரிற் சென்று வழியடைத்து நிலைப்பிக்குஞ் சிறிய குன்றிமணி தானும் உண்டோ? இல்லையே; கடும் களிற்று ஒருத்தல் தொடுமடுத்து உண்ணின் முருங்காது ஓம்பும் பெருங்கலம் உண்டோ - வலிய ஆண்யானை ஒன்று வயலின் உட்புகுந்து உணவு கொள்ளுமானுல் அஃதழியாதபடி பாதுகாக்கும் பெரிய மூடுகலம் ஒன்று உண்டோ? இல்லையே; என்று

பல கூறி நின்று-என்று பல அறிவுரைகளெல்லாம் எனக்குக் கூறிநின்று, எனைநெருங்கி நன்மை நாடிய என் உயிர் நண்பா - என்னைக் கழறி என் நன்மையை விரும்பிய என் உயிர் நண்பனே என்பது.

பிரிவாற்றுத் துன்பம் மகளிரை மெலிவித்தலின் இதற்குமுன் அவருறுப்புகளில் இறுக்கமாயிருந்த அணி கலன்கள் நெகிழ்தல் பற்றி 'இழை நெகிழ் பருவரல் எய்திய மகளிரின்' என்றூர்.

பருவரல், துன்பம்; தூ, தூய்மை; தூத்தக, தூய்மைப் பட; நீயும் என்னும் உம்மை உயர்வு.

வளாவு நீருண்டோ, குன்றியுமுண்டோ, பெருங்கல முண்டோ வென்றது, பாங்கன் தலைமகனைப் பார்த்து, 'எல்லா முணர்ந்தொழுகும் பெரியையாகிய நீயே நிலை தவறி நின்றூல் நின்னிற் சிறியராகிய ஏனையோருள் நின்னைத் திருத்துவாரும் உளர்கொல்' என்று அறி வுறுத்துங் குறிப்புத் தோன்றுதற் பொருட்டு. இவை இங்ஙனமே,

"குன்றம் உருண்டாற் குன்றி வழியடை யாகாதவாறு போலவும், யானை தொடு உண்ணின் மூடுங் கலம் இல்லதுபோலவும், கடல் வெதும்பின் வளாவுநீர் இல்லதுபோலவும் எம்பெருமான் நின்உள்ளம் அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடியின் வரைத்தன்றிக் கைமிக் கோடுமே யெனின் நின்னைத் தெருட்டற்பால நீர்மையர் உளரோ நீ பிறரைத்தெருட்டினல்லது"

என இறையனுரகப்பொருள் (௨ ஆம் நூற்பா) உரையிலும் ஆசிரியர் நக்கீரர் மிகவும் அழகாக உரைத்திருத்தல் நினைவு கூரற்பாலது.

'ஒருத்தல்', யானை முதலிய விலங்குகளின் ஆணுக்குப் பெயர். இப்பொருள்,

"புல்வாய் புலியுழை மரையே கவரி
சொல்லிய கராமோ டொருத்த லொன்றும்"

"வார்கோட் டியானையும் பன்றியு மன்ன"

என்னுந் தொல்காப்பிய நூற்பாக்களால் (மரபியல், ௩௫, ௬) உணரப்படும். களிற்றுக்குக் கடுமையாவது வலிமை; 'கடுமை', வலிமை;

'தொடு', வயல்; "மருத நிலமும்.........தொடுவென லாகும்" (௧௦: ௬௫௬) என்பது பிங்கலந்தை. யானை யென்னுங் குறிப்பால் இவ்வயலைக் கரும்பு விளை வயல் எனல் ஒக்கும்.

'முருங்கல்', அழிதல்; குன்றியும், இதன் உம்மை எதிர் மறை.

'நெருங்கி'யென்றது, இங்கு அருகில்நின்று என்ப தன்று, இடித்துரைத்து அல்லது கழறி என்னும் பொருட்டு; தொல்காப்பியங், கற்பியலில் (௧௫௦) "பிழைத்து வந்திருந்த கிழவனை நெருங்கி" என்புழி நெருங்கி என்ப தற்கு நச்சினார்க்கினியர் 'கழறி' எனப் பொருளுரைத் ததூஉங் காண்க.

(௧௬-௧௭) மறி இளம் கன்று - மான் கன்றுகள், முறி உணும் தாயொடு-தளிரிலைகளைக் கறித்துத் தின்னுந் தத்தந் தாயுடன், குழைப் புதல்தோறும்-இளந்தளிர்கள் நிறைந் துள்ள சிறு தூறுகளிலெல்லாம், குழீஇ உகள-கூடித் துள்ளித்துள்ளிப் பாய்தலாலும்;

மறி என்பது மானுக்கும் பெயராதல் "யாடுங் குதிரையும் நவ்வியும் உழையும், ஓடும் புல்வாய் உளப்பட மறியே" என்னுந் தொல்காப்பிய மரபியற் சூத்திரத்திற் (௧௨) காண்க.

புதல் - சிறு தூறுகள்; பைம்புதல் எருக்கி (௨௫) என்பது முல்லைப்பாட்டு. 'குழீஇ' அளபெடை, இங்குச் சொல்லிசை; உகள, உகளலாலுமெனக் காரணப்பொரு ளுரைக்க; மேல் வருவனவெல்லாமும் இங்ஙனமே உரைக்கற்பாலன. உகளல்-துள்ளல், "திரிமருப் பிரலை புல்லருந் துகள" என்றார் அகநானூற்றினும் (௪).

(கஅ-கக) வரை யாடு வருடை - இடைவாய் தாண்டி-மலைகளில் விளையாடுகின்ற 'வருடை' யென்னும் ஒருவகை மான் இனம் அங்குள்ள மலைப்பிளவுகளைத் தாண்டி, உள்ளம் செருக்கித் துள்ளித் திரிதர-உள்ளம் எழுச்சி கொண்டு குதித்து உலாவுதலாலும்;

'வருடை' இது 'வருடைமான்' என ஒருவகை மான், இது "வரையாடு வருடைத் தோற்றம் போல" (கங௬) என இங்ஙனமே வரும் பட்டினப்பாலையடியின் உரையால் இனிதறியப்படும்.

'செருக்குதல்', இங்கு 'எழுச்சிகொள்ளுதல்' எனக் கொள்க. மலைகளில் திரிதரும் வேறொருவகை மானினங்கள் மகிழ்ச்சியால் மலைவெடிப்புகளைத் தாண்டி விளையாடுதல் இங்குக் குறிக்கப்பட்டது.

(உ0-உக) நிலம்தொட்டு வீழ்ந்த குலுங்கு மயிர்க் கவரி-நிலத்திற் பட்டுக் கீழ்த்தொங்கிய குலுங்குகின்ற மயிர்க் கற்றையை யுடைய 'கவரிமா' வென்னும் ஒருவகை விலங்கினங்கள், மெல் மெல அசைஇ மேதகச் செல்ல - மெல்ல மெல்ல அசைந்து நடந்து பெருமைப்பட ஏகுதலாலும்;

(உஉ-உ௩) முளவுமா தொலைச்சிய வன்கண் கானவர்-முள்ளம் பன்றிகளைக் கொன்ற வன்கண்மை மிக்க வேட்டுவர், ஞெலிகோல் பொத்திய நெருப்பில் காய்ச்ச-அவற்றின் இறைச்சிகளைத் தீக்கடை கோலால் உண்டாக்கிய நெருப்பில் இட்டு வதக்குதலாலும்;

'முளவு' என்பது, முள்ளம் பன்றியின் பெயர்; "மூண்டெழு சினத்துச்செங்கண் முளவு முள்ளரிந்து கோத்த" (கண்ணப்ப, உ0) என்னும் பெரியபுராணத் திருமொழியில் இப்பொருள் இனிது விளங்குதல் காண்க. "முளவுமா தொலைச்சிய" என மலைபடுகடாத்தின் கண்ணும் (கஎ௬) இத்தொடர் இங்ஙனமே வருதல் நினைவு கூரற்பாலது. ஞெலிகோல்-தீக்கடைகோல் எனவும்,'பொத்துதல்' கொளுத்துதல் எனவும் பொருடரல், "ஒலிகழை பிசைந்த ஞெலிசொரி

யொண்பொறி, படுஞெமல் புதையப் பொத்தி'' என்னும் அகநானூற்றிற் (௩௧) காண்க.

(௨௪-௨௫) ஓரி பரந்த - நீலநிறம் பரவிய, தேன் இறால் எடுமார் - தேன்கூட்டினை அழித்தெடுத்தல் வேண்டி, கழைக்கண் குறைத்து-மூங்கிற் கணுக்களைத் தறித்து, நலத்தக இயற்றிய-நன்றாகச் செய்த, மால்பு வைத்து இடந்தொறும் குறவர் ஏற-கண்ணேணி பொருத்தி அம் மலைக் காட்டிடங்களெல்லாங் குறவர் ஏறுதலாலும்;

'ஓரி' நீலநிறம்; இப்பொருளுண்மை "நீனிறவோரி பாய்ந்தென'' (௫௨௪) என்னும் மலைபடுகடாத்தடியாலும், "ஓரி யென்பது தேன்முதிர்ந்தாற் பரக்கும் நீலநிறம்" என்னும் புறநானூற் (௧0௯) றுரையாலும் அறியப்படும்.

'இறால்', தேன்கூடு; 'எடுமார்', வினையெச்சம்; 'தீது மருங் கறுமார்'' என்புழிப்போல (புறநானூறு, ௯௩). குறைத்து, தறித்து; 'மால்பு' மூங்கிலேணி; கண்ணேணி யென்பதும் அது; "மால்புகண் ணேணியின் பேர்'' (எ, ௫௪) என்பது சூடாமணி நிகண்டு.

'இடந்தொறும்,' தேன்கூடுகள் தொங்குஞ் செங்குத்தான மலைப் பாறைகளின் இடமெலாமென்பது. குறவர், குறிஞ்சிநில மக்கள்; அவர் வேடர்.

(௨௭-௨௮) தினைக் குறு மகளிர்-தினைநெல்லை உலக்கையாற் குத்தும் பெண்கள், சுவைப்பட மிழற்றும் கிள்ளை உறக்கும் வள்ளை ஒலிப்ப-செவிக்கு இனிமை யுண்டாகும்படி இசைக்குங் கிளிகளையும் உறங்கவைக்கும்படியான உலக்கைப் பாட்டினை ஒலித்தலாலும்;

குறுதல்-குத்துதல். "கொல்யானைக் கோட்டால் வெதிர் நெற் குறுவாம் நாம்'' என்றார் கலித்தொகையிலும் (௪௨).

மிழற்றல் - சொல்லல் (திவாகரம்), இங்கே பாடுதல் என்னும் பொருளில் வந்தது.

"ஊழ்முறை யுலக்கை யோச்சி வாழிய, தகுமனைக் கிழவர் தம்வளங் கூறி, மகளிர் பாடுவது வள்ளைப்பாட்டே'' என்னுந் திவாகரத்தால் வள்ளை யின்னதென்றுணர்க.

'உறக்கும்', மென்மை வலித்துப் பிறவினைப்பொருள் பயந்தது.

"தினைகுறு மகளிர் இசைபடு வள்ளையும்" என்னும் மலைபடுகடாந்தடியோடு (கசஉ) இதனை யொப்பிட்டு நோக்குக.

(உகூ-ௗ) மருப்பு இடைச் சுற்றிய பொருப்பு உயர் வேழத்துப் புழைக்கை ஏய்ப்ப-தந் தந்தங்களிடத்துச் சுற்றிய மலைபோல் உயர்ந்த யானையின் துதிக்கையை ஒப்ப விழுத்தக முதிர்ந்த தாளொடு வளைந்த குரல்-தினைப்புனத்து நன்றாக முற்றிய தாள்களுடன் நுனிவளைந்த கதிர்களை யுடைய தினைப்பயிர்கள் உள்ள புனத்தின்கண், படுகிளி ஒப்பும் விடுகவண் சுழற்றி-அப்புனத்திலே விளைந்த தினைக் கதிர்களைக் கொண்டுபோக வந்து விழுகின்ற கிளிகளை ஓட்டுகின்ற கல்விடு கவணைக் கையிற் சுற்றியபடியாய், கோல் வளைக் கொடிச்சி-திரட்சி யமைந்த வளையல்களை யணிந்த குறத்தியர், மேல் இதண் அமர உயர்ந்து - மேலே உள்ள பரணிற் பொலிவுடனிருத்தலாலும்;

'சுற்றிய புழைக்கை' யெனக் கொள்க. மருப்பிடைச் சுற்றிய புழைக் கை, தாளொடு வளைந்த குரல் தினைப் பயிர்க்கு உவமை; குரல், கதிர்; 'நெற்குரல் கௌவிய' (உ) வென முதற்செய்யுளின்கண்ணும் இஃதிப்பொருளில் வந் தமை காண்க.

'ஒப்புதல்', ஓட்டுதல்; விடுகவண், எறிகவண்; ஆவது கல்லெறி கவண். 'கோல்வளை' திரட்சி பொருந்திய வளையல்; "ஆய்கோ லவிர்தொடி" என்னும் மதுரைக்காஞ் சியில் (கூகூ) இச்சொல் இப்பொருளில் வருதல் காண்க. 'இதண்', பரண்; "நெட்டிதண் ஏறும் இப் புனத்தினளே" (கூ) என்பது கல்லாடம். இப் பகுதியைக் குறிஞ்சிப்பாட்டிற் போந்த

"நெற்கொள் நெடுவெதிர்க் கணந்த யானை
முத்தார் மருப்பின் இறங்குகை கடுப்பத்
துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல்
நற்கோட் சிறுதினைப் படுபுள் ஓப்பி"

என்னும் பகுதியோடு (கூ-கஅ) ஒப்பிட்டு நோக்குக.

(௩ச - ௩௫) இரும்கல் வியல் அறை வரிப்ப - பெரிய அகன்ற கற்பாறைமேல் தங் கிளைகள் பட்டுக் கீறும்படியாக, தாஅய நலம்உறு வேங்கை பொலம் வீ உகுப்ப - பரந்த அழகுமிக்க வேங்கைமரங்கள் பொன்னிறமான தம் பூக்களைக் கீழே சொரிதலாலும் ;

வரித்தல் - கீறல், கோலஞ்செய்தல், எழுதல் என்னும் பொருளது ; தாய - பரந்த ; இச்சொற்கள் "காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன், ஈயன்மூதாய் வரிப்ப" என அகநானூற்றில் (௧ச) இப்பொருளில் வருதல் காண்க. 'இருங் கல்வியலறை' என்னும் இச் சொற்றொடர் குறுந்தொகையில் "நிரைவளைமுன்கை" (௩௩௫) என்னுஞ் செய்யுளில் வருதல் காண்க.

நலம், இங்கு அழகு. "இள நலம் காட்டி" (திருமுரு காற்றுப் படை, (உ௧0) என்புழிப்போல. பொலம், பொன் னிறம்.

(௩௬ - சஉ) தேக்குஇலை புய்த்த புன்தலைச் சிறுஅர் - தேக்கிலைகளைப் பறித்த புல்லிய தலையினையுடைய குறச் சிறுவர்கள், மீக்கிளர் கோட்டில் பரிதியின்தொடுத்த தேத் தடை பிறைக்கோடு உழுதெனக் கீண்டு - மேலே வளர்ந்து விளங்கிய மலையின் கொடுமுடியில் ஞாயிறுபோற் கட்டப் பட்ட தேனடையினை நிலாவின் வளைந்த நுனியானது உழுதுவிடவே அதனாற் கீறுண்டு, மாயோன் மார்பில் செஞ்சேறு கடுப்பப் பாயிழியும் படுநறவு முகந்து - திருமாலின் மார்பின்மேற் பூசிய சிவந்த நறுமணக்குழம்பை ஒப்பப் பாய்ந்தொழுகுகின்ற இனிய தேனை ஓர் ஏனத்தில் முகந்துவந்து, பசும் தினைப் பிண்டியோடு அசும்புஉற அளாய் - புதிய தினைமாவுடன் அத் தேன் துளிக்கும்படி கலந்து, நிரைநிரை வைத்து விரைவொடும் ஆர - வரிசை வரிசையாக வைத்து விரைவாக உண்ணுதலாலும் ;

'புய்த்தல்,' பறித்தல்; கோடுபுய்க் கல்லாதுழக்கும் நாடகேள்" (௩அ) எனக் கலித்தொகையில் இஃது இப் பொருளில் வருதல் கண்டு கொள்க; இச்சொல் இக் காலத்திற் 'பிய்த்தல்' என வழங்குகின்றது.

வேட்டுவச்சிறூர் எண்ணெய் முழுக்குக் காணுமையின் அவர் தந் தலைமயிர் பழுப்புநிறமா யிருத்தல் பற்றிப் "புன்றலைச்சிறூர்" என்றூர்: புன்மை - பழுப்பு நிறம் (பிங்கலந்தை.)

'பரிதி'யும் 'பிறைக்கோடு'ங் கூறியது மலையின் உயர்ந் தோங்கிய உச்சியைக் குறித்தற் பொருட்டென்க.

தேன், அடை என்பன "ஒற்றுமிகு தகரமொடு நிற்றலும் உரித்தே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால் (புள்ளி மயங்கியல், சக) நிலைமொழிஈறு கெட்டு இடையே தகரவொற்று இரண்டுபெற்றுத் 'தேத்தடை' யெனப் புணர்ந்தன.

'கிண்டு,' கிறுண்டு (திவாகரம்); "கிண்ட பாரூறும்" (அசுரர்தோ. கு) எனக் கந்தபுராணத்தும் போந்தது. திருமகள் ஞெமுங்கப் புல்லுதலின், அவள் மார்பத்தின் செஞ்சேறு திருமால் மார்பின்கண்ணும் பொருந்துவ தாயிற்று.

படுநறவு, சுவைபடுநறவு; பிண்டி - மா; 'அசும்பு' நீர்த்துளி; "அசும்பினிற் றுன்னி" என்னும் திருச்சிற்றம் பலக்கோவையாரில் (கசக) இப்பொருட்டாய் வருதல் காண்க.

இப்பகுதியின்கட் காட்டப்பட்டுள்ள உவமைகள் மிக்க புலமைத்திறம் வாய்ந்தவை.

(சநு) கண்களி கொள்ளும் பன்மலை யடுக்கத்து - கண்கள் கண்டு மகிழ்ச்சியடைகின்ற பலமலைகளை யடுத்த மலைச்சாரலில்,

அடுக்கம் - மலைச்சாரல், (புறநானூறு, கசுஅ). 'அடுக் கத்து' ஏழன் உருபு விரித்துக்கொள்க.

உகள (கஎ) திரிதர (கக) செல்ல (உக) காய்ச்ச (உரு) ஏற (உசு) ஒலிப்ப (உஅ) அமர (நரு) உகுப்ப (ருகு) ஆர (சஉ) கண்களிகொள்ளும் பன்மலையடுக்கத்து (சநு) எனத் தொடர்ந்துகொள்க வென்பது.

(சச-ருரு) மரவமும் - குங்கும மரமும்; குரவமும் - குரா மரமும், பொரிகெழு புன்கும் - நெற்பொரிபோன்ற பூக்களை யுடைய புன்க மரமும், எரிகிளர் செயலையும்-தீ எரிதலை ஒப்ப விளங்கும் அசோக மரமும், விரி இணர் மாவும் - விரிந்த பூங் கொத்துகளுடைய மாமரமும், பராரைச் சாந்தும்-பருத்த அரைகளையுடைய சந்தன மரமும், பாவை ஞாழலும் - சித்திரப் பாவைபோல் விளங்கும் மலர்களை யுடைய அழகிய கோங்க மரமும், விரிதலை வாழையும் - தலை விரிதலுள்ள வாழை மரமும், வியன் சினைப் பலவும் - பெரிய பெரிய கிளைகளையுடைய பலாமரமும், கொன்றையும் - கொன்றை மரமும், புன்னையும் - புன்னை மரமும், துன்றிய நறவமும்-அடர்ந்துள்ள அனிச்ச மரமும், என இவைகள்; குழைமுகம் தோற்றி-தளிர் நுனிகளைத் தோற்றி, கொழுநனை அரும்பி-கொழுமையான மொக்குகள் அரும்பெடுத்து, புரி அவிழ் மலரில் சிறுவடுக் கிளர்ந்து - அவ்வரும்புகள் கட்டவிழ்ந்து மலர்ந்த மலர்களிற் சிறிய வடுக்கள் விளங்கி, தீவிளியாகி, பசுங்காய் ஆகி, தீம் கனி தூங்கி - இனிய பழங்கள் தொங்கவிட்டு, தண்ணிழல் பயந்து - குளிர்ந்த நிழலைத் தந்து, கண் கவர் வனப்பின் - கண்களைக் கவர்கின்ற அழகுடையதாய், முகில் கண்ணுறங்கத் தலைமை யொடு பொலிமே ஒருபால்-மேகங்கள் தன் உச்சியில் அமர்ந்து உறக்கங் கொள்ளுமாறு அம் மலைச்சாரற் சோலை உயர்வுடன் விளங்கும் ஒரு பக்கலில் என்பது.

மரவம் - குங்குமமரம் (திவாகரம்). குரவம் - பாவை போன்ற பூக்களுடைய ஒருவகை மரம், "நறமலர்க் குரவம் பாவை, நிறையப் பூத்தணிந்து" என்றார் சிந்தாமணியிலும் (கஉஎ0). புன்கமரத்தின் பூக்கள் நெற்பொரிபோன் றிருத்தலின் 'பொரிகெழுபுன்கு' என்றார்: "பொரியெனப் புன்கு அவிழ் அகன்றுறை" என்பது அகநானூறு (கககூ).

தீக்கொழுந்து எரிதல்போல் அத்துணைச் செவ்வொளி யுடன் அசோகின் தளிர்கள் விளங்குதலால் 'எரிகிளர் செயலை' எனப்பட்டது. "அத்தச் செயலைத் துப்புறழ் ஒண் தளிர்" (உஎரு) என்னும் ஐங்குறுநூற் றடியின்கண்ணும் இவ்

வியல்பு "துப்பு உறழ் ஒண்தளிர்" என்று கிளந்தோதப் படுதல் காண்க. ஞாழல் - கோங்கமரம் (திவாகரம்).

நறவம் - அனிச்சமரம் (திவாகரம்).

பருமை அரை, பராரையெனத் திரிந்தது; "பராரை மராஅத்து" (திருமுருகாற்றுப்படை, கo) என்புழிப்போல.

'வடு'வென்பது, இங்குப் பிஞ்சுகள் தோன்றும் வடு. தீவிளி - பசுங்காய் (பிங்கலந்தை). 'தூங்கல்' தொங்க லென்னும் பொருட்டு. முகில்கள் தவழும்படி அத்துணை உயரமாய்ச் சோலைகள் விளங்கின வென்க.

'பொலிமே' யென்னுஞ் செய்யுமென்னு முற்றில் ஈற்றயல் உகரத்தொடுங் கெட்டது.

(இச - சுச) சுளை நிரை அமைந்த கொழும் பழம் தூக்கி- சுளைகள் வரிசையாய் அமைந்த கொழுவிய கனிகளைத் தொங்கவிட்டு, குறுமலர் அவிழ்ந்த நறுவிரை தெளித்து - தன் சிறிய பூக்கள் மலர்ந்தமையால் இனிய மணம் பரப்பி, வீசுகால் அசையும் பாசிலை நரந்தமும்-வீசுகின்ற காற்றினால் அசையும் பசுமையான இலைகள் நிரம்பிய நாரத்த மரங் களும், நலன்உறு மகளிர் இலவு இதழ் கதுவிய முறுவல் அன்ன-அழகு வாய்ந்த மகளிரின் இலவம்பூவி னிதழை ஒக்கும் இதழ்களின் செந்நிறத்தைப் பற்றிய முளைப்பற்கள் ஒப்ப, சிறுவிதை பெய்த பொலன் குடம் எடுத்த உலவை மாதுளையும் - சிறிய வித்துக்கள் உள்ளிட்ட பொற்குடம் ஒக்கும் பழங்கள் தூக்கிய கோடுகளையுடைய மாதுள மரங் களும், கருமணி புரையும் ஒரு கனி நாவலும் - கருமையான மணியை ஒக்கும் ஒப்பற்ற பழங்களையுடைய நாவன் மரங் களும், உவர்க்கழி மணக்கும் துவர்க்கால் வகுளமும் - உவர்த்த நீருள்ள கழியிடங்களும் மணக்குமாறு நறுமணங் கமழுஞ் சிவந்த காம்புகளுள்ள பூக்கள் நிறைந்த மகிழ மரமும், பொன்திரள் கடுப்பத் தெற்றென விளங்கும் எழில் கனி பழுத்த எலுமிச்சம் புதலும் - பொன்னுருண்டை ஒப்பத் தெளிவாய் விளங்கும் அழகிய கனிகள் பழுத்த எலுமிச்சம் புதர்களும், காவதம் கமழ மேவுவ அன்றே ஒருபால் -

காவதத்தொலைவு மணங்கமழும்படி அம் மலைச்சோலையி னொரு பக்கலிற் பொருந்தி நிற்பனவாகும்: அன்று ஏ : அசைநிலை.

நிரை, வரிசை; பசுமை இலை, பாசிலை; 'நரந்தம்' நாரத்தமரம், (குறிஞ்சிப்பாட்டு, கூச).

நலன், 'அழகு'; "பூநலம்" என்பதற்குப் 'பூவினாகிய அழகு' என்று பரிமேலழகியார் உரைகூறினர் (பரிபாடல், கசு, கஅ).

இலவிதழ் மாதுளவிதைகளின் ஒருபாற் செம்மைக்கும் முறுவல் ஒருபால் வெண்மைக்கும் உவமைகள்.

'பொலன்குட' மென்பது ஈண்டுச் சிறு பொற்குடம் போற்றோன்றும் மாதுளம்பழத்திற்கு ஆயது உவமையாகு பெயர். உலவை - மரக்கொம்பு (திவாகரம்).

வகுளம் - மகிழமரம் (திவாகரம்); துவர்க்கால் - பவள நிறம் உள்ள காம்பு; அதனையுடைய மலரும் அம்மலரை யுடைய மரமும் ஈண்டு 'வகுளம்' எனப்பட்டன; இப்பவளக் கால் மல்லிகையினையுந் தமிழ் நாட்டவர் 'மகிழ்' என்கின் றனர்; பவளநிறக்காம்பு இல்லாத வேறொரு வகையினையும் 'மகிழ்' என்கின்றனர்.

'காவத'மென்பது இரண்டேகாற் கல்; இது முன்னுங் காட்டப்பட்டது.

(சுகு - எஅ) குலிகம் ஊட்டிய தலைமையின் திகழ்ந்து - செந்நிறம் ஏற்றிய மேன்மையில் விளங்கி, நவ்வி நோக்கியர் செவ்வாய்போல - மான் பார்வையினரான மகளிரது சிவந்த வாய்போன்ற, கொழும் கனி உடைய கொவ்வைக் கொடியும் - கொழுவிய பழங்களையுடைய கொவ்வைக் கொடிகளும், கற்பு உடை மகளிர் முற்படச் சூடும் வரிசையின் மிகுந்த பரிசு உடை முல்லையும் - கற்பொழுக்கமுள்ள மாதர் முதன்மை யாகச் சூடிக்கொள்ளுந் தகுதியின் மேம்பட்ட பெருமையினை யுடைய முல்லைக்கொடிகளும், தின்பது கல்லாப் புன்தலை மந்தி கறித்துத் துள்ளும் கறிவளர் கொடியும் - வகை

தெரிந்து தீனி தின்னுதலை இன்னுந் தெரியாத சிறிய தலையினையுடைய குரங்குக்குட்டிகள் தம் பற்களால் கடித்து உறைப்பினைத் தாங்காமல் துள்ளுகின்ற மிளகுகாய்கள் வளர்கின்ற மிளகுகொடிகளும், அணில் புறம் கடுக்கும் வரியுடைக் கொடுங்காய் கொள்ளையில் காய்த்த வெள்ளரிக் கொடியும் - அணிற்பிள்ளையின் முதுகினை ஒக்கும் மூன்று வரிகளுள்ள வளைந்த வெள்ளரிக்காய்கள் மிகுதியாகக் காய்த்த வெள்ளரிக்கொடிகளும், சொல்உயர் மரபின் மெல்இலைக் கொடியும் - புகழ்மிக்க தன்மையினையுடைய வெற்றிலைக் கொடிகளும், சிறுபளிக்கு உருண்டை செறிவுறுத்தனைய தீம் கனிக் குலைகள் தூங்க வயின் வயின் நந்தாது வளரும் முந்திரிக்கொடியும் - சிறிய கண்ணாடி உருண்டைகள் ஒரு கொத்தாக நெருக்கி வைத்தாற்போல இனிய பழக்குலைகள் தொங்கா நிற்க இடந்தொறுங் கெடாது வளர்கின்ற கொடி முந்திரிக் கொடிகளும், இடைஇடை தாஅய் மிடையுமால் ஒருபால் - இடையிடையே தாவிப் பின்னித் தோன்றும் மற்றொரு பக்கத்தே என்பது.

குலிகம், செந்நிறம் (திவாகரம்).

'நோக்கி' யென்பதன் இகரம் பெண்பால் விகுதி.

கணவனைப் பிரிந்து அவன் பிரிவுன்னித் தங் கற்பினைப் பேணும் மகளிரது ஒழுக்கமே முல்லையொழுக்கமாகலின், 'கற்புடை மகளிர் சூடும் முல்லை' யென அஃதிங்குக் கிளந்து கூறப்பட்டது. "கற்பொடு பொருந்திக் கணவன்சொற் பிழையாது இல்லிருந்து நல்லறஞ் செய்தல் மகளிரது இயற்கை முல்லையாதலின் அது முற் கூறப்பட்டது" என்பர் நச்சினார்க்கினியர் (தொல்காப்பியம், அகத்திணையியல், ௫). வரிசை - தகுதி (சிறுபாணாற்றுப்படை, உ௧௭).

மிளகுகாய்கள் காரமுடையவாகலின் அவற்றைத் தின்றால் நா எரியும் என்பதைத் தெரியா இளங்குட்டிகள் என்பார் "தின்பது கல்லாப் புன்றலை மந்தி" என்றார். 'துள்ளுங்கறி' துள்ளுதற்கேதுவாகிய கறி எனக் காரிய காரணப் பொருட்டு.

வெள்ளரிக்காய் அணில் முதுகுபோல் வரிகள் உடைமை, "அணில்வரிக் கொடுங்காய்" என்னும் புற நானூற்றினுலும் (உசசு) அறியப்படும்.

மெல்லிலை - வெற்றிலை, (சீவகசிந்தாமணி, சுஉ); வாயினுட் பெய்து மெல்லப்படுதலின் வெற்றிலை 'மெல்லிலை' எனப் பெயர் பெறலாயிற்று; வினைத்தொகை; எல்லாச் சிறப்பு நிகழ்ச்சிகளிலும் வெற்றிலை வழங்கப்படும் புகழுடைய தாகலிற் 'சொல்லுயர் மரபின்' என்று அடைகொடுத்தார்.

செறிவுறுத்தல் - நெருங்கச் சேர்த்தல், "செறிவினைப் பொலிந்த செம்பூங் கண்ணியன்" (பரிபாடல். உஉ, உக) என்புழிப்போல.

'நந்தாது,' கெடாமல்; "நந்தாவிளக்கு" (சிந்தாமணி, (௩கசச); "நாடற்கரிய நலத்தை நந்தாத் தேனை" (திருவாசகம், திருப்பொற் சுண்ணம், கரு) என்றருளிச் செய்வர் மணிவாசகப் பெருமான்.

தாஅய் - தாவி, "கலைதாய உயர்சிமையத்து" என்னும் மதுரைக்காஞ்சியிற் (௩௩உ) போல.

(எகூ - அக) நடுவில் - இத்தகைய சோலையின் நடுவில், பாய்ஒளி மதியம் - பரவிய ஒளியினையுடைய திங்களானது, பரிதிவெம்மையின் - கதிரவன் வெம்மையினுல், இளகிப் புனலாய் இழிந்தது கடுப்ப - உருகி நீராய்க் கீழே ஒழுகிப் பரவியதுபோல, தெளிநீர் வாவி ஒன்று உளது - தெளிந்த நீரினையுடைய குளம் ஒன்று உள்ளது;

மதியமே இளகி நீராய் இழிந்ததென்றது, நீரின் குளிர்ச்சி தூய்மை சுவை நன்மை மினுமினுப்பு தெளிவு முதலியவற்றிற்கென்க.

'கடுப்ப', உவம உருபு; "தேங்கமழ் மருதிணர் கடுப்ப" (திருமுருகு, ௩ச) என்புழிப்போல. இவ்வுவமை மிக அழகியது.

(அக - அச) அது சிறுகால்தோறும் உறுநீர் ஒழுக்கி - அந்தக் குளம் சிறுசிறு வாய்க்கால்க டோறும் மிகுந்த

நீரினை ஒழுகச்செய்து, வாலுகம் பரந்த கோலிய பாத்தியில்-வெண்மணல் நிரம்பிய வளைத்தமைக்கப்பட்ட பாத்தியின் கண், பச்சிளம்புல்லை நிச்சலும் வளர்க்கும் - பசுமையான இளம்புல்லை என்றும் வளரச்செய்யும்; அதான்று - அதுவு மல்லாமல்;

மற்று, அசை; உறுநீர் - மிக்கநீர்; வாலுகம் - வெண் மணல்; "வேலைவாலுகத்து" என்னுஞ் சிலப்பதிகாரத்திலுங் காண்க. (சு, கஙக)

பாத்தி, சிறுவயல்; ''கரும்பின் பாத்தி'' என்பது பதிற்றுப் பத்து (கங, ங).

'நிச்சல்' என்னுஞ் சொல்லும் பொருளும் முன்னே விளக்கப்பட்டன.

(அ௫-கஅ) அன்னச் சேவல் அணிமயிர்ப் பெடை யொடும் பொன்னம் தாமரை பொலிந்து வீற்றிருப்பவும்-அன்னப்பறவையின் ஆண் அழகிய தூவியினையுடைய தனது பெண் அன்னத்துடன் பொன்போன்ற அழகிய செந்தா மரை மலரின்மேற் காதலினால் விளங்கி ஒன்றாய் மகிழ்ந்திருக் கவும், நித்திலம் பயந்த நத்து - முத்துகளீன்ற சங்கங்கள், வான் மடுவில் - வானமாகிய நீர் நிலையில், மீன் இனம் வளைஇய நாள்மதிபோல-விண்மீன் கூட்டங்கள் சூழ்ந்த முழு நிலாப்போல, பால் கெழு மரபின் பரந்து செல்லவும் - தன் பக்கத்தே பொருந்திய தன்மையுடன் பரவி ஏகவும், கொழும் கயல்மாதர் விழி என மிளிரவும்-கொழுமையான கெண்டை மீன்கள் மகளிருடைய கண்கள்போற் புரளவும், கருவெரிந் உடைய பருவரால் உகளவும் - கரிய முதுகினையுடைய பருத்த வரால் மீன்கள் அங்குமிங்கும் புரளவும், முற்று மஞ்சள் சிறுபுறம் கடுக்கும் இறவு கரை மருங்கில் சுரிந்து துள்ளவும் - முற்றாத பசுமஞ்சட் கிழங்கின் சிறிய முதுகினை ஒக்கும் இறாமீன் கரையருகிற் சுருண்டு துள்ளவும், சிறுவளி எடுப்பச் சிறுதிரை எழீஇ முறைமுறை உராஅய்க் கரை யினைச் சாரவும் - சிறுகாற்று எழுப்ப அதனால் மெல்லிய சிற்றலைகள் எழுந்து ஒன்றன் பின் ஒன்றாய்ப் பரந்து

சென்று கரையினைப் பொருந்தவும். செழுநீர்க் குவளையும் கழுநீர்ப்போதும் முழுநெறி ஆம்பலும் கழியவும் குழுமிக் காண்போர்ப் பிணிக்கும் மாண்பினது - செழுமையான நீர்க் குவளையென்னும் நீலப்பூவும் செங்கழுநீர் மலரும் அல்லி மொட்டும் மிகுதியும் நிறைந்து காண்பவர் உள்ளத்தைத் தன்வயப்படுத்தும் மாட்சியினை யுடையதாகும் அக்குளம் என்பது.

அன்னத்தின் தூவி மருவுதற்கு மென்மை தரு மாகலின், 'அணிமயிர்ப்பெடை' யென இங்குச் சிறப்பிக்கப்பட்டது.

'பொலிந்'தெனற்குக் 'காதலால் விளங்கி'யென உரை கொள்ளல் சிறப்பு.

'வீற்றிருத்தல்', இங்கு 'மகிழ்வுடனிருத்த' லென்னும் பொருட்டு; புறப்பொருள் வெண்பா மாலை யுரையிற் 'செம்மாந் திருத்த' லென்பர் (க, உ0).

சேவல், ஆண்; பெடை, பெண்.

நாண்மதி, பருவநாளின் மதி; ஆவது முழுநிலா. மிளிர்தல் - புரளல் (சிந்தாமணி, கரு அச). சுரிதல் சுழித்தல்.

இருமீன் முதுகு, முற்றுத மஞ்சட்கிழங்கின் முதுகு போன்றிருத்தல், "முற்று மஞ்சட் பசும்புறங் கடுப்பச் சுற்றிய பிணர சூழ்கழி யிறவின்" என்னும் நற்றிணைச் செய்யுளுள்ளுங் காண்க (சOசு).

உராய் - பரந்து சென்று, (மதுரைக்காஞ்சி, சஉரு)

"கழுநீர்ப் பிணையன் முழுநெறி பிறழ" (மணிமேகலை, ருச) எனவரும் சிலப்பதிகாரத்துக்கும் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் 'இதழொடியாது கட்டின கழுநீர்ப் பிணையலுங் குலைந் தலைய' என்று முழுநெறிக்கு இதழொடியாமைப் பொருள் கிளப்பர்.

'பிணித்தல்' தன்வயப்படுத்தல் என்னும் பொருட்டா தல், "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்" என்னுந் திருக்குற ளால் (சுசரு) அறியப்படும்.

(கூஅ - க0௩) ஆங்கு-அம்மலைச் சாரலிடத்தே, பொதியச் சாந்தம் ததைய அசைஇ - பொதிய மலையின் சந்தன மணம் நிறைய உலாவி, அரும்பு அற விரிந்த நறும்பூ அளைஇ முகையாந்தன்மை நீங்க மலர்ந்த மணமுள்ள மலர்களைத் துழாவி, விரையும் தாதும் நிறைய முகந்து - முறையே நறு மணமும் மகரந்தமும் நிரம்ப அள்ளிக்கொண்டு, தலைத்தலை வீசி நலத்தக உலாஅம் தென்றலும் என்றும் ஓவாது-இடந் தொறும் வீசி இனிமையாக அசையுந் தென்றற்காற்றும் எந்நேரமும் நீங்காது; அதா அன்று - அதுவுமன்றி;

சாந்தத்தினின்று விரையும், நறும்பூவினின்று தாதும் முகந்தென நிரல் நிரையாக் கொள்க;

'ததைய', நிறைய, "ததை இலைவாழை" (சு௭,க0) என்பது ஐங்குறுநூறு.

(க0சு - க௨௫) குன்றிக் கண்ண குயில்களெங்கும் துன்றிய மகிழ்வின் நன்று கூவும்மே - குன்றிமணியின் செந்நிறமுங் கரும் புள்ளியும்போற் சுற்றச் செந்நிறமும் நடுவிற் கருநிறமும் வாய்ந்த விழிகளை யுடையவான குயிற் பறவைகள் அச்சோலை யெங்கும் மிகுந்த களிப்பினால் இனிதாகக் கூவாநிற்கும்; ஆடு வால் சிரல்கள் நாடொறும் கூடி ஓடுமீன் அருந்தி வீடுறு - ஆடுகின்ற வாலையுடைய சிச்சிலியென்னும் ஒருவகைக் குருவிகள் நாடோறும் ஒன்று சேர்ந்து அந்நீர் நிலையில் ஓடுகின்ற சிறுமீன்களைக் கௌவி விழுங்கி என்றும் அவ்விடத்தை விட்டு நீங்கா; துகிர் கோத்த அன்ன உகிருடைச் சிறுகால் புறமரப் பொதும்பின் இறை கூரும்மே - பவளங்களை ஒன்று கோத்தாற்போன்ற நகங்களையுடைய சிறுகாலினையுடைய புறுக்கள் மரப் பொந்தின்கண் தங்காநிற்கும்; தூங்கணம் குரீஇப் பாங்கு படத் தெற்றிய அருந்தொழில் குடம்பையின் பொருந்தும் - தூக்கணங் குருவிகள் தாம் அழகுபடப் பின்னிய அரிய வேலைப்பாடுடைய கூடுகளில் அடையும், பைம் சிறைக்கிள்ளை ஒருகால் தூக்கிப் புன்சிறு கிளையில் கண் துயில் கொளுமே - பசுமையான இறக்கைகளையுடைய கிளிகள் தமது ஒருகாலைத்

தூக்கிக்கொண்டு மெல்லிய சிறு கிளைகளில் நின்று கண்கள் தூக்கங்கொள்ளும், அறுவை மடித்தன்ன பறைகெழு நாரை சிறுகால்தோறும் வரும் மீன் நோக்கித் தொகுதியாக மிகுதி யொடு வதிமே - மெல்லிய வெள்ளைத் துணியை மடித்தாற் போன்ற இறக்கைகள் பொருந்திய நாரைகள் சிறிய வாய்க் கால்கடோறும் ஓடிவருகின்ற மீன்களை எதிர்பார்த்துக் கொண்டு கூட்டமாக மனக்கிளர்ச்சியுடன் தங்கியிருக்கும், வண்டும் தேனும் வரிக்கடைப் பிரசமும் இம்மென முரன்று நன்மலர்தோறும் அளி நற மாந்திக் களிகூரும்மே - வண்டும் தேன்வண்டும் வரிவண்டும் தேனீயும் என்பன இம் மென்னும் ஒலியுண்டாக ஒலித்து நல்ல மலர்கள்தோறுஞ் சென்று முதிர்ந்த தேன் பருகி மகிழ்ச்சிமிகும், பூவாக் கண்ண தோகை விரித்து முளை இள ஞாயிற்று இளவெயில் எறிப்பப் பீடுஉறு மஞ்ஞை ஆடுறும் - இயற்கையே திறந் திருப்பதல்லது இடையே திறவாத கண்களையுடையவான தம் தோகைகளை வட்டமாய் விரித்துக் காலையிற் றோன்றும் இளங்கதிரோனது மென்மையான வெயில்ஒளி வீச அப்போழ்து பெருமை மிக்க மயிலினங்கள் விளையாடா நிற்கும். இன்னும் கூறல் வேண்டின் - இன்னும் எடுத்துச் சொல்ல வேண்டுமானால், பின்னும் - மேலும், என் சொல் அளவு அமையா - எனது சொல்வரம்பிலமையாத, மல்லல் அம்பொதும்பர்ப் பல்பெரும் சிறப்பும் கண்டிலை - அத்துணைச் செழுமையான அழகிய அம் மரச்சோலையின் பல பெருஞ்சிறப்புக்களும் நீ கண்டனையல்லை யெனவே கூறல் தகும் என்பது.

இப் பகுதியிற் சோலைவளம் மிக அழகாகக் கூறப் பட்டிருக்கின்றது.

கண்ண: குறிப்பு முற்றெச்சம்; கண்ணவான குயில்க ளெனக் கொள்க. 'துன்றுதல்', நெருங்குதல்; அஃதிங்கு 'மிகுத்த' வென்னுங் கருத்துப்பட வந்தது.

குயிற்பறவையின் கண் குன்றிமணியைப் போலிருத்தல், "குன்றிச் செங்கண் இன்றுணைப்பேடை" என்னும் பெருங் கதையினுள்ளுங் காணப்படும் (கூ, சு, கக).

'சிரல்' என்பது சிச்சிலிக்குருவி; இது "மறிந்து நீங்கு மணிச்சிரல் காணொன" (பளிக்க. உச) என மணிமேகலையின் கண்ணும் வருதல் காண்க. விடு - விடுதல்; நீங்கல்; உயிர்க் கொலை புரிதலால் இறைவனது வீட்டுலகினை எய்தா என ஒரு பொருள் தோன்றுதலுங் கண்டுகொள்க. அன்றும் ஏயும் அசை; மேல் வருவனவும் அன்ன.

புறவின் கால் பவளங் கோத்தாற்போ லிருத்தல், "கொள்பவளங் கோத்தனைய கால" என்னுஞ் சிந்தாமணியுள் ளுங் காணப்படும் (எ0).

'துகிர் கோத்த அன்ன உகிர்' என்னும் உவமை பெரிதும் உணர்ந்து இன்புறற் பாலது. 'இறைகூரல்' தங்கல் என்னும் பொருட்டு; "இறைகூரும்" (சசஉ) என ஐங்குறுநூற்றின் கண்ணும் வந்தது.

குரீஇ - குருவி, "உள்ளிறைக்குரீஇ" (நற்றிணை, சஅச) தெற்றுதல், பின்னல்; குடம்பை, பறவைக்கூடு; பிங்கலந்தை.

கிள்ளை, கிளி; கொளுமே: ளகரம் தொகுத்தல்;

பறை - இறகு, பிங்கலந்தை. வதியுமே யென்பது ஈற்றய லுகரம் மெய்யொடும் கெட்டு 'வதிமே' யென்றா யிற்று.

வண்டினங்களில் நால்வகை வண்டினங்கள் இங்குக் கூறப்பட்டன; தேன், தேன்வண்டு; வரிக்கடை - வரிவண்டு (திவாகரம்). பிரசம் - தேனீ (பிங்கலந்தை).

அளி, முதிர்ச்சி, "அளிந்த தீம்பழம்" (சிந்தாமணி, உகூஅஉ). நறு - தேன்.

மயிற்றோகையின் கண்கள் திறந்துமூடும் மக்கள் கண் போலாது இயற்கையிற் றிறந்தபடியே யிருத்தலின் பூவாக் கண்ண என்றார்.

முளை: வினைச்சொல்; அப்போழ்து என ஒருசொல் வருவிக்க. ஆடுறும் - ஆடும்.

ஈற்றிற் கண்டிலே எனவே கூறல் தகும் எனச் சில சொற்கள் எச்சமாக வருவித்துக் கொள்க. மல்லல் - செழுமை.

(கஉடு - கசஎ) அன்றி ஆங்கு - அல்லது அப்பொதும் பரின்கண், அனிச்சம் மேல் படினும் தனித்துயர் உழக்கும் தழைமலர்ச் சீறடி குழைபட நடந்து - அனிச்ச மலரின்மேற் பட்டாலும் மிக்க துன்பமடையுந் தழைந்த செந்தாமரை மலரனைய சிறிய திருவடிகள் தசை மெல்க நடந்து, பொழி லிடம் புகுந்து - சோலையுள் நுழைந்து, பூம் தட மருங்கில் - பூக்கள் நிறைந்த அக் குளத்தருகில், விழைதக நின்ற பழு தில் பாவையை - விருப்பமுண்டாகும்படி நின்ற குற்ற மில்லாத பாவை போல்வாளை, என் உளம் என்னும் தன் அமர் கிழியில் - எனது உள்ள மென்னுந் தனக்குப் பொருந்திய இரட்டுத் துணியில், வழுவின்று எழுதிய எழில் ஓவியத்தை - பிழையில்லாமல் எழுதிய அழகு சித்திரம் போல்வாளை, அமிழ்து பொதி துவர்வாய்க் கிளவி சில மிழற்றும் - அமிழ்தம் நிறைந்த தனது சிவந்த வாயிலிருந்து சொற்கள் சில பேசும், மா நிறம் கொண்ட தூ நிறக் கிளியை - பசுமை நிறம் கொண்ட தூய உருவினையுடைய கிளிபோல்வாளை, காடு உறை வாழ்க்கை தன் இனம் பிரிந்து - காட்டில் வாழ்கின்ற வாழ்க்கையையுடைய தன் கூட்டத்தை விட்டு நீங்கி, நாடு உறை வாழ்க்கை நன்கனம் மருவிய - நாட்டின்கண் வாழும் வாழ்க்கையை நல்லபடியாகப் பொருந்திய, குடம் மாண் கொங்கை மடமான் பிணையை - குடங்கள் போன்ற பெரிய கொங்கைகளையுடைய இளமான் பேடு போல்வாளை, கிளிச்சிறை என்னும் பழிப்புஅறு பசும் பொன் கரைத்து - கிளிச்சிறை என்னும் மாசற்ற ஒருவகைப் பசும்பொன்னை நீராய் உருக்கி, ஈண்டு எழுதிய தரைக் கிளர் வல்லியை - அதனால் இந் நிலவுலகில் எழுதியமைத்த நிலத்தினின்றும் எழுந்த பொன்னிறமான வல்லிக் கொடி போல்வாளை, காமக் கடும்பசி நாம் உறக் களையும் - காமம் என்னும் கொடிய பசியானது அச்சம் அடையும்படி அதனை நீக்கும், பெறுதற்கு அரிய உறுதுணை மருந்தை - அடை

வதற்கு அருமையான சிறந்த துணையாயுள்ள மருந்துபோல் வானே, காண்டல் செல்லா அருவப்பொருளென - காண்டல் இயலாத உருவமில் பொருளென்று கூறும், பூண்டோர் புகழ்உரை புரைபட்டு ஒழிய-பேர் பூண்ட பெரியோர்களது புகழ் தக்க உரையானது பழுதுபட்டொழியுமாறு, மின் என மிளிர்ந்து என் கண் எதிர் பொலிந்த - மின்னல்போல் பிறழ்ந்து ஒளிவீசி என் கண்கள்முன் விளங்கிய, கரும்பினும் இனிக்கும் என் அரும்பெறல் உயிரை - கரும்பைப் பார்க்கினும் இனிக்கின்ற என் பெறற்கரிய உயிர் போல்வானே, என் உளம் மன்னிய துன் இருள் நீங்க - எனது உள்ளத்தில் நிலைபெற்ற செறிந்த மலவிருளானது ஒழியுமாறு, முற்படக் கொளுவிய பொன்சுடர்க் கொழுந்தை - என்னெதிரிற் பொருத்திய பொன்னிறமான ஒளிக்கொழுந்து போல் வானே, புலம் கொளக் காணும் பொறியும் இலையால் - காட்சியாரக் காணும் நல்வினையும் நினக்கில்லை யென்பது.

தழைமலர்: வினைத்தொகை; சிறுமை அடி, சீறடி.

கிழி, எழுதுபடம்; "ஈசன சாந்துமெருக்கு மணிந்தோர் கிழிபிடித்து" (திருக்கோவையார், ௭௪) என்பர் மணிவாசகனார்; அஃதிங்கு அப்படமெழுதுந் துணியை உணர்த்தாநின்றது. அமர்தல் - பொருந்துதல், (புறப்பொருள் வெண்பாமாலை, ௪, ௩).

உண்மையுடைய ளாகலின், சில சொற்களே அவள் வாயினின்றும் எழுவவாயின. அன்றி முள்ளெயிறு போழ்தல் அஞ்சிச் சில சொல்லே பேசுவளென உரைத்தலுமாம். மிழற்றல், நிரம்பா மென்சொற் கூறல்; தலைவி புத்திளமையுடைய மடவரலாகலின், இங்ஙனம் 'மிழற்று' மெனப் பட்டது. உருவகமாய் வந்த கிளியினியற்கைக்கும் இச் சொற்பொருள் ஒக்கும். 'அமிழ்து பொதி வாய்' என்றமையின், அவ்வாயினின்றெழுங் கிளவிகளெல்லாம் அமிழ்தமாகு மென்பது குறிப்பாற் பெறப்படும். நிறம் இரண்டனுள் முன்னது வண்ணமும் பின்னது உருவமும் உணர்த்தும்.

'நன்கனம்' என்பதற்கு 'நன்ருக' என்று பொருளுரைப்பர் பரிபாடலுரையில் (௧௩: ௨௩).

தலைவி பொற்கொடிபோல் உள்ளாள் என்பது கருத்து. கிளர்தல் - எழுதல் (திருமுருகு. அஉ).

நாம் - அச்சம் (தொல்காப்பியம், உரி, கூஎ); பசியே அச்சமுறும்படி அதனைக் களையும் மருந்தென்க. கடுமை, இங்குக் கொடுமை மேற்று; "கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்றால்" (கூ) என்னுங் கலித்தொகையிற்போல. காமம் விளைப்பவளே காமத்தை நீக்கும் மருந்தாதலும் வேண்டு மாகலின், 'உறுதுணை மருந்து' எனப்பட்டாள். இக் கருத்துட் கொண்டே,

> "இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
> நோய்நோக்கொன் றந்நோய் மருந்து"

என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனாரும் (திருக்குறள் குறிப்பறிதல், க) கூறுதல் இங்கு நினைவுகூரற்பாலது,

உயிரென உருவகப் படுத்தினமையின், 'காண்டல் செல்லா அருவப்பொரு'ளென அதன் இயல்புரைத்துப் பின் வியந்து மொழியப்பட்ட தென்க.

உற்றுநோக்குங்காற் கணவனும் மனைவியும் ஒருவருக் கொருவர் அவரவருயிரைச் செறிந்த பொல்லாப் பழமல விருளை நீக்கிக்கொள்ளும் இயற்கையுறவினராவர்; இதனு னன்றே திருக்குறள் வேதத்தினும் மனையாள் "வாழ்க்கைத் துணை" (அதி, கூ) எனப்பட்டதூஉ மென்பது. இதனை விளக்குதற் பொருட்டே இலக்கியங்களிலெல்லாம் 'மனைக்கு விளக்கு மடவார்' என்றற் றொடக்கத்துரைகளால் வாழ்க் கைத் துணையாவார் மலவிருள் நீக்கும் ஒளிவிளக்காக வைத் துப் பாராட்டப் படுகின்றனர். இது முன்னுங் காட்டப் பட்டுள்ளது (இந்நூல், ச: கஅ - உரை).

பாவை, ஓவியம் முதலியன உருவகங்கள்.

(கசஅ - கசூஉ) ஆவண ஒலியும் அரும் கடல் ஒலியும் ஒன்று தலைமயங்கி என்றும் ஒவா ஒற்றிமாநகரில் - கடைத் தெருவின் விற்பனை ஒலியும் அளத்தற்கரிய கடலொலியும் ஒன்று கலந்து என்றும் நீங்காமலிரா நின்ற திருவொற்றிமா

நகரின்கண், தன் தகப்பொலிந்த பசியதோர் மஞ்ஞைமிசை அமர்செவ்வேள் - தனது அழகிய இளமைச் செவ்விக்குத் தகும்படி விளங்கிய பசுமைநிற முள்ளதொரு மயிலின் மேல் எழுந்தருளாநின்ற செம்மை நிறம் பொருந்திய முருகன், தேவரும் மயங்கும் மூவா மாயம் பலமுறை இயற்றிய தலைமை தீர்சூரின் பேர் உரம் வசிந்த கூர்வடி வேலன் - தேவர்களும் மயங்கும்படியான அழியாத மாயச் செயல்களைப் பலதடவை செய்த தலைமை நீங்குந் தகைய னை சூரனது அகன்ற மார்பைப் பிளந்த கூர்மையுள்ள செவ்விய வேற்படையை யுடையவன், நோனு உள்ளத்து நான்முகன் தெளியத் தலையில் குட்டிய நலன்உறு குமரன்- 'ஓம்' என்னும் ஒருமொழியின் உண்மைப்பொருள் காணுந் தவம் வாயாத உள்ளத்தையுடைய நான்முகன் அதன் பொருள் தெளியும்படி அவன் தலையிற் குட்டிய அழகு பொருந்திய இளம் பருவமுள்ள முருகப்பெருமான், விண் ணவர்க்கு அரியன் - தேவர்கட்குங் கிடைத்தற் கருமையான வன், எம்மனோர்க்கு எளியன் - ஆனல் அடியேன் போன்ற எளியோர்க்குக் கிடைத்தற் கெளிமையானவன், பிறைமுடி புதல்வன் - பிறை தங்கிய சடைமுடியையுடைய சிவபெருமா னுக்குப் புதல்வன், மறைமுடி முதல்வன் - நான்மறைகளின் முடிவிடத்துக்குத் தலைவன், உமைதரு சிறுவன் - உமைப் பிராட்டியார் ஈன்றெடுத்த புதல்வன், எமை அளி உறுவன் - எளியேமை அருள் கூர்ந்து காக்கும் மிக்கோன், பன்னிரு கையன் - பன்னிரண்டு திருக்கைகளையுடையவன், என் உயிர்க்கு ஐயன் - எனது ஆருயிர்க்கு உயிராயுள்ள தலைவன் என்னும் முருகப்பெருமானுடைய, திருவடி நினையா அறி விலர்போல - திருவடிகளை எண்ணும் பேறுபெருத அறி வில்லா மக்களைப்போல், என் எதிர்தோன்றிப் பன்முறை கழறினை - என்முன் வந்து பலதரம் இடித்துரைத்தனை;

தலைமைதீர், தலைமை தீர்ந்த; முருகனைப் பகையாமுன் னிருந்த தலைமை அவனைப் பகைத்தபின் தீர்ந்தமையின் தலைமைதீர் சூர் என்ருர். வசிந்த, பிளந்த; "வசித்ததைக் கண்டமாக" (ரு: ௬அ) என்பது பரிபாடல்.

'நோனு உள்ள' மெனப்பட்டது, ஓங்காரத்தின் மெய்ப் பொருளை உணருந் தவமியற்றப்பெறுத உள்ளத்தையுடைய நான்முகனென்க; நோனுமை-தவம்புரியாமை; நோன்றல் என்னுஞ் சொல்லின் எதிர்மறை. நான்முகன் ஓங்காரத்தின் கருத்துணராமைக்காக முருகப்பெருமான் அவன் தலையிற் குட்டிய வரலாறு,

"எட்டொ ணுதஅக்குடிலையிற் பயனினைத் தென்றே
கட்டு ரைத்திலன் மயங்கலும் இதன்பொருள் கருதாய்
சிட்டி செய்வதுஇத் தன்மைய தோஎனுச் செவ்வேள்
குட்டி னன்அயன் நான்குமா முடிகளுங் குலுங்க"

என்னுங் கந்தபுராணச் செய்யுளால் (அயனைச் சிறைபுரி படலம், கக) அறியப்படும்.

பிறை முடி: ஆகுபெயர்; மறைமுடி, மறைகளின் முடிந்த கருத்து.

உறுவன்-மிக்கோன் (சிலப்பதிகாரம், க, ருஈ).

இறைவன் றிருவடி நினையா அறிவிலார் உண்மை காணும் நீரரல்லராகலின், அவர்போல் நீயும் எங்கள் இயற்கைக் காதலுண்மையையும் அக் காதற்பேற்றை நல்கிய என் காதற்செல்வியின் அருமை பெருமையையும் உணராது கழறுகின்றனையெனத் தலைவன் தன் பாங்கனை நோக்கிக் கூறுங்கருத்து விளங்க இங்குத் 'திருவடி நினையா வறிவிலர் போல' வென்றருளிச்செய்தார்.

கழறுதல், இடித்து உறுதியுரைத்தல்; "அன்பில கடிய கழறி" (கசு: அ) என்பது ஐங்குறுநூறு.

(கக௫ங-ககூஎ) ஈங்கு இது விடுத்து-இங்கு நீ இங்ஙனங் கழறலை ஒழித்து, ஆங்குச்சென்று-அம்மரப் பொதும்பரின் குளத்தருகிற் சென்று, துடிஇடை ஒருகை ஊன்றி வடிவிழி திசைமுகம் பரப்பி நசைபடப் பார்க்கும் இரும்கண் மான்பிணை காணில்-உடுக்கைபோன்ற தன் இடுப்பின்கண் தனது ஒருகையை வைத்துக்கொண்டு வடுவகிர்போலுந் தன் கண்களை நாற்புறங்களிலும் போக்கிக் கண்டார்க்கு

விருப்பமுண்டாகும்படி பார்க்கும் பெரிய பார்வையையுடைய மான்பேடுபோலும் என் தலைவியைப் பார்த்தால், நெருங்கி நின்று இங்கு உரையலை இனி - இத்துணை அணுகிநின்று இங்ஙனம் இனிமேல் உரைப்பாயல்லையென்பது.

வடி-மாவடுவின் பிளவு, "வடிக்கண் இவை" என்னுந் திருக்கோவையாருரையை நோக்குக.

நசை, விருப்பம்; "நசைதர வந்தோர் நசைபிறக் கொழிய" (புறநானூறு, கரு) என்புழிப்போல.

'இருங்கண்' என்புழி 'இருமை' பெருமையெனவும், 'கண்' பார்வையெனவும் பொருள்படும். நெருக்கம், மன நெருக்கம்.

நண்பா (கரு) பன்முறை கழறினை (கசுஉ) மான்பிணை காணில் (கககூ) நெருங்கி நின்றிங்கு உரையலை இனி (கசுஎ) என முடிக்க. (உரு)

## உசு. பிரிவாற்றாத தலைவி தோழியொடு கூறல்

இனி யார் எனக்கு இங்கு இனியார் இயைந்தார்-இனி மேல் யார் எனக்கு இங்கு இனியராய் இணங்கியுள்ளவர், முனியார் முனிந்து மொழியார்-நம்மவர் சினவார், சினந் தோன்று பேசார்; பனிமொழியாய் - குளிர்ந்த இன்சொல் உடைய உயிர்த்தோழீ, புள் ஒன்று இவர்ந்து புகழ் ஒற்றித் தம் நகர்க்கு - மயிலென்னும் பறவை ஒன்றன்மீது மேற் கொண்டு புகழ்மிக்க திருவொற்றியூரெனும் தம் திருநகரத் துக்கு, நள் இருள்கண் சென்றார் நமர் - செறிந்த இருளில் நங் காதலர் சென்றார் என்பது.

ஒருகாலத்திலும் முனிதலும் முனிந்து பேசுதலு மில்லா அத்துணை அன்பினரான நமர், புள்ளொன் றிவர்ந்து தம் நகர்க்குச் சென்றார்; இனி யாரெனக்கு இங்கு இனியராய் இயைந்தார் இருக்கின்றனர் என்பது கருத்து.

இயைந்தார்: வினையாலணையும் பெயர்; காதலராய் இயைந்தவர் என்னும் பொருட்டு. இவர்தல்-மேற்கொள்ளல்,

"இவர்தந்தென் மேனிமே லூரும்பசப்பு" என்பதற்கும் பரிமேலழகியா ருரைத்தவுரைகாண்க (திருக்குறள், ௧௧அஉ). நள் இருள், நடு இரா. (உ௬)

## உஎ. நெஞ்சறி வுறுத்தல்

நமராய் இருந்து பின் ஏதிலராவர்-மக்களிற் சிலர் சில காலம் நமக்குச் சுற்றத்தாராயிருந்து பின் அயலவராய் விடுவர், நயமிலரும் தமராவர்-அன்பில்லாத அயலவரும் ஒருகால் நமக்கு வேண்டியோராவர், என்னில்-என்றால், தமர் பிறர் என்று தகவு சொல்லி அமராடி நிற்றல் வறிது கண்டாய்-உலகத்தில் நம்மவரென்றும் அயலவரென்றும் பெருமை பேசிப் போராடி நிற்றல் வீணென்றறிவாய், அலை ஆழி ஒற்றிக் குமரா என்று ஓதி குடந்தம் கொண்டு ஏத்தக் குறிக்கொள் நெஞ்சே - ஆதலால் அலைமிக்க கடலை அணித்தாகவுடைய திருவொற்றி முருகா என்று சொல்லிக் கைகூப்பி மெய்வளைத்து வழுத்தத் துணிவு கொள்வாய் நெஞ்சமே என்பது.

'நயம்', ஈரம், "நண்பாற்றாராகிய நயமில செய்வார்க்கும்" (திருக்குறள், ௯௯அ). தகவு - பெருமை, "தகவே யுடையான் றனைச்சார்" என்னுந் திருவாசக மாமறையில் (யாத்திரைப்பத்து, உ) இப்பொருட்டாதல் காண்க.

'குடந்த' மென்பது ஒருவகை அஞ்சலி; அதாவது 'கைகூப்பி மெய்வளைத்து வணங்கல்' "குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி" எனத் திருமுருகாற்றுப்படையிலும் (உ௨௯) இது வரும்; "குடந்தங் கைகூப்பி மெய்கோட்டிநிற்றல்" என்றார் திவாகரத்திலும்.

குறிக்கொளல், மனத்துள் வைத்துச் செயல் முடிக்குந் துணிவு கொள்ளுதல்; "குறிக்கோட் டகையது கொள்கெனத் தந்தேன்" என்பது சிலப்பதிகாரம், ௩௦, ௬௫. (உஎ)

## உ அ. புலவராற்றுப் படை

அஃதாவது, பரிசுபெற்றுத் திரும்பும் புலவன் ஒருவன் அது பெறுங் கருத்துடன் எதிர்வரும் புலவனொருவனை வழியிற் கண்டு தனக்குப் பரிசளித்த அரசனது பெருமையும் அவன்பால் அது பெற வேண்டும் வகைமையும் பிறவுந் தெளிய உணர்த்தி, உணர்த்திய அந் நெறியே அவனை உய்ப்பதாகும். எனவே 'ஆற்றுப்படை' யென்பது எதிர்ப் பட்டாரைத் தாம் பரிசு பெற்ற வாற்றிற் படுப்பிப்பது எனப் பொருள் தருமென்க. இவ்வியல்பு,

> "ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
> பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
> சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தாற் (புறத், ௩௬) பெறப் படும்.

(க-கக) நெஞ்சு நெக்கு உடைந்து - நெஞ்சம் நெகிழ்ந்து தளர்ந்து, பஞ்சு கண் அடையா - கண் பஞ்சடைந்து, உடும்பு உரித்தன்ன கடும் பசி மருங்குல் பழுப்புடை தோன்றிச் செழிப்பின்றி வைக - உடும்பைத் தோலுரித்தால் ஒப்பக் கொடிய பசியினையுடைய வயிற்றின் பக்கத்துள்ள விலா எலும்புகள் தசையில்லாமையாற் பக்கங்களிற் றோன்றிச் செழுமையில்லாமலிருக்க, வறுமை உழந்த உறுமனைக் கிழத்தியொடு - அவ்வாறெல்லாம் வறுமையில் வருந்திக் கிடக்கும் அன்பின் மிக்க மனைக்கிழத்தியுடன், நாளும் நாளும் வாளாது கலாய்த்து - நாடோறுங் காரணமின்றியே சண்டையிட்டு, நோனாப் பசியின் ஆறுது அழூஉம் புன் தலைக் குழவி தன் திறம் நோக்கி - பொறுத்தற்கரிய பசியினால் இடைவிடாது அழுகின்ற அழுக்குற்ற தலையினையுடைய தம் குழந்தைகளின் நிலையைக் கண்டு, கனவு காண்பொழுதும் நனவு எனத் தோன்றும் அருந்துயர் என்றும் பெரும் துயர் உறுப்ப - அவற்றை யெல்லாம் இடையறாது எண்ணுதலாற் கனவுகாணுங் காலங்களிலும் நனவுபோலவே தோன்றும்

உன்னுதற்கும் அரிய துயரங்கள் எந்நாளும் மிக்க வருத்தத்தை மிகுத்திடா நிற்ப, மிடிகெழு வாழ்க்கையில் குடியாயிருந்து - அங்ஙனம் வறுமை பொருந்திய ஏழைமை வாழ்க்கையிலேயே குடியிருப்பாயிருந்து, மழுங்கிய உள்ளத்து ஒடுங்கிய புலவோய் - கிளர்ச்சியவிந்த உள்ளத்தினையுடைமையாற் செயலொடுங்கிய புலவோய்! என்பது,

'அடையா' செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; "நிலங்கிளையா நாணிநின்றோள்" (அகநானூறு, கசு) என்புழிப்போல.

'உடும்புரித் தன்ன மருங்குல்' எனப்பட்டது. பசியால் வயிறு முதுகொட்டி விலா எலும்பெழுந்து நிற்றலின். பழு - விலா எலும்பு, "பொருவில் யானையின் பழுப்போற் பொங்கு காய்க்குலை யவரை" என்றார் சிந்தாமணியிலும் (கருசுக). "உடும்புரித் தன்ன என்பெழு மருங்கிற், கடும்பின் கடும்பசி" எனப் புறநானூற்றினும் (சுஅ) போந்தமை நோக்குக.

உறுமனைக் கிழத்தி, அன்பின் மிக்க நன்மனைக் கிழத்தி; வறுமையின் கொடுமையால் இல்லத்தில் அடிக்கடி காரணமின்றியே சண்டைகள் உண்டாதல் இயல்பாதலால் 'நாளும் நாளும் வாளாது கலாய்த்து' எனப்பட்டது; கலாய்த்தல் - சண்டையிடுதல், சிந்தாமணி, (ககருo).

வறுமையில் உழலுஞ் செழுமையில்லாக் குழந்தைகட்குத் தலை சடைத்து அழுக்கேறிக், காண அருவருப்பா யிருக்குமாதலின் அவை 'புன்றலைக் குழவிகள்' எனக் குறிக்கப்பட்டன.

திறம் - நிலைமை; மிடிமை- தீரா வறுமை.

(கஉ - கரு) இயற்றமிழ் வரம்பு திறப்பட ஆய்ந்து- இயற்றமிழ் நூன் முடிவைத் திறம்பட ஆராய்ந்து, புலம்கொள நிரம்பிய நலம்கிளர் அறிவோய் - உள்ளத்தின் இடம் முழுதுங் கொள்ளுமாறு நிறைந்த நன்மைமிக்க அறிவுடையோய்;

'இயற்றமிழ்' என்பது, முத்தமிழ்களுள் ஒன்று; ஏனைய 'இசைத்தமிழ்' 'நாடகத்தமிழ்' என்க. இயற்றமிழாவது

திருத்திய வழக்காய் நாம் பேசுவதும் எழுவதுமான செந்தமிழாகும். வரம்பென்றது, இங்கு நூல் வரம்பு.

(௧௪-௧௫) வழு ஒன்று இல்லா விழுமிய ஒழுக்கம் - பிழைபாடு சிறிதுமில்லாத சிறந்த ஒழுக்கத்தை, உயிரினும் ஓம்பும் செயிர் அறு பெரியோய் - தன் ஆருயிரினும் பெரிதாக மதித்துக் காக்குங் குற்றமற்ற பெருமை யுடையோய்;

''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்று பொய்யா மொழியுங் கட்டுரையா நிற்கும். 'ஒன்று' இங்குச் சிறிதென்னும் பொருட்டு; ''மாயைக்கு உணர்வொன்று மில்லை யென்றே வைத்திடும்'' (சிவஞான சித்தியார், ௧: ௧௭) என்புழிப்போல. செயிர் - குற்றம்.

(௧௬) கொழுந்தமிழ் போலக் குளிர்மாண் குணத்தோய் - செழுந் தமிழ் மொழியைப்போற் குளிர்ச்சியும் மாட்சியும் மிக்க இயல்பினோய்;

சுவைநிரம்பிய மென் சொற்களாலும் ஆழ்ந்தகன்ற சிறந்த கருத்துக்களாலும் நமதரிய செந்தமிழ் மொழி தன்னை மேவுவார்க்குக் குளிர்ச்சியும் மாட்சியுமா யிருத்தல்போற், புலவருந் தம் இன்சொற்களாலும் நல்லொழுக்கங்களாலுந் தம்மை நச்சுவார்க்குத் தண்ணென்னு மாண்புடையராய்க் காணப்படுவரென்க. தமிழுக்கு இத்தன்மையும் மாட்சியுமிருத்தல், ''உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையோ'' என மாணிக்கவாசகப் பெருமான் அருளிச்செய்த திருக்கோவையார் திருமொழியானும் தெளியப்படும்.

(௧௭-௧௮) உழுந்துருள் அளவையிற் செழுந்தமிழ்ப் பாக்கள் நூறுநூறு இயற்றுங் கூறுபடு மதியோய்-உழுந்து உருளுகின்ற அவ்வளவு விரைந்த நேரத்திற் செழுந்தமிழ்ப் பாட்டுகள் நூறுநூறாகச் செய்யும் பகுத்தறியும் மதிநுட்பமுடையோய்;

அளவை, இங்குக் காலவெல்லை. கூறுபடு மதியாவது நல்லதன் நலனுந் தீயதன் தீதும் பகுத்துணரும் அறிவு.

(கக-உ0) ஒளிச்செலவு அதனினும் வளிச்செலவு அதனினும் - ஒளியோட்டத்தின் விரைவைப் பார்க்கினும் காற்ரோட்டத்தின் விரைவைப் பார்க்கினும் மிகுவிரைவாக, நெறிப்படக் கிளக்கும் மிறைக்கவி வல்லோய் - ஒழுங்குபட இசைக்குஞ் சித்திரக்கவி வல்ல புலவோய்;

ஒளிச்செலவென்பது ஞாயிறு திங்கள் தீ முதலியவற்றினின்று புறம்போதரும் ஒளியோட்டங்கள். 'செலவு,' செல்கை; இங்கு விரைவுநோக்கி ஓட்டமெனக்கொள்க. "வெருவருஞ் செலவின் வெகுளி வேழம்" (பொருநராற்றுப் படை, கஎஉ).

(உக-உஉ) அளவைநூல் மரபில் பிறழாது - தருக்கநூல் முறையில் தவருது, யாண்டும் கொளஉரை நிகழ்த்தும் வளம் உறும் உணர்வோய் - எங்குங் கேட்போர் உளங்கொள உரைவிரிக்கும் வளமுற்ற உணர்வுடையோய்;

அளவைநூல், தருக்கநூல்; வளம், ஆராய்ந்துகண்ட நூற்பொருள் வளம்.

(உங-உச) பொருளியல் அறிந்து - எடுத்துக்கொண்ட விரிவுரைப் பொருளின் வகைமை தெரிந்து, மருள் அறப் புனைந்து - மயக்கமற அழகுபடுத்துக் கூறி, கேட்போர் பிணிக்கும் காட்சிசால் உரவோய் - கேட்பவர்கள் உள்ளத்தைத் தன் வயப்படுத்தும் மெய்யுணர்வு நிரம்பிய அறிவு வலியுடையோய்;

'புனைதல்' சொற்களையுங் கருத்துக்களையும் இடம் நோக்கிச் சுருக்கியும் பெருக்கியும் உவமித்தும் உருவகித்தும் மெல்லாம் அழகுபடுத்திக் கேட்பார்க்கு இன்பம் விழைவு வேட்கை முதலான மெய்ப்பாடு உண்டாகச் சொல்லுதல்; இங்ஙனம் அழகுபடுத்துச் சொல்லப்பட்டனவே பண்டைக் காலத்தில் 'இலக்கியம்' எனவும், 'நூல் நயம்' எனவுங் கூறப்பட்டு வந்தன. "நவிறொறும் நூல்நயம் போலும்" எனத் திருவள்ளுவனார் இதனைச் சிறந்தெடுத்துப் பாராட்டுவர். ஆனல், இடைக்காலத்தோ அவ்வழகுபடுத்தும் உரை 'கற்பனை'யெனக் கூறப்பட்டுப், பிற்காலத்தே அதுவும் நிலை

மாறி 'இயற்கைக்கு மாருகப் பொய்யுரை புனைதல்' என்னும் இழிவுப்பொருளில் வந்து வழங்கிப் பெருமை குன்றுவ தாயிற்று.

(உ௫-உஅ) பண்டைப் பிறவியில் தண்டாது ஆற்றும் பெரும் தவம் உடையை மன்னே-பழம் பிறவிகளில் தவருமலியற்றும் பெருமையான தவத்தினை நிரம்பவும் உடையை; பொருந்தி இன்று ஈங்கு எனைத் தலைப்பட்டனையே-பொருந்துதல்வர இன்று இங்குவந்து என்னை எதிர்ப்பட்டனையே, ஓங்கி ஊழிசெல்லினும் நீடு வாழ்மதி - மேம்படச் சிறந்து ஊழி கழியினும் நீ நெடுங்காலம் வாழ்வாயாக;

தண்டல்-தவறுதல் (பிங்கலந்தை); அதன் எதிர்மறை 'தண்டாமை'; இவை 'தள்' என்னும் முதனிலையிற் பிறந்தன; "கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை" என்ருர் திருவள்ளுவரும்.

மன், மிகுதிக்கண் வந்தது. தலைப்படல்-எதிர்ப்படல். பொருந்துதல் வரத் தலைப்பட்டமையாவது வறுமையுழந்து அது தீர்ந்த ஒரு புலவனை, வறுமையுழக்கும் மற்ருெரு புலவன் அது தீர்தற்பான்மையில் வந்து எதிர்ப்பட்டமை என்க.

(உகூ-௩௪) கீழ்த்திசை எழீஇ மேற்றிசைப் படரும் தீத்தெறு ஞாயிறு வடதிசைப் புணர்ந்து தென்திசை நோக்கித் திசைதடு மாறினும்-கிழக்குப் பக்கத்தில் தோன்றி மேற்குப் பக்கத்திற் செல்லும் நெருப்பெனச் சுடும் ஞாயிறு வடக்குப் பக்கஞ் சேர்ந்து தெற்குப் பக்கம் நோக்கிச் சென்றபடியாய் இங்ஙனந் திசை தடுமாறினுலும், வானக் கடலின் மீனென வயங்கும் உடுநிரை உதிர்ந்து கொடுமையாயினும்-வானமென்னுங் கடலின்கண் மீன்களென விளங்கும் உடுக்குலங்கள் உதிர்ந்து விழுதலால் உலகத்திற் கொடிய நிகழ்ச்சிகளுண்டாயினும், உலவா வாழ்க்கையின் நிலைமதி சிறந்தே-கெடாத நல்வாழ்க்கையிற் சிறந்து நிலைப்பாயாக;

படரல்- செல்லல்; உடு - விண்மீன்; நிரை, கூட்டமென்னும் பொருட்டு; உலகின்கட் கேடுகள் விளையினும்

நின் நல்வாழ்வு கெடாது இனிதூழி வாழ்ந்து இன்புறுக வென்பது இப்பகுதியின் கருத்து.

(கூரு-கூசு) வறுமை களைந்து சிறுமை நீங்கி-வறுமையை நீக்கி எளிமை ஒழிந்து, நன்னிலை பலவும் இன்னே பெறுதி-நல்ல நிலைமைகளெல்லாம் இப்பொழுதே பெறுவாயாக;

நிலை, இன்பங்கள் பலவுந் துய்த்தற்கேற்ற நிலைமை. 'இன்னே' இப்பொழுதே எனப் பொருள் படுதல், "உற்ற தின்னே இடையூறு" என்னுஞ் சிந்தாமணியுள்ளுங் (உஉசு) காண்க.

(கூஎ) வரம்பறும் இன்பம் நிரம்பக் கோடி-எல்லையற்ற இன்பம் நிரம்பக் கொள்வாயாக;

எல்லையற்ற இன்பம், அளவற்ற இன்பம்; 'கோடி' என் பதற்குக் 'கொள்' பகுதி; அது முதல் நீண்டு தகரம் விரித் தலும் வியங்கோள் ஈறும் பெற்றுக் 'கோடி' யென்ருயிற்று. கோடி, கொள்ளுதி; 'வாழ்மதி, நிலைமதி, பெறுதி கோடி' யென்பன வாழ்த்துதற் பொருண்மைக்கண் வந்த வியங் கோள் வினைமுற்றுக்கள்.

(கூஅ-கூகூ) நின் உயிர்க்கு உறுதிநாடி-நினது உயிர்க்கு நன்மை பயத்தற்குரியவைகளை ஆராய்ந்தறிந்து, துன்னி நின்று-நின்னை அணுகி நின்று, நிரை நிரை கூறும் என் உரை பிழையலை - முறை முறையாகக் கட்டுரைத்துச் சொல்லும் என் சொற்களைத் தவறவிடாதிருப்பாயாக!

நாடி - ஆராய்ந்து; "நாடாது நட்டலிற் கேடில்லை"- திருக்குறள்.

(சO-சஉ) இன்னும் கேட்டல் வேண்டின்-இன்னும் நான் எடுத்துரைத்தலை நீ கேட்டல் விரும்பினுயானல், முன்னும் என் சொல் அளவு அமைந்து நலம் பல எய்தினர் பல்லோர் பல்லோர் பண்டும் உண்டு-நான் நினைத்துக் கூறும் என் மொழிகளின் எல்லையில் நின்று நன்மைகள் பலவும் அடைந் தவர் பலர் பலர் முன்னும் உண்டு;

(௪௩) இனியொன்று கூறுவென் கேண்மதி - ஆதலால் இனி ஒன்று சொல்லுவேன் அதனைக் கேட்பாயாக! வென்பது.

'கூறுவென்' என்பதில் 'என்' ஈறு தன்மையொருமை வினைமுற்று (தொல்காப்பியம், வினையியல், ௬); "கொன் றொன்று கிளக்குவென் கேண்மதி பெரும" என முன்னும் வந்தமை நினைவுகூர்க.

(௪௪-௪௫) பனிகெழு முல்லைஅம் கொடிக்கு - குளிர்ச்சி பொருந்திய முல்லையின்கொடிக்கு, மல்லல் அம் செழும்தேர்- செல்வத்திற் சிறந்த அழகிய தேரை, அருள்வர - தனக்கு இரக்கமுண்டாக, ஈத்த-அதற்குக் கொழுகொம்பாகும்படி நிறுத்தி உதவிய, பெரியனே இலனே-ஈகையிற் பெரியனாகிய பாரியோ இஞ்ஞான்று வாழ்ந்திலனே!

வள்ளலிற் சிறந்த பாரியின் இவ்வரிய பெரிய ஈகைச் செயல்,

*"—சுரும்புண*
*நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்*
*சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய*
*பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்*
*பறம்பிற் கோமான் பாரியும்"*

எனச் சிறுபாணாற்றுப்படையின்கட் (அஎ-௯௧) பெரிது பாராட்டப் படுதலும் இங்கு நினைவுகூரற்பாலது.

'அம்' ஈரிடங்களினுஞ் சாரியை; ஈற்றேகாரம் இரக்கப் பொருளது; மேல்வருவனவும் அன்ன.

(௪௬-௪௭) விழியாக் கண்ண செழுமயிர்த் தோகைக்கு- இமையாக் கண்களுள்ள நிறத்தாற் சிறந்த மயிர்கள் வாய்ந்த மயிலுக்கு, நறும் படாம் வீசிய-குளிரணுகாமைப் பொருட்டுத் தனது இனிய போர்வையை அதன்மேல் எறிந்த, உறுவனும் இலனே-தக்கோனாகிய பேகனும் இஞ் ஞான்று வாழ்ந்திலனே!

இவ்வள்ளலின் அருஞ்செயலும்,

"வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
வருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்க னாடன் பேகனும்"

எனச் சிறுபாணாற்றுப்படையின்கண் (அச - அஎ) வரும். தோகை: ஆகுபெயர்.

(சஅ-ருo) பவனமா உலகில் நவைஅறப் பெற்ற அமிழ்து பொதி நெல்லி - பாதாள உலகத்தினின்று பழுதறப்பெற்ற அமிழ்தம் நிறைந்த கருநெல்லிக் கனியை, ஔவைக்கு ஈத்த ஔவையென்னும் நம் செந்தமிழ்ப் பிராட்டிக்கு அவர் நீடு வாழுமாறு உதவிய, சிதையாப்பேற்றின் அதிகனும் இலனே-அழியாப் புகழாகிய பேற்றினை எய்திய அதிக மானும் இன்று வாழ்ந்திலனே!

அதியர் கோமானின் இவ்வருஞ்செயலும்,

"—மால்வரைக்
கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி
யமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீத்த
வுரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவே
லரவக்கடற் றானை யதிகனும்"

என்று (சிறுபாண், கக-க0ங) கூறப்படுதல் காண்க.

'பவனமாவுலகு', நாகருலகு; சாக்காடு கெடுத்தமையின், அஃது 'அமிழ்துபொதி நெல்லி' யெனக் கிளந்தோதப் பட்டது. இக் கருநெல்லிமரம் ஒரு பெரிய மலைமுழைஞ்சின் அடியிலே நின்றமை, "தொன்னிலைப் பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட, சிறியிலை நெல்லித் தீங்கனி" என்னும் ஔவையார் பாடலால் (புறநானூறு, கக) அறியப்படுதலின் அதன்கனி பாதாளவுலகினின்று பெறப்பட்டதென்றார். பவனம் - பாதாளம்.

(ருக-ருங) குறுநடைப் புறவின் தபுதி கண்டு அஞ்சி - தன்னை அடைக்கலமாய்ப்புக்க சிறிய நடையினையுடைய ஒரு

புருவின் அழிவினைக்கண்டு அதற்குஅஞ்சி. குருதி கெழு பைம்தடி முறைமுறை தடிந்து-செங்குருதி தோய்ந்த தனது உடம்பின் பச்சைத் தசையை அதற்கு ஈடாகும்படி சிறிது சிறிதாக அறுத்துவைத்து, கன்னம் புக்கு ஏறிய மன்னனும் இலனே - அங்ஙனம் வைத்தும் அஃது ஈடாகாமையின் முடிவில் தானே நிறைத்தட்டில் தாவியேறி அம் முகத்தால் ஈடுசெய்து அதனைப் பிழைப்பித்த ஒரு சோழவேந்தனும் இன்று வாழ்ந்திலனே!

இங்ஙனம் உயிர்கொடுத்துப் புறவுகாத்த பெருங் கொடைத்திறம்,

"தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
றபுதி யஞ்சிச் சீரை புக்க"

எனப் புறநானூற்றின்கண்ணும் (சக) சிறப்பிக்கப்படுகின்றது. தபுதி-அழிவு. தடி-தசை; கன்னம்-நிறைத்தட்டு.

(இச-இசு) அரும் தமிழ்ப் புலவோர் பெரும் திறம் உணர்ந்து - அருமைவாய்ந்த தமிழறிஞர்களின் பெரிய மேன்மையை உணர்ந்து பார்த்து, பொன்னும் மணியும் தண்ணடை நிலனும் வரையாது வழங்கிய அரசரும் இலரே-அவர்கட்குப் பரிசாகப் பொன்னும் மணியும் மருதநிலத் தூர்களும் வயல்களும் ஏராளமாய் உதவிய புரவலர்களும் இஞ்ஞான்று வாழ்ந்திலரே!

திறம்-மேன்மை, "சோதி திறம்பாடி," திருவாசகம், எ, இஎ.

தண்ணடை-மருதநிலத்தூர் (திவாகரம்). 'வரையாது வழங்கிய' வென்றது, அளவுபாராமல் ஈந்தவென்னும் பொருட்டு. இங்ஙனம் வரையாது வழங்கிய அரசர்கள் பண்டிருந்தன ரென்னும் உண்மைக்குச் சான்று வருமாறு:

'பதிற்றுப்பத்து' என்னும் நூலில் ஏழாம் பத்துப் பாடிய கபிலர் என்னும் புலவர் பெருமானுக்குச் சேரமான் செல்வக் கடுங்கோவாழியாதன் என்னும் வள்ளல் நூறு யிரங் காணமும் ஒரு குன்றேறிக் கண்ட நாடும் பரிசில் கொடுத்தான்.

ஆசிரியர் உருத்திரங் கண்ணனுர் என்னும் மாப்பெரும் புலவர்க்கு அவர் இசைத்த 'பட்டினப்பாலை' யென்னும் நூலின் செழுந்தமிழ்த் திறம் உணர்ந்து சோழன் கரிகாற் பெருவளத்தான் பதினறு நூருயிரம் பொன் பரிசு அளித்தான்.

'பரணர்' என்னும் புலவர் பிரான் 'பதிற்றுப்பத்'தில் ஐந்தாம் பத்துப் பாடிக், கடல்பிறக்கோட்டிய செங்குட்டு வனிடம் உம்பற்காட்டு வாரியையும் அவன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசில் பெற்ருர்.

இன்னேரன்ன பழைய பரிசில் வரலாறுகள் கணக் கற்றன உள; அவையெல்லாம் இங்கு விரிப்பிற் பெருகும்.

*"முந்நா றூர்த்தே தண்பறம்பு நன்னடு*
*முந்நா றூரும் பரிசிலர் பெற்றனர்"*

எனவரும் (புறநானூறு, ககO) பழந்தமிழிலக்கியத் திருமொழி களும் இங்கு நினைவுகூரற்பாலன.

(இஎ - இக) மெய்யொடு மிடையாப் பொய்பொருள் ஈட்டி- மெய் வழிகளொடு கலவாத அழியும் பொருள்களைத் தொகுத்து, தாம் அறி அளவையில் பிறர்க்கு ஒன்று ஈயாது - தாமறிந்தவரையில் தக்கார்க்கு ஒன்று கொடாமல், தாமே நுகரும் தீயரோ உளர் - தாமே நுகர்கின்ற தீய இயல் பினரோ மிகப்பலராய் இருக்கின்றனர். 'தீயரோ' என்பதில் ஓகாரம் மிகுதிப்பொருள்.

மிடையா - கலவாத; மிடைதல் - கலத்தல், "பொய்யோ டிடை மிடைந்த சொல்" (நாலடியார், அO) என்புழிப்போல.

'தம் மனச்சான் றறிய ஒன்றுங் கொடார்' என்றற்குத் 'தாமறியளவையிற் பிறர்க்கொன் றீயாது' என்ருர். அன்றி அதற்குத் 'தமக்குத் தோன்றிய அளவிலாயினும் ஏதேனுங் கொடாமல்' என்று பொருளுரைத்தலுமாம். 'பொய்பொருள்' என்புழிப் பொய்ம்மை நிலையாமைப் பொருளில் வந்தது.

(௩0 - ௩௧) தமிழ்வழக்கு அறியாது - செந்தமிழ் வழக்குகளின் நுட்பமும் ஆழமும் பரப்பும் விழுப்பமும் அறிய மாட்டாமல், அமைவு இல கூறும் - பொருத்தமில்லா தவற்றைப் பேசும், கற்றறிவு இல்லார் இனிப் பலர் - கற்றறிவில்லாதவரே இப்பொழுது மிகப் பலராவர்: ஏகாரந் தொக்கது. 'மற்று' அசை.

செந்தமிழைக் கல்லாதவர் அதன் றிறமறியாராகலின், பொருந்தாதனவெல்லாம் பேசி இகழ்தலுஞ் செய்வர். செந்தமிழுக்கு நன்மை செய்யாமையொடு தீமையுஞ் செய்வாரே உலகில் மிக உளரென்று இதன்கட் குறிப்பித்தவாரும்.

(௩௧ - ௩௪) அதனல் - ஆதலினுல், அவர் கடைதொறும் நித்தலும் படர்ந்து - அவ் வியல்பினுருடைய இல்லின் கடைவாயில்தோறும் நாளுஞ்சென்று, வாய்வாளாது வல்லாங்குப் பாடி - வாய் சும்மா இராமல் வல்லவாறெல்லாம் பாட்டுகள் பாடி, கொன்னே திரிதல் இன்னுது மன் - வீணே அலேதல் தீயதாம் மிகவும்; மற்று, ஓ அசை.

வல்லாங்கு - வல்லபடி; "வடியா நாவின் வல்லாங்குப் பாடி" (௪௭) என்பது புறநானூறு. பயனும் இன்றி இழிவும் நேர்தலின், அங்ஙனம் படர்ந்து பாடித்திரிதல் இன்னுதாயிற்று.

என்றிதுகாறுந், தம்மை எதிர்ப்பட்ட புலவனை நோக்கி, அறிவும் ஈகையறங்களும் உள்ள செல்வர்களாதல் அறிஞர்களாதல் இல்லையாய்க், கல்வியறிவில்லாதவரும் பிசுனருமே பலராய் நிரம்பிய இஞ்ஞான்று நிலையுதல் இல்லாப் பொருள் பெற வேண்டி அத்தகையோரை நச்சிநச்சி உயர்ந்த செந்தமிழ்ப்பாக்கள் பாடி அவர்பாற் செல்லுதல் பெரிதுந் தீதாதல் கூறினுர். அதன்பின், எல்லாம்வல்ல முருகப் பெருமான் திருவருளை விழைந்து சேறலே நன்றுமெனக் கூறுவான்றெடங்கி முதற்கண் அப்பெம்மான் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்குந் திருவொற்றி மாநகர்ச் சிறப்பினை நுவல்கின்றுர்.

(சுரு - சுஎ) கொழுநனை அரும்பிய காஞ்சி அம் கோட்டில் - கொழுமையான மொட்டுகள் அரும்பிய காஞ்சி மரக் கிளையில், புன் தலைச் சிறுவர் ஏறித் துன்றுகடல் சுரி திரைப்பாய்ந்து விளையாட்டயரவும் - எளிய தலையினையுடைய நெய்தற்சிறுவர்கள் ஏறி அக்கிளையின் அருகிலுள்ள கடலின் கட் சுருளும் அலையிற் குதித்து நீர் விளையாடுதலைச் செய்யவும்;

'காஞ்சி' இது மருதநிலத்திற்குரிய மரம் என்பது சிறுபாணாற்றுப்படையாற் (கஎக) புலனாகின்றது; அஃது இங்கு நெய்தல் நிலத்துக்கண் வந்தது; கருப்பொருள் மயக்கம்; இது "திணைமயக் குறுதலுங் கடிநிலை யிலவே" என்னுந் தொல்காப்பிய அகத்திணையியற் சூத்திரத்தால் அமைக்கப் படும்.

புன்றலைக்கு விளக்கம் முன்னர்க் கூறப்பட்டுள்ளது.

அயர்தல் - செய்தல், (திவாகரம்).

(சுஅ - எஎ) வெண்தோடு விரிந்த கைதை அம் தாது மெய்படத் திமிர்ந்த நொய்சிறை வண்டினம் - வெண்ணிற மான மடல்கள் விரிந்த தாழம்பூவின் மகரந்தப்பொடிகள் உடம்பு முழுதும் படும்படி பூசிக் கொண்ட மெல்லிய சிறகு களையுடைய வண்டுக் கூட்டங்கள், விலை அறு முத்தமொடு தலைமயக்குற்றுக் கண்மயக்கேறி எண்ணில கிடப்ப - அந் நிலத்தில் உண்டான விலையில்லா முத்துக்களுடன் ஒருங்கு கலந்து தேன் உண்ட மயக்கந் தலைக்கேறி எண்ணற்றன ஒரே நிறமாய்க் கிடப்ப, நுளைச் சிறு மகளிர் வளைக்கையின் வாரி - நெய்தல் நிலத்துச் சிறு பெண்கள் தம்முடைய வளையலணிந்த கைகளால் அவற்றை அள்ளிச் சேர்த்து, குடம்புரை பணிலம் நிரம்பப் பெய்து - குடத்தை ஒக்குஞ் சங்குகளினுள்ளே நிறையச் சொரிந்து, ஆமை அடுப்பில் ஆம்பல் நெருப்பின் தாம் அறி திறத்தால் அடுவுழி - ஆமை ஓட்டினலான அடுப்பின்கண் செவ்வாம்பற் பூவாலான நெருப்பில் தாமறிந்த வகையாற் சமையல் செய்யும்பொழுது, மயக்கு அற்றுத் துண்ணெனப் பறந்து விண்ணிடைச்

செல்ல - அவ்வண்டுகளெல்லாம் கள்ளுண்ட மயக்கம் ஒழிந்து திடுமெனப் பறந்து வான்வெளியிற் செல்ல, வியப்பிடை எழுந்த மயக்கொடு நிற்கவும் - அம்மகளி ரெல்லாம் வியப்பூடெழுந்த மதிமயக்கத்தொடு நிற்கவும்;

'திமிர்தல்', பூசிக்கொள்ளுதல், (மணிமேகலை, கக, அசு). நொய்மை - மென்மை; வண்டுகள் தாதுதிமிர்ந்து வெண் ணிறமாய்த் தேனும் உண்டு அறிவுமயங்கி முத்துக்களொடு முத்துக்களாய் வேற்றுமை அறியப்படாமற் கிடந்தன. தலைமயங்கல் - ஒருங்குகலத்தல், "புகையவுஞ் சாந்தவும் பூவிற் புனைநவும், வகைதெரி வறியா வளந்தலை மயங்கிய" சிலப்பதிகாரம், கச, கஎஎ, கஎஅ. இங்குக் காட்டப்பட்ட நெய்தல்நிலச் சிறாரின் விளையாட்டியல்புகள் பெரிதும் உற்றுணர்ந்து மகிழற்பாலன.

(எஅ - அக) வேறுசிலர் சிறுமியர் - வேறு சிலரான நெய்தல்நிலச் சிறுபெண்கள், சாறுகெழு கரும்பின் - சாறு நிரம்பிய கரும்பையே உலக்கையாகப் பற்றி, மீன்சினை அன்ன வெண்மணல் குவைஇ - மீன் முட்டைகளைப் போன்ற வெண்ணிறமான நொய்ய மணல்களை நெல்லாகக் குவித்து, தேம்பொதி மழலையொடு சிறுபாட்டு இசைத்து - இனிமை நிறைந்த மழலைமொழிகளுடன் சிறுசிறு வேடிக்கைப் பாட்டுகள் பாடி, வயின்வயின் நின்று - இடங்கடோறும் நின்றபடியாய், மகிழ்வொடு குறுவவும் - மகிழ்ச்சியொடு மணல்நெல் குற்றவும்;

கரும்பையே உலக்கையாகக் கைப்பற்றி மணலையே நெல்லாகக் குவித்து அதனைக் குற்றிச் சிறுமியர் விளையாட்ட யர்வர் என்றவாறு.

வெண்மணலை யொப்ப மீன் சினைகளும் வெண்மையும் மென்மையும் நுண்மையும் உடையவாதல் இங்கு நினைவு கூரற்பாலது. குறுதல் - குற்றுதல், இடித்தல்; "மெல்லியற் குறுமகள் பாடினள் குறினே" என்றார் குறுந்தொகையிலும், அக; "கொல்யானைக் கோட்டால் வெதிர்நெற் குறுவாம்நாம்" என்றார் கலித்தொகையிலும் (சஉ),

(அஉ - அ௩) அழகுசால் நெய்தல் நலம் உற மருவிய ஓற்றிமா நகரில் - இங்ஙனமெல்லாம் அழகு நிரம்பிய நெய்தல்நில இயல்புகள் செம்மையாகப் பொருந்திய திருவொற்றி மாநகரின் கண்;

(அ௩ - அ௭) பொன்தொழில் பொலிந்து விண்தொட நிவந்த இஞ்சி வளைஇய உருகெழு திருநகர் காண்டொறும் பரசி - பொற் பூச்சுக்களாலான தொழிற்பாடுகள் அழகு பெற விளங்கி வானந்தொட உயர்ந்த மதில்கள் வளைந்த தோற்றஞ் சான்ற திருக்கோயிலைப் பார்க்கும் போதெல்லாந் தொழுது, மலை குயின்று அன்ன நிலை உயர் தலைக்கடை - மலைகளைத் துளைத்து அமைத்தாற்போன்ற வாயில்நிலைகள் உயர்ந்த திருக்கோபுரவாயிற்படியின்கண், அஞ்சுவரு நோக்கமொடு நின்றனெனாக - அஞ்சுதலுள்ள பார்வையுடன் ஒதுங்கி நின்றேனாக;

இஞ்சி - மதில், திவாகரம். குயின்று - என்பதில் முதனிலை குயில், அது துளைத்தல் எனப் பொருள்படும். "குன்று குயின்றன்ன ஓங்கு நிலை வாயில்" என்பது நெடுநல்வாடை, அஅ.

'நகர்' இங்குக் கோயில்; "முக்கட்செல்வர் நகர்வலஞ் செயற்கே" எனப் புறநானூற்றின் கண்ணும் (சு) வந்தது.

(அஅ - ௯௫) சுருள் இரும் குஞ்சி - கடை குழன்ற கரிய தலை மயிரை, பொன்ஞாண் பிணித்து - பொன்னாலான கயிற்றாற் கட்டி, நிலம்தொட வீழ்ந்த பொலம்துகில் அசைஇ - நிலத்தைத் தொடும்படி வீழ்ந்த பொற்பட்டாடையினை உடுத்து, சாந்து புலர் மார்பில் பூதொடை புரள - பூசிய சந்தனம் ஈரங் காய்ந்த மார்பின்கட் பூண்ட பூமாலை அசைய, ஏறு செல் செலவின் வீறுபடப் போந்து - சிங்க வேறு நடக்கும் நடையைப்போலப் பொலிவுண்டாக நடந்துவந்து, யாரையோ புலவோய் - யாரையோ அறிவோய், அறுமுகத்து ஐயன் புகுத்துக நின்னையென்று அருளினன் - ஆறு திருமுகங்களையுடைய முருகக் கடவுள் உட்செலுத்துக நின்னையென்று கட்டளையிட்டருளினன்,

போதி என்று - வருவாயாகவென்று, இன்உரை ஒருவன் பகர-இனிய வரவேற்பு மொழியை அங்குவந்த ஏவலாள னொருவன் சொல்ல, அதன் எதிர் சொல்லுவது அறியேன் மெல்லெனப் புக்கு - அவன் மொழிக்கு எதிராகச் சொல்லுவ தொன்றுந் தெரியேனாய் மெல்லென உள்நுழைந்து ;

"சுருளிருங்குஞ்சி பொன்னாணிற் பிணித்து" என்னுஞ் சொற்றொடர் இறையனாரகப்பொருளுரையிற் (உ-ஆஞ் சூத்திர உரை) கண்டது.

மறத்திற் சிறந்த ஏவலாளனே பொற்கயிற்றினால் தன் தலைமயிரைச் சேர்த்துக்கட்டிப், பொன்னாடை யுடுத்த வனாய்ச், சந்தனம் பூசிக்காய்ந்த தன் மார்பின்மேற் பூமாலை புரள ஆண்சிங்கம் போன்ற நடையினனாய் வந்தன னென்பது கூறவே, அவ் வேவலாளனையுடைய தலைவன்றன் செல்வவளமும் வீறும் இன்னும் எத்துணை மிகுதியவா மென்பது தானே புலப்படும்.

வீறு - பொலிவு; "சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி" திருமுருகாற்றுப்படை, உஅ௧.

'யாரையோ' வென்பதில் ஐ ஓ அசை; ''நம்பி நீ யாரை என்றாள்'' சீவகசிந்தாமணி, அ௧௫. புகுத்துதல் - உட் செலுத் துதல்.

போதி வருதி, முன்னிலையேவல்; போதுதல் செல்லுதல், வருதல்.

இனி அங்கு முருகப்பெருமான் வீற்றிருந்த திருக் கோலச் சிறப்பு க௧௧-ஆம் அடிகாறும் விரித்துரைக்கப் படுகின்றது.

(௧௬-௧எ) பொன் புனை விளக்கம் தம் கையின் ஏந்தி- பொன்னினாற் செய்யப்பட்ட விளக்குகளைத் தங்கள் கைகளில் ஏந்தி, மின் புனை மகளிர் நிரல்பட நிற்ப - மின்னொளியினால் அமைக்கப்பட்டாலெனத் திகழும் இளமகளிர்கள் வரிசை யாய் நிற்ப ;

'விளக்கம்' என்பது இருமடியாகு பெயராய்க் கருவியை யுணர்த்தும். 'மின்புனை' யென்புழி 'புனை' உவமப் பொருளில் வந்தது.

புனைதல்-செய்தல், "வரிமணற் புனைபாவைக்கு", புறநானூறு, கக.

(கூஅ-க0௧) கைவல் பாடினி-யாழ் இசைத்தலிற் கை தேர்ந்த பாண்மகள், கறை அறப்பெற்ற பயன் உடை எழால் நலனுற மரீஇ - குற்றம் நீங்கப்பெற்ற பயனுள்ள யாழை அழகுண்டாகத் தன்மருங்கே இருத்தி, விரல்நுதிதெறித்த-தன் விரல்நுனிகளாற் சுண்டிய, நரப்பு இசைநோக்கி-நரம்புகளின் இசைதெரிந்து, மிடற்றொலி பொருத்தி நெறிப்பட மிழற்ற-தன் குரலோசையை இணைத்து ஓசைகள் முறைப்பட இசைப்பவும்;

பாடினி-பாடும்பெண்; இசைபாடுதற்கெனவே ஒருகுலம் 'பாண்குலம்' என்று பண்டைநாளில் இருந்தமையின், 'பாடினி' யென்பாள் பாண்குலப்பெண்ணுவா ளென்க. கறை-குற்றம்; எழால்-யாழ்; 'பயனுடை எழால்' என இங்கு வந்தாற்போலவே "பாடல் பற்றிய பயனுடை எழாஅல்' எனப் பொருநராற்றுப்படை (ருசு)யினுள்ளும் வருதல் நினைவு கூர்க. மருவுதல்-அணுகுதல் (திவாகரம்), மரீஇ:சொல்லிசை யளபெடை. 'தெறித்தல்', இங்கு மீட்டல்.

(க0உ-க0ரு) உரும் அதிர்ந்தன்ன மண்கனை முழவமும்-இடிஇடித்தாற்போல் ஒலிக்கும் மார்ச்சனையுடைய திரண்ட மத்தளமும், வரைவேய் துருவிய உரைகெழு குழலும்-மலை மூங்கிலைக் கடைந்து துளைத்த புகழ்பொருந்திய புல்லாங் குழலும், பேணுறுமரபின் பாணியும் - இன்னும் போற்றற் குரிய தன்மைகள் வாய்ந்த தாளம் முதலிய இசைக்கருவி களும், வல்லோர் - இசைக்கவல்ல இசைத் துணைவர்கள், பால்கெழு மரபின் சீரிதின் இயக்க - அவ்வவற்றின் பாகு பாடுகள் விளங்குந் தன்மையிற் செவ்வனே யியக்கவும்;

'மண்கனை முழவம்' என்பதற்கு 'மார்ச்சனையையுடைய திரண்ட முழவு' என்று அடியார்க்குநல்லார் பொருளுரைத்

தார்; முழவின் ஒரு பக்கத்தே பூசப்படும் பசையொடுகூடிய மண்ணை மார்ச்சனை யென்பர் (சிலப்பதிகாரம், க௦, கஙக),

"மண்ணமை முழவின் பண்ணமை சீறியாழ்
ஒண்ணுதல் விறலியர் பாணி தூங்க"

என்னும் பொருநராற்றுப்படை (கக௦)யடியுரையிலும் நச்சினார்க்கினியர் மண் என்பதற்கு மார்ச்சனை என்றும், பாணி என்பதற்குத் தாளம் என்றும் பொருளுரைப்பர்.

துருவல் - கடைந்துதுளைத்தல், இவ்வாறுசெய்தலைத் "துருவித் துளைத்தல்" என்பர் அடியார்க்குநல்லார் (சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவை, "கொல்லையஞ்சாரல்" உரை).

(க௦சு-க௦எ) செந்நெருப்பு ஆர்ந்த பொன் உரைத் தடவில் - சிவந்த நெருப்பு நிறைந்த பொன்பூச்சுப் பூசிய தூபக்காலில், அகில் நெய் பெய்து பலர்நின்று புகைப்ப- அகில்நெய் ஊற்றிப் பலர்நின்று புகைப்பவும்;

'செந்நெருப்பு' என்றது, கனல் மிக்க நெருப்பை; உரை-பூச்சு; தடவு-தூபக்கால், இச்சொல் இப்பொருள் பயத்தல், "மடவரன் மகளிர் தடவுநெருப் பமர்ந்து" (ஊர் காண், காதை, சுக) என்னுஞ் சிலப்பதிகாரத்தால் உணரப் படும்.

(க௦அ-கக௩) வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்து- வடக்கு மலை யெனப்படும் இமயமலையின்கண் உண்டான பெரிய ஒளியுள்ள வட்டக்கல்லின்கண், தென்மலைப் பிறந்த நறும் குறடு உரைத்து - தெற்குமலை யெனப்படும் பொதிய மலையில் விளைந்த மணமுள்ள சந்தனக் கட்டையைத் தேய்த்து, விழுமிய திரட்டிய செழுநறும் குழம்பில்-சீரிதாகத் திரட்டியெடுத்துக் கரைத்த செழுமையான நறுமணக் குழம்பில், ஐவகை விரையும் விராஅய்-ஐந்து வகையான மணப் பண்டங்களுங் கலந்து, ஓய் எனத் துருத்திப் பெய்துசெறிப்ப-சுருக்காகத் 'துருத்தி'யென்னும் ஒருவகைத் தெளிக்குங் கருவியில்விட்டு நிரப்ப, பலர் நின்று தலைப் பெயல் மாரியின் மலைச்சாந்து உறைப்ப-பலபேர் வரிசையாய்

நின்று கார்காலமுதலிற் பொழியும் மழையைப்போல் அப் பொதியமலைச் சந்தனக்குழம்பைச் சொரிய ;

'வான்கேழ் வட்டம்' என்பதற்கு 'அழகுகெழுமிய வட்டக்கல்' எனப் பொருளுரைப்பினுமாம்.

"வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத்
தென்மலைப் பிறந்த சந்தன மறுக"

எனவருஞ் சிலப்பதிகாரத் (அந்திமாலை. கஎ-அ) திரு மொழிக்கு அதன் அரும்பத உரையாசிரியர் இங்ஙனமே பொருளுரைப்பர்.

'ஐவகைவிரை' ஆவன; 'கோட்டம், துருக்கம், தகரம், அகில், சந்தனம்' என்பவை (பிங்கலந்தை); தக்கோலம், ஏலம், இலவங்கம், சாதிக்காய், கர்ப்பூரம் என்னுந் நிவாகரமும் அடியார்க்கு நல்லாருரையும் (சிலப்பதிகாரம், ௫, உசு).

'ஒய்யென' விரைவுப்பொருட்டு, "நுங்கையது கேளா வளவை யொய்யென" (கருஉ) என்பது பொருநராற்றுப்படை.

'துருத்தி', பன்னீர்ப்புட்டில் போல்வதாகத் தோலிற் செய்யப்பட்டு மணக்குழம்பு பீச்சுங் கருவி; இத்தகையதொரு கருவி பண்டைக் காலத்திலேயே உண்டென்பது, "நெய் மாண் சிவிறியர்" (பரிபாடல், சு, கச) என்பதற்கு "உள் விட்ட புழுகு நெய்யான் மாண்ட துருத்தியராய்" எனப் பரிமேலழகியார் கூறிய வுரையான் அறியப்படும்.

உறைப்ப மிகவிழ, பெரும்பாணாற்றுப்படை (கஎசு) உரை.

(ககச-கஉஉ) வாழையும் கமுகும் வயின்வயின் நாட்டி-வாழை மரங்களும் பாக்குமரங்களும் இடங்கடோறும் நிறுத்தி, ஓவிய நுட்பமும் ஒண்பணி நுட்பமும் மேவிய படாஅம் மேலுறக்கட்டி-ஓவிய நுட்பங்களும் ஏனைப் பின்னல் முதலிய அழகிய தொழில் நுட்பங்களும் பொருந்திய திரையை மேற்பரப்பில் அணையக்கட்டி, கழங்கு புரை நித்திலம் இலங்கத் தூக்கி-கழங்கு என்னும் ஒருவகை விளையாட்டுக் கருவியைப்போன்ற பருமுத்தங்களைக் கோவையாக விளங்கத் தொங்கவிட்டு, கேழ்கிளர் பன்மணி காழ்பட நாற்றி-அங்ஙனமே நிறம் மிகுந்த பலமணிகளைக் கோவை

யாகத் தொங்கவைத்து, பெரும் தண் கணவீர நறும் தண் மாலை பால்வேறு மரபில் பலபட இயற்றி-பெரிய குளிர்ந்த செவ்வலரி மாலையையும் ஒழிந்த நறிய குளிர்ந்த மாலைகளையும் பலவகையான வியல்பிற் பலவேறு வகையாக அங்கங்கும் அழகுபெற அமைத்து, எலிமயிர்க் கம்பலம் நிலனுற விரித்து-எலிமயிரினாலான விரிப்பை நிலம் படிய விரித்து, விரியிடை எழுப்பிய அரியணை மீது;-அவ்விரிப்பின் நடுவில் நிறுத்தப்பட்ட சிங்கக் கட்டிலின்மேல்;

ஓவியம் சித்திரம். கழங்கு-கழற்சிக்காய் (திவாகரம்) "அணங்கறி கழங்கில்" நற்றிணை, ௮. காழ்-கோவை, வடம், "ஒருகாழ்முத்தம் இடைமுலைவிளங்க" அகநானூறு, எ௩.

பெருந்தண் கண வீர மாலை, நறுந்தண்மாலை எனப் பிரித்துக் கூட்டிப் பொருளுரைக்கும் நச்சினார்க்கினியருரையே ஈண்டைக்கும் உரையாக வைக்கப்பட்டது,

கணவீரம்-செவ்வலரி: "பெருந்தண் கணவீர நறுந் தண்மாலை" (உ௩௬) எனத் திருமுருகாற்றுப்படையின்கண் இத்தொடர் இங்ஙனமே வருதல் நினைவு கூரற்பாற்று. 'எலிமயிர்' என்பது, வெள்ளெலியின் அடிவயிற்றிலுள்ள மிக மெல்லிய வெண் மயிர்; எலிமயிர்கொண்டு ஆடை முதயன நெய்தல் சிலப்பதிகார உரையின்கண்ணும் (௧௪: உ0௫), "செந்நெருப்பு உணுஞ் செவ்வெலிம் மயிர், அந் நெருப்பளவு ஆய் பொற் கம்பலம்" என்னுஞ் சீவகசிந்தாமணியின் கண்ணுங் (உ௬௮௬) காணப்படும்.

(௧உ௩ - ௧உ௬) வெம் கதிர் ஞாயிறு மணிநெடும் கோட்டில் தங்கியிருந்த தகைமைபோலவும் - வெப்பம் மிகுந்த கதிர்களையுடைய பகலவன் நீல நிறம் பொருந்திய உயர்ந்த கீழ்மலை யுச்சியில் வைகித் தோன்றிய தன்மைபோலவும், வான் கதிர் மதியம் மீன் குழாம் சூழத் தான் பொலிந்து எழுந்த தலைமைபோலவும் - வானத்தின்கண் உள்ள தண் கதிர் நிலவு விண்மீன் கூட்டஞ் சூழத் தான் விளங்கித் தோன்றிய தலைமைநிலை ஒப்பவும், அறுமுகத்தொருவன் குறுநகை இலங்க - ஆறு திருமுகங்களையுடைய ஒப்பற்ற கடவுள் புன்னகை விளங்க, நகைகெழு விழிகள் திசைமுகம்

பரப்பி - விருப்பம் மேவியதன் பன்னிரு விழிகளைத் திசைக டோறுஞ் சூழப்பார்த்து, குன்றாத் திருவொடும் விளங்க - குறையாத அழகோடும் அங்கெழுந்தருளி விளங்கா நிற்ப வென்க.

'மணி' நீலமணி, அஃதிங்கு நீல நிறத்தின் மேலாயது ஆகுபெயர்.

தகைமை போலவுந், தலைமை போலவுங் குன்றாத் திருவொடும் விளங்கவெனக் கூட்டுக. 'எழுந்த' இங்குத் தோன்றிய வென்னும் பொருட்டு.

நசை - வேட்கை. அகநானூறு - உஉ; உயிர்கள் மும்மலப் பிணி தீர்ந்து தன் றிருவடிப் பேரின்பத்தைப் பெறல் வேண்டுமென்னும் வேட்கையொடு நோக்குதலின் 'நசை கெழு விழிகள்' என்றார்.

(கஉகூ - கஙசு) கண்டு நனி - அப்பெருமானை நன்றாகக் கண்டு, மெய்ந்நிலைத் தொண்டர் தம் நிலை அறியார் - உண்மையான தவநிலை வாய்ந்த அடியார்கள் தமது நிலை தெரியாமல் உணர்விறந்தவராய், விழிநீர் சிந்த - தம் இரு கண்களும் நீர் சொரிய, மொழி இடைகுழற - பேச்சுக்கள் இடையிடையே தெளிவின்றித் தடுமாற, உச்சிக் கூப்பிய கையினர் - தலைமேற் குவித்த கையினராய், பழிச்சி - பரசி, அருள் குறிப்பு உணர்ந்து - திருவருட் குறிப்பை உணர்ந்த படியாக, ஆங்கு அமைவொடு நிற்ப - அங்கு அமைதியாய் நிற்க, வெருவரு நோக்கமொடு மரம்போலாகி அருணிலை உணரேன் தெருளின்றி ஓடிக் குடந்தம் கொண்டு எதிர் நின்றனெனாக - அடியேன் அஞ்சுதலுள்ள பார்வையுடன் மரம்போல் உணர்விழந்து திருவருணிலை தெரியேனாய்த் தெளிவின்றி விரைந்தோடிக் 'குடந்தம்' என்னும் வணக்கங் கொண்டு அப்பெருமான் றிருமுன் நின்றேனாக;

குழறல் - தெளிவில்லாப் பேச்சு.

'நன்றாய்க் கண்டு' என்றற்கு நனிகண்டு எனப்பட்டது. "கையினர்' முதலியன, முற்றெச்சம்; பழிச்சுதல் - ஏத்துதல்; 'குடந்தம்' என்பது முன்னும் விளக்கப்பட்டது.

(கஙஎ-கசக) மடம் தபுசில் மொழி மகிழக் கூறி - அறியாமை கொடுக்குஞ் சில இன் சொற்களை அடியேன் மகிழும்படி திருவாய் மலர்ந்தருளி, அன்புறு புலவோய் - அன்புமிக்க புலவோய், அஞ்சல் ஓம்புமதி - அஞ்சுதலை நீ ஒழிப்பாயாக, காலம் கடந்த கோல வைப்பில் நிகரா இன்பம் மிகைபட நுகர்ந்து கடைவழியில்லா நிலையொடு பொலிகுவை - கால வரம்பில்லாத அழகிய மேல் உலகத்தில் இணையில்லாத பேரின்பத்தை நிரம்ப நுகர்ந்து இறுவாயில்லா நிலையுடன் நீ நிலையாய் விளங்குவாய், என்று பல நல்லுரை பின்றையும் கூறித் தன் மருங்கு இருந்தோன் குறிப்ப - என்று பல நன்மொழிகள் பின்னும் மொழிந்து தன் பக்கல் இருந்தோனை ஏவலாளனொருவற்குக் குறிப்பிட, அவனும் என் அம் கைப்பற்றிச் சென்று கொங்குகமழ் நீராடு துறையில் நிறுவிய அளவை - அவ்வேவலாளனும் என் உள்ளங்கையைப் பிடித்துக் கொண்டுபோய் மணங் கமழ்கின்ற நீராடுமிடத்தில் நிறுத்திய நேரத்தில்;

தபுதல் - கெடுதல்; "பறைதபு முதுகுருகு" (கஅ0) என்னும் ஐங்குறுநூற்றின் உரையிற் காண்க,

"சில்மொழி', சிலமொழி, "அஞ்சில் ஓதி" (குறிஞ்சிப்பாட்டு, கஅ0,) என்புழி "அழகிய சிலவான மயிரினையுடையாய்" என்பர் உரைகாரர் நச்சினார்க்கினியர். "அஞ்சல் ஓம்புமதி" என்னுஞ் சொற்றொடர் திருமுருகாற்றுப்படையிற் கண்டது (உகக). 'காலங் கடந்த கோல வைப்பு' என்றது, முருகப்பெருமான் வீற்றிருக்கும் அருளுலகத்தை யென்க; கோலம் - அழகு (பிங்கலந்தை). கடைவழி - முடிவுநிலை; 'அகம் கை' யென்பது நிலைமொழியின் முதலொழிய ஏனையவெல்லாங் கெட்டு மெல்லினம் மிகுந்து 'அங்கை' யென நின்றது; இது.

> "அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே
> முதனிலை யொழிய முன்னவை கெடுதலும்
> வரைநிலை யின்றே யாசிரி யர்க்க;
> மெல்லெழுத்து மிகுத லாவயி னான"

என்னுந் தொல்காப்பியத்தால் (புள்ளிமயங்கியல், உ0) முடிக்கப் படும். 'அகங்கை' யாவது உள்ளங்கை; "அங்கையுள்

நெல்லி" (புறப். வெ. உ: கங) என்புழிப்போல; தோழமை யான அன்பை விளக்குதற்கு 'அங்கைபற்றி' யெனப்பட்டது.

மணப் பண்டங்கள் நிரம்பப் பயில்கின்றமையின், நீராடுதுறை மணங் கமழ்வதாயிற்றென்க. கொங்கு-மணம்; "கொங்கலர் பூம்பொழில்" (நேப்பநிகாரா: கo, உஉo) என்பதன் கண் இச்சொல் இப்பொருட்டாதல் தெளியப்படும்,

(கசகூ-கடுச) கார்மின் அனைய ஏர்கெழு மகளிர் குறு நகை மிளிர என் அருகில் போந்து-கார்காலத்து மின்னலை ஒத்த அழகு பொருந்திய இளமகளிர் புன்னகை விளங்க என்பக்கத்தில் வந்து, மாசுபொருந்து பாசிஆகி ஈரும் பேனும் தீராது உறையும் என் புன்தலைக் குஞ்சி புணர்ப்பு அற உளரி-அழுக்கு நிரம்பிப் பாசியாய் ஈரும் பேனும் நீங்காது உயிர்வாழும் எனது சிவந்த தலையிலுள்ள மயிரைச் சிக்கறக்கோதி, புழுகுநெய் உரைத்துப் பனிநீர் ஆட்டி ஈரம் புலர இன்புகை ஊட்டித் தாம் எனை விடுத்துப் போக-புழுகுநெய் தேய்த்துப் பனிநீரால் நீராட்டிப் பின் அதன் ஈரம் உலரும்படி மணமினிய அகிற்புகையைப் புகட்டி அவர்கள் என்னைவிட்டுச் செல்ல, ஏனோன்பிறிதோர் நல்லிடம் புகுத்த-மற்றோர் ஏவலாளன் மற்றொரு சிறந்த இடத்தில் என்னை உட்செலுத்த;

கார்காலத்தே மின்னல்கள் அடுத்தடுத்துத் தோன்றிப் பளீர் பளீர் என வீசி அழகிய கொடிக்கொடியாய்க் காணப் படுதலின், "கார்மின் அனைய" எனப்பட்டது. முன்னும் "மின்புனை மகளிர்" என வந்தமை காண்க. இம் மகளிர் ஏவன் மகளிராவர்: 'குறுநகை' யெனப்பட்டது, மகிழ்ச்சியை விளக்க.

பாசியாய்-சடையாகி; (சூடாமணி, ச, கூங). புணர்ப்பு-சிக்கு; உளர்தல்-மயிர்கோதல்; "தம்மேனி நோக்கார் தலை யுளரார்" என்பது ஆசாரக்கோவை (எஎ) எள்நெய் இட்டு நீவாமையிற் சிவந்த மயிர் உடைமையிற் புன்றலையென்றார்; பட்டினப்பாலை (கூo) உரையுங்காண்க. புழுகு, 'புனுகு' எனவும் வழங்கும். உரைத்தல்-தேய்த்தல்; பனிநீர், இது குளிர்ச் சியும் மணமும் உள்ளமையின், இப்பெயர் பெற்றது.

(கஙிச-கசுரு) ஆண்டை - அங்கு, கவின்பெறு சிலதர் விரையினர் புகுந்து - அழகுமிக்க ஏவலாளர் விரைவுடைய ராய் நுழைந்து, விண்ணோர் வேந்தன் கண் எனப் பொலிந்த என் துன்னல் சிதாஅர் நீக்கி - விண்ணவர் கோனுக்கு உடம்பெங்கும் உள்ள கண்கள்போல் விளக்க மாய்த் தெரிந்த எனது தைக்கப்பட்ட கிழிந்த கந்தையை அகற்றி, முன்னிய அரவு உரி அன்ன ஆடை உடீஇ - மதிக்கத் தகுந்த பாம்பின் தோல்போன்ற மெல்லிய ஆடையை உடுத்து, கலவைச் சாந்தம் புலர அட்டி - நறு மணப் பண்டங்கள் கலந்த சந்தனக் குழம்பை மார்பில் உலரும்படி அப்பி, முகைநெகிழ்ந்து விரிந்த தகைசால் நல் மலர் பிணையலாக்கி மணம்உற மிலைச்சி - மொக்கு முறுக் கவிழ்ந்து மலர்ந்த அழகு நிரம்பிய சிறந்த மலர்களை மாலை யாகத் தொடுத்து மணங்கமழும்படி சூட்டி, துளங்கு ஒளிக் கலன்கள் விளங்க அணிந்து - நிழலாடுகின்ற ஒளியை யுடைய அணிகலன்களை அழகு விளங்கும்படி பூட்டி, மணித்தவிசு இட்டு அதன்மிசை எனை இரீஇ - அழகிய இருக்கையை இட்டு அதன்மேல் என்னை இருத்தி;

சிலதர் - ஏவல் செய்வோர்; "நன்கனி சிலதன் உண்ண நச்சுவேன்" (முத்தி, கஉஎ) என்னுஞ் சிந்தாமணியில் இச் சொற்பொருள் காணப்படும்.

துன்னல் - தைத்தல்; சிதார் - கந்தை; "வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅர்" (சுகூ) என்பது புறநானூறு; 'துன்னல் சிதாஅர்' என இங்கு வந்தாற்போலவே,

"வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர் துவர நீக்கி"

என இங்ஙனமே பொருநராற்றுப்படையில் (அக) வருதல் நினைவு கூரற்பாலது.

அரவுரி, மென்மைக்கும் வெண்மைக்கும் உவமை; 'உரி" முதனிலைத் தொழிலாகு பெயராய்த் தோலை உணர்த்தும்; அட்டி - அப்பி; "அளிநீடளகத்தின் அட்டிய தாதும்" என் றார் திருக்கோவையாரிலும் 'தகை' அழகென்னும் பொருட்டு.

பிணையல்' என்பது மலர்களின் காம்புகளிரண்டையும் எதிரெதிரே ஒன்றன்மேல் ஒன்ருக வைத்துப் பிணைத்துக் கட்டும் மாலையாகும். ஆகவே இங்ஙனங் கட்டுஞ் சரங்கள் 'பிணையன்மாலை' யெனவுங் கூறப்படும். "தூமலர்ப் பிணை யன்மாலை" (பெரியபுராணம், தடுத்தாட்கொண்ட. கஅ) என்பதன் உரையைக் காண்க.

(கசுசு - கஎச) குமரி வாழையின் குருத்தகம் விரீஇ - இளமையான வாழையின் குருத்தை உள்விரித்து, அறு சுவைக்கறியும் - ஆறு வேறு சுவையுள்ள கறிவகைகளும், அடிசிலும் - சோறும், துவையும் துவையலும், வெறிகமழ் கனியும் - மணம் வீசுகின்ற முப்பழமும், நறுநெயும் - நல்ல நெய்யும், பாலும் - ஆவின்பாலும், தீம் சுமைத் தயிரும் - இனிய ஏட்டுத் தயிரும், தேம் கனி பழனும் - தித்திப்புக் கனிந்த ஏனைப் பழவகைகளும், கன்னலும் - சருக்கரையும் - பிறவும் - பிற தின்பண்டங்களும், துன்ன இயற்றி - நெருங் கப் படைத்து, கடும் பசிதீர யான் மிசைதொறும் மிசை தொறும் - மிக்க பசிநீங்க யான் உண்ணுந்தொறும் உண் ணுந்தொறும், இடும்பை இன்றி இடைஇடை இடுபு - துன்பமென்ப தில்லாமல் இடையிடையே அவர்கள் பின் னும் இடுதலால், பாழ் வயிறு என்றும் நிரம்பப் பெய்தலின் - முன் பாழாய்க்கிடந்த என் வயிறு நிறையும்படி யான் அதன்கண் அவற்றை இடுதலாலே, பெரும்பொருள் எய்திய வறிஞனின் அல்லாந்து இருந்தபின் - மிக்க செல்வத்தை அடைந்த வறியவனைப்போல் மகிழ்ந்திருந்தபின், என்னைப் பொருந்தக் கூஉய் ஏனையோர் இடத்தில் தான் எனைச் செலுவ - என்னை மனம் பொருந்த அழைத்து மற்றோரிடத் தில் அவ் வேவலாளன் என்னைச் செலுத்த;

'குமரி' யென்பது இளமைப் பொருட்டு, இதனை 'ஈனுதை வாழை' என்பர் சிலப்பதிகார (கசு, சஉ) அரும்பதவுரையாசிரி யர்; "குமரிவாழையின் குருத்தகம் விரித்து" என்பது சிலப் பதிகாரச் சொற்றொடர்.

'சுமைத்தயிர்' ஏட்டுத் தயிரெனவும், ஏடு ஆடைபோல் மேல் மூடியிருத்தலின், ஆடைத்தயிர் எனவும் வழங்கும்;

இவ்வுண்மை "தீம் பாற் சுவைத் தயிரும்" (கோவிந்தையார், எக) என்னுஞ் சிந்தாமணியானும் அதன் உரையானுந் தெளியப்படும்'

'தேங்கனிபழம்' என்புழிக் 'கனிபழம்' வினைத்தொகை. 'வெறி கமழ்கனி' யென முன் வந்திருத்தலின் அதனை முப்பழமும் எனவும், 'தேங்கனிபழம்' என்னும் இதனை ஏனைப் பழவகைகளெனவும் உரைத்துக்கொள்க. 'பிறவும்' என்றது, வடை பாயசம் முதலிய தின்பண்ட வகைகள்.

'இயற்றி', படைத்தென்னும் பொருட்டு; இலையில் இடம் அரிதாம்படி கறிவகைகள் நெருங்க வைக்கப்படுதலின், 'துன்ன வியற்றி' யெனப்பட்டது; அவ்வளவு ஏராளமான கறிவகைகள் என்பது கருத்து. அடுத்தடுத்து இடுதலானுண்டாந் துன்பங்களைச் சிறிதும் பாராமல் அவ்வேவலாளர் அன்புடன் இடுதலின், 'இடும்பையின்றி இடை இடை இடுபு' என்றார். 'இடுபு', வினையெச்சம்; செய்புவென்னும் வாய்பாடு.

நெடுநாட் பட்டினியா யிருந்தமையின் 'ஒன்றுமில்லா வயிறு' என்பது தோன்றப் 'பாழ்வயிறு' எனப்பட்டது; பாழ், ஒன்று மின்மை.

அல்லாந்து - மகிழ்ந்த; இப்பொருட்டாதல் "அதனெதிர், சொல்லேமாதலின் அல்லாந்து கலங்கி" என்புழிக் காண்க (குறிஞ்சிப்பாட்டு, கசக).

செலுவல் - செலுத்தல்; "மேற்கொண்டவை செலீஇ" என்னும் புறப்பொருள் வெண்பா மாலையிற் போல (கஉ,கக)ப் பிறவினைப் பொருட்டாய் நின்றது.

(களச - கஅகு) ஆங்கு - அவ்விடத்தில், பொழிநீறு இட்டு - அருள் பொழிகின்ற திருநீற்றை இட்டு, விழிமணி தாங்கி - சிவபிரானுடைய கண்கள் எனப்படுஞ் சிவமணிகள் அணிந்து, காந்தள்போலச் சேந்தொளிர் அங்கையில் சிவஞானபோதம் நவையறச் சிவணி - செங்காந்தள் மலர்கள்போலச் சிவந்து விளங்குகின்ற அழகிய கையிற் 'சிவஞானபோதம்' என்னும் மெய்கண்ட நூலைக் கற்பாரது

குற்றம் நீங்கும்படி ஏந்தி, பழுதுஅறு மாண்வர் குழுவொடு சூழ -குற்றமற்ற மாணுக்கர்கள் எனைத் தகுதியுள்ள அன்பர் கூட்டத்துடன் சூழ்ந்திருக்க, வான்கதிர் மண்டிலம் ஈங்கு வந்ததுபோல் திருவொடு விளங்கும் உருகுபொன் தவிசில்-வானத்தின்கண் உள்ள ஒளிமண்டிலமே இங்கு இறங்கி வந்தாற் போல மேன்மையுடன் விளங்குகின்ற உருகா நின்ற பொன்னின் ஒளிவாய்ந்த இருக்கையில், கல்மனம் உருக்கும் காண்தகு கோலமொடு-கல்லொத்த வன்னெஞ்சையும் உருக்குகின்ற காண்டற்குத்தக்க திருக்கோலத்துடன், என்மனம் உருக்கி எழுந்தினிதருளிய -ஏழையேனது உள்ளத்தையும் உருக்கி இனிதெழுந்தருளிய. சோமசுந்தர குருவனைக் காணூஉ -சோமசுந்தர தேசிகனைக் கண்டு, செய்குவது அறியேன் மெய்தடுமாறி நிலம்பட வீழ்ந்து கலங்கி நிற்ப -செய்வது தெரியேனாய் உடம்பு விதிர்த்து நிலத்திற் பொருந்த விழுந்து வணங்கி அஞ்சி நிற்ப;

'பொழிநீறு' அருள்பொழியுந் திருநீறு; விழிமணி, விழியாகிய மணி, ஆவது 'அக்கமணி' யென்பது. 'சேர்ந்து', சிவந்து; இதற்குச் செம்மை, முதனிலை.

'நவையற' வென்றது, 'குற்றம்நீங்க' என்னும் பொருட்டு; குற்றமாவது மலம் மாயை வினை யென்னும் மூன்றன் சேர்க்கையால் உயிர்கண்மாட்டு உண்டாவது; 'நவை' குற்றமென்னும் பொருட்டாதல், "அருநவை ஆற்றுதல் இஃறு" என்னும் நாலடியாரிற் (உகம) காண்க.

'சிவஞானபோதம்' என்பது 'சுத்தாத்துவித சைவ சித்தாந்தம்' நிறுவும் மெய்கண்ட நூல்.

'சிவணல்', கையிற் பொருந்தவைத்தல்; ஆவது 'ஏந்தல்' என்னும் பொருட்டாம்.

வான்கதிர் மண்டிலம்-சூரியமண்டிலம், அஃதிந்நிலத்து இழிந்தாற்போல் எழுந்தருளிய சோமசுந்தர குரவனெனக் கூட்டுக.

உருகாநின்ற பொன் ஒளி மிகுதியுமுடைமையின் பொன்மினுக்குப் பூசிய தவிசுக்கு அஃது அடை மொழியாயிற்று.

'கன்மனம்' 'என்மனம்' என்பவற்றில் இழிவு சிறப் பும்மை தொக்கது. காணூஉ: செய்யூவென்னும் வாய் பாட்டு வினையெச்சம்; அறியேன்: முற்றெச்சம்.

(கஅச-ககஉ) யாரையோ எங்கள் அறுமுகத்து ஐயன் தந்ததோர் அருளின் வந்தனைபோலும் - நீ யார் எங்கள் ஆறுமுகக் கடவுள் அளித்ததோ ரருளினால் இங்கு வந்தனை போலும், நல்லை நல்லை - நீ நன்னிலையுடையை நன்னிலை யுடையை, எல்லையில் காலம் அழியாப் பேற்றின் நிலையினை - அளவுபடாத காலம் அழியாப் பேற்றுடன் நிலையாக வாழ்வை; விழுமியை - சிறப்புடையை; செவ்வியை பெரியை ஔவியம் இலை - செம்மையுடையை பெருமையுடையை அழுக்காறு முதலிய தீய இயல்புகளிலை, என்று இனியன பலவும் பனிவரக் கிளந்து - என இனியவான சொற்கள் பலவும் உள்ளங் குளிரும்படி இனிமையாய்ச் சொல்லி, தன் மலர்க்கை என் புன்தலைச் சேர்த்தி - தமது மலரனைய திருக் கையை எனது எளிய தலைமேல் வைத்து :

மலர்க்கையைத் தலையிற் சேர்த்தல், தன்கண் நிறைந்த அருளாற்றலை மாணாக்கனுக்கு உய்த்து அவன்றன் உடல் உயிர்களைத் தூய்மைசெய்தற் பொருட்டு ஆசிரியன் செய்யும் அருள்வயமான அறிதுயில்முறை; இதனைச் சமய நூல்களுள் 'தீக்கை' யென்ப.

(ககஉ-உ0எ) புலப்பட - விளங்கும்படியாக, நீயே உடம்பும் பொறியும் கடம்படு கருவியும் அறிவும் வளியும் அல்லை - உயிராகிய நீ உடம்பும் ஐம்பொறியும் அவ் வைம் பொறிகளாகிய காட்டுவழிச் செல்லும் அகக்கருவிகள் நான் கும் அறிவும் உயிர்ப்பும் அல்லை; அறிவாய்ச் செறியும் பெற்றியை - அறிவியற்கையுடையையாய் யாதொன்று பற் றின் அதன் வண்ணமாய் நிற்குந் தன்மையை; மற்று அவை அறியாப் பண்பின - சொன்ன அவையெல்லாம் அறியாத தன்மையன; அனையையாயினும் முன்பே படலம் மூடிய கண் ணின் மிடைபடு மாசு பொதிந்த நீர்மையை - நீ அங்ஙனம் அறிவியற்கை உடையையாயினுந் தொன்று தொட்டே

படலம் மூடிய கண்களைப்போற் செறிகின்ற அறியாமை யாகிய கறை மூடிய இயல்பினை, விசிய ஒளிப் பிழம்பாகி வெளிப்படு முருகன் ஆனது சுரந்த அருளினனாகலின் - ஆனால் இயற்கையே வினையின் நீங்கி விளங்கிய அறிவொளிப் பிழம்பாய் வெளிப்படு முருகப்பெருமான் ஒழியாது ஊற்றெடுக்கும் அருளுடையனாதலால், நின்னை மறைத்த துன்னிருள் துரந்து தன் அருட்பொலிவால் நின் அறிவு கொளீஇ - நின்னை இயற்கையே மறைத்த செறிந்த மல விருளை ஓட்டித் தன் அருள் விளக்கத்தால் நின் அறிவை விளக்கி, அருகா இன்பம் தருதற்பொருட்டு - அம்முகத்தால் நினக்குக் குறையாத பேரின்பத்தைத் தரும்பொருட்டு, மெய் நிலை இருத்தி மாசு போக்கித் தன் நிலை நினக்குத் தந்தனன் - செம்பொருள் காணும் மெய்யுணர்வின் நிலையில் நின்னை இருத்தி நினது மலவழுக்கைக் கழித்துத் தனது திருவடிப் பேரின்ப நிலையை நினக்குக் கொடுத்தருளினன்: கோடி - நீ அதனைப் பெற்றுக்கொள்வாயாக; என்று உறுதிகூறி விடுப்பத் தேறிப் பன்னிருகையன் முன்னர் எய்தி - என்று உயிர்க்குறுதி பயப்பன அறிவுறுத்து விடுப்ப அவ்வாற்றால் உள்ளந் தெளிவடைந்து பன்னிரு திருக்கைகளையுடைய முருகப்பெம்மான் றிருமுன் அடைந்து;

புலப்படக் (ககஉ) கூறி (உ0சு) என இயைத்துக் கொள்க.

கடம்படல் - நெறிச்செல்லல், கடம்-காட்டுநெறி; "கடம் பல கிடந்த காடுடன் கழிந்து" (காடுகாண், க0) என்பது சிலப்பதிகாரம்; ஐம்பொறிகளினூடு தன்வயமின்றிச் செல்லும் மனவறிவு பலவாற்றானும் அலைக்கப்படுதலின் ஐம்பொறிகள் காடாகக் கருதப்பட்டன. வளி-உயிர்ப்பு, மூச்சு.

'மற்றவை' யென்றன : உடம்பு ஐம்பொறி அகக்கருவி வளி முதலியன. 'மாசு' ஆணவமலமென்னும் அழுக்கு; 'விசிய' ஒளி விசிய; அஃதாவது ஒளிவிளங்கிய வென்றற்கு 'வினையினீங்கி விளங்கிய' வென்பது கருத்து.

'துன் இருள்' செறிந்த ஆணவ வல்லிருள்; ஆணவ மலம் அறியாமை பயத்தலின், இருளெனப்படுவது மரபு;

"துன்னிருளே" என்னுந் திருவாசகத்திற் (சிவபுராணம்) போல. 'துரந்து' ஒட்டி; "என்னுடையிருளை ஏறத் துரந்தும்" (கீர்த்தித் திருவகவல்) என்று மணிவாசகப்பெருமான் இப்பொருளிலேயே அருளிச் செய்தல் காண்க; புறநானூற்றிலும் (கச) "முன்பு துரந்து சமந் தாங்கவும்" எனப் போந்தது.

'எம்நிலை' யென்றது, எமது சேர்க்கையில் என்றற்கு. கோடி, கொள் பகுதி; தேறி, கலங்கிய உள்ளம் தெளிந்தென்க.

இப்பகுதியிற் சைவசித்தாந்த நுட்பங்கள் மிக அழகாகத் தெளித்துக் கூறப்பட்டுள்ளன.

(உ0அ-உகச) இமையம்பூத்த பனிகெழு சுனையில் அமையாது ஆடிய உமைதரு புதல்வோய்-இமைய மலையின்கண் விளங்கிய குளிர்ச்சிபொருந்திய நீரூற்றில் தோன்றி அவா அடங்காமல் விளையாடிய உமைப்பிராட்டியார் தந்த குழந்தாய், எரிவிழித்து இமைக்கும் திருநுதல் தந்தைக்கு ஒரு மொழிவிரித்த தெருளுறும் உணர்வோய்-தீக்கண் திறந்து ஒளிவிடும் அழகிய நுதலையுடைய தந்தையாகிய சிவபெருமானுக்கு ஓமெனும் ஒருமொழிப்பொருளை விரித்தறிவுறுத்த தெளிவு மிக்க பேரறிவுடையோய், வானோர் உறுகண் தீர்ப்ப மேல் ஓர் ஐவடிவேலைக் கையினில் எடுத்தோய் - தேவர்களுடைய துன்பங்களை நீக்கும்பொருட்டு முன்னொருகால் ஒப்பற்ற தகட்டுவடிவினையுடைய கூரிய வேலைக் கையினில் ஏந்தியோய், வேந்தன் தந்த ஏந்துஎழில் செல்விக்கு வரைபுரை மார்பம் வரையாது அளித்தோய்-தேவர்கோன் ஈந்த மிக்க அழகினையுடைய புதல்வியாகிய தெய்வயானைக்கு நினது மலைபோன்ற மார்பாற் றழுவும் இன்பத்தை அளவு படாமல் உதவியோய், குன்றவர் வளர்த்த பொன்திகழ் வள்ளிக்குக் கொழுகொம்பு ஆகிய விழுமிய தோளோய்-குன்றத்துறைவாரான குறவர்கள் எடுத்துவளர்த்த அழகு விளங்கிய வள்ளியம்மையாகிய பூங்கொடிபோல்வாளுக்குக் கொழுகொம்பாய்நின்ற சிறந்த தோள்களை யுடையோய், அரும்தமிழ்க் கீரனைப் பொருந்திக் காத்தோய் - அரிய தமிழ்

நலம்வாய்ந்த நக்கீரதேவரை அணுகிக் காத்த பெம்மானே, எம்மனோர்க்கு எளிவந்த செம்மையாள-ஏழையேன் போன்ருர்க்கு எளிதில் எழுந்தருளிவந்த செம்மையுடையோனே, ஒருவ - ஒரு முழு முதலோனே, சிறுவ - இளையோனே, கருமயில் முருக - நீலமயிலை ஊர்தியாக உடைய முருகப் பெருமானே, மறைமுடிதன்னில் நிறைதிரு உருவினை - திரு நான் மறைகளின் முடியில் நிறைகின்ற சிறந்த உருவுடையை, கண்ணும் உணர்வும் கதுவாப் பெற்றியை - கண்ணுங் கருத்தும் அணுகிப் பற்றவியலாத பெருந்தன்மையுடையை, ஐம்பெரும்பூதமும் ஆகிநின்றனை-மண் முதலான ஐம்பெரும் பொருள்களும் புணர்ந்துநின்றனை, உலகுநின் உருவே - அவ்வைவம் முதற்பொருள்களின் கலவையான இவ்வுலகம் நினக்கு உருவாயுள்ளது, ஒளிகள் நின் விழியே-ஞாயிறுந் திங்களுந் தீயுமான ஒளிகள் நினக்குக் கண்களாயுள்ளன; அலகிலாச் சமயத்து அவ்வவர் தமக்குப் பல வேறு உருவில் நிலவுநை நீயே - எண்ணிலாச் சமயங்களையுடைய அவ்வச் சமயத்தார்க்கும் பலவேறு வகையான திருவுருவங்களில் விளங்குகின்றனை நீயே, ஆறு நின் முகம் - ஆறு நின் திரு முகமாம், ஐந்து நின் வடிவு - மண்முதலாக ஐம்முதற் பொருள்களும் நின் உருவாகும், நான்கு நின்மொழி - திரு நான் மறைகளாகிய நான்கும் நின் திருமொழிகளாகும்; மூன்று நின் கண் - மூன்று நின் கண்களாகும், இரண்டு நின் துணை - வள்ளி தெய்வயானையென இருவர் நின் வாழ்க்கைத்துணைவராவர், ஒன்று நின் வேல் - ஒன்று நின் வேலாகும், மருண்ட உணர்வொடு மாட்சிமை எய்தா முருடனேற்கும் திருவருள் தருநை - மயங்கிய அறிவொடு அருட்டன்மை அடையமாட்டாத முரட்டுத்தன முடையேற்குந் திருவருள் தருகின்றனை ;

'பூத்த', இங்கு 'விளங்கிய' வென்னும்பொருட்டு; "மீனாரம் பூத்த வியன்கங்கை நந்திய" என்னும் பரிபாடலிற் (கக, கக) போல. சிறுமகார் நீரில் அவாவடங்காமல் விளையாடுதல் இயற்கையாகலின் 'அமையாது ஆடிய' வென்றார். 'எரி' ஆகுபெயரால்நெற்றிக்கண்ணை உணர்த்தும்;

இமைத்தல் - ஒளிவிடல், திவாகரம். 'ஒரு மொழி', 'ஓம்' என்பது, அஃது ஆகுபெயராய் அதன் பொருளை உணர்த்திற்று; இஃது "எண்ணி யுருகும் குருநாதன் என்பால் உரைத்த ஓர்மொழியே" எனப் பட்டினத்தடிகளும் அருளிச் செய்தனர். உறுகண் - துன்பம்; ஆவது தேவர்கட்குச் சூரனால் விளைந்த துன்பம் என்க.

ஐம்மை-தகட்டுவடிவு, திவாகரம்.

வடிவேல்-வடித்துக்கூர்மையாக்கிய வேல்; முருகப்பிரான் கையது வடிக்கப்பட்ட தன்றாயினும், வேல் என்னும் பெயரொப்புமை பற்றி அவ்வா றுடை கொடுத்தார்; பிள்ளையாரது கைவேல் அருள் வடிவினது; "உபாங்கமெல்லாந் தானருள்" என்றார் சிவஞானசித்தியாரிலும் (க, ௪௭). தேவர்கட்கு வேந்தன், இந்திரன்.

'வள்ளி' யென்பது 'ஒரு கொடி' யெனவும் பொருள் படுமாகலின், அதுகண்டு அடிகள் 'கொழுகொம்பு' எனத் தந்துரைத்த அழகு இங்கு நினைவுகூர்ந்து மகிழற்பாலதாகும். எனவே 'வள்ளி' யென்னுஞ் சொல்லுக்கு 'வள்ளியம்மை யென்னும் பூங்கொடி போல் வாளுக்' கென உரைகூறி மகிழ்க வென்பது. தெய்வயானை அம்மைக்கு 'மார்பம் அளித்தோய்' எனவும், வள்ளியம்மைக்குக் 'கொழு கொம்பாகிய தோளோய்' எனவும் அருளிச்செய்த குறிப்பு தெய்வயானையைப்போ லல்லாமல் வள்ளியம்மையைக் களவினால் வேட்ட வேறுபாட்டுண்மை விளங்கவைத்தற் பொருட்டென்க.

கருமை, இங்கு நீலநிறம் உணர்த்தும். மறைமுடி, வேதத்தின் முடிந்த கருத்து. அலகு - அளவு. 'உருவினை' என்பதில் 'ஐ' முன்னிலை விகுதி; 'நிலவுநை', நகரம் பெயரிடைநிலை; 'தருநை' என்புழியும் அது. 'முகமே' முதலானவற்றில் வரும் ஏகாரங்கள் அசை. மருண்ட உணர்வுடையார் எய்தா மாட்சிமையாவது இறைவனது அருட்டன்மையேயாகு மாகலின், அங்ஙனம் உரை கூறப்பட்டது.

(உ௯க - உ௯௫) என்று யான் அறி அளவையின் ஏத்த - என்றிங்ஙனமெல்லாம் யான் தெரிந்தவரையில் வழுத்த, தான் உவந்து குறிப்பு அரும் இன்பத்துப் பிறக்கினன் எனை - அப்பெருமான் மன மகிழ்ந்து சுட்டியுணர்தற்கரிய பேரின்பத்தில் உயர்த்துவைத்தனன் என்னை, அதுமுதல் இன்பம் ஆர்ந்து அங்கு இருத்தல் அல்லது துன்பம் என்பது அறியேன் - அதுமுதலாக இன்பம்நுகர்ந்து அவன் திருவடிக்கண் வாழ்ந்திருத்த லல்லாமல் துன்பமென்பது சிறிதும் அறியேன் ;

தான், பெருமான்; இறைவன்றரும் பேரின்பநிலை இன்ன தென்று குறித்துக்கூறல் இயலாததாகலின், 'குறிப் பரும் இன்பம்' எனப்பட்டது. என்றது, அவன் சுட்டியுணரப் படா னென்பது கருத்தென்க.

'பிறக்கினன்', பிறவினை; 'உயர்த்து வைத்தனன்' என்பதுபொருள்; 'பிறங்கல்', உயர்தல்; "பெருமைபிறங்கிற் றுலகு" என்னுந் திருக்குறளிற் (உ௯) போல; ஆர்தல் - நுகர்தல்.

(உ௯௫-உசக) அன்பொடு நீயும் அவன்வயின் செலினே பாய் அருள் ஒருவந்தம் தருகுவன் மன்ற - உள்ளன்பொடு நீயும் அப்பெருமான்பாற் சென்றால் அவன்றன் பெருகிய திருவருளை உறுதியாய் நினக்குத் தந்தருளுவான் மிகவும் நின்னை அணுகி, தலைப்பெயல் மாரியின் மருவந்து மலைப்படு நீத்தம் - கார்காலத் துவக்கத்திற் பெய்யும் பெரு மழையினாற் பொருந்தி மலை முகட்டி லுண்டாகும் அருவி வெள்ளம், பைம் நிறப் பீலியும் செம் நிறத் துகிரும் வேழ மருப்பும் காழ் அகில் துணியும் ஒருங்கு வரன்றி மருங்கு விரைஇக் குண்டுகண் படுகரில் மண்டி நிறைந்தாங்கு-பசுமை யான நிறம் வாய்ந்த மயிற்றோகையும் சிவந்த நிறம் வாய்ந்த பவளமும் யானைகளின் வெண்ணிறமான கொம்பும் அகக் காழ் உள்ள அகிற்கட்டைகளின் துண்டும் ஒன்றாக வாரிக் கொண்டு அம்மலையின் பக்கங்களில் விரைந்தோடி வீழ்ந்து ஆழமான இடத்தையுடைய பெரும்பள்ளங்களில் மிக்குச் சென்று நிறைந்தாற்போல், அவலக் கவலையும் உவலைச்

சுவையும் முரணுறு அறிவும் திருகிய செருக்கும் முதலறப் பெயர்த்துச் சிதையாது ஓடி அன்பின் நிறைந்த இன்ப வெள்ளத்து-வறுமையாலுண்டான கவலையும் உலகப் பொய் நுகர்ச்சியும் மாறுபடுகின்ற தீய அறிவும் முறுகிய செருக்கும் அடியோடு இல்லையாம்படி நீக்கி இடையில் அழியாமற் சென்று அன்பினுல் நிறைந்த இன்பமென்னும் வெள்ளத்தின்கண், பழியாக் கடும் பொடும் விழுமிதின் துவன்றி ஏழுலகு அழியினும் அழியாது ஊழி ஊழியும் வாழ்மதி சிறந்தே - பழிக்கப்படாத சுற்றத்தாருடன் சிறப்பாய் நிறைந்திருந்து ஏழுலகம் அழிந்தாலும் அழியாமல் ஊழி ஊழிகால மும் எல்லா நலங்களும் மிகுந்து வாழ்வாயாக வென்பது.

'நீயும்' என்றது, எதிர்ப்பட்ட புலவரை; பாய் அருள் - பெருகிய திருவருள்; ஒருவந்தம் - உறுதி; இச்சொல் இப் பொருட்டாதல்,

> "வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
> ஒருவந்தம் ஒல்லைக் கெடும்"

என்னுந் திருக்குறளால் (௫௬௩) தெளிவாய்ப் பெறப்படும். 'மன்ற' தெளிவுப் பொருளது; "மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்" என்பது தொல்காப்பியம் (சொல். உசஎ). மருவரல் - மருவல்; ஆவது அணுகலென்க. அணைத்தல், கிட்டல், பொருந்துதல் முதலியவற்றிற் கெல்லாம் இதனைப் பொதுச் சொல்லாக உரைப்ப; தலைப்பெயல் மாரியின் மருவந்து மலைப்படுநீத்தம், எனக் கூட்டுக.

பீலி - மயிற்றோகை; "பீலிபெய் சாகாடும் அச்சிறும்" என்பது திருக்குறள், சஎ௫. குண்டு - ஆழம்; படுகர் - பள்ளம், திவாகரம்.

துணி - துண்டு. வரன்றல் - வாருதல், மண்டி - மிக்குச் சென்று, "கடற்படை குளிப்ப மண்டி" (புறநானூறு, ௬) என்பதனுரையைக் காண்க.

அவலம் - மிடி, வறுமை; "கெடுகநின் னவலம்" பெரும்பாணாற்றுப்படை, ௬௮.

'உவலைச்சுவை' யென்றது, இங்கு உலகப் பொய் நுகர்ச்சியை; உவலை - பொய்; "உவலைச் சமயங்கள் ஒவ் வாத சாத்திரமாம்" (திருவாசகம், திருத்தெள்ளேணம், கஎ) என்புழிப்போல. பொய்நுகர்ச்சியாவது 'பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்' (திருக்குறள், மெய்யுணர் தல்,க) உணர்ச்சியாலாகும் நுகர்ச்சியென்க. இங்ஙனம் ஒன்று கிடக்க ஒன்றான நிலையற்ற மெய்யல்லாச் சிறுநுகர்ச்சி இங்கு உவலைச் சுவையென்னுந் தொடராற் சுட்டியுரைக்கப் பட்டமை பெரிதும் இன்பம் பயப்பதாகும்.

திருவருள் நோக்கத்திற்கு மாறுபட்ட அறிவு என்றற்கு 'முரணுறு அறிவு' என்று அருளிச் செய்யப்பட்டது. திருகிய செருக்கு - மிகுதியான அல்லது முறுகிய செருக்கு, "கடுங் கதிர் திருகலின்" சிலப்பதிகாரம், கஉ, க.

கடும்பு - சுற்றத்தார், (புறநானூறு, கஙகூ). துவன்றி - நிறைந்திருந்து. "இளையரும் முதியருங் கிளையுடன் துவன்றி" (பெரும்பாணாற்றுப்படை, உசுஅ) என்பதன் உரையைக் காண்க. (உஅ)

## உகூ. காப்புக் கைம்மிக்குக் காமம் பெருகியுரைத்தல்

சிறந்தபொருள்-ஏழையேன் உயிர்க்குச்சிறந்த பொருள், ஒற்றிச் செவ்வேள் - திருவொற்றி நகரில் எழுந்தருளியிரா நின்ற முருகப் பெருமானே யாவர், இவரை-இப்பெருமானை, மறந்து இங்கு உயிர்வாழ மாட்டோம் - மறந்து இவ்வுலகில் உயிர்வாழமாட்டோம், பறந்து ஓடித் திண்தோள் தழுவுவம்- விரைந்துசென்று அவரது வலிய தோளைத் தழுவுவோம், இன்றேல் - அங்ஙனம் அது கூடாதாயின், செழுவரையைக் கண்டு ஏறிக் கீழ்விழுவம் - ஒரு பெரிய மலையைக் கண்டு அதன் உச்சியில் ஏறிக் கீழே உருண்டு விழுந்து உயிர் துறப்போம்;

'சிறந்தபொருள் ஒற்றிச் செவ்வேள் இவரை மறந்து இங்கு உயிர்வாழ மாட்டோம்' என்பதன் கருத்து,

"என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யாரொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே"

என்னும் அப்பரடிகள் தேவார (திருவின்னம்பர், திருக்குறுந் தொகை, க) அருண்மொழிக் கருத்தோடு ஒத்துநிற்றல் நினைவுகூரற்பாற்று.

'செவ்வேள்' சிவந்த நிறத்தினையுடைய வேள் என முருகப்பிரான் மேல் நின்றது; வேள் - காமன்; மாட்டோம், தழுவவும், விழுவம் எனப் பன்மையாக வந்தது, தலைவி தன்னையொத்த ஏனைக் கற்புடை மகளிரையுஞ் சேர்த்துக் கூறியவாறும்; அல்லது அவள் தன்னைத் தன்மைப் பன்மையில் வைத்துக் கூறினளென்றலும் ஒன்று. 'பறந்து' என்றது, விரைவுக் குறிப்பு; செழுவரை, வளமான மலை ஆவது உயர்ந்தமலை யென்றற்கு; காண்: முன்னிலையசை.

இது, செவிலித்தாய் முதலியோரது காவலிற் சிறைப் பட்டுள்ள தலைவி காமம்பெருகித் தனது கற்புடைமை உரைத்தவாறும். தன்நிலைமையைப் பிறரறியவொட்டாத படி எவ்வளவு அடக்கினலும் தன்னுள்ள நிகழ்ச்சியால் அஃது அடங்காது வெளிப்படுதலே இனைய இடங்களிற் 'கைம்மிகல்' எனப்படும். "கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்" (பொருள், உகO) என்னுந் தொல்காப்பியத்தானும் அதன் உரையானும் இது தெளியப்படும். (உக)

## ௩O. அடியுறையிடுதல்

'அடியுறையிடுத'லாவது, திருவடிக்காணிக்கை செலுத் துதலென்க.

காணப்பெறுததோர் காட்சியையேனும் - ஏனை எவ்வாற் ருனுங் காண்டற்கியலாததோர் அரிய தோற்ற முடையையே யாயினும், கசிந்த அன்பால் - நெகிழ்ந்த உள்ளன்பினல், பேணப்பெறும் முக்கருவியின் காண்பர் - போற்றப்படு கின்ற நினைவு சொற் செயல் என்னும் மூன்று கருவிகளா

லும் நின்னைக் காணும் பெருந்தவமுடையோர் நின்னைக் காண்பர், பிறங்கும் ஒற்றி வாணப் பெருந்தகை என்பது கொண்டு - விளங்கும் திருவொற்றிமாநகரில் திருக்கோயில் கொண்டுவாழும் பேரருட்டன்மையுடைய பெருமானே! என்னும் அக் கருத்தை உட்கொண்டு, வழங்கும் அன்பால்-ஏழையேன் தேவரீருக்கு அடியுறையாக வழங்கும் உள்ளன்பினால், பூணப்பெறும் இந்த மும்மணிக்கோவை உன் பூங்கமழற்கே- தேவரீர் அணியப்பெறும் இந்த 'மும்மணிக்கோவை'யென்னும் நூல் நும் அழகிய திருவடிகட்கு என்பது.

பேணல், இங்குப் பாதுகாத்துப் போற்றுதல் என்க; என்றது, அன்பு நெறியினின்றும் பிறழாதபடி காத்துப் போற்றுதலென்பது. வாணர், வாழ்நர் என்பதன் திரிபு. 'பெருந்தகை' யென்றது, வழங்குவார் எவராயினும் அவரது அன்பினையுன்னி அதனை ஏற்கும் பெருந் தன்மையுடையா ரென்றற்கு. 'மும்மணிக்கோவை' இந்நூலின் பெயர்.

சாலவும் அரியையாயினும் அன்பினால் எளியையாதல் போல் இம் 'மும்மணிக்கோவை' யென்னும் நூலை நீ பூண்டருளுதல் இசையாதேனும், அன்பினால் வழங்குதலின் நீ அதனை ஏற்று அணிந்தருளுதல் கூடும் என்று உரைத்தருளியவாறும். அன்பிற்கொன்றுமே எல்லாம்வல்ல இறைவன் எளியனும் உண்மை, "யாவராயினும் அன்பரன்றி அறியொணு மலர்ச்சோதியான்" (திருவாசகம், சென்னிப் பத்து, ௪) என்னுஞ் செந்தமிழ் அருளுரையால் இனிது தெளியப்படும். (௯0)

திருவொற்றிமுருகர் மும்மணிக்கோவை உரை

முற்றும்.

## திருவொற்றிமுருகர் மும்மணிக்கோவை

# சொற்பொருட் குறிப்புகள்

அகம்-உள், ௪௬
அகழ்தல்-தோண்டல். ௧௨
அகன்று-பரந்து, ௨௦
அகில்-இது வழுவழுப்பானது, ௨௧
அகிற்கட்டை, ௪௯
அகில்நெய், ௨௧, ௪௪
அகைதல்-தழைத்தல்; ௩௨
அங்கு-அப்பக்கம், ௩௪
அங்கை-அழகிய கை, ௪௭
அசும்புற-துளிக்கும்படி, ௩௬
அசும்பு-துளி, ௨௧௮
அசைஇ-உடுத்து, ௩௨, ௪௪; உலாவி, ௩௮
அசையினை-இருந்தனை, ௧௦
அஞ்சல்-அஞ்சுதல், ௪௫,
அஞ்சுவரு-அஞ்சுதலுள்ள, ௪௪
அஞ்ஞையர்-அம்மையர், ௨௪
அட்டி-அப்பி, ௪௯
அடக்கமும் பொறுமையும் வேறு வேறாதல், ௧௭
அடி-காலின்கீழ், ௩௨
அடிசில்-சோறு, ௪௬
அடியார்க்கு நாளுங் கோளும் நல்லன, ௯,
அடியுறையிடுதல் - திருவடிக்காணிக்கை செலுத்துதல், ௫௦
அடு-கொன்று, ௩௪
அடுக்கம்-சாரல், ௩௬ மலைச்சாரல்
அடுதல்-சமைத்தல், ௧௯
அடும், ௧௫
அடுவழி-சமையல் செய்யும்பொழுது, ௪௩
அணி-அழகிய, ௩௭
அணிந்து-பூட்டி, ௪௬
அணிந்தும் பூசியும் விளையாடியும் வீண்நாள் கழிப்போரும் பலர் ௨௨
அணில், ௩௭
அணிலின்முதுகு, வரிகளுள்ள வெள்ளரிக்காய்களுக் குவமை, ௩௭
அணை-கட்டில், ௪௫
அணைய-எழுந்தருள, ௨௫
அத்துச்சாரியையின்றி வந்தது, ௨௫
அதர்-வழி, ௬
அதள்-தோல், ௮
அதற்புறம்-௧௦; அதன்பிறகு, ௯
அதாஅன்று, ௩௭
அதிகன்-ஒரு வள்ளல்; ஔவைக்கு, நெல்லிக்கனி ஈந்தவன்; ௪௨
அதிர்தல்-இடித்தொலித்தல் ௪௪
அந்தணர் வைகறையில், நீராடல் ௨௩.
அம்-அழகு, ௩௯
அம் கை-உள்ளங்கை, ௪௬
அமண்-சமண்சமயம். ௨௮
அமணர், ௮
அமர்-பொருந்திய, ௩௧; போர், ௪௧
அமர்த்த-மாறுபட்ட, ௧௫
அமர்தல்-விரும்புதல், ௮; இருத்தல், ௨௧; பொருந்துதல், ௨௫; பொலிவுடனிருத்தல், ௩௬
அமர்வன்-திகழ்வன், ௩௪
அமளி-படுக்கை, ௨௧

அமிழ்தைத் தமிழாக்கியது, ௧௦
அமிழ்தம், மகளிர் கிளவிக்கு உருவகம், ௩௯
அமுது-பால், ௧௦
அமைந்து-நின்று, ௪௨
அமையாது-அவா அடங்காமல், ௪௮
அமைவு-பொருத்தம், ௪௩
அயர்தல்-ஆடுதல், ௧௨, ௧௫; செய்தல், ௪௩
அயர்ந்து-செய்து, ௨௫
அயிர்-நுண்மணல், ௨, ௫,
அயில்-வேல்; கண்ணுக்குவமை, ௧௫
அரக்கன், பொருப்புக்குவமை ௧௯
அரக்கு-சிவப்பு, ௩௧
அரம் பொரு-அரத்தால் அராவப்பட்ட, ௨௪
அரி-செவ்வரி, ௪
அரிதின்-கடுமையாக, ௨௬
அரிமா-சிங்கம், ௧௫
அரிய-உயர்ந்த, ௪
அரியணை-சிங்கக்கட்டில், ௪௫
அரியதெனத் தெரிந்ததைப் பெரியவர்க்களித்தல், ௪௨
அருகா-கெடாத, ௧௦; குறையாத, ௪௮
அருகிய அறிவு-குறுகிய அறிவு, ௧௪
அருஞ்சுவை-மிக்க சுவை, ௭
அருட்கடல், அருட்டன்மைநிரம்பிய கண்களுக்குவமை, ௩௧
அருட்டன்மை மருண்ட உணர்வுடையோர்க்குஎட்டாது, ௪௯
அருணகிரிநாதர் - திருப்புகழ் அருளிச்செய்தவர், ௨௮
அருணிலைபெறுத லரிதெனமொழிதல், ௨௫
அருணிலையுரைத்தல், ௧௯
அருணிலை வியத்தல், ௧௬
அருத்தல்-ஊட்டுதல், ௭
அருந்த-பருக, ௨௦
அருந்தி-கௌவி விழுங்கி, ௩௮
அரும்பு முகையாந்தன்மை, ௩௮
அருமை, மிகுதிமேற்று, ௭
அருவப்பொருள் - உருவமில் பொருள், ௩௯
அருவி-மலைக்குஆடை, ௧௯
அருள்தரவேண்டல், ௩௪
அருளியல்புரைத்தல், ௪
அல்லாந்து-மகிழ்ந்து, ௪௭
அலகிலா-எண்ணிலா, ௪௮
அலகு-அளவு, ௧௭, ௨௫
அலர-மலர, ௨௮
அலவன்-நண்டு, ௭; ஆண்நண்டு
அவர்-அவ்வியல்பினர், ௪௩
அவலம்-வறுமை, ௪௯
அவியும்-அழியும், ௨௦.
அவிழ்-பரப்பும், ௨௮; சிந்தும், ௩௧
அவிழ்த்து-பரப்பி, ௨௦
அவையல்-குற்றலரிசி, ௧௯
அழல்நிறக் கடவுள்-தீமேனியையுடைய சிவபிரான், ௨௭
அழியாப்பேறு-இறைவன் திருவடிப்பேறு, ௨௬
அழிவுபடும் உள்ளம், ௧௫
அழுங்கல்-இரங்கல், ௩
அழுங்கா-அழியாத, ௧௭
அழுங்கா உள்ளம்-உறைப்பொடு நிற்கும் உள்ளம், ௧௭
அழுவிளிக் கம்பலை-ஓலம் ௧௪
அளவு-வரம்பு, ௩௯; எல்லை, ௪௨
அளவை-(தருக்கம்), ௨௩, ௨௭; (அளவான) நேரம், ௪௧, ௪௬
அளவை தவறாமற் பேசுவது, வளமான உணர்வினியல்பு, ௪௧
அளவை நூல்-தருக்க நூல், ௪௧
அளவையில்-வரையில், ௪௩
அளவையின்-வரையில், ௪௯

அளாய்-கலந்து, ௩௬
அளாய-கலந்த, ௧௨
அளி-அன்பு, ௧௩ : முதிர்ந்த, ௩௯
அருள்கூர்ந்து காக்கும், ௪0
அளித்தோய்-உதவியோய், ௪௮
அளியேம் உயிர் - அருள்செயத் தக்க எமது உயிர், ௨௫
அளை-வளை, ௭
அளைஇ-துழாவி, ௩௮
அற்கும் இன்பம்-நிலையான இன்பம், ௧௧
அற்றம்-சோர்தல், ௨௭
அற்று-ஒழிந்து, ௪௩
அற-நீங்க, ௩௮; நீங்க, ௪௪; இல்லையாம்படி, ௪௯
அறங்கரை நா, ௧௭
அறல்-அறுப்பு, ௨; கருமணல், ௧௩, ௨௯
அறலும் வண்டினமும் நீனிறமுங் கூந்தலுக்குவமை, ௨௯
அறன்மருப் பெருமை, ௨
அறிஞர் நகைப்பவும் அறிவிலார் திகைப்பவும் உரையாடல், ௧௪
அறிவிற் பெரியராயும் நடையிற் சிறியராயுமிருத்தல், ௩௪
அறிவு-மெய்யறிவு, உலகுணர்வு ௧௨
அறிவும் அவாயும் ஒருவழிச்செல்லல், ௧௯
அறிவைத் தன்வயமாக்கிச் செல்லும் மனத்துக்குப் புல்லைச் சாய்த்தோடும் புனல் உவமை, ௪
அறிவொளி, ௧0
அறுசுவைக்கறி, ௪௬
அறுமுகத்தையனின் ஏவலாளுக்கிருந்த வளம், ௪௪
அறுவை-ஆடை, ௧௯, ௨௧, ௩௨, ௩௮
அறை-பாறை, ௩௬
அன்பில் வயமாகும் போது, எல்லா அகக்கருவி புறக்கருவிகளும் அறிவும் ஒருவழி நிகழுமென்பது, ௨௯
அன்பிற்கொன்றுமே இறைவன் எளியனாதல், ௫0
அன்பின் இயல்பு, ௧௧
அன்பினால் அணுகின், இறைவன் உறுதியாக அருள்தருவன், ௪௯
அன்புக்குத் தாய், ௧௩
அன்புநீர், ௫
அன்பை நீரென்பதன் காரணம் ௫
அன்றி-அல்லது, ௩௯
அன்ன-ஒப்ப, ௩௭
அன்னத்தின் ஆணும் பெண்ணுங் காதற் பொலிவுடன் தாமரையில் வீற்றிருத்தல், ௩௭-௮
அன்னம்-ஒரு பறவை, ௩௭
அனிச்சமலர், ௩௯
அனைய-ஒத்த, ௪௬
ஆங்கு-உவமச்சொல், ௨; போல, ௩0; அங்ஙனமே ௩0
ஆசனம் முதலிய அறுவகை யோக முறைகள் முறையே கூறப்படுதல், ௨௫-௬
ஆசிரியன் தன்மலர்க்கையை மாணாக்கன் றலையிற் சேர்த்து அருள்புரிதல்; ௪௭
ஆசிரியனை நிலம்பட வீழ்ந்து வணங்கல், ௪௭
ஆட்டி-நீராட்டி, ௪௬
ஆடவர்க்கு அணிகலன்கள், ௪௬
ஆடவர்க்கு மகளிர் நெய் தேய்த்து நீராட்டிப் புகையூட்டுதல், ௪௬
ஆடவர் தோள்களுக்குங் குளிர்ச்சி கூறப்படுதல், ௩௫
ஆடவர் மார்பில் மலர்மாலை, ௪௬
ஆடவர்மார்புக்கு அழகு அகன்றிருத்தல், ௩௨

ஆடிய-விளையாடிய, ௪௮
ஆடுங்காலை - விளையாடும்பொழுது, ௧௨
ஆடுறும்-விளையாடாநிற்கும், ௩௯
ஆண்டை-அங்கு, ௪௯
ஆம்-நீர், ௭
ஆம்பல், ௬, ௧௨; அல்லி, ௩௧, ௩௮
ஆம்பல்நெருப்பு - செவ்வாம்பற் பூவாலான நெருப்பு, ௪௩
ஆம்பன்முகை நெகிழ்தலும் பவழச சிமிழ் திறத்தலும் செவ்வாய் முறுவலித்தற்குவமை, ௩௦-௧
ஆமைஅடுப்பு-ஆமையோட்டினாலான அடுப்பு, ௪௩
ஆயம், ௬
ஆர், உவமச்சொல், ௨௧; முத்து ஆர் முல்லை; ஒக்கும், ௨௬; நிறைந்து, ௨௯
ஆர்க்கும்-ஒலிக்கும், ௨௩
ஆர்ந்த-நிறைந்த, ௪௪
ஆர்ந்து-நுகர்ந்து, ௪௯
ஆர்ப்பு-ஆரவாரிப்பு, ௨௩
ஆர-உண்ண, ௩௯; நுகர்ந்து நிறைய, ௨௭
ஆரதர்-கொடிய வழி, அருமை கொடுமைக்கு, ௯
ஆராமம்-மலைச்சோலை, ௯
ஆராய்ந்தமையாத அறிவு; ௯
ஆரும்-மேயும், ௧; நிறையும், ௧௨
ஆருயிர்த்தொகுதி, ௧௩
ஆலவாய்-மதுரை, ௨௭
ஆவணம்-கடைத்தெரு, ௪௦
ஆழி-கடல், ௪௧
ஆற்றல் வலிமை, ௧௭ திறமை, ௨௭
ஆற்றல்பொருளில் ஒற்றுவலித்தல், ௧௭
ஆற்ரு-தாளாத, ௬
ஆற்றும்-செய்யும், ௨௯ இயற்றும், ௪௨
ஆறு-வகை, ௯
ஆறுசெல்மாக்கள், ௯
ஆனா-அமையாத, ௯
ஆனாது-நீங்காது, ௧௩; இடைவிடாது, ௪௧; ஒழியாது, ௪௮
ஆனாவேட்கை, ௪௦
இகல்-மாறுபாடு, ௮
இங்கு-இங்ஙனம், ௪௦
இங்குலிகத்தால் வாயிதழ்க்கு நிறம் ஊட்டுதல், ௧௩
இசை-புகழ், ௨௦; ஓசை, ௨௪
இசைக்கும்-ஒலிக்கும், ௨௪
இசைகேட்டுப் புள்ளினம் உணர்வொழிதலும் வற்றல் மரந்தளிர்த்தலும், ௨௧
இசைத்து-பாடி, ௪௩
இசைத்துணைவர்கள் முழவமுங் குழலும் பாணியும் இயக்குதல், ௪௪
இசைப்ப-சொல்ல, ௨௭
இசையினிமை தோன்றப் பேசுதல், ௩௧
இசையைச் செவியே வாயாகப் பருகல், ௨௧
இஞ்சி-மதில், ௪௪
இடம்-உள், ௩௯
இடிகுமுறல் மத்தளம் ஒலித்தற்குவமை, ௪௪
இடுதல்-செலுத்துதல், ௬௦
இடுபு-இடுதலால், ௪௭
இடும்பை-துன்பம், ௪௭
இடை-ஏழனுருபு, ௨; நடுவு, ௨ள், ௨௬, இடத்து, ௩௯; இடுப்பு, ௪௦; ஊடு-௪௩; இடையிடையே, ௪௬.
இடைவாய் - மலைப் பிளவுகள், ௩௬
இணர்-பூங்கொத்துகள், ௩௯

இணர்ந்து-நெருங்கி, ௨௯
இதண்-பரண், ௩௯
இதழ்களின்சார்பாற் செந்நிறமும் எற்றொளிரும் பற்கள், ஒருபாற் செம்மையும் மற்றொருபால் வெண்மையுமுடைய மாதுளை விதைகட்குவமை, ௩௭
இம்பர்-இவ்வுலகம், ௨௨
இம்மென - இம்மென்னும் ஒலியுண்டாக, ௩௯
இமயச்சுனையில் முருகன் தோன்றி விளையாடினமை, ௪௮
இமயம்-இமயமலை, ௪௮
இமயமலையின் வட்டக்கல்லிற் பொதியமலையின் சந்தனக் கட்டை உரைபடல், ௬௪
இமிர்தல்-ஒலித்தல், ௨௧
இமைக்கும் ஒளிவிடும், ௨௫, ௪௮
இமைப்ப-விளங்க, ௯
இமைப்பவும்-ஒளிவிடவும், ௧௨
இயம்பி-கூறி, ௨௮
இயல்-ஆற்றல், ௨௮; வகை, ௬௨
இயற்கைகள் நிலைமாறினுங் கெடாமல் வாழ்கவென்னும் வாழ்த்துரை, ௬௨
இயற்றி-அமைத்து, ௪௫ படைத்து, ௬௭
இயைந்தார்-இணங்கியுள்ளவர், ௬௦
இரங்குதல்-ஒலித்தல், ௧௦
இரட்டல்-விசிறல், ௨௧
இரவன்மாக்கள், ௧௬
இரீஇ-இருத்தி, ௬௯
இருபுடை-இரு பக்கங்கள் ௧௬
இரும்-பெரிய, ௩௯, ௬௦; கரிய, ௬௬
இரும்பு திரித்தன்ன மருப்பு, ௨
இரும்பெருங்குன்றம் ௧௩
இருள்-ஆணவம், ௧௯; இரா, ௬௦; இயற்கையே பொருந்தியது, மலவிருள், ௬௦, ௬௮,
இருள்நிலையிலிருந்து ஓரறிவு நிலை, ௧௯
இருள்நீக்கும் ஒளிக்கொழுந்து, மருள்நீக்குந் தலைவிக் குருவகம், ௬௦
இவ்வாழ்க்கைச் சிறப்பு, ௧௧
இலங்க-விளங்க, ௪௫
இலங்கி-விளங்கி, ௩௧
இலவம் பூ, சிவந்த வாயிதழ்க்கு, ௧௩
இலன்-வாழ்ந்திலன், ௬௨
இலை, ௬௭
இவர்ந்து-கரு; எறி, ௨௫; மேற்கொண்டு, ௬௦
இவர்ந்தெழு, ஒருசொல், ௧
இவறல்-கொடாமை, ௨௨
இவறி-அவாமிகுந்து, ௨௯
இழிசின-இழிந்த, ௧௫
இழிந்தது-கீழே ஒழுகியது, ௩௭
இழியும்-ஒழுகுகின்ற, ௩௯
இழுக்கா-பழுதுபடாத, ௩௫
இழை - மணிகளிழைத்த அணி, ௮; நகை, ௩௪; அணிகலன், ௩௫
இழைத்து-அமைத்து, ௧௨
இள-மென்மையான, ௩௯
இளகி-உருகி, ௩௭
இளமைக்கோலம் - காளைப்பருவம், ௩௬
இற-கடப்ப, ௨௯
இறந்து-கடந்து, ௨௯
இறவு-இறாமீன், ௩௮
இறால்-தேன்கூடு, ௧௩, ௩௫
இறை-வரி, ௬
இறைகூரும்-தங்கும், ௩௮
இறையனாரகப்பொருளுரைச் சிறப்புக்குக்காரணங்கள், ௨௭
இறைவன் அருட்கிழத்தியரும் உயிர்களின் கூனற்கிழத்தியரும், ௧௬

இறைவன் அருமையும் எளிமையும், ௩
இறைவன் அன்பர்க்கெளியன், ௪௮
இறைவன் ஆடையணிகள், தோற்றமாத்திரையாய் அமைதல், ௧௯
இறைவன் இயற்கையருளினனாகலின், உயிர்கட்கு மலத்தைப் போக்கித் தன் திருவடிப் பேரின்பம் அளிக்கின்றனன், ௪௮.
இறைவன் இயற்கையே வினையின் நீங்கிய அறிவு ஒளியினன், அருள் சுரக்கும் இயல்பினன், ௪௮
இறைவன் இன்பம் சுட்டியுணர்தற்கியலாதது, ௪௯
இறைவன், உணர்ந்தாரறிவினுக் தோன்றுமைக்கு விளக்கம், ௨௯
இறைவன் உயிர்கள்பால் அன்புகாட்டற்கும், மக்கள் தம் புதல்வர்கள்பால் அன்புகாட்டற்கும் ஒப்புமை, ௧௩
இறைவன் எழுந்தருளும் உள்ளத்துக்கு நறும்பால் பெய்த பொற்கலம் உவமை, ௪
இறைவன் ஐந்தொழில்கட்கும் பொறிகள் ஐந்தொழில்கட்கும் ஒப்புமை, ௧௩
இறைவன் ஒருவனே சமயந்தோறும் பல்வேறுருவில் விளங்குகின்றனன், ௪௮-௯
இறைவன் கண்ட பொருள்-கடவுள் அருளிச்செய்த களவியல், ௨௭
இறைவன் கண்ணுக்குங் கருத்துக்கும் எட்டாதவன், ௪௮
இறைவன் கண்ணெனுஞ் சுனையில் அருளருவி தோன்றித் தோட்குன்றிற் பரந்து உயிர்கட் கருள்செய்தல், ௨௮
இறைவன் காணப்பெறாத நிலையினனாயினுங் குழைந்த அன்பிற்கு எளிவரும்இயல்பினன், ௬௦
இறைவன் குன்றுகளி லுறைதற்கும் உயிர்கள் ஆணவக்குன்றுகளிலுறைதற்கும் ஒப்புமை, ௧௩
இறைவன் தேவர்கட்கு அரியனாய் அடியவர்கட் கெளியனாதல், ௪௦
இறைவன் நான்மறைகளின் முடிவில் நிறைந்து நிற்பவன், ௪௮
இறைவன் பிறவியுட்படான், ௯
இறைவன் மண் முதலான ஐம்பெரும் பொருள்களும் புணர்ந்து நிற்றல், ௪௮
இறைவன், மயக்கவுணர்வொடு கூடிய முரட்டியல்பினர்க்கும் அருள் செய்கின்றமை, ௪௯
இறைவன் திருவடி எவ்வகைப் பொருளுந் தாய்தாய் நிலைபெறுதற்குரிய இடம், ௩௨
இறைவன் திருவடி நினைவில்லாதவர், உண்மை யறிவில்லாதவர், ௪௦
இறைவன் திருவருளால் மாணாக்கன் ஆசிரியனை எதிர்ப்படல், ௪௭
இறைவனுக்கு உருவம் உலகு, ௪௮
இறைவ னுலகங் காலவரம்பில்லாதது, ௪௯
இறைவனைவிட இனியவர் யாருமில்லை என்பது, ௪௦
இன் ஒருபொருளது, ௧௦
மணமினிய, ௪௯

இன்பத்தின் வகைகளும் இயல்புகளும், ௨௩
இன்றே-இப்பொழுதே, ௩௪
இன்றேல்-கூடாதாயின், ௪௯
இன்னா-தீய, ௨௧
இன்னாது-தீயது, ௪௩
இன்னுரை-இனிய வரவேற்பு மொழி, ௪௪
இன்னுரைச்செந்தமிழ், ௧0
இன்னே-இப்பொழுதே, ௪௨
இனநலனுரைத்தல், ௮
இனம்-கூட்டம், ௩௮
இனி-இனிமேல், ௪0
இனிக்கும் - மகிழ்வைத் தருகின்ற, ௩௩
இனியார்-இனி, யார்? இனியராய், ௪0
இனியான் - இன்பமளிப்பவன், ௨௫
ஈங்கு-இப்பால், ௧௯
ஈட்ட-சேர்ப்பதற்கு, ௨௮
ஈட்டி-தொகுத்து, ௪௩
ஈண்டிய-திரண்ட, ௧௭
ஈண்டு-இவ்வுலகில், ௩௧
ஈத்த-கொடுத்த, ௩௨
உதவிய, ௪௨
ஈயாதவர்நிலை, ௨௨
ஈயாதவர் பொருள் கள்வர் முதலியோரால் கவரப்படுதல், ௨௨
ஈர்-இரண்டு, ௩௧
(இளைய பேன்), ௪௬
ஈர்ந்து-அறுத்து, ௨௬
ஈர்ம்பொதும்பு, ௭
ஈரம்-குளிர்ந்த, ௪
ஈறுகெட்டு ஒற்றுமிக்குப் புணர்தல், ௩௬
ஈறுகெட்டு மென்மைமிக்கது, ௧௨
உகள-புரள, ௨0; துள்ளித் துள்ளிப் பாய்தல், ௩௫
உகளல்-துள்ளல், ௩௮
உகளவும்-புரளவும், ௩௮
உகளும்-புரளுகின்ற, ௩௩
உகிர்-நகம், ௩௮
உகுத்தும்-சொரிந்தும், ௨௬
உகுப்ப-சொரிய, ௭, ௩௬
உச்சி-தலைமேல், ௪௫
உசும்புந-இயங்குவன, ௩
உஞற்றும்-உழப்பும், ௩௩
உட்கருவி-மனம் முதலிய அகக்கருவிகள், ௨௯
உட்கு-அச்சம், ௬
உடன்போக்கு நிகழ்ச்சி, ௮
உடீஇ-உடுத்து, ௪௬
உடு-விண்மீன், ௪௨
உடுக்கை-உடை, ௮
உடும்பு, ௪௧
உடைந்து-தளர்ந்து, ௪௧
உண்டு மகிழ்ந்து கிடப்பாரும் உலகிற் பலர், ௧௯
உணக்கும்-உலர்த்துகின்ற, ௧
உணர்வில்லாதவரிடம்பொருள் கேட்டல் பிழை, ௧௧
உணர்விலார் - பகுத்துணர்வு கூடாதவர், ௧௧
உணர்வு-கருத்து, ௪௮; அறிவு ௪௯
உணர்வுக்கு வளம், ஆராய்ந்து கண்ட நூற்பொருள் வளம், ௪௧
உணவின் வகைகள்: கறி, அடிசில், துவை, கனி, நெய், பால், தயிர், சர்க்கரை முதலியன, ௪௬-௭
உணவின் வகைளும் உண்ணுமுறைகளும், ௧௯
உத்தி-நெற்றியின்மேல் தொங்கவிடும் ஓர் அணிகலத்தொங்கல் ௩0
உப்பு வண்டிகள் மணலிற் புதையும்போது உமணர் பிடர் கொடுத்தெழுப்புதல், ௩௩

உம்மை உயர்வு, ௩௫
உமணர்-உப்பு வாணிகர், ௩௩
உய்குவது-உயிர் பிழைப்பது, ௭
உய்திறம்-உய்யும் வகை, ௬
உய்யக் கொண்டு-உய்ய ஆட்கொண்டு, ௨௩
உயர்-மிக்க, ௩௭
உயிர் அருவப்பொருளென்பது, ௪0
உயிர் அருவமென்பது புரைபடும்படி, அஃது ஓர் உருவமாய் வந்ததெனத் தலைவியைக் கூறல், ௩௬, ௪0
உயிர், உடம்பு முதலிய அறியாமைப் பொருள் அன்று, ௪௭
உயிர் ஒற்றை இயக்குதல், ௧௭
உயிர்கட்குச் சிறந்த பொருள் இறைவனே என்பது, ௪௬
உயிர்களோடு இறைவன் நட்புச் செய்யலாமென்பதற்கு ஏதுக்கள், ௧௫
உயிர்த்தல்-தளிர்த்தல், ௨௧
உயிர், தலைவிக்கு உருவகம், ௪0
உயிர் தனக்கென ஓரியல்பில்லாதது, ௩
உயிர் தோன்றுதொட்டே மலத்தாற் கட்டுண்டது, ௪அ
உயிர்ப் பலி வேள்வி - உடம்பையே பலியாக இடும் வேள்வியின் முறைகள், ௨௬
உயிர்-உடல்; ஆகுபெயர்
உயிரோவியம், ௫
உரப்பும்-வாயால் அதட்டுகின்ற, ௩௩
உரம்-மார்பு, ௨௪, ௪0; வலிமை, ௨௬; இங்கே பெருமிதத்தின் வன்மை
உரவோய் - அறிவு வலியுடையோய், ௪௨
உரவோர்-அறிஞர், அ, ௨௨; தக்கோர், ௨அ
உரவோன்-பேரறிவினையுடையவன், ௧௧
உரன்-அறிவு, ௬
உராஅய்-பரந்துசென்று, ௩அ
உரி-தோல், ௪௬
உரு-நிறம், ௩௧, அச்சம், ௩௪; தோற்றம், ௪௪
உருகுகின்ற பொன்னுக்கு ஒளிமிகுதி, ௪௭; தவிசின் பொன்மினுக்குக் கூறப்பட்டது.
உரும் - இடியோசை, ௯; இடி, ௪௪
உருவக உவமைக் கற்பனையழகுகள், ௩௧
உருவகம், ௧௩
உருவவழிபாடு, ௩
உருளை-சக்கரம், ௩௩
உரை-பேச்சு, ௨௬; சொற்கள், ௪௨; புகழ், ௪௪; பூச்சு, ௪௪
உரைத்த-தேய்த்தெடுத்த, ௨௧
உரைத்து-தேய்த்து, ௪௪, ௪௬
உரைநிகழ்த்தும் - உரைவிரிக்கும், ௪௧
உரையலை-உரைப்பாயல்லை, ௪0
உரையீர்-சொல்கின்றிலீர், ௪
உலக நிலையிலும் அருணிலையிலும் அம்மையே அப்பனைக் காட்டல், ௧௧
உலகம் இருவகை, ௩
உலகமும் உயிரும் பொய்ப்பொருளென்போர், ௨௨
உலகமுழுமையும் அருளாகக் காண்டல், ௨௬
உலகியற் பொருள்களெல்லாம் அறியா இயல்பின, ௪௭
உலகு-மக்களுலகு, ௨; உலகம், ௪அ
உலகைப்பாதுகாப்பவள் உமை, ௨௫
உலம்-உருண்ட கல், அ; திரள்கல், ௩௧

உலவா-கெடாத, ௪௨
உலவை-கோடு, ௩௭; மரக் கொம்பு
உலாஅம்-அசையும், ௩௮
உலாம்-வீசும், ௨௩
உலையா-கெடாத, ௧௫
உலையாவாழ்க்கைத் தேவர், ௧௫
உவந்து-மனமகிழ்ந்து, ௪௬
உவமப்பொருள், ௩௧
உவமவுருபு, ௪
உவமையாகுபெயர், ௨, ௩௭
உவர்க்கழி - உவர்த்த நீருள்ள கழி, ௩௭
உவல்-தழை, ௮
உவலிடு பதுக்கை, ௮
உவலை-பொய், ௪௬
உவலைச்சுவை - உலகப்பொய் நுகர்ச்சி, ௪௬
உழக்கும், ௩௬
உழத்தல்-வருந்துதல், ௮
உழத்தி - மருதநிலத்துப் பெண் ௩௩
உழந்த-வருந்திக்கிடந்த, ௪௧
உழவர் குவளைப் பூடு களைந்து கொன்றுபோகட்ட கயலின் நடுவே எறிதல், ௫
உழன்ற-உள்ளம் அலைவுற்ற, ௨௮
உழன்றும் - வருந்திப் பழகியும், ௨௫
உழிதரல்-திரிதல், ௨௨
உழிதருகாலை - அலைவுற்றுக் கிடந்த பொழுது, ௨௮
உழியுழி-இடந்தோறும், ௧௨
உழுந்து, ௪௧
உழுந்து உருளும் நேரத்தை விரைவுக்குக் கூறல், ௪௧
உழை-(இடம்), ௨௫
உள்ளங்கை பற்றுதல், தோழமையான அன்பை விளக்கும், ௪௬
உள்ளம் நல்லியல்புகளால் விரிதல், ௧௮
உள்ளுதல்-நினைத்தல், ௨0
உளங்கொண்டு-நினைந்து, ௩௧
உளம் என்னுங் கிழியில் ஓவியமெழுதுதல், ௩௬
உளரி-கோதி, ௪௬
உளியம்-கரடி, ௬
உற-உண்டாகும்படி, ௨௭; மிக, ௩௩; பொருந்திய, ௪௪; படிய, அணைய, ௪௫
உறக்கும்-உறங்கவைக்கும், ௩௬
உறு - நிறைந்த, ௨௭; மிக்க, ௨௮, ௩௬, ௩௬, ௪௫; பெரிய, ௩௩; மிகுக்கும், ௩௪; வாய்ந்த, ௩௭; மிகுந்த, ௩௭; பொருந்திய, ௪0
உறுக்குங்காலை - விளக்கும் பொழுது; ௧
உறுக்கும்-விளக்கும், ௩௪
உறுகண்-துன்பம், ௪௮
உறுத்துக்கிழிக்கும் பரற் கற்கள், ௮
உறுதி-நன்மை, ௩௪, ௪௨; உயிர்க் குறுதி பயப்பன, ௪௮
உறுதுணை-சிறந்ததுணை, ௩௬
உறுப்ப-மிகுப்ப, ௪௧
உறுபொருள்-நல்வினை தீவினை, ௧௧
உறும் - விளங்கிய, ௨௭; மிக்க, ௪௮
உறும் இடன்-உற்ற இடன், ௩௧
உறுமனைக்கிழத்தி - அன்பின் மிக்க மனைக்கிழத்தி, ௪௧
உறுவது-பொருந்துதல், ௧௧
உறுவர்-பெரியார், ௧௪
உறுவன்-மிக்கோன், ௪0; தக்கோனுன பேகன், ௪௨
உறை - உறைதலை, ௧; வாழ்கின்ற, ௩௬

உறைப்ப - துளிப்ப, ௩, ௨௯; சொரிய, ௪௫
உறையும்-உயிர்வாழும், ௪௯
ஊக்கிய-முயன்ற, ௨௯
ஊட்டி-எற்றி, ௩௦; புகட்டி, ௪௯
ஊட்டிய-தோய்வித்த, ௩௧; எற்றிய, ௩௭
ஊட-ஊடுதல்செய்ய, ௩௪
ஊர்ந்த-மிதந்த, ௩௩
ஊழி கழியினும் நீடுவாழ்கவெனல், ௪௨
ஊற்றுணர்வு, ௧௯
ஊறு-தொட்டுணர்வு, ௩௨
ஊன்றி-வைத்து, ௪௦
எக்கர்-மணற்குன்று, ௩௨
எச்சம் காரணப்பொருளில் வருதல், ௩௫
எட்டாம் பிறை, நெற்றிக்கு, ௧௩
எடுத்த-உயர்ந்த, ௩௧; சுமந்துவந்த, ௩௩; தூக்கிய ௩௭
எடுத்தோய்-எந்தியோய், ௪௮
எடுப்ப-எழுப்ப, ௩௮
எடுமார் - அழித்தெடுத்தல் வேண்டி, ௩௫
எண்டோள்களாவன, எட்டுத்திசைகள், ௧௪
எண்ணிடைச்சொல், ௧௯
எதிர்-முன், ௩௯, ௪௦; திருமுன்; ௪௫
எம்மனோர் - எம்மைப் போன்றவர், ௪௦
எமை-எம்மை, ௪௦
எய்தி-அடைந்து, ௪௮
எயில்-மதில், ௭, ௨௯
எரி-தீப்பிழம்பு, ஞாழல்மலர்க்குவமை, ௨௦; நெருப்பு, ௩௨; தீ, ௩௯; தீக்கண், ௪௮
எரியுந் தீ, அசோக இலைக்குவமை, ௩௯
எருக்கு, ௧௮
எருத்துமாட்டின் இமில், பருத்த புறக்கழுத்துக் குவமை, ௩௧
எருமை, ௨
எல்லாம் இறைவனே உவந்தளிப்பன், ௧௧
எல்லை-அளவு, ௪௭
எல்லையில் காலம் வாழ்கவென வாழ்த்துதல், ௪௭
எலிமயிர்க்கம்பலம்-எலிமயிரினாலான விரிப்பு, ௪௫
எலுமிச்சம்புதல், ௩௭
எழாஅல்-யாழ், ௪௪
எழில்-அழகு, ௩௯
எழில் நலங்கூறி நெஞ்சறிவுறுத்தல், ௨௯
எழீஇ-எழுந்து, ௩௮; தோன்றி, ௪௨
எழு-இருப்புத்தூண், ௨௯, ௩௧
எழுதல்-விளைதல், ௩௪
எழுந்த-தோன்றிய, ௪௫
எழுந்து-நின்று, ௩௦
எழுப்பி-மேல்தூக்கி, ௩௩
எழுப்பிய-நிறுத்தப்பட்ட, ௪௬
எழுமிடம் - தோன்றும் முதலிடம், ௩௨
எழுவாய்-எழுமிடம், ௨௦
எளிய புலவரது நூல், அலைக்குவமை, ௨௦
எளியோரை அடித்து மகிழும் முரட்டியல்பு, ௧௪
எளிவந்த-எளிதில் வந்த, ௪௮
எளிவந்தோர்-வறியவர், ௧௪
எறிந்து-ஊறு செய்து, ௯; அடித்து, ௧௪
எறிப்ப-ஒளிவீச, ௩௯
என்னில்-என்றால், ௪௧
எனவாங்கு - என்றங்ஙனமாக, ௧௫
ஏகாரங்கள் எண்ணுப்பொருள, ௨௦

எகாரம்-அசை, விளி, ௮; இசை நிறை, ௧௭
எத்த-வழுத்த, ௪௧, ௪௯
எத்துரை-வணக்கவுரை, ௧௧
எதிலர்-அயலார், ௪௧
எது-காரணம், ௮
எந்திய-தாங்கிய, ௧௪
எந்து எழில்-மிக்க அழகு, ௪௮
எந்துதல்-உயர்ந்துநிற்றல், ௧௧
எம்-பேரின்பநெறி, ௧௧
எய்க்கும்-ஒக்கும், ௭
எய்தல்-ஒத்தல், ௮
எய்ப்ப-ஒப்ப, ௩௨, ௩௬
எர்-அழகு, ௮, ௪௬
எலாத-இசையாத, ௧௯
எவலாளர் - அழகுமிக்கவராயிருத்தல், ௪௬
எழுலகழியினும் அழியாமல் ஊழியூழி வாழ்கவெனல், ௪௯
எழுலகு, ௪௯
எறு-சிங்கஎறு; ௪௪
ஏனோன்-மற்றொருவன், ௪௬
ஐ - ஐந்து, ௪௫; தகட்டுவடிவு, ௪௮
ஐது-அழகு, ௩௨, ௩௩.
ஐந்தொழில்களை ஒன்றச்செய்யும் ஆற்றலான் ஒற்றியூர், ௧௮
ஐம்புல வின்பங்களையும் மகளிர் ஒரே நேரத்தில் தருதல், ௨௨
ஐம்பூதத் திரிவு, ௩
ஐம்பூதமும் விந்துநாதமுமெல்லாம், இறைவன் நினைவு வழியே மாறியும் நடைபெறுவன, ௧௦
ஐம்பெரும்பூதம், ௪௮
ஐயன்-தந்தை, ௩; தலைவன், ௪௦
ஐவகைப்பட்ட பூதம், ௧௦
ஒக்க - இசைய, ௨௨
ஒடியாச் சிறுமொழி, ௫
ஒடுஉருபு - ஒப்பலொப்புரை, ௩௦
ஒண்புனல் - விளக்கம் மிக்கநீர், ௨௦
ஒண்பொருள் என்பதன் விளக்கம், ௨௯
ஒப்பனை, ௫
ஒப்பு-மனவொருமை, ௨௨
ஒப்புமைகூறி அருணிலை வேண்டல், ௧௨
ஒய் என-விரைந்து, ௨௮; சுருக்காக, ௪௫
ஒரு-ஒப்பற்ற, ௨௯, ௩௭
ஒருங்கிநிற்றல்-கூம்பிநிற்றல், ௨
ஒருங்கு - ஒன்றாய், ஒன்றோடொன்று, ௯; ஒன்றுசேர்ந்து, ௨௭; உடன், ௩௨; ஒன்றாக, ௪௯
ஒருங்கு தலைமயங்கிய, ௧௩
ஒருங்குற-ஒன்றாய் விரவ, ௯
ஒருத்தல்-யானை முதலிய விலங்குகளின் ஆண், ௩௫
ஒருதிறம்-ஒருபால், ௧௦
ஒரு முறை-ஒற்றுமை நிலை, ௨௬
ஒரு மொழி-'ஓம்' என்னும் ஒருமொழி, ௧௦, ௪௮
ஒருவ-ஒரு முழுமுதலோனே, ௪௮
ஒருவந்தம்-உறுதியாய், ௪௯
ஒருவழி-ஒருமிக்க, ௧௦; ஒன்றாய், ௧௩; ஒருங்கே, ௨௭
ஒருவன்-ஒப்பற்ற கடவுள், ௪௫
ஒருவா-நீங்காத, ௧௨, ௧௭
ஒருவாது-ஒழியாமல், ௧௧
ஒலிதமிழ் இன்னொலிமிக்க தமிழ், ௧௮
ஒழிய-தவறியொழிய, ௩௫
ஒழுக்கத்தை உயிரினும் பெரிதாக ஓம்புதல், ௪௧
ஒழுக்கம்-நடை, ௨௭
ஒழுக்கி - ஒழுகச்செய்து, ௩௭
ஒழுகி - நீண்டு, ௩௧

ஒழுகிய-ஓடிய, ௪; நீண்டுகிடந்த, ௩௨
ஒழுகுதொறும் - நீளுமிடமெல்லாம், ௩௨
ஒழுகை-வண்டி, ௩௩
ஒள்-மேன்மையான, ௨௯: அழகு, ௪௫
ஒளி-விளக்கம், ௧0
ஒளிகள் - ஞாயிறுந் திங்களுந் தீயும், ௪௮
ஒளிச்செலவு-ஒளியோட்டம், ௪௧
ஒளிர்-விளங்குகின்ற, ௪௭
ஒளிரும்-விளங்குகின்ற, ௩0
ஒளிவளிச்செலவுகளினும் விரைவாகச் சித்திரக் கவியியற்றல், ௪௧
ஒற்ற-ஒடுங்க, ௮
ஒற்றி-திருவொற்றியூர், ௭; பொருந்தி, ௨௨
ஒற்றிவைத்தெழுதல், ௧௭
ஒற்றெழுத்தோடொத்தலின் ஒற்றியூர், ௧௭-௮
ஒன்றாய் ஆற்றலுள்ளது ஒற்றியூர், ௧௭
ஒன்று - சிறிது, ௧௩; சிறிதும், ௪௧; ஒருங்கு, ௨௭
ஓ-ஒழிதல், ௨௯
ஓங்கார மெய்ப்பொருளை யுணர்தற்குத் தவம் வேண்டும், ௪0
ஓங்கி-பெரிதாய், ௨0; சிறந்து, ௪௨; மேம்படச் சிறந்து
ஓங்கிப் பொலிய-மிக்கு விளங்க, ௧௪
ஓங்கிய-உயர்ந்த, ௩௩
ஓங்குற - கிளர்ந்தெழுமாறு, ௧௯
ஓச்சி-எறிந்து, ௩
ஓசைகருதி ஒற்றுமிகாமை, ௧௫
ஓட-குலைய, ௩௨
ஓடி-சென்று, ௪௧
ஓடி மீளுங் கயல்மீன், கண்களுக்குவமை, ௩௩
ஓடிய-ஒழுகிய, ௩௩
ஓதி-சொல்லி, ௪௧
ஓதையும்-ஓசையும், ௨௩
ஓப்பும்-ஓட்டுகின்ற, ௩௯
ஓம்பும் - பாதுகாக்கும், ௩௫; மதித்துக்காக்கும், ௪௧
ஓம்புமதி-ஒழிப்பாயாக, ௪௫
ஓர்-ஒப்பற்ற, ௪௮
ஓருட்கடல் ஈருருவாய் இரண்டு கண்களாதல், ௩௧
ஓரி-நீலநிறம் ௩௫
ஓலை-பத்திரம், ௧௭
ஓவா-நீங்காமலிராநின்ற, ௪0
ஓவாது-இடையறாமல், ௧௮
ஓயாமல், ௨௪; நீங்காது, ௩௮
ஓவியம்-சித்திரம் பெண்ணுக்கு உருவகம், ௩௯, ௪௫
ஓவியம் பிழையில்லாமல் எழுதும் இயல்பு ௩௯
ஓவியம் பின்னல் முதலியன அமைந்த திரைகள் மேற்பரப்பிற் கட்டப்படுதல், ௪௫
ஔவியம்-அழுக்காறு முதலிய தீயவியல்புகள், ௪௭
ஔவை, ௪௨; அதிகன் நெல்லிக்கனிதர உண்டு நீண்டகாலம் உயிர்வாழ்ந்திருந்த தமிழ்ப்பிராட்டி
கங்குல்-இரா, ௨௮
கசிந்த-நெகிழ்ந்த, ௫0
கட்டிவிற் காம்புகிள்ளிய முல்லைப்போது தூவி, அதன்மேல் மடி விரித்தல், ௨௧
கட்டு-களைந்து, ௫
கடந்த-வரம்பில்லாத, ௪௯
கடப்பமாலை சூடிய முருகன், ௪
கடம்-மதம்; ௩௨; காட்டுவழி, ௪௭
கடம்படல்-நெறிச்செல்லல், ௪௭
கடல், முத்து முதலான பல பண்டங்கள் நிரம்பியது, ௨0

கடல் வானத்துக்கும் மீன் விண்மீன்களுக்கும் ஒப்புமை, ௪௨
கடலலை சுருண்டுவிழும் இயல்பினது, ௪௩
கடவா-கடந்து செல்லாத, ௩௧
கடவி-செலுத்தி, ௧௬, ௨௬
கடவுட் கொள்கையிற் பிழைபட்டழிந்தோர் மணவினும் பலர், ௨௨-௩
கடவுள் உயிர் மலம் என்னும் முப்பொருள்களின் இயல்பும், உயிர் மலத்தின் நீங்கி இறைவனை எய்தும் வகையும், ௪௭-௮
கடவுளே உயிரும் உலகமுமாமென்போர், ௨௨
கடற்கால், ௨
கடன்-கிரியை, ௨௬
கடா-வினு, ௨௭
கடி-ஒளி, ௫; விரைவு, ௧௮
கடிதிகழ் மேனி, ௫
கடிமணம்-மிக்க மணம், ௨௧
கடுக்கும்-ஒக்கும், ௩௭, ௩௮
கடுப்ப-ஒப்ப, ௨௦, ௩௬, ௩௭
கடுப்பு-கடுத்தல், ௩௩
கடும்-வலிய, ௩௩, ௩௫, கொடிய, ௩௬, ௪௧; மிக்க, ௪௭
கடும்பு-சுற்றத்தார், ௪௯
கடை - நுனி, ௩௦; இல்லின் கடைவாயில், ௪௩
கடைந்து-திரட்டி, ௩௨
கடைவழி-இறுவாய், ௪௬
கண் - இடம், ௨௪, ௩௨, ௪௯; கணு, ௩௫; பார்வை, ௪௦
கண்டிலை-கண்டனையல்லை, ௩௯
கண்டு-ஒதி, ௧௬
கண்டு அமையாத வடிவு, ௬
கண்ணை-கண்களையுடையவான, ௩௮, ௩௯
கண்ணகன் விசும்பு, ௧
கண்ணடி உருண்டைகளின் கொத்து, கொடி முந்திரிப் பழக் கொத்துகட்குவமை, ௩௭
கண்ணி-மார்பின் மாலைக்கு வருதல், ௧௪
கண்ணுற-இடம் இடைப்பட, ௩௦
கண்ணுறங்க-உறக்கங்கொள்ள ௩௬
கண்பஞ்சடைதல், ௪௧
கணவீரம் - செவ்வலரி, ௪௫
கணை-அம்பு, ௧௯
கதம்-சினம், ௨௫
கதிர்-ஒளி, ௧௨
கதிர்மண்டிலம் - ஒளிமண்டிலம், ௪௭
கதிரொளி, இறைவன் ஓரமின்மைக் குவமை, ௧௮
கதுப்பு-கன்னம், ௧௩, ௩௦; தலைமயிர், ௩௦
கதுவா-அணுகிப்பற்றவியலாத, ௪௮
கதுவிய-பற்றிய, ௩௭
கதுவும்-கவரும், ௩௦
கந்தழி-தீப்பிழம்பு, ௧௮
கந்தழியில் உயிர்த்தொகைகளை ஒற்றும் ஊர் ஒற்றியூர், ௧௮
கம்பலம்-விரிப்பு, ௪௫
கம்பலம் விரித்து அதன்மீது அரியணை யமைத்தல், ௪௫
கம்பலை, ௧௪, ௨௪
கமழ்-மணம், ௨௭
கமழ்தல்-நாறுதல், ௧௨
கமுகு, ௪௫
கயல்மீன், ௨, ௫, ௫௬; மாதர் விழிக்குவமை, ௮, ௩௮; கெண்டைமீன், ௧௩, ௩௮
கரந்தனன்-ஒளித்தனன், ௧௨
கரவு-கள்ளம், ௧௨

கரவுஅறு மாந்தர் - சான்றோர், ௧௨
கரி-சான்று, ௨௫
கரு-முதற்பொருள், ௧௭
கருக்குழி, ௯
கருகல்-பொருண்மறைதல், ௧௪
கருநெல்லிக் கனிகள் உண்டு நீடு வாழ்தல், ௪௨
கருநெறி - கருகிய நெறி; பொருண் மறைந்த நெறி, ௧௪
கருநெறிமறம், ௧௪
கருப்புரம் - பச்சைக்கருப்புரம், ௨௧
கரும்புலக்கையால் மணல்நெல் குற்றல், ௪௩-௪
கருமணி, நாவற்பழத்துக் குவமை, ௩௭
கருமை-நீலம், ௪௮
கருவாய் - கருப்பொருளாய், ௨௭
கருவி-மெய் முதலிய புறக்கருவிகள், ௨௯; அகக்கருவிகள், ௪௭
கருவிநூல்-இயற்றமிழ் நூல்கள் ௧௭
கருஉயிர்க்கும் கோயை எண்ணுமல், தாய் புதல்வனைப்பார்த்து மகிழ்தல், ௨௪
கரைந்து-உருக்கி, ௩௯
கல்லா-தெரியாத, ௩௭
கல்லாதவர் உலகிற் பலர், ௪௩
கலங்கி-அஞ்சி, ௪௭
கலம்-மூடுகலம், ௩௫
கலவை-கூட்டு, ௨௭
கலவைச்சாந்தம்-பலமணப்பண்டங்கள் கலந்த சந்தனக் குழம்பு, ௪௯
கலன்-அணிகலன், ௪௯
கலாய்த்து-சண்டையிட்டு, ௪௧
கலி-செருக்கு, ௩௪
கலித்த-தழைத்த, ௯
கலுழ்பு-அழுது, ௧௨
கவண்-கல்விடுகவண், ௩௯
கவர்க்கும்-பிளவுபட்டொழுகும், ௩௪
கவர்த்தவழி, பிறரை மயக்குவார்க்குவமை, ௮
கவராது - பிரிந்துபோகாமல், ௨௯
கவரி-கவரிமா என்னும் ஒரு விலங்கு, ௩௫
கவலை-கவர்த்த வழி, ௮; மனக்கவற்சி, ௪௯
கவவி-தழுவி, ௧௪
கவின்-அழகு, ௨௫, ௩௨, ௪௩
கவின்று-அழகுற்று, ௨௪
கவைஇ-தழுவி, ௮
கவைக்கால், ௭
கழகம்-கலைபயிலிடம், ௨௪
கழங்கு-ஒருவகை விளையாட்டுக் கருவி, ௪௫, கழற்சிக்காய், இது, முத்துக்குவமை
கழல்-அடி, ௫௰
கழற்றெதிர்மறை, ௩௫
கழறினை-இடித்துரைத்தனை, ௪௰
கழி, ௨௰; நிறைந்த ௩௪
கழிப்பி-முடித்து, ௨௯
கழிபெருக்குலம் - மிக உயர்ந்த குலம், ௫
கழியவும்-மிகுதியும், ௩௮
கழுத்துக்கு அழகு வழுவழுப்பு, ௩௧
கழுநீர்மலர், ௯, ௩௮
கழுவாக்குற்றம், ௧௩
கழை-மூங்கில், ௩௫
கள்-தேன், ௩௧, ௪௩
களம்-இடம், ௧௫
களவியல்-இறையனாரகப்பொருளின் வேறொரு பெயர், ௨௮
களி-களிப்பு, ௨௫; மகிழ்ச்சி, ௩௯, ௩௧
களிற்று ஒருத்தல்-யானையின் ஆண், ௩௫
களிறு-ஆண்யானை, ௩௧

களைந்து-கிள்ளி, உக
கற்பனை, கஉ
கற்பனை நயம், க0
கற்புடை மகளிர் முதன்மையாகச் சூடும் பெருமையையுடையது முல்லை, ௩எ
கறங்கும்-ஒலிக்கும், உச
கறி, சகூ; மிளகுகாய், ௩எ
கறித்து-கடித்து, ௩எ
கறை-குற்றம், சச
கன்மலையிலுங் குணமலையிலும் இறைவன் ஒப்ப அமர்தல், ககூ
கன்றிய-கைத்த, எ
கன்றுகள் துள்ளிப்பாயும் இயல்பின, ௩ரு
கன்றையுள்ளுதொறும் பால் சுரத்தல், உ0
கன்னம்-நிறைத்தட்டு, ச௩
கன்னம் துளங்கொளியுள்ளது, க௩
கன்னல்-சருக்கரை, ககூ, உஎ, சஎ; செய்யுளின் குளிர்ந்த ஓசையொழுக்குக்குவமை, உஎ
கனிந்த-முதிர்ந்த, கூ, ௩க
கனை-திரண்ட, சச
காஞ்சி-காஞ்சிமரம், ச௩; மருதநிலத்துக்குரியது.
காட்சி-அறிவு, ககூ; தோற்றம், ககூ; மெய்யுணர்வு, சஉ
காட்டி-தேற்றிவிளக்கி, உஅ
காட்டுவழியின் இயல்பு, கூ
காடு, ஐம்பொறிகட்கு உருவகம், சஎ, அலைத்தலின்
காடுகெழுகாட்சி, உ0
காண்டகு-அழகிய, கஅ
காண்டற்கு எற்ற, உச
காண்டகு சிறப்பு-அழகு, உக
காணத்தக்க காட்சிகளைக்காண்டற்கு நல்வினை வேண்டுமெனல், ச0
காணூஉ-கண்டு, சஎ
காதல்-அன்பு, ௩ச
காதலரியல்பு, அ
காதற்போரால் உண்டாகும் புண், ௩க
காதுகளின் வடிவம் ஓங்காரவடிவம், ௩0
காந்தள், கைக்குவமை, சஎ
காந்தளங்கண்ணி, கச
காப்புக் கைம்மிக்குக் காமம் பெருகி யுரைத்தல், சகூ
காமத்தைப் பசியெனல், ௩கூ
காமுற்று-விரும்பி, கக
காய்ச்ச-வதக்க, ௩ரு
கார்மின் - கார்காலத்து மின்னல், சகூ; இஃது இளமகளிர்க்குவமை
கால்-வாய்க்கால், க, ௩எ, ௩அ; நீர்க்கால், உ; காற்று, உ; காம்பு, உக, ௩எ; பொழியும், கக
காலங்கடந்த கோலவைப்பு - முருகப்பெருமான் வீற்றிருக்கும் அருளுலகம், ச0
காலல்-பொழிதல், ககூ
காவதம் என்பதன் விளக்கம், உ0, இரண்டேகாற்கல், ௩எ
காழ்-கோவை, சரு; அகக்காழ், சகூ
காழூறும் அரக்கர், கரு
காளை-காளைப்பருவம், கஉ
கான்யாறு-காட்டாறு, உ0
கான்று-கக்கி, அ
கானங்கோழி - காட்டுக்கோழி, உ0, இது கூவி வைகறைப் பொழுதுணர்த்தும்
கானல் - கடற்கரை, க௩; கழியடுத்தசோலை, ௩௩
கானவர்-வேட்டுவர், ௩ரு
கிண்கிணி-சதங்கை, கூ
கிழத்தியர்-மனையாட்டிமார், கச

கிழமை-இயல்பு, கச; உரிமை, கரு
கிழி-இரட்டுத் துணி, ௩௧, எழுது படம், படமெழுதுந் துணி
கிழிக்கும்-கீறும், அ
கிழித்து-பிளந்து, உ௫
கிள்ளை-கிளி, ௩௯; ஒருகாலைத் தூக்கிக்கொண்டு நின்ற படியே உறங்கும், ௩அ
கிளக்கும்-இசைக்கும், சக
கிளக்குவென் - சொல்லுவேன், க௩
கிளத்தல் - எடுத்துக்கூறல், க; வாய்விட்டுச்சொல்லல், ௯
கிளந்து-சொல்லி, சஎ
கிளர்-மிக்க, க௫, சக, ச௫; மிகு கின்ற, உ௯, ௩ச; ஒப்ப, ௩௯; வளர்ந்து விளங்கிய, ௩க
கிளர்தல்-ஒளிர்தல், உ0; விளங்குதல், உக
கிளர்ந்த-வரியும், ௩0
கிளர்ந்து-விளக்கி, ௩௯
கிளவாது - வெளிப்படச் சொல்லாமல், ௯
கிளவி-சொற்கள், ௩௯
கிளிக்கும், தலைவனைப் பிரிந்த தலைவிக்கும் உருவொப்புமை, உக
கிளிக்கும் மகளிர்க்கும் ஒப்புமை, வாய், சொல், நிறம், உரு முதலியவற்றில், ௩க
கிளிகள், செவிக்கினிமையாக மிழற்றுமென்பது, ௩௫-௯
கிளிச்சிறை-ஒருவகைப் பொன், ௩௯, பொன்வகைகளுள் உயர்ந்தது
கிளை-கப்பு, ௩0
கீண்டு-கீறுண்டு, ௩௯
கீரன்-நக்கீரதேவர், உஎ, சஅ கீர்-சொல்; நக்கீரன் - நல்ல சொல்வன்மையுடையவன்
கீழ்-கிழக்கு, சஉ
கீழ்த்திறமாவது, உஉ
கீழ்மலையுச்சி நீலகிறமாயிருத்தல், ச௫
கீழ்மலையுச்சியில் ஞாயிறு தங்கியிருத்தல், அரியணைமீது முருகன தங்கியிருத்தற் குவமை, ச௫
குகை, மலைக்கு வாய், கக
குங்குமச் சாந்து-குங்குமப்பூக் கலந்த சந்தனம், உ௩
குஞ்சி-மயிர்முடி, ௯, தலைமயிர், கஉ, ௩0, சஎ, சக
குடங்கள், மகளிர் கொங்கைகட் குவமை, ௩க
குடத்தி-முல்லைநிலத்துப் பெண் ௩௩; இவர்கள் பயறு விற்பர்
குடக்தங்கொண்டு - கைகூப்பி மெய்வளைத்து, சக
குடந்தம் - குடந்தமென்னும் வணக்கம், ச௫
குடம், எருமையின் மடிக்கு உவமை, உ0; பணிலத்துக்கு உவமை, ச௩
குடம்பை-கூடு, ௩அ, பறவைக் கூடு
குடி-குடும்பம், ௫; ஒருவனைச் சூழ்ந்த அகச்சுற்றம், ௯; குடியிருப்பு, சக
குடி குலங்களாற் குற்றமில்லாமை, ௯
குடும்பமென்னும் முன்றில், ௫
குடுமி-உச்சி, குஞ்சி, கக
குண்டு-ஆழம், ச௯
குணம்-இயல்பு, சக
குத்தி-அழுத்தி, ௩க
குமரன்-இளம்பருவமுள்ள முருகன், ச0
குமரி-இளமையான, ச௯
குமரிவாழை - ஈனுத வாழை, ச௯

குமிசை - இளைய எள்ளின் மொட்டு, ௧௩
குய்-தாளிப்பு, ௧௯
குயில்கள், ௩௮
குயில்மாமரத்தில் ஒடுங்குதல், ௪௯, இக்காலம் கார்காலத்து மாலை
குயிற்றி-அழுத்தி, ௩0
குயின் று-துளைத்தமைத்து, ௪௪, குயில், முதனிலை, துளைத்தல் என்பது பொருள்
குரங்குக் குட்டிகள், தெரியாமல் மிளகு காய்களைக் கறித்து விட்டுப் பின் உறைப்புத் தாங் காமல் துள்ளுதல், ௩௭
குரம்பை-உடம்பு, ௪௯
குரல்-நெற்கதிர், ௧, கதிர், ௩௯
குரவம்-குராமரம், ௩௯, பாவை போன்ற பூக்களுடையது
குரவன்-குருவன், ஆசிரியன், ௨௩
குரவை, ௧௨, குரவைக் கூத்து, இன்னதென்பது
குரற்பாட்டும் யாழிசையும்ஒத்து நிகழ்தல், ௨௧
குரீஇ-குருவி, ௩௮
குரிசில்-செம்மல், ௧௩, ஆண் டகை
குருகு-நாரை, ௧
குருத்து-(இளஇலை)வாழையின் குருத்து, ௪௯
குருதி-செந்நீர், ௧௧, ௨௯
குருவன்-ஆசிரியன், ௨௮
குலச்சிறை முனிவன், பாண்டி மன்னர்க்கமைச்சர்; பாண்டி மாதேவி மதுரையிற் சைவம் நிறுத்துதற்குத் துணை நின்ற வர், ௬
குலம்-புறச்சுற்றம், ௯
குலம்புரி கோமகன், ௫
குலிகம்-இங்குலிகம், செந்நிறம், ௩௭
குலுங்குதல், ௩௫
குவடு-குடுமி, ௧௧, மலையுச்சி
குவவி-திரண்டு, ௩௧
குவளை, ௯, ௨௧
குவளைப்பூடு, ௫
குவைஇ-குவித்து, ௧௯
குவையினர் - குவித்தனராய், ௩௩
குழக்கன்று-இளங்கன்று, ௨0
குழகன்-முருகன், ௧௫; கட்டிளை ஞன்
குழந்தையைத் தாய்சென்று புல் லிய வண்மை, உயிர்களை இறை வன் சென்று ஆட்கொள்ளு தற் குவமை, ௨௯
குழல்-புல்லாங்குழல், ௪௪; கூந் தல், ௨௯
குழவி-குழந்தை, ௪௧
குழற்கற்றை - மயிர்த்தொகுதி, ௧௩
குழற-தடுமாற, ௨௯, ௪௫; தெளி வில்லாப் பேச்சு
குழன் று-சுருண்டு, ௩0
குழாம்-கூட்டம், ௪௫
குழீஇ-கூடி, ௩௫
குழு-கூட்டம், ௪௭
குழுமல் - தொகுதிப்பொருட்டு, ௭
குழுமி-நிறைந்து, ௩௮
குழூஉக்கொள் கைதை, ௧௨; குழூஉ-கூட்டம்
குழை-தளிர், ௯, ௩௯; பசிய மடல், ௨0; பசிய இலை; குண் டலம், ௩0; இளந்தளிர், ௩௫
குழைத்து - இளகுபதமாய்க் காய்ச்சி, ௧
குழைந்து-சோர்ந்து, ௩௨
குழைபட-மெல்க, ௩௧
குழைமுகம்-தளிர்முனை, ௨௧

குழைவு-நெஞ்சிளக்கம், ௧௪
குழையும்-நெஞ்சுருகும், ௮
குளத்துநீர், கால்வழியோடி வெண்மணற்பாத்தியில்இளம் புல் வளர்த்தல், ௩௭
குளனுறை வாழ்க்கை, ௧
குளிர்-குளிர்ச்சி, ௪௧
குறங்கு-தொடை, ௮, ௩௨
குறடு சந்தனக்கட்டை, ௬௧, ௪௪
குறவர்-வேடர், ௩௫, குறிஞ்சி நிலமக்கள்
குறவர்மகளிர் விழவு, ௧௪
குறிக்கொள் - துணிவுகொள் வாய், ௪௧; மனத்துள்வைத் துச்செயல் முடிக்குந் துணிவு கொள்ளுதல்
குறிஞ்சிநிலத் தியற்கை, ௩௫-௯
குறிஞ்சிநிலத்தின் காட்சி, ௧௯
குறித்தது கிளவாது செறித் தல், ௯
குறிப்பரும் இன்பம் சுட்டியுணர் தற்கரிய பேரின்பம், ௪௯
குறு-சிறிய, ௩௯, குத்தும், ௩௫, குறுதல்-குத்துதல்
குறுங்கயம்-குட்டை, ௨௦
குறுநகை-புன்னகை, ௪௫, ௪௯; இது மகிழ்ச்சியை விளக்கும்
குறுநடை-சிறியநடை, ௨௩
குறுநடைப் புதல்வர், ௧௨
குறுமொழி - சிறுசொற்கள், பொருள் நிரம்பாத சிறுமை யுடைய சொல், ௨௮; பிறரை இகழ்ந்து கூறுஞ்சொல், ௩௩
குறுவவும் - குற்றவும், ௪௪
குறைத்து-தறித்து, ௩௫
குறைவு-இழுக்கு, ௧௯
குன்றல்-குறைதல், ௨௩
குன்றவர் - குன்றத்துறைவார், ௪௮; குறவர்
குன்றா-குறையாத, ௪௫
குன்றி-குன்றிமணி, ௩௫, ௩௮
குன்றிமணி, குயிலின் கண்கட் குவமை, ௩௮
குன்றுதோறாடல், ௧௩
கூஉய்-அழைத்து, ௪௭
கூட்டுதல்-கலத்தல், ௨௧
கூடல்-மதுரை, ௮
கூந்தலின் மணம் பற்றிய தமிழ் வழக்கு, ௨௭
கூந்தற்குமரி - தெய்வயானை, ௩
கூப்பிய குவித்த, ௪௫
கூப்பெயர்தல் - கூவியழைத்தல், ௨௦
கூம்பிய-குவிந்த, ௨௮
கூர்-கூர்மை, ௪௦
கூர்ந்து-கூர்மையாய், ௩௦
கூரும்-மிகும், ௩௯
கூறிட்டு-வகுத்து, ௩௦
கூறுபட-வகைபட, ௨௧
கூறுபடுமதி - பகுத்தறியும் மதி, ௨௩
கூன்பாண்டியன், ௯
கூனற் கிழத்தியர், ௧௪
கெண்டைமீன், கண்ணுக்கு, ௧௩
கெழு-போன்ற, ௩௯; நிரம்பிய, ௪௩; சான்ற, ௪௪; விளங்கும், ௪௪; மிக்க, ௪௯
கேட்போர்ப் பிணிக்கப் பேசு தல், ௪௨
கேண்மை-நட்பு, ௧௫
கேணி-ஊற்றுக்கிணறு, ௧௨ நெய்தல்நிலத்துச் சிறுகிணறு
கேதகை-தாழை, தாழம்பூ, ௨௫
கேதகை சான்றுதல், ௨௫
கேழ்-நிறம், ௨௧, ௪௫; ஒளி, ௪௪; கெழுமிய எனினுமாம்.
கேழ்கிளர் மார்பம் - விளக்கம் மிக்க மார்பு, ௧௫
கேழ்மதி-விளக்கும் நிலவு, ௧௫
கேள்-உறவு, ௨௫
கேள்வி-கேள்வியறிவு, ௩௫

-கை, இடைச்சொல், ௨; ஒப்பனை, ௫
கைசெய்து - ஒப்பனைசெய்து, ௫
கைதை-தாழை, ௧௨; தாழம் பூ, ௨0, ௪௩
கைபிணைந்து-கைகோத்து, ௧௨
கைம்மா - கையையுடைய விலங்கு, யானை, ௧
கைம்மா முகத்தன், ௧
கையர்-பயனில்செயலுடையார், கீழ்மக்கள், ௨௨
கையரிக்கொண்ட - வாரிக் கொண்ட, ௨
கொங்கு-மணம், ௨௩; ௪௬
கொடி - வஞ்சிக்கொடி, ௫; ஒழுங்கு, படர்கொடி, ௩௧
கொடிக்குலம் - காக்கைக் கூட்டங்கள், ௧
கொடிச்சி-குறிஞ்சி நிலத்துப் பெண், குறத்தி, ௩௩, ௩௬; இவர்கள் கள் விற்பர்
கொடிபுரை மருங்குல், ௫
கொடிமுந்திரிக்கொடி, ௩௭
கொடும்-வளைந்த, ௩௭
கொடுமை - கொடிய நிகழ்ச்சிகள், ௪௨
கொண்டி-கொள்ளை, ௨௩
கொண்டு - எடுத்து, ௩௩, உட் கொண்டு, ௫0
கொவ்வைக்கொடி, ௩௭
கொழுகொம்பு, ௪௮
கொழுங்கயல், ௮
கொழுங்கால், ௨
கொழுங்குறை - கொழுவிய தசை, ௨௬
கொழுஞ்சுவை, ௨; மிக்கசுவை
கொழுந்தமிழ்-செழுந்தமிழ், ௪௧
கொழுந்து-மருக்கொழுந்து, ௨௧; தலைக்குறை
கொழுநன்-கணவன், ௧௧
கொழுநனை, ௭
கொழுமடல், ௧௨
கொழுவிய-இனிய, ௪
கொள்ளா - மேற்கொண்டோழுக மாட்டா, ௩௪
கொள்ளைமணம் - மிக்கமணம், ௨0
கொள்ளையில்-மிகுதியாக, ௩௭
கொளீஇ-கொள்ளவைத்து, ௧0; அறிவுறுத்தி, ௧௭; பொருத்தி, ௨௭; விளக்கி, ௪௮
கொளுவி-பொருத்தி, ௧௬, ௪0
கொன்-அச்சம், ௭; பெரியது; ௧௩; பயனின்மை, ௩௪
கொன்றைக்காயினால் ஆன ஊதுகுழல், ௨௧
கொன்றைமரம், ௩௬
கொன்றைமலர் பொன்னிறமானது, ௨0; முல்லைநிலத்துக் குரியது
கொன்றை முகைகளால் மாலை தொடுத்தல், ௮
கொன்னே-வீணே, ௪௩
கோடி - கொள்வாயாக, ௪௨; பெற்றுக்கொள்வாயாக, ௪௮; கொள், பகுதி
கோடு-கிளை, ௧௨, ௪௩; சங்கு, ௩௩; மலையுச்சி, ௪௫; மலையின் கொடுமுடி, ௩௬; நுனி, நிலவின் வளைந்த நுனி
கோடுகெழுகுன்று, ௧௩; கோடு-உச்சி
கோதுதல் - கீறுதல், கொந்துதல்
கோதை-பூமாலை, ௮
கோல்-திரட்சி, ௩௬
கோலம்-உருவம், ௩௪; அழகு, ௪௬
கோலா-அமைக்கப்படாத, ௧௬; கோலல்-வளைத்துச் செய்தல்
கோலாகலம் - முறை பிறழ்ந்த நிலை, ௧௧; இஃது ஒலிக்

குறிப்பு; வடசொல் அன்று; 'கோலாலம்' என்பதும் இது
கோவிய - வளைந்தமைக்கப் பட்ட, ௩எ
கோவை-மாலை, ௩0
கோழ்-வழுவழுப்பு, உக
கோழரை-வழுவழுப்பான அடிமரம், கக, ௩உ
கோழரை நாவல், எ
கோள்-உள்ளத்துள்ளது ஒன்றாகப் பிறிதொன்று சொல்வது, உ௯
சங்கு உடைந்து முத்துக்களாதல், கஉ
சங்கம் முத்தம் ஈனல், ௩அ
சடையோன்-சிவபிரான், உ௬
சண்பகம், உக
சண்பை-சீகாழி, ௬
சந்தனக்குழம்பில் ஐவகைமணப் பண்டங்களுங் கலத்தல், ச௯
சந்தனக்குழம்பு ஆடவர் மார்பிற் பூசப்படுதல், ச௬
சம்பந்தர் அம்மையப்பரைச் சுட்டிக் காட்டினமை, ௬
சம்பந்தர், சீகாழிக் குளக்கரையில் இறைவனைக் கண்டமை, ௬
சம்பந்தர், சோமசுந்தர குரவர்க்குவமை, உஅ
சம்பந்தர் திருமுலைப்பா லுண்டமை, ௬
சம்பந்தர் திருமுலைப்பாலுண்டமையால் ஒளி சிறந்தமை, ௬
சம்பந்தர் திருவிளையாடல்கள், ௬
சம்பந்தர் திருவிளையாடல்கள் தவஞ்செய்தற்குரிய வகைகளைத் தெரிவிப்பன, ௬
சம்பந்தர் நீரினும் நெருப்பினுங் காட்டிய திறம், க0
சம்பந்தர் பனையினும் என்பினுங் காட்டிய திறம், க0
சம்பந்தர் பாண்டிமாதேவிக்கும் புதல்வர் எனப்படுதல், க0
சம்பந்தர், பாண்டியற்கு வெப்பு நோயுங் கூனுந் தீர்த்தமை, க0
சமணர், மதுரையில் தம் சமயம் பரப்பினமை, அ, ௯
சம்பந்தர் மதுரையிற் சைவம் விளக்கினமை, உஅ
சம்பந்தர் முருகப்பிரான் பிறவி யெனல், உஅ
சம்பந்தருக்கு உரிய தந்தை சிவபிரான், ௬
சமயக்கணக்கர், கச
சமயங்கள் எண்ணில்லாதன, சஅ
சாக்காடு-சாவு, உச0
சாந்தம்-சந்தனம், ௩அ
சாந்தம் அப்பிய மார்பிற் பூமாலை யணிதல், சச
சாந்து சந்தனக்குழம்பு, கச; சந்தனம், சச; சந்தனமரம், ௩௬; பருத்த அடிமரத்தையுடையது
சார்-பக்கம், ௩௩
சாரல்-மலைப்பக்கம், ௬
சாரவும்-பொருந்தவும் ௩அ
சாரியை, க௯
சால்-நிரம்பிய, சஉ, சச, ச௬
சான்ற-நிறைந்த, கக
சான்றோர்க்கு நேரும் பழி, நிலவின் மறுவுக்குவமை, கஉ
சிங்கமுகாசுரன், க௯
சிங்கவேற்றின்நடை, ஆண்மையாளர் நடைக்குவமை, சச
சிதர்-பூந்தாதுகள், சஉ, உ0
சிதர்தல்-சிதறல், உ0
சிதர்ந்த-சிந்திய, கக
சிதல் - கறையான் க௬; மூவறிவுயிர்
சிதறல்-தூவல், உக
சிதாஅர்-கிழிந்த கந்தை, ச௬

சிதையாது-அழியாமல், ௪௯
சிதையாப்பேறு - அழியாத புகழ்ப்பேறு, ௪௨
சிதைவு-கெடுதல், ௨௪
சிந்த-சொரிய, ௪௫
சிரல் - சிச்சிலி என்னுங் குருவி, ௩௮; ஆடுகின்ற வாலையுடையது; மீன்களைக் கௌவி விழுங்கும்
சில்-சில, ௪௫
சில்லமுது, ௧0
சிலதர்-ஏவலாளர், ௪௬
சிலம்பும்-ஒலிக்கும், ௨௩
சிவஞானபோதம், ௪௭; சுத்தாத்துவித சைவசித்தாந்தம் நிறுவும் மெய்கண்டநூல்
சிவணவும்-அடையவும், ௧௧
சிவணி-ஏந்தி, ௪௭; கையிற் பொருந்தவைத்தல்
சிவணிய-அளாவிய, ௨௭
சிவணுவென்-நிகராகுவேன், ௧௪
சிவணுற-பொருத்தமுற, ௩0
சிவத்தை நினைந்து நெஞ்சுருகுவோர் உரவோர், ௮
சிவபிராற்கு முருகன் ஓங்காரவுண்மை அறிவுறுத்தினமை ௪௮
சிவிறி-விசிறி, ௨௧
சிவிறியில் மணக்குழம்புதோய்த்தல், ௨௧
சிவிறி விரித்தாற்போன்ற திருவடி, ௧௪
சிற்றில், ௧௨
சிற்றிற் சிதைத்தல், ௧௨
சிறந்தார் முன் எளியார் தெளிவின்றி நடக்குமியல்பு, ௪௫
சிறந்து-மிகுந்து, ௯, ௨௪, ௪௯
சிறப்ப-மிகுதிப்பட, ௨௪; மேம்பட, ௨௭
சிறப்புப் பொருளுணர்த்தும் இடைச்சொல், ௩0
சிறுஅர், ௧௨
சிறார் சிறுதேருருட்டல், ௨௩
சிறுநாழையிற் புகாதபொருள் மெய்யறிவுஎலாத நெஞ்சுக்குவமை, ௮
சிறுபாட்டு-சிறுசிறு வேடிக்கைப் பாட்டுகள், ௪௩
சிறுமியர் மழலைமொழி இனிமை நிறைந்த தென்பது, ௪௩
சிறுமை-கீழ்மை, ௩௪; எளிமை ௪௨
சிறுமொழி, ௫
சிறுவ-இளையோனே, ௪௮
சிறுவர்கள், மரக்கிளைகளில் ஏறி நீரிற் குதித்து விளையாடுதல், ௪௩
சிறுவன்-புதல்வன், ௪0
சிறை - இறக்கை, ௩௮; சிறகு, ௪௩
சினை-கிளை, ௩௬; முட்டை, ௪௩
சீகாழி பன்னிரண்டு பெயர்களுள்ளது, ௯
சீர்-புகழ், ௯
சீரிதின் - செல்வமாய், ௫; நலமாய், ௬; செம்மையாக, ௨௭; செவ்வனே, ௪௪
சீறடி-சிறுஅடி, ௨௬, ௩௯; இளைஞகலின் சீறடியெனப்பட்டது; சிறுமை அடி-சீறடி
சீறியமயில் - சீற்றங்கொண்ட மயில், ௧௪
சுடர்-ஒளி, ௪0
சுடர்க்கொடி, ௫
சுமடு-சும்மாடு, ௨
சுமைத்தயிர்-கட்டுத்தயிர், ௪௬; ஆடைபோல் மூடியிருத்தலின் ஆடைத்தயிரெனவும் வழங்கும்
சுரக்கும்-ஊற்றெடுக்கும், ௨௭
சுரந்த-ஊற்றெடுக்கும், ௪௮
சுரி-சுருண்ட, ௨௯

சரிதல் - சுருளுதல், ௪௩
சரிந்து-சுருண்டு, ௩௮; சுழித்தல்
சுருள்-கடைகுழன்ற, ௪௪
சுவடு-அடையாளம், ௩௨
சுவை, நுகர்ச்சி, ௪௯
சுழன்று சுழிந்து, ௩௦
சுழுமுனை-அனல்நாடி
சுற்றத்தாரோடு வாழவேண்டுமென்பது, ௪௩
சுறவு, ௨
சுனை-நீரூற்று, ௪௮
சூது-சூதுகாய், ௮ வஞ்சகம், ௧௨
சூதுகாய் துணைமுலைக் குவமை, ௮
சூர்-சூர்மா, ௧; சூரன், ௪௦
சூர்முதல் - சூர்தலைவன், ௧௫, ௨௬; சூர்-அச்சம்
சூர்வளம் - சூர்மாவினது செழுமை, ௧
சூரற்கு வீடுபேறு, ௩
சூரன் இறைவன்பாற் பேரன்பினன் என்பது, ௨௯
சூரன் உரத்தை வேலன் பிளந்தமை, ௪௦
சூரன், தேவரும் மயங்கும்படி பலமுறை மாயச் செயல்கள் செய்தன னென்பது, ௪௦
சூரன் மாமரமாதல், ௧௫
சூரனுடைய கடுந்தவமும் பேரன்பும், ௨௫-௯
சூரனை யழித்துத் தேவர்க்குத் தலைமை தந்தது, ௧௫
சூழ்ச்சி-சூது, ௨௨
சூழி-உச்சிக்கொண்டை, ௩௦
சூறைகொண்டு-வழிபறித்து, ௯
செங்காந்தள், ௪௭
செங்குத்தான மலைப்பாறைகளில் தொங்குந் தேன்கூடுகளையெடுக்க வேட்டுவர் மூங்கிலேணியைப் பயன்படுத்துதல், ௩௫
செஞ்சேறு-சிவந்த நறுமணக் குழம்பு, ௩௯
செண்டு-மலர்ச்செண்டு, ௨௨
செண்டும் பந்துங் கொண்டு விளையாடல், ௨௨
செந்தமிழ்க்கூடல், ௮
செந்தமிழ் வழக்கு-தமிழ் இலக்கண இலக்கிய வழக்கு, ௨௮
செந்திறம் ஊட்டிய மகளிர்செவ்வாய் கொவ்வைப் பழத்துக் குவமை, ௩௭
செந்நீர்-சிவந்த தன்மை, ௩௦; செந்நெல், ௫; நெற்களுள் உயர்ந்தது
செப்பு-சிமிழ், ௨௪, ௩௦
செம்மணி - மாணிக்கமணி; ௩௦
செம்மணிப் பலகைக்கு நீலமணி வரம்பு, ௩௦
செம்மையின்-இனிதாக, ௨௫
செம்மொழி-இன்சொல், ௩௩
செய்-விளைநிலம், ௨
செய்தி-செய்கை, ௩௪
செய்திறம்-செய்தற்குரிய வகைகள், ௯
செய்யுள் விரைவாகச் செய்யும் இயல்பு, ௪௧
செயப்பாட்டுவினை, ௧௦; இழிக்கும்-இழித்துக் கொடுக்கப்படும்
செயலை-அசோகமரம், ௩௯; தீக்கொழுந்துபோற் சிவந்த தளிர்களுடையது
செயிர்-குற்றம், ௫, ௪௧
செருக்கி-எழுச்சிகொண்டு, ௩௫
செருக்கு-ஆணவம், ௧௩
செருக்கு என்னுங் குன்று ௧௩
செருத்தல் - எருமை ஆன் முதலியவற்றின் பால் மடி, ௨௦
செல்-நடக்கும், ௪௪
செல்லல்-துன்பம், ௩
செல்லா-கழியாத, ௨௯

இயலாத, ௩௧
செல்வினும்-கழியினும் ௪௨
செல்வி-புதல்வி, ௪௮ ; தெய்வயானை
செலவு-செல்கை, ஓட்டம், ௪௧; நடை, ௪௪
செலின்-சென்றால், ௪௧
செலீஇ-செலுத்தி, ௧௬ ; பிறவினை ; இது, தன்வினையெச்சமாகவும் வரும்
செலுவ-செலுத்த, ௪௭
செவிரம்-பாசி, ௧௮
செவ்வந்தி - திருச்சிராப்பள்ளி, ௧௬
செவ்வான், மலைக்குக் குருதி, ௧௧
செவ்வி-அழகு, ௩௩
செவ்விய-நேரான, ௨௨
செவ்வியை-செம்மையுடையை ௪௭
செவ்வேள்; ௪0; சிவந்த நிறத்தினையுடைய வேள் என முருகப்பிரான்மேல் நின்றது, ௪௧
செழு-அழகிய; ௩௧; சிறந்த ௪௨; பெரிய; ௪௧
செழும்-அழகிய, ௪௨
செறி, ௧௩
செறித்த-நிரம்பிய; ௨0; அடக்கிய
செறித்தல்-உள் அடக்குதல், ௬
செறிதல்-தோன்றிமறைதல், ௧௮
செறிப்ப-நிரப்ப, ௪௫
செறியும்-நிறையும்; ௨௨; நெருக்கமுறும்; ௨௧
செறியும் பெற்றி-யாதொன்று பற்றின் அதன் வண்ணமாய் நிற்குந் தன்மை, ௪௭
செறிவு-அடக்கம்; ௧௭; மெய்மொழி மனம் தீநெறியிற் செல்லாமை
செறிவுற-நெருங்கிப் பொருந்தும்படி; ௨௧; இணைவுற
செறிவுறுத்தனைய-நெருக்கி வைத்தாற்போல, ௩௭
சென்றும்-ஓடியும், ௩௪
சென்னை, ௧௭
சேண்-வானம், ௩௩
சேதாம்பல், ௫
சேந்து-சிவந்து, ௪௭; செம்மை முதனிலை
சேய்-செவ்விய, ௩௪
சேயோன்-முருகன், ௨௧
சேர்த்தி-வைத்து, ௪௭
சேர்த்திய-சேர்த்த, ௩௩
சேல்மீன், ௨
சேவல்-பறவையின் ஆண், ௩௭
சேவார்-விடையை யுடையவர்; ௨௪; சே-காளைமாடு
சேறு-குழம்பு, ௩௬
சேனாவரையர்-தொல்காப்பிய உரையாசிரியர்.
சைவசித்தாந்தத்தின்மேன்மை, ௧௭
சைவத் திருக்கோல இயல்பு, ௪௭
சைவம் ஆராய்தற்குத் தமிழ்ப் பயிற்சியின் இன்றியமையாமை, ௨௮
சைவம், ஏனைச் சமயங்களின் முடிந்த நிலையில் வீற்றிருப்பது, ௨௮
சைவம் மெய்த்திறங் கிளப்பது
சைவம்-வேதங்களாற் புகழப் படுவது, ௨௩
சைவாசியர்கையிற் சிவஞான போதநூல், ௪௭
சொல்-புகழ், ௩௭
சொல்நெறி-சொல்லொழுங்கு
சொல்லி-பேசி, ௪௧ [௨௭
சொல்லியமையாத புகழ், ௬

சொல்லின் எல்லையில் நின்று நலம் பெறுதல், சஉ
சொல் வழக்கம்-சொற்கோப்பு, உஎ
சொற்பொருள்வன்மை இன்னதென்பது, கஎ
சோமசுந்தரகுரவர் காட்சி; சஎ; அவர் திறம் உஅ; அவர் பெருமை, க0-க; அவரருமை, கஎ; அடிகட்குச் சமய ஆசிரியர், கக; அவர் நாடெங்கும் விரிவுரைகள் செய்து சைவம் நிறுத்தினமை, உகூ; அவரியற் பெயர் சோமசுந்தர நாயகர்
சோழன், உயிர் கொடுத்துப் புறவு காத்தனம், சகூ
சோறுவிரல்போல்நிமிர்க்திருத்தல், கக
ஞாண்-கயிறு, கூ, சச
ஞாயிற்றின் கதிர் தொண்டர்களின் அன்பொளிக்கும், தாமரை இறைவன் திருவடிகட்கும் உவமை, கூஉ
ஞாயிற்றின் வடிவம், மலையுச்சியிற் கட்டப்பட்டிருக்குக் தேனடையின் வடிவுக்குவமை, கூகூ
ஞாயிறு-கதிரோன், கூக
ஞாயிறு திசைதடுமாறினும், உடுக்கள் உதிரினும் உலகிற் கொடுமைகள் நிகழ்தல், சஉ
ஞாயிறுக் திங்களும் முருகற்குவமை, சகு; விளக்கத்துக்குக் தலைமைக்கும்
ஞாழல், குகூ, ஞாழல் இன்னதென்பது, கோங்கமரம், கூகூ; இதன் மலர் பாவைபோன்றிருக்கும்.
ஞெகிழ்ந்து - அவிழ்ந்து, உஅ, கூஉ
ஞெமுக்கப் புல்லுதல், கூகூ
ஞெலிகோல்-தீக்கடைக்கோல், கூகு
தக-தகும்படி, உ0, ச0; உண்டாகும்படி, கூக
தகவு-பெருமை, சக
தகை-அழகு, கஅ, சகூ
தகைமை-தன்மை, சகு
தகைக்குத்தகைதருதல், சகூ
தகைந்து-தகைகொண்டு, கூஉ
தட-அகன்ற, கூக, கூச
தடம்-அகலம், உ0; குளம், கூகூ
தடமருங்கின்-குளத்தின் கரைப் பக்கத்தில், கூ
தடவு-அுபக்கால், சச
தடா-தடுத்தற்கரிய, உஎ
தடி-தசை, சகூ
தடிதல்-கொல்லல், கு
தடிந்து-அறுத்து, உகூ, சகூ
தண்-இனிய, உஅ; குளிர்ந்த, சகு
தண்டாது - தணியாமல், உஎ; தவறுமல், சஉ; இதன் உடன்பாடு தண்டல், 'தன்' முதனிலை
தண்ணடை - மருதநிலம், கூ; மருதநிலத்தார்கள், சகூ
தணிகை, க0
தணியா-குறையாத, கூ
தணியா விளையுள், கூ
ததைய-நிறைய, கூஅ
தந்நிலை அறியார்-உணர்விறந்தவராய், சகு
தபு-கெடுக்கும், சகு
தபுத்து-கெடுத்து, உகூ
தபுதி-அழிவு, சஉ
தமர் - வேண்டியோர், சக; நம்மவர்
தமிழ்க்கீரன் - தமிழ்நலம் வாய்ந்த கீரன், சஅ

தமிழ்க்கடல் - தமிழ்ப் பயிற்சி மிக்க மதுரைமாநகர், உ௮; இதன் விளக்கம், ௯
தமிழ் கிழவோயே, ௧௫
தமிழ், நட்பமும் ஆழமும் பரப்பும் விழுப்பமும்உள்ளது, ௪௩
தமிழ் நூல் வடநூல்களின் இயல்பு, ௧௭
தமிழ்வரம்பு-செந்தமிழ் எல்லை; உ௭
தமிழின் சொற் குளிர்ச்சியும் பொருண்மாட்சியும், புலவரின் இன்சொல்லுக்கும் நல்லொழுக்கத்துக்கும் உவமை, ௪௧
தமிழுக்கு நன்மை செய்யாமையொடு தீமையுஞ் செய்வாரே உலகில் மிகஉளர், ௪௩
தாளம்-முத்து, உ
தருநை-தருகின்றனை, ௪௯
தரை-நிலம், ௩௯
தலை-தலைமை, ௧௪
தலைக்கடை - (முன்வாயிற்படியின்கண்) திருக்கோபுரவாயிற்படியின்கண், ௪௪
தலைக்குப் புழுகுநெய் தேய்த்துப் பனிநீரால் நீராட்டல், ௪௬
தலைக்குறை, உ௧; கொழுந்து
தலைக்கூடுதல் - ஓரிடத்து ஒருங்கு கூடுதல், ௯
தலைத்தலை-மேலுக்குமேல், உ௪; இடந்தொறும், ௩௮
தலைப்பட்டனை-எதிர்ப்பட்டனை ௪உ
தலைப்படும்-மேம்படும், ௩௩
தலைப்பெயல், இறைவன் அருளுக்குவமை, ௪௯
தலைப்பெயல்-கார்கால முதலிற் பொழியும் மழை, ௪௫
தலைப்பெயல் மாரி - கார்காலத் தவக்கத்திற் பெய்யும் மழை, ௪௯; இது பெருமழை.
தலைப்பெயலால் மலையின்கண் உண்டாகும் வெள்ளம், இறையருளால் உயிரின்கண் தோன்றும் அன்பின் இன்ப வெள்ளத்துக்குவமை, ௪௯
தலைப்பெயன் மாரி மணக்குழம்பு பீச்சுக்குவமை, ௪௫
தலைமகள் பிரிவாற்றாது புலம்பல், ௧௮
தலைமயக்குற்று-ஒருங்கு கலந்து-
தலைமயங்கி-நிலைமாறி, ௧௦; [௪௩
கலந்து, ௪௦
தலைமயங்கிய-கலந்த, உ௭
தலைமயங்குதல்-பிரிவுதோன்றாமற் கலந்து கிடத்தல், ௯
தலைமுழுகியதும் ஈரம்புலர அகிற்புகையூட்டுதல். ௪௬
தலைமை-முதன்மை, ௬
தலைமையின்-மேன்மையில், ௩௭
தலைமையொடு-உயர்வுடன், ௩௬
தலையழித்து-உச்சியிலிருந்து அழித்து, ௩௩
தலைவந்த-முன்வந்த, உ௦
தலைவரும்-தலைமையாக்கூடும், ௧௭
தலைவன் இன்னல் கண்டு தலைவி உயிர்வாழாமை, ௭
தலைவன் தோழியை யானை வினைதல், ௩௪
தலைவனைப் பிரிந்த தலைவி, இழை நெகிழுமளவுக்கு வருந்தி மெலிதல், ௩௫
தலைவனைப்பிரிந்து மெலிந்த தலைவியர், தலைவியை நினைந்துவாடிய தலைவற்குவமை, ௩௫

தலைவிக்குத் தலைவன் மாலை சூட்டலும் இழைதிருத்தலும், ௮
தலைவி கரும்பினும் இனிக்கின்றன ளென்பது, ௪0; (இது கழற்றெதிர் மறுத்தல்)
தலைவியின் கண் புரளுந் தொறுந் தலைவன் அறிவு மயங்குதல், ௮
தலைவியின் தொடர்பால் மலவிருள் நீங்குமென்பது, ௪0 'வாழ்க்கைத்துணை' என்றது
தலைவியைக்கண்ட மலைச்சோலையின் மாட்சி, ௩௧-௯;
தவ-மிக, ௧௧
தவப்பெருந்தன்மை-மிகப் பெரிய இயல்பு, ௧௧
தவம், ௯
தவறி-பிறழ்ந்து, ௩௫
தவிசு-இருக்கை, ௪௧; ௪௭
தழீஇ-பொருந்தி, ௨௪; சேர்ந்து, ௩௧
தழை-வளர்ந்த, ௩0; தழைந்த, ௩௯
தழைப்பீலி-தழைதலையுடைய பீலி, ௧௩
தழைமூடிய கற்குவியல் காவுள்ளத்துக்குவமை, ௮
தளவம்-முல்லை, ௨0
தளவு-முல்லை, ௩௧
தளை-கட்டு, ௩௪; முறுக்கு, ௩௨
தன்மையொருமை வினைமுற்று ஈறு, ௪௨
தன்மையொருமை வினைமுற்று விகுதி, ௨௯
தனி-மிக்க, ௩௯
தாக்கி-முட்டுதலாலே, ௧௨
தாங்கி-அணிந்து, ௪௭
தாது-மகரந்தப்பொடி, ௩௩, ௪௩
தாதுபடிந்த வண்டுகளை முத்தெனக் கருதிச் சிறுமியர், அடுப்பிலிட்டு முத்துச்சோறு சமைக்க, அவை மயக்கம் நீங்கித் துண்ணெனப் பறந்து செல்லல், ௪௩
தாமரை, ௯; செந்தாமரை, ௯ முகத்தின் வடிவுக்குவமை, ௨௯
தாமரைமலர், அடிக்குவமை, ௩௯
தாமரைமுகை உள்ளத்துக்குவமை, ௧௮
தாமரைமேல் வலம்புரி ஈன்ற முத்துகள், மங்கையர் முகத்தின் வியர்வைத்துளிகட்குவமை, ௨0
தாமரையிலிருந்து ஒழுகுந்தேன் பிள்ளையார் வாய்மலரிலிருந்து பிறக்குஞ் சொற்களுக்குவமை, ௩௧
தாஅய்-தாவி, ௩௭
தாஅய-பரந்த, ௩௯
தாயின் அருளினும் இறைவன் இரக்கம் பெரிது, ௨௪
தாயின் உயர்ந்த அருளியல்பு, ௨௯
தாரா, ௨0; நீர்ப்பறவை, இது குறகுறவென நடக்கும்
தாவா-கெடாத, ௨௪
தாழ்-பொருந்திய, ௨௯
தாழம்பூ சிவபிரான் காகாமை, ௨௫
தாழை, ௨
தாழையிதழ்களில் முள், ௨0
தாள்-முழந்தாள், ௯
தாள்தொட வீழ்ந்த கை, ௯
தாள்தொடு தடக்கை, ௩௨; சிறந்த ஆடவர்க்குரியது
தாளாண்-முயற்சியிற்சிறந்த, ௩௩; தாள்-முயற்சி

தாளாண்மாக்கள்-இங்கு வண்டியோட்டுவோர், ௩௩
தான்-இறைவன், ௧௦
திகழ்-விளங்கிய, ௪௮
திகழ்ந்து-விளங்கி, ௩௭
திங்கள் மகளிர்க்கிழைக்குந் தீது, ௧௫
திசை-பக்கம், ௪௨; நாற்றிசைகள்
திசைமுகம் நாற்புறங்களில், ௪௦; திசைகடோறும், ௪௫
திண்-வலிய, ௪௯
திணிந்து-திட்பம்வாய்ந்து, ௩௧
திமிர்தல்-பூசுதல், ௨௨
திமிர்ந்த-பூசிக்கொண்ட, ௪௩
திமில்-தோணி, ௧௨
திரள்-கட்டி ௩௦; உருண்டை, ௩௭
திரிதர-உலாவ, ௩௫
திரிதல்-நிலைதிரிதல், ௩௬
திரிந்து-மயங்கி, ௮
திரு-அழகு, ௫; அழகிய ௩௩, ௪௮; சிறப்பு, ௧௦, ௧௮; சிறந்த, ௪௮; மேன்மை, ௩௨, ௪௭
திருக்கோயிலைத் தொலைவிற் பார்க்கும் போதெல்லாந் தொழுதல், ௪௪
திருகிய-முறுகிய, ௪௯
திருகிய சினம்-முறுகிய சினம், ௧௪
திருகிய செருக்கு-மிகுதியான செருக்கு, ௪௯
திருந்திய-தேன், ௯
திருப்பரங்குன்று, ௧௦; முருகன் ஆறுபடைவீடுகளுள் ஒன்று
திருப்புகழ்-அருணகிரிநாதரருளிய புகழ்மாலை, ௨௭
திருமகள் பாற்கடலில் தோன்றினமை, ௫, ௯
திருமகள் மார்பின் செஞ்சேறு திருமால் மார்பிற் பொருந்துதல், ௩௬
திருமால் மார்பிலொழுகுஞ் செஞ்சேறு, மலைகளில் ஒழுகுந் தேனுக்குவமை, ௩௬
திருமாலின் நீலமுகத்திற் சிவந்துள்ள இருவிழிகள், மயின் மேற்கிடந்த இருதாள்களுக்குவமை, ௨௪
திருமுகம்-அழகிய முகம், ௨௫
திருமுருகாற்றுப்படையின் சிறப்பு, ௨௭
திருமுலைப்பாலின் சுவைத் திறம், ௯
திருமொழி-இன்சொல்லுடைய தெய்வயானை, ௩௧; அன்மொழித் தொகை
திருவது-செவ்விது, ௩௦; செவ்விது என்றாற்போல் ஈறுபெற்றுவந்தது
திருவளர்செல்வன்-செல்வங்கள் ஓங்குகின்ற நிறைவுடையன், ௬
திருவிளையாடல்-செயற்கருஞ் செயல்கள், ௯
திருவோலக்க மண்டபத்தின் இயல்பு, ௪௫
திரை-அலை, ௨௦, ௩௮; கடல், ௩௩; ஆகுபெயர்
திவவு-யாழ்நரம்பின் வார்க்கட்டு, ௨௧
திவள் ஒளி-அசையும் ஒளி, ௯; விளங்கிய ஒளி, ௧௯
திறம்-கூறுபாடு, ௮; வகை, ௯, ௧௪, ௪௩; பக்கம், ௧௦, ௨௫; இயல்பு, ௨௦, ௨௩; செயல், ௨௨; வன்மை, ௨௭; நிலை, நிலைமை, ௪௧; மேன்மை, ௪௩
திறம்புளி-பிறழும் இடம், ௨௯
திறல்-உடம்பின் உரம், ௧, ௫௪; வலிமை, ௨௪; ஆற்றல், ௨௫
திறன்-வலிமை, ௨௮
தின்பது-தின்னுதல், ௩௭

தினை-தினைநெல், ௩௫
தினைகுற்றும்போது குறத்தியர் பாடும் உலக்கைப் பாட்டு அங்குள்ள கிளிகளையும் உறங்க வைக்கும், ௩௫-௬
தினைப்புனங்களின் இதண்மே லிருந்து குறத்தியர் கவண்கல் எறிந்து கிளியோட்டுதல், ௩௬
தினையின் பச்சைமாவை உண்ணுதல், ௩௬
தீ-நெருப்பு, ௪௨
தீம்-தித்திப்பு, ௨௦; இனிய, ௩௬, ௪௬
தீயின்பிழம்பு-செந்தாமரை மலர்க்குவமை, ௩௨
தீர்-நீக்கும், ௪௦
தீர-நீங்க, ௪௭
தீராது-நீங்காது, ௪௯
தீவிய-இனிய, ௨௩
தீவிளி-பசுங்காய், ௩௬
துகள்-மகரந்தம், ௨; குற்றம்
துகிர்-பவளம், ௩௮, ௪௬
துகிர்ப்பலகை-பவளப்பலகை, [௩௨
துகில்-ஆடை, ௪௪
துடி-உடுக்கை, ௧௨, ௪௦; நுண்ணிய இடுப்புக்குவமை
துடிக்கண் துணியல், ௧
துண்ணென-திடுமென, ௪௩
துணர்-கொத்து, ௧௨
துணர்ந்து-கொத்தாக அடர வளர்ந்து, ௩௦
துணி-துண்டு, ௪௬
துணிநீர்-தெளிந்த நீர், ௧
துணை-பெடைப்பறவை, இருபாற்கும் உரித்தாயினும் பெரும்பாலும் பெண்பால் மேற்று, ௧
பெடை, ௧௯, ௨௦, ௨௧; வாழ்க்கைத்துணை, ௪௬
துணைப்புதல்வன் - இரண்டாம் புதல்வன், ௪௨
துணைமுலை, ௮
துத்தி - பாம்பின் படத்திற் காணப்படும் பொறிகள், ௩௦
துப்பு-தூய்து, ௩௨
துய்க்க-நுகர, ௨௬
துய்ப்பது-நுகரப்படுவது, ௨௩
துயர்-துன்பம், ௩௬
துயில்-தூக்கம், ௩௮
துரந்து-ஓட்டி, ௪௮
துருவிய - கடைந்து துளைத்த, ௪௪
துருவியூதுதல்-துளைத்து ஊதுதல், ௨௧
துவ்வாது-நுகராமல், ௨௨; துவ்வல்-நுகர்தல்
துவர்-சிவப்பு நிறம், ௧௨, ௩௭; சிவந்த, ௨௧; பவளம், பவழம், ௮, ௩௦
துவளல்-புரண்டசைதல், ௮
துவன்றி-நிறைந்திருந்து, ௪௬
துவை-துவையல், ௧௩, ௪௯
துள்ளி-குதித்து, ௩௫
துளங்கும்-நிலைகலங்கும், ௨௨; நிழலாடும், ௪௬
துளங்கொளி - அசைந்து நிழலாடும் விளக்கம், ௧௩
துறை-இடம், ௪௬
துன்-செறிந்த, ௪௦, ௪௮
துன்றிய - அடர்ந்துள்ள, ௩௬; மிகுந்த, ௩௮
துன்றுதல்-அருகிருத்தல், ௪௩
துன்றுநிலை-பொருந்தியநிலை, ௭
துன்ன-நெருங்க, ௪௭
துன்னல்-தைக்கப்பட்ட, ௪௬
துன்னி-அணுகி, ௫, ௪௨
துன்னிய-நிறைந்த, ௧௩
துன்னுவிப்ப - பொருந்துவிப்ப, ௩௪
தூ-அழுக்கின்மை, ௨௧; தூய, ௩௨, ௩௬
தூக்கி-தொங்கவிட்டு; ௩௬, ௪௫

தூங்க-தொங்க, ௩௭
தூங்கணம் - தூக்கணங் குருவி, ௩௮; இஃது அழகுபடக் கூடு கட்டும்
தூங்கி-தொங்கவிட்டு, ௩௬
தூ-தூய்மை
தூதுவேண்டற்கு ஓர் இனமான காரணங்காட்டல், ௨௧
தூபக்கால்களுக்குப் பொற் பூச்சு, ௪௪; இவற்றில் அகில் நெய் பெய்து பலர் நின்று புகைப்பர்.
தூஉய்-தூவி, ௨௧
தூயநூல்-கடவுளைப் பாடுதலால் தூய எனப்பட்டது, ௧
தெய்வயானை திருமணம், ௩
தெய்வயானை தேவர்கோன் புதல்வி, ௪௮; முருகனோடு மணங்கூடினமை
தெய்வயானை முலைக்கொம்பாற் குத்துதலும், வள்ளி அதனா லான புண்ணை முலைவேதி னால் ஒற்றலும், ௩௧
தெய்வயானையின் சீறுதலும் வள்ளியின் ஆறுதலும், ௩௧
தெரிப்பு - தெரிதல், ௧௭
தெரிவு - பகுத்தறிவு, ௧௨; அறிவு, ௩௪
தெருட்டி - தெளிவித்து, ௧௦
தெருள் - தெளிவு, ௪௫, ௪௮
தெள் - தெளிந்த, ௫
தெள்ளிதின் - விளங்க, ௩௫
தெள்ளொலிச் செவி, ௧௩
தெளித்து - பரப்பி, ௩௬
தெளிநிலை-அறிவு தெளிவெய்து நிலை, ௨௫
தெற்றிய - பின்னிய, ௩௮
தெற்றென - தெளிவாய், ௩௭
தெறித்த - சுண்டிய, ௪௪; மீட்டல்
தெறுதல் - சுடுதல், ௪௨
தென்மலை - தெற்குமலை, ௪௪; பொதியமலை
தென்றல் புலிபோலச் சீறி வருதல், ௧௮
தென்றல், பொதியமலையின் சந்தனமணமும், அம்மலரின் மகரந்தமும் அளவிவந்து இன்பந்தருதல், ௩௮
தென்னவன் - பாண்டியன், ௧௦
தென்னவன் தேவி - மங்கையர்க் கரசியார், ௧௦
தேத்தடை - தேனடை, ௩௬
தேம் - தேன், ௧௨; இனிமை, ௪௩; தித்திப்பு, ௪௬
தேய்வை - குழம்பு, ௨௧
தேர், ௪௨
தேவர்கள் துன்பம்நீங்க முருகன் வேலேந்தினமை, ௪௮; துன்பம், சூரனால் விளைந்தது
தேவன் - ஒளிவடிவினன், ௨௪
தேளின்கடுப்பு நறவின் கடுப்புக் குவமை, ௩௩
தேற்று - தெளிவடையாத, ௨௦
தேறி - தெளிவடைந்து, ௪௮
தேன் - தேன் வண்டு, ௩௧
தேன்கூடு முதிர்ந்து நீலநிற மாகக் காணப்படுதல், ௩௫
தைஇ - உடுத்து, ௮
தொகுத்தல், ௧௬
தொகுதி - கூட்டம், ௩௧
தொட்டு - பட்டு, ௩௫
தொட - தொடும்படி, ௪௪
தொடலை - மாலை, ௮, ௧௫, ௨௧, ௩௧; தொடுக்கப்பட்டது தொடலை
தொடி - வளையல், ௨௩
தொடு - (துளைத்த) பட்ட, ௧௧; வயல், ௩௫
தொடுத்த - கட்டப்பட்ட, ௩௬
தொடுத்து - தொடங்கி, ௨௦

தொடை, நல்ல நிறமமைந்தது, ௬௨; தொடை - மாலை, ௪௪
தொண்டர் - அடியார், ௪௫
தொண்டர்கள் அன்புருவினர், ௨௬
தொண்டர்களெனும் வண்டினம், ௨௬
தொண்டர்ப் பணியா நாணம், ௧௪
தொய்யில் - சந்தனக்கோலம்
தொல்காப்பியர், ௫௫00 ஆண்டுகட்கு முற்பட்ட முதுதமிழ்ப் பேராசிரியர்
தொலைச்சிய - கொன்ற, ௬௫
தொலைதல், ௨
தொழில் - செயல், ௨௬; வேலைப்பாடு, தொழிற்பாடு, ௬௮, ௪௪
தொழிலடியாகப் பிறந்த பெயர், ௫௫; தொடலை
தொழும்பு - தொண்டு, ௧௭; அடிமை.
தோகை - பீலி, ௬௬; மயில், ௪௨; சினை ஆகுபெயர்
தோடு - மடல், ௨, ௪௬
தோம் - குற்றம், ௧௭
தோய்ந்த - ஊடுருவித்தோன்றும், ௨௬
தோலாப்புலவோன் - தோல்வியடையாத புலவன், ௧௨
தோலாமொழித் தேவர் - சூளாமணி யாசிரியர்
தோலுரிக்கப்பட்ட உடம்பு, பசியால் எலும்பெழுந்த உடம்புக்குவமை, ௪௧
தோழிக்குத் தலைவன் தன் காதலைக் குறிப்பிக்கும் வகைகள், ௬, ௭
தோழி கிள்ளையைத் தூதுவேண்டல், ௨௬
தோழி தலைவி குறிப்பறிதல், ௬௪
தோழி பருவங்காட்டி வற்புறுத்தல், ௧௫
தோழி முன்னுற உணர்தல், ௭
தோழி விரவிக்கூறல், ௪
தோள்கள் வாட்படையின் வல்லமை வாய்ந்தனவென்பது, தோன்றி - வந்து, ௪0 [௬௨
நக்கு - நகைத்து, ௧௨; எளனஞ் செய்து, ௧௪
நகர் - கோயில், ௬
நகு - இகழும், ௬௧
நகும் - உவக்கும், ௧௪
நகை - பல், ௬, ௨௬; மகிழ்ச்சி, ௪௫
நகைதரு கேண்மை, ௧௫
நச்சி - விரும்பி, ௨௬
நசை - விருப்பம், ௪, ௪0, ௪௫; வேட்கை
நசைபிறக்கிடல் - வேட்கை பிற்படல், ௮
நட்பு ஒத்தார்கண்ணது, ௧௫
நடக்குந்தோறும் வயிறு குலுங்குதல், ௬௨
நடை - ஒழுக்கம், ௬௫
நண்டின் உருவ அமைப்பு, ௭
நண்டு, ௧௯; நான்கறிவுயிர்; இடையே ஊனுண்பாராற் கொன்றுண்ணப்படுவது
நண்பர் அயலாராவதும், அயலவரும் நண்பராதலும் உலகியல் பாதலின், நமர் பிறரென்று போராடி நிற்றல் வீண்; இறைவனே நிலையான நமர், ௪௧
நத்து - சங்கு, ௬௮
நந்தாது - கெடாது, ௬௭
நந்து - நத்தை, ௧௯; ஈரறிவுயிர்
நந்தும் - கெடும், ௧0
நமர் - நங்காதலர், ௪0; சுற்றத்தார், ௪௧

நயந்து - விரும்பி, உச
நயம் - அன்பு, சக; ஈரம்
நரகர் - நாகர், கஏ; கீழுலகத்தவர்
நரந்தம் - நாரத்தமரம், ௩சு, சிறிய பூக்களுள்ளது
நரப்பு - நரம்பு, சச
நரை - வெண்ணிறம், அ
நல் - சிறந்த, சசு
நல்லிசைப்புலவர் செய்யுள், கடலுக்குவமை, உ0
நல்லே - நன்னிலேயுடையை, சஎ
நலியும் - வருத்தும், கஅ; பிறவினைப்பொருள்
நலங்கிளர் - நன்மைமிக்க, கஉ
நலங்கெழு - நன்மைமிக்க, கஉ
நலத்தக - நன்றாக, ௩ரு; இனிமையாக ௩அ நன்கு பொருந்தும்படி, உ0
நலப்பட - அழகாக, உரு
நலம் - இன்பம், உக; அழகு, ௩சு; நன்மை, நன்மைகள், சக, சஉ; செம்மை, சச
நலன் - அழகு, ௩எ, சச
நவ்வி - மான், ௩எ
நவிலா - நாவாற்கூறாத, கக
நவை-பழுது, உஎ, சஉ; குற்றம், சஎ
நவையறு தமிழ், கஎ; நவை - குற்றம்
நள் - செறிந்த, ச0; நடு
நள்இருள் - நடுஇரா
நற்றவர், உரு
நற - தேன், ௩க
நறவம் - அனிச்சமரம், ௩சு; அடர்ந்து வளர்வது
நறவு-தேன், எ, ௩சு; கள், ௩௩
நறு - நல்ல, ௩க
நறுநெஞ்சு, கக
நறும் - இனிய, உரு, ௩0, சஉ
நறும்பொருள் - மணப்பண்டம், உஉ
நறை - தேன், ௩க, ௩உ
நறைகமழ் நுதல், க௩; நறை - மணம்
நன்கனம்-அழகிதாக, ௩0; நல்லபடியாக, ௩க; நன்றாக
நன்று - பெரிது, பெருமைப்பொருளது, க; இனிது, ௩அ
நன்னெல், செந்நெலின் பெயர்
நனி-மிக, உ0, உக; நன்றாக, சரு
நனே, கஉ; பூமொட்டு, சு, எ; முகை, அ; மொக்கு, ௩சு; மொட்டு, ௩ச
நாகத்தின் தலேயில் மணி, ௩0
நாகம் உத்திக்கும், அதன் மணி, உத்தியின்கீழ்க் காணப்படும் நெற்றிக் கண்ணுக்கும் உவமை, ௩0
நாட்டி-நிறுத்தி, சரு
நாடி-எதிர் விரும்பி, ரு; ஆராய்ந்தறிந்து, சஉ
நாடிய-விரும்பிய, ௩ரு
நாணற்கிழங்கின் முளேயும் முருந்தும் முத்தமும் முறையே வெண்பற்களின் கூர்மைக்கும் வரிசைக்கும் வன்மைக்கும் உவமை, ௩0
நாணற்புல், ௩0
நாத்தழுதழுத்தல் - குழறல், கக
நாம்-அச்சம், ௩கூ
நாராயணசாமிப்பிள்ளே இயல்பு, கஎ; அவர் திறம், உஅ
நாரை, ௩அ, கால்களில் ஓடும் மீன்களே நோக்கிக்கொண்டிருக்கும்; தொகுதியாக இருக்கும், ௩க
நால்வகை வண்டுகள், ௩க
நாவல்-நாவன் மரம், ௩எ
நாவல் மரம் கோழரையுள்ளது, எ

நாவற் பழங்கள் இலைகடோறுந் தொகுதி தொகுதியாய்ப் பழுக்கும், ௭
நாவற்பழம் சுவையுள்ளது, ௭
நாவார-நாத்தழுதழுப்ப, ௨௪
நாள்-நேரம், ௨௫; வாழ்நாள், ௨௯
நாள்மதி-முழுநிலா, ௩௮
நாளாண் மலர்ந்து - விடியற் காலையே மலர்ந்து, ௨௫
நாளும் நாளும்-நாடோறும், ௪௧
நாற்றி-தொங்கவைத்து, ௪௫
நான்முகன் 'ஓம்' என்னும் ஒரு மொழி தெளியும்படி முருகன் அவன்றலையிற் குட்டினமை, ௪௦
நானிலக் காட்சிகள், ௧௯-௨௦
நானிலக் காட்சிகளே மெய்க் காட்சிகளெனக் கண்டு, மயங்கி வாழ்வாரும் பலர், ௨௦-௧
நானில மகளிர், ௩௩
நிகரா - இணையில்லாத, ௪௯
நிகரா இன்பம்-பேரின்பம், ௪௯; வீடுபேற்றின்பம் முடிவில்லாதது
நிகழ்த்த-விளக்க, ௩௩
நிச்சலும் - நாடோறும், ௨௭; இதன் விளக்கம்; என்றும், ௩௭
நிணந்திகழ்வேல், ௩
நித்தலும்-நாளும், ௪௩
நித்திலம்-முத்து, ௩௮
நிமிர்ந்த-நெடுகிய, ௧௯
நிரம்பிய-நிறைந்த, ௪௧
நிரல்பட-வரிசையாய், ௪௪
நிரை குலம், (கூட்டம்), ௪௨
நிரைத்து-வரிசையாய், ௩௦
நிரை நிரை - ௨௦, ௨௧, ௩௯; வரிசை வரிசையாக, ௧௨; முறை முறையே, ௨௯
நிரை நிரை கூறும்-முறை முறையாகக் கட்டுரைத்துச் சொல்லும், ௪௨
நிலத்திற் படும்படி பொன் ஆடை கட்டுதல், ௪௪
நிலன்-வயல், ௪௩
நிலை-ஆழம், ௧௭; இருப்பு, ௩௫; வாயில் நிலைகள், ௪௪
நிலைநின்று-உறுதியாய் நிலைத்து, ௨௯
நிலைமதி - நிலைப்பாயாக, ௪௨; இன்பங்கள் பலவுந் துய்த்தற் கேற்ற நிலைமை
நிலைமை-நிலைத்தல், ௩௪
நிலையிடும் - நிலைகாணும், ௨௭,
நிலையினை-நிலையாக வாழ்வை, ௪௭
நிலவுடை-விளங்குகின்றனை, ௪௯
நிலவுறழ் குருகு, ௧
நிலவை அரவு விழுங்குதல், ௧௫
நிவத்தல்-உயர்தல், ௭, ௧௮, ௩௩, ௪௪; எடுத்துத் தோன்றுதல், ௩௦
நிறம் - ஒளி, ௧௧; வண்ணம், உருவு, ௩௯
நிறீஇ-நிறுத்தி, ௨௯
நிறுவிய-நிறுத்திய, ௪௯
நிறை, ௭
நினைதல்-கருதல், ௧௫
நினைவு சொற்செயல்கள் அன்பில் ஒத்துநிகழ, அதனால் இறைவனைக் காண்டல் கூடுமென்பது, ௫௦
நினைவு சொற்செயல்களைக் காத்துப் போற்றவேண்டுமென்பது, ௫௦; அன்பு நெறியினின்றும்பிறழாதபடியென்க.
நீடு - நெடுங்காலம், ௪௨
நீத்தம் - வெள்ளம், ௪௯
நீர் - நீர்மை, இயல்பு, ௨௦
நீர்க்குவளை, ௩௮; இது நீலப்பூ

நீர்க்கோழி, ௧
நீர்மை - இயல்பாகிய குணம், ௫0
நீர்மையை - இயல்பினை, ௪௮
நீர்வளம், ௧
நீல் - நீலநிறம், ௨௯
நீவிய - தடவிய, ௧௪
நீறுபூசிய சிவபிரான் தாது படிந்த தாமரைக்கு உவமை, ௨
நீறுபூத்த நெருப்பு, தாதுபடிந்த செவ்வாம்பன் மலர்க்குவமை, ௧௨
நுங்க - விழுங்க, ௫௧
நுதி - நுனி, ௪௪
நுந்தை, ௧௬; முன்னிலை முறைப்பெயர்; 'நும் தந்தை' யென்பது திரிந்ததன்று, (தொல். எழுத். ௫௪)
நுரை-பால்நுரை, ௨௧; ஆடைக் குவமை, வெண்மைக்குந் தூய் மைக்கும் மென்மைக்கும்
நுளை - நெய்தல் நிலம், ௪௫
நுளைச்சியர் - நெய்தல் நிலத்துப் பெண்டிர், ௧௨, ௫௫
நுனிவளைந்த துதிக்கை, கதிர் வளைந்த தினைப்பயிர்க் குவமை, ௫௯
நுனைய - நுனியினையுடைய, ௨௯
நூல் - நூலாராய்ச்சி, ௫௬
நூலா உடை - கையால் நூற்கப் படாத ஆடை, ௧௯
நூழிலாட்டு - கொன்று குவித் தல், ௧௬
நூழை - நுழைவாயில், ௮
நூறி - துகளாக்கி, ௧0; பொடி படுத்தி, ௧௬; அழித்து, ௧௭
நூறு - பொடி
நெக்கு - நெகிழ்ந்து, ௪௧
நெக்குடைந்து - உருகி, ௧௧
நெகிழ்ந்து - அவிழ்ந்து, ௫௧; முறுக்கவிழ்ந்து, ௪௯
நெகிழல் - கழலல், ௫௬
நெஞ்சம் - உள்ளம், ௧௧
நெஞ்சமர் காதலர், ௮
நெஞ்சறிவுறுத்தல், ௨௪, ௪௧
நெஞ்சின் இயல்புகள் இன்ன வென்பது, ௫௪
நெடும் - உயர்ந்த, ௪௬
நெய்தல் - கடற்கரை, ௫௫; நெய்தல்நில வியல்புகள், ௪௪
நெய்தல் சான்ற கானல், ௧௫
நெய்தல் நிலத்து ஆடவர் மகளிர் தொழில்கள், ௫௫
நெய்தல்நில மகளிர் குரவை யாடுதல், ௧௨
நெய்தலஞ்சிறார் விளையாட்டு கள், ௧௨
நெய்தற் சிறுவர் சிறுமியர் விளை யாட்டுகள், ௪௫-௪
நெருங்கி - இடித்துரைத்து: கழறி, ௫௬; அணுகி, ௪0; மனநெருக்கம்
நெருப்புச் சுடுதல், ஞாயிறு சுடு தற்கு உவமம், ௪௨
நெல்லி-கருநெல்லிக் கனி, ௪௨; நீண்ட வாழ்நாள் அளிக்கும் அமிழ்தம் பொதிந்தது
நெற்குரல், ௧
நெற்பொறி, புன்கமலர்க் குவமை, ௫௯
நெறி - நெளி, ௧௮; ஒழுங்கு, ௪௧
நெறித்தன்ன குழல் - முடங்கி னாற்போல் நெளிதல் உள்ள மயிர், ௧௫; நெறித்தல்-முடங் குதல், நெளிதல்
நெறிப்பட - முறையாக, ௨௯, ௨௭, ௪௪
நெறிபட-ஒழுங்குதவறாமல், ௨௬
நேர்படும் உளம் - செவ்விய உளம், ௧௭
நேர்வது - ஆவது, ௪
நேரிதின் - நுட்பமாக, ௧0

நேரிழை முன்கை. ௪
நொடுத்தும் - விற்றும், ௩௩
நொய் - மெல்லிய, ௪. ௪௩
நொய்சிறை வண்டு, ௪
நொய்தின் - இலேசாக, ௯
நோக்கி - எதிர்பார்த்து, ௩௯; தெரிந்து, ௪௪
நோக்கு - பொருளை நுனித்துக் காண்டல், ௨௮
நோற்ப - தவம்முயல, ௨௯
நோன்மை - பொறுக்கும் ஆற்றல், ௧௧
நோனா - தவம் வாயாத, 'நோன்றல்' என்னுஞ் சொல்லின் எதிர்மறை, ௪௦; பொறுத்தற் கரிய, ௪௧
நோனுது - பொறாது, ௨௩
பகடு - எருது, ௩௩
பகர்தல் - விலைகூறுதல், ௨௧
பகர - சொல்ல, ௪௪
பகல் - நாள், ௯
பகுத்தறிவு, ௧௯; ஆறாவது அறிவு; மக்களுக்கு
பச்சிளங்குருதி - செவ்விய செந்நீர், ௨௯
பச்சிளம்புல், ௩௭
பசும் - புதிய, ௩௯
பசும்பொற்குழம்பு ஒழுகிய நெருப்பு, புன்னைத்தாது படிந்த செந்தாமரைக் குவமை, ௩௩
பஞ்சு - மகளிரடிக்குவமை, ௮
பட்டாங்கு - உள்ளவாறே, ௨௭; (உண்மை), பட்டபடி, நிகழ்ந்தபடி
பட-உண்டாக, ௪௦; படும்படி, ௪௩
படர்ந்து - சென்று, ௯, ௪௩
படரும் - செல்லும், ௪௨
படலம் மூடிய கண், மலம் மூடிய உயிர்க்கு உவமை, ௪௮
படாம் - போர்வை, ௪௨; திரை, ௪௫
படு - அடிப்படுகின்ற, ௩௫; இனிய, ௩௯; சுவைபடு, விழுகின்ற, ௩௯
படுகர் - பள்ளம், ௪௧
படுத்து - அழித்து, ௨௯
படுத்தும் - அகப்படுத்தும், ௩௩
பண்டும் - முன்னும், ௪௨
பண்டைப்பிறவி - பழம்பிறவி, ௪௨
பண்ணியம் - தின்பண்டம், ௧௧; விரல்களை இயக்கிப் பண்ணைப் படுதல்
பண்பு - இனிமை, ௨, இயல்பு, ௩, ௩௪, தன்மை, ௩௩
பண்புப்பெயரின் திரிபு, ௫
பணி - தொழில், ௪௫
பணிலம் - ௪௩; சங்கு, ௧௪, ௧௮; கழுத்துக்குவமை, மழமழப்புக்கு
பணை-பருத்த, ௨௯; வயல், ௩௪
பதம் - சோறு, ௧௧
பதுக்கை-மறைப்பிடம்; பதுக்கி வைத்தலின் வந்தபெயர், ௮
பந்து-மலர்ப்பந்து, ௨௨
பயந்த - ஈன்ற, ௩௮
பயந்து - தந்து, ௩௯
பயறு, ௨
பயிர்ந்த - அழைத்த, ௧௯
பயில் - பலகாலுந்தோன்றும், ௯
பயிலல் - பழகல், ௨௪
பயின் - அரக்கு, ௧௯
பயினொடு சேர்த்திய கல் - அரக்கிற் கருங்கற்பொடி கலந்த சாணைக்கல், பிரிவறியாத் துணைக்கு உவமை, ௧௯
பரசி - தொழுது, ௪௪
பாணர், ௨௪
பரத்தியர் - நெய்தல் நிலமகளிர், ௨

பரதவர், க
பரந்த - விரிந்த, ௩௫; நிரம்பிய, ௩௭
பரப்பி - எங்குஞ் சிந்தி, ௨௦, போக்கி, ௪௦; சூழப்பார்த்து, ௪௫
பரல் - பருக்கைக் கற்கள், அ
பரல்கெழு முரம்பு மடவாரடிகளை வருத்துதல், அ
பரவியும் - வழிபாடாற்றியும், ௨௬
பராரை - பருத்தஅரை, ௩௬; அரை - அடிமரம்; பருமை அரை - பராரை
பரிசு - தன்மை, ௩௨, ௩௪, உண்மை, ௩௪; பெருமை, ௩௭
பரிதி-கதிரவன், ௩௬, ௩௭
பரிவு-வருத்தம், ௬
பரு-பருத்த, ௩அ
பருக்கைக் கற்கள் நிரம்பிய மேடு, கேடு புரிவார்க்குவமை, அ
பருமுத்து - முத்துக்களுட் சிறந்தது, ௯
பருவரல்- துன்பம், ௩௫
பல்புகழ்-மிக்க புகழ், ௬
பலபட-பலவகையாக, ௨அ
பலவு-பலாமரம், ௩௬; பெரிய இலைகளுள்ளது
பலவும்-எல்லாம், ௪௨
பலாச்சுளை, சொற்களின் அடைவுக்கு உவமை, ௨௭
பவளக்கோவை, புறவின் கால் நகங்கட்குவமை, ௩அ
பவளத் தாமரை - செந்தாமரை, கஅ; முகத்துக்குவமை
பவளப் பலகைகள், முருகப்பிரான் மார்புக்குவமை, ௩௨
பவளம், சிவந்த வாய்க்கு உவமை, க௦
பவளம் செவ்வாய்க்குவமை, அ
பவளம், மலையின் உடம்பி விருந்து கொப்புளிக்குங் குருதிக்குமிழி, ௪௧
பவளமலை, சிவந்த மார்புக் குவமை, அ
பவனம்-பாதாளம், ௪௨; நாகருலகு
பழி - அலருக்கேதுவான துயர நிலை, ௨௧
பழிச்சி-பரசி, ௪௫; ஏத்துதல்
பழித்த-வெறுத்த, ௨௫
பழிப்பு-மாசு, ௩௧
பழு-விலா எலும்புகள், ௪௧
பழுது-குற்றம், ௩௧, ௪௭
பள்ளி-அணை, ௨௩
பளகு-குற்றம், ௨அ
பளிக்கறை, ௨௫
பளிக்கு-கண்ணடி, ௩௭
பளிங்கு-தெள்ளொளியுள்ளது, ௫
பற்றி - அணுகி, ௩௪, பிடித்து, ௪௬
பறந்து, விரைவுக் குறிப்பு, ௪௧
பறை-இறக்கை, ௩அ
பன்மலையடுக்கம், ௩௬
பனி-குளிர்ச்சி, ௪, ௪௨, ௪அ; நீருறைந்த பனி, ௩௩; குளிர்ந்த, ௫௦
பனிக்கட்டியின் வெட்டுவாயிற் றோன்றும் பளபளப்பு; கன்னங்களின் ஒளிக்குவமை, ௩௦
பனிச்சை - பின்னல் முடிப்பு, ௩௦; பின்னி வளைத்து முடிப்பது, ஐவகை முடிப்புகளுள் ஒன்று
பனிநீர்-(பன்னீர்),௨௧;குளிர்ச்சியான ஒருவகை மணநீர், ௪௬; குளிர்ச்சியால் வந்த பெயர்
பனிப்ப-நடுங்க, ௨௧

பனிமலை, உப்புக் குன்றத்துக் குவமை, ௩௩
பனிவரா-குளிரும்படி, ௪௭
பா-பாட்டு, ௪௧
பாக்கம் - செம்படவர் சேரி, ௨, ௧௨
பாகு-யானைப்பாகன், ௩௪
பாங்கு-அழகு, ௩௮
பாங்குபட - உரிமையுண்டாக, ௨௬
பாங்கன் தலைவனைக் கழறல், ௩௯
பாசி, ௪௬; சடை
பாசிலை-௯; பசுமை இலை, ௩௬
பாஞ்சராத்திரர் கொள்கை, ௨௨
பாட்டு-இசை, ௩௧
பாடில் சூர், ௩
பாடினி-பாண்மகள், ௪௪
பாடு-அழிதல், ௩
பாண்டில்-கட்டில், ௨௧
பாண்மகள் யாழ் இணக்கி இசை பாடல், ௪௪
பாணன், ௬
பாணி-தாளம், ௪௪
பாத்தி, ௩௭; சிறு வயல்
பாதாள உலகிலிருந்து அதிகன் கருநெல்லிக்கனி பெற்றமை, ௪௨
பாம்பின்தோல், ஆடைக் குவமை, ௪௬; மென்மைக்கும் வெண்மைக்கும்
பாய்-பாய்ந்து, ௩௬; பரவிய, ௩௭; பெருகிய, ௪௬
பாய்த்தி-பாய்ச்சி, ௯
பாய்ந்து-குதித்து, ௪௩
பார்ப்பு-பறவைக் குஞ்சு, ௨௩
பால்-கூறு, ௧௦; பிரிவு, ௩௦; அமிழ்தம், ௩௧; வகை, ௩௨; பக்கல், ௩௬, பாகுபாடுகள், ௪௪
பால்ஒழுகும் புதல்வர்களின் சிவந்த வாயிதழ், தாதுபடிந்த செவ்வாம்பன் மலர்க்குவமை, ௧௨
பால்நீர் வாவி, ௬
பால்நுரை ஆடையின் தூய்மைக்கும் வெண்மைக்கும் மென்மைக்கும் உவமை, ௩௨
பாலில் விழும் நீலமணி நீரில் விழும் நாவற்பழத்துக் குவமை, ௭
பாவை - சித்திரப்பாவை, ௩௬; பெண், ௩௬; பாவை பெண்ணுக்கு உருவகம்
பாவையை, ஐ:சாரியை, ௩
பாழ்வயிறு - பாழாய்க்கிடந்த வயிறு, ௪௭; ஒன்றுமில்லா வயிறு
பாழ்வீட்டின் நிலைமை, ௧௮
பாற்கடல், தூய்மையான பரந்த நூற்கேள்விக்குவமை, ௩௯
பாற்பட - பகுதிகள் ஆக, ௨௮
பிடர் - புறங்கழுத்து, ௩௩
பிண்டி - மா, ௩௬
பிணிக்க - வயப்படுத்த, ௨௨
பிணிக்கும் - வயப்படுத்தும், ௩௮
பிணை - பெண்மான், கவரிமா, மான் முதலியவற்றின் பெண்ணினம், ௨௦; பேடு, ௩௬; ௪௦
பிணைத்த - தொடுத்துக் கட்டிய, ௮; தொடுக்கப்பட்ட, ௩௧
பிணித்து - கட்டி, ௪௪
பிணைக்கு - கோத்து, ௧௨
பிணையல் - மாலை, ௪௬
பித்திகை - பிச்சிச்செடி, ௨௧; சாதிமல்லிகை
பிரசம் - தேனீ, ௩௬
பிரிவாற்றாத தலைவி தோழியொடு கூறல், ௪௦
பிரிவாற்றாத தலைவி மதியொடு வருந்தல், ௧௯

பிழையலை - தவறவிடாதிருப்பாயாக, ௪௨
பிள்ளையார் இதழ்க்குக் கொவ்வைக் கனியும் பவழமும் ஒவ்வாது இலவிதழே ஒத்தவின் ஏது, ௩௦
பிள்ளையார் திருமேனியில் திருநீறு, ௩௧
பிள்ளையாரது வேல் உமையவள் தந்தது, ௩௨
பிறக்கிடல் - பிற்படல், ௮
பிறக்கினன் - உயர்த்து வைத்தனன், ௪௧
பிறைக்கோடு - நிலாவின் வளைந்த நுனி, ௩௬
பிறைக்கோடு, மலையுச்சியின் தேனடையைக் கீறிற்றெனல், ௩௬
பிறங்குதல் - மிகுதல், ௧௫
பிறங்கும் - விளங்கும், ௫௦
பிறங்குவோர் - மேம்படுவோர், ௨௪
பிறந்த - விளைந்த, உண்டான, ௪௪
பிறர் - அயலவர், ௪௧
பிறர்க்கீதலென்பது தக்கார்க்கீதல், ௪௩
பிறர் கடைவாயிலிற் சென்று பாடியிரத்தலின் குற்றம், ௪௩
'பிறர் திருந்துதற்குச், சொல்லிக் காட்டுதலினும் நடந்து காட்டுதலே முதன்மை' யெனக் கொண்டு நடையைச் சுட்டியிருத்தல், ௩௫
பிறரை வழிப்படுத்துவோர், தங் கருத்துகளை முறைமுறையாகக் கட்டுரைத்துச் சொல்லுதல், ௪௨
பிறவியுட்படுதலாற் குற்றந் தேய்தல், ௧௬
பிறவினை, ௮௧
பிறழ்தொறும்-புரளுந்தோறும், பிறழாது - தவறாது, ௪௧ [அ
பிறிது - வேறு, ௩௪
பிறிதோர் - மற்றோர், ௪௬
பிறை - நிலா, ௪௦
பிறைமுடி - சிவபிரான், ௪௦
பின் - மேல், ௩௫
பின்றை - பின், ௬, ௨௬, ௪௬
பின்னல் முதலிய தொழில் நுட்பங்கள், ௪௫
பின்னும் - மேலும், ௩௯
பீடு - பெருமை, ௮, ௧௩, ௧௬, ௩௯
பீலி - மயிற்றோகை, ௪௯
புகல் - புகுதல், ௮
புகழ் உரை - புகழ் தக்க உரை, ௩௯
புகுத்த - உட்செலுத்த, ௪௬
புகுத்துக - உட்செலுத்துக, ௪௪
புகுந்து சொன்மொழி - முன் விரைந்து மொழியுஞ்சொல், ௧௪
புகை, அகிற்புகை, ௪௬
புக்கு - தாவி, ௪௩; உள் நுழைந்து, ௪௪
புட்கள் தாமரைமலரில் துயிலுதல், ௨௩
புடை - பக்கம், ௪௧
புடைத்த - பருத்த, ௩௧
புடைத்து - தட்டி, ௨௪
புடைபட - பக்கத்தே வைத்து, ௨௨
புடைபுடை - பக்கங்கடோறும், ௩௩
புடைபெயர்ந்து - பக்கம் பெயர்ந்து, ௩
புணர்ந்து - பொருந்தி, ௩௧, சேர்ந்து, ௪௨
புணர்ப்பு - சிக்கு, ௪௯
புதைல் - சிறு தூறு, ௩௫
புதைதல் - அழுந்துதல், ௩௩

புய்த்த - பறித்த, ௩௪; இக் காலத்திற் 'பிய்த்தல்' என வழங்கும்.
புரந்தருளும்-பாதுகாத்தருளும், ௨௫
புரள - அசைய, ௪௪
புரி-முறுக்கு, ௫; விரும்புகின்ற, ௫; கட்டு, ௨௮, ௩௪
புரிசடை - புரிந்த சடை, ௨௪; முறுக்குண்ட சடை
புரிதிமில் - கட்டுகள் அமைந்த தோணி, ௧௨
புரிவளை - முறுக்குண்ட சங்கு, ௧௨
புரிவு - அவா, ௨௪
புருவம், கண்ணுகிய கடலுக்கு வகுத்த கரையொழுங்கு போல்வது, ௩௧
புரை - குற்றம், ௯, ௧௦; உயர்வு, ௮, ௨௮, ஒக்கும், ௨௪, ௨௮, ௪௩
புரைதல் - ஒத்தல், ௨௦
புரைபட்டு - பழுதுபட்டு, ௩௪
புல், நிலையியற்பொருள், ௧௯; இழிபுற்ற, ௨௮
புல்லிய - தழுவிய, ௨௪
புல்லுரை, ௧௪
புலங்கொள - காட்சியாக, ௪௦
புலப்பட-விளங்கும்படியாக, ௪௭
புலம் - பகுத்தறிவு, ௧௩; உள்ளம், ௪௧
புலமைக்கு வளமை இன்னதென்பது, ௨௮
புலர் - ஈரங்காய்ந்த, ௪௪
புலர - உலர, ௪௯
புலவராற்றுப்படை, ௪௧
புலவு - புலால், ௧; புலால்நாற்றம், ௩௩
புலவு மணம், ௧௨
புலவோய் - அறிவோய், ௪௪
புலவோர் - அறிஞர்கள், ௪௩
புலன் - மனம் முதலிய அகக் கருவிகள், ௨௯
புழுக்கல் - பருப்பு, ௧௯; புழுங்க வெந்த பருப்பு
புழுகு, ௨௧
புழுகுநெய், ௪௯; புனுகு
புழைக்கை - துதிக்கை, ௩௨; தொளையுடைய கை
புள்-மயிலென்னும் பறவை, ௪௦
புற - புறு, ௩௮; கால்சிறியது
புறம் - முதுகு, ௨, ௧௪, ௩௭, ௩௮; இடம், ௨௯
புறம்படுத்து - வெளிவிட்டு, ௨௫
புறன் - பக்கம், ௪
புன் - இழிந்த, ௨௮; புல்லிய, ௩௯; சிறிய, ௩௭; மெல்லிய, ௩௮; அழுக்குற்ற, ௪௧; எளிய, ௪௩, ௪௭; சிவந்த, ௪௯; (புற்கென்னும் பழுப்பு நிறம்)
புன்கு - புன்கமரம், ௩௯; நெற்பொரிபோன்ற பூக்களுடையது
புன்தலை - சிவந்த தலை, ௪௯; எண்ணெய் தடவாமையின்
புன்பொருள் - சிற்றின்பப் பொருள்கள், ௩; புல்லிய கோட்பாடுகள், ௮
புன்மை - வஞ்சனை, ௪; பழுப்பு நிறம்
புன்றலைச்சிறார் - பழுப்பு நிறமான தலைமயிரினையுடைய வேட்டுவச்சிறார், ௩௯; எண்ணெய் முழுக்குக் காணுமையின் என்க.
புன்றலைமந்தி - குரங்குக்குட்டி, ௩௭
புன்னகை தோன்ற நாற்புறமும் விழிபரப்பி நோக்குந் தலைமை, ௪௫
புன்னைப் பூமொட்டுகளைத் தலையிலணிதல், ௧௨

புன்னைமரம், ௩௯
புனம் - (காடு), ௩௯; கொல்லை
புனல்நிலை - நீர்நிலை, ௨௯
புனலும் பளிங்கும் முகத்தின் தெளிவுக் குவமை, ௨௯
புனிறு - ஈன்றணிமை, ௨௯
புனை - புனைதல், அ; செய்யப் பட்ட ௪௪; அமைக்கப்பட்ட
புனைதல் - அழகுபடுத்தல், ௭௨
புனைமாண் கோதை, அ
புனையாப் பொற்பு - கையாற் புனைதல் செய்யாத இயற்கை யழகு, ௧௯
பூ - அழகிய, ௫0
பூங்கயம், ௯
பூஞ்சிற்றில் - அழகிய சிறுவீடு, ௧௨
பூண்டோர் - பேர்பூண்ட பெரியோர், ௩௯
பூண - அணிய, ௫0
பூத்த - விளங்கிய, ௪அ
பூத்தல் - பொலிவு பெற்றுத் தோன்றல், ௨
பூதம் - மண் முதலியன, ௧0 தூவாமாயையிற் றோன்று வன
பூவா - திறவாத, ௩௯
பெடை - பெண்பறவை, ௩௭
பெய்தலின் - இடுதலாலே, ௭௭
பெய்து - சொரிந்து, ௪௩; ஊற்றி, ௪௪; விட்டு, ௪௫
பெயர் - புகழ், ௯, ௧௧, ௨அ
பெயர்த்து - நீக்கி, ௪௯
பெயர்ந்து - நீங்கி, ௧0; தப்பி யோடி, ௩௪
பெயரவும் - நீங்கவும், ௧௨
பெரிது - காலப்பெருமை, ௩
பெரியன், இங்ஙனஞ் சிறப்பிக் கப் பட்டவன் பாரி, ௭௨
பெரியாரைப் போற்றுமையும் ஒரு செருக்கு, ௧௪
பெரியை - பெருமையுடையை, ௭௭
பெரியோரே தவறியொழுகி னால், அவரைத் திருத்துதற்கு உலகில் யாருமிலர் என்பதற் குரிய உவமைகள், ௩௫
பெருகுறும் - மிகுகின்ற, ௨அ
பெருஞ்சுவைப்பால், ௯
பெருந்தகை - பேரருட்டன்மை யுடையாய், ௫0
பெருந்தமிழ்க்கூடல், ௯
பெரும் - பெருமையான. ௭௨
பெரும்புறம் - அகன்ற முதுகு, அ
பெருமதர் மழைக்கண், ௪
பெருமுத்து, ௫
பெற்றி - தன்மை, ௭௭
பெறுதி - பெறுவாயாக, ௭௨
பெறுபொருள் - சிறிது முயன் றூற் பெறக்கூடிய செல்வப் பொருள் எனினுமாம், ௧௧
பேணப்பெறும் - போற்றப்படு கின்ற, ௫0
பேணுறு - போற்றற்குரிய, ௪௪
பேதுறுக்கும் - மயக்கும், அ, ௧௨
பேயைப்பார்த்து அறிவும் நிறை யுங் கெடுதல், ௭
பேர் - அகன்ற, ௪0
பேர்வு - நீங்குதல், ௨௩
பேன், ௪௯
பை - படம், ௩0
பைத்து - பசந்து, ௨௯: பசுமை யென்பதனடியாகப் பிறந்த வினையெச்சம்
பைத்தென்ன, ௫
பைதல் - துன்பம், அ
பைம் - புதிய, ௨அ; பசிய, ௩௪; பசுமை, ௩அ; பச்சை, ௪௩; பசுமையான, ௪௯
பொச்சம் - பொய்மை, ௧௩; பொக்கம் என்பதன் திரிபு

பொடித்தல் - அரும்புதல், உ0
பொடிமணலின் நிறம், ௧உ
பொத்திய - உண்டாக்கிய, ௩௫; கொளுத்திய
பொதி - நிறைந்த, ௩௧, ௪உ, ௪௩
பொதிந்த - மூடிய, ௪அ
பொதிந்து - நிரம்பி, ௪௬
பொதியச் சாந்தம் - பொதிய மலையின் சந்தனம், ௩அ
பொதியவிழ் மலர், எ; பொதி - இதழ்க்கட்டு
பொதியும் - பாதுகாக்கும், ௪
பொதியுற - மூட்டைகளாக்கி, ௩௩
பொதும்பர் - சோலை, ௩௧
பொதும்பு - பொழில், எ; பொந்து, ௩அ
பொய் - நிலையாமை, உஉ; பாழ் அன்று
பொய்கை - (குளம்), உ0; மருத நிலத்துக்குரியது
பொய்பொருள் - அழியும் பொருள், ௪௩; வினைத் தெகை
பொய்யா நா - பொய்த்தல் அறியாத நாக்கு, ௧௬
பொய்வழிகளிற் பொருள் தொகுப்போரும், தக்கார்க்கு ஈயாது தாமே நுகர்வோரும் தீயரெனப்படுதல், ௪௩
பொரி - நெற்பொரிபோலும் பூக்கள், ௧உ; நெற்பொரி, ௩௬
பொரிபட-பொரிந்துபோக, ௧௫
பொரிபட நூறி, ௧௫
பொரியரை மா - பொரிந்த அடியினையுடைய மாமரம், ௧௫
பொருக்கரை - பொரியரை, இதன் விளக்கம், உஎ
பொருண்மொழி - மெய்யுரை, ௩௧
பொருத்தமில்லாதன பேசுவோர் கற்றறிவில்லாதவர், ௪௩
பொருத்தி - இணைத்து, ௪௪
பொருது - போர்செய்து, ௧௧; எதிர்த்து, உ௩
பொருந்தி - பொருந்துதல் வர, ௪உ; அணுகி, ௪அ
பொருந்துதல்வரத் தலைப்படுதலாவது, ௪உ
பொருந்தும் - அடையும், ௩அ
பொருப்பின் காட்சி, ௧௧
பொருப்பு - மலை, ௧௫, ௧௧, ௩௬
பொருவு - ஒப்பு, ௫, ௧௬, உ௧
பொருள் - மெய்ம்மை, ௧௪; பண்டம், உ0; கருத்து, உஎ; செல்வம், உஅ; உரை, உஅ; விரிவுரைப்பொருள், ௪உ
பொருள்நெறி - பொருளொழுக்கு, உஎ
பொருளார் சைவம்; பொருள் - உண்மை, ௧எ
பொருளின் - நோக்கத்தால், ௬
பொருளை இவறித்தேடிப் பின் இழந்து துன்புறுவோரும் பலர், உஉ
பொருளை வறிதே தொகுத்துச் செலவழிக்கு நிலை, உ௧
பொருஉம் - ஒக்கும், ௩உ
பொலந்துகில் - பொற்பட்டாடை, ௪௪
பொலம் - பொன்னிறம், ௩௬
பொலன் - பொன், ௩எ
பொலிகுவை-விளங்குவாய், ௪௬
பொலிந்து-காதலினால் விளங்கி, ௩அ; அழகுபெற விளங்கி, ௪௪
பொலிம் - விளங்கும், ௩௬; பொலியும்
பொலிவு - விளக்கம், ௪அ
பொழிநீறு - அருள் பொழிகின்ற திருநீறு, ௪எ

பொழியும் - சொரியும், ௨௫
பொழில் - சோலை, ௮, ௨௦
பொற்கயிற்றால் தலைமயிர் கட்டுதல், ௪௪
பொற்கயிறு கட்டிய வில், ௬
பொற்குடம், மாதுளம்பழத்துக்குவமை, ௩௭
பொற்கொடி, மகளிர்க்குருவகம், ௩௯
பொற்பு - அழகு, ௧௩
பொறி - விளக்கம், ஒளி, ௨; தீப்பொறி, ௨௫; நல்வினை, ௪௦
பொறிகெழு வாளை, ௨
பொறிப்ப - சிந்த, ௩௩
பொறிபடுத்து - துகளாக்கி, ௩
பொறை - பொறுமை, ௧௭
பிறர் மிகைசெய்தவழிப் பொறுத்தல்
பொன் - பொலிவு, ௧௮; அழகிய, ௨௧, ௪௮; பொற்பூச்சு, ௪௪
பொன் உருண்டை, எலுமிச்சம் பழக்கட்குவமை, ௩௭
பொன், சிவந்த நெற்றிக்கண்ணுக்குவமை, ௩௦
பொன் புதல்வருக்குவமை, ௧௦
பொன்போற் புதல்வன், ௧௦
பொன்மடல் தாழை - செந்தாழம்பூ, ௨௧; வெண்டாழையினும் மணமிக்கது.
பொன்வீ ஞாழல், ௧
பொன்ற - இறக்க, ௨௬
பொன்றிய - இறந்துபட்ட, ௨௩
பொன்றுடல் - அழியும் உடம்பு, ௧௬
பொன்னிறம் - இங்கு மஞ்சள் நிறம், ௧௬
பொன்னுரை - பொற்பூச்சு, ௪௪
பொன்னுறழ் வான்முளை, ௫; உவமம் நிறத்துக்கு
போக்கி - கழித்து, ௨௬
போதி - வருவாயாக, ௪௪
போது - மலர், ௮, ௧௨, ௩௮
போதுதல் - செல்லுதல், வருதல், ௪௪
போதேர் பொழில், ௮
போந்திலன்-தோன்றிலன், ௨௬
போந்து - வந்து, ௪௪, ௪௬
போர் - காதற்போர், ௩௧
போழ்தல் - பிளத்தல், ௧௮
போழ்ந்து - பிளந்து. ௨௬
போழ்மதி - பிளவுபட்ட மதி, ௨௬; மூன்றாம்பிறை, பிறை மதி
போழ்வகை - பிளந்து வருத்தும் வகை, ௨௫
பௌவம் - கடல், ௩௫
பௌவம் வெதும்பல் முதலியன களவில் ஒழுகிவந்த தலைவற்குவமை, ௩௫
மக்கள்மேல் அன்பு, ௧௩
மக்களைக் கடவுளென்போர், ௨௭
மகளிர் அடி, அனிச்சமலர் படினுந் துன்புறு மென்பது, ௩௯
மகளிர் இதழில் அமிழ்தம் உண்டெனல், ௩௯
மகளிர், ஒருகையை இடையில் ஊன்றி நின்று, நாற்புறமும் விருப்பந்தோன்றப் பார்க்கும் இயல்பு, ௪௦
மகளிர்க்குப் பசுமைநிறம், ௩௯
மகளிர் சில சொற்களே பேசுதல், ௩௯; முள்ளெயிறு போழ்தல் அஞ்சி யென்க
மகளிர் தம் இதழ்க்குச் செந்நிறம் ஊட்டுதல், ௩௭
மகளிர் மானின் பார்வையுடையர், ௩௭
மகளிர் விளக்குகள் ஏந்தி வரிசையாய் நிற்றல், ௪௪

மகளிர் விளையாட்டுகள், ௧௨
மகளிரைப் பொன்னாற் கரைத்தெழுதிய வல்லிக்கொடியெனல், ௩௧
மங்கையர்க்கரசியார் சம்பந்தர்க்குப் பாலூட்டினமை, ௪0
மங்கையர்க்கரசியார் திருமாலின் கூறான அரசன் தேவியாதலின், 'திரு'வெனப்படுதல், ௪0
மங்கையர் விசிறக் கட்டிலில் உறங்குவோரும் பலர், ௨௧
மஞ்ஞை - மயில், ௨௪, ௪0; மயிலினங்கள், ௩௧
மட்டு - அளவு, ௨௪
மடம் - மென்றன்மை, ௨0; அறியாமை, ௪௫
மடமான்பிணை - இளமான்பேடு, ௩௧
மடல் - இதழ், ௧௨; மலரின் ஏடு, ௨௫
மடவரல் - மடப்பம், ௩௪
மடவோர் - அறிவிலார், ௧௪
மடி - ௧௧; சோம்பல், ௨௧; வயிற்றின் சதைமடிப்பு, ௩௨; இது மூன்று.
மடிபடு - மடிக்கப்பட்டு, ௨௧
மடு - ஒருவகை நீர்நிலை, ௩௮
மடுத்து - உட்புகுந்து, ௩௫
மடையன் - சமையற்காரன், [௧௧
மண் - மார்ச்சனை, ௪௪; முழவின் ஒருபக்கத்தே பூசப்படும் பசையொடு கூடிய மண்
மண்டி - மிக்குச்சென்று, ௪௩
மணக்குழம்பு பீச்சுங் தோற்கருவியாற் பலர் மலைச்சாந்து சொரிதல், ௪௫
மணக்கூட்டுக்குரிய பண்டங்கள், ௨௧
மணம் - தீயநாற்றத்துக்கும் வருதல், ௧, ௧௨
மணல், அளவில் எண்ணிக்கைக் குவமை, ௩௨
மணி - நென்மணி ௨; முத்துமணிகளையுடைய சிப்பி, ஆகுபெயர், ௩௩; நீலநிறம், மணியின் பெயர் நிறத்துக்கானது ஆகுபெயர், ௪௫; அழகிய, ௪௧
மணி, தன்னியல்பில் நீலமணியை யுணர்த்தல், ௩0
மத்தளத்தின் ஒரு பக்கத்தில் மார்ச்சனை பூசல், ௪௪
மதர் - களிப்பு, ௪
மதியம்-முழுநிலா, ௧௨; திங்கள், ௩௭, ௪௫
மதியமே கதிரவன் வெம்மையால் இளகி நீராய் இழிந்தமை, வாவியின் தெளிநீருக்குவமை, ௩௭
மதில்களுக்குப் பொற்பூச்சுகளான வேலைப்பாடுகள், ௪௪
மதுரைக்குப் பெருஞ்சிறப்பு, அங்குத் தமிழ்ப்பயிற்சி யிருந்தமை, ௧
மயக்கு - மயக்கம், ௪௩
மயிர் - தூவி, ௩௭
மயிர் அழுக்கேறிச் சடைத்தலால், ஈரும் பேனும் உறைதல், ௪௧
மயிர் சடைத்துவிடுதல், ௪௧
மயில், ௧௩
மயில்கள் காலை வெயிலில் தங்தோகையை வட்டமாய் விரித்து விளையாடும், ௩௧
மயிலின் தோகைகள், இடையே திறவாத அதாவது இயற்கையே திறந்திருப்பதான கண்களையுடையது, ௩௧
மரபு - இயல்பு, ௨, ௧௪, ௪௫; முறைமை, ௧0; ௪௧, தன்மை, ௧௨, ௧௪, ௧௭, ௩௭, ௪௪

மரம்போலாதல் - மரம்போல் உணர்விழத்தல், ௪௯
மரவம் - குங்குமமரம், ௩௬
மரன் - கற்பகமரம், ௩௨; இந்திரனுலகில் உள்ளது
மரா-கடம்பு, ௩௧; வெண்கடம்பு
மரீஇ - மருங்கே இருத்தி, ௪௪
மருங்கு - பக்கம், ௬, ௩0, ௪௬, ௪௧; அருகு, ௨0, ௩௧
மருங்குல் - இடுப்பு, ௪௨; வயிறு, ௪௧
மருண்ட - மயங்கிய, ௪௧
மருதக்காட்சி, ௨0
மருதங்கா, ௧
மருதமகள், ௫
மருந்து, பெண்ணுக்கு உருவகம், ௩௬; காமப்பசியை நீக்கும் அமிழ்தமென்க
மருப்பு - கொம்பு, ௧௩, ௩௧, ௩௬, ௪௧
மருவந்து - பொருந்தி, ௪௧
மருவர - பொருந்த, ௧௬
மருவிய - பொருந்திய, ௩௧
மருவு-இது மருக்கொழுந்தன்று; அதனினும் வேறு, ௨௧
மருவுதல் - பொருந்துதல்
மருள் - மயக்கம், ௪௨
மல் - மற்போர், ௨௪
மல்லல் - வளம், ௩; செழுமை, ௩௧; செல்வம், ௪௨
மலர், கைக்கு உவமை, ௪௭
மலை, எயிலுக்குவமை, ௭
மலைக்காட்சி, கண்களுக்குக் களிப்பளிக்குமென்பது, ௩௬
மலைக்குமகளாய் முலைப்பால் சுருங்கினமையின், வள்ளத் தேர்ந்தினள், ௧0
மலைகளைத் துளைத்தமைக்கும் வாயில்கள், கோபுரவாயிலுக் குவமை, ௪௪
மலைச்சோலையில் தழையும் மலரும் கனியுந் தரும் மரவகைகள், ௩௬
மலைச்சோலையிலுள்ள வாவியின் இயல்பும், அதன்கண் உள்ள, பறவைகள், மீன்கள் மலர்கள் முதலியனவும், ௩௭-௩௮
மலைச்சோலையிற் கண்டுகூடிய தலைவியின் அருமை, ௩௬-௪0
மலைச்சோலையின் தென்றல் வளம், ௩௮
மலைச்சோலையின் படர்கொடி வகைகள், ௩௭
மலைச்சோலையின் பறவையினங்களும் அவற்றின் செயல்களும், ௩௮-௬
மலைதரு மடந்தை - உமை, ௮
மலைப்படு நீத்தம் - மலைமுகட்டிலுண்டாகும் அருவிவெள்ளம், ௪௬
மலைப்பாறைகளிற் கிளைகள் பட்டுக் கிறலுண்டாகும்படி வேங்கை தழைத்திருத்தல், ௩௬
மலை, பெரிய யானைகட்குவமை, ௩௬
மலை, மாளிகைக்குவமை, ௧௮
மலைமூங்கிலாற் புல்லாங்குழல் செய்தல், ௪௪
மலையிலோடும் மின்னற்கொடி, மார்பிற்கிடக்கும் வேலுக் குவமை, ௨௪
மலைவு - மாறுவன, ௨௩
மலைவுபடும் - மாறுபடும், ௨௮
மலைவெள்ளம் மலையிலுள்ள துகிர், அகில் முதலியவற்றை அடித்துக்கொண்டு அம்மலையின் கீழ்ப் படுகரில் தேங்கி நிறைதல், இறையருள் உயிரின் உவலைச்சுவை கவலை முதலிய நலந்தீங்குகளைத் துடைத்துக்கொண்டு அவ்வு

யிரின் அகத்தில் தேங்கி நிறைதற்குவமை, ௪௧
மழலை - மழலைமொழிகள், ௪௩
மழவிடை - இளைய ஏறு, ௧
மழுங்கிய - கிளர்ச்சியவிந்த, ௪௧
மழை - புயல், ௩௨; குளிர்ச்சி, ௩௫
மழைக்கண் - ௪; குளிர்ந்த கண்கள், ௮
மழையொழுக்கு யானையின் மதவொழுக்குக் குவமை, ௩௨
மறம் - தீவினை, ௧௪
மறவர் - மற்போர் பயிலல், ௨௪
மறி - மீளும், ௩௩; மான், ௩௫
மறுவந்து-சுழன்று, ௬; மறுவா: பகுதி
மறை - தேவாரதிருவாசகமென்னுந் தமிழ் நால்வேதங்கள், ௨௩
மறைந்தும் - கழிந்தும், ௩௪
மறைமுடி - நான்மறைகளின் முடிவிடம், ௪0; வேதத்தின் முடிந்த கருத்து, ௪௮
மன் - நிரம்ப, மிகுதிக்கண் வந்தது, ௪௨; மிகவும், ௪௩; நிலைபேறுணர்த்தும் இடைச்சொல்
மன்பெரும் - மிகப்பெரிய, ௧௧
மன்ற, ௪௧; தெளிவுப்பொருளது
மன்றல் - மணம், ௮; நறுமணம், ௨0
மன்னவர் - தலைவர், ௧௫
மன்னிய - நிலைபெற்ற, ௪0
மன்னுதல் - பொருந்துதல், ௩0
மன்னும் - பொருந்தும், ௩௪
மனக்கு - (மனத்துக்கு), ௨௫
மனம் ஒருவழியில் நிலைத்தவில்லாதது, ௩௪
மா - மாமரம், ௧௬, ௩௬; அழகு, ௧௮; குதிரை, ௩௪
மாக்கள் - மக்களுட் பகுத்தறிவில்லாதவர், ௧௩; மனவுணர்ச்சி யில்லாதார்
மாக்களுடம்பு இன்னதென்பது, ௧௬
மாங்கனி, சொற்கள் திரண்டு ஒரு பொருண்மேலவாம் நடைக்குவமை, ௨௭
மாசு - அழுக்கு, ௪௧, ௪௮; கறை, ௪௮
மாட்சிமை - அருட்டன்மை, ௪௧
மாண் - பெரிய, ௩௧; மாட்சி, ௪௧
மாண்டக - மாட்சிமையுண்டாக, ௬, ௨௪
மாண்பினது - மாட்சிமையுடையது, ௩௮
மாணுக்கற்கு இருக்கவேண்டும் நல்லியல்புகள், ௪௭; (செம்மை முதலியன வென்க)
மாணுவழி - சிறவாத தீயவழி, ௬
மாதரின்பத்தில் துளங்கும் விழலரும் பலர், ௨௨
மாதுளை - மாதுளமரம், ௩௭
மாந்தி - பருகி, ௨0, ௩௧; உண்டு, ௨௫
மாநிறம் - பசுமைநிறம், ௩௧
மாயம் - மாயச்செயல்கள், ௪0
மாயாவாதக் குழுவினர் கொள்கை, ௨௨
மாயோன் - திருமால், ௩௬
மார்பம் - மார்பாற் றழுவும் இன்பம், ௪௮
மார்பில் வரி மூன்றெழுகல் ஆடவர் நல்லிலக்கணம், ௩௨
மாரி - மழை, ௪௫
மால் - பெரிய, ௩௧
மால்பு - கண்ணேணி, ௩௫; மூங்கிலேணி
மாலைக்கான மலர்கள் இலைகள் வேர்கள், ௨௧

மாழாந்து - மயங்கி, ௨0
மாறியும் - மாற்றிக்கொண்டும், ௩௩
மாறு - மாறுபினர், ௨௩; ஆகுபெயர்
மான், ௨0, ௪0; மான்பேடு மருண்டபார்வையுடைய மகளிர்க்கு உருவகம்
மான், காட்டிலுறைவது, ௩௬; தன்இனம்நீங்கி ஒரோவொரு கால் நாட்டிலும் வந்திருக்கும்
மான், தளிர்களைக் கறித்துண்ணும், ௩௫
மான்பிணை, பெண்ணுக்கு உருவகம், ௩௬
மான்பிணைகள் கான்யாற்றில் தன் கன்றுகளொடு வரிசை வரிசையாய் நீர் அருந்துதல், [௨0
மான்மதம் - கத்தூரி, ௨௧
மான - ஒப்ப, ௨0
மிகுதி - மனக்கிளர்ச்சி, ௩௬
மிகுந்த - மேம்பட்ட, ௩௭
மிகுந்து - பரவி, ௨௮
மிகைபட - நிரம்ப, ௪௬
மிசை - மேல், ௪0, ௪௬
மிசைதொறும் - உண்ணுந்தொறும், ௪௭
மிடற்றின்பாடல் - குரற்பாட்டு, ௨௧
மிடற்றொலி - குரலோசை, ௪௪
மிடி - வறுமை, ௫, ௪௧
மிடிமை - தீராவறுமை
மிடிகெழு வாழ்க்கையின் இயல்பு, ௪௧
மிடியறியாக் குடி, ௫
மிடைபடு - செறிகின்ற, ௪௮
மிடையா - கலவாத, ௪௩
மிடையும் - பின்னித்தோன்றும், ௩௭
மிலைச்சி - சூட்டி, ௪௬
மிழற்ற - இசைப்ப, ௪௪
மிழற்றும் - இசைக்கும், ௩௫; பேசும், ௩௬; சொல்லல், பாடுதல்; நிரம்பாமென்சொற் கூறல்
மிளகுகொடி, ௩௭
மிளிர்தல் - ஒளிவிடுதல், ௧௩
மிளிர்ந்து - ஒளிவிளங்கி, ௨௫; பிறழ்ந்து ஒளிவீசி, ௩௬
மிளிர - விளங்க, ௪௬
மிளிரவும் - புரளவும், ௩௮
மிறைக்கவி - சித்திரக்கவி, ௪௧
மின் - மின்னற்கொடி, ௨௩; மகளிர்க்குவமை, ௨௩; மின்னொளி, ௪௪
மின்புரை மனன், ௩
மின்னல், தோன்றி மறையும் மனத்துக்குவமை, ௩௪
மின்னல் பிறழ்ந்து ஒளிவீசுதல், மகளிர் ஒளிக்கு உவமை, ௩௬, ௪0
மின்னொளி, எயிற்றின் ஒளிக்கு, ௧௩
மின்னொளி, ஞாழல்மலரின் மகரந்தத்துக்குவமை, ௨0
மின்னொளியினல் அமைக்கப்பட்ட உருவம்; இளமகளிருருவத்துக்குவமை, ௪௪
மீ - மேன் மேல், ௩௪; மேலே, ௩௬
மீன் - விண்மீன், ௩௮, ௪௫
மீன்முட்டைகள், நொய்ம்மணல் கட்குவமை ௪௩; வெண்மை மென்மை நுண்மைக்கு
மீனும் முத்தும் சங்குங் கொடுத்து நறவும் முதிரையும் பழனும் மாறுதல், ௩௩
முக்கண்கள், ஞாயிறுந் தீயுந் திங்களும், ௧௪
முக்கருவி-நினைவு சொற் செயல் என்னும் மூன்று கருவிகள், ௫0

முக்கனி, ௧௧; மா, வாழை, பலா
முக்கனிக்கலவை, இனிய செய்யுளமைப்புக்குவமை, ௨௭
முகத்தல் - ஏந்துதல், ௨௧
முகந்த - அள்ளியெடுத்த, ௩௨
முகந்து - மொண்டு, ௩௬; அள்ளிக்கொண்டு, ௩௮
முகம் - நுனி, ௩௬
முகில் - புயல், ௨௩, ௩௬; கூந்தற்குவமை, ௨௩
முகில், மலைக்குக்குடுமி (குஞ்சி), ௧௧
முகில் துஞ்சும்படி சோலை உயர்ந்திருத்தல், ௩௬
முகிழ் - அரும்பு, ௨௩; பற்களுக்குவமை
முகிழ்க்கும் - தோன்றப் பெறுகின்ற, ௨௫
முகுளித்தல் - சொப்புளித்தல், [௧௧
முகை - போது, ௨௧, ௪௬
முட்டாமரை, ௬
முட்டாழையிற் காணப்படும் மணமலர், தீயோர்பாற் காணப்படும் சில நல்லியல்புகட்குவமை, ௨0
முட்டு - குறைவு, ௨௭
முடக்கும் - கூனுகி வளையப் பெற்ற, ௨௫
முடி-சடைமுடி, மறைமுடி, ௪0; முடிபு, ௪௮
முடை - புலால் நாற்றம், ௫௬
முத்தக்கோவை வைத்த பவழச்சிமிழ், பற்கள் நிரைத்த செவ்வாய்க்குவமை, ௩0
முத்து, இறைவற்குவமையாக வருதலின் விளக்கம், ௧௧
முத்து, எயிறுக்கு உவமை, ௧௩; வெண்மைக்கும் ஒளிக்கும் வன்மைக்கும்
முத்துநிரைத்த பவளச்சிமிழ், மகளிர் வாய்க்குவமை, ௨௪
முத்து முதலிய மணிமாலைகளும் அலரி முதலிய மலர்மாலைகளுந் தொங்கவிடுதல், ௪௫
முத்து, முல்லையரும்புகட்குவமை, ௨௧
முதல் - தலைவன், ௧௫; கடவுள், ௨௭; அடி, ௪௧
முதல்வன் - தலைவன், ௪0
முதலற - அடியோடு, ௧௫; அடியோடு இல்லையாம்படி, ௪௧
முதனிலை, வினையெச்சப்பொருளில் வருதல், ௧௪
முதிர்ந்த - முற்றிய, ௩௬
முதிரை - பயறுவகை, ௩௩
முந்து நின்று - எதிரே நின்று, ௨௭
முந்துற - முதலில், ௨௮
மும்மணிக்கோவை, இந்நூலின் பெயர் ௫0
முரணி - மாறுக, ௨௩
முரணுறு - மாறுபடுகின்ற, ௪௧
முரணுற அறிவு - திருவருள் நோக்கத்துக்கு மாறுபட்ட அறிவு, ௪௧
முரம்பு - மேட்டுநிலம், ௮
முரவை - அரிசியிற் காணப்படுங் கீற்றுகள், ௧௧
முரன்று - ஒலித்து, ௩௧
முரிப்பு - இமில், ௩௧
முருக்கி - முறித்து, ௧௫
முருகப்பிரான் சம்பந்தராய் மதுரையிற் சைவத்தின் மெய்ம்மை விளக்கியது, ௧0
முருகர் பிறப்பு வரலாறு, ௨௫
முருகாதுமயிலின் ஆற்றல், ௨௫
முருகன் குழவிக்கோலத்தும் இளமைக்கோலத்தும் பொலிவன், ௩௪
முருகன் ஞானசம்பந்தராய் வந்தமை, ௧

முருகன் தணிகையிலமர்ந்தது, 'ஓம்' என்னும் ஒருமொழி விரிப்பதற்கு, ௧௦
முருகன் தமிழ்க்குரியன், ௧௫
முருகன் தோள், வள்ளியாகிய பூங்கொடிக்குக் கொழு கொம்பு, ௪௮
முருகன் நக்கீரரைக் காத்தது, ௪௮
முருகன் பெருமைகள், ௪௦
முருகனது திருக்கோல விளக்கம், ௨௪
முருகனுக்குக் கைகள் பன்னிரண்டு, ௪௦
முருகு - மணம், ௧௫
முருங்காது - அழியாதபடி, ௩௫
முருடனேன் - முரட்டுத்தன முடையேன், ௪௧
முருடு - முரட்டுத்தன்மை, ௧௪; விறகு
முருந்து - மயில் இறகின் அடி முள், ௬, ௯, ௩௦; பற்களுக் குவமை, ௯
முல்லைக்கொடி, ௪௨, இதன் மலரைக் கற்புடை மகளிர் தங் கற்புக்கு அடையாளமாகச் சூடிக்கொள்வர், ௩௭
முல்லைப்போது, ௨௧
முல்லை முகை, சிறுவெண்சோற் றுக்குவமை, ௧௯
முல்லை மொட்டு வெண்பல்லுக் குவமை, ௨௦
முல்லையந்தொடலை, ௧௫
முல்லையரும்பு மூக்கின் அழகுக் குவமை, ௩௧
முல்லைக்குடம், ௧௦
முலைமுகம் - முலைக்காம்பின் நுனி, ௧௦
முழவம் - மத்தளம், ௪௪
முழவு, தோளுக்குவமை, ௨௪; மத்தளம், ௩௧
முழுநெறி அரும்பு, ௨; பூமொட்டு, ௩௮; இதழொடியாதிருப்பது
முழுமணல் - நிறைந்தமணல், ௩௩
முழை - குகை, ௧௯
முளவுமா - முள்ளம்பன்றி, ௩௫
முளை - எழுகின்ற, ௩௨; தோன்றும், ௩௧; வினைச் சொல்
முளைத்த - வளர்ந்த, ௩௩
முள்ளெயிறு, ௧௩
முற்பட - முதன்மையாக, ௩௭; எதிரில், ௪௦
முற்படர்ந்து - முன்விரைந்து சென்று, ௯
முற்பிறவியின் றவம் இப்பிறவியிற் பயன்றரல், ௪௨
முற்ற - முடிய, ௧௮; எஞ்சாமை
முற்றம் - முன்றில், ௫
முற்றவும் - முழுதும், ௧௧
முற்றாத சிறுமஞ்சளின் முதுகு, இருமீனின் முதுகுக்குவமை, ௩௮
முறி - தளிரிலை, ௩௫
முறிய - இடையற்று விழ, ௧௦
முறுக்குடைந்து - கட்டுவிட்டு, ௩௧
முறுவல், ௧௩; முளைப்பற்கள், ௩௭
முறுவலித்தல் - புன்னகை புரிதல், ௩௧
முறை - நிலை, ௨௬; வகை, ௨௭, ௩௦; தன்மை ௩௧; தொடர்பாக, ௩௨; தடவை, ௪௦; தரம், ௪௦
முறைமுறை - ௨௧; ஒன்றின் மேலொன்றாய், ௧௩; அடைவடைவே, ௧௬; வரவர, ௨௦; ஒன்றன்பின் ஒன்றாய், ௩௮; சிறிதுசிறிதாக, ௪௩
முறைமை - வகை, ௧௪

முன் - முகம், ௩௧
முன்னர் - முன், ௪௮
முன்னிய - மதிக்கத்தகுந்த, ௪௯
முன்னிலையேவல், ௪௪
முனிந்து - சினந்து, ௪௦
முனியார் - சினவார், ௪௦
முனைஇய - வெறுத்த, ௧
மூசிய - (மொய்த்த), ௨௧
மூய் - மூடி, ௨௪
மூவா - அழியாத, ௪௦
மூவிலைவடிவேல், ௮
மெய் - உடம்பு, ௪௩
மெய்ந்நிலைத் தொண்டரியல்பு கள், ௪௬
மெய்ந்நிலை - செம்பொருள் காணும் மெய்யுணர்வு நிலை, ௪௮
மெய்யில் மணக்குழம்பு பூசுதல், ௨௨
மெய்வகை-மெய்ம்முறைகளால், ௧௦
மெயில் - மெய்யில், ௨௯
மேதக - பெருமைப்பட, ௩௬
மேதி - எருமை, ௨௦
மேல் - மேற்கு, ௪௨; மேற் பரப்பு, ௪௬; முன்னொருகால், ௪௮
மேல்நிலை - பிறை மண்டிலம், ௨௯
மேவிய - பொருந்திய, ௪௬
மேவியவாறு - சேர்ந்தவகை, ௨௯
மேவுநை - விரும்புகின்றனை, ௪
மேவுவ - பொருந்தி நிற்பன, ௩௭
மைந்து - வலிமை, ௧௬, ௧௮
மொழி - பேச்சு, ௪௬
மொழியார் - பேசார், ௪௦
மோவாய், ௩௦
யாண்டும் - எங்கும், ௪௧
யாணர் - புதுவருவாய், ௧௭
யாரை - நீ யார், ௪௭
யாரையோவென்பதில் அசை கள், ௪௪
யாழுக்கு ஆகாத நால்வகைக் குற்றங்கள், ௨௧
யாழுக்குக் குற்றம், ௪௪
யாழொலியை மிடற்றொலிக் கேற்பப் பொருத்தல், ௪௪
யான் எனது என்னுங் கிழத்தி யர், ௧௪
யானை - தெய்வயானையம்மை, ௩௧, ௩௪; யானை முகக் கடவுள், ௩௪
யானைமருப்பு உழுதலும் வல்லி படர்தலும் வாய்ந்தவரை, வரிகள் அமைந்த மார்புக் குவமை, ௩௨
யானையின் கொம்பு கொங்கைக் குவமை, ௩௧
யானையின் துதிக்கை, தொடை யின் வடிவுக்குவமை, ௩௨
யோகநூலார் முறைகள், ௨௬-௯
வகுளம் - மகிழம்பூ; ௨௪; இதன் காம்பு சிவந்திருக்கும்; மகிழ மரம், ௩௭; பவளமல்லி மரம் எனவுங் கூறுப; மகிழ், மிக்க மணமுள்ளது.
வகை - முறை, ௧௨
வசிந்த - பிளந்த, ௪௦
வட்டம் - வட்டக்கல், ௪௪
வட்டிகை - கூடை, ௨
வட்டித்து - வட்டமாய், ௩௦
வடமலை - வடக்கு மலை, ௪௪; இமயமலை
வடி - வடிவு, ௮; செவ்விய, ௪௦; வடுவகிர், ௪௦; மாவடுவின் பிளவு, மகளிர் கண்களுக் குவமை; கூரிய, ௪௮
வடிவேல் - வடிவமைந்த வேல், ௮; கூரிய வேல், ௧௨
வடு - குற்றம், ௯; பிஞ்சுகள் தோன்றும் வடு, ௩௯

வண் - வளமான, உக
வண்டு, ௩க; ஒருவகை வண்டு
வண்டுகள் இம்மென ஒலித்து மலர்கடோறும் முதிர்ந்த நறவுண்டு மகிழும், ௩க,
வண்டுகள், தாதுபடிந்து தேன் மயக்கேறி முத்துக்களொடு வேற்றுமையின்றிக் கிடத்தல், சங
வண்டுகள், மெல்லிய சிறகுகள் உள்ளவை, சங
வண்டென்னும் இசைப் பாணன், கு
வண்ணம் - வண்ணப்பாட்டு, உஎ; வகை, ௩0
வண்படாம் - துணிமடி
வண்மை - அருட்டன்மை, உக
வணம் - தன்மை, உக; இங்கே பச்சிளந்தன்மை
வதிம் - தங்கியிருக்கும், ௩க; வதியும் என்னுஞ் சொல்லின் ஈற்றயலுகரம் மெய்யொடுங் கெட்டது
வந்தன்று, அன்: சாரியை, கசு
வயல்களிற் பருமுத்தம் விளைதல், ௩ச
வயலுழவர், ரு
வயா - கருவுயிர்க்கு நோய், உச
வயின் - பக்கம், அ
வயின் வயின் - இடந்தோறும், கஉ, ௩எ, சச
வர - உண்டாக, சஉ
வரம், உசு
வரம்பு - அளவு, உசு, உஎ; ஓரம், ௩0; முடிவு, சக; எல்லை, சஉ
வரன்றி - வாரிக்கொண்டு, சக
வரால் - ஒரு மீன், உ0, ௩அ; கரிய முதுகுள்ளது
வரி - கோடு, ௩உ
வரிக்கடை - வரிவண்டு, ௩க
வரிசை - தகுதி, ௩எ
வரிப்ப - கீற, ௩சு; கோலஞ் செய்ய, எழுத
வருக்கை - பலா, உஎ
வருடை - ஒருவகை மான், ௩ரு; இது, மலைப்பிளவுகளில் தாண்டித்தாண்டி விளையாடும்
வரை - மலை, உச, சஅ, சக; மார்புக்குவமை; அளவு, உஅ
வரைப்படா - அளவுபடாத, உஎ
வரையாது - ஏராளமாய், அளவு பாராமல், ச௩; அளவுபடாமல், சஅ
வரையாது வழங்கிய அரசர்கள் பண்டு பலர், ச௩
வரைவேய் - மலைமூங்கில், சச; இதனாற் புல்லாங்குழல் செய்யப்படும்
வல் - தேர்ந்த, சச
வல்லாங்கு - வல்லவாறு, ச௩; வல்லபடி
வல்லி - கொடி, வள்ளிக்கொடி, ௩உ; வல்லிக்கொடி, ௩க; பெண்ணுக்குருவகம்
வல்லிதின் - வேண்டுமென்றே, உஉ
வல்லென - வலிமையாய், ௩0
வலம் - வலிமை, அ
வலம்படு கை - வலக்கை, அ
வலம்புரிச்சங்கு, நீறுபூசிய வெண்ணிறமான கழுத்துக் குவமை, உக
வலம்புரிச்சங்கு முத்தமீனல், உ0
வலம்புரி, சங்குகளில் உயர்ந்தது, ரு
வலம்புரி, பண்புவமை, ரு
வலம்புரி பருமுத்தீனல், ரு
வலம்புரியினின்றும் முத்துப் பிறத்தல், ரு
வழங்கி - கொடுத்து, கக

வழங்கிய - உதவிய, ௪௩
வழங்குவார் எவராயினும் அவ ரது அன்பினையுன்னி ஏற்றுக் கோடல், பெருந்தன்மை யென்பது, ௰
வழாவேல், ௩
வழி - தலைமுறை, கால்வழி, ௯; வகை, ௨௮
வழிவழி - முறைமுறையே, ௨௬
வழு - குற்றம், ௨௭, ௩௧, ௪௧
வழுக்கி - வழுவி, ௩௯
வழுதி, ௬௦; பாண்டியன், ௨௮; நெடுமாறன்
வள்ளம் - கிண்ணம், ௧
வள்ளன்மை கிளத்தல், ௧௧
வள்ளி - பூங்கொடி போல்வாள், ௪௮; குறவரால் வளர்க்கப்பட் டவள்; முருகனைக் கொழுந னைப் பெற்றவள்; கொழு கொம்பாகப் பெற்றவள்; ஒரு கொடி
வள்ளி இடந்தெரியாமல் மூலை வேது தருதல் கண்டு கடப்ப மாலை நகுதல், ௩௧
வள்ளி தெய்வயானையரின் கொங்கை முகடு உரிஞ்சிய அடையாளம், பிள்ளையாரின் மார்பு வரிகட்குவமை, ௩௨
வள்ளிய - வளவிய, ௨௧
வள்ளியின் காரணமாகத்தெய்வ யானை ஊடுதல், ௩௪
வள்ளியை மணத்தற்கு யானை முகக் கடவுள் உதவினமை, ௩௪
வள்ளை - வள்ளைத்தண்டு, இது செவிக்குவமை, ௧௩; உலக் கைப்பாட்டு, ௩௬; இதன் விளக்கம்
வளம் - அழகு, ௩௧; செல்வம் முதலியன
வளம் திண்வேல், ௧; உடை யோனொழில் உடைமை மேல் ஏற்றப்பட்டது
வளமை - செல்வப்பொலிவு, ௩௪
வளி - காற்று, ௩௮; உயிர்ப்பு, ௪௭, மூச்சு
வளிச்செலவு - காற்றோட்டம்
வளிநிலை - மூச்சை நிறுத்துநிலை, ௨௯
வளை - சங்கு, ௨௦, ௩௩; வளை யல், ௩௬
வளைஇய - சூழ்ந்த, ௩௮; வளைந்த, ௪௪
வறிஞன் செல்வம்பெறுதல் பசிப் பவன் உணவுபெறுதற் குவமை, ௪௭
வறிதின் - வீணாய், ௨௨
வறிது - சிறிது, ௯; வீண், ௪௧
வறிதே - வீணாய், ௨௬
வறுமரம் - வற்றல்மரம், ௨௧
வறுமை-இன்பத்தின் ஏழைமை, ௩
வறுமையின் கொடுமையால் இல் லத்திற் காரணமின்றியே சண்டையுண்டாதல், ௪௧
வன்கண் - வன்கண்மை, ௩௯
வன்திறற் பரதவர், ௧
வனப்பு - அழகு, ௩௬
வாண - வாழ்கின்றவரான, ௰; வாணர் - வாழ்நர் என்பதன் திரிபு
வாதவன் - குதிரைப்பாகன், ௩௪
வாதவனுக்கும் பாகனுக்கும் அடங்காத குதிரையும் யானை யும், தீமையிற்செல்லும் நலந் தேரு மனத்துக்குவமை, ௩௪
வாய்மடுத்து - உட்கொண்டு, ௬
வாரி - அள்ளி, ௩௩; அள்ளிச் சேர்த்து, ௪௩
வாரொலிக் கூந்தல், ௪

வால் - வெள்ளிய, ௧0; வெண்மை, ௩௧
வால், வான் எனத்திரிதல், ௧௨
வாலிதின் - வெள்ளிதாய், ௨0, ௩௨; வால் - வெண்மை,
வாலிய - வெள்ளிய ௧அ; தூய, ௨அ
வாலுகம், வெண்மணல், ௩௭
வாவி - குளம், ௩௭
வாவிகுடைந்து - குளத்தில் நீராடி, ௨௩
வாழ்க்கையென்னும் மயில், ௧௪
வாழ்நாளை வீணுக்கும் இயல்புகள், ௨௧
வாழ்மதி - வாழ்வாயாக, ௪௧
வாழை, ௧௧, ௪௫; கோழரையுள்ளது
வாழைமரம், ௩௬; தலைவிரிதவுள்ள இலைகளுடையது
வாழையிலையில் உண்டல், ௪௬
வாழையின் அடிமரம், தொடையின் ஊறு ஒளிகட்குவமை, ௩௨
வாழையின் பழம், ௨
வாழையுங் கமுகும் இடங்கடோறும் காட்டல், ௪௫
வாளை, ஒருவகை மீன், ௨
வாளாது - காரணமின்றியே, ௪௧; சும்மா இராமல், ௪௩
வான் - தூய, ௩, ௫; வெள்ளிய, ௧௨; சிறந்த, ௨௧; அழகிய, ௩௧; பெரிய ௪௪; அழகு எனினுமாம்
வான்பொருள் - தூயசிவம், ௨௬
வானத்தில் விண்மீன்கள் சூழ வெண்மதியம் இருத்தல், குளத்திற் சூழ முத்துகள் ஈன்று நடுவிற்றிகழுஞ் சங்குக் குவமை, ௩அ
வானத்தை ஒரு மடுவாக உருவகஞ் செய்தல், ௩அ
வானமீன் - விண்மீன், ௧௨
வானமீன்கள், கடற் படகுகளின் விளக்குகளுக்குவமை, ௧௨
வானவர் தலைவன் - சிவபிரான், ௨௬
வானோர் - தேவர், ௪அ
விடியலில் மலரவிருக்குந் தாமரைமுகை, ஆசிரியன் விரிவுரை கேட்கவிருக்குந் தகுதியாளரது உள்ளத்துக் குவமை, ௨அ, விடிஞாயிறு ஆசிரியற்குவமையாகலின் என்க.
விடியற்கால ஞாயிறு, சைவத்தைப் புதிய முறையில் விளக்கும் நாயகர்க்குவமை, ௨அ
விடு கவண் - எறிகவண், ௩௬; விடுதல் - எறிதல்
விடுத்து - ஒழித்து, ௪0; விட்டு
விடுபூச் சிதறல், ௨௧, [௪௬,
விடை - ஆண், ௩௪
விண் - வான்வெளி, ௪௩
விண்ணவர் - தேவர், ௪0
விண்ணவர்வேந்தனது உடம்பின் கண்கள், கிழிந்த கந்தையின் அளவற்ற துளைகட்குவமை, ௪௬
விண்ணோர் வேந்தன், ௪௬
விண்மீன் சூழ மதியம் தலைமையொடு பொலிதல், தொண்டர்கள் சூழ இறைவன், தலைமையுடன் நிகழ்தற்குவமை, ௪௫
விதிர் விதிர்ப்ப - நடுநடுங்க, ௧௧
விபரீத வுவமை, ௧௨
வியந்து - பாராட்டி, ௨௪
வியப்பினால் மதிமயக்கமுண்டாதல், ௪௩
வியர் - வியர்வை, ௨0
வியல் - அகன்ற, ௫, ௩௬, உரிச்சொல்

வியன் - பெரிய, ௩௬
விரவுதல் : ஒருசொல், ௧௨
விராஅய் - குழைத்து, ௨௨;
  கலந்து, ௪௫
விரி - பரந்த, ௩௪; விரிப்பு, ௪௫
விரித்த - விரித்தறிவுறுத்த, ௪௮
விரித்துரை கிளத்தல் புலமை
  தோன்ற உரையாடல், ௧௭
விரிந்த - மலர்ந்த, ௩௮, ௪௬
விரிவுரை செய்யும் முறை, ௪௨
விரீஇ - விரித்து, ௪௬
விரை - மணம், ௧௩, ௨௮;
  மணப்பண்டங்கள், ௪௫
விரைஇ - விரைந்தோடி, ௪௯
விலங்கி - குறுக்கிட்டு, ௨௪
விலைமாதர் யாழிசைத்துக்
  கொண்டு, பிற துணைக்கருவி
  களுடன் பாடுதல், ௨௧
விலைமாதரிசைகேட்டு மகிழ்
  சிறந்தோரும் பலர், ௨௧
விழலர் - வீணர், ௨௨
விழித்து - திறந்து, ௪௮
விழிமணி - சிவபிரான் கண்கள்
  எனப்படுஞ் சிவமணிகள், ௪௭
விழியா - இமையாத, ௪௨
விழியிற்புணர்தல் - கண்களிற்
  கலத்தல், ௨௯
விழுக்குணம் - நல்லியல்பு, ௨0
விழுத்தக - சிறக்க, ௧௯;
  நன்றாக, ௩௬
விழுத்துவர் - மேலான பவளம்,
  ௨௪
விழுமம் - சீர்மை,
விழுமிதின் - இனிமையாய், ௨௧
விழுமிய - சிறந்த, ௪௧;
  சீரிதாக, ௪௫
விழுமிய - சிறப்புடைய, ௪௭
விழை - விருப்பம், ௩௯
விழைவரு மரபு, ௯
விழைவு - வேட்கை, ௯
விள்ள - மலர, ௧௮

விளக்கம், ௪௪; விளக்கு, ௧௨;
  சுடர்
விளக்குகள் பொன்னாற்
  செய்யப்படுதல், ௪௪
விளங்க - தோன்ற, ௮
விளங்கிழை, ௮
விளங்குதல் - முனைந்து
  தோன்றுதல், ௧௫
விளிவு - அவிதல், ௫
விளைவு - முடிபு, ௨௭
விறல் - ஆற்றல், ௨௭
வீ - மலர், ௧, ௨0, ௩௧
வீசிய - விளங்கிய, ௪௮
வீடுறு - விட்டு நீங்கா, வீட்டுல
  கினை எய்தாளனலுமாம், ௩௮;
  வீடு - விடுதல், நீங்கல்,
  பேரின்ப வீடு
வீப்பாய் - மலர்ப்பாய்
வீழ் - விரும்பத்தக்க, ௩௩
வீழ்ந்த - கீழ்த்தொங்கிய, ௩௫
வீற்றிருப்பவும் - மகிழ்ந்திருக்க
  வும், ௩௮; செம்மாந்திருத்தல்
வீறு - சிறப்பு, ௨௩, ௩௨;
  வேறொன்றற்கில்லா அழகு
  அறிவு முதலியன; தனிச்
  சிறப்பு, ௮; பொலிவு, ௪௪;
  மேன்மை, ௧௪; வேறொன்றற்
  கில்லா அழகு
வீறு உறு தவம் - மேன்மேற்
  சிறக்குந் தவம், ௨௮; வீறு -
  மேன்மை, சிறப்பு
வெண்ணிலவு, வெள்ளைப்பொடி
  மணற்குவமை, ௧௨
வெதும்பின் - வெப்பங்கொள்
  ளின், ௩௫
வெம் - வெப்பம், ௪௫
வெம்மை - விருப்பம்; காதல்
  வெப்பமுமாம்
வெய்யோள் - விரும்பினின்றவள்,
  ௨௧
வெரிந் - முதுகு, ௩௮

வெரு - அச்சம், ௧௮
வெருவரல் - அஞ்சுதல், ௩௪
வெருவரு - அஞ்சுதலுள்ள, ௪௫
வெருவருபேய் - அஞ்சுதற்குரிய பேய், ௨௨
வெள்ளயிர், ௨
வெள்ளரிக்காய் மூன்று வரிகள் உள்ளது, ௩௭; காய்கள் வளைந்துமிருக்கும்; கொள்ளை யாய்க் காய்க்கும்
வெள்ளரிக்கொடி, ௩௭
வெள்ளைத்துணி மடிப்பு, நாரை யின் இறக்கைகட்குவமை,
வெற்றிலைக்கொடி, ௩௭; [௩௮
வெற்றிலை எல்லாச் சிறப்பு நிகழ்ச்சிகளிலும் வழங்கப் படும் புகழுள்ளது
வெறி - மதர்ப்பு, ௨; தெய்வ மயக்கம், ௧௫; மணம், ௨0, ௨௫, ௪௬
வெறியயர் களம், ௧௫
வெறுவிதின் - பயனில்லாமல், ௨௨
வேகடி - மணியிழைப்போன், ௩௨; மணிமாசு அகற்று வோன்; இது தமிழ்ச்சொல்
வேங்கை - வேங்கை மரம்; ௩௬; இதன் மலர் பொன்னிற மானது
வேட்டுவச்சிறுர், தேக்கிலையில் தேனுந் தினைமாவுங் கலந்து விரைந்துண்ணுதல், ௩௬
வேட்டுவர், தீக்கடை கோலால் நெருப்புண்டாக்கி அதில் இறைச்சிகளைக் காய்ச்சல், ௩௫
வேண்டின் - விருப்பினுல், ௪௨
வேண்டுழி - விரும்பியபோது, ௧௧
வேதின் - ஒற்றடத்தால், ௩௧; வெம்மை ஒற்றடம்
வேந்தன் - தேவர்கோன், ௩, ௪௮; கோன், ௪௬; தலைவன்
வேப்பின் கொழுநனை, ௭
வேம்பின்நனை அலவன் கண் களுக்குவமை, ௭
வேய் - மூங்கிற்றண்டு, ௨௬; மூங்கில், ௪௪; வேய்ங்குழல், ௨௧; மூங்கிலாலான குழல்
வேரி - வெட்டிவேர், ௨௧; இத ஞற் சிவிறியமைத்தலுண்டு
வேல், ௪௮; பிள்ளையாரது கை வேல் அருள்வடிவினது
வேல்அச்சந்தருதலின், மகிழ்ச்சி தருங் கண்கட் கொவ்வாமை, ௧௫
வேலன் - வேற்படையையுடைய வன், ௪0
வேழம் - யானை, ௩௬, ௪௧
வேள் - காமன்
வேறின்றி - பிரிவில்லாமல், ௨௬
வைக - இருக்க, ௪௧
வைகலும் - நாளும், ௮
வைகும்-பொருந்திவாழும், ௨௬; வீற்றிருக்கும், நிலைபெறுதற் குரிய, ௩௨
வைத்து - பொருத்தி, ௩௫
வை - கூர், ௨௬
வைப்பு - ஊர், ௨; மேலுலகம், ௪௬
வைவேல் - கூரிய வேற்படை, ௨௪; கூரிய வேல், ௨௫